பல்துறை ஆய்வுக் களஞ்சியம்
(மகளிர் தினக் கருத்தரங்கம்)

UG 7248

முனைவர் சி. சேமசுந்தரி
பதிப்பாசிரியர்கள் முனைவர் மா. பவானி
முனைவர் ப. மங்கையற்கரசி

பல்துறை ஆய்வுக் களஞ்சியம்
(மகளிர் தினக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் சி. சேமசுந்தரி

முனைவர் மா. பவானி

முனைவர் ப. மங்கையற்கரசி

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010

மார்ச் 2017

ISBN:978-81 -7090-468-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 425
திருவள்ளுவர் ஆண்டு 2048, மாசி, மார்ச் 2017

நூல்	: பல்துறை ஆய்வுக் களஞ்சியம் (மகளிர் தினக் கருத்தரங்கம்)
ஆசிரியர்	:முனைவர் சி. சேமசுந்தரி, முனைவர் மா. பவானி, முனைவர ப. மாங்கையர்க்கரசி
மொழி	: தமிழ்
பதிப்பு	: முதற்பதிப்பு மார்ச் 2017
பக்கம்	: 16 + 568
தாள்	: TNPL மேப்லித்தோ 16 கிலோ
அளவு	: டெம்மி 1 × 8
நூற்கட்டு	: சாதாகட்டு
விலை	: ரூ. 620/-
படிகள்	: 300
வெளியீடு	: தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
அச்சு	: குழந்தை இயேசு அச்சகம், தஞ்சாவூர்

முனைவர் க. பாஸ்கரன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
தமிழ்நாடு, இந்தியா

அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362-226159
மின் அஞ்சல் : rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

வாழ்த்துரை

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செறுக்குமிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்!

என்ற பாரதியின் புதுமைப்பெண்களாகத் திகழும் இன்றைய மகளிர் நாணமும் அச்சமும் நாய்களுக்குத்தான் தேவை என்ற அவரின் வாக்கிற்கு உயிர் கொடுப்பதைப்போல்,

விண்ணைப் பிளந்து விமானம் செலுத்தும் விமானி முதல்
மண்ணைப் பிளந்து மனிதரைப் புதைக்கும் மகத்தானப் பணிவரை
அனைத்துத் துறையிலும் சாதனைப் படைத்து வருகின்றனர்!

'பெண்மைப் பெரும்புலமை பேணுந் தனியறமே
வண்மைத் தமிழுயர்த்தும் வாய்ப்பு'

என்ற முதுமொழிக்கேற்ப பெண்மை பெருமை செய்யப்பெற்றால் மட்டுமே மொழி உயரும்! நாடு செழிக்கும்!

எனவே பெண்களைப் பெருமை செய்யும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் மகளிர் நாளில் கருத்தரங்கினை நடத்தி அக்கருத்தரங்கிற்கு அளிக்கும் கட்டுரைகளை நூலாக வெளியிட்டு வருகிறது. இத்தகைய சீரியப்பணியில் தமிழ்ப் பல்கலைக்கழக மகளிர் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். இவ்வாண்டும் கருத்தரங்கின் கட்டுரைகள் 'பல்துறை ஆய்வுக் களஞ்சியம்' என்ற தலைப்பில் நூல் வடிவம் பெற்றுள்ளது. இந்நூல் வெளிவர காரணமாய் அமைந்த நூற்பதிப்புக்குழுவினரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்த ஆய்வுக்களஞ்சியத்திற்கு சிந்தனைத் தானியங்களைச் சிறப்புடன் அளித்தப் பேராளப்பெருமக்களை நான் பாராட்டுகிறேன். நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளில் 30க்கும் மேற்பட்ட ஆங்கிலக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளை மாணவர்கள் எழுதியுள்ளனர் என்பதால் அகம் மகிழ்கிறேன்.

தமிழ்ப் பெண்களின் படை ஒன்று வேண்டும்
தக்கையர் உள்ளத்தைத் திருத்திட வேண்டும்
உமியல்ல மாதர் வலக்கை தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை

எனத் தீமையை அழித்து சமூகத்தை நல்வழிப்படுத்த வீறு கொண்டு எழுந்துள்ள
பெண்கள் சிறக்க! அவர்கள் பெருமை செழிக்க!

நாள்: 03.03.2017

(க.பாஸ்கரன்)

பதிப்புரை

'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்று பெண்ணில் இல்லாப் பெருமைகளே இல்லை என்று உரைத்தார் வள்ளுவப் பெருந்தகை. அத்தகைய பெருமை வாய்ந்த பெண்கள் இன்று சமூகத்தில் சமமாக மதிக்கப்பெறுகின்றனரா? என்றால் மௌனம் ஒன்றே பதிலாக இருக்கும்.

பெண்கள் குடும்ப வாழ்க்கையிலும் வேலையிலும் சமநிலைப் பேணுவது சவாலான விஷயமே என்கிறார் பேராசிரியரும் சமூகநீதிக்கோட்பாட்டாளருமான திருமதி வசந்தா கந்தசாமி. நாம் பெண் குழந்தைகளை வளர்க்கும் விதமே தவறானது. சிறுவயதில் பெண் குழந்தைகளைப் பாராட்டும்பொழுது அவர்கள் தோற்றத்திற்காக அன்றி திறமைக்காகப் பாராட்டவேண்டும். பெண் குழந்தைகளைத் திருமண வாழ்க்கைக்காகவே தயார் செய்யாமல் அவர்களது ஆளுமையை மேம்படுத்தும் கல்வியினை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் கூறுகிறார்.

பெண்களின் திறமைகளை ஆண்களின் திறமைக்கு நிகராக அங்கீகரிக்க இச்சமூகம் கற்றுக்கொள்ளவேண்டும். சில இடங்களில் ஆணைவிஞ்சிய திறமைப்பெற்றிருப்பதால் பெண்களின் திறமை வெளிக்கொணரப்படாமல் அடக்கப்பெறுகிறது. இந்நிலை அழிக்கப்பெறவேண்டும். ஆண் பெண் வித்தியாசங்களை அறிவில் காட்டக்கூடாது. அனைத்துத்துறையிலும் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு தேவை. பெண்ணின் திறமையைச் சரிசமமாகப் பயன்படுத்தினால் மட்டுமே இந்தியா வல்லரசு ஆகும்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமைத் தன்னைக் கொழுத்துவோம்!

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி!

மாமழைப் போற்றிய இளங்கோவடிகளைப் போல் மாதரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் இவ்விழாவினைத் தலைமையேற்று நடத்துவதுடன், தமது இடையறாத கடமைகளுக்கிடையிலும் இக்கருத்தரங்கக் கட்டுரைகள் நூல் வடிவம் பெற ஒவ்வொரு நிலையிலும் எங்களுக்கு ஆலோசனை நல்கி பல இடையூறுகளுக்கிடையிலும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வெளிவர ஆவன செய்த மனிதநேயப் பண்பாளர், மாதரை மதிக்கும் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் க.பாஸ்கரன் அய்யா அவர்களுக்கு சிரம் தாழ்த்தி கரம் கூப்பி மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல்வேறு பணிகளுக்கிடையிலும் இக்கருத்தரங்கு நடைபெற ஆக்கமும் ஊக்கமும் அளித்துதவிய மதிப்புயர் பதிவாளர் ச. முத்துக்குமார் அய்யா அவர்களுக்கு கனிவான நன்றிகள் பல!

இக்கருத்தரங்கிற்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் வரப்பெற்றுள்ளன. பெண்ணியம் குறித்து மட்டுமல்லாது பல்துறை சார்ந்த கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை சிறப்பாகும். இந்நூல் மாலை சிறக்க தங்களின் சிந்தனைப் பூக்களை வழங்கிய பேராளப்பெருமக்களுக்கும் மாண்புசால் மாணவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிப்புக்குழுவுடன் இணைந்து கட்டுரைகளைத் திருத்தம் மேற்கொண்டு உதவிய 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பொன்மொழிக்கு முத்தாய்ப்பாய் விளங்கும் பேராசிரியர் முனைவர் சா. உதயசூரியன் அய்யா அவர்களுக்கும் ஓய்வுப்பெற்றத் தமிழாசிரியர் திரு. மருதமுத்து அய்யா அவர்களுக்கும், ஆங்கிலக் கட்டுரைகளைத் திருத்தம் செய்த பேராசிரியர் முனைவர் வீ. செல்வகுமார் அவர்களுக்கும் பதிப்புக்குழு நன்றி பாராட்டக் கடமைப்பெற்றுள்ளது.

இக்கருத்தரங்கு சிறப்பாக நடைபெற பல்வகையிலும் உதவிய கல்வி நிலை மற்றும் அலுவல் நிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். கருத்தரங்கக் கட்டுரைகளை நூல் வடிவம் பெறச்செய்த திருமதி இரா.ஜெபா ஜானி அவர்களுக்கும், நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகத்தார்க்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"புதுமைப் பெண்ணொளி வாழி பல்லாண்டிங்கே".

- பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

1. கவிஞர் வைரமுத்துப் புதினங்களில் பொது அறிவியல் 1
சு. அபிராமி

2. முசுகுந்த நாட்டில் கார்காத்த வேளாளர் சமுதாயத்தில் பெண்கள் 6
வீ. அமுதரசி

3. மன்னார்குடி அருள்மிகு அண்ணாமலைநாதர் திருக்கோயில் கட்டிடக் கலை 9
த. அமுதா

4. முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் மெய்கீர்த்திகள் 13
முனைவர் க. அலமேலு

5. சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலில் பெண்ணியப் பார்வை 16
வீ. அலமேலுமங்கை

6. பல்லூடகம் வழியாக வரலாறு கற்பித்தல் 21
த. அறிவழகன்

7. திருக்கருகாவூர் முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலில் முதலாம் பராந் தகச் சோழனின் கல்வெட்டுகள் 26
முனைவர் எஸ். அனுராதா

8. பெரியாரும் பெண்ணியமும் 31
முனைவர் த. அனுராதா

9. படைப்புலகில் சு. தமிழ்ச்செல்வி 35
ப. இந்திரா

10. சங்க இலக்கியத்தில் மாசறு பொன் 39
முனைவர் இரா. இந்து

11. கணிப்பொறி வலையமைப்பில் தகவல் பரிமாற்ற வகைகள் 44
முனைவர் கா. இரவிக்குமார்

12. மொழியின் செல்வாக்கு 48
ஆர். உதயா ஜோன்

13. வடமொழி இலக்கண இலக்கியங்களில் பெண் 51
முனைவர் ஸ்ரீ. உஷா

14. மகளிரும் மனையும் 54
முனைவர் கா. கண்ணகி

15. தடம் புரண்ட தமிழர் மரபில் நெல் 58
மா. கண்ணாயிரமூர்த்தி

16. கோயில் தேவராயன்பேட்டை கல்வெட்டுகள் கூறும் கொடைகள் 66
முனைவர் மு. கலா

17. ஆவணங்கள் காட்டும் சோழர்கால தேவரடியார்களும் மராட்டியர்கால அக்காமார்களும் 71
முனைவர் த. கலாஸ்ரீதர்

18. அகத்திணை ஒரு பார்வை 74
கி. கவிதா

19. வரலாற்றுப் பார்வையில் நாலடியார் தரும் வாழ்வியல் அறிவுரைகள் - ஓர் ஆய்வு 77
முனைவர் க. கற்பகம்

20. சோழர்குல மாணிக்கம் - செம்பியன்மாதேவி 81
முனைவர் செ. கற்பகம்

21. தஞ்சைக் கலைக்கூடம் - அரிய சிற்பங்கள் 86
கனிமொழி

22. எட்டுத்தொகை பெண்பாற் புலவர்களின் புலமைத் (மொழி) திறம் 90
ம. கிறிஸ்டி பாப்பரசி

23. பெண் மொழி 95
ஆ. கிறிஸ்டினா

24. வில்லியனூர் கோயில் கல்வெட்டு கூறும் செய்திகள் 98
க. கோமதி

25. தந்தை பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள் 101
செ. சதீஷ்குமார்

26. சங்க இலக்கியத்தில் மருத்துவம் 105
முனைவர் அ. சசிகலா

27. திருச்செங்காட்டாங்குடி அருள்மிகு உத்திராபதீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள் 108
க. சரஸ்வதி

28. தஞ்சை மராட்டியர் கால மருத்துவமனை 111
முனைவர் சு. சாந்தி

29. தமிழ் இலக்கியத்தில் மகளிர் மருத்துவம் 114
ஆ. சாந்தி ஒலிவியா

30. "பூ"க்கின்ற "பூ"வையரும் "பூ"ஜிக்கப்படும் "பூ"க்களும் 118
முனைவர் சி. சாவித்ரி

31. கோயில்கள் ஏன்? 125
மா. சிதம்பரேஸ்வரர்

32. சமுதாயத்தில் பெண்கள் 131
முனைவர் க. சித்ரா

33. திருவிந்தளூர் செப்பேடும், அதன் தனிச்சிறப்பும் 135
திருமதி ஜெ. ச. சித்ரா

34. புறநானூற்றில் காதல் 140
செ. சிபிவெங்கட்ராமன்

35. கல்வெட்டுகள் மூலம் அறியப்பெறும் பிற்கால சோழர்கால கிராமசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் முறை 143
முனைவர் செ. சியாமளா

36. சதக இலக்கியங்களில் பெண்கள் 147
முனைவர் த. சுகன்யா

37. நாட்டுப்புற மக்களின் உணவுமுறைகள் 151
இரா. சுகுணா

38. சங்க கால மக்களின் நம்பிக்கைகள் 154
சே. சுதா

39. புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் 159
ஜெ. சுவையா

40. கம்மாண்சேரியும் அக்கசாலையும் 163
முனைவர் வீ. செல்வகுமார்

41. ஆசாரக்கோவையில் அறக்கருத்துக்கள் 167
ஜெ. செல்வகுமார்

42. பெண்களின் காதணிகள் 171
முனைவர் சி. சேமசுந்தரி

43. சுற்றுச்சூழல் கல்வியை கற்பிப்பதில் பல்லூடகத்தின் பங்கு 176
ச. சைமன்

44. தஞ்சை மராத்தியர்கால தமிழ் ஆவணங்களில் காணப்படும் மகளிரின் நிலைகள் 183
முனைவர் க. தனலெட்சுமி

45. பெண்ணின் பெருமையே மண்ணின் பெருமை 188
கா. திவ்யா

46. சூழலிய அறம் 191
முனைவர் த. தெய்வீகன்

47. நற்றிணையில் கண் பேசும் மொழிகள் 195
இரா. தேவி

48. தஞ்சாவூர் மாவட்டத்தில் தேவரடியார்கள் - ஓர் வரலாற்றுப் பார்வை 198
ச. தேன்மொழி

49. சங்க இலக்கியத்தில் நீர் தாவரங்கள் 202
முனைவர் ந. நாகராஜன்

50. அடிமைப் பெண்கள் - ஒரு சமூகப் பார்வை 207
முனைவர் மா. பவானி

51. பேரண்டத்தில் பெண் 214
ம. பார்த்தசாரதி

52. ஆனையாம்பட்டி செ.நா. ஆதிசேசய்யரின் வாழ்வும் இசைப்பணிகளும் 217
வி.ச. பாலமுரளி

53. திருப்பாதிரிப் புலியூர் பாடலீஸ்வரர் கோயில் ஓர் ஆய்வு 221
சு. பிரகதாம்பாள்

54. பாரதிதாசன் கவிதைவழி பெண்ணியல் சித்தரிப்பு 225
ந. பிரபாகரன்

55. செம்பனார்கோவில் அருள்மிகு ஸ்ரீசுவர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் கல்வெட்டுச் செய்திகள் - ஓர் பார்வை 228
முனைவர் ம. பிரியா

56. திருவிடைமருதூர் வுட்டாரக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் மருத்துவர்கள் 231
ச.ச.பீஷ்மஷங்கர்

57. தன் மதிப்பிற்கும் பெண் கல்விற்கும் இடையேயுள்ள தொடர்பு 234
கோ. புகழேந்தி

58. அண்ணாவின் பார்வையில் பெண்கள் 237
முனைவர் வி. புனிதா

59. குழந்தையின் சமூகப் பங்கேற்பும் பெற்றோரின் கல்வி நுட்பவியலும் 241
முனைவர் ரெ. பெரியசாமி

60. தமிழ் மொழிபெயர்ப்பில் தாமஸ்கிரேயின் இரங்கற்பா 247
சு.ம. பெருமாள்

61. பாரதி என்னும் சமுத்திரத்தில் பெண்ணியம் எனும் முத்து 251
முனைவர் க. மகேஸ்வரி

62. தமிழ் விளம்பரங்களில் பிறமொழிப் பயன்பாட்டிற்கான காரணங்களும் அதனால் தமிழ்மொழிக்கு உண்டாகும் விளைவுகளும் 255
முனைவர் ப. மங்கையர்க்கரசி

63. இசை வளர்ச்சிக்கு வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு 260
க. மதிவாணன்

64. இலக்கியத்தில் பெண்ணியம் 265
முனைவர் இரா. மாலதி

65. தஞ்சை மராட்டியர் ஆட்சியில் மேலைநாட்டினரின் சமயத் தாக்கம் 269
ஆ. மீனாட்சி

66. வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் பண்பாடு 272
எம். மீனாட்சி

67. கண்ணதாசன் பார்வையில் சிலப்பதிகார மாதவி 277
கா. முத்தரசி

68. பாவேந்தர் பார்வையில் பாவையர் 280
த. முத்துவேல்

69. பாரதியின் மொழிபெயர்ப்பு பார்வையில் பெண்ணியம் எங்கே போகின்றது? 283
முனைவர் இரா.சு. முருகன்

70. யக்சகான (கன்னட நாட்டுப்புறக்கலை அறிமுகம்) 287
சே. முனியசாமி

71. கும்பகோணம் வட்டாரக் கல்வெட்டுகளில் வணிகர் சமூகம் 291
கு. மூகாம்பிகை

72. மனை நிர்வாகத்தில் சங்ககால மகளிர் 294
முனைவர் த. மேரி ஜான்சி ராணி

73. திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயில் - ஓர் ஆய்வு 298
ப. ரஞ்சனி

74. சங்க இலக்கியத்தில் பெண்ணியம் 302
மா. ராகுல்காந்தி

75. பெண்களுக்காக வாதிட்டப் பெண் திலகங்கள் (19-ஆம் நூற்றாண்டு) 305
சீ. ராணி

76. வீரம் நிறைந்த மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி - ஓர் ஆய்வு 309
ரா. ராஜலெஷ்மி

77. மொழி - Language 313
பா. ரேவதி

78. தமிழிலக்கியத்தில் பெண்கள் 317
ம. ரோஸ்லின் பிரேமா

79. சரஸ்வதி "சிற்பம்" கலை மற்றும் பெண்ணியப் பார்வை 321
முனைவர் வே. லதா

80. தொல்காப்பிய உவமை 326
வீ. வினோதா

81. திருநல்லம் (கோனேரிராஜபுரம்) திருக்கோயிலில் செம்பியன்மாதேவியின் கல்வெட்டுக்கள் 330
பா. விஜயலெட்சுமி

82. திருக்கோடிக்காவல் அருள்மிகு ஸ்ரீதிருக்கோடிஸ்வரர் திருக்கோவில் பல்லவர்கால கல்வெட்டுகள் கூறும் செய்திகள் 333
வி.எஸ். விஜயலெட்சுமி

83. சமூகவியல் உணர்த்தும் புறநானூறு தாக்கம் 338
சி. விஜயா

84. புதுச்சேரி மாநில நாட்டுப்புற இசைப்பாடல் வகைகள் - ஓர் ஆய்வு 343
வீ. வீரகுமாரி

85. பெண்ணியப் போராட்டங்களும் பொதுத் தன்மைகளும் 349
த. வீரமணிகண்டன்

86. காரைக்கால் அம்மையார் 353
சு. வெங்கடேசன்

87. தமிழகத்தில் கல்வி - ஒரு சுருக்கமான வரலாறு 356
முனைவர் தெ. வெற்றிச்செல்வன்

88. இரண்டாம் சரபோஜியின் காசி -இராமேஸ்வரப் பயணம் - ஓர் ஆய்வு 359
முனைவர் பு. வேம்பரசி

89. வரலாற்றில் பெண்ணுரிமை 364
பு. ஹேமாவதி

90. மொழிப்பாடம்: கற்றல் நோக்கங்களும் கற்பித்தல் முறைகளும் 368
இ. ஜாஸ்மின்

91. கல்வெட்டுக்கள் காட்டும் சிற்றரசிகளின் அறக்கொடைகள் 373
அ. ஜெயபாரதி

92. சோழர்காலப் பெண்களின் நிலை 376
கி. ஜெயலெட்சுமி

93. செங்கோட்டை ஸ்ரீஆவுடை அக்காள் 380
முனைவர் அ. ஸ்ரீ வித்யா

94. குமரகுருபர சுவாமிகளின் சக்தி வழிபாட்டு இசை இலக்கியங்கள் ஓர் பார்வை 383
அ. ஸ்ரீநாகபூஷணி

95. The Nageswara Temple Scultpures at Kumbakonam 389
M. Amirthavalli

96. Effectiveness of Multimedia in Teaching mathamatics at secondary level 393
G. Anandhajothi

97. A Glimpse of yesodara kaviyam and some doctrines of Jainism 400
B. Ananthalakshmi

98. The Role of Indian Indenture - women's to abolish the Indenture system at Fiji Islands 403
S. Ayesha Gani

99. Antidiabetic effect of Pongamia glabra in streptozotocin induced diabetic rats 411
P. Bharath Jothi, C.T.Bhaaskaran and A. Selvakumar

100. Preserve our Feminism, it is our Rights! 416
Dr. Bharathi Ravikrishnan

101. Bharathidasan on the Empowerment of woman 425
Dr. S. Chandravahnam

102. Awareness of peace education among B.Ed. Student - Teachers 430
Dr. F. Deepa

103. Marine red algae - A rich resource for organic farming and biopharmaceuticals 435
Dr. C. Elizabeth Rani Juneius

104. Effect of Cardiospermum Halicacabum against strees causing diseases like dandruff and rheumatoid arthritis - A review 442
Dr. R. Eswaralakshmi

105. A Brief life sketch of D'Lannoy, the Commader-in-Chief of Tranvancore Army 447
Dr. C. Gomathavalli

106. A study on Psychological Problems in Arun Joshi's Protagonist 450
C. Hariharan

107. Study on Bacterial Bio-diversity of Coolant effluent in iron and steel waste water 455
D. Jayapriya, P. Senthilkumar

108. A Feminist look at the Stone Angel 463
J. Joy Faith

109. Attitude towards Multimedia in teaching among B.Ed. Trainees 468
R. Kalaiarasi

110. A History of Interportal Trade Convention of Travancore in 19th Century 471
Dr. R. Maheswari

111. The Iconography of the Thanjavur Rajarajeswaram Temple Keralanthagan Gopura: - A Study 475
Dr. V. Malarvizhi

112. Pharmacognostical standardization of the leaves sesbanica grandiflora L. 480
V. Mariyammal & G. Santhi

113. Childhood Experience in Bama's "Karukkuu" 483
J.E. Mohana

114. Translation of Arthur Miller's all My Son's from english into Tamil and its critical analysis 486
R. Pitchamuthu

115. Semantic Problems in Translating Thilakavathi's Kalmaram with Roman Jakobson's theory 490
P. Ponmalar Queeni

116. Miniature sculptures at Darasuram temple 494
G Poonkodi

117. History of Sri Sarangapani Temple 498
S. Rajan

118. Nature in Indian Literature 502
V. Rajendran

119. An Interesting sculputral Illustration of ceraman Perumal and cuntarar in Kailasa 506
S. Rathnapandian

120. Kamala Markendaya as a novelist with Reference to Nactarin a sieve 510
S. Sangeetha

121. Anitadesan's cry the peacock, a Psychological eleboration of an eternal conflict between spritualism and realism 515
S. Saritha

122. Studies on Bacterial Biodiversity from Municipal Solid waste Disposal sites in and around thanjavur 519
P. Senthilkumar & P. Veeramani

123. Pharmacological Effect of Solananum xanthocarmuam - A review 523
M. Sundari

124. Translation of Grammatical study in Girish Karnad's Hayaradana 527
M. Suresh

125. The Female self in Chitra Banerjee Divakaruni's sister of My Heart 531
M. Thamizhmani

126. Phytochemical, antioxident, antimicrobial and antiinflammatory screening of leaf extract of Clerodendrum inerme L. 535
M. Tharanya & R. Sagaya giri

127. Accessing Higher Education Gender in equality among Rural students in Trichy District 541
V.K. Thirumala

128. Indian Constitution and Human Rights 546
G. Venkatachalapathy

129. Personality and Job statisfaction of special school teachers in Thanjavur District 553
R. Vijayalakshmi

130. Vehicular Networks with Beaconing rate using fair congestion control 563
T. Vishvaroobi & H. Bakyasri

கவிஞர் வைரமுத்துப் புதினங்களில் பொது அறிவியல்

சு. அபிராமி, முனைவர் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

முன்னுரை

கவிஞர் வைரமுத்து புதினங்களில் தாவரவியல், விலங்கியல் செய்திகளைத் தவிர்த்து மற்ற செய்திகளை பொது அறிவியல் என்னும் தலைப்பின்கீழ் அறிவியல் நோக்கில் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

சூரியன்

கோள்களுக்கெல்லாம் தலைமையாகச் சூரியன் திகழ்வதால் இதனைச் சூரியக் குடும்பம் என்று அழைப்பர். கோள்களில் மிகவும் வெப்பமான கோள் சூரியன். உலகம் முழுவதும் வெளிச்சம் தரும் ஆற்றல் கொண்டது. சூரிய ஒளியினால் தாவரங்கள் வளர்ச்சி பெறுகின்றன. மாலையில் விழுகின்ற சூரிய ஒளி மனிதனின் உடலுக்கு நல்லது என்பார்கள்.

சூரியனின் எடை, சூரிய மண்டலத்தின் 98.6% உள்ளமை குறிக்கத்தக்கது. சூரியனுக்கும் புவிக்கும் இடையே உள்ள சராசரித் தொலைவு ஏறத்தாழ 14,96,00,000ச.மீ. எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொலைவை ஏறக்குறைய 8 நிமிடங்களில் ஒளி கடந்து செல்கிறது.

சங்க காலத்தில் சூரியனைக் கடவுளாகக் கருதி வழிபட்டு வந்தனர். பழங்காலத்திலேயே தமிழர்கள் சூரியனைக் கோள்மீன்கள் சுற்றி வருவதைச் சிறுபாணாற்றுப்படையில் *(சிறு.243)* குறித்துள்ளனர்.

அலைநீளம் மிகுந்த சிவப்புக் கதிர்களைவிட 16 மடங்கு கூடுதலாக சிதறடிக்கப்படுவதால் சூரியனை சிவப்புக்கதிர் மட்டுமே புவியை வந்தடைகிறது. இத்தகைய பிற்காலக் கண்டுபிடிப்பான 'ஒளிச்சிதறல் கொள்கை' பழந்தமிழ்ப் பாடல்களிலும் *(நற்றிணை 187:2-3)* பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இன்றுவரையிலும் சூரியனை இறைவனாக வழிபட்டு வருகின்றனர் என்பதைக் கவிஞர் வைரமுத்து கூறியுள்ளார்.

"அவன் தாயும் தந்தையும் இயற்கை விவசாயிகள்
மண்ணையும் சூரியனையும் கும்பிடுகிறவர்கள்"
- (மூன்றாம் உலகப்போர், ப.17)

மேலும், ஓசோன் கூரையில் ஓட்டை விழுந்து அதனால் சூரிய ஒளி பூமியில் நேரடியாக விழுகின்றது என்ற செய்தியைச் சொல்லும்போது சூரியனைப் பற்றிக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

"ஓசோன் கூரை ஓட்டை வழிஎட்டி எட்டிப்
பார்த்துவிட்டு ஓர் அழுக்கு மேகத்தை இழுத்து
முகம் பொத்திக் கொண்டது சூரியன்"
- (மூன்றாம் உலகப்போர், ப.17)

எண்ணெய்க் கிணறு

ஆழ்துளையிட்டுக் கிணறு போன்று தோண்டி எண்ணெய் எடுப்பர். இதனை எண்ணெய்க் கிணறு என்று அழைப்பர். இவற்றில் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிவாயுத் திரவங்கள் எடுக்கப்படுகின்றன. ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் எண்ணெய்க் கிணறுகள் மிகுதியாக இருக்கின்றன.

"எண்ணெய்க் கிணறு குடைந்த ஆழ்துளைக்
கருவிகள் தம் சக்தியின் மொத்தம் திரட்டி
ஆழத்தில் ஒரு முட்டு முட்டியபோது வெடித்து
வெளியேறியது. பூமிக்கொடியில் பூட்டப்பட்டுக்
கிடந்த மீத்தேன் பூதம். அது வெளிப்பட்ட
வேகத்தில் பட்டென்று திறந்து கொண்டது
பெட்ரோல் ஊற்றில் பெறுங்கள்

- (மூன்றாம் உலகப்போர், ப.15).

என்ற வரிகளின் மூலம் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் எண்ணெய்க் கிணற்றிலிருந்து மீத்தேன் வாயு வெளிவருகிறது என்பதைக் கூறிச் சென்றுள்ளார் கவிஞர் வைரமுத்து.

புறஊதாக் கதிர்கள்

சூரியனில் இருந்து வெளிவருகின்ற புறஊதாக் கதிர்கள் நேரடியாக உலகில் வாழும் உயிரினங்கள், மனிதர்கள் மீது பட்டால் அவர்களுக்குப் பல்வேறு தோல் நோய்கள் ஏற்படும்.

புறஊதாக் கதிர்கள் நேரடியாக பூமியில் படாமல் ஓசோன் காத்து நிற்கின்றது. பல்வேறு மாசுபாடுகளினாலும் காற்று மாசு அடைந்து ஓசோன் படலத்தில் மிகப் பெரிய ஓட்டை விழுந்துவிட்டது. இதனால் புறஊதாக் கதிர்கள் நேரடியாகப் பூமியில் வாழ்கின்ற உயிர்களின்மீது பட்டு நோய்களை ஏற்படுத்துகின்றன.

"இருபத்தொன்று மில்லியன் சதுர
கிலோ மீட்டருக்குக் கிழிந்துக் கிடக்கிறது
ஓசோன் கூரை. பூமிக்கெதிரான புறஊதாக்
கதிர்களின் படையெடுப்பு எளிதாகிவிட்டது
கிழிந்த கூரையைத் தைப்பதற்கு மாறாய்
இன்னும் கிழிக்கவே எத்தனிக்கிறோம்"

- (மூன்றாம் உலகப்போர்)

மேலே கூறப்பட்டுள்ள புதினத்தின் வரிகளின் வழியாகப் புறஊதாக் கதிர்களைப் பற்றி அறிகிறோம்.

தண்ணீர்

உயிரினங்கள் தாயின் கர்ப்பத்தில் வளர்வது முதல் பிறந்து வளர்ந்து மரணமடையும் காலம் வரை தண்ணீரின் தேவை மிகவும் அவசியமானதாகும். 'நீரின்று அமையாது உலகு' என்று உலகிற்கு உணர்த்தினார் வள்ளுவர். அவரின் வாக்கைப்போல் நீரில்லாவிடில் உயிரே இல்லை. உயிரே இல்லையென்றால் உலகம் என்ற பெயரே இல்லை.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" - *(குறள். 16)*

வானத்திலிருந்து துளிநீர் விழவில்லையென்றால் பசும்புல்கூட தன் தலையை வெளியே காட்டமுடியாது என்று தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார் திருவள்ளுவர்.

நம் ஒவ்வொருவரின் உடலின் மொத்த எடையில் 60 சதவிகிதம் தண்ணீர்தான் இருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. ஒருவரின் எடை 10 கிலோ என்றால் அதில் 6 கிலோ தண்ணீர்தான். மற்ற நாலு கிலோதான் தசையும் எலும்பும். *(விண்ணும் மண்ணும், ப.114).*

மனிதனின் உடலில் எத்தனை விழுக்காடு தண்ணீர் இருக்கிறது என்பதையும் யானையின் உடம்பில் எவ்வளவு விழுக்காடு தண்ணீர் இருக்கிறது என்பதையும் மனிதனின் உடம்பில் எவ்வளவு விழுக்காடு உப்புநீர் இருக்கிறது என்பதையும் தனது நாவலில் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

"உன் உடம்பு என்பதே
மூன்றின் இரண்டு பங்கு தண்ணீர்
உன் அழகுதேகம் என்பது
65 சதம் தண்ணீர்
70 சதம் தண்ணீர் - யானை
65 சதம் தண்ணீர் - மனிதன்
உன் உடம்பில் ஓடுவது
7.2 லிட்டர் உப்பு தண்ணீர்" *- (தண்ணீர் தேசம். ப.13)*

இரத்தம்

மனித இரத்தம் மிகவும் அற்புதமான திரவம். அதில் பல பொருள்கள் அடங்கியிருக்கின்றன. மிதப்பவையும், நீந்துபவையும், கரைந்தவையும், கரையாதவையுமாக மனித உடலில் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எடுத்துச் செல்லும் பாதையாகவும் இரத்தம் தொழில் புரிகிறது.

இரத்தத்தில் உள்ள திரவப் பகுதிக்குப் பிளாஸ்மா என்று பெயர். இரத்தத்தில் 55 சதவீதமாகவும் அதைத் தவிர, பலவகையான செல்களும் அவை இயற்றும் பொருள்களும் இரத்தத்தில் உள்ளன. அவற்றின் விகிதம் 45 சதவீதம் *(அறிவியல் கட்டுரைகள், தொகுதி 2, ப.247).*

இதைப்போலவே கவிஞர் வைரமுத்து மனித உடம்பில் எத்தனை லிட்டர் என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். ஆண்கள் உடம்பில் 5.5 லிட்டர் இரத்தமும், பெண்கள் உடம்பில் 5 லிட்டர் இரத்தமும் இருக்கிறது என்பதை வைரமுத்து புதினங்களின்வழி அறியமுடிகிறது.

"ஆண் உடம்பில் ரத்தம் - 5½ லிட்டர்
பெண் உடம்பில் - 5 லிட்டர்
என்ற பேதமிருந்தாலும்
செல்களின் செயல்கள் ஒன்றுதான்"
- (தண்ணீர் தேசம், ப.34)

மருத்துவம்

மருத்துவம் பற்றிய செய்திகளைப் பழங்காலத் தமிழர்கள் பெரிதும் அறிந்து வைத்திருந்தனர். வாதம், பித்தம், சிலேட்டுமம் என்று மூன்று நாடிகளின் தன்மையை ஆராய்ந்து செயல்படக்கூடிய அறிவுப் பெற்றிருந்தனர்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" - *(குறள். 948)*

எனவே நோயைக் குணமாக்க மருத்துவ முறைகளை விஞ்ஞானம் வளர்ச்சிப்பெறாத அந்நாளிலும் அறிந்து வைத்திருந்தனர் நாட்டுப்புறத்தார். அவர்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பர் *(சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.264).*

இவ்வகையில் கிராமப்புறங்களில் கையாளப்படுகின்ற மருத்துவக் குறிப்புகளை வைரமுத்து புதினங்களில் கூறியுள்ளார்.

மகப்பேறு மருத்துவம்

ஒரு குழந்தையை பெற்று எடுப்பதற்கு தாய்மார்கள் பல்வேறு துன்பத்தை அடைகின்றனர். குழந்தை ஈன்று எடுக்கும்போது அதிகமாக இரத்தமும் மிகுதியாக உடல் வலியும் ஏற்படுகின்றது. அந்த உடல்வலி போக்குவதற்கும் பிரசவத்தால் ஏற்பட்ட உடல் ரீதியாக பிரச்சனைக்கும் இயற்கை முறையில் மருத்துவம் செய்வதற்கு வைரமுத்துத் தம் புதினத்தில் மருத்துவக் குறிப்புகளைக் கூறியிருக்கிறார்.

பிரசவம் முடிந்ததும் பெண்களுக்குக் கொடுக்கக்கூடிய மருத்துவப் பொருள்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'மஞ்சள்-கடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி-தேசாவதாரம்-ஓமம்-சதகுப்ப-சித்தரத்த-வசம்பு-பெருங்காயம்-வால்மிளகு எல்லாவற்றையும் வறப்போட்டுல போட்டு வறுத்து உரல்ல போட்டு நொருங்க இடிச்சாக; ஒரு சிரட்டை மேல எளந்துணி போட்டு அதுல இடிச்சதப் போட்டுச் சலிச்சாக; அரைவீச வெள்ளைப்பூண்டு எடுத்துப் பல்லு பல்லா உரிச்சு எளஞ்சூட்ல நல்லெண்ணெய் விட்டு அரைவேக்காடு வதக்குணாக; இடிச்சதம் பொடிய அதுல கொட்டி ஒடைச்ச கருப்பட்டிய உள்ள போட்டு பொரட்டும்னு பொரட்டி எடுத்தாக; பஞ்சாமிர்தம் பதத்துக்கு வந்ததும் மாமியார்க்கு மருமகள் ஊத்துற மாதிரி பட்டும் படாம நெய்விட்டு விளாவி ஒரு பதமா எறக்கி ... அப்பப்ப பிள்ளைப்பெத்தவ எடுத்து தின்னுக்கிட்டுருக்க வேண்டியதுதான்" – *(கள்ளிக்காட்டு இதிகாசம், ப.140).*

ஒரு குழந்தையை ஈன்றெடுத்த பிறகு மேற்கண்ட இயற்கை வைத்தியங்களில் நம் முன்னோர்கள் செய்தார்கள் என்பதைப் புதினங்களில் அறியமுடிகிறது.

இக்கட்டுரையில் கவிஞர் வைரமுத்துப் புதினங்களில் பொதுஅறிவியல் என்னும் தலைப்பில் சூரியன், எண்ணெய்க் கிணறு, புறஊதாக் கதிர்கள், தண்ணீர், இரத்தம், மருத்துவம், மகப்பேறு மருத்துவம் போன்ற செய்திகளை அறிவியல்முறையில் ஆய்ந்து கூறப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

வைரமுத்து - *மூன்றாம் உலகப்போர்*
சூர்யா வெளியீடு
டிரஸ்ட் புரம், சென்னை

வைரமுத்து	-	*தண்ணீர் தேசம்* சூர்யா வெளியீடு டிரஸ்ட் புரம், சென்னை
வைரமுத்து	-	*கள்ளிக்காட்டு இதிகாசம்* சூர்யா வெளியீடு டிரஸ்ட் புரம், சென்னை
வைரமுத்து	-	*கருவாச்சி காவியம்* சூர்யா வெளியீடு டிரஸ்ட் புரம், சென்னை
நற்றிணை	-	*நற்றிணை* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை இருபதாம் பதிப்பு, 1981
பரிமேலழகர்	-	*திருக்குறள்* பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 1994
இரவா. கபிலன்	-	*விண்ணும் மண்ணும்* கலைஞன் பதிப்பகம் சென்னை – 600 017
பெ.நா. அப்புசுவாமி	-	*பெ.நா.அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்* தொகுதி 2 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை – 600 113.

முசுகுந்த நாட்டில் கார்கார்த்த வேளாளர் சமுதாயத்தில் பெண்கள்

வீ. அமுதரசி, முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்காவில், அமைந்துள்ள 32 கிராமங்களே முசுகுந்த நாடு என்பதாகும். இப்பகுதிகளில் கார்கார்த்த வேளாண் இன மக்களே வாழ்கிறார்கள். இம்மக்கள் தங்களுக்கென தனிக் கொள்கைகளை உருவாக்கி 1855 ஆம் ஆண்டு ஓலைச்சுவடியில் எழுதிவைத்துள்ளனர்.அது பதினெழு ஏடுகள் கொண்டுள்ளது.[1] அதில் இம்மக்கள் வாழ்வதற்குரிய கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும், தண்டனைகளும், பழக்கவழக்கங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையிலேயே இக்கட்டுரை அமைக்கப்பட்டு உள்ளது. பெண்களுக்கு எனவும் தனியான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு இருந்தது. அதன்படியேதான் பெண்கள் வாழ்ந்தனர்.

முசுகுந்த நாட்டில் உள்ள 32 கிராமங்களில் வாழும் கார்கார்த்த வேளாளரிடம் கலப்பு திருமணம் என்பது அறவே கிடையாது. அப்படி மீறி யாரும் திருமணம் செய்து கொண்டால் சாதியை விட்டு விலக்கி வைக்கப்படுவார்கள். விவாகரத்து என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

வினையே ஆடவர்க்குயிரே மனையுரை மகளிர்க்கு வானுதல் ஆடவர் உயிரே என்ற குறுந்தொகை பாடலுக்கு ஏற்ப முசுகுந்த நாட்டு கார்கார்த்தார் சமுதாயத்தில் பெண்கள் ஆண்களைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை பெண்களின் சீரிய பண்புகளாகக் கருதப்பட்டன. விருந்தோம்பலிலும் பெரியவர்களிடம் பணிவாக நடந்துகொள்வதிலும் பெரும் திறமைசாலியாக இருந்துள்ளனர். கணவனுக்கு கட்டுப்பட்டு அன்புடனும் பண்புடனும் இல்வாழ்க்கையை வாழ்ந்தனர். குழந்தைகளை வளர்ப்பதில் பெரும்பங்கு பெண்களிடமே இருந்தது.

பெண்குழந்தைகளை மிகவும் கவனத்துடன் வளர்த்தனர். பெண் குழந்தைகள் ருதுவானவுடன் வீட்டைவிட்டு வெளியே செல்வதில்லை. தன் உடன்பிறந்த சகோதரனைத் தவிர மற்ற ஆண்களிடம் பேச அனுமதிக்கப்படுவதில்லை. வெளி ஊர்களுக்கு படிப்பதற்கு செல்லக்கூட அனுமதிக்கப்படாமல் இருந்தனர். ருதுவான பெண் 6 மாதம் அல்லது ஒரு வருடக்காலத்திற்குள் திருமணம் நடத்திட வேண்டும் என்ற கட்டுப்பாட்டில் இச்சமுதாயப் பெண்களின் நிலை இருந்துள்ளது. திருமணமும் வீட்டில் உள்ள பெரியவர்கள் பார்த்து மணமகனை தேர்ந்தெடுத்து பெண்களின் திருமணத்தை நடத்தி வைத்தனர். தாலிகட்டிய மூன்று மாதம் வரை இச்சமுதாய மணப்பெண் கணவனின் முகத்தை நேருக்கு நேர்கூட பார்க்காமல் இருந்துள்ளனர். பெரும்பாலும் கூட்டுக்குடும்பத்திலேயே வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். அதனால் வீட்டில் உள்ளவர்களிடம் மரியாதையுடனும் பெரியவர்களுக்கு பணிந்தும் வாழ்ந்துள்ளனர். விவசாயத்தில் திறமை மிக்கவர்களாக விளங்கினர். ருதுவானவுடன்

பெண்கள் வெளியில் செல்ல அனுமதிக்காததால் கல்வியை குறைந்த அளவே கற்று இருந்தனர். அக்காலத்தில் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்கப்பட்டது.

தீபம் ஏற்றுதல் கோயில் விழாக்களுக்கு செல்லுதல், மாவிளக்கு ஏற்றுதல், அபிஷேகம் செய்தல் போன்ற தெய்வ வழிபாட்டில் அதிக அக்கறையுடனும் மகிழ்ச்சியுடனும் திகழ்ந்தனர். வீட்டில் சமையல் செய்யும் நேரம் முடிந்தவுடன் அக்கம் பக்கத்தில் உள்ள வீட்டுப் பெண்கள் அனைவரும் ஒன்று கூடி வீட்டின் திண்ணையில் அமர்ந்துகொண்டு பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் ஊரில் உள்ள அனைத்துப் பெண்களும் அன்பாகவும் ஒற்றுமையாகவும் சண்டை போட்டுக்கொள்ளாமல் விட்டுக்கொடுத்து வாழ்ந்தனர். முசுகுந்த நாட்டில் உள்ள கிராமங்களில் நடைபெறும் இன்பம் மற்றும் துன்பக் காரியங்களில் பெண்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டம் கூட்டமாக சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கோலமிடுதல், பூக்கட்டுதல், பல்லாங்குழி, ஊஞ்சல் ஆடுதல், தாயம் உருட்டி விளையாடுதல் போன்ற விளையாட்டுக்களை பெண்கள் விளையாடி தனது பொழுதுபோக்கைக் கழித்துள்ளனர். வீட்டில் ருதுவான பெண் இருந்தால் வீட்டிற்கு வரும் ஆண்களை வீட்டில் உள்ள பெரியவர்களே வரவேற்று வீட்டின் வெளியில் உள்ள திண்ணையில் அமரவைத்து பேசி அனுப்புவார்கள். திருமணமானவர்களுக்கு விவாகரத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. விதவைப்பெண்கள் மறுமணம் செய்வதில்லை. தலைமுடி மழிக்க வேண்டியதில்லை. முக்காடு போட வேண்டியதில்லை. அவர்கள் வெள்ளைப் புடவையும், கழுத்தில் ருத்ராட்ச மாலையும் அணிந்திருந்தனர். நெற்றியில் திருநீறு மட்டும் பூசிக்கொள்வார்கள். மூத்த விதவைப்பெண் ரவிக்கை அணிவதில்லை. வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதி இல்லாமல் இருந்தனர். சுபகாரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது என்ற கட்டுப்பாட்டில் வாழ்ந்துள்ளனர். குழந்தைகளையும் பெரியோர்களையும் பராமரிப்பதிலேயே அவள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது.

மங்கலமான பெண்களின் கழுத்தில் ஒரு செயினும், கையில் வளையலும், காலில் தண்டையும், மூக்கில் மூக்குத்தியும், காதில் தோடும் அணிந்திருந்தனர். வயது முதிர்ந்த பெண்கள் காதில் மேலடு அணிந்து இருந்தனர். இச்சமுதாயத்தில் நடைபெறும் திருமணச் சடங்குகளின் போது மங்கல வாழ்த்துப் பாடல் பாடுவதிலும், குழந்தை பிறந்தவுடன் தாலாட்டுப் பாடுவதிலும் இறந்தவரின் வீட்டில் ஒப்பாரிப் பாட்டு பாடுவதிலும் வல்லமை பெற்று விளங்கினர். இறந்த வீட்டில் 30-ஆம் நாள் வரை உணவு சமைத்துப் போடுவது இன்றுவரை நடைபெறுகிறது.

குழந்தை இல்லாத விதவைப் பெண்களுக்கு சீவனாம்ச தொகை அக்காலத்தில் வழங்கப்பட்டு இருந்தது. கணவனை இழந்த பெண்ணுக்கு கார்கார்த்தார் சமூகம் கௌரவமான ஒரு இடத்தைக் கொடுத்தது. ஏளனப்படுத்தவில்லை. இம்முசுகுந்த நாட்டில் கள ஆய்வை மேற்கொண்டபோது தற்காலத்தில் இச்சமுதாயப் பெண்கள் அதிகமாகக் கல்வி கற்கின்றனர். ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் அனைத்துத் துறைகளிலும் பணி செய்கின்றனர். வீட்டைவிட்டு வெளியே வராமல் இருந்த காலம் மாறிப்போய் வெளிநாடுகளுக்கு சென்று வேலை பார்க்கும் நிலைக்கு இன்று உயர்ந்துள்ளனர். திருமணம் பெரியவர்களின் ஆசியில் நடைபெற்று வந்தாலும் சில பெண்கள் தனக்கேற்ற மணமகனை தேர்ந்து எடுத்து வாழ்கின்ற நிலை இன்று உருவாகியுள்ளது. உணவு, உடை, ஆபரணங்கள் அணிதல் அனைத்திலும் அவரவரின்

சுதந்திரத்திற்கு ஏற்றவாறு அணிந்து கொள்கின்றனர். விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்கின்றனர். பொட்டு வைத்தல், அணிகலன் அணிதல், கலர் புடவைகள் அணிதல் போன்றவற்றைச் செய்கின்றனர்.

இன்ப, துன்ப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்றனர். ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டும் என்ற நிலை மாறி ஆண்களுக்கு சமமாக பெண்களும் கருத்துப் பரிமாற்றங்களிலும் வருமானம் ஈட்டுவதிலும் வல்லமை பெற்று விளங்குகின்றனர். கணவனுக்குக் கீழ் பணிந்து கணவனைச் சார்ந்து வாழ வேண்டும் என்ற நிலை இக்காலப் பெண்களிடம் காணப்படுவதில்லை. அறிவியல் முன்னேற்றம் காரணமாக பெண்கள் அனைத்து வசதிகளைப் பெற்றிருந்தாலும், அக்காலப் பெண்களின் இல்வாழ்க்கையும் மகிழ்ச்சியையும் இக்கால பெண்களிடம் அதிகம் காணப்படுவதில்லை. விவாகரத்து என்ற வார்த்தையை அக்காலப் பெண்களுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் தற்போது தானே விவாகரத்து முடிவை இக்காலப் பெண்கள் துணிச்சலுடன் எடுக்கின்றனர். இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது படிப்பு அதிகம் இல்லாமல், வீட்டை விட்டு வெளியே வராமல் வீட்டில் உள்ளவர்கள் பார்த்த மணமகனை மணந்து, கணவனுக்கு கீழ்பணிந்து கூட்டுக்குடும்பத்தில் உள்ள அனைத்து பெரியவர்களுக்கும் மரியாதை செலுத்தி அன்புக்கு கட்டுப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையில் உள்ள மகிழ்ச்சி தற்போதுள்ள பெண்கள் வாழ்க்கையில் இல்லாமல் போனது சற்று வருத்தத்தையே அளிக்கின்றது.[2]

எனவே இச்சமூக பெண்கள் கல்வி, பணம், திறமைகள் அதிகமாக இருந்தும் பெரியவர்களின் அன்பு இல்லாததும் கட்டுப்பாடு குறைந்து சுதந்திரம் கிடைத்தும் தன் வாழ்க்கையில் சந்தோஷத்தை இழந்து பலர் தவிப்பது வேதனைக்குரிய ஒன்றாகும். எனவே பழைய முறைகளைப் பின்பற்றி இன்றைய பெண்கள் வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

அடிக்குறிப்புகள்

1. பொ.ஆ. 1855 ஆம் ஆண்டு எழுதப்பட்டு 1915 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட ஓலைச்சுவடி திரு.ரெ.சோமசுந்தரம், திட்டக்குடி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களிடம் உள்ளது)

2. நேர்காணல் பெயர்:அ.அண்ணாதுரை, ஊர் : திட்டகுடி, நாள் : 10.02.2014

மன்னார்குடி அருள்மிகு அண்ணாமலைநாதர் திருக்கோயில் கட்டிடக் கலை

முனைவர் த.அமுதா, உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), தஞ்சாவூர்

விண் மறைக்கும் கோபுரங்கள், விண்ணை மறைக்கும் கோயில்கள் நிறைந்தது நம் நாடு. தமிழ்நாட்டில் இருக்கும் அளவிற்கு வேறு எந்த நாட்டிலுமே கோயில்கள் இல்லை. அழகிலும் கம்பீரத்திலும் கூட தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு ஈடு இணை சொல்லக்கூடிய கோயில்கள் பிற நாடுகளில் இல்லை என்பது சரித்திரப் பிரசித்தம்.[1]

தமிழர்கள் ஆரம்பகாலம் முதலே ஆன்மீக வாழ்விற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இறைவனுக்கு ஆலயம் எழுப்பி வழிபட்டு வந்துள்ளனர். ஆதியில் கோயில்கள் மரங்களின் அடியில் தோன்றின. குறிப்பாக ஆலமரத்தடியில் உருவாயின. "ஆலமர் கடவுள்" என்ற பெயரிலேயே இறைவனை வழிபட்டனர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பின்னர் மரத்தைச் சுற்றி மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டன. செங்கற்களைக் கடவுளாகப் பாவித்து வழிபட்டனர். சங்க காலத் தொடக்கத்தில் கோயில்கள் பலவும் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது. புரதான ஆலயங்கள் செங்கற்களால் கட்டப் பட்டிருந்தன என்று புதை பொருள் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. முதலில் கோயிலுக்கு "நகர்" என்று பெயர் இருந்தது. பின்பு கோயிலைச் சுற்றியுள்ள பகுதிக்கு நகர் எனப் பெயர் ஏற்பட்டது.[2]

பசவ புராணம் என்ற நூல் சிவ வழிபாடு பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் பேசுகிறது.[3]

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

சிவன் சர்வலோகங்களுக்கும் கடவுள் ஒருவரே என்பதை சைவம் அழுத்திக் கூறுகிறது.[4] செம்பகாரண்ய சேத்திரம் என்று அழைக்கப்படுகின்ற ராஜமன்னார்குடியில் அருள்மிகு ராஜகோபாலசுவாமி கோயிலுக்கு பின்புறம் மேற்கே எழுந்தருளியுள்ள இத்தலத்தில் சிவனையே மலையாக நினைத்து கிரிவலம் வருதல், அன்று தொட்டு இன்றுவரை நடந்து வருகிறது. இத்தலத்தின் வெளிபிரகாரத்தை "16" முறை வலம் வந்து சிவனை தரிசிக்க "16" பேறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்னும் பெரியோர் வாக்கிற்கு இணங்க சகல செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ்வது திண்ணம்.

கிழக்கே அமைந்துள்ள அண்ணாமலைநாதர் திருக்கோயில் திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு ஒப்பான திருத்தலம் ஆகும். சிவன் என்னும் பெயரில் சங்க இலக்கியங்களில் இத்தெய்வம் குறிக்கப்படவில்லையாயிலும், ஆலமர் செல்வன், மழுவாளி, நெடியோன், முக்கட்செல்வன், கணிச்சியோன், நீலமணி மிடற்றொருவன் தொன்முது கடவுள், ஆதிரையான் என்பன போன்றவை சிவனைக் குறிக்கும் சொற்றொடர்கள் கையாளப்படுகின்றன.[5]

இக்கோயில் 800 ஆண்டுகள் பழமை உடையதாகும். இக்கோயில் வல்லம் என்ற பகுதியை ஆட்சி செய்த சோழ மன்னன் திருவுடைமருதூருடையான் என்பவனின் தாயார் அம்மை பெரிய நாச்சியார் என்பவர் மூன்றாம் இராஜேந்திர சோழன் பெயரில் கட்டினார் (கி.பி. 1216 – 1256) என்று இக்கோயிலிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. போசிள மன்னர் வல்லாள மகாராஜன் இக்கோயிலை கட்டியதாக மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு இக்கோயில் கட்டியதில் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இக்கோயில் சோழர் காலத்து கற்றளியாகும். வல்லாள மகாராஜன் கட்டியதாக மக்களும், வல்லம் என்ற பகுதியை ஆட்சி செய்த திருவிடைமருதுடையான் தாயார் அன்னை பெரிய நாச்சியார் என்பவர் மூன்றாம் இராஜேந்திர சோழன் பெயரில் கட்டினார் என்றும் கல்வெட்டு செய்தி கூறுகிறது.

கட்டிடக் கலை

ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரண்டு வகைப்படும். ஒன்று மனித உடல் அமைப்பை ஒட்டியது. மற்றொன்று மனித இதய அமைப்பை ஒட்டியது.

ஆலயங்கள் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தாபன மண்டபம் முதலிய அமைப்புகளுடன் ஐந்து அல்லது மூன்று, இரண்டு ஒன்று என்ற பிரகாரங்களுடன், கோபுரம், யாகசாலை, நந்தி பலிபீடம், கொடி மரம் முதலியவற்றுடனும் விளங்குகிறது. சிவனுக்கு சிறப்பாக உள்ள திருமேனிகள் மூன்று, அருவத்திருமேனி, உருவத்திருமேனி, அருவுருவத்திருமேனி.[6] மன்னார்குடி அருள்மிகு அண்ணாமலைநாதர் கோயில் கருவறை, இடைநாழி, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும்.

சுவாமி கருவறை அமைப்பு

கருவறை என்பது சாளரம் இல்லாமல் ஒரே நுழைவாயிலைக் கொண்டு, வெளிச்சம் இன்றி இருக்கும் ஓர் அறை. அதனுள் தான் கோயிலின் நாயகரான மூலவர் அமர்ந்திருக்கிறார். கருவறை ஒரே இருள்மயமாய் இருப்பதற்கு ஓர் ஆழ்ந்த தத்துவார்த்தம் உள்ளது.

மனிதன் வெளிஉலகில் பலவித ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு உழல்கிறான். அவன் ஆலயத்திற்கு வருவதே அத்தகைய பாசங்களிலிருந்து மீள்வதற்குத்தான். ஒரு அணங்கின் கருப்பை எப்படி உள்ளதோ அதே மாதிரி கோயிலின் கருவறையும் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தை கருப்பையிலிருந்து வெளிவரும்போது எவ்வித மனச்சலனமுமின்றித் தானே வருகிறது. அதே போல் மனிதன் கருவறை விட்டு வெளிவரும்போது தன் முந்திய ஆசா பாசங்களையெல்லாம் நீக்கி விட்டு நிர்மலமாக வெளிவருகிறார் என்பதே கருத்து.[7]

அருள்மிகு அண்ணாமலைநாதர், கருவறையில் லிங்கவடிவில் வட்ட வடிவமான ஆவுடையார் மீது கிழக்கு நோக்கி அருள்பாலித்தவாறு உள்ளார். கருவறை சமசதுர வடிவம் கொண்டதாகும். கருவறையின் வடக்குச் சுவரில் துவாரம் உள்ளது.

தேவகோட்டங்கள்

கருவறையின் மூன்று பக்கங்களிலும் தேவகோட்டத் தெய்வங்கள் உள்ளன. கருவறையின் தெற்குப் புறத் தேவகோட்டத்தில் தட்சிணா மூர்த்தியின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் மேல் ஒரு தள விமானம் கலசத்துடன் அமைந்துள்ளது. மேற்குப் புறத் தேவகோட்டத்தில் லிங்கோத்பவர் திருவுருவம்

அமைக்கப்பட்டுள்ளது. வடக்குப் புற தேவகோட்டத்தில் பிரம்மாவின் திருவுருவம் வடக்கு திசையை பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது.[8]

இடைநாழி

கருவறையின் முன் அமைந்துள்ளது இடைநாழி ஆகும். இடைநாழியின் தெற்குப் புறத் தேவகோட்டத்தில் நர்த்தன விநாயகர் திருவுருவம் அமைந்துள்ளது. வடக்குப்புறத் தேவகோட்டத்தில் துர்க்கையின் திருவுருவம் அமைந்துள்ளது.

முன் மண்டபம்

மகா மண்டபத்தை அடுத்து முன் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நந்தி இறைவனைப் பார்த்தவாறு மேற்குப் புறமாக உள்ளது. இது விமானத்துடன் கலசம் கொண்டதாக அமைந்துள்ளது. இவ்விமானத்தில் சிற்பங்கள் உள்ளன. நான்கு அடி உயரத்திற்கு மேல் நந்தி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு நான்கு அடி உயரத்தில் பலிபீடம் உள்ளது. இப்பலிபீடம் தாமரையைக் கவிழ்த்து வைத்தாற் போன்ற பத்ம வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

காமம், பொறாமை, ஆணவம் போன்ற தீமைகளை இதயத்திலிருந்து நீக்க வேண்டும் என்பதை பலிபீடம் குறிக்கிறது.[9]

மகா மண்டபம்

மகா மண்டபம் சுவாமி, அம்மன் ஆகிய இரு சன்னதிகளுக்கும் பொதுவாக அமைந்துள்ளது. இம்மகா மண்டபத்தில் இறைவனுக்காக துவார பாலகரும், இறைவிக்கான துவார சக்திகளும் அம்மன் கருவறைக்கு முன்னும் அமைந்துள்ளன. இம்மகா மண்டபம் இரண்டு வாயில்களைக் கொண்டது. சுவாமி சன்னதிக்கு நேராகக் கிழக்கு வாயில் உள்ளது. அம்மன் சன்னதி தெற்கு பார்த்த திருவுருவத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சன்னதிக்கு நேராக ஒரு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் கருவறை வாசல் அகலமாக உள்ளது. கருவறையை அடுத்து இடைநாழி உள்ளது. துவார சக்திகள் தெற்கு நோக்கி அமைந்துள்ளன. மகா மண்டபம் தூண்களுடன் அமைந்துள்ளது.[10]

அர்த்த மண்டபம்

இடைநாழிக்கு முன் அமைந்துள்ள மண்டபம் அர்த்த மண்டபம். இம்மண்டபத்தில் நந்தி லிங்கத்தைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. நந்தியின் பின்புறம் பலிபீடம் உள்ளது. பலிபீடத்தின் முன்பு கல்யாண சுந்தரேசுவரர் புடைப்புச் சிற்பமாக, கிழக்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் தெற்கு பக்கம் கல் ஜன்னல் உள்ளது. அர்த்த மண்டபத்தில் துவார கணபதி இடம்புரி விநாயகராக அமைக்கப்பட்டுள்ளார். இம்மண்டபம் 8 அடி உயரப் பரப்பு கொண்டு கல்லால் மூடப்பட்டுள்ளது. கருவறைக்கு மேலுள்ள இரண்டு தூண்கள் கபோத அமைப்பு கொண்டவை. இம்மண்டபத்தின் வடக்குப் புறத்தில் உற்சவ மூர்த்திக்கு இட அமைப்பு உள்ளது. "உற்சவ மூர்த்திகள் அவ்விடத்தில் வைக்கப்படாமல் பாதுகாப்புக் கருதி இராஜகோபால சுவாமி கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.[11]

அர்த்த மண்டபத்தில் நான்கு தேவகோட்டங்கள் உள்ளன. தெய்வங்கள் இல்லை. தெற்குப் புறத்தில் இரண்டு தேவகோட்டங்களும், வடக்கு புறத்தில் இரண்டு தேவகோட்டங்களும் அமைந்துள்ளன.

சுவாமி கருவறை விமானம்

திருக்கோயில் அமைப்பில் மிக முக்கியமான பகுதி கருவறை ஆகும். இந்தக் கருவறையின் மீது அமைக்கப்படும் அடுக்குகளே விமானம் எனப்படும். கருவறைச் சுவற்றின் பிரஸ்தரம் எனப்படும் கூரைப் பகுதியிலிருந்து கலசப் பகுதி வரையிலான அமைப்பே விமானம் எனப்படும்.

மன்னார்குடி அருள்மிகு அண்ணாமலைநகர் திருக்கோயிலின் கருவறை விமானம் இருதள விமானம் ஆகும். இது அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என்னும் விமான உறுப்புகள் ஆறினைக் கொண்டது. கிரிவப் பகுதியில் சுதைச் சிற்பங்கள் உள்ளன. இவ்விமானம் ஒரு கலசம் கொண்டது ஆகும்.[12]

அம்மன் கருவறை விமானம்

இத்திருக்கோயிலில் அம்மனுக்குத் தனி சன்னதி, விமானத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானத்தில் மூன்று கலசங்கள் அமைந்துள்ளன. அவற்றில் சுதைச் சிற்ப பொம்மைகள் உள்ளன. அம்மன் தெற்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளாள். இவ் அம்மனுக்கு அமைக்கப்பட்டுள்ள விமானம் இரு அடுக்குகள் கொண்டதாகும்.

மேற்கண்ட ஆய்விலிருந்து திருவாரூர் மாவட்டத்தை சார்ந்த மன்னார்குடிஅருள்மிகு அண்ணாமலை நாதர் திருக்கோயில் கட்டிடக் கலை சிறப்பினை அறிய முடிகிறது.

(Footnotes)

1. *தொ.மு.பாஸ்கர தொண்டைமான், தமிழ்க் கோயில்கள் தமிழர் பண்பாடு, ப.எண்.7*
2. *வேங்கடவன், வழிபாட்டுச் சடங்குகளும் பலன்களும், ப.எண். 15*
3. *டபிள்யூ ஜே.வில்கின்ஸ், நவீன இந்துத் தத்துவம், ப.எண். 297*
4. *சி.க.ராமசாமி, உலக மதங்கள், ப.எண். 85*
5. *தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் தமிழர் தெய்வங்கள் (ப.எண். 88)*
6. *முனைவர். ப.தங்கராசு, முனைவர் ஜெ. சந்திரசேகரன், முனைவர் அரங்க பாரி இறைவழிபாடு கருத்தரங்க கட்டுரைகள், ப.எண். 316*
7. *வெ.நாராயணசுவாமி, திருவண்ணாமலை, ப.எண். 41*
8. *நேர்முக பேட்டி திரு.பார்வதீசர் குருக்கள், நாள் 06.02.2013*
9. *மு.தர்மலிங்கம், இந்து மதமும் அதன் வழிமுறைகளும், ப.எண்.67*
10. *நேர்முகப் பேட்டி திரு.அரி நாள். 6.02.2013*
11. *நேர்முக பேட்டி பார்வதீசர்(குருக்கள்) நாள் 06.02.2012*
12. *நேர்முக பேட்டி திரு.கருப்புசாமி (காவலர்) நாள் 03.02.2012*

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் மெய்கீர்த்திகள்

முனைவர் க. அலமேலு, உதவிப் பேராசிரியர், த.ஞ.அ.ம.கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

முன்னுரை

தரணியில் தழைத்தோங்கிய தமிழகம் சேர, சோழ, பாண்டியர் என்ற மரபினர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் உள்ள புலவர்கள் இம்முவேந்தர்களின் பெருமைகளை எடுத்துக்கூறி பரிசுகள் பல பெற்றுள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தன் புகழ்தல் தகுதி அன்று

என்னும் தமிழர் பண்பாட்டிற்கும் விதிவிலக்கு உண்டு. தன் கல்வியாற்றலை அறியாதார் முன்னிலையிலும், பேரவையில் ஏற்படும் சொற்போரின் போதும் மற்றும் தன் எதிரி பழிக்கும் நேரம் போன்ற இடங்களில் தற்புகழ்ச்சி குற்றமாகாது. அவ்விடங்களில் தன்னைப் புகழ்தல் இல்லாத நிலையே குற்றமாகிவிடும். 'செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்ற வள்ளுவர் வாக்கின் அடிப்படையில் 'மன்னவர் தம் புகழுக்குரிய குணங்களையும் செயல்களையும் எடுத்துக்கூறி நிலை நிறுத்த வேண்டும்' என்ற மரபு மன்னர்களாலும் புலவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

மன்னரது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது மெயக்கீர்த்தி எனப்படுகிறது. அதாவது உண்மையான புகழுக்கு உண்டான குணங்களையும் செய்கைகளையும் எடுத்துக் கூறும் இலக்கியம் மெய்க்கீர்த்தி எனலாம்.

"மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே" என்னும் நச்சினார்க்கினியரின் தொல்காப்பியக் கூற்றின்படி மன்னருக்கே உரித்தாகிய உண்மைப் புகழினை எடுத்துக் கூறும் இலக்கியமே மெய்க்கீர்த்தி ஆகும்.

இதுபோன்ற மெய்க்கீர்த்தியை வெளியிடும் மன்னர் தன் நாட்டின் சிறப்பு, தன் முன்னோர்களின் புகழ் இவற்றுடன் தன் புகழைப் பாடுதல் வழக்கமாக வந்துள்ளது.

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் மெய்க்கீர்த்திகள்

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி. 1190-இல் முடிசூட்டப்பெற்று கி.பி. 1216 வரை மதுரையை ஆண்ட ஒரு சிறந்த பாண்டிய அரசராவார். இவருடைய தந்தையார் விக்கரம பாண்டியன் ஆவார்.

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் திருப்பூவணத்து இறைவனுக்குத் தேவதானம் அளித்தார். இவருக்கு 'இராசகம்பீரன்' என்ற பட்டப்பெயர் உண்டு என இவரது கல்வெட்டுக்கள் கூறுகின்றது. மேலும் இவர் தனது ஆட்சியின் 25-ஆம் ஆண்டில் சில பழைய ஊர்களை ஒன்று சேர்த்து 'இராச கம்பீரச் சதுர் வேதிமங்கலம்' என்ற பெயருடன் 1030 அந்தணர்களுக்குப் பிரமதேயமாக அளித்தார்.

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன், சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் கட்டுப்பாட்டில் இருந்து வெளிவர முயற்சித்தார். ஆகவே இவருக்கும் பகை ஏற்பட்டது. சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் படையுடன் வந்தார். முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் தன் ஏழகப்படை, மறப்படை கொண்டு போர் செய்தார்.

மட்டியூர், கழிக்கோட்டை ஆகிய இடங்களில் போர் நடைபெற்றது. பாண்டியர் படை தோற்று ஓடியது. மூன்றாம் குலோத்துங்கன் தன் பெரும் படையுடன் மதுரைக்குள் நுழைந்து, பல அரண்மனைகளை இடித்துத் தள்ளி, அங்குச் சோழ பாண்டியன் என்ற பெயருடன் வீராபிஷேகம் செய்து கொண்டார்.

எனினும் மூன்றாம் குலோத்துங்கன் தான் கைப்பற்றி வைத்திருந்து பாண்டிய நாட்டை பாண்டிய மன்னர் முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்கே வழங்கி விட்டார். முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இளவரசுப் பட்டம் சூட்டப்பெற்றார்.

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 'பூவின்கிழத்தி' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியின் செய்திகளாவன:

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனிடம் திருமகளும், நிலமகளும் நெறிமாறாமல் இருந்தனர். அவரது திருப்புயத்தில் வெற்றிமகளும், நாவில் கலைமகளும் நிலை பெற்றிருந்தனர். எட்டுத் திசைகளிலும் இவரது புகழ் பரவியது.

இவரது ஆட்சியில் அறம்கூறும் நீதிநெறியும், மனு நெறியும் சிறப்பாக இருந்தன. அறநெறி வளர்க்கும் அறுவகைச் சமயங்களான சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கணாபத்தியம், கௌமாரம் வேறுபாடின்றி வளர்ந்தன. சோழர்களின் புலிக்கொடியும், சேரர்களின் வில் கொடியும் செல்வாக்கு இழந்திருந்தன. பாண்டியர்களின் மீன் கொடியே மேலோங்கி இருந்தது.

கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்னும் எட்டு மலைகள் சூழ்ந்த இந்த உலகத்தினை முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சி நடத்தினார். கொடிய துன்பங்களுக்கெல்லாம் தலைவனாகிய கலி என்ற அரக்கன் முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனால் துரத்தப்பட்டு, அஞ்சி ஓடி பாதாளத்தில் ஒளிந்தான். சேரர், சோழர், விராடர், மராடர், பல்லவர் ஆகிய மன்னர்கள் தங்கள் திறைப்பொருட்களைக் கொண்டு வந்து முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனிடம் அளித்துப் பணிந்து நின்றனர்.

இப்பாண்டிய அரசர் சூரியனும் சந்திரனும் இவ்வுலகில் உள்ளவரை தனது ஒப்பற்ற ஆணையாகிய அரசு சக்கரம் நடைபெறச் செய்தார். மேலும் இவர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாகிய அமிழ்தம் நாட்டில் வளர்ந்து நிலைபெறச் செய்தார்.

மன்னர்களின் மனைவியர் அனைவரும் வணங்கிப் புகழும் பெருமையுடையவளாக முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் மனைவி

அவனிமுழுதுடையாள் திகழ்ந்தாள். அவளோடு சிம்மாசனத்தில் உடன் வீற்றிருந்து முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சி நடத்தினார்.

முடிவுரை

முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியனின் மெய்க்கீர்த்திகளிலிருந்து வரலாற்றுச் செய்திகள் நிறையக் கிடைக்கின்றன. இவரின் காலத்து அரசியல் நிலை, சமுதாய நிலை, சமய நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ள இம்மெய்கீர்த்திகள் பெரிதும் உதவுகின்றன. இம்மெய்க்கீர்த்திகளில் கையாளப்பட்டுள்ள சொற்களிலிருந்து அக்காலத்திய தமிழ்மொழி வளர்ச்சியையும் அறிந்து கொள்கிறோம். இம்மெய்க்கீர்த்திகளை இவரின் கால வரலாற்றின் ஒளிவிளக்குகள் என்று சொல்வது சாலப் பொருந்தும்.

அடிக்குறிப்புகள்

1. ம. இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, ப.434.
2. கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை, ப. 104.
3. 'பூவின் கிழத்தி' மெய்கீர்த்தி வரிகள்-1-7.
4. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், சென்னை, ப.381.
5. பூ. சுப்ரமணியம், மெய்க்கீர்த்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.237.
6. தே.ப. சின்னசாமி, பெருமைமிகு பாண்டியர்களின் வீரவரலாறு, மணிமேகலை பிரசுரம், சென்னை, ப. 95.

சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலில் பெண்ணியப் பார்வை

வீ.அலமேலுமங்கை, கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு

இலக்கியங்கள் சமூக நிகழ்வுகளை வெளியிடும் பண்புடையவை. அவ்வப்போது சமூகப் போக்கையும் மாற்றத்தையும் அவ்வவ் காலங்களில் உருவாகும் இலக்கியங்கள் பகுதி அளவில் பிரதிபலிக்கின்றன. சமூக வரலாற்றாய்விற்கும் மொழி ஆய்விற்கும் இலக்கியங்கள் பயன்படுகின்றன. இலக்கியத்தின் பாடுபொருள் வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறுகிறது. வரலாறு, அறிவியல், பண்பாடு, நாகரீகம், தனிமனிதப் பண்புகள் போன்றவை பாடுபொருளாக இலக்கியத்தில் அமையும் பொழுது இலக்கிய ஆய்வின் தேவை மிகுதியாகிறது. எல்லா இலக்கியங்களும் அவற்றின் பாடுபொருளால் மதிப்பைப் பெறுகின்றன. உலக அளவில் தோன்றிய இலக்கியங்களுக்கும் இது பொருந்தும்.

நவீன இலக்கியங்களாகிய நாவல், சிறுகதை போன்றவற்றிலும் பெண்கள் குறித்த சிந்தனைகள் பாடுபொருளாயின. விடுதலைக்கு முன்பே இப்போக்குகள் (Trend) நவீன இலக்கியங்களில் காணப்பட்டன. சமகால வாழ்வியலில் பெண்களின் நிலையை எடுத்துக் கூறும் முறையில் மிதமான போக்கில் படைப்புக்கள் பல தோன்றின. இத்தகைய படைப்புகளைத் தம்முடைய நெடும்பணியாகச் செய்தவர்களுள் சுந்தர ராமசாமியும் ஒருவர் ஆவார்.

இவ்வாய்வு சுந்தர ராமசாமியின் படைப்புக்களில் பெண்களின் வாழ்வியல் முறையினைக் கோட்பாடாகக் கொண்டு ஆராய்கிறது. அதனால் இவ்வாய்விற்கு "பெண்ணியப் பார்வை" என்று பெயரிடப்பட்டுள்ளது.

பெண்ணியச் சிந்தனைகள்

பெண்களின் சமூக அரசியல் வாழ்க்கையில் மாறுதல்களை உண்டாக்குவது பெண்ணியக் கொள்கையாகும். ஆணாதிக்கச் சமுதாயத்திலிருந்து பெண்களைத் தனித்துவம் அடையச் செய்யும் முயற்சியே பெண்ணியச் சிந்தனைகளின் வடிவமாக வெளிவந்தது. தமிழைப் பொறுத்தவரையில் நவீன இலக்கியங்கள் பெண்கள் விடுதலையை மிகுதியாக வெளிக் கொணர்ந்தன.

> *'Feminism' என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். 'Femina' என்ற சொல்லுக்குப் 'பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள (Having the qualities of female) என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது*

என்று இரா.பிரேமா பெண்ணியத்திற்கு விளக்கம் கூறுகிறார். பெண்ணியம் பற்றி எழும் சில எதிர்க் கருத்துகளுக்கும் இவர் விடை கூறுகிறார். பெண்ணியம் தோன்றியதற்கான காரணத்தையும் தம் நூலில் குறிப்பிடும் இவர்,

'பெண்ணியம்' என்றாலே 'ஆண்களை எதிர்ப்பது' என்ற எண்ணம் சமூகத்தில் பரவலாக நிலவி வருகிறது. உண்மையில், பெண்ணியத்தின் நோக்கம் அது அன்று காலம் காலமாக அடிமைப்பட்டு, வதைப்பட்டு வாழும் பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டு, இவர்களுக்கும் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டி, சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவதே, பெண்ணியத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும்.

என விளக்குகிறார்.

தமிழ் இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்வதால் ஏற்படும் பயனை அரங்க.மல்லிகா,

'பெண்ணியம்' பெண்ணின் சமூகத்தகுதி நிலை குறித்து இதுவரையில் எடுத்துரைக்கப்பட்ட இலக்கியத் தரவுகளை மறுபரிசீலனை செய்யப் பெரிதும் உதவியாக இருக்கிறது. அதனால் தமிழ் இலக்கியத்தில், பெண்ணியத் திறனாய்வு நெறி பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை முன் வைப்பதன் மூலம் பெண்ணியத்தின் தேவையை வரையறுத்திட இயலுகிறது. தமிழ் இலக்கியத்தில், சமூகப் பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் இருத்தலை (Existence) அறிந்து கொள்ளவும், அவர்களின் மீதான வன்முறையை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் உதவுவதால் இதுபற்றி விரிவாக அறிதல் அவசியமாகிறது

எனக் கூறுகிறார்.

பெண்களின் ஆளுமை

'ஆளுமை' ஒன்றை ஆளும் திறன் எனக் கூறப்படும் இது உள்ளப்பண்பை விளக்குவதாகும். ஒருவருடைய உள்ளத்தின் திட்பம் வெளிப்படும் தன்மைகளை 'ஆளுமை' எனக் கூறலாம். ஆங்கிலத்தில் 'பர்சனாலிட்டி' (Personality) என இது வழங்கப்படுகிறது. மனிதர்களின் ஊக்கமும் இதில் அடங்கும்.

தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும் முறை, நடத்தைகள் அவன் பிறருடன் பழகும்முறை மனப்பான்மைகள் அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல் உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை .ஆளுமை எனப்படும். அவனுடைய உடல் தோற்றமும் அவன் உடை பாணியும் நடையும் அவனிடம் காணப்படும் அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம் நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பலவிதமான பண்புகளும் அவனுடைய ஆளுமையில் அடங்கும்

என்று ஆளுமை பற்றி விளக்கம் கூறப்படுகிறது. இது பெண்களுக்கும் பொருந்தும். இத்தகைய பண்புகள் பெண்களுக்கும் இயல்பே. ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களைத் தாழ்த்தி வைத்திருப்பதால் மிகுதியான ஆளுமைப் பண்புகள் ஆண்களுக்கே இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆளுமை இருவருக்கும் பொது.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

எனப் பாடுகிறார் பாரதியார்.

'ஜே.ஜே சில குறிப்புகள்' புதினத்தில் வரும் சாரம்மா ஓர் அரசியல் தலைவர். மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் (Popularity) பெற்றவர். மற்றத் தலைவர்களுக்கு நிகராக அரசியல் விவரங்கள் தெரிந்தவர். அவரின் செயற்பாடுகளைக் குறிப்பிடும் ஆசிரியர்,

சாரம்மாவின் அரசியல் ஜாதகம் சற்று விசேஷமானது. தேர்தலில் எப்போதும் வெற்றி. ஒரு பத்திரிக்கை நிருபர் கணக்குப் போட்டுத் தந்திருந்தபடி சென்ற பதினைந்து வருடங்களில் சராசரி இரண்டு வருடங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு கட்சியாக மாறிக் கொண்டு வந்திருக்கிறாள். எவ்வளவோ கட்சிகள் இருந்தும், ஒரு கட்சியே பிளவுபட்டு இரண்டும் மூன்றுமாக வெடித்திருந்தும் கூட, இரண்டாவது சுற்றாகப் பழைய கட்சிகளுக்கு அவர் வந்து சேரவும் நேர்ந்திருக்கிறது. (ஜே.ஜே.ப.126)

ஜே.ஜே. நாட்குறிப்பில் தன் தாயாரைப் பற்றி எழுதியுள்ளார். எதையும் விரைவில் செய்யும் ஆளுமை, குடும்ப நிர்வாகம், தனிப்பட்ட பண்புகள், எதையும் கூர்ந்து நோக்கி, ஆராயும் தன்மை ஆகியன அவளுக்கிருந்ததாக எழுதி வைத்துள்ளார். *(ஜே.ஜே.ப.170)*

பெண் கல்வி

கல்வி என்பது அறிவை விருத்தி செய்ய உதவும் கருவியாகும். மனித சமூகத்தில் ஆணையும் பெண்ணையும் சமத்துவமாக்குவது கல்வியாகும். தற்காலத்தில் பெண்கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் திட்டங்கள் தீட்டப் பெறுகின்றன. மேலை நாடுகளில் பெண்கள் கல்வியிற் சிறந்து விளங்குகிறார்கள். பெண்களுக்கு கல்வி வேண்டும் என்ற கொள்கை விடுதலைக்கு முன்னரே எழுந்தது. தலைவர்களும் கவிஞர்களும் பெண் கல்வினை வற்புறுத்தினர். கல்வி ஆண்களுக்கு நிகராகப் பெண்களை உயர்த்தும் என்று அவர்கள் நம்பினர். அவர்களுக்கு உரிமையும் சமத்துவமும் அங்குள்ளதை வரலாறு உணர்த்தும். மனித சமூகத்திற்கே கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் புத்தர் கூறியுள்ளார்.

'ஜே.ஜே சில குறிப்புகள்' புதினத்தில் வரும் மங்களா படித்த பெண். நவீன இலக்கியங்களில் அவளுக்கும் பயிற்சி உண்டென்பதாக சு.ரா.காட்டுகிறார். தொடர்கதைகள், அறிவியல் நூல்கள் போன்றவற்றை அவள் வாசித்திருக்கிறாள். அவளுடைய உரையாடலின் வழி இதனை ஆசிரியர் குறிப்பாகத் தெரிவிக்கிறார்.

'சார், சிட்டுக்குருவியின் தொடர்கதைகளை நீங்கள் படித்திருக்கிறீர்களா? என்று கேட்டாள் மங்களா. 'நான் படித்ததில்லை' என்றேன். நீரில் வாழ வேண்டிய பிராணி படிக்கட்டுகள் ஏறி, முதல் மாடிக்கு எப்படி வந்தது என்ற தோரணையில் என்னைப் பார்த்துவிட்டு வேகமாக ஓடினாள். (ஜே.ஜே.ப.61)

ஜே.ஜே.விற்கு அஞ்சலி (இரங்கல்) நிகழ்ச்சி நடைபெறுகிறது. பெண்கள் மேடையேறிப் பேசுதலை இதில் காணமுடிகிறது. 'எழுத்தாளர் ராதா' என்ற புனைபெயரில் பெண் ஒருவர் அங்குக் காணப்படுகிறார். மேலும் பல பெண்கள், அவர்களும் படித்தவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். சிலர் மேடைப் பேச்சில் சிறந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

தனித்தன்மை

சு.ரா.வின் புதினங்களில் தனிப்பண்புகள் கொண்ட பெண் பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. பெண்மாந்தர்களின் பண்பினைக் காட்டும் நோக்கிலேயே அவை புனையப்பட்டிருக்கின்றன. தமிழின் சமூக மாற்றத்தையும் உணர்ச்சியையும் இவை தொடுவன.

பவானி என்ற பெண் பேசும் கூட்டமொன்றைக் கேட்ட ஜே.ஜே. தமக்குள்ளே வியந்து கொள்கிறார். அவள் புரட்சிகரச் சிந்தனையாளராக அவருக்குத் தோன்றுகிறாள். அவரே அப்பேச்சின் சாரத்தை,

> *பவானி பேசும் கூட்டமொன்றைக் கேட்டேன். நல்ல வீராவேசம். ஆணாகிக் கொண்டிருக்கிறாள். கம்யூனிஸ்ட் ஆகிவிட்டாளா என்பதைச் சொல்லத் தெரியவில்லை. நல்ல சன்னமான குரல். அருமையாகப் பாடுகிறாள். புரட்சி கீதங்கள் மிகப் பயங்கரமானவை. 'ஜோச.்ப் விஸாரியோனோவிச் ஸ்டாலின் வாழ்க!' என்று அவள் யதுகுல காம்போதியில் பாடுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை (ஜே.ஜே.பக்.163-164)*

எனக் கூறுகிறார். மேடைப் பேச்சு, சங்கீத ஞானம், பேச்சில் வெளிப்படும் தத்துவச் சிந்தனைகள் ஆகியன எண்ணத்தக்கன. பெண் பாத்திரத்தைச் சுற்றிப் புனையப்பட்டிருக்கும் சிறப்புக்கள் தனித்தன்மைகள் எனலாம்.

ஜே.ஜே.வின் தாய் திரேசம்மா, ஜே.ஜே.விடம் மிகுந்த அன்பு கொண்டவள். தன் கணவனின் பண்புகளுக்கு மாறான தனித்தன்மை உடையவள். எப்போதும் பரபரப்பும் சுறுசுறுப்பும் உடையவள். எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளில் நிகழ்காலத் துன்பங்களை மறப்பவள். அண்டை அயலாருடன் நெருக்கமான உறவு கொண்டவள். பிறர் துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்பவள். செய்நன்றி மறவாதவள். ஜே.ஜே.யின் எண்ணப்படி திரேசம்மாவைப் போன்ற தனித்தன்மை உடையவர்களால் மட்டுமே நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

> *எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் மூலம் தான் வாழும் காலங்களில் துன்பங்களை அவளால் தாங்கிக் கொள்ள முடியும். அண்டை அசலுடன் நெருங்கிய உறவு. செய்நன்றி மறத்தல்- இதுதான் சகலபாவங்களிலும் கொடுமையானது அவளது அகராதியில். ஏனெனில் அவளுடைய மூலதனமே இதுதான். என் தாயைப் போன்றவர்களே நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். (ஜே.ஜே.பக்-173-174)*

நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பொறுப்பான தாயாகவே திரேசம்மா விளங்குகிறாள்.

பெண்களும் பண்புகளும்

பெண்களின் பண்பு நிலைகள் சமூகத்தின் போக்கை ஒட்டி அமைவன. சு.ரா.வின் புதினப் படைப்புக்களில் பண்பமைந்தப் பாத்திரங்களும் காணப்படுகின்றன. ‘ஜே.ஜே.சில குறிப்புகள்’ புதினம் டிமிட்ரி, நடாஷா என்ற கணவன் மனைவி இருவரைக் காட்டுகின்றது. நடாஷா உயர்ந்த பண்புகளைக் கொண்ட பெண்ணாகப் புனையப்பட்டிருக்கிறாள். இருவரும் ஒத்த அன்புடையவராய்த் தோன்றுகின்றனர். இலக்கியப் பாத்திரங்களாக இவர்கள் காட்டப் பெறுகின்றனர். கணவனை நடாஷா மிகவும் போற்றுகிறாள். இப்பெண்ணின் சிறந்த பண்புகளைக் காட்டும் வண்ணம்,

> *புகழ்பெற்ற மூன்றாம் தர இந்திய-ஆங்கிலக் கவிஞர்கள் வரும்போது*
> *ஓடி ஓடிப்போய் மொழிபெயர்க்க ஆரம்பிப்பாள் வி.ஐ.பி.களுக்கு*
> *எண்ணெயாக நிற்பாள் இவ்வளவுக்கும் டிமிட்ரி எழுதியுள்ள ‘ஒரு*
> *சோவியத் வீராங்கனையின் கதை’ என்ற நாவலை நான் அவரையே*
> *அன்ரைக்கால் பங்கு படித்திருக்கிறேன் அதற்கு மேல் தாளவில்லை.*
> *இப்போத அதை படித்திருக்கிறேன். (ஜே.ஜே.ப.60)*

என்ற பகுதி காணப்படுகிறது.

தொகுப்புரை

பெண்ணியச் சிந்தனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. நாவல்களில் பெண்ணாளுமைகள், பெண் கல்வியாளர்களின் நடத்தைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அறிவாற்றல், பேச்சாற்றல், நுண்ணறிவு, கலைத்திறன் போன்றவற்றில் பெண்களின் தனித்திறம் எடுத்தாளப்படுகிறது. தோற்றப் புனைவுகள் பெண்களின் பண்புகள் தரப்பட்டுள்ளன.

பல்லூடகம் வழியாக வரலாறு கற்பித்தல்

த.அறிவழகன், முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

முன்னுரை

விஞ்ஞானம் வளர வளர ஒவ்வொரு துறையிலும் புதுப் புது மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. அந்தவகையில் கல்வி கற்பித்தலிலும் புதிய யுத்திகள் கையாளப்பட்டு வருகின்றது. ஆரம்பகாலத்தில் குருகுலக்கல்வியில் அனுபவக் கல்வி மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டுவந்தது. பிறகு ஏட்டுக்கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலில் ஓலைச்சுவடியில் எழுதிய மனிதன் பின்னாளில் எழுதிப்படிக்க பலவழிகளை மேற்கொண்டுள்ளான். தற்போது இந்நவீன யுகத்தில் ஊடகங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வரலாறு என்பதன் விளக்கம்

மனிதன் உலகில் தோன்றியதிலிருந்து அவனது வரலாறு ஆரம்பமாகின்றது. மனிதன் தன் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்காக அவன் சென்று தங்கிய இடங்களும், கண்டங்களும் அதில் இடம் பெறுகின்றன. மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களையும் அரசியல், சமயம், சமூகம், இலக்கியம், கலை மேம்பாட்டிற்கு உதவியவர்களையும் பற்றி வரும் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுவது வரலாறு எனப்பட்டது. பலதரப்பட்ட செய்திகளை ஆய்வு செய்து ஒருங்கமைத்து அறிவியல் முறையில் நிகழ்ச்சிகளைத் காலவரிசைப்படுத்தி விவரித்துக் கூறுவதே வரலாறு ஆகும்.

வரலாறு கற்பித்தலின் முக்கியத்துவம்

வரலாறு என்பது ஒரு பாடமல்ல அது சிந்தனை பிறப்பதற்கான ஒரு வழி. ஒருவர் தன்னைத்தானே புரிந்துகொள்வதற்கும், தான் யார்? இந்தியனா? தமிழனா? தனது சமூகக் கடமை யாது? எனப் பகுத்தாராய்ந்து சமூக உணர்வோடு வாழ்வதற்குத் துணைபுரிகின்றது.

வரலாறு என்பது அறிவுக் களஞ்சியம், வரலாறு கற்பதால் மாணவர்களின் அறிவுக்கு விருந்து கிடைக்கின்றது. தற்கால அறிவு வருங்கால அறிவு ஆகியன கடந்த கால அறிவால் பெறப்படுகின்றது. ஒரு மாணவன் வரலாறு கற்பதால் பகுத்தறியும் சிந்தனையாளராக வளர்ந்திட உதவுகின்றது.

வரலாறு கற்கும் ஒருவரிடம் காலம், இடம், சமூகம் பற்றிய அறிவு வளர்கின்றது. வரலாறு என்பது முன் உதாரணங்களால் விளக்கப்படும் தத்துவம். வரலாற்று மாந்தர்களைப் பற்றி பயிலும்போது நற்பண்புகள் வளர்கின்றன. வீர சிவாஜியைப் பற்றி பயிலும் போது துணிச்சலும், வீரமும் மேலோங்கும். அதே போல் மகாத்மா காந்தியைப் பற்றி பயிலும் போது அகிம்சை வளரும். இவ்வரலாறானது ஒவ்வொரு குடிமகனுக்கும் தாம் பிறந்த மண்மேல் ஒருவித பற்றை வளர்க்கின்றது. நாட்டுப்பற்று என்பது குறுகியதாக இல்லாமல் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்றும், சகோதர மனப்பான்மை, மன அமைதி, நீதிக்கு தலைவணங்குதல், பணிவு போன்றவற்றையும் ஏற்படுத்துகின்றது. இவ்வரலாறுதான் மனிதனின் வளர்ச்சியைப்

படிப்படியாகப் பதிவுசெய்து, இளைய சமுதாயம் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல ஊன்றுகோலாக அமைகின்றது.

வரலாறு என்பது முதன்முதலில் மனிதன் தோன்றியது முதல் இறுதி மனிதன் வரையிலும் மனிதன் தோன்றிய செய்தி, நாடோடி வாழ்க்கை, வளர்ந்தவிதம், முன்னேற்றம், நவீனம் ஆகியவற்றை பற்றிதான் படிக்க இயலும். இயற்கையில் வாழ்ந்த மனிதனுக்கும் நவீனத்தில் வாழ்கின்ற மனிதனுக்கும் இடையே உள்ள விளைவுகள் பற்றி இவ்வரலாறுதான் உலகிற்கு உணர்த்துகின்றது. சங்க காலம் முதல் மனிதனுக்கு நிலவைப் பிடிக்கவேண்டும் என்ற சிந்தனை இருந்துள்ளது. அக்காலத்திலேயே குழந்தைக்கு நிலவைக் காட்டி சோறு ஊட்டியுள்ளனர். அந்த முதல் குழந்தைதான் ஆம்ஸ்ட்ராங்காக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. நிலவில் பாட்டி வடைசுடுகிறாள் என்ற ஒரு சிறு வரலாற்றுப்பதிவுதான் இன்று நிலவில் மனிதன் காலடிவைத்தான். அதன் பிறகே அதனுள் சென்று வாழ்வதற்கு வசதிகள் இருக்கின்றதா? என்ற கேள்வியை எழுப்பி தற்போது அதற்கான ஆராய்ச்சி நடக்கின்றது. வேற்றுகிரக மனிதன் இருக்கிறான் என்ற ஒரு செய்திதான் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியாக அமைந்துள்ளது. அதில் வாழ்வதற்கு தண்ணீர் இருக்கிறதா? ஆக்ஸிஜன் இருக்கிறதா? மரம் வளர்க்கமுடியுமா? என்ற ஆராய்ச்சிகள் தற்போது நடந்தவண்ணம் உள்ளன.

பல்லூடகம்

பல்லூடகம் என்பது வேறுபட்ட உள்ளடக்க வடிவங்களின் இணைவைப் பயன்படுத்துகிற ஊடகம் மற்றும் உள்ளடக்கமாகும். இது உரை, ஒலி, அசையாப்படங்கள், இயங்கும் படங்கள், நிகழ்படம் மற்றும் இடைக்காட்சி உள்ளடக்க படிவங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியது

பல்லூடகம் என்பது வழக்கமான கணினிமயமாக்கப்பட்ட மற்றும் மின்னணு சாதனங்கள் போன்ற தகவல் உள்ளடக்கச் செயலாக்க சாதனங்கள் மூலமாகப் பதிவு செய்யப்பட்டு இயக்கபடுவது அல்லது காண்பிக்கப்படுவதாகும். இது பல புலன்களையும் ஈடுபடுத்தக்கூடிய வகையில் ஒரே சமயத்தில் ஒரு பாடப் பொருளைத் தெளிவுபடுத்த பல ஊடகங்களைப் பயன்படுத்திக் கற்பது, கற்பிப்பது பல ஊடகக் கற்பித்தல் எனப்படுகின்றது.

பல்லூடக வழியாகக் கற்பித்தலுக்கான கருவிகள்

- கேட்டல் கருவி
- ஒலி நாடா
- ஒலிப்பேழைப் பெட்டிகள்
- தொலைபேசிகள்
- தொலைக்காட்சிப் பெட்டி
- வீடியோ சாதனங்கள்
- திரைப்படக் கருவிகள்
- கணிப்பொறிகள்
- குறுந்தகடு
- தலையுயரப் படம் வீழ்த்திகள்
- படம் வீழ்த்திகள்

பல்லூடகம் வழியாக வரலாறு கற்பித்தல்

வரலாற்றை ஆரம்ப காலத்திலிருந்து கற்பதால் மட்டுமே அதனைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள முடியும். காலப்போக்கில் இவ்வரலாறு பற்றிய அறிவை வளர்ப்பதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. வரலாற்றைக் கற்பதில் மாணவர்களுக்கு விருப்பமின்மை ஏற்பட்டுள்ளது. அனைவருமே அறிவியலையும், தொழில்நுட்ப கல்வியை மட்டுமே கற்க விரும்புகின்றனர். அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்ததற்கு இந்த வரலாறுதான் காரணம் என்பதை மறந்துவிட்டனர். பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்துகொள்ள முற்படும்போது அவற்றில் உள்ள உண்மைகள், சிக்கல்கள், முரண்பாடுகள் எழுந்து பிறகு அவற்றிலிருந்து தெளிவு ஏற்படும் திறன் உருவாகின்றது. இத்திறன் இல்லாமல் போய்விடுவதால்தான் நாட்டில் ஆங்காங்கே ஒற்றுமையின்மை, பொறாமை, மன அமைதியின்மை, கசப்புணர்வு, போட்டியுணர்வு நீதிக்கு தலைவணங்காமை ஆகியவை ஏற்படுகின்றது. இத்தகைய சூழல் மாறவேண்டுமெனில் வரலாறும் கற்பிக்கப்படவேண்டும். மேலும் பல்லூடகம் வழியாக வரலாற்றினை எவ்வாறு கற்பிக்கலாம் என்பதைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வரலாறு கற்பிக்கவேண்டும் என்றால் முதலில் சமுதாயம், மனிதன், இயற்கை, நாட்டின் பொருளாதாரம், அரசியல், அறிவியல் ஆகியவற்றைப் பற்றி காலவரிசைமுறையில் கற்பித்தல் நலம். வரலாற்று ஆசிரியர் உலகப்போர்கள், ஆட்சி அமைப்பு, அதிகாரங்கள், கிராம வாழ்க்கை, நகர வாழ்க்கை, கிராம நிர்வாகம், மாவட்ட நிர்வாகம், பண்பாடு, பாரம்பரியம், இயற்கை போன்றவை பற்றிய ஒரு தெளிவான சிந்தனையுடையவராக இருந்தாலும் அதனை மாணவர்களிடம் கொண்டு செல்லும் விதம் புதுமையானதாக இருக்கவேண்டும்.

ஏடுகளில் படித்து தெரிந்துகொண்டு அதனைப் பற்றிய சிந்தனையை நாளடைவில் மாணவர்கள் மறந்துபோவதற்கு ஏதுவாகின்றது. இதனைச் செவிவழியாக கேட்டறிந்தால் இன்னும் மனத்தில் ஆழமாகப் பதிய வாய்ப்புள்ளது. ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் செவிவழியாகக் கேட்கச்செய்யும் போது அது ஆழ்ந்து சிந்திக்கும் எண்ணத்தை உருவாக்குகின்றது.

சமுதாயப் பண்பாடு பற்றி கற்பிக்கும் பொழுது பிற நாட்டின் சமுதாயப் பண்பாடுகளைப் பற்றியும் கற்பித்தல் வேண்டும். ஊடகங்கள் மூலம் படக்காட்சிகளாக்கி அதனை ஒளிபரப்பு செய்து பயிற்றுவிக்கலாம். இவ்வகையில் பயிற்றுவிக்கப்படும்பொழுது மனத்திரையில் படங்களுடன் கூடிய செய்திகளை நினைவில் கொள்ளும் போது அது மீண்டும் மீண்டும் தோன்றி காட்சிகளை பார்ப்பதற்கான உணர்ச்சியைத் தூண்டுவதால் கற்றல் ஆர்வம் அதிகரிக்கப்படுகின்றது.

இந்திய சுதந்திரம் பற்றி பேசும்போது அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புகள் நம் கண்முன்னே வருவதில்லை. இந்திய சுதந்திரத்திற்காக எண்ணற்றோர் பாடுபட்டனர் என்பது மட்டுமே தெரிந்த நமக்கு அதனை ஊடகத்தின் வாயிலாக காட்சிகளுடன் பார்த்து அறியும்போதுதான் இத்தனை துன்பப்பட்டு சுதந்திரம் பெற்றுத் தந்தனர் என்பதை உணர்வுப்பூர்வமாக அறிந்துகொள்ளமுடிகிறது.

கணிப்பொறியில் கற்பித்தல்

கணிணித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் விளைவாக கணினி என்னும் ஒரு தனி ஊடகமே பல்வகை ஊடகமாக பயன்பட்டு இது ஒன்றிலேயே பல்வேறு ஊடகங்களின் பண்புகள் பயன்படுத்தப்படுகின்றன. கேள்வி, காட்சி, படங்கள், வரைபடங்கள், ஒலி, செயற்கையான சூழலை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

திட்டமிட்ட கற்பித்தலின் ஒரு வகையே கணிப்பொறியில் கற்பித்தல் முறையாகும். நேரடியாகக் கண்டறியமுடியாத நிகழ்வுகளை பாவனை முறையில் கணிப்பொறியின் மூலம் கற்பிக்க முடியும். உலக அதிசயங்களை கணிப்பொறியில் வடிவமைத்து விளக்கிக் காட்டும்போது அதன் மீதான ஆர்வம் அதிகரிக்கின்றது. எடுத்துக்காட்டாக தாஜ்மகால் எவ்வாறு வடிவமைக்கப்பட்டது என்பதை காட்சிப்படுத்தி வடிவமைப்பு முறையை வரிசைப்படுத்தி கற்பிக்கப்படும்பொழுது மாணவர்களிடையே கட்டடக்கலை பற்றிய நுண்ணறிவு வளர ஏதுவாக அமைகின்றது. உலகில் உள்ள நீர்வீழ்ச்சிகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், ஏரிகள் குளங்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவிழைகின்றபோது அங்கு சென்று அவற்றைப் பார்த்து கற்க இயலாது அவற்றைக் கணிப்பொறியின் வழியாக காட்சிப்படுத்தப்பட்ட நேரடிக் காட்சிகளைக் கண்டு கற்கும்பொழுது அதன் மீதான நினைவலைகளை அதிகரிக்கச் செய்கின்றன.

வீடியோவுடன் இணைந்த கணிப்பொறியில் அச்சடித்த வாக்கியங்களை மட்டும் வலியுறுத்தாமல் அவ்வாக்கியங்களுக்கான படக்காட்சிகளும் வலியுறுத்தப்படுகின்றன.

நீண்டகாலம் நிகழ்ந்த ஒரு வரலாற்றுப் போரை பற்றி கற்பிக்கும்பொழுது அதனைப் பற்றிய கருத்தினை நாம் வெகுநேரம் விளக்கத் தேவையில்லை. அவை பற்றிய முக்கிய கருத்துக்களைக் கூறி அதற்கான காட்சிகளை மாணவர்கள் காணச்செய்யும் போது நேரம் மிச்சமாவதுடன் முக்கிய கருத்துக்கள் மனதில் ஊடுருவ ஏதுவாகின்றது.

வகுப்பறைக்குள் இருந்துகொண்டே கிராமப்புறக் குழந்தை நகரக் காட்சிகளையும், நகர்ப்புறக் குழந்தைகள் கிராமப்புறக் காட்சிகளைக் காணச்செய்யலாம். இதன் மூலம் நேரத்தின் எல்லையையும், தூரத்தின் எல்லையையும் கடந்து போக முடிகின்றது.

கஜினியின் படையெடுப்பு, அசோகரின் கலிங்கப்போர் போன்ற வரலாற்று முக்கிய நிகழ்வுகளை நாடக வடிவில் தொலைக்காட்சியின் மூலம் மாணவரிடையே கொண்டுசெல்லும் போது மாணவர் கற்கவேண்டிய கல்வியை சோர்வில்லாமல் கற்க உதவுகின்றது.

கற்பித்தலில் ஊடகத்தின் பயன்பாடு

வானொலி வகுப்பில் ஒரே மாதிரியான சலிப்பேற்றும் கற்பித்தலை நீக்கி பல்சுவையைக் கூட்டுகிறது. இது பாடத்தைக் கவனித்துக் கேட்பதற்குப் பயன்படுகிறது.

தொலைக்காட்சியானது உலகில் நடக்கும்நிகழ்வுகளை நடந்து கொண்டிருக்குபோதே உண்மையான காட்சிகளுடன் செய்திகளை நாம் இருக்கும் இடத்திலிருந்தே பார்த்து அறிந்துகொள்ளச் செய்கிறது.

பாடத்தைத் தொடங்கும்போது, தகுந்த 16 எம்எம் படச்சுருளைக் காட்டிச் சில கேள்விகளை எழுப்பினால் கற்பிக்கப் போகும் பாடத்தில் மாணவர்களுக்கு ஈடுபாடு அதிகரிக்கும்.

படச்சுருள் என்பது கண்களாலும் நுண்ணோக்கி, தொலைநோக்கியால் பார்க்க முடியாத சில பொருள்களைப் படச்சுருள் மூலம் தெளிவாகப் பார்த்து கற்பதற்கு ஏதுவாக அமைகின்றது.

பல்லூடகத்தின் வாயிலாக வரலாறு கற்பிக்கப்படும்பொழுது கற்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. பாடப்பொருளை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளவும், நினைவில் நிறுத்தவும் உதவுகிறது. மாணவர்களின் கவனத்தைக் கவர்ந்திடவும் நிலை நிறுத்தவும் முடிகின்றது.

மாணவர் கற்கும் பாடத்தை படக்காட்சிகளுடன் உயிரோட்டமுள்ளதாக காட்சிப்படுத்தப்படுவதால் ஒரு உண்மைக் கதையாக ஏற்று இதனை மனத்திரையில் ஓடச் செய்கின்றனர். இவ்வாறு காட்சிப்பட்டுத்தப்பட்ட பாடப்பொருளை அதிக அளவில் கற்றிடவும், கற்றவற்றை நீண்ட காலம் நினைவில் வைக்கவும் உதவுகிறது. மொழிசாராத படிமங்களையும், குறியீடுகளையும் விளக்கிட முடிகின்றது. பல்வேறு வல்லுநர்களின் திறமைகளை வகுப்பறைக்குள் கொண்டுவர முடிகிறது. வழக்கமான கரும்பலகை, பாடநூல் இவற்றை மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருந்த வகுப்பறைக்குள் பலவகையான கற்பித்தல் கருவிகளை பயன்படுத்தி கற்பிக்கும்பொழுது அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் ஒரே நேரத்தில் கற்பதற்கு ஏதுவாக பல்லூடகங்கள் அமைகின்றன.

முடிவுரை

இன்று கல்வி பயிலவரும் மாணவர்கள் பல்வேறு திறத்தினர். சிலருக்குப் படித்தறிவதைவிட கேட்டலே சிறந்ததாக அமையும். சிலருக்குப் பார்த்தலே பொருந்தும். வேறு சிலருக்கு கேட்டலும் பார்த்தலும் சேர்ந்து நிகழவேண்டும். ஆகவே இதுபோன்ற வேறுபாடுகளுக்கு ஏற்ப கற்க வழி அமைப்பது பல்வகை ஊடகங்களே. பெருகிவரும் மக்கட் தொகைக்கேற்பவும், கருத்தூட்டம் பரவலாகவும் தெளிவாகவும் குறைந்த செலவிலும் நிகழ வழிவகுப்பது கற்பித்தல் மூலங்களே. கற்பிக்கும் நிகழ்ச்சிகள் மாணவரது புலன்களைத் தூண்டி செயல்படுபவையாக இருப்பின் தெளிந்த அறிவை மாணவர் பெறவும், அதன் காரணமாக கருத்தூட்டம் சிறப்புற அமையவாய்ப்பாக இருக்கும் எனலாம். ஆசிரியர் கற்பித்தலின் போது செய்திகளைத் திணிப்பவராக இல்லாமல், சிறந்த கருத்தூட்டத்திற்கு வழியமைப்பவராக இருத்தல் வேண்டும் என்பது இக்கட்டுரையின் வாயிலாக உணரமுடிகின்றது.

பயன்பட்ட நூல்கள்

1. சிராஜுத்தீன், *தமிழ்நாட்டு வரலாறு*, வெற்றிப் பதிப்பகம், ஆர்க்காடு.
2. குமார், மு., *வரலாறு கற்பித்தல் தாள்-1*, கிருஷ்ணா பப்ளிகேஷன்ஸ்.
3. அந்தோணிசாமி.அ., *கல்வியியல் புதுமைகளும் நுட்பவியலும்*, லடிஸ்கா பதிப்பகம், பட்டுக்கோட்டை.
4. கோகிலா தங்கசாமி, *கலைத்திட்டமும் கல்வி மேலாண்மையும்*, மாநிலாபதிப்பகம், மதுரை-4
5. நாகராஜ். கி., *கலைத்திட்டத்தின் வளர்ச்சி*, ராம் பதிப்பகம், சென்னை.

திருக்கருகாவூர் முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலில் முதலாம் பராந்தகச் சோழனின் கல்வெட்டுகள்

முனைவர் S. அனுராதா, உதவிப் பேராசிரியை (வரலாறு), த.ஞா.அ.ம. கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

தமிழகத் திருக்கோயில்கள்; பாரத கலாச்சாரம் மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றின் சங்கமமாகத் திகழ்கின்றன. பக்திப் பரவசத்தின் பெருக்கமும், அருளாளர்களின் அவதாரங்களும், தத்துவத்தரிசிகளின் வாழ்க்கையும், தென்னகத்தையே கைலாயமாக ஆக்கின. தேவாரப் பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் 275 ஆகும். சோழநாட்டில், காவிரி தென்கரைத் தலங்களில் உள்ள பஞ்ச ஆரண்டங்களுள் முதன்மையானது திருக்கருகாவூர் முல்லைவனநாத சுவாமித் திருக்கோயில் ஆகும்.

அருள்மிகு கர்ப்பரட்டாம்பிகை உடனுறை முல்லைவனநாதசுவாமி திருக்கோயில், தஞ்சை மாவட்டத்தில், பாபநாசம் வட்டத்திற்கு தெற்கே 6 கி.மீ. தொலைவிலும், தஞ்சாவூருக்கு வடகிழக்கில் 20 கி.மீ தொலைவிலும், வெட்டாற்றின் தென்கரையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

திருக்காளவூர் என மக்களால் பொதுவாக அழைக்கப் பெறும் இத்தலம் மாதவி வனம், முல்லை வனம், திருக்கருக்காவூர், கர்ப்பபுரி என்று பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. மாதவி (முல்லைக்கொடியை) தல விருட்சமாகக் கொண்டுள்ளதால் மாதவி வனம் (முல்லை வனம்) என்றும்; கரு = கா + ஊர் = கரு – தாயின் வயிற்றில் உள்ள (குழந்தை) கருவை, கா - காத்த (காக்கின்ற), ஊர் - தலம், கருகாவூர் என்றும்; ஆதரவற்ற ஒரு பெண்ணுக்கு இறைவி மருத்துவம் பார்த்து கருவை காத்தமையால் இத்தலத்திற்கு கருகாவூர் என்று பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது.

பல ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாதவர்கள், குழந்தை பாக்கியம் பெறவும், திருமணம் கூடி வராத பெண்களுக்கு விரைவில் திருமணம் கூடி வரவும் அன்னை கருகாத்த நாயகியை வேண்டி நெய்யினால் படிமெழுகி அம்மன் பாதத்தில் வைத்து மந்திரிக்கப்பட்ட நெய்யினை 48 நாட்கள் உண்டு வந்தால் குழந்தைப் பேறு கிட்டும் என்பது நிச்சயம். இறைவி கருக்காத்த நாயகியை வேண்டி விளக்கெண்ணெய் மந்திரித்து வயிற்றில் தடவினால் கரு காக்கப்படுவதுடன் சுகப்பிரசவம் ஆவது உண்மை நிகழ்ச்சியாகும்.

இக்கோயில், இறைவன் முல்லை வனத்தில் எழுந்தருளியிருப்பதால் மாதவீவனேஸ்வரர் என்றும்; முல்லைவனநாதர் என்றும்; மகப்பேறு அளிப்பதால் “கர்ப்பபுரீஸ்வரர்” என்றும் அழைக்கப்படுகின்றார். புற்றுருவில் சுயம்புவாக, தோன்றிய லிங்கத் திருமேனியில் முல்லைக் கொடி படர்ந்த வடுவினையும் இன்றும் காணலாம். புற்றுருவாக இருப்பதால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படுவதில்லை, புனுகு மட்டுமே சாத்தப்படுகிறது. அந்த புற்றுமண்ணே உடல் சரும வியாதிக்கு மருந்தாக

பக்தர்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது. புனுகு சாத்தி, வளர்பிறை பிரதோஷ காலங்களில் இத்தலத்து இறைவனை வணங்கினால் தீராத நோய்கள் அனைத்தும் தீர்ந்து விடும் என்பது நம்பிக்கையாகும்.

நவக்கிரகத்தலங்களும், பரிகாரத் தலங்களும், சுற்றுலாத் தலங்களும் நிறைந்த (பழைய) தஞ்சை மாவட்டத்தில் திருக்கருகாவூர் ஓர் முக்கிய தலமாக விளங்குகிறது. தேவார மூவரால் பாடப்பட்ட புராதானமான தலமாகவும் கருதப்படுகின்றது.

திருக்கருகாவூர், முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலில் மொத்தம் 29 கல்வெட்டுகள் முதற்பராந்தகன் காலத்தில் இருந்து விக்கிரம சோழன் காலம் வரை சுவாமி கோயில் கருவறை அர்த்தமண்டப சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 16 கல்வெட்டுகள் முதல் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. மிக அதிகமான கல்வெட்டுகளும், இக்கோயிலின் முதல் கல்வெட்டும் இவ்வரசன் காலத்தில் பொறிக்கப்பட்டதால், இவன் காலத்தில் தான் இத்திருக்கோயில் கற்றளியாக கட்டப்பட்டு இருக்க வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.பி. 907-953), வடகரை பாம்பூர் நாட்டுத் தேவதானம் "திருக்குடமுக்கிற்பால் கருகாவூர்" இறைவன் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது[1]. ஆனால் முதலாம் ராஜராஜன் காலத்தில் இருந்து இவ்வூர் நித்யா விநோதவளநாட்டு ஆவூற்கூற்றத்துத் திருக்கருகாவூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது[2]. இந்நாட்டுப்பிரிவு விக்கிரம சோழன் காலம் வரை தொடர்ந்து காணப்படுகிறது.

அருள்மிகு முல்லைவனநாதசுவாமி கோயில் கருவறை சுவற்றில், இக்கோயிலின் முதல் கல்வெட்டு, முதலாம் பராந்தகன் காலத்தில் அவனின் 3ஆம் ஆட்சி ஆண்டில் (கிபி 910) தென்புற தட்சிணமூர்த்தி கோட்டத்தின் வலபுறம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு முற்றுபெறாமல், "திருக்கருகாவூர் மகாதேவர்" என்ற பெயருடன் நின்றதல், கல்வெட்டின் நோக்கமும், செய்தியும் நமக்குப் புலனாகவில்லை. ஆனால், இக்கல்வெட்டின் மூலம், இக்கோயில் கட்டப்பட்டள்ளதை நாம் உறுதி செய்து கொள்ளமுடிகிறது[3].

இவ்வரசனின், 5ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.912) தென்புற கருவறை சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது மற்றொரு கல்வெட்டு[4]. இவனின் மெய்கீர்த்தியான, "மதுரை கொண்ட கோப்பரகேசரி" என்று தொடங்கியதால், மதுரையை வென்ற பிறகு இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது என்பதை உறுதியாக கூறலாம். "வடகரை பாம்பூர் நாட்டு தேவதானம் திருக்குடமூக்கிற்பால் கருகாவூர்" என்று இக்கோயிலின் அமைவிடத்தை நமக்கு தெளிவாக காட்டுகிறது. மேலும், நந்திபுரத்தைச் சேர்ந்த வணிகன் சாமூண்டன் மூர்த்தி என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்காக இரு இடங்களில் உள்ள நிலங்களை விலைக்கு வாங்கி கோயிலுக்கு அளித்த செய்தியைக் கூறுகின்றது. நிலத்தின்று வரும் வருமானத்தில், வரிபணம் போக மீதம் உள்ள விளைச்சல் பயனை, விளக்கு எரிக்கும் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ள "ஆயிரந்திருவடி" எனப்படும் குழுவினரிடம் ஒப்படைத்த விபரங்களையும் தெளிவாகக் கூறுகின்றது.

மிகவும் சிதைந்த நிலையில் கோப்பரகேசரி முதலாம் பராந்தாகனின் 10ஆம் (கி.பி.917) ஆட்சி ஆண்டு கல்வெட்டானது கருவறைத் தென்புற சுவரில்

காணப்படுகிறது[5]. இக்கல்வெட்டிலிருந்து, நிலக்கொடையைப் பற்றியக் குறிப்பும், சதுர்வேதி மங்கல மகாசபையையும் கூறுகின்றது. இவ்வரசனின் 15ம் ஆட்சி ஆண்டு (கி.பி.922) கல்வெட்டு[6] கோயில் தென் அர்த்த மண்டபச் சுவற்றில் முற்றுபெறாமல் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

முல்லைவனநாத சுவாமி, கருவறை தென்சுவரில் காணப்படும் 16ம் ஆட்சி ஆண்டு (கி.பி.923) கல்வெட்டானது[7], திருக்கருகாவூர் மூலபருடைப் பெருமக்கள், மூன்று மாக்காணி நிலத்தை முப்பத்தொரு பழவரவு காசுகளுக்கு கோயில் இறைவனுக்கு விற்ற செய்தியினைக் கூறுகின்றது. விற்றநிலமானது, இறையிலியாகவும், ஊர் சபைக்குரிய கூட்டு நிலமாக இருந்ததையும் கூறுகின்றது. தொல்லியல் துறையினர்[8], முதலில் ஒரு கல்வெட்டு வெட்டத்துவங்கி நின்று போனதையும், அதன் தொடர்பாக மற்றொரு கல்வெட்டு பொறிக்கப்பட்டதை இக்கல்வெட்டின் முடிவில் குறிப்புரை வழங்கியுள்ளனர்.

முதல் பராந்தக சோழன், 17ம் ஆட்சி ஆண்டில் (கி.பி.924) பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கோயில் கருவறை மற்றும் அர்த்த மண்டப தென்சுவற்றில் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது[9]. மற்றும் ஓர் கல்வெட்டு, கோயில் கருவறை வடக்கு சுவற்றில், மெய்கீர்த்தியுடன் தொடங்கிய இக்கல்வெட்டு நொந்தா விளக்கு எரிப்பதற்கு நிலம் அளித்த செய்தியினைக் கூறுகின்றது. கிரந்தமும் தமிழும் கொண்ட முதல் பராந்தகனின் கல்வெட்டானது. அர்த்த மண்டப தென்சுவரில் காணப்படுகிறது. புத்தூர் கிழான் மகன் அரங்காலையன் என்பவர், இறைவனுக்கு திருவிழா புறமாக, இரண்டுமா நிலம் வழங்கியுள்ளார். மேலும், அவ்விழாவில் சங்கு இசைக்க தனியாக நிலம் அளித்துள்ளார். இவ்வாறாக 3 இடங்களில் நிலங்களை திருவிழாவுக்கும், சங்கு இசைக்கவும், விழாவை நடத்துவதற்கும் அளிக்கப்பட்டுள்ளது. நிலத்திலிருந்து வரும் வருவாயில் வரிசெலுத்தியது போக மீதமுள்ள வருவாயிலிருந்து நடத்த தீர்மானிக்கப்பட்டதாக இக்கல்வெட்டுச் செய்தி கூறுகிறது[10].

இவ்வரசனின் 18ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.925) பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், மருதன், தாழன், சேமங்குடான் ஆயிரவன், சாமூண்டன் மூர்த்தி மொகுலியன் சாத்தன் வருகன் ஆகியோர் இறை செலுத்தாமல் தங்களின் நிலங்களை கோயிலுக்கு அளித்துள்ளனர். இந்நிலத்தன்று, வரும் வருவாயிலிருந்து திருக்கருகாவூர் மகாதேவருக்கு திருஅமுது படைக்கவும், திருநொந்தா விளக்கு எரிப்பதற்காக நிலம் அளித்துள்ளதை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திருக்கோயிலுடையார்கள் (கோயில் பண்டாரம்), பன்மாஹேஸ்வரர் (சபையினர்) சோழவேளாரும், தென்னவன் சோழியவரையரும் கூடி இறை செலுத்தாத நிலத்திற்கு கணக்குப் பார்த்து 70 கழஞ்சு பொன் பெற்றுக்கொண்டு, அந்நிலங்களுக்கு இறை நீக்கிக்கொடுத்தச் செய்தியினைக் கூறுகின்றது. மிக நீண்ட இக்கல்வெட்டில், நிலம் அளித்தவர்களின் பெயர்கள், அவர்களின் நில எல்லைகளையும் தெளிவாகக் கூறுகின்றது.

இக்கல்வெட்டின் வாயிலாக, கோயிலுக்குத் தானம் அளித்த நிலங்கையும் பரிசீலனை செய்து, அந்நிலம் வரி செலுத்தியதா? இல்லையா? என்பதனை கவனிக்கும் பொறுப்பும், அந்நிலங்களைப் பெற்றுக்கொண்ட கோயில் பண்டாரம், மாஹேஸ்வரர்கள் ஊர் பெரியவர்களின் கடமை உணர்வையும், சோழ அரசனின் கருவூலத்திற்கு இறை செலுத்தாமல் இருந்ததை கவனித்து அதனை வசூலித்ததையும் நமக்கு தெளிவாக இக்கல்வெட்டு உணர்த்துகிறது[11].

மிகவும் சிதைந்த நிலையில், தொல்லியல் துறையினரால் படையெடுக்கப்படாத முதலாம் பராந்தகனின் 19 ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி.926) கல்வெட்டானது கோயில் கருவறை தென்புற சுவரில் காணப்படுகிறது. சிதைந்த நிலையிலும் விளக்கு எரிக்க நிலம் தானம் அளிக்கப்பட்ட செய்தியை 23ம் ஆட்சி ஆண்டில் (கி.பி.930) காணப்படுகிறது. உழுந்தன்குடி உடையான் நிலையின் கண்ணன் என்பவன், முல்லைவனநாத சுவாமி கோயிலில் இறைவனுக்கு, நிவேதனத்திற்காக உழக்கரைப்படி நெய்யாக முப்படியும் ஈப்திகாரியம் செய்ய நெய் உழக்கும் வழங்கத்தக்க வகையில், திருக்கருகாவூர் சபையினிடம் ஆறுமா நிலத்தை வாங்கி இறையிலாக கோயிலுக்கு அளித்த செய்தியினைக் கூறுகின்றது, கல்வெட்டு முற்றுப்பெறாத நிலையில் அமைந்துள்ளதால் கல்வெட்டுச் செய்தியினை சரியாக தொகுக்க இயலாத நிலையில் காணப்படுகிறது[13].

தஞ்சாவூர் ஜெயபீமதளியைச் சேர்ந்த தேவரடியாரான நக்கன் சந்திரதேவி தினசரி உழக்கு எண்ணெய் கொண்டு ஒரு நந்தாவிளக்கு எரிக்க நிலம் அளித்த செய்தியினையும் அவூர் நாட்டு வேளார் ஒரு நந்தா விளக்கு எரிக்க நிலம் அளித்த செய்தியினை, முதலாம் பராந்தகனின் 24ம் ஆட்சி ஆண்டு (கி.பி.931) கல்வெட்டின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது[14].

முல்லைவனநாத சுவாமி கோயில், கருவறை மேற்குச் சுவரில் காணப்படும் கல்வெட்டு, இவ்வரசனின் 27ம் ஆட்சி ஆண்டு (கி.பி.934) பொறிக்கப்பட்டு உள்ளது[15]. இதில், திருக்கருகாவூர் மகாதேவர் நிலம், காளாபிடாரியார் நிலம், மகாவிஷ்னுக்கள் நிலம், புராணசங்கரர் (லிங்கோத்பவர்) நிலம், கீழூர் கணபதியார் அவல் துடவை நிலம், குசக்குடி நங்கை திருவிளக்காக அளித்த நிலம், கடிகைபுறம் ஆகிய பலராலும் கொடுக்கப்பட்ட நிலங்களின் குறிப்புகளை தாங்கி இக்கல்வெட்டுக் காணப்படுகிறது. கல்வெட்டின் இறுதிப் பகுதி கிடைக்கப்படாமலும் எழுத்துக்கள் பிழைகளுடனும் காணப்படுகிறது.

மீண்டும், ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் அதாவது முதல் பராந்தகச் சோழனின் 33ம் ஆட்சி ஆண்டு (கி.பி. 940) கல்வெட்டு இக்கோயில் கருவறை தென்புறச் சுவற்றில் காணப்படுகிறது.[16]. கல்வெட்டுக் செய்தியானது, சோழ அரசி வீநவன் மாதேவியின் பணிப்பெண் நக்கன் விக்கிரமபரணி, என்பவன் கொற்றங்குடி குந்தம் பாண்டன் என்பவனிடமிருந்து ஓர் நிலத்தை விலைக்கு வாங்கி நிலத்திற்கான வரியை (இறை) பரடைவசம் ஒப்படைத்து பின் கோயிலுக்கு வழங்கியதைப் பற்றி கூறுகின்றது.

இக்கல்வெட்டில் சோழன் அரசி என்று குறிப்பிடுவது, முதல் பராந்தகனின் மனைவியைப் பற்றிய குறிப்பாகக் கொள்ளலாம். இவ்வரசனுக்கு பல தேவிமார்கள் இருந்தனர்[17]. அவர்களுள் இக்கல்வெட்டில் கூறும் வீநவன் மாதேவி வில்லவன் மாதேவியாகக் கொள்ளலாம். இவரின் பணிப்பெண்ணும் கோயிலுக்கு தானமளித்த செய்தி அரசகுல அல்லாமல், அவர்களின் பணிப்பெண்ணும் தானம் அளித்தது முல்லைவனநாதசுவாமி மீதிருந்த பக்தியைக் காட்டுகிறது. மேலும் தானம் அளித்த நிலத்திற்கு இறை செலுத்தி கோயில் வசம் ஒப்படைத்தது சோழநாட்டின் மீதிருந்த அரசப் பற்றைக் காட்டுகிறது.

அரசனின் பெயர் பொறிக்கப்படாமல் கோப்பரகேசரி என்று குறிப்பிட்ட 10 ஆம் நூற்றாண்ரைடச் சேர்ந்த கல்வெட்டு முதல் பராந்தக சோழனுடையதாக இருக்க

வேண்டும்.[18]. திருக்கருகாவூர் மகாதேவர்க்குத் திருஅமுது படைப்பதற்கு, நந்தா விளக்கு எரிப்பதற்கு, சங்கன் தேவன் என்பவன் நிலம் வாங்கி கோயிலுக்குத் தானமளித்தச் செய்தியைக் கூறுகின்றது. இக்கல்வெட்டு, மிகவும் சிதைந்து காணப்படுவதால் கல்வெட்டுச் செய்தி முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை.

முடிவுரை

முல்லைவனநாத சுவாமி திருக்கோயில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற சிவஸ்தலம். செங்கற்கோயில், முதலாம் பராந்தகன் காலத்தில் கற்றளியாக் கட்டப்பெற்றதை அறிந்துகொள்ளமுடிகின்றது. முதலாம் பராந்தக சோழனின் 16 கல்வெட்டுகளின் மூலம், இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் வரை கட்டப்பட்டிருந்ததையும் முல்லைவனநாத சுவாமிக்கு திருஅமுது படைப்பிற்கும், நந்தா விளக்கு எரிப்பதற்கும், அரசன், அரசகுலப் பணி பெண்கள், தேவரடியார், வணிகப் பெருமக்கள், பொதுமக்கள் தானமளித்த செய்தியினை தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

அடிகுறிப்புகள்

1. A.R.E., 45/1910; S.I.I. Vol.XIX No.129.
2. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடர் எண் 8/1995; ஊர் கல்வெட்டு எண் 21.
3. A.R.E., 399/1961 – 62.
4. மேலது, 36/1910; S.I.I. Vol. III No.100.
5. மேலது, 396/1961 – 62.
6. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடர் எண் 2/1995; ஊர் கல்வெட்டு எண் 15.
7. A.R.E., 35/1910.
8. தி.ஸ்ரீ.ஸ்ரீதர் பதிப்பாசிரியர், பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்
9. A.R.E., 395/1961 – 62
10. A.R.E., 39/1910.
11. மேலது, 43/1910.
12. மேலது, 397/1961 – 62.
13. மேலது, 40/1910.
14. மேலது, 38/1910.
15. மேலது, 42/1910.
16. மேலது, 37/1910.
17. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் (அண்ணாமலை நகர்; அண்ணாமலை பல்கலைகழகம், 1974) பக்கம்:57.
18. S.I.I. Vol. VII No.110.

பெரியாரும் பெண்ணியமும்

முனைவர்.த.அனுராதா, உதவிப்பேராசிரியர் வரலாற்றுத்துறை,
கு.நா.அ.ம.க.கல்லூரி, தஞ்சாவூர்.

பெரியார் காலத்தில் இந்து பெண்கள் இந்துசமயம் மரபுப்படி பாவப்பிறவிகளாகக் கருதப்பட்டனர். ஒருவனுக்கு எத்தனை பெண் குழந்தைகள் இருந்தாலும் ஆண் குழந்தை இல்லாவிட்டால் வேறு குடும்பத்திலிருந்து ஓர் ஆண் குழந்தையை தத்து எடுத்துக்கொள்வர்கயொழிய பெண் குழந்தையை தம் சொத்துக்கு உரிமையுடைய மகளாகக் கருதுவதில்லை.

இதைமாற்ற பெண்களுக்குக் கல்வி, சொத்து, திருமண உரிமை, வாழ்க்கை முறைகள் போன்ற துறைகளில் சுதந்திரமும், தனித்துச் செயல்படும் சுதந்திரமும் கொடுக்கப்படவேண்டும். இதுவே பெண்ணுரிமை ஆகும். இத்தகைய உரிமைகளைப் பெற பெரியார் போராடினார்.

கல்வி

கல் என்பதல் பொருளான அறிவி, தெரிவி என்பது உலக சுபாவத்தையும் மனிதத்தன்மையையும் அறிவிப்பதே கல்வி ஆகும். பெண்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கல்வி அவசியம் அளிக்கப்படவேண்டும்.[1] ஆண், பெண் சமத்துவ நிலையில் கல்வி மிகவும் இன்றியமையாதது. ஒரு குடும்பத்தில் ஆண், பெண் இருவருக்கும் சமமாய் கல்வி கொடுக்கவேண்டும் அதுவும் பெண்ணுக்கு கல்வி அவசியம் தேவை அதனால் வீடு நலம்பெறும், நாடுவளம் பெறும், ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறவேண்டும். அப்போதுதான் எந்த கணவனும் அடிமையாக நடத்தமாட்டான்.

பெண்கள் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு தங்கள் முத்திரைகளைப் பதிக்கவேண்டும், எந்த வேலையையும் இது தங்களுக்கு ஏற்ற வேலை இல்லை என்று ஒதுக்கக்கூடாது என்கிறார். பெண்கள் கல்வி கற்பதற்காகத் தனியான கல்விக்கூடங்களை நிறுவி பெண் கல்வியை வளர்த்தார். ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு சமூகமே கல்வி பெற்றதைப் போல என்கிறார். தனக்கான எல்லா முடிவுகளையும் எடுக்கவும், செயல்படுத்தவும் கல்வி பெண்ணுக்கு அளிக்கப்பட்டால் பிறகு அவளுக்கான அனைத்து உரிமைகளும் கிடைக்க வழி பிறக்கும் தங்கள் முத்திரை பதிக்கமுடியும் என்கிறார் பெரியார்.

சொத்துரிமை

பெண்மையை அடிமைப்படுத்துவதற்கு சொத்துரிமை ஒருகாரணம் என்கிறார் பெரியார் அதனால் பெண்களை அடிமைப்படுத்தும் சமுதாயத்தை அடிமை சமுதாயம் என்றே கூறுவர் மக்கள் அடிமைத்தன்மையில் இருந்து நீங்க வேண்டுமானால் பெண்ணடிமை நீங்க வேண்டும்.[2] பெண்ணடிமை நீங்க ஒரு வீட்டில் ஆணுக்கு நிகராக பெண்ணுக்கும் சொத்தில் பங்களிக்க வேண்டும் என்று போராடினார். குடும்பங்களில் கணவன் இறந்தால் அவன் சொத்து முழுவதும் அனுபவிக்க மனைவிக்கு உரிமை அளிக்கவேண்டும் பாகப்பிரிவினையின்போது கணவன் இறந்தால் அவனுக்குள்ள சகல உரிமைகளும் சொத்துக்களும் மனைவிக்கு அளிக்கப்படவேண்டும்.[3]

இளம் வயது திருமண விலக்கு மசோதா

திருமணத்திற்கு ஏற்ற வயதும், அறிவும் உடல் பக்குவமும் இல்லாத காலத்தில் பெண்களுக்குத் திருமணம் செய்யப்பட்டுவருவதால் மக்கள் சமூகத்திற்கு கேடுவருவதைத் தடுக்க இளம் வயது திருமண விலக்கு முன்வரைவு மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

பெரியாரின் பெண்ணிய கோட்பாடுகளில் நிறைவேறியுள்ள உரிமைகள்

1) பெண்கல்வி பெரிதும் போற்றப்படுகிறது. பெரும்பாலான குடும்பங்களில் ஆணுக்கு இணையாக மட்டுமல்ல அதிகமாகவும் படிக்கின்றனர்.
2) தந்தையின் சொத்தில் சமஉரிமை, கணவனின் சொத்திலும் உரிமை பெற்றுள்ளனர்.
3) இளம்வயது திருமணம் ஒழிந்து 21 வயது திருமணத்திற்கு என சட்டப்படி அமுல்படுத்தப்பட்டுள்ளது.
4) விதவைத்திருமணம், மறுமண உரிமை போன்றவை பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.
5) கர்ப்பத்தடையும், குடும்பக்கட்டுப்பாடும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.
6) தற்காப்பு முறைகள் பெண்களுக்குக் கற்றுத்தரவேண்டும் என்ற பெரியாரின் கருத்து நடைமுறைப்படுத்தப்பட்டது. காவல்துறையில் பணியாற்ற, ராணுவத்தில் பணியாற்ற, கனரக வாகனங்கள் ஓட்ட, ராணுவ விமானங்கள் ஓட்ட எனப்பல பணிகள் கிடைத்துள்ளன.
7) பெண்கள் சமூகத்தொண்டில் ஈடுபட்டு ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் பராமரிப்பது, சட்டமன்றம், பாராளுமன்றங்களில் நியமிக்கப்படுவது என பட்டங்கள் பெறுவதும், சட்டங்கள் ஆள்வதும் ஆக முன்னேறியுள்ளனர்.

விதவை திருமணம்

இளம் வயதில் கணவனை இழந்த பெண்கள் குழந்தை இல்லாவிடினும் மறுமணம் செய்துகொள்வது கூடாது. ஆனால் வயதான குழந்தை பெற்ற ஆண் தன் மனைவி இறந்தவுடன் மறுமணம் செய்துகொள்ள எவ்வித தடையுமில்லை இப்பழக்கத்தை பெரியார் எதிர்த்தார். அவளின் மறுமணத்திற்கு பெற்றோர் உதவவேண்டும் இல்லாவிடின் அவளே தனக்கேற்ற துணையை திருமணம் செய்யவேண்டும் என கூறுகிறார்.[4]

மறுமணம்

திருமணம் என்பது மணமக்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்காக செய்துகொள்ளும் ஓர் ஒப்பந்த ஏற்பாடு இதில் இவர்களுடைய சுயேச்சையை கட்டுப்படுத்தும் எவ்வித கட்டுப்பாடும் இருக்கக்கூடாது அப்படி கட்டுப்படுத்தப்படும் போது அத்திருமணம் ரத்து செய்யப்பட்டு மறுமணம் செய்ய பெண்ணுக்கு உரிமை அளிக்கப்படவேண்டும் என்கிறார் பெரியார். ஓர் ஆண் இந்துசமயத்தில் 60000 பெண்கள் வரையிலும், இசுலாமிய சமயத்தில் 4 பெண்கள் வரையிலும், கிறிஸ்துவ சமயத்தில் அளவு குறிப்பிடப்படாமலும் மணம் செய்ய இடமிருக்கிறது.[5]

முதல் மனைவி இறந்துபோன நிலையில், மனைவி மற்றொரு ஆணிடம் ஆசைகொண்டு அது வெளிப்பட்ட நிலையில், மனைவிக்குத் தீராத கொடிய வியாதி இருக்கும் நேரத்தில் மனைவி மனநிலைப் பாதிப்புக்கு உள்ளன நிலையில், மனைவி, கணவனை கவனியாமல் அடிக்கடி தாய்வீடு சென்று தங்குபவராக இருந்தால், கணவனுக்கு ஏறுமாறாய் நடந்துகொள்ளும் குணம் உடையவராயிருந்தால், இத்தகைய காரணங்களால் ஓர் ஆண் மறுமணம் செய்துகொள்கிறான் என்கிறார் பெரியார். இதுபோன்ற காரணங்களால் ஒரு பெண்ணும் பாதிப்பு அடைந்தால் அவள் மறுமணம் செய்யவேண்டும் என்கிறார்.[6]

ஓர் ஆணுக்குச் சமையல்காரியாகவும், குடும்பப் பெருக்கத்திற்கு உதவும் கருவியாகவும் ஆணின் மகிழ்ச்சிக்குரிய பொம்மையாகவும் பெரிதும் பயன்படுத்தும் போது அவளுக்கு மறுமணம் அவசியம் என்கிறார் பெரியார். மறுமண உரிமை இருப்பதால் ஆண் அதைத்தவறாக பயன்படுத்தமாட்டான் என எண்ணுவதைப் போலவே பெண்ணும் அவ்வாறு பயன்படுத்தமாட்டாள் என்கிறார் பெரியார்.

கர்ப்பத்தடை

தனிநபர்களின் துன்பங்கள் ஒழிவதற்கும் பிறப்புகளின் எண்ணிக்கையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தவும் நல்ல குழந்தைகள் பிறக்கவும் கர்ப்பத்தடை அவசியம் என்கிறார் பெரியார்.

தோடர் ஹாவலக்கெல்லீஸ் ''சிசு கொலை செய்து நம்முன்னோர் சாதித்த காரியங்களை நாம் அவ்வாறு செய்யாமல் காரியங்கள் சாதிக்க கர்ப்பத்தடை உதவுகிறது'' என்கிறார்.

இளம் பருவப் பிணிகளையும், இறப்பையும் ஒழிக்கவும் பிள்ளைப்பேற்றுத் துன்பங்களை குறைக்கவும் வறுமைக் கொடுமையை தணிக்கவும் வாழ்க்கை முறையை வளம்பெறச் செய்யவும் ஊட்டமுள்ள குழந்தைகளை உற்பத்தி செய்யவும், எந்தக்காலத்தில் குழந்தைகளைப் பெறலாம் என முடிவு செய்யவும் கர்ப்பத்தடை அவசியம் என்கிறார் பெரியார். பெண்கள் தாமே முன்வந்து இதனை கடைபிடிக்கவேண்டும் என்கிறார். இப்பிரச்சாரம் மதுவிலக்கு பிரச்சாரத்தைவிட முக்கியமானது என்கிறார் பெரியார்.[7] இம்முறையினைப் பெண்கள் பின்பற்றாவிட்டால் மக்கள் பெருகி வறுமைமிகுந்து வயிற்றுப்பாட்டுக்கு வழியில்லாமல் பல மக்கள் நோய்வாய்பட்டு இறக்க நேரிடும் அதிக பிள்ளைகள் பெறுவதால் பெண்ணின் உடல் பாதிக்கப்படும் என்கிறார்.

பெண்ணுரிமை என்பது பிரிட்டிஷ், அமெரிக்க பெண்களைப் போல உடை உடுத்தவும், அலங்கரிக்கவுமல்ல ரஷ்யா, துருக்கிய பெண்களைப்போல செயல்படவேண்டும்.[8]

முடிவுரை

இன்றைக்கு பெண்களின் கல்வி, திருமண உரிமை, சொத்துரிமை சமூக அந்தஸ்து என்ற ஏற்றமிகு மாற்றங்களைக் கொண்ட 21-ஆம் நூற்றாண்டின் சாதனைக்கு பெரியாரின் பெண்ணியக் கோட்பாடுகளே காரணமாயிற்று. நளாயினிகள் போன்ற தன்மானமற்ற அடிமைகள் மறைந்து பெரோலிஸ்காயா போன்ற ரஷ்யப் பெண்கள் தோன்ற ஆரம்பித்துள்ளதே பெரியாரின் பெண்ணியத்திற்கு கிடைத்த வெற்றி.

அடிக்குறிப்புகள்

1) தமிழண்ணல், க.ப.அறவாணன், நா.செல்வராசு (ப.ஆர்) ஆய்வுக்கோவை, தொகுதி, ப-11.
2) கு.வணங்காமுடி – புரட்சி பேச்சாளர் பெரியார், ப-16.
3) விடுதலை 112-வது விழா மலர்.
4) குடியரசு கட்டுரை 22.08.1926.
5) வே.ஆனைமுத்து – பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் முதல் தொகுதி, ப.149.
6) மா.நன்னன், பெரியாரியல் திருமணம், ப-30.
7) குடியரசு செய்தி 06.04.1930.
8) தொகுப்பாசிரியர்: கி.வீரமணி, பெரியார் களஞ்சியம், ப.111.

படைப்புலகில் சு. தமிழ்ச்செல்வி

ப. இந்திரா, முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மகளிர் கல்லூரி, ஒரத்தநாடு.

முன்னுரை

இலக்கியம் காலந்தோறும் மாற்றம் பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. சமுதாய வளர்ச்சியை அடையாளப்படுத்தும் பல காரணிகளில், இலக்கியமும் ஒன்று. சில வேளைகளில் இலக்கிய வளர்ச்சியே முதன்மையாகப் பேசப்படுவதுண்டு. தமிழ் மொழி, சமூகம் முதலிய தளங்கள் சிறப்புற, அடிப்படையாய்த் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. கடந்த நூற்றாண்டுகளின் நவீன இலக்கியங்களான நாவல், சிறுகதை முதலியன குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளன. இந்த நவீன போக்கைப் புரிந்து கொண்டு படைப்பாளர்கள், தங்கள் படைப்புகளில், சமூகத்தில் நடைபெறுகின்ற அவலங்களையும், ஆட்சி, அமைப்பு, அரசியல், பொருளாதாரம், சமுதாய ஏற்றத் தாழ்வுக்குக் காரணமான சூழ்நிலைகள் ஆகியவற்றை அமைத்து வெளிப்படுத்துகின்றனர். அந்த வகையில் சிறந்த சிறுகதை, நாவல், கட்டுரைகள் படைப்பதிலும் நல்ல ஆசிரியராகவும் விளங்கி வருகின்ற சு. தமிழ்ச்செல்வி அவர்களும் குறிப்பிடத்தக்கவராக விளங்கி வருகிறார்.

தொடக்க காலத்தில் குறிப்பிட்ட சில மகளிரே தமிழில் சில புதினங்களை எழுதினர். இவர்களுள் குறிப்பிடத் தக்கவர். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் என்பவராவார். "படைப்புக் கலை படித்தோருக்கு மட்டும் வருவதில்லை. கற்பனைத் திறனுடையோர் அனைவருக்குமே வரும்"[1] என்று க. கைலாசபதி கூறும் கூற்றிற்கிணங்க படைப்பாளர் சு. தமிழ்ச்செல்வி வாழ்வியல் அனுபவங்களையும் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் வைத்துக் கற்பனை நயத்தோடு சிறுகதைகளையும், புதினங்களையும் படைத்துள்ளார்.

படைப்பாளர் சு. தமிழ்ச்செல்வி

இலக்கியத்தில் பன்முகப் பார்வை கொண்ட படைப்பாளர் சு. தமிழ்ச்செல்வி, பெண் எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத் தக்கவராகத் திகழ்கின்றார் என்பதை அவருடைய படைப்புகள் பெற்றுள்ள பரிசுகள் போன்றவற்றால் அறிந்து கொள்ளமுடிகிறது.

பிறப்பு, வளர்ப்பு, கல்வி

சு. தமிழ்ச்செல்வி அவர்கள் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து பிரிந்துள்ள திருவாரூர் மாவட்டம் கற்பகநாதர்புரத்தில் 04.05.1971-ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தாய் முத்துலெட்சுமி குடும்பத் தலைவியாகவும், தந்தை சுப்பிரமணியன் ஹோமியோபதி மருத்துவராகவும் இருக்கின்றார். இவருக்கு இரு தமக்கையரும், ஓர் உடன்பிறந்தவரும் உள்ளனர். தம்முடைய தொடக்கக் கல்வியை கற்பகநாதர்புரத்தில் எட்டாம் வகுப்பை முடித்ததும் வேதாரண்யத்திலுள்ள குருகுலப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்து விட்டும், பிறகு திருத்துறைப்பூண்டியில் ஈராண்டுகள் ஆசிரியப் பயிற்சியையும் முடித்துள்ளார்.

இளம் வயதிலிருந்தே படித்துப் பொது அறிவைப் பெருக்கிக் கொள்வதில் சு. தமிழ்ச்செல்வி மிகுந்த ஆர்வத்துடன் திகழ்ந்திருக்கின்றார். வேதாரணியத்தில் குருகுலப்

பள்ளியில் படிக்கும்போது இவருடைய வாசிப்புப் பணி தொடங்கிவிட்டது. ஆசிரியப் பயிற்சியை முடித்த பின்னர் வேலை கிடைக்கும் வரை இடும்பாவனம் நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தையும் படித்துத் தம்முடைய பொது அறிவை வளர்த்துக் கொண்டுள்ளார்.

இல்வாழ்க்கை

ஆசிரியராகப் பணி புரிந்துவரும் கரிகாலன் என்பவரை இவர் திருமணம் செய்து கொண்டுள்ளார். இனிய இல்லறத்தை நடத்தும் இத் தம்பதியருக்குச் சிந்து, சுடர், கார்க்கி என்னும் மூன்று குழந்தைகள் உள்ளனர். "குடும்பத்திலுள்ள அனைவரும் இவரின் படைப்பிற்கு உறுதுணையாக உள்ளனர் என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்கின்றார்"[2]

ஆசிரியப்பணி

ஆசிரியப் பயிற்சியை முடித்த சு. தமிழ்ச்செல்வி பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். தொடர்ச்சியான வாசிப்பு பழக்கத்தைக் கொண்ட இவர் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது படிப்பு ஆர்வத்திற்கும் இலக்கிய ஈடுபாட்டிற்கும் இவரின் கணவர் கரிகாலன் மிகவும் உறுதுணையாக இருக்கின்றார். மேலும் மேலும் படித்து மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதால் இவரை ஒரு சிறந்த ஆசிரியராக மாணவர்கள் மதிக்கின்றனர்.

இலக்கியத் தொடர்பு

சமுதாயத்தை அக்கறையோடு பார்க்கும் சு. தமிழ்ச்செல்வி, அதனை இலக்கியங்களின் வழியும் பார்க்க முனைந்தார். இதற்காகப் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலிருந்தே தம்முடைய அறிவை விசாலப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்பதை அறிய முடிகிறது.

ஆசிரியப் பயிற்சி முடித்து வீட்டிலிருந்தே காலத்தில் பலரின் படைப்புகளை ஆர்வத்துடன் படித்துள்ளார். இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த போதிலும் பல இக்கால இலக்கியங்களை தேடி பிடித்துப் படித்துள்ளார்.

தி. ஜானகிராமன், அசோகமித்திரன், பஷீர், உரு்.ப், இமயம் போன்ற பல எழுத்தாளர்களின் படைப்புகளை மிகவும் ஆர்வத்தோடு படித்து தம்முடைய படைப்புக் கலைக்கான ஆர்வத்தை வளர்த்துக் கொண்டுள்ளார்.

இவரும் இவரின் கணவர் கரிகாலனும் இணைந்து "களம் புதிது" என்னும் கவிதை இதழை நடத்தி வருகின்றனர். இதனால் தமிழகத்திலுள்ள பல முன்னணி இலக்கியப் படைப்பாளர்களின் தொடர்பு இவர்களுக்குக் கிடைக்கிறது.

கவிதையின்பாலும் மிக்க ஆர்வம் கொண்ட சு. தமிழ்ச்செல்வி கவிஞர்கள் கலாப்பிரியா, அறிவுமதி, குட்டி ரேவதி, கனிமொழி, தேவதேவன் போன்றோரின் படைப்புகளைப் படிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். 'களம் புதிது' இதழ் தொடர்பால் பல முன்னணிக் கவிஞர்கள் இவர்கள் இல்லத்திற்கு வந்துள்ளனர்.

இலக்கிய ஆர்வலர்கள் தி.க.சிவசங்கரன், ஜெயமோகன், தமிழினி வசந்தகுமார், லட்சுமி குமாரன் ஞானதிரவியம், கவிஞர்கள் அறிவுமதி, தேவதேவன் போன்றோர் இவரது படைப்புகளைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதி இருப்பதைப் பெருமையாக குறிப்பிடுகின்றார்.[3]

படைப்புருவாக்கம்

சு. தமிழ்ச்செல்வி அவர்கள் தந்துள்ள படைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழும் எளிய மக்களின் வாழ்வை பற்றியதாகும். இவரின் படைப்புகளின் வழி பெண்களின் பிரச்சனைகள், மௌனங்கள் உடைபடுகின்றன. ஒரு பெண்ணின் பிரச்சனை பெண்ணுக்குத் தான் புரியும் என்ற கூற்றிற்கேற்ப சு. தமிழ்ச்செல்வி அவர்கள் பெண்களின் மன ஓட்டங்களை அவர்களின் படைப்புகள் வழி படம் பிடித்துக் காட்டியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் பழமொழி, தாலாட்டு, ஒப்பாரி போன்ற நாட்டுப்புறக் கூறுகளும் இவரின் படைப்பு வழி காணலாம்.

1. அளம் (நாவல்)
2. கீதாரி (நாவல்)
3. கற்றாழை (நாவல்)
4. ஆறுகாட்டுத்துறை (நாவல்)
5. மாணிக்கம் (நாவல்)
6. கண்ணகி (நாவல்)
7. பொன்னாச்சரம் (நாவல்)
8. சு. தமிழ்ச்செல்வி சிறுகதைகள் (சிறுகதை)
9. சாமுண்டி (சிறுகதை)

இவர்களின் படைப்புகள் அனைத்துமே பெண்ணியம் தொடர்பானவையே.

விருதுகள்

வட்டாரப் பண்புகளையும், வாழ்க்கை முறைகளையும், விளக்கும் சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகள் விருதுகளையும் பெற்றுள்ளது. தமிழக அரசின் கீழ் தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த புதினத்திற்கான விருதினை இவரின் 'மாணிக்கம்' என்னும் புதினம் பெற்றது. சிறந்த புதினமாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தால் இவரின் 'கற்றாழை' என்னும் புதினத்திற்கு வழங்கப்பட்டது. 'கற்றாழை' புதினத்திற்கு கலைஞர் அவர்களால் 'பொற்கிழி' வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் பாடநூல்:

சு. தமிழ்ச்செல்வி அவர்களின் படைப்புகள் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

1.	அளம்	-	இளங்கலைப் பாடத்திட்டம் தியாகராயர் கல்லூரி மதுரை.
2.	கீதாரி	-	முதுகலைப் பாடத்திட்டம் ஈ.வே.ரா. கல்லூரி திருச்சிராப்பள்ளி
3.	கீதாரி	-	இளங்கலைப் பாடத்திட்டம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி.

ஆய்வாளர்கள்

பல்வேறு பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்று விளங்கும் சு. தமிழ்ச்செல்வி அவர்களின் படைப்புகளை முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டங்களுக்குப் பலர் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

முடிவுரை

இக்கால இலக்கிய உலகில் தோன்றிய படைப்பாளர்களுள் தனி முத்திரை பதித்தவர் சு. தமிழ்ச்செல்வி அவர்கள் இன்று உலகம் முழுக்க தனக்கென்று வாசகர்களை, அடுத்த படைப்பு என்ன என்று எதிர்பார்க்க வைத்திருக்கும் மிக முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவர் ஆவார்.

மேற்கோள் நூல்கள்

1. க. கைலாசபதி, தமிழ்நாவல் இலக்கியம், ப - 210
2. சு. தமிழச்செல்வி, நேர்காணல், நாள் - 10.05.2007
3. சு. தமிழச்செல்வி, நேர்காணல், நாள் - 10.05.2007

சங்க இலக்கியத்தில் மாசறு பொன்

முனைவர் இரா. இந்து, இணைப் பேராசிரியர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

தமிழிலக்கியங்களில் தனிச் சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழரைப் பற்றிய பதிவுகளாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவற்றில் அகம், புறம் என வாழ்க்கை நெறிமுறைகளை விளக்கிய புலவர்கள் அறிவியல் செய்திகளையும் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளனர். இவ்வகையில் சங்க இலக்கியத்தில் அணிகலத் தொழிலும் ஒன்றாகும்.

மனிதன் பழங்காலந்தொட்டே தன் தேவைகளை நிறைவேற்றிய பின்னர் அழகுபடுத்திக் கொள்ளவும் தொடங்கினான். அதன் விளைவாகத் தோன்றியவையே அணிகலன்கள் எனலாம். பண்டைத் தமிழர் தலை முதல் கால் வரை அணிகலன்களை அணிந்திருந்தனர். ஆண், பெண் இருபாலரும் அணிகலன்களை விரும்பி அணிந்து வந்தனர். மக்கள் வளமான வாழ்விற்கும் வசதிக்கும் பயன்படும் தொழில்கள் அனைத்தும் கைத்தொழில்களாக விளங்குகின்றன. அவற்றுள் ஒன்று அணிகலன்களைச் செய்யும் தொழில் எனலாம்.

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொன் விளையும் இடம், பொன் - உருக்கி வார்த்தல், புடமிடுதல், தரம் பார்த்தல், ஓர் அணிகலனை அழித்து மற்றோர் அணிகலனாகச் செய்யும் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொன் கிடைத்த இடம்

அகநானூற்றில் பொன் விளையும் இடம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடல்	:	*"பொன்படு மருங்கின் மலை இறந்தோரே"* *- (அகநானூறு: 173:18)*
கூற்று	:	தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி தலைவன் விரைந்து வருவார் என வற்புறுத்தும் போது கூறியது.
விளக்கம்	:	பொன் விளையும் இடங்களை உடைய மலைநாடு எனக் கொண்கான நாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இது நன்னன் ஆட்சி செய்த கொண்கான நாட்டினைக் குறிக்கும்.

மலைத்தொடரிடையே காவிரி தோன்றுமிடத்தையடுத்த நிலப்பரப்பிலும், கொண்கானம் நாட்டிலும் பொன் கிடைத்தது *(புறநானூறு: 166)*, *(நற்றிணை: 33*1). இப்பாடல்கள் மூலம் பொன் எடுக்கும் சுரங்கத்தொழில் இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். உவரி என்னும் இடத்திலிருந்தும் பொன் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கொங்கு நாட்டில் காங்கேயம் (பொன்நாடு) பகுதியில் பொன் கிடைத்தது.

பொற்கொல்லர்

பொன், தங்கம் கொண்டு அணிகலன் செய்வோர் பொற்கொல்லர் ஆவர். இவர்கள் சங்க இலக்கியத்தில் பொற்செய் கொல்லர், பொன் வினைஞர், பொற்கொல்லர், தட்டார் என வழங்கப்பட்டனர்.

பொன் உருக்கி வார்த்தல் - அச்சுப்பொறி

பொற்கொல்லர் அரம் என்ற கருவியைப் பயன்படுத்தி அணிகலன்களைச் செய்தனர்.

"வாளரத் துமித்த வளை" - *(அகநானூறு: 24)*
"அரம் போழ்ந் தறுத்த இளங்குவாளை" - *(மது.காஞ்சி 316)*

1. குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் பொன், வெள்ளி ஆகிய உலோகங்களை உருக்கி வார்க்கும் அச்சுப்பொறிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடல் : *"உருக்குறு கொள்கலம் கடுப்ப, விருப்புறக்"* - *(நற்றிணை: 124)*

கூற்று : பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைவி ஸ்ரீகூற்றாக தலைவனுக்கு உரைத்தபோது கூறியது.

விளக்கம் : வெள்ளியை உருக்கிச் சாய்க்கும் கொள்கலத்தை ஒத்து வடியும் தெளிந்த நீர்க்குழியையுடைய நீரைப் பெற்றதாகக் கூதிர்ப்பருவம் இருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அரக்கால் ஆன அச்சில் பொன்னை வைத்து உருக்கி, ஊதி அணிகலன் செய்தனர்.
"ஊதலைப் பெய்த பகுவாய் தென்பணி" - *(குறுந். 155:4)*

3. உலோகத்தை உருக்கி வார்க்கும் தொழில்நுட்பத்தைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர்.

நற்றிணையில் சிதைவடைந்த உலோக வார்ப்பு அச்சுப்பொறி துறைமண் கொண்டு சீர் செய்யப்பட்டது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

பாடல் : *"பொறிஅறு பிணைக் கூட்டும் துறைமணல் கொண்டு"* - *(நற்றிணை. 363:4-6)*

கூற்று : தலைவியை ஆற்றுவிக்க இயலாமையைத் தோழி தலைவனுக்கு உரைத்தது.

விளக்கம் : உடைந்துபோன தலைவியின் சிலம்பைத் தாய் அறியாமல் இருக்கத் துறைமணல் கொண்டு சரிசெய்யுமாறு தோழி தலைவனிடம் கூறுதல்.

பொன், வெள்ளி முதலியவற்றை இட்டு உருக்கும் வார்ப்பு அச்சினை உருக்குமண் அல்லது துறைமண் என்றனர். இது குறிப்பிட்ட நீர்நிலைகளில் மட்டுமே கிடைக்கும். உலர்ந்தவழி வெடிக்காத பண்பும் உடையது இம்மண்.

பொடியூதும் முறை

பண்டைத் தமிழர் ஈர் உலோகப் பகுதிகளைச் சேர்க்கப் பொடியூதும் முறையைப் பயன்படுத்தினர்.

பாடல் : *"பொடியழற் புறந்தந்த செவ்வுறு கிண்கிணி"*
- *(கலித்தொகை: 85:1)*

கூற்று : கால் முதல் கழுத்து வரை அணிந்துள்ள அணிகலன்களைப் "பாதாதி கேச" வருணனையாக மகனைப் பார்த்துத் தாய் பாராட்டிப் பாலூட்ட அழைத்தபோது கூறியது.

விளக்கம்: பொன்னை உருக்கி இரண்டு வடங்களாகப் பின்னி நெருப்பிலிட்டுச் சேர்த்துப் பெற்ற கிண்கிணியை அணிந்தமை சுட்டப்படுகிறது.

சிலம்பு, கிண்கிணி, கழுத்தாணி மாலை போன்ற அணிகலன்களைச் செய்யும்பொது தனித்தனிப் பகுதிகளாகச் செய்த பிறகு தேவைக்கேற்பச் சேர்க்கப்படும். அவ்வாறு சேர்க்கும்போது உலோகங்களைச் சேர்க்கும் இடத்தில் ஒருவிதப் பொடியை வைத்து ஊதுவர். இதனைப் பற்றவைப்பு என்பர். அவ்வாறு ஊதிய இடத்தில் நிறவேறுபாடு ஏற்படாமல் இருக்க உலோகங்களை ஒன்றாக வைத்து ஊதிய பின்னர் உடனே அப்பகுதியை நீரில் இடுவர் (quenching). இம்முறை இன்றும் பயன்பாட்டில் உள்ளது அறியத்தக்கது

பொன் நிறுத்தல் - தராசுத்தட்டு

அகநானூற்றில் பொன்னை நிறுக்கப் பயன்படும் தராசுத் தட்டுப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடல் : *"பொன்செய் கன்னம் பொலிய, வெள்ளி" -(அகம். 317:8)*

கூற்று : தலைவனின் வரவைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தது.

விளக்கம் : கோங்கு மலர்கள் மீது விழுகின்ற குரவ மரத்திலிருந்து உதிரும் பூந்துகள் பார்க்க வெள்ளிக் கம்பியால் கட்டப்பட்ட பொன்னால் செய்த தராசுத் தட்டுகளை அறுக்கும்போது அதன்மேல் உதிரும் வெள்ளித் துகள்கள் போல இருந்தது.

பொடியூதிப் பொன் அணிகலன்களைச் சேர்க்கும் முறை பற்றி கலித்தொகையில் (85) குறிப்பிடப்பட்டுள்ளது.

புடமிடல்

அணிகலன்களைச் செய்ய இயற்கையாகத் தூயதாகக் கிடைக்கும் ஓட்டற்ற பொன், புடமிட்டுத் தூய்மைப்படுத்தப்பட்ட பொன் ஆகியவை பயன்படும். *"சுடச் சுடரும் பொன்"* என்றார் வள்ளுவர். இத்தொடர் புடமிடலையே குறிக்கும்.

"சுடுபொன் நெகிழத்து முத்தரி சென்றார்ப்ப" - (பரி. 21:18)

பொன் - தரம் பார்க்கும் கட்டளைக்கல்

பொன், தங்கம் இவற்றை உரசித் தரம் பார்க்கப் பயன்படுத்தும் உரைக்கல் (touch stone) சங்க இலக்கியத்தில் கட்டளைக்கல் எனப்பட்டது. மதுரையில் உள்ள பெரியகுளம் என்னும் இடத்திலிருந்து கட்டளைக்கல் வெட்டி எடுக்கப்படுகிறது.

i. பாடல் : *"பொன்னின் உரை திகழ் கட்டளை கடுப்ப"*
- *(குறுந்தொகை: 192:3-4)*

கூற்று : தலைவன் பிரிவு பற்றித் தலைவி தோழியிடம் வருந்தும்போது

கூறியது.

விளக்கம் : மாப் பூப்பதற்கு முன் காலம், இளவேனில் காலம். அக்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் வரவில்லை. அக்காலத்தில் மாமரத்தைச் சார்ந்து குயில் அழகுபெறும். மாம்பூவின் மகரந்தம் கட்டளைக்கல்லில் உரைத்த பொன்துகள் போல் இருக்கும்.

ii. பாடல் : *"பொன்னுரை கட்டளை கடுப்ப"- (அகநானூறு 178:11)*

கூற்று : திருமணம் பற்றிப் பேச வந்த தலைவனின் வருகையைத் தோழி தலைவிக்கு மகிழ்ச்சியாகத் தெரிவித்தது.

விளக்கம் : பன்றியின் உணவு, நீர் பருகுதல் போன்றவற்றைச் சுட்டித் தலைவனின் மலை நாட்டு வளத்தைக் குறிப்பிடும்போது பன்றியின் மேல் பட்டிருந்த கூதளச் செடியின் பூந்தாதுக்கள் கட்டளைக்கல் மேல் படிந்திருந்த பொன் துகள்களை ஒத்ததாக ஒப்பிடப்பட்டுள்ளது.

முடிவுரை

சங்க காலத்தில் பெண், ஆண் இருவரும் பொன், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் ஆன அணிகலன்களை அணிந்திருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள்வழி அறிய முடிகிறது. பொன்னோடு முத்து, பவளம், வைரம் இவற்றையும் சேர்த்து அணிகலன்களைச் செய்தனர்.

சங்க இலக்கியத்தில் பொன், தங்கம் பற்றிப் பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக, பொன்னைத் தரம் பார்க்கப் பயன்படும் கட்டளைக்கல் எனப்பட்ட உரைகல் பற்றி அதிகமாக *(எடுத்துக்காட்டு: அகநானூறு (178:11), குறுந்தொகை 192:3-4)* இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய் மகனைப் பாராட்டிப் பாலூட்டும் கூற்றிலும், தோழி, தலைவன் கூற்றுப் போன்ற சூழல்களிலும் அணிகலன் செய்யப் பயன்படும் உலோகங்கள், பொன் தொடர்பான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அகநானூற்றில் பொன் விளையும் இடம் *(73:18)* பற்றியும் பொன்னைத் தரம் பார்க்கப் பயன்படும் கட்டளைக்கல் *(178:11)* பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- நற்றிணையில் பொன், வெள்ளி இவற்றை உருக்கி வார்க்கும் வார்ப்புத் தொழில்நுட்பம் *(124:6-9)*, வார்ப்புக்குப் பயன்படுத்தப்பட்ட உரு அச்சு எனப்பட்ட அச்சுப்பொறி *(363:4-6)* பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- புடமிடல் பற்றிப் பரிபாடலில் *(21,22)* குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் குன்றிமணியைப் பயன்படுத்திப் பொன்னை நிறுத்தனர். 14 குன்றிமணி எடை 1 காரட் அளவான 200 மில்லிகிராம் ஆகும்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் 19 தங்க நெற்றிச் சுட்டிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை இரு முறைகளிலும் துளைகள் உடைய நீள்வடிவில் காணப்பட்டதாகவும், இவை நெற்றிச்சுட்டிகளாக இருக்கக்கூடும் எனவும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவை இக்கால Bracelet போலக் கையணி அணிகலனாகவும் இருந்திருக்க வாய்ப்புண்டு என்பதும் நோக்கத்தக்கது.

துணைநூற் பட்டியல்

இராஜன், கா., *கொடுமணல் அகழாய்வு*, மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.

கஜேந்திரன், வி.என்., *பொற்பணிச் செந்நூல்*, ஐந்தியல் ஆய்வு மையம், சென்னை.

சசிவல்லி, வி.சி., *பண்டைத் தமிழர் தொழில்கள்*, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.

பொன் பவுன்துரை, *வளமார் கொங்கு வரலாறும் பண்பாடும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.

கணிப்பொறி வலையமைப்பில் தகவல் பரிமாற்ற வகைகள்

முனைவர்.கா.இரவிக்குமார், உதவிப் பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்

முன்னுரை

கணிப்பொறி வலையமைப்பு என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கணினிகளை ஒன்றாக இணைத்து தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்துதல் ஆகும். இதில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணினிகள் தகவல் பரிமாற்றம் செய்யப்பயன்படுகின்றது. தரவுகளைப் பரிமாறிக் கொள்ள வகை செய்யும் ஒரு வலையமைப்பு கணினி எனப்படும். கணினி வலையமைப்பினை கம்பி வலையமைப்பு அல்லது கம்பியற்ற வலையமைப்பு என இரு வகைகளாகப் பிரிக்கலாம். கணினி வலையமைப்பு தன்னிறைவு பெறுவதற்கு முன் தகவல்களைக் கணினி அல்லது கணக்கீடு எந்திரங்களின் இடையே பரிமாற்றம் செய்யவும், மனிதப் பயனர்களின் உதவி பரிமாற்றம் செய்யவும் வலையமைப்பு பயன்படுத்தப்படுகின்றது.

வலையமைப்பின் வகைகள்

வலையமைப்பினை பின்வரும் வகைகளாகப் பிரக்கலாம்.

2.1.தனி நபர் வலையமைப்புகள்
2.2.குறும்பரப்பு வலையமைப்புகள்
2.3.அகன்ற வலையமைப்புகள்

தனிநபர் வலையமைப்புகள்

தங்களது இல்லத்தில் பயன்படுத்தப்படும் வலையமைப்புகள் தனி நபர்கள் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளப்படுகின்றன. இதில் தலைமை கணிப்பொறி மற்றும் துணைக்கணிப்பொறி பயன்படுத்தப்படுகின்றன. இந்த கணிப்பொறிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளப்படுகின்றன. இதன் வழியாக ஒரு இடத்தில் உள்ள தகவல்களை மற்றொறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தகவல்கள் மிக விரைவாகவும் பாதுகாப்பாகவும் கொண்டுச் செல்லப்படுகின்றன.தலைமை கணிப்பொறியில் தகவல்கள் அனைத்தும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு சேமித்த தகவல்கள் அனைத்தும் தனி நபர்கள் பயன்பாட்டுக்குத் துணை செய்ய கணிப்பொறிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றன. இதன் வழியாகத் தகவல்கள் மிகவும் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

குறும்பரப்பு வலையமைப்புகள்

குறும்பரப்பு வலையமைப்பு என்பது ஒரு வீடு அல்லது கல்லூரியின் சில கட்டிடங்கள் போன்று சிறு பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் கணினி வலையமைப்பு ஆகும். குறும்பரப்பு வலையமைப்புகள் ஒரு மையக் கணினியினை கொண்டிருக்கும். இதன் நோக்கம் வெவ்வேறு இடங்களில் இருக்கும் பயனர்களுக்குச் சேவை வழங்குவதாகும். இங்கு வலையமைப்பின் பாதுகாப்பு பேணப்படுகின்றன.

அகன்ற வலையமைப்புகள்

இந்த வகை வலையமைப்பானது புவியல் பரந்த தேசத்தில் பலநூறு கணினிகளைக் கொண்டிருக்கும் கணினி வலையமைப்பு ஆகும்.இதில் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்குத் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இந்த் வலையமைப்பானது பின்னர் இணையமாக மாறுகின்றது. இந்த இணையம் தகவல் தொடர்புகளை உலகம் முழுவதும் தகவல்களை அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்த வகை அமைப்பானது ஒரு நாட்டினை பக்கத்து நாட்டுடன் இணைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் வழியாகத் தகவல் பரிமாற்றம் அடைகின்றன. தகவல்கள் மிக விரைவாக பரிமாற்றம் அடைகின்றன.

இணையம்

இணையம் என்பது பல கணினிகளை ஒன்றாக இணைத்து தகவல் பரிமாற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.இணையத்தில் தகவல்கள் மிக விரைவாக கொண்டு செல்லப்படுகின்றன.இணையத்தில் தகவல் பரிமாற்றம் செய்ய ஐபி முகவரி பயன்படுத்தப்படுகின்றன.ஐபி முகவரியின் அமைப்பினை கீழே காணலாம்.

144.16.79.1

இவ்வாறு தகவல் பரிமாற்றம் செய்ய சில விதிமுறைகள் கணினியில் பயன்படுத்தப்படுகின்றன.இந்த விதிமுறைகளை அடிப்படையாகவைத்து தகவல்கள் பரிமாற்றம் நடைபெறுகின்றன.இந்த விதிமுறை அமைப்பினை கீழே காணலாம்.

TCP/IP(Transmission Control Protocol/Internet Protocol)

ஒரு கணிப்பொறியில் தொலைபேசி இணைக்கப்படுகின்றது. இந்த தொலைபேசி இணைப்புடன் மோடம் இணைக்கப்படுகின்றது. இந்த தொலைபேசி இணைப்பானது தலைமை கணிப்பொறிக்கு தகவல்களை வழங்குகின்றன.

வெளியீடு - மோடம் - உள்ளீடு

இணையத்தினை இணைத்தல்

இணையத்தினைக் கணிப்பொறியில் கொண்டுவருவது அமைப்பு முறையாகும். இதில் இணையத்தில் பயன்படுத்தும் எண்ணங்கள் பற்றி இதில் உள்ளன. ஒரு கணிப்பொறியினை இணையத்துடன் இணைப்பதற்கு பின்வரும் சாதனங்கள் தேவைப்படுகின்றன. அவை,

1.தொலைபேசி
2.மோடம்
3.கணிப்பொறி

இணையத்துடன் ஒரு கணினியினை இணைப்பதற்குச் சில மென்பொருட்களும் தேவைப்படுகின்றன.

தொலைபேசி - மோடம் - கணிப்பொறி

இவ்வாறு இணைப்பதின் வழியாக கணிப்பொறியில் இணையத்தினை மிக எளிதாகப் பெற இயலும். கணிப்பொறியானது மிக வேகமாகச் செயல்படும் எண்ணம் இருக்க வேண்டும். மிக வேகமாக செயல்பட்டால்தான் தகவல்கள் மிக விரைவாகப் பெற இயலும்.

தகவல்கள் இணையத்தில் தேடி கண்டறியப்படுகின்றன. இணையத்தில் இருந்து தேடுவதற்குத் தகவல்கள் முதலில் நினைவகத்தில் சேமித்து வைக்கப்பட வேண்டும். இந்த வகை தகவல் எடுக்கும் வண்ணம் மிக எளிமையாக அமைந்திடல் வேண்டும். இந்த தகவல்கள் பின்வருமாறு இணையத்தில் அமையலாம். அவை,

1.எழுத்துகள்
2.படங்கள்
3.ஒலி
4.ஒளி
5.எண்கள்

இவைகள் ஒன்றாக இணைந்து பல்லூடகக் கோப்பாக நினைவகத்தில் சேமித்துவைக்கப்படுகின்றன. இந்த தகவல்கள் நினைவகத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன.இதில் இரண்டு வகையான தேடுதல்கள் உள்ளன.அவையாவன.

1.மெனு வகை தேடுதல்
2.தொடர் எழுத்து தேடுதல்

இணையத்தில் தகவல்களைத் தேடுவதற்குத் தேடும் இயந்திரம் பயன்படுகின்றன. இந்த இயந்திரம் கணிப்பொறியில் அனைத்து தகவல்களையும் குவித்து செயல்படுகின்றன. இதன் வழியாக தகவல் அனைத்தும் சேமித்துவைக்கப்படுகின்றன. ஒரு எண்ணத்தைப் பற்றி தேடும் போது முழு எழுத்துக்களையும் கொடுக்க வேண்டும். இந்த எழுத்துகளுக்குத் தகுந்தாற்போல் வரிசையாக எண்ணங்கள் தேடுகின்றன. இந்த எழுத்துகளுக்குச் சாவி வார்த்தை வழியாகத் தேடி கண்டறிய பயன்படுத்தப்படுகின்றன.

இணையத்தில் தகவல் அனுப்பும்பொழுது அதனுடன் ஒலியும் சேர்த்து அனுப்பப்படுகின்றன.தேடும் இயந்திரத்தினை அடிப்படையாகவைத்து தகவல்கள் கண்டறியப்படுகின்றன. இதன் வழியாகத் தகவல்களை மிக எளிதாக தேடிக் கண்டறியலாம்.

எல்லை பெயர் அமைப்பானது பல கணிப்பொறிகளை ஒன்றாக இணைத்து செயல்படும் வண்ணம் அமைந்துள்ளது. இது நடுநிலை மேலாண்மை அமைப்புடன் அமைந்துள்ளது. இந்த வகை அமைப்பானது தரவு தள அமைப்பினை பயன்படுத்தி செயல்படுகின்றன. இதில் பகிர்வு முறை அமைப்பு பயன்படுத்தப்படுகின்றன.

மின் அஞ்கல் வழியாக தகவல்களை மிக விரைவாக ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பலாம்.இதன் வழியாக உலகத்தில் உள்ள அனைத்து கணிப்பொறிக்கும் தகவல்கள் மிக விரைவாக அனுப்பிவைக்கப்படுகின்றன. மின் அஞ்சல் வழங்கும் சில நிறுவனங்களைக் காணலாம்.

Yahoomail
Gmail
Hotmail
Sifymail
Rediffmail
Indiainfomail

இதன் நிறுவனங்களில் மின் அஞ்சல் கணக்குத் தொடங்கவேண்டும். கணக்குத் தொடங்குவதற்குப் பின்வரும் தகவல்கள் தேவைப்படுகின்றன.

Userid
Password

இதில் வாடிக்கையாளர் பெயர், கடவுச்சொல் கொடுக்கப்படுகின்றன. இதனைக் கொடுத்தப் பின் மின் அஞ்சல் கணக்குத் தொடங்கப்படுகின்றன. இதில் கடவுச்சொல்லை மிகவும் பாதுகாப்பாகப் பராமரிக்க வேண்டும். இதன் வழியாகத் தகவல்களை உலகம் முழுவதும் மிக விரைவாகவும், பாதுகாப்பாகவும் அனுப்பிவைக்க இயலும்.

முடிவுரை

இணையத்தின் வழியாக உலகத்தில் உள்ள அனைத்து கணிப்பொறிகளும் ஒன்றாக இணைத்துச் செயல்படுத்தப்படுகின்றன. இதனால் உலக கணிப்பொறிகள் வழியாகத் தகவல்கள் அனுப்பிவைக்க இயலும். உலக நாடுகளில் உள்ள கணிப்பொறிகள் வழியாகத் தரவுகளை ஒன்றாக இணைத்துச் செயல்படுத்தப்படுகின்றன. மின்அஞ்சல் வழியாக தகவல்கள் மிக விரைவாக அனுப்பிவைத்திட இயலும்.அதே போல் தகவல்கள் மிகவும் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படுகின்றன.

மொழியின் செல்வாக்கு

ஆர். உதயா ஜோன், மனிதவள மேலாண்மை அலுவலர், மார்க்கெட் இன்பியக்ட், கணினி மென்பொருள் நிறுவனம்

முன்னுரை

"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய நம் தமிழ்மொழி" போன்ற மொழிகளைப் பற்றிய ஓர் ஆய்வுக்கட்டுரை. மொழி என்பது மனித நாகரிகத்தின் மைல்கல் எனக் கூறலாம். ஒரு நாட்டின் வளர்ச்சியையும், கலாச்சார முன்னேற்றத்திலும் மொழியின் பங்கு இன்றியமையாதது. எந்த நாடு தம் நாட்டின் முன்னேற்றத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மொழிக்கு தருகின்றதோ, அந்த நாட்டின் வளர்ச்சி மிகச் சரியான பாதையில் இருக்கும்.

நாகரிக வளர்ச்சியில் மொழியின் பங்கு

மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் ஓசையே மொழி. ஒவ்வொரு மொழிக்கும் அதற்குரிய இலக்கணம், இலக்கியங்கள் உண்டு. ஒரு மொழியின் மாட்சிமை, அந்த மொழியில் இருந்து தோன்றிய இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வளரும் நாகரீக சந்ததியினருக்கு தம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் பறைசாற்றுவது இலக்கியம் ஆகும்.

பழங்காலத்தில் மகளிர்க்கு எனச் சமஉரிமை தரப்பட்டுள்ளது. நாம் இன்னும் 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு போராடிக் கொண்டு இருக்கிறோம். தமிழ்ப் புலமையிலும், போர் பயிற்சியிலும் பெண்கள், ஆண்களுக்கு நிகராக திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். எந்த பின்புலம் இல்லாமலும் தமிழ் புலமை மிகுந்தவர்கள் சங்க காலத்தில் இருந்தனர். அதற்கு மிகச் சிறந்த உதாரணம் காக்கை பாடினியார். செறிவு மிகுந்த இலக்கியங்களும், புலவர்களும் சங்க காலத்தில் அதிகமாக இருந்ததற்கு காரணம் மொழியின் பயன்பாடே ஆகும். எந்த ஒரு வேற்று மொழியின் ஆதிக்கம் குறைந்திருந்த போது. தாய்மொழியின் வளர்ச்சி மிகுந்திருந்தது.

மொழியின் வளர்ச்சியின் ஆண், பெண் பங்கு

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சியிலும், ஆண், பெண் இருபாலருக்கும் சமபங்கு உண்டு. நாட்டின் வளர்ச்சி என்பது மொழியின் வளர்ச்சியைப் பொறுத்தது. தமிழ்மொழி உடனே தோன்றிய லத்தீன், ஹீப்ரு போன்ற மொழிகள் வழக்கொழிந்து போனாலும், தமிழ் தன்னுடைய இலக்கியச் செறிவாலும், நெகிழ்வு தன்மையாலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. தமிழ் மொழியுள் சொல்வளம் "ழ" கரத்தில் தான் இருக்கிறது என்றனர் நம் சான்றோர். எந்த மொழியிலும் இல்லாத சொல்வன்மையை "ழ"கரம் தருகிறது. தற்காலத்தில் மொழியின் நிலைமை என்ன என்று ஆராய்ந்தால், தன் சுயதன்மை முற்றிலுமாக இந்து விட்டதுபோல் ஓர் நிலை உள்ளது. நெகிழ்வு தன்மையுடன் நம் மொழி இருக்கிறது என்று பெருமை பேசினாலும், தன் ஆதிக்கத்தின் சில பகுதிகளை வேற்று மொழிக்கு தாரை வார்த்துவிட்டது என்பது தான் நிதர்சனம். மொழியின் வளர்ச்சியில் வெளி உலக பயன்பாட்டில் அதிகமாக ஈடுபடுகின்ற ஆண்களும், பெண்களும் தம் மொழியை விட்டு கொடுக்காமல் இருக்க வேண்டும். புது யுக்திகளை, மற்ற மொழியின் மூலம் பயின்றாலும் தம் தாய்மொழியில் மொழி பெயர்த்து, வரும் சந்ததியினருக்கு அதை பாதுகாத்துத் தர வேண்டும். வளரும் நாடுகளுக்கு இணையாக நம்மால் ஏன் போட்டி போட முடியவில்லை? என்பதற்கு

முக்கிய காரணம், வளரும் யுக்திகளை மொழி மாற்றம் செய்யாமல் இருப்பதுதான், இந்த பின்னடைவிற்குக் காரணம்.

மொத்த மக்கள்தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீத மக்களே, வேற்றுமொழி அறிந்தவர்களாக இருப்பர். புது யுக்திகள் அவர்களுக்கு மட்டுமே தெரிந்த விஷயமாக இருக்கிறது. தன் சந்ததியினருக்கு அதை கொண்டு சேர்க்க வேண்டும் என்ற பொறுப்பு நம்மிடையே இல்லை. மற்ற மொழியினருக்கு இருக்கும் மொழிப்பற்று இல்லாமையே, நம் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது.

மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான காரணிகள்

ஒரு மொழி வளர வேண்டுமானால், அதன் மக்கள் முன்னேற வேண்டும். நம் மொழி பேசும் மக்கள் இல்லாத துறைகளே இல்லை எனக் கூறலாம். ஆனால் அவர்கள் செய்யும் மிகப்பெரிய தவறு. தாம் அறிந்தவற்றை எல்லாம் மொழி மாற்றம் செய்யாமல் அந்த மொழியிலே பயில்வதுதான். மேலை நாடுகளில் மக்கள் எல்லாவற்றையும் தம் தாய்மொழியிலேயே கற்கின்றனர். இந்த காரணத்தினால் அவர்கள் வேகமாகப் பயில்வதோடு மட்டுமல்லாமல், அதை நம் சந்ததியினருக்கு, தம் தாய்மொழயிலேயே பாதுகாத்து வைக்கின்றனர். அதனால் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொழுது, நம் மக்களைவிட அவர்களின் நாட்டின் வளர்ச்சியும், மொழியின் வளர்ச்சியும் சீராக உள்ளது. இந்த வளர்ச்சி நம் நாட்டிலும் வேண்டும் என்றால், நாடு, மொழி இரண்டையும் ஒரு முகத்தின் இரண்டு கண்களாகப் பாவிக்க வேண்டும். அந்த பாரபட்சமற்ற முயற்சியே நம் மொழியைக் காப்பாற்றி, தம் சந்ததிகளுக்கு விட்டுச் செல்ல முடியும்.

தனிமனித வளர்ச்சியில் மொழியின் பங்கு

ஓர் மனிதன் அறிஞனாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முதல் உந்துதல் அவன் மொழி பேசும் சமூகமே. எந்த மனிதனும் அடையாளம் முதலில் கிடைப்பது, அவன் சமூகத்தில் மட்டுமே. அவன் மொழி பேசும் மக்கள்தான் முதலில் அவனை அடையாளம் காண்கின்றனர். நாம் வேற்று மொழியில் புலமை வாய்ந்தவர்களாக இருந்தால், முதல் அங்கீகாரம் கிடைப்பது நம் மொழி பேசும் மக்களிடம்தான். அந்த அங்கீகாரம் கிடைப்பதற்கு முதல் உந்துதல், அவன் மொழி பேசும் சமூகம்தான். அந்த சமூகம்தான், வெளி உலகத்திற்குத் தன்னில் ஒருவனை அடையாளம் காட்டுகின்றது.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் மட்டுல்லாமல், ஒரு மனிதனின் வளர்ச்சியிலும் மொழியின் பங்கு இன்றியமையாதது. ஒரு மொழியின் வளர்ச்சியில் பல நூற்றாண்டுகள் கடந்து போன போதும், உண்மை, எளிமை தன்மை இருக்க வேண்டும் என்றும், பழைய மரபுகளை உடைக்க வேண்டும் என்ற நோக்கில், நாம் இலக்கிய வன்மையை இழந்து விட்டோமோ என்று தோன்றுகிறது. ஒரு மொழியின் வளர்ச்சியின் உண்மை தன்மை இருக்க வேண்டும். ஆனால் அந்த உண்மையை, கருத்தை சொல்லும் பாங்கில் ஓர் இலக்கிய செறிவு வேண்டும். அந்த இலக்கிய செறிவிற்கு ஒவ்வொரு மனிதனும் தன் கடமையைச் செய்ய வேண்டும்.

அந்த கடமை என்னவென்றால், தன் இனத்தாரோடு, தன்னுடைய தாய்மொழியில் உரையாட வேண்டும். மற்றவர்களைப் போல தாய்மொழியில் உரையாட ஊக்குவிக்க வேண்டும். இந்த தனி மனித கடமையை எல்லோரும் மிகச் சரியாக செய்துவிட்டால், ஒருமொழி தன் இயல்பையும், தன் இனத்தாரையும் காப்பாற்றி

விடும். வளரும் சந்ததியினருக்குத் தன் தாய்மொழியின் மாட்சிமையைப் போதிக்க வேண்டும்.

முடிவுரை

ஒரு மனிதன், தன் குடும்பத்தைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சியை போன்றே, தன் தாய்நாட்டையும், தன் தாய்மொழியையும் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். இந்த முயற்சிக்கு, முதல்படி தன் இன மக்களையும், தன் சந்ததியினரையும், தம்முடைய தாய் மொழியில் பேச ஊக்குவிக்க வேண்டும். இந்த முயற்சிக்கு, வளரும் சந்ததியினரும், தம் பங்களிக்க வேண்டும். தான் முன்னேறினால், தன் சமூகமும், தன் இனத்தாரும் உயர்வர் என்பதைக் கருத்தில் கொண்டு உழைக்க வேண்டும். இளம் சந்ததியினர் வேற்று மொழியில் புலமை மிகுந்தவர்களாக இருந்தாலும், தன் தாய்மொழியிலும் புலமைப் பெற்றிருக்க வேண்டும். வேற்று மொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை தன் தாய்மொழிக்கும் தர வேண்டும். தன் வளர்ச்சியையும், மொழியின் வளர்ச்சியையும், ஒரே சீராகக் கொண்டுச் செல்பவருக்குத்தான், தன் இனத்திற்கான கடமையை மிகச் சரியாகச் செய்தவர் ஆவர். இந்த கடமையை நாம் ஒவ்வொருவரும் முடித்து, தன் மொழியையும், தன் இனத்தையும் காப்பாற்ற வேண்டும்.

வளர்க மொழி!
வளர்க இனம்!
வளர்க மனிதம்!

வடமொழி இலக்கண இலக்கியங்களில் பெண்

முனைவர் ஸ்ரீ. உஷா, இணைப்பேராசிரியர், வடமொழித்துறை, சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சி – 620 002

பாரதப் பண்பாட்டில் பெண் பெரிதும் போற்றப்படுபவளாக, சமூகத்தின் ஆணிவேறாகக் கருதப்படுபவளாக, பேரும் ஆக்கசக்தியாக நோக்கப்படுபவளாக, ஆதரித்து காத்து வணங்கத்தக்க பெரும் பொக்கிஷப்படைப்பாக சீர்மைப் பெற்று விளங்குகிறாள். பண்பாட்டைப் பிரதிபலிக்கும் மொழிகளிலும் பெண் பற்றிய சிந்தனை அடிப்படையிலான பல கூறுகள் காணக்கிடைகின்றன. அவ்வகையில் நம் நாட்டின் செம்மொழிகளுள் ஒன்றானதும், உலகின் தொன்மையான மொழிவரிசையில் முதன்மை பெற்றதுமான வடமொழியின் இலக்கண இலக்கியங்களில் பெண்மைப் பற்றிய கருத்துகள் இக்கட்டுரையில் தொகுத்து அளிக்கப்படுகின்றன.

மொழிகள் பால் உணர்வு வெளிப்பாட்டு மொழி (gender sensitive language) என்றும், பால் நடுநிலை மொழி (gender neutral language) என இருவகையாக பால் உணர்வாளர்களால் இருவகைகளாகப் பகுக்கப்படுகிறது. ஒவ்வொரு மொழிகளிலும் பால்களைக் கையாளும் முறைகளைக் கொண்டு அம்மொழியின் பால் நிலைப்பாட்டின் அடிப்படையில் இவ்வகைமை செய்யப்படுகிறது.

வடமொழியில் சொற்களின் பால், பொருள் கொண்டு வழங்கப்படுவதில்லை. மாறாக அந்தச் சொல்லைக் கற்கும்போதே அதனுடைய பாலும் கற்கப்படுகிறது. ஆகவே பால் வழங்குவதில் வடமொழி பால் நடுநிலை மொழியாகவே கருதப்படுகிறது. ஆயினும் இம்மொழி நாடகங்களில் பெண்கள் வடமொழியைத் தவிர்த்து, பொதுமொழியாகிய ப்ராக்ருதத்திலேயே பேசவேண்டும் எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால், பால் உணர்வு வெளிப்பாட்டு மொழியாகவே கொள்ளப்படுகிறது. ஆழ்ந்து நோக்கினால் இம்மொழி பெண்மைக்கு ஏற்றம் தந்து போற்றும் வகையில் அமைந்துள்ளது. இம்மொழியின் இலக்கண இலக்கியங்களில் இதற்கான சான்றுகள் நன்கு காணக்கிடக்கின்றன.

முதலாவதாக, இயல்பாக பெண்பால் அமைந்த சொற்கள் இம்மொழியில் அதிகம். உயிர் எழுத்துக்களில் ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ஐ, ஓ, ஔ என்ற 9 எழுத்துக்களில் பெண்பால் சொற்கள் உள்ளன. ஆண்பால் எழுத்துக்கள் அ, இ, உ, ரு, ஐ, ஓ, ஔ என்ற 7 எழுத்துக்களிலும், நபும்சகலிங்கத்தில் அ, இ, உ, ரு என்ற 4 எழுத்துக்களிலும் முடிபவை மட்டுமே உள்ளன. மெய்யில் முடிபவை ஆண்பாலில் 9, பெண்பாலில் 14, அலிப்பாலில் 10 எனப் பெண்பால் சொற்களே அதிகம் உள்ளன. உயர்ந்தவைகளும், மேலான குணங்களும் பெண்பாலிலேயே சொல்லப்படுகின்றன. உதாரணமாக அறிவு என்ற பொருளில் புத்திர்-மநீஷா- திஷணா-தீ-ப்ரஜ்ஞா என எல்லாம் பெண்பால் சொற்களாகவே அமைந்துள்ளன. தயா, க்ருபா, ஷமா முதலான உயர் குணங்களும் பெண்பால் சொற்களே.

அமரகோத்தில் மனிதர்களைக்குறிக்க 11 சொற்கள் மனுஷ்யா மாநுஷா எனப் பட்டியலிடப்பட்டுள்ளன. அதற்கு நிகராக ஸ்திரீ யோஷித் எனத் துவங்கி 11 சொற்கள் பெண்களை குறிப்பவைகளாக சொல்லப்பட்டுள்ளன. பெண் பேதை போன்ற பெண்களின் நிலைகள் குறித்த தமிழ் சொற்களைப்போல் வடமொழியிலும், கன்யா,

குமாரீ என 2 சொற்கள் முதல் பிராயத்திலும், கௌரீ, நக்நிகா, அநாகதார்தவா என்ற மூன்றும் பூப்பு எய்தாத பெண்களையும், மத்யமா, த்ருஷ்டரஜா என்ற இரண்டும் முதல் முறை பூப்பு எய்திய பெண்களையும், தருணீ, யுவதீ என்ற இரண்டும் இடைப்பருவ பெண்களையும் எனப் பல வகைமைகளில் பல நிலைகளில் பெண்களைக் குறிக்கும்சொற்கள் காணக்கிடைக்கின்றன. Eskimo க்களின் மொழியில் அவர்களை சூழ்ந்துள்ள பனியைக் குறிக்கும் சொல் நிறைந்து காணப்படுவதைப்போல, வடமொழியிலும் போற்றப்படும் பெண் பல சொற்களால் சொல்லப்படுகிறாள்.

மேலும் வருபால் சொற்களில், பெண்பால் சொற்களை உருவாக்க பாணினீயின் அஷ்டாத்யாயீயில் ஸ்திரீப்ரத்யயங்களை 81 சூத்திரங்களில் பேசுகிறார். ஆண்பால் சொற்களோடு இவைகளைச் சேர்த்து நிகரான பெண்பால் சொற்கள் இவைகளால் வருவிக்கப்படுகின்றன. இத்தனை விகுதிகள் பெண்பால் சொற்களை வளப்படுத்துகின்றன. அஜாத்யதஷடாப் என்ற ஸூத்திரத்திலே வயதின் அடிப்படையில் பாலா, வத்ஸா, ஹோடா, மந்தா, விலாதா எனப் பெண்களின் பெயர்களை வருவித்து விளக்குகிறார். வயஸி ப்ரதமே என்ற ஸூத்திரத்திலே குமாரீ என்ற சொல்லை வருவித்து விளக்குகையில் காஸிகா என்ற உரையில் ஐந்து வயது வரை கௌமாரம் என்றும், பத்து வயது வரை பௌகண்டம் என்றும், பதினைந்து வயது வரை கைசோரம் என்றும், பிறகு யௌவனம் என்றும் பெண்ணின் நிலைகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு மொழி இலக்கணத்தில் பெண்மைக்கு முதன்மைத் தரப்பட்டுள்ளது.

அடுத்து வடமொழி இலக்கியத்தில் பெண் பற்றிய சில செய்திகள் தொகுக்கப்படுகின்றன. வேதகாலங்களில் பெண்கள் பெரும் மதிப்பு பெற்று விளங்கினர். கார்கி, மைத்ரேயீ, சுலபா, விஸ்வவரா, லோபமுத்ரா, கோஷா முதலிய பெண்கள் அறிவிலும், தவத்திலும் சிறந்தவர்களாக, மந்திரத்தைக் கண்டறிந்தவர்களாயும், வாதங்களில் ஜெயித்தவர்களாயும் பேசப்படுகிறார்கள். இதிகாசங்களில் பெண்மை போற்றப்பட்டாலே வாழ்ச்சி, இகழப்பட்டால் வீழ்ச்சி என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது,

ராஜசேகரன் என்ற ஒன்பதாம் நூற்றாண்டு கவி தனது ஸூக்தி முக்தாவளி எனும் நூலில் சில பெண் கவிகளைப் பெருமையாகக் குறிப்பிடுகிறான். ஸிலா பட்டாரிகா என்பவள் பாணனோடு ஒப்பிடும் அளவிற்கு பாஞ்சாலி என்ற காவ்யநடையில் கைதேர்ந்தவள். அவள் எழுதிய யஹ கௌமாரஹர என்ற ஸ்லோகம் மம்மடாசார்யனாலே தனது காவ்ய சாஸ்திர நஊலான காவ்யப்ரகாஸம் என்னும் நூலில் அலங்காரங்கள் அற்ற நல்ல காவ்யத்திற்கு எடுத்துக்கட்டாக காட்டுகிறான். விஜ்ஜிகா என்பவள் காளிதாசனுக்கு அடுத்தபடியாக வைதர்ப்பீ என்ற காவ்யநடையில் வல்லவளாக குறிப்பிடப்படுகிறாள். மோரிகா, மாருளா போன்றோர் தனதேவ கவியாலே குறிப்பிடப்படுகிறார்கள். ப்ரபுதேவி என்ற லாடதேசப் பெண் கவி நல்ல ரசிகட்டன்மை கொண்டவளாகவும்எல்லா கலைகளுக்கும் இருப்பிடமாகச் சொல்லப்படுகிறாள். சுபத்ரா என்பவள் அழகிய ஸ்லோகங்களைச் செய்பவளாகச் சொல்லப்படுகிறாள்.

ராஜசேகரன் தனது காவ்யமீமாம்சா என்னும் நூலின் பத்தாவது அத்யாயத்தில் ஆண்களைப்போல் பெண்களும் கவியாகிறார்கள். ஆண் பெண் என்ற பேதமின்றி ஆத்மாவில் பக்குவம் அடைந்த நிலையில் கவிகள் உருவாவதாகக் கூறுகிறான். ராஜசேகரனின் மனைவி அவந்திஸுந்தரீ போற்றத்தக்க கவியாக கொண்டாடப்படுகிறாள். சாளுக்ய அரசி விஜ்ஜிகா போற்றப்பட்ட கவி. போஜன் தனது ஸ்ருங்கார ப்ரகாஸம் என்னும் நூலில் வடமொழியை தவறாகப் பேசும் ஆண்களும் உண்டு, அம்மொழியில்

வல்லமை பெற்ற பெண்களும் உண்டு என்று குறிப்பிடுகிறான். வடமொழி நாடகங்களில் ம்ருத்ஸகடிகம் என்னும் நாடகத்தில் வசந்தசேனா என்ற கணிகா வடமொழியிலே தான் பேசுகிறாள்.

கங்காதேவி தன் கணவன் கம்பணனின் வீரத்தையும் வெற்றியையும் கம்பணசரித்ரம் என்ற காவியமாக்கினாள். இவ்வாறு பல பெண்கள் கவிப்புலமை பெற்று, வேதகாலம் தொடங்கி இந்நாள் வரை இம்மொழியை வளப்படுத்தி வருகின்றனர்.

காப்பியங்களில் பாடுபொருளாகவும் பெண்கள் போற்றப்பட்டுள்ளனர். சீதா, ஜான்சி ராணி, இந்திராகாந்தி போன்றோர் பற்றிய இக்கால மகாகாவ்யங்கள் உருவாகியுள்ளன.

இவ்வாறாக வடமொழி இலக்கண இலக்கியங்களில் காலம்தோறும் பெண்கள் படைப்பாளிகளாகவும் பாடுபொருளாகவும் பல் வகைகளில் கூர்ந்து நோக்கி விவரிக்கவும் வர்ணிக்கவும் படுபவளாக, மொழிக்கும் தனக்கும் பெருமை சேர்ப்பவளாக விளங்குகிறாள்.

மேற்கோள் நூல்கள்

- அஷ்டாத்யாயீ, பாணினீ, சௌகம்பா சுரபாரதி ப்ரகாசந், வாராணசி, 2008.
- அஷ்டாத்யாயீஸுத்ரபாடஹா, வேதாந்தகேசரீ, க்ருஷ்ணதாஸ அகாதமீ வாராணசீ,1977.
- காசிகா, ஜயாதித்யர்,வாமனர்,சௌகம்பா சுரபாரதி ப்ரகாசந், வாராணசி, 2005.
- கே.எல்.வி.ஸாஸ்த்ரீ, ஆர். எஸ். வாத்யார் அண்டு சன்ஸ், பாலக்காடு, 2009.
- அமரகோஷஹ, ஸதாஸிவஸாஸ்த்ரீ,சௌகம்பா அமரபாரதீ பிரகாஷன், வாராணசீ, 1977.
- A short History of Sanskrit Literature by T. K. Ramchandra Ayyar, R.S, Vadhyar & Sons, Kalpathi, Palghat, Kerala, 2006.

மகளிரும் மனையும்

முனைவர் கா.கண்ணகி, திட்ட உதவியாளர், மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்

இல்லறமே நல்லறம் என்ற நிலையில் உலகம் இருந்தாலும், தற்போது அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சுதந்திரத்துடன் செயல்பட்டு வருகின்றனர். பெண்கள் நாட்டின் கண்கள். ஒரு குடும்பத்தில் பெண் கல்வி கற்றால் அனைவரும் கல்வி கற்றோர் ஆவார். தொடக்க நிலை வகுப்புகளில் அதிகமாக பெண்கள் தான் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றார்கள். ஏன் என்றால் குழந்தைகள் மனநிலையைப் புரிந்து கொண்டு கற்று கொடுக்கின்றனர். எதையும் தாங்கும் சக்தி கொண்டவள் பூமிதாய். பெண்கள் பொறுமையின் சிகரமாக விளங்குகின்றனர்.

அறத்தின் சிறப்பு

அறனெப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

என்று வாழ்வின் அறத்தை திருக்குறளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். வாழ்வில் அறம் என்று கூறுப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அவ்வாழ்கையும் மற்றவர் பழிக்கும் குற்றமில்லாமல் விளங்க வேண்டும். பழிச்சொல் இல்லாத வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று வாழ்க்கைக்கு அழகான இலக்கணம் வகுத்துள்ளார் வள்ளுவர். வாழ்வின் துணைநாடியே வாழ்க்கை துணைவியாவாள் மனிதனின் மனதைத் தூய்மை செய்வதே சிறந்த அறமாகும்.

மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை

என்ற திருமூலரின் வாக்குபடி அறத்தைச் செய்வதற்கு அடித்தளம் மனமே ஆகும். செல்வம் நிலையில்லாதது. அதை நாடி மனம் அலையக் கூடாது. ஆற்று வெள்ளத்தினால் ஏற்படுகின்ற மேடு பள்ளத்தைபோலவே பெரும் செல்வமானது வளர்வதும் குறைவதுமான இருக்கும் என்பதை *“ஆறு இடும் மேடும் மடுவும் போலாம் செல்வம் மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் சோறு இடும் தண்ணீரும் வாழும் தருமமே சார்பாக உண்ணீர்மை வீறும் உயர்ந்து”* என மூதுரை உணர்த்துகிறது.

தன்னை நாடி வருபவருக்கு இல்லை என்று கூறாமல் உண்ண உணவும், உடுத்த உடையும், தங்குவதற்கு உறைவிடமும் ஈதலே மிகப் பெரிய அறச் செயலாகும். இதையே சங்க கால மன்னர்கள் ஆற்றுப்படைகளில் புலவர்களுக்கு ஈந்து மகிழ்ந்துள்ளனர். ஆகையால் வளம் பல பெற்று நிறைவான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். என்பது அறியலாகின்றது. மணிமேகலையும் அறத்தினைக் குறிப்பிடும் போது

மண்டிலி ஞாலத்து வாழ்வோருக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் தோரே

என்று கூறும் வரிகளில் வாயிலாக அறத்தின மேன்னை சிறப்பிக்கப்பட்டுள்ளது. அறம் என்பது நாம் கடினமாக உழைத்துக் கொண்டு வந்து கொடுக்கும் பொருளன்று மாறாக நம்மிடம் இருக்கும் அற்பக் குணங்களை மாற்றினால் மட்டும் போதும் அதுவே பெரும் அறம் என்கிறார் வள்ளுவர்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

அன்றாட மனித வாழ்வில் நற்செயல்களே அறமாகும் என்பதை குறள் மனிதர்களுக்கு வலியுறுத்துகின்றது. அறத்தை வளர்ப்பதன் வாயிலாக மக்களின் வாழ்க்கை நலம் செம்மையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பெண்ணின் குணம்

பெண் என்பவள் எப்படிப்பட்டவள் என்பதற்கு வள்ளுவர்.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வு இலான் பெண்

என்று கூறுவதன் வாயிலாகப் பெண் என்பவள் எப்படி வாழ வேண்டும் என்பது உண்மை புலனாகின்றது. குடும்பத் தலைவியாகிய பெண், தனது குடும்பத்தின் பெருமையை வளர்க்கும் வகையில் பண்பை வளர்த்தல் வேண்டும். மழலைச் செல்வங்களை வகையறிந்து பேணுதல் வேண்டும். மனிதன் எவ்வளவுதான் கற்றறிந்தவனாக இருந்தாலும் மனைவியாக மங்கை ஒருத்தி வந்து சேராத வரையில் அவன் அறிய வேண்டியவற்றை அறிந்து மனிதனாகக் காட்சியளிப்பதில்லை. அம்மனைவியும் பல கலைகளிலும் குறிப்பாக சமையல் கலையில் சிறந்து விளங்க வேண்டும். தான் சமைத்ததை இனிது இனிது என்று கணவர் சுவைத்து உண்பதைக் கண்டு மனைவி மகிழ வேண்டும். இத்தகைய கலை மரபுப் பழக்கத்தை சங்ககால கவிஞன் ஒருவன் நம் மனக்கண்முன்னே படம் பிடித்துக் காட்டுகின்றன. இதனை,

தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர் இனிதென
கணவன் உண்டலின் நுண்ணிதின்
மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்தொகை)

என்ற குறுந்தொகைப் பாடலில் மனைவியின் பெருமையைக் கூறுகிறது. கணவனுக்கு உணவு வேண்டாத போதும் கட்டாயப்படுத்தி உணவு பரிமாறும் பண்பு தாய்க்குப் பின் தாரத்திற்கே உரியதாகின்றது. கல்விக்கற்ற பெண்ணால் மட்டுமே இல்லறத்தைச் செம்மையாக நடத்த முடியும். கல்வியானது இல்லற வாழ்விற்கு கண் போன்றதாகிறது. தூய வாழ்வும் எளிய உணவும் பெண்களுக்கு ஏற்றதாகும்.

உண்டி சுருங்கல் பெண்டிர்க்கழகு என்ற பழமொழிக்கேற்ப பெண்கள் உடல்நலத்திற்கு ஏற்ற உணவு வகைகளை உண்பது. நலம் என்கிறார். திரு.வி.க இயற்கையான அழகு என்றும் இன்பத்தைத் தரும் அதுவே என்றும் ஏற்றதும் ஆகும். இவை எல்லாவற்றிற்கும் அடித்தளம் அகத் தூய்மையாகும். அகத்தின் அழகை ஒட்டியே புறவாழ்க்கை மலரும். இதனைப் பெண்கள் நன்குணர வேண்டும். அழகுத் தெய்வம் வீற்றிருக்கும் பெண்ணே நன்மணமுடையவள் நிறையுடையவள் நல்லுடலுடையவள் என்பதால் பெண்மையின் இலக்கணத்தை நாம் நன்கு உணரலாம்.

பெண்களின் வாழ்க்கை நிலையில் களவு, கற்பு

வீட்டில் இருந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு அறவழி ஒழுகுதலே இல்லறத்தின் சிறப்பாகும். குறிஞ்சிப்பாட்டில் தோழி அறத்தோடு நின்று தலைவனுக்கு தலைவழயை மணம் செய்விக்க ஏற்பாடு செய்தல் தோழி இல்லற வாழ்வின் பெருமையை உணர்ந்து கொண்டதால்தான் என்பது தெளிவாகிறது. தலைவன் தலைவியர் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதும் அவர்களுக்குத் துணையாகத் தோழியர் உதவுதலும் உடன்போக்கு நிகழ்தலும் களவு ஆகும். இந்நிலையிலிருந்து இல்வாழ்க்கைக்குப் பெண்களை மாற்றுவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது கற்பு ஆகும். பொய்யும் வழுவும் தோன்றிய காரணத்தால் பெரியோர்கள் முன்னிலையில் ஊர்கூடி

நடத்தும் திருமணச்சடங்கு இல்லறத்தின் அடித்தளம் ஆகும். இவ்வனைத்திற்கும் பெண்களே முதன்மையாகத் திகழ்கிறார்.

பெண்களின் சிறப்புகள்

இல்வாழ்க்கை என்ற தேரை ஓட்டிச் செல்ல பெண்டிர் நற்பேறு பெற்றிருக்க வேண்டும். இதனை உணர்த்த கவிமணி "மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும்" என்கிறார். இதனால் பெண்களாய்ப் பிறப்பதற்குரிய சிறப்பை உணர்ந்து கொள்ள முடிகின்றது. பெற்ற பயனை நல்லவிதமாகக் கொண்டு நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமைச் சேர்க்கும் வகையில் நடப்பதே பெண்களின் கடமையாகும்.

அலுத்துவந்த தங்கள் ஆருயிர் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வதே இல்லறக் கிழத்தின் தலையாயக் கடமையாகும். உலகத்தில் வாழவேண்டிய முறையை அறிந்து அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்திலுள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்ற குறள் இல்லறத்தின் சிறப்பை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. பெண்மைக்கு மெருகூட்டுவது கற்பு நலமே ஆகும். கற்பு என்பது கல்போன்ற திண்மை என்றும் இல்வாழ்க்கைக்கு உரியன கற்று, கற்ற நெறியில் நிற்றல் என்றும் பலவாறு பொருள் கூறப்படும். ஆயினும் கற்பெனப்படுவது சொல்திறம்பாமை என்ற அவ்வையாரின் விளக்கம் உண்மையைத் தெளிவுபடுத்துகிறது.

தாய்மையும், தொண்டும்

மனித பிறவி மிகப் பெரிய விந்தையாகும். கண்ணுக்குத் தெரியாத ஓர் உயிரணு ஆச்சரியமாக உருவடைந்து அழகிய பூங்குழந்தையாக உலகில் தோன்றுகின்றது. இதனையே பட்டினத்தார்

பனியிலோர் பாதி சிறுதுளி மாது பண்டியில் வந்து புகுந்து திரண்டு
அற்புதமான மானிடக் குழந்தையாக வெளிப்படுகின்றது

என்ற வரிகளின் வாயிலாகப் பிறப்பின் வித்தையை அறிவித்துள்ளார். தாயின் தியாகம் அளவிடற்கரியது. தாயை நடமாடும் தெய்வம் எனலாம். தன்னலம் கருதாத தொண்டு தாயின் தொண்டாகும். ஈன்ற குழந்தைக்கு நல்ல பண்புகளை அறுசுவை உணவாக அள்ளிக் கொடுக்கும் தொண்டைக் காட்டிலும் சிறந்தது. வேறொன்று மில்லை. குழந்தையாக, தங்கையாக, தமக்கை, மனைவி, தாய் போன்ற பல நிலைகளிலும் பெண்களின் தொண்டு சிறப்புற விளங்குகிறது. பெண் பிறவியின் பெரும் நோக்கமே பிற உயிர்களைத் தமது உயிர்போலவே ஆதரித்தலே ஆகும்.

தொண்டு செய்வதற்காகவே பெண் பிறக்கிறார். வளர்கிறார் படிக்கிறார் மணம் கொள்கிறார் வாழ்கிறார். தொண்டு என்பதற்குத் தமிழ்த்தென்றல் அழகானதொரு விளக்கம் கொடுக்கின்றார். தொண்டு என்பது அடிமை வேலையன்று அது தெய்வபணி என்கிறார். திரு.வி.க. குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் செய்கின்ற தியாகம் வீட்டிற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் சிறந்த தொண்டாக அமைகின்றது

பெண்கல்வியின் சிறப்பு

பெண் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ வேண்டுமானால், அவள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும். ஆடல், பாடல இயற்கையை வாழ வைத்தல் போன்ற சிந்தனைகனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்திற்கும் ஆதாரம் கல்வியே ஆகும். கற்பின்மைக்கு அடிப்படைக் காரணம் நல்ல கல்வியின்மையை ஆகும். கல்வியில்லாத பெண்கள் வெற்று களர்நிரம் எனபதை பாவேந்தர் அவரது கவிதையில் குறிப்பிடும் போது

கல்வியில்லாதப் பெண்கள் களர்நிலம் அங்கே
புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் வினைவதில்லை

என்று பாடியிருப்பதன் வாயிலாக பெண்கல்வி வீட்டிற்கும் நாட்டிற்கும் எத்தகைய பயனுடையது என்பது நன்கு விளங்குகின்றது. "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற வரிகளால் கற்பின் சிறப்பையும், கற்பிற்குக் கல்வி மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதையும் நன்கு அறிய முடிகின்றது.

அன்பால் ஒருவனை மணந்து ஒழுங்குபட்ட இல்லறம் நடத்துதிலும், மட்டற்ற மகிழ்ச்சியுள்ள சாதனைகள் புரிவதிலும் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இல்லமாம் நல்லறத்தை இயக்கிச் சொல்ல மகளிர் சில கொளடகளைக் கடைபிடிக்க வேண்டும் அன்பு, அறிவு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகிய தன்மைகளைச் சிறப்பாகக் கையாண்டால இல்வாழ்க்கையானது சிக்கல்களின்றி சீரும் சிறப்புமாத் திகழும். குடும்பத்தின் தலைவியானவள் வண்டிச் சக்கரத்தின் அச்சாணி போன்றவள். அந்த அச்சாணி உடைந்தாலோ, பழுது பட்டலோ வண்டியானது சீராக இயங்க முடியாது. எனவே பெண்கள் உயர்ந்தக் குணங்களை உடையவர்களாய் இருக்க வேண்டும். பெண்களுக்கு துன்பம் வந்தாலும் உளந்தளராமல் உறுதியாக இருக்க வேண்டும். ஒத்த நலனும் கல்வியும், குலமும் உடைய ஒருவனும் ஒருத்தியும் வாழ்க்கை நடத்தும் பழந்தமிழர் நாகரீகம் மீண்டும் தோன்ற வேண்டும். அப்போதுதான் இல்லறவாழ்க்கைச் சிறப்படையும் என்பது தெளிவாகின்றது.

தடம் புரண்ட தமிழர் மரபில் நெல்

மா. கண்ணாயிரமூர்த்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

அரிசி மழை

"மாங்கல்யம் தந்துநானேனா
மம சீவந.்.கேது நா
கண்டே பந்நாமி சுபகே
சஞ்சீவ சரத சதம்"

என்று ஐயர் ஓதி மணமகன் கையில் மாங்கல்ய நாணை வழங்கிக் "கெட்டிமேளம்" "கெட்டிமேளம்" என்றார். மங்கல இசை முழங்க, மணமகள் கழுத்தில் மணமகன் மாங்கலியத்தைப் பூட்டினான். பூட்டும் நேரத்தில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் மழை போன்று அரிசிகள் பாய்ந்து வந்து விழுந்தன. மணவிழாவிற்கு வருகை தந்தோர் மணமக்களை வாழ்த்தும் நோக்கில் தூவப்பட்ட வாழ்த்துக் கலவை அவை.

வாழ்த்தித் தூவுவோர் தலை, வாய், உடை என்று பார்த்தா தூவுவர்? தலையிலும் அரிசி விழுந்தது. வாயிலும் அரிசி விழுந்தது. தலைக்கும் அரிசியாயிற்று. வாய்க்கும் அரிசியாயிற்று. இதனால் "மணமக்களுக்கு வாய்க்கரிசி போட்டனர்" என்று சொல்லக்கூடாது. ஏனெனில் அப்படிச் சொல்வது அவலச் சொல்லாகும்.

அத்துடன் தூவப்பட்ட அரிசி மஞ்சள் பூசப்பட்டது. வாய்க்கரிசி என்பது மஞ்சள் ஏறாத வெள்ளரிசி. ஆனால், மஞ்சள் கலக்கப்பட்டது என்பதிலிருந்து ஓர் உண்மையை உணர முடிகின்றது. மஞ்சள் கூடினால்தான் அரிசி மங்கலத் தன்மை பெறும். மஞ்சள் இல்லையென்றால் அரிசி மங்கலப் பொருள் அல்ல என்று உண்மை.

ஆம்! அரிசி மங்கலப் பொருள் அல்லதான். அது உணவுக்கென உரிக்கப்பட்ட பொருள். அவ்வகையில், அ.்.து இன்றியமையாத சிறப்புடையது. ஆனால், உணவுக்கு அன்றித் தனியே தூவிப் பயன்படுத்தும்போது அது ஒரு பலிப்பொருள்.வெள்ளரிசி பலிப் பொருள் என்பதை,

"வால் அரிசிப் பலி சிதறி"

எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. வெள்ளரிசி தனியாக மட்டும் அல்லாமல், ஆட்டுக்குருதி கலக்கப்படும் பலிப்பொருளாகும். அது வெறியாட்டுக்குரிய பலிப்பொருள். இக்கருத்தை,

"குருதியோடு கலந்த தூவெள் ளரிசி
சில்பலி செய்து"

என்த் திருமுருகாற்றுப்படையிலும், பிற இலக்கியங்களிலும் காணமுடிகிறது.

வாய்க்கு அரிசி

பூம்புகாரின் புறநகரில் சக்கரவாளக் கோட்டம் என்பது ஒரு பகுதி. அங்கு சம்பாபதி, கந்திற்பாவை முதலிய தெய்வங்களுக்குக் கோட்டங்கள் இருந்தன. "உலக அறவி" என்னும் பொது அறமன்றம் இருந்தது. அவற்றுடன் இடுகாடும் சுடுகாடும்

இருந்தன. இவற்றால் அதனைச் 'சுடுகாட்டுக் கோட்டம்' என்றும் வழங்கினர். அக்கோட்டத்தை விவரிக்கும் மணிமேகலைக் காப்பியம்,

"நெல்லும் பொரியும் சில்பலி யரிசியும்
யாங்கணும் பரந்த ஓங்கிரும் பறந்தலை"

என அங்குச் சிதறிப் பரந்து கிடக்கும் பொருள்களைக் காட்டுகின்றது.

'சில்பலி அரிசி' எனப் பலிப் பொருளாகக் குறிக்கப்பட்ட வெள்ளரிசி பிணங்களுக்கு வாயில் தூவப்பட்ட பிணப் பலிப்பொருள். தெய்வங்களுக்கு அரிசியைப் பலிப்பொருளாகத் தூவுவது போன்று இறந்தோர்க்கும் பலிப்பொருளாய் அரிசி அமைந்தது. பிணத்தின் வாய்க்குப் போடப்படுவதால் இது "வாய்க்கரிசி" எனப்பட்டது. மனிதன் உயிருடன் வாழ, உண்டு பழகிய அரிசியை இறுதியாகவும் வாயில் போட்டு ஒரு மன அமைதி கொண்டர் தமிழர். பிணம் பசியோடு போக வேண்டாம் என்பது எண்ணம் போல. பசி போக்குவதை நோன்பாகக் கொண்டவரே தமிழர். அவ்வரிசியையும் புத்தரிசியாகவே கொண்டனர். இறந்த செய்தி வந்ததும் இல்லப் பெண்கள் இல்லத்தில் உள்ள நெல்லை எடுத்து உரலில் இட்டுக் குத்துவர். குத்துவதிலும் முதல் குத்திலேயே அரிசியாகும் சிவந்த நிற அரிசியை, அதாவது தீட்டி வெள்ளையாக்காத அரிசியையே எடுத்துக் கொள்வார்கள். இது 'கொழி அரிசி' எனப்படும். இவ்வாறு வாய்க்கரிசிக்கு நெல்லெடுத்துக் கொட்டுவதைப் பிற்காலத் தனிப்பாடல் ஒன்று,

"வாய்க்கரிசிப் படிநெற் கொணர்ந்து கொட்ட"

என்று பாடியது. இவ்வாறு பிணத்தின் வாயில் தூவப்படுதல் இல்லத்து முற்றத்திலும் நிகழும். இடுகாட்டிலும் நிகழும். பிணப்பலியாகத் தூவுவதற்கு இடுகாட்டிற்குக் கொண்டுசென்ற அரிசியில் சில அரிசியை (சில்பலி அரிசி) தூவியதுபோக எஞ்சிய அரிசியும் வாய்க்கரிசி எனப்படும். அதனை அங்குள்ள காவலனான வெட்டியானுக்குக் கூலியாகத் தருவர். இதனை,

"உனக்கு வாய்க்கரிசி தந்தேன்
உண்டு இரு"

என அரிச்சந்திர புராணம் கூறுகின்றது.

இவ்வாறு அரிச்சந்தரரும் தெய்வங்களுக்கும், அவலந்தரும் பிணங்களுக்கும் பலிப்பொருளான அரிசி எவ்வாறு திருமணத்தில் தூவப்படும் வாழ்த்துப் பொருள் ஆயிற்று? மஞ்சள் பூசிக்கொண்டதால் ஆயிற்றா? அவ்வாறானால், அரிசி மஞ்சள் பூசி மங்கலப் பொருளானதாகப் பண்டைத்தமிழ் நூல்களில் எங்கேயாவது காணப்படுகின்றதா? அவ்வாறு இருந்திருப்பின் ஆட்டுக்குருதி கலந்து பலிப் பொருளானது குறிக்கப்பட்டமை போன்று இதுவும் எந்நூலிலேனும் குறிக்கப்பட்டிருக்கலாம். பின்னர், எவ்வாறு இப்பழக்கம் புகுந்தது? இது புதிதாகப் புகுத்தப்பட்டதா? இல்லை மற்றொரு தமிழ் மரபைத் தள்ளிவிட்டு இடம் பெற்றதா?

நெல் வழிபாட்டுப் பொருள்

மேலே சக்கரவாளக் கோட்டத்தில் சிதறிக் கிடந்தனவாகக் காணப்பட்ட பொருள்களில் பொரியும் நெல்லும் அரிசியுடன் கூறப்பட்டுள்ளன. அவற்றுள், அரிசி மட்டும் 'சிம்பலி' என்று அடைமொழி கொடுக்கப்பட்டு மற்றைய இரண்டினின்றும் பிரிக்கப்பட்டுள்ளது. மூன்றனுள் அரிசி மட்டும் பலிப்பொருள். மற்றைய இரண்டும் பலிப்பொருள் அல்ல என அறிவிக்கும் குறிப்பு இது.

பலிப்பொருள் வேறு, காப்புப்பொருள் வேறு, வழிபாட்டு வாழ்த்துப் பொருள் வேறு, படையல் பொருள் வேறு. பொரி, அவல் முதலியன பிணத்தை, பேய் என்னும் காற்றாவி அணுகாமல் காக்கச் சிதறப்படும் காப்பு பொருள்கள். அக்கோட்டத்தில் உலவும் காற்றாவிக்குச் சிதறப்பட்ட காப்புப் பொருளாம் பொரியும் சிதறிக் கிடந்தது. பொரி இவ்வாறு சிதறப்படுவதைத் திருமுருகாற்றுப்படையில் குறிக்கின்றது.

"செந்நூல் யாத்து வென்பொரி சிதறி"

நெல், மலர், அருகம்புல் முதலியன தெய்வத்தை வழிபடவும் வாழ்த்தவும் கொள்ளப்படும் மங்கலப் பொருள்கள். சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரும், "மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச் சிதறி" என்றார். மலர் பலியாகத் தூவப்படுவது உண்டு. ஆயினும், அது பிணப்பலிப் பொருள் அன்று, தெய்வப் பலிப்பொருள் ஆகும்.

சக்கரவாளக் கோட்டத்தில் அமைந்த சம்பாபதி, கந்திற்பாவை முதலிய தெய்வங்களை வழிபட்டு வாழ்த்திச் சொரிந்த நெல்லும் சிதறிக் கிடந்தது. இவ்வகையில் சிதறிக் கிடந்த மூவகைப் பொருள்களும் மூவகை நோக்கில், மூவழக நிகழ்ச்சியில் சொரியப்பட்டவை, சிதறப்பட்டவை. நெல்லைச் சொரிந்து தெய்வத்தையும் பரவும் மரபை,

"கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் தெய்வமும் இலவே"

எனப் புறநானூறு அறிவிக்கின்றது.

நெற்கதிர் சூடல்

மலரைப் போன்றே நெற்கதிரையும் தலையில் சூடிக்கொள்வது உண்டு. மலரோடு சேர்த்தும் சூடுவர். நெற்கதிரை மட்டும் தனியாகவும் சூடுவர்.

"பணியார் பண்ணுப் பிடியூர்ந்து
பருஉக்காற் செந்நெற் கதிர்சூடித்
தனியார் கழனி விளையாடித்
தகைபா ராட்டத் தங்கினார்"

என்கிறது சீவக சிந்தாமணி. இது அரசகுல மகளிர் நெற்கதிர் சூடியது. நெற்கதிரை மட்டும் சூடியதற்குச் சான்று.

"... ... தளைய வீழ்பூங் குவளைமது
விள்ளும்பைங் குழற் கதிர்நெல்
மிலைச்சியபுண் புலைச்சியர்கள்"

எனப் பெரிய புராணம் உழவர்குல மகளிர் குவளை மலருடன் நெற்கதிர் சூடுயதை எடுத்துக்காட்டுகிறது.

மன்னரும் நெற்கதிரைச் சூடினான். போருக்குப் புறப்பட்ட பாரி மன்னன் வெற்றி கருதிய மங்கலப் பொருளாக ஆம்பல் மலரோடு நெற்கதிரைச் சூடினான். இதனை,

"செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரோடு கூட்டி"

என அகநானூறு பாடுகின்றது. இவை நெற்கதிரை மலருடன் சூட்டிக் கொண்டதற்குச் சான்றாகும்.

நெற்கதிரை மங்கலமான மலரணி போன்றது மகளிரும் ஆடவரும் சூடினர். அரண்மனையினரும் சூடினர். வயல்வெளியினரும் சூடினர். மலரோடு சேர்த்தும், தனியாகவும் சூடியப் பழக்கத்தை இதன் மூலம் காணமுடிகிறது.

நெற்கதிர் மாலை

நெற்கதிர், மலருடன் தலையில் சூடப்படுவது மட்டுமன்றி மலருடன் மாலையாகத் தொடுக்கப்படுவதும் உண்டு. உழவுத் தொழிலில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கும் முதல் மங்கல நிகழ்ச்சி "பொன்னேர் பூட்டுதல்" ஆகும். அப்போது குவளைப்பூ, அருகம்புல் இரண்டையும் கலந்து நெற்கதிரை வைத்து மாலையாக்கி இப்பொன்னேர்க்கு அணிவிப்பர். இதனை,

"கொழுங்கொடி அறுகையும் குவளையும் கலந்து
விளங்குகதிர் கொடுத்த விரியல் (விரிந்தமாலை) சூட்டி"

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

நெல்லை விளைவிப்பதற்கு நெல்லையே மாலையாக்கியது மங்கலத்திலும் மங்கலம். இது போன்று நாற்று நடும்போது அந்நாற்றையே மங்கலமாக, நடும் உழத்தியர் சூடிக்கொள்வதையும் சிலம்பு காட்டுகின்றது. இவ்வாறாக,

"நெல் மங்கலப் பொருளாக,
தெய்வத்தைப் பரவத் தூவப்பட்டது.
தலையில் சூட்டப்பட்டது.
மாலையாக அணியப்பட்டது."

தெய்வத்தைப் பரவும் வழிபாட்டுப் பொருளாகத் தனியே நெல் தூவப்பட்டது போன்று மலருடன் கலந்தும் தூவப்பட்டது.

நெல்லும் மலரும்

பூம்புகார்ப்பட்டினப்பாக்கத்தின் கடைத்தெருவில் திருமகள், இருக்கையாய் இருக்கும் வணிக இல்லங்களில்,

"மலரணி விளக்கத்து மணிவிளக்கு எடுத்தாங்கு
அலர்கொடி அறுகும் நெல்லும் வீசி
மங்கலத்து ஆசிரியர்"

எனத் திரிந்ததைச் சிலம்பு காட்டுகின்றது. இன்றும் எல்லா இடத்திலும் விளக்கு பொருத்தப்பட்டிருந்தாலும் அது மின் விளக்கு இருந்தாலும், பெண்களும் ஆண்களும் வணங்குவதைக் காண்கிறோம். பட்டினப்பாலையில் பொது இடங்களிலும் இவ்வாறு பெண்கள் விளக்கேற்றி மலர் சூடினார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வில்லுறை தெய்வ வழிபாட்டைக் கன்னியரோ கைம்பெண்களோ செய்யமாட்டார்கள். மங்கல மகளிரே செய்வர். செய்தபின் இல்லத்தில் உள்ளவருக்கு வீட்டு தலைவர் வாழ்த்துரைப்பர். இவ்வழிபாட்டு நிகழ்ச்சியில் நெல்லும் மலரும் தூவப்பட்டதை அறிவிக்கும் நெடுநல்வாடையும் சிலப்பதிகாரமும் நெல்லுடன் தூவப்பட்ட மலர் இன்ன மலர் என்று காட்டவில்லை. இவ்வழிபாட்டு மரபை மற்றோர் இடத்தில் காட்டும் சிலப்பதிகாரம்,

"அகநகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி"

என்று நெல்லோடு தூவப்பட்ட மலர், முல்லை மலர் எனச் சுட்டுகிறது.

முல்லை மலர் கற்புக்குரிய மலர். "முல்லைக்கே கற்பு" என்றொரு பெயரும் வழங்கப்படுகிறது.

மௌவலும் தளவமும் "கற்பின் முல்லை" என்று சேந்தன் திவாகரம் முல்லைக்கொரு சொல் 'கற்பு' என்பதைக் கூறுகின்றது.

நெல்லுடன் முல்லை

இவ்வாறு கற்புக்கே உரித்தான முல்லை மலர் கற்புடைய மகளிரது அடிப்படையில் அமைந்த இல்லுறை தய்வ வழிபாட்டிற்கு நெல்லுடன் சேர்ந்த பொருளாக அமைந்துள்ளது. அந்தியில் செய்யப்படும் இவ்வழிபாட்டின் நோக்கம் இரவுப் பொபுது மங்கலப் பொழுதாயக் கழிந்து வாழ்வியலில் நலன் விளைய வேண்டும் என்பதே.

வாழ்வியலில் வருங்கால நற்சொல் கேட்பது 'விரிச்சி' எனப்படும். இவ்விரிச்சியை ஆடவரும் கூறுவர். பெண்களும் கூறுவர். விரிச்சி கூறும் பெண் 'கட்டுவிச்சி' எனப்படுவாள். இலக்கியங்கள் இவளைச் செம்முது பெண்டிர், பெருமுது பெண்டிர் என்று கூறுகிறது.

இக்கட்டுவிச்சி குறிசொல்லுவதற்கு அடித்தளமாக ஒரு முறத்தில் சில நெல்லைச் சிதறுவாள். விழுந்த நெல்லின் எண்ணிக்கையையும் கிடக்கும் அமைப்பையும் வைத்துக் குறி சொல்லுவாள். இதனைத் திருமங்கையாழ்வார்,

"காரார் குழல்கொண்ட கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் களகில் சிலநெல் பிடித்தெறியா"

என்று சிறிய திருமடலில் பாடிக்காட்டியுள்ளார். விரிச்சி கூறும்முன் செய்யும் தொழுகைக்கும் நெல்லையும் நீரையும் பயன்படுத்துவர். நெல்லை நீருடன் தூவியும், நெல்லை முல்லையுடன் தூவியும் வழிபடுவர். இதனை,

"நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டிர் சொல்லும்"

என்று புறநானூறு பேசுகின்றது. நெல்லை நீருடன் தூவி வழிபடும் விரிச்சி பெரும்பாலும் இல்லற வாழ்வியல் அல்லாத நற்சொல்லுக்காக அமையும். நெல்லுடன் முல்லை கலந்து தூவப்படும் வழிபாடு இல்லற வாழ்வியல் நலங்கருதிய விரிச்சியாகவே அமைந்தது. ஒரு நாழிப் படியில் நெல்லுடன் முல்லை மலரை நிறைத்துக் கொண்டு தூவி வழிபடுவர். இக்கருத்தையும் முல்லைப் பெயர் கொண்ட இலக்கியமாகிய முல்லைப்பாட்டு,

"நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

என்று பாடிக்காட்டியது. கிடைக்கும் பலவகைச் சான்றுகளில் எல்லாம் வாழ்த்துக்குரிய மங்கலப் பொருளாக நெல்லும் மலருமே காணப்படுகின்றன. ஆனால், நிகழும் திருமண வாழ்த்து நிகழ்ச்சிகளில் அவலப் பொருளாம் அரிசியே தூவப்படுகின்றது.

நெல் மங்கலம்

தை பிறந்து வழி பிறந்ததும் வீட்டில் வளம் பெருக நெற்கதிரினைப் புதிராகக் கொண்டு புகுவர். இது ஒரு மங்கல நிகழ்ச்சியாகவே கருதப்படும். உறவினர் இல்லங்களுக்கும் புதிர் அனுப்பி வளம் பெருக என வாழ்த்துவர். வளத்தின் அறிகுறியாக நெற்கதிரை மாலையாக்கியும் தொகுத்தும் இல்லத்து வாயில் நிலைகளில் மங்கலத் தோரணமாகக் கட்டுவர்.

ஆனாலும், ஆயிரங்காலத்துப் பயிராம் மணமக்களின் வாழ்த்திற்கு அவலப்பொருளாம் அரிசியையே தூவுவர். மணநிகழ்ச்சியில் நெல் அறவே நீக்கப்பட்டதா?

சாஸ்திரத்தோடு நிகழும் திருமண நிகழ்ச்சியில் நெல் இடம்பெறும் நிகழ்ச்சிகளும் உண்டு. மணமக்கள் அமரும் இருக்கையாம் மணவறையில் நெல்லைப் பரப்புவர். அதன்மேல் புதுப்பாயை விரிப்பர். அதன்மேல் மணமக்களை அமர வைப்பர். மணமக்களை இல்லத்துள் வரவேற்கும்போது பெண்ணின் மடியில் நெல்லைப் பொதியவைத்து நெல் வளத்துடன் அழைத்துச் செல்வர். மரத்தாலான படியில் நெல்லை நிரப்பி மணமகளின் கைகளில் ஏந்தச் செய்து இல்லத்துள் அழைப்பர். இதை 'நிறை நாழி' என்பர். தாலிக்கட்டியபின் மரப்படியில் நாழி நெற்கொண்டு மங்கலப் பெண்டிர் ஏந்தி மணமக்களைச் சுற்றி வாழ்த்துவர்.

சில குடும்பங்களில் மணமகனைக் கொண்டு மணமகள் கூந்தலில் முல்லைச் செண்டைச் சூட்டச் செய்யும் பழக்கம் இன்றும் உள்ளது. கழுத்திலிடப்பட்ட முல்லை மாலையை முதியோர் எடுத்து இறைவனை வணங்கி வேண்டிய மணமக்களை வாழ்த்துவதாக அணிவிப்பர். இருப்பினும் வாழ்த்துப் பொருளாகத் தூவப்படுவது அரிசிதான்.

இதற்குமேலும் ஓர் அவலம் உண்டு. மஞ்சள் பூசாத வெள்ளரிசியை இரு கைகளாலும் பிடியாக அள்ளி மணமக்கள் இருவருக்குமாகச் சேர்த்து தொடையிலிருந்து மேலேற்றிச் சுற்றி வாழ்த்துவர். இது 'மணமிடுதல்' எனப்படும். இந்த அருமையான அவலத்தை மணமக்களது பெற்றோரும் நெருங்கின உறவினருமே உரிமையுடன் செய்வர். ஆனால், இப்பெற்றோரே தம் மக்களுக்கு அனுப்பும் பொருள்களில் அரிசியை அனுப்ப ஒத்துக்கொள்வர். பிறந்தகத்திலிருந்து அரிசி அனுப்புவது அவலம் என்று மறுப்பர். நெல்லை மகிழ்வுடன் அனுப்புவர். நீர் சுமக்கும் குடத்தைப் பரிசாக வழங்கும்போது நீர் நிறைத்தோ, நெல் நிறைத்தோ, அத்துடன் மலர் தூவியோ

வழங்குவர். புகுந்த வீட்டில் மருமகள் புகும்போது தம் வீட்டுக்கு வரும் மருமகள் வளத்துடன் வரவேண்டும் என்னும் குறிப்பில் நிறைநாழியுடன் வரவேற்பர்.

இவ்வாறு, திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகளில் நெல்லும் முல்லையும் தூவப்படும் வாழ்த்துப் பொருள்களாக விளங்கின. நெல் வளத்தின் சின்னமாகவும், முல்லை கற்பின் சின்னமாகவும விளங்கின.

இவ்வாறு நெல்லோடு முல்லையைத் தூவி வாழ்த்தும் மரபு பழந்தமிழகத்தில் இருந்தது என்றால் அம்மரபுக்குச் சான்று தமிழ் இலக்கியத்தில் உள்ளதா? என்னும் வினா எழுதல் முறையானதே. மரபென்றால் இலக்கியச் சான்று இல்லாமலா போகும்?

பழங்காலத் திருமண நிகழ்ச்சி 'வதுவை மணம்' எனப்பட்டது. இவ்வதுவை மணத்தின் அக்கால முறையை அகநானூறு "உழுந்து தலைப்பெய்த" என்று துவங்கும் அப்பாடல் மறையவர் இடம் பெற்றதாகவோ, நிகழ்வு நிகழ்ந்ததாகவோ செய்திகளைத் தரவில்லை. மங்கலப் பெண்களே இடம்பெற்ற நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றது.

மேலும் தமிழ்ச் சான்றோர் வகுத்த அக்காலச் சம்பிரதாயம் (கரணம்) தமிழரல்லா வேற்று மொழியினர் இடம்பெறும் சம்பிரதாயமாக அமைந்திருக்காது. ஆனால் சிலப்பதிகாரம் காட்டுகின்ற திருமணத்தில்,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டத்
தீவ வலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை"

பார்ப்பனர் புகுந்துவிட்டார். வேதத்திற்கு வழி திறந்துவிடப்பட்டது. தீ வலம் வரத் தொடங்கிவிட்டனர். ஆனால் அரிசி தூவப்படவில்லை. அது வேதத்தின்வழி காட்டியதில் மறைந்து கொண்டுள்ளதோ என்னவோ?

ஆண்மையின் சின்னம்: பெண்மையின் சின்னம்

நெல் ஆடவர் உழைப்பின் வெற்றிப்பயன்: வளத்தின் சின்னம்: முல்லை மலர், மகளிர் கற்பின் முழு உருவம், பெண்மையின் சின்னம், நம்பியும் நங்கையும் இணையும் இல்லற வாழ்வில் ஆண்மையின் சின்னமும் பெண்மையின் சின்னமும் இணைதல் நற்பொருத்தம் கொண்டது. வளத்தின் நெல்லும், கற்பின் முல்லையும் கலப்பது கருத்துப் பொதிந்தது. இவ்விரண்டும் கருதியே பழந்தமிழர் இம்மரபைக் கொண்டிருந்தனர்.

அரிசியை வாழ்த்துக் கலவையாகக் கொள்வதில் கருத்தும் இல்லை. பொருத்தமும் இல்லை. இரண்டும் அற்ற இது எவ்வாறு புகுந்தது?

தமிழ் மரபு தடம் புரண்டது

வடபுலத்தாராய் வந்து தமிழரிடையே இடங்கொண்டோர் தமிழரது உழைப்பைக் கொண்டே பயன் பெற்றனர். தாம் ஆற்றும் பணிகளுக்கு ஊதியம் - கூலி என்றில்லாமல் காணிக்கை என்று பெறும் பொருள்கள். உடன்தாம் பயன்கொள்ளத் தக்கனவாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். நெல்லை காணிக்கையாகப் பெறுவதைவிட அரிசியைப் பெறுவதே அவர் பயன் கொள்ள எளிதாக இருந்தது. பிச்சையிடும் போதும் அரிசியையோ அல்லது சோற்றையே தான் இடுகின்றோம். நெல்லையோ இடுவோம்? அதனால் அரிசியே மேல் எனக் கொண்டனர். அதனை ஐயர் அவலப்

பொருளாகக் கொள்வதில்லை. இதனை ஐயர் இன்றும் கைக்கொண்டு வரும் பழக்கங்களாலும் அறியலாம்.

பார்ப்பனர் இல்லங்களில் நிகழும் நல்ல மங்கல நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் ஐயரின் நெருங்கிய உறவினர் ஒரு பித்தளைப் பாண்டத்தில் அரிசியும் தேங்காயும் கொண்டு செல்வர். புத்தாடை உடுத்திப் புதுப்பொலிவுடன் செல்வர். மகிழ்ச்சி பொங்க நகைமுகத்தோடு செல்வர். அதற்கு மாற்று அன்பளிப்பாக விழா நிகழ்த்துவோர் முறுக்கு, சீடை முதலிய தின்பண்டங்களைக் கொடுத்து அனுப்புவர்.

தமிழர் இவ்வாறு பித்தளைப் பாண்டத்தில் அரிசியையும் தேங்காயையும் உறவினர் இல்லத்திற்கு ஏந்திச் செல்வதுண்டு. அது எது கருதி? எப்பொழுதும் யாவரும் அறிந்ததே. அதனை எடுத்துச் செல்வது புத்தாடை உடுத்தி இல்லை. பழைய உடையுடன் முக்காடிட்டுச் செல்வர். ஒய்யார மகிழ்ச்சியுடன் அல்ல. ஒப்பாரி வைத்து ஓலமிட்டுச் செல்வர். ஆம் சாவு நேர்ந்த இல்லத்திற்குப் பிணத்திற்குரிய வாய்க்கரிசியாகவே அரிசியையும் தேங்காயையும் கொண்டு செல்வது தமிழ் மரபு.

எனவே, அரிசி தமிழர்க்கு மங்கலப் பொருள் அல்ல. ஆரியர்க்கு அவலப் பொருளும் அல்ல. அரிசி தமிழர்க்கு அவலப்பொருள் என்பது மறையவர் அறிந்ததே. ஆயினும், தமக்கு எளிதான வாய்ப்பை நினைத்தும், தம் மரபுக்கேற்பவும், தம் மொழி புகுத்தியும் தமிழர் மரபை மறையச் செய்தனர். எப்பொழுதேனும் ஒருசில மணநிகழ்ச்சியின்போது நெல்லில்லாத நேரத்தில், அந்நேரத்தைத் தமக்கு வாய்ப்பாக்கிக் கொள்வதற்காகவும், அந்நேரத்தில் தடங்கலில்லாது நிகழ்ச்சியை முடிப்பதற்காகவும் இருந்த அரிசியைப் பயன்படுத்தியிருப்பர். அரிசிமேல் மஞ்சள் பூசினால் நெல் நிறமாகும். நெல் போன்றதே என்று அமைதி கூறியிருப்பர். பின்னர் அதனையே வழக்காகவும் ஏற்படுத்தி இருப்பர். இவ்வாறும் நேர்ந்திருக்கலாம்.

எவ்வாறாயினும், கருத்தாழம்மிக்க தமிழர் மரபு தடம் மாறிப் போயிற்று என்பது வருந்தற்குரியது. இதுபோன்று வருந்தற்குரியதும் தமிழினத்தைத் தாழ்வுபடுத்துவதும் தமிழ் மொழியே நீக்கப்பட்டதுமான நிகழ்ச்சிகள் மீண்டும் புதுப்பிப்பதற்கு உரியவையாகின்றன. இது தன்மான உணர்வில் நிற்க வேண்டிய ஒன்றாகின்றது.

கோயில் தேவராயன்பேட்டை கல்வெட்டுகள் கூறும் கொடைகள்

முனைவர் மு.கலா, உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (த), கும்பகோணம்.

முன்னுரை

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூரை ஆட்சி செய்த சோழமன்னர்கள் சமயத்தின் மீது கொண்ட ஈடுபாட்டாலும் தாம் பெற்ற வெற்றியின் நினைவாகவும் பல கோயில்களை எடுப்பித்தனர். அவ்வகையில் முதலாம் ஆதித்தச்சோழன் தொண்டை நாட்டில் தாம் பெற்ற வெற்றியின் நினைவாக கோயில்கள் பல கட்டினான். அவற்றுள் திருச்சேலூர் மத்சயபுரீசுவரர் கோயிலும் ஒன்றாகும்.

மத்சயபுரீசுவரர் பெயர்க்காரணம்

திருஞானசம்மந்தர் திருப்புள்ளமங்கையில் சிவனை வழிபட்டு பதிகம் பாடிய பின்னர் சேலூரரைச் சேவித்து திருப்பாலைதுறை எனும் தலத்தை அடைந்தார் என்று சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் கூறியுள்ளார்.[1] மச்ச அவதாரம் எடுத்த திருமால் சிவனை வழிபட்டதன் நினைவாக ஏற்பட்ட தலமாதலால் மத்சயபுரீசுவரர் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் நுழைவாயிலில் "சேல்" ஒன்று சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற சிற்பம் இடம்பெற்றுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள "சேல்" என்பது ஒருவகை மீனாகும். சேலூர் என்ற இவ்வூர் வடமொழியில் மச்சபுரி என்றழைக்கப்படுகிறது.[2]

கோயில் தேவராயன்பேட்டை – பெயர்க்காரணம்

இலக்கியத்திலும் கல்வெட்டிலும் திருச்சேலூர் என்று குறிப்பிடப்பட்டுள்ள இவ்வூர் தற்போது கோவில் தேவராயன்பேட்டை என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.[3] விஜயநகர அரசர் தேவராஜமகாராஜர் பெயராலேயே இவ்வூர் தேவராயன்பேட்டை என்றழைக்கப்படுகிறது.

வைப்புத்தலம்

மூவர் தேவாரப்பதிகங்களிலும் தனக்கென தனி பதிகங்களைப் பெறாமல் பிற தலபதிகங்களிலும் பொது பதிகங்களிலும் பெயரளவில் குறித்து போற்றப்பட்ட தலங்கள் தேவார வைப்புத்தலங்கள் என்றழைக்கப்படுகிறது.[4] அவ்வகையில் திருஞானசம்மந்தர் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.[5]

வரலாற்றிற்கு அடிப்படைச் சான்றுகளாக அமைவது இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் மற்றும் தொல்பொருள்களாகும். திருச்சேலூர் கோயிலில் கி.பி 9ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டுகள் வரையிலான 50க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவைகளைப்பற்றி இக்கட்டுரையின் வாயிலாக காணலாம். இக்கல்வெட்டுகளில் நில வகைகள் விளக்கு கொடை, பொன்கொடை மற்றும் திருவிழா தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இக்கோயிலில் முதலாம் பராந்தகச்சோழன் (கி.மி 907-950) காலம் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் (கி.பி.1216-1256) காலம் வரையிலான கல்வெட்டுகள்

காணப்படுகிறது. இதில் ஆதித்தக்கரிகாலன், உத்தமச்சோழன், முதலாம் குலோத்துங்கச்சோழன், விக்கிரமச்சோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கச்சோழன் மற்றும் மூன்றாம் இராஜராஜச்சோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

நித்த வினோத வளநாட்டில் நல்லூர் நாட்டிலுள்ள திருச்சேலூர் ஆதித்தச்சோழனின் விருதுபெயரில் தென்கரை பிரம்ம தேயமான "இராஜகேசரி" சதுர்வேதிமங்கலம் எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இது சிதைந்து இராஜகிரி என்றழைக்கப்படுகிறது.[6]

சதுர்வேதி மங்கலம் நிர்வாகம்

தென்கரை பிரம்மதேயமான இராஜகேசரி சதுர்வேதிமங்கலத்தை நிர்வாகம் செய்ய பெரியசபை ஒன்று இருந்ததையும் "பெரியாள்வார் பண்டாரம்" என்ற பெயரில் கருவூலம் இருந்ததையும் கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.[7]

தேவதானம்

முதலாம் ஆதித்த சோழனின் 8ம் ஆட்சியாண்டுக் (கி.பி 878) கல்வெட்டில் வேசாவிப்பாடி என்ற நாட்டுப்பிரிவைச் சேர்ந்த இலையூர் நாட்டிலுள்ள சிறுவேலூர் என்ற ஊரைச் சேர்ந்த திருவடிகள் ஆயண்டி என்பவன் வழங்கிய நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.[8]

முதலாம் இராஜேந்திர சோழனின் 28ம் ஆட்சியாண்டிலும் முதலாம் இராஜாதிராஜசோழனின் 31ம் ஆட்சியாண்டிலும் கோயிற் கருவூலத்திலிருந்து கடனாக பெற்ற தொகை வட்டியோடு 710 காசுகளாகி விட்டமையால் அதனைப் பெற்ற நித்த வினோத வளநாட்டு நல்லூர் நாட்டு இராஜகேசரி சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் அதன் வட்டியிலிருந்து திருச்சேலூர் மகாதேவர் கோயிலுக்குரிய நிலங்கள் சிலவற்றுக்கான வரிகளைக் கட்டச் செய்த ஏற்பாட்டினை அவர்கள் ஏற்றதையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.[9]

முதற்பராந்தகச் சோழனின் 8ம் ஆட்சியாண்டை (கி.பி 915) சேர்ந்த கல்வெட்டொன்றில் இறைவனின் திருமஞ்சனத்துக்காக குரளை என்ற ஆறு மூலம் நான்கு குடம் தண்ணீர் கொண்டு வருவோர்க்கு நிலமளித்து கொடை வழங்கிய செய்தியைக் கூறுகிறது. குரளை என்ற ஆறு தற்போதுள்ள குடமுருட்டி ஆறாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[10]

இம்மண்ணின் 37வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நக்கன் அமுதன் ரிஷபவாகன பெருமாளின் திருமஞ்சனத்துக்கும் மற்றும் நண்பகல் பூஜைக்கும் நிலமளித்த செய்தி கூறப்படுகிறது.[11]

சுந்தரச் சோழனின் 6வது ஆட்சியாண்டுகளில் (கி.பி 973) பூமிசுந்தரன் என்கிற சுந்தரச் சோழ மூவேந்த வேளான் என்பவன் குந்தமங்கலம் என்ற கிராமத்தினை வரியிலிருந்து விலக்களித்து தானமளித்த செய்தியை கூறுகிறது.

உத்தமச்சோழனின் 8ம் ஆண்டு கல்வெட்டானது (கி.பி 977) பூதிப்பல்லவ பேரறையன் என்ற வீரசிகாமணி பல்லவரையன் நான்கு வேளை இறைவழிபாட்டிற்கு

தேவையான தைலம், சந்தனம் போன்ற பொருள்களை வாங்குவதற்காக தென்னந்தோப்பை நன்கொடை வழங்கினார் என்ற செய்தியை அறிய முடிகிறது.[12]

நிலக்கொடை

முதலாம் பராந்தகசோழனின் 37ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருச்சேலூர் மகாதேவர் ரிஷபவாகப் பெருமாளுக்கு நண்பகல் அமுது செய்விக்க நானாழி அரிசி, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காய் அமுது போன்றவை நைவேத்தியத்திற்கும் மற்றும் திருமஞ்சனத்திற்கும் ஊர் மத்யஸ்தன் நக்கன் அமுதம் நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.[13]

வைத்தியபோகம்

முதலாம் இராஜேந்திரச் சோழனின் 3 மற்றும் 7ம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளில் குந்தவைநாச்சியார் தம் தந்தையின் நினைவாக நிறுவிய "சுந்தரசோழவிண்ணகர் ஆதுலர் சாலை"யின் செலவுக்காக இராஜகேசரி சதுர்வேதிமங்கலத்து மகாசபையாரிடம் நிலத்தையும், வீடு கட்டுவதற்குரிய மனையையும் விலைக்கு வாங்கி அவற்றின் வருமானத்தை அவ்வாதுலர் சாலை அடைவதற்கு ஏற்பாடு செய்தார் என்ற செய்தி கிடைக்கிறது. இந்தக் கல்வெட்டில் வைத்தியசாலையின் நிர்வாகத்திற்காக திருச்சேலூரில் கலகரச்சேரி என்ற பகுதியைச் சேர்ந்த ஒருவன் வீட்டு மனையினை விற்று அத்தொகையை தஞ்சையிலிருந்த வைத்திய சாலைக்கு வைத்தியபோகமாக வழங்கியுள்ளார் என்பதை அறியலாம்.[14]

ஜீவிதம்

சுந்தரச்சோழனின் 3ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் இறைவனின் திருமஞ்சனத்துக்காக காவிரியாற்றிலிருந்து நாள்தோறும் ஒரு பானை நீரினைக் கொண்டுவரும் புல்லமங்கலம் என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு நரத்துங்கசேரி என்ற இடத்தை சேர்ந்தவன் நிலத்தை ஜீவிதமாக வழங்கிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[15]

இறையிலி

முதற்பராந்தகச் சோழனின் ஆட்சியாண்டுக் குறிப்பிடப்படாத கல்வெட்டில் நாள்தோறும் பலிபூஜை நடைபெறும் போது திருச்சேலூர் கிராமத்தைச் சேர்ந்த மத்தியஸ்தன் ஐந்து நபர்களுக்கு பாடல் இசைக்க வரி நீக்கப்பட்ட நிலத்தை தானமளித்ததை கூறுகிறது.[16]

வாழைப்பந்தலைச் சேர்ந்த கண்ணந்தை அறிவாளன் பூமி சுந்தரனான சுந்தர சோழ மூவேந்தவேளான், முடி சோழநாட்டுப் பிரம்மதேயம் ஸ்ரீ சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்தில் ஸ்ரீ பூமிசுந்தர விண்ணகர் எடுப்பித்து குந்தமங்கலம் என்ற ஊரினை வாங்கி குடிநீக்கா இறையிலியாக வழங்கிய செய்தியை கூறுகிறது. மேலும் இறைகாவலாக 200கழஞ்சுப் பொன் சபைக்குக் கொடுத்து மூவாயிரக்கலம் நெல் இப்பொன்னுக்குரிய ஆண்டு வட்டியாக வசூலித்துச் சபையே இறை செலுத்தி வர ஏற்பாடு செய்திருக்கிறார்.[17]

ஊழிய இறையிலி

திருச்சேலூர் கோயிலில் நுழைவாயிலின் தென் புறத்தில் சர்புவனச்சக்ரவர்த்தி போசல வீரராமநாததேவனின் 12ம் ஆட்சியாண்டில் ஊழிய இறையிலி வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் கன்னட நாட்டை ஆண்ட ஹோய்சாள மன்னராவார்.[18]

விளக்கெரிக்க தானங்கள்

முதலாம் பராந்தகனின் 4வது ஆட்சியாண்டில் கருவறையில் இறைவன் முன்பு விளக்கெரிக்க ஆளும் கணத்தைச் சேர்ந்த அங்கத்தினரான அசூரி ஆதித்தபிடார கிராமவித்தன் நிலத்தைத் தானமளித்த செய்தி இடம் பெற்றுள்ளது.[19]

இம்மன்னனின் 5ம் ஆண்டுக் கல்வெட்டில் இக்கோயிலில் நொந்தா விளக்கேற்றவும் நாள்தோறும் அந்தணர் ஒருவருக்கு உணவு அளிக்கவும் 30காசு பொன்னும் 3 மா நிலமும் தானமாக அளித்ததைக் கூறுகிறது.

சுந்தரச்சோழனின் 7வது ஆட்சியாண்டில் இக்கோயில் இரண்டு நொந்தா விளக்கெரிக்க 6 மா நிலத்தினை கூற்றமங்கலம் என்ற இடத்தைச் சேர்ந்த பாரடையன் பட்டன் சேர்ந்தன் நக்கண் என்ற ஒருவன் வழங்கியதாகக் கூறப்படுகிறது.[20]

பொன்கொடை

முதலாம் இராஜராஜச்சோழனின் 9ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் செம்பியன் மாதேவியார் தன் மகன் உத்தமச் சோழனுக்காக இக்கோயிலுக்கு வெள்ளித்தட்டும், செப்புத்தாங்கியும் மற்றும் தங்கக்குடம் ஒன்றும் தானமாக வழங்கியுள்ளார்.[21]

திருவாதிரை திருவிழா

இவ்விழாவானது மார்கழி மாதம் திருவாதரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது. சுந்தரச்சோழனின் 14ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நரத்துங்கசேரி என்ற இடத்தைச் சேர்ந்தவன் 20 கருங்காசுகளை நன்கொடை அளித்ததாகவும் அதிலிருந்து வட்டித் தொகையாகக் கிடைக்கும் 3காசுகளை ஜைமீனிய சாமவேதத்தை முதலாவதாக ஒப்பிப்பவர்க்கு பரிசாக அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டு தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழியில் 26 வரிகளில் காணப்படுகிறது. இப்போட்டி திருவாதிரை நாளில் இரவில் நடைபெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[22]

முடிவுரை

கோயில் தேவராயன் பேட்டை கல்வெட்டுகள் மூலம் இவ்வூர் சுந்தரச்சோழன் காலத்தில் இராஜசேரி சதுர்வேதி மங்கலம், சிம்மவிஷ்ணு சதுர்வேதழ மங்கலம் என்றும் இறைவன் பூமிசுந்தரெுமாள் என்ற பெயரில் அழைக்கப்படட்தை அறிய முடிகிறது. ஆதித்தக் கரிகால சோழன் காலத்தில் தென்கரை பிரம்மதேய சதுர்வேதி மங்கலம் என்றும் முதலாம் குலோத்துங்கச்சோழன் காலத்தில் நித்தவினோத வளநாட்டு திருச்சேலூர் என்ற பெயரில் அமைந்திருந்ததையும் அறியமுடிகிறது. மேலும் சோழ மன்னர்களின் பட்டப்பெயர்களில் ஊர்களும் நில அளவுகளும் வழக்கில் இருந்ததை அறியலாம். வேதங்களில் சிறந்தவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டதையும் ஒருமுறை பரிசுபெற்றவர் மறுமுறை போட்டியில் கலந்துகொள்ள முடியாது என்பதையும் அறியும்போது அக்கால மக்கள் நீதி, நேர்மை தவறாமல் இருந்தமை புலப்படுகிறது. இக்கோயிலுக்கு அரசர்கள் அரசியர் மட்டுமின்றி பொதுமக்களும் தானம் அளித்தலிருந்து மன்னரின் சிறப்பான ஆட்சி நிர்வாகம் நாட்டுமக்களின் செல்வநிலை ஆகியவற்றை அறிய முடிகிறது. சிறப்பு பூசைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதை கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. ஆனால் தற்போது இக்கோயில் பராமரிப்பு இன்றி பூசைகள் நடைபெறாமல் செயலிழந்து காணப்படுகிறது. இந்து சமய அறநிலையத்துறை இக்கோயிலைக் கவனத்தில் கொண்டு பராமரிப்புப் பணியினையும் பூசை

ஏற்பாடுகளையும் மேற்கொண்டால் நம் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பேணிக்காக்க முடியும் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1) ரா.பி.சேதுபிள்ளை, தமிழக ஊரும் பேரும் - சென்பகா பதிப்பகம், சென்னை, 2011.
2) ரா.பி.சேதுபிள்ளை
3) சோமசுந்தரம்
4) இரா.தங்கவேலனார், தேவாரவைப்பு தலங்கள், மாநில திருமுறை மாநாடு வெளியீடு, ஈரோடு.
5) தேவார வைப்பு தலங்கள்.
6) ஆர்.ஆளவந்தார், கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், உலதமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
7) List and inscription in the TamilNadu and Kerala states VOL-VII New Delhi 1992 NO189.
8) பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் தொ.II தொ.எ-8.
9) பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் தொ.II தொ.எ-6.
10) S.R.பாலசுப்ரமணியம் சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும் ப.174.
11) S.I.I VOL-XIII. NO 151 Government press Madras 1952.
12) S.I.I VOL-XII. NO 151.
13) பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி.II தொ.எ-32.
14) S.வசந்தி திருச்சேலூர் கல்வெட்டு செய்திகள்.
15) S.I.I VOL-XIII. NO 151.
16) S.வசந்தி ஆய்வுகட்டுரை.
17) பாபநாசம் வட்ட கல்வெட்டுகள், தொ.II, தொ.எ-7.
18) A.R.E (1922-1925) NO 280 Archeaological Survey of India New Delhi 1986.
19) A.R.E (1922-1925) NO 236.
20) S.I.I VOL-XIII. NO 169.
21) A.R.E (1922-1925) NO 262.
22) S.I.I VOL-XIII. NO 250.

ஆவணங்கள் காட்டும் சோழர்கால தேவரடியார்களும் மராட்டியர்கால அக்காமார்களும்

முனைவர் த.கலாஸ்ரீதர், உதவிப் பேராசிரியர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அக்காலத்தில் தேவரடியார்கள் கிரேக்க நாட்டு ஆடற் பெண்டிர் போன்ற பண்புநலம் உள்ளவர்களாகவும் கலையுணர்வுடையவர்களாகவும் இருந்தனர். கலை நுணுக்கங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நல் விருந்தளித்தனர். திருக்கோயில்களில் இறைத் தொண்டிற்காகவே பலர் தங்கள் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்களது வருவாயில் பெரும்பங்கு கோயில் வழிபாடு முதலியவற்றிற்காகவே செலவிடப்பட்டது என்று பின்னே வந்த முகமதிய எழுத்தாளர்கள் வியப்புடன் தெரிவித்துள்ளனர்.

சோழர் காலத்தில் தேவரடியார்கள் மதிப்பான இடம்பெற்றிருந்தனர் என்பது சோழர்கள் அவர்களுக்கு வழங்கியுள்ள ஏராளமான தானங்களைப் பற்றிய கல்வெட்டுக்களைப் பார்த்தாலே விளங்கும். சதுரன் சதுரி என்னும் ஒரு தேவரடியாள் நாகன் பெருங்காடன் என்பவரின் மனைவி (அகமுடையாள்) என்று திருவொற்றியூர்க் கல்வெட்டு (கி.பி. 1049 ஆம் ஆண்டில்) கூறுகிறது. அவ்வாறே தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு கோயிலில் பணிபுரிந்த தேவரடியாள் மணமானவள் என்பதை மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு தெரிவிக்கிறது. கி.பி.1099 இல் மூன்று வேளாளர்கள் இரண்டு பெண்களையும் அவர்களுடைய சந்ததியினர்களையும் தென்னார்க்காடு மாவட்டம் திருவக்கரையில் தேவரடியார்களாக விற்றதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. சோழர்காலத்தில் தேவரடியார்கள் எவ்வாறு இருந்தார்களோ அதே போன்று மராட்டியர்காலத்தில் அக்காமார்கள் என்ற ஒரு பிரிவினர் வாழ்ந்துள்ளனர். ஆனால் தேவரடியார்கள் போல் அவர்களும் மிகவும் மரியாதையுடன் நடத்தப்பட்டுள்ளனர்.

அக்காமார்கள்

அரண்மனையில் அரச மகளிருக்குப் பணிவிடை செய்வதற்காக இருப்பவர்கள் அக்கா கூட்டம் என்றழைக்கப்படுகின்றனர். அரண்மனையில் நடைபெற்ற விசாரணையின் பொழுது ரெஸிடெண்டு சாயேப்பிடம் பாயி சாயேப் இப்பணிப் பெண்டிரை "அக்கா கூட்டம்" என்று கூறினார். ரெஸிடெண்டு சாயேப் அக்கா கூட்டம் என்றால் என்ன என்று வினவியதற்கு அவர்கள் அரசாங்கத்தின் பரம்பரையின் குழந்தைகள் என்று பதிலளித்தனர். அவர்களுக்கு மாதச் சம்பளமாக மூன்று ரூபாய் முதல் ஏழு எட்டு ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டதாகக் கூறினர்.

கி.பி.1784 ஆம் ஆண்டு பாயிசா சேப்புக்கு துளஸி அக்கா, லவங்கி அக்கா என்ற இருவர் இருந்துள்ளனர். இவர்கள் இருவரும் வந்ததற்குச் சாப்பாடு செய்வதற்கு அரிசி படி 2 3"8 க்குப் பணம் 1 மட்டை அரிசி 3 13"16 படிக்குப் பணம் 2 13"16 கொடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 1785 ஆம் ஆண்டு ஆதியப்ப முதலி(பேட்டி) விசாரணை செய்து கொண்டு உபசாரத்துடன் முத்துலெட்சுமி அக்கா மகாலில் இடம் ஏற்பாடு செய்து கொடுத்து உலுப்பையும் கொடுத்து அனுப்பப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கி.பி. 1835 ஆம் ஆண்டு கல்யாண மகாலில் பெரிய அக்கா, சின்ன அக்கா பாயிமார் வகையறாக்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் உதவிப்பணம் போதவில்லை என்று அவர்களுடைய அலுவலர்கள் சொன்னதினாலே அடுத்த மாதத்திலிருந்து அவர்களுக்கு 225 சக்கரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டது.

கி.பி.1837 ஆம் ஆண்டு கல்யாண மகாலில் பணிபுரிந்த அக்காக்களுக்கு ஒவ்வொரு நாளும் சாமான்கள் கொடுத்தனர் என்ற குறிப்பு உள்ளது.

1912 க்குரிய 26 ஆம் எண் அசல் வழக்கு 1916 இல் நடை பெற்றபோது யோகாம்பாள் என்பவர் ஆறாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். 1916 இல் இவர் 85-86 வயது உடையவர். இவர் அக்கா கூட்டத்தைச் சேர்ந்தவர். இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது இவருடைய தந்தை சுப்பாராவ் என்றுள்ளது. கணவர் பெயர் இல்லை. இவ்வாறு அக்காமார் யாவரும் பதிலியார் ஆதல் கூடும். அவரைக் குறுக்கு விசாரணை செய்தபொழுது அக்காமார் தாலி அணிவர் என்றும், அவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை என்றும் தாலியை அணிகலனாகத்தான் அணிவர் என்றும் கூறியிருக்கிறார்.

கடைசி சிவாஜி மன்னரின் மனைவி சைதம் பாபாயி இறந்தப்பிறகு இவர் மன்னரின் கண்காணிப்பில் இருந்து வந்தார். இவர் மன்னரால் அரண்மனையில் தூதுவராக நியமிக்கப்பட்டார். அரண்மனையில் இருந்த மகளிர் தங்குமிடங்களின் சாவிகள் அனைத்தும் இவருடைய பொறுப்பில் இருந்தன. மன்னர் சிவாஜி இறந்தபோது இவருக்கு வயது 24-25 ஆகும். இவருக்கு மூன்று குழந்தைகள் இருந்தனர். இவருடைய மூத்தக்குழந்தை ஆண்குழந்தையாகும். அக்குழந்தைக்கு வயது 5, மற்ற இரண்டு குழந்தைகளும் ஆண் குழந்தைகளே ஆகும். மேலும் யோகாம்பாள் அக்கா தன்னுடன் பாலு, காமாலு மீரா ஆகிய மூன்று அக்காக்கள் பணிபுரிந்ததாகக் கூறுகின்றனர். இவர்களில் காமலுவைத் தவிர மற்ற இருவரும் யோகாம்பாளைவிட இளையவர்கள் ஆவர். இவரும் காமலுவும் ஓரிரு வயது முன்பின் உள்ளவர்கள். இவர்கள் மன்னர் சிவாஜி இறந்தபோது அரண்மனையில் இருந்தனர்.

கி.பி.1845 ஆம் ஆண்டு வீரம்மாபாயி அக்கா மகப்பேற்றுக்குப்பிறகு கொட்டடியிலிருந்து மாடிக்கு வரும் நாளன்று வேண்டுதலின்படி தெய்வங்களுக்குத் திருமுழுக்குக்காகப் பால், பாயாசம், நைவேத்தியம் செய்வதற்குத் தேங்காய், பழம் பூமாலைகள் அர்ச்சனை செய்வதற்குத் தங்கம் வெள்ளியில் வில்வதளங்கள், சரபோஜி மன்னர் படம், வழிபாட்டுக்காகக் கொடுக்கப்ட்டுள்ளதை ஓராவணம் குறிப்பிடுகிறது.

கி.பி. 1846 ஆம் ஆண்டு ரமாபாயி அக்காவின் குழந்தை சிரஞ்சீவி விஜய யோகா நந்தஜிக்கு 5 மாத அருளுக்குக் கயிறு கட்டுவதற்கு முகூர்த்தம் வழக்கப்படிக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

கி.பி.1846 ஆம் ஆண்டு அக்காமார்கள் மற்ற அக்காக்களின் பிள்ளைகள் திருமணத்திற்குச் செல்வதற்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது சாவளி அக்காவின் பேரன்கள், ரத்னம் அக்காவின் பிள்ளைகள் இரண்டுபேர் இவர்களின் திருமணம் ஆபுசாயேப் அரண்மனையில் செய்யப்பட்டது. இவர்களோடு பெரமாயி திருமணம், மருமான் திருமணம் முத்தாயி பேரன் திருமணம், பேத்தி திருமணம் போன்றோர்களுக்கும் திருமணம் அரண்மனையில் நடைபெற்றது. இத்திருமணங்கள்

அரண்மனையில் நடைபெற்றதால் அக்காமார் வகையறாக்களுக்கு முகூர்த்தத்துக்குப் போவதற்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கி.பி.1846 ஆம் ஆண்டு மங்களவிலாச சத்மத்தில் கிருஷ்ணாபாயி அக்கா வீரம்மாபாயி அக்கா ரமாபாயி அக்கா, தங்கம் அக்கா, விஷ்ணு அக்கா சாமுபாயி அக்கா ஆக ஆறு அக்காக்கள் இருந்தனர். இவர்களுக்கு கேசவராவ் மொஹிதே பிள்ளை திருமணத்துக்கு அன்பளிப்புக் கொடுக்கப்பட்டது.

கி.பி.1846 ஆம் ஆண்டு வீரம்மா அக்கா சாமுபாயி இவர்களுக்குத் துணிகளைத் துவைக்க இதுவரையில் இருந்து காவேரியை நீக்கிவிட்டு பெரம்மாள் முத்தாச்சியை நியமித்தனர். கி.பி.1850 ஆம் ஆண்டு மங்கள விலாசம் அக்காக்கள் பாயிமார்களுக்குப் பித்தளைக்குடங்கள் புதியது பெயர் வாரியாகக் கொடுத்து எழுதி அனுப்புவதும் தவிர பாக்கி இருப்பதையும் அனுப்பியுள்ளனர்.

கி.பி.1853 ஆம் ஆண்டில் அரண்மனையில் இருந்த அக்காக்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்திராணி கெங்கா, புச்சாளி, ஜாம்புவதி, சந்திரா, பாளாம்பி, அகம்பத்மாவதி அப்பாயி, நாகம்மா, (மாட்டுப் பெண்) மருமகள் தருமு பார்வதிசாவின் பேத்தி நைநித, தாசி காமாட்சிப்பெண் மீனம்பா, கிருஷ்ணாவின் பெண் ஹீரா, சந்திராவின் பெண் பாளுபாயி மாயம்மா (மாட்டுப் பெண்), மருமகள் கங்கா, பாளம்பாவின் பெண் சுந்தரம் தாசி பாலாவின் பெண் ஆகிய பதினாறு பேர் அக்கா கூட்டமாகக் குறிக்கப்படுகின்றனர். அக்காமார்கள் மராத்திய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். அக்காமார்களில் பலர் பக்தியோடு இருந்திருக்கின்றனர்.

ரமா அக்கா என்பவர் ஆத்மாரம் கோஸாமியின் சீடராக இருந்துள்ளார் (Syslia) அக்காமார்கள் இறந்தால் பெண்வழி உறவினர் சடங்குகளை செய்வார். கி.பி. 1854 ஆம் ஆண்டு அக்கா கூட்டத்தைச் சேர்ந்த லட்சமி அக்கா, வீரம்மா அக்கா, சாமுபாயி அக்கா, இவர்களின் நகைகளின் பட்டியல் காணப்படுகிறது. சோழர் கால தேவரடியார்கள் போலவே மராட்டியர்கால அக்காமார்களும் வாழ்ந்துள்ளனர். மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட்டுள்ளனர் என்பதை ஆவணங்கள் வழி அறிய முடிகிறது.

1. அபுசாய்ட் ஃபெர்ராண்ட் எழுதிய வாயோஸ் என்னும் நூலின் பக்கம்.124
2. கே.ஏ.நீலகண்டசாஸ்த்திரி சோழர்கள் (இந்தியன் கவுன்ஸில் ஆப் ஹிஸ்டாரிக்கல்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை. 1989
3. செ.இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், ப.111
4. Deposition of yogambal p1 & p2
5. Deposition of Renganathachari, p,689
6. Deposition of Regupathi Go & Swami, p.697
7. சுப்பிரமணியன்.பா., (ப.ஆ.) தஞ்சை மராட்டிய மன்னர்கால மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1980, தொகுதி -1, ப.65
8. சரசுவதி மகால் மோடி ஆவணத் தமிழாக்கம் 48 நோட்டு புத்தகங்கள் 4-38, 4-26, 5-40, 3-37, 3-38, 9-32, 7-36.

அகத்திணை ஒரு பார்வை

கி.கவிதா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்.

அகத்திணை நெறியில் பொருள் வரம்பு உண்டு. உலகியல் வழக்கினும் செய்யுள் வழக்கினும் பயின்று வரும் பொருள்களை மூவகையாகப் பகுத்துப் பேசுவது அகத்திணை மரபு. அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று வரையறைப்படுத்திப் பேசப்பெறும் அதனை,

"முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை" (தொல்.பொருள் இளம் நூ.3)

என்று தொல்காப்பியர் இதற்கு விதி செய்து காட்டுவர். இவை செய்யுளில் பயின்று வருவதலால் ஒன்று ஒன்றினிற் சிறந்து வருதலுடையது. அகப்பொருள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அகத்திணைப் பாகுபாடு

அகத்திணையைத் தொல்காப்பியம் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்று ஏழு திணைகளாகப் பகுத்துள்ளது.

ஐந்திணைப் பாகுபாடு

குறிஞ்சி முதலான ஐந்தும் ஒத்தகாமத் தன்மையால் ஒன்றாயினும், ஒழுக்கவகையால் தனிநிலை குறிப்பிப்பதற்காக "ஐந்திணை" என்று எண்ணுப்பெயர் பெற்றன. ஐவகை ஒழுக்கங்களைத் தொல்காப்பியர்,

"புணர்தல்புரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றவை
தேறுங்காலைத் திணைக்குரியப் பொருளே"
- (தொல்.பொருள் இளம் நூ.16)

என்று குறிப்பிடுவர். இவ்வாறு ஒழுக்கங்கள் ஐந்து வகையாகப் பிரித்து பேசப் பெறுவதால் இவற்றை "ஐந்திணை நெறி" என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு. இந்த ஐந்து ஒழுக்கங்களும் எல்லா நிலத்து மக்களிடமும் நிகழும் பொதுவான நிகழ்ச்சிகளே எனினும், மலை நாட்டில் புணர்தல் நிகழ்வதாகக் கூறுவது மரபு. பாலை நிலத்தில் பிரிதல் நிகழ்வதாகவும், மருத நிலத்தில் ஊடல் நிகழ்வதாகவும், நெய்தல் நிலத்தில் இரங்கல் நிகழ்வதாகவும் இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது.

1.முதற்பொருள்

முதற் பொருள் குறித்து

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" - (பொ.3)

என்ற தொல்காப்பியர் நிலம், காலம் இரண்டையும் குறிப்பிடுகின்றார். ஒரு செயல் செவ்வனே நடைபெற இடமும் காலமும் இன்றியமையாதவை.

நிலம்

மூலபொருளின் ஒரு பகுதியாகிய நிலத்தினை நான்கு பகுதியாகப் பகுத்துக் கூறுவார் தொல்காப்பியர். பாலை இயற்கை மாறுபட்டால் பருவ மழை பெய்யாது வளங்குன்றிய காலத்தில் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தம் இயல்பை

இழந்து புதியதொரு தன்மையைப் பெறும். இத்தன்மையுடைய நிலத்தைத் தமிழர்கள் பாலை என்று அழைத்தனர்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்தப்
பாலை என்பதோர் வடிவங் கொள்ளும்"

- (சிலப்.காடுகாண்.64-66)

என்று சிலப்பதிகாரம் கூறுவதாலும் இது நன்கு விளங்கும்.

அ.குறிஞ்சி

மலையும்மலைசார்ந்தஇடமும் புணர்ச்சிக்குரியதாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். குறிஞ்சி இயற்கை வளம் நிறைந்து காணப்படும். கூதிர் காலம் என்ற பெரும் பொழுதையும் யாமம் என்ற சிறு பொழுதையும் புணர்ச்சிக்குரிய காலமாகக் கூறுவர். குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் குறவர் ஆவர்.

ஆ.முல்லை

முல்லை காடும் காடு சார்ந்த இடமும் ஆகும். முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கம் இருத்தல் ஆகும். முல்லை மலர்கள் இப்பகுதியில் அதிகம் காணப்படும். இந்நிலத்திற்குரிய பெரும் பொழுது கார்காலம். சிறு பெர்ழுது மாலை நேரமாகும். முல்லை நிலத்தில் வாழும் மக்கள் ஆயர் ஆவார்.

இ.மருதம்

வயலும் வயல் சார்ந்த இடம் மருதம் ஆகும். வற்றாத நீரையுடைய ஆறு கால்வாய்களாகப் பிரிந்து பாயும் நிலத்தை உடையது இப்பகுதி. வைகறை, விடியல் என்ற சிறுபொழுதுகள் இரண்டு, பெரும் பொழுதுகள் ஆறும் இதற்கு உரியவை எனக் கொள்வர். உழவர், உழத்தியர் இப்பகுதியில் வாழ்பவர்கள்.

ஈ.நெய்தல்

நெய்தல் என்பது கடலும், கடல் சார்ந்த இடமும் ஆகும். பெரும்பொழுது அனைத்தும் இதற்குண்டு நுளையர், நுளைச்சியர் இப்பகுதியில் வாழ்வார்கள்.

உ.பாலை

காதலால் கூடிக்கலந்த இருவரது பிரிவு ஒழுக்கத்தினைக் குறிப்பது பாலைத்திணை ஆகும். பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், சிறுபொழுது, நண்பகல், இதற்குப் பின்பனியும் உரித்து எனத் தொல்காப்பியர் கூறுவர்.

2.காலம்

முதற்பொருளில் இன்னொரு பகுதியாக காலத்தைப் பெரும் பொழுது என்றும், சிறுபொழுது என்றும் பகுத்துப் பேசுவர். பெரும்பொழுது என்பது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். சிறுபொழுது என்பது வைகறை, விடியல், ஏற்பாடு, நண்பகல், மாலை, யாமம் என்று குறிப்பிடுவர்.

2.கருப்பொருள்

முதற்பொருளிலிருந்து தோன்றுவது கருப்பொருள். அது இடத்திலும் காலத்திலும் தோன்றும். அது தெய்வம், உணவு, விலங்குகள், பறவைகள், தொழில், பண், நீர், பூ போன்றவை.

இதற்குத் தொல்காப்பியர்

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவும் கருவென மொழிப" (பொருள் 20)

என்று வரையறுத்துக் காட்டுவர்.

3.உரிப்பொருள்

உரிப்பொருளாவது மக்கட்கு உரியப்பொருள். உரிப்பொருள் மக்கள் வாழ்வையொட்டி இருக்கும். அவர்கள் வாழ்க்கைநெறி ஒழுக்கமே உரிப் பொருளாகும். உரிப்பொருளைத் தொல்காப்பியர் ஐந்து பகுதியாகப் பிரித்துக்காட்டுவர். ஒரு நாடகத்தைப் பற்றி பேசும் போது இன்ன இடம் என்றும், இன்னகாலம் என்றும், இன்ன பாத்திரங்கள் என்றும். ஒவ்வொரு காட்சிக்கும் குறிப்பிடுவர். அவ்வாறே அகப்பொருள் நிகழ்ச்சிகட்கு இந்த முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் உறுப்புகளாக அமைகின்றன. ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே இவை அமைதல் வேண்டும் என்றும் வரையறை செய்து காட்டுவார் தொல்காப்பியர். உயிர்ப்பொருள் தான் இவற்றின் உயிர் நாடியாக இருப்பதாகும். காதல், நாடகத்தின் இயக்கம் இதுவே என்றும் கூறலாம்.

உரிப்பொருளாகிய காதல் நிகழ்ச்சியை இன்ன காலத்தில் இன்ன பொருள்களைச் சூழ்நிலையாக அமைத்துக் கவிஞர்கள் கவிதையை ஆக்கும் போது இந்த மூவகைப் பொருள்களும் அதில் காட்சி அளிக்கின்றன.

நிறைவுரை

தமிழ் அகத்திணை கூறுகின்ற பல்வேறு காதற் கூறுகள் தமிழகத்தின் நிலக்கூறுகளின் அடிப்படையில் எழுந்தவையாகும். குறிஞ்சி முதலான ஐந்திணைகளும் ஒத்த தன்மையால் ஒன்றாயினும், ஒழுக்க வகையால் தனிநிலை குறிப்பதற்காக அன்பின் ஐந்திணை எனப் பெயர் பெற்றுள்ளன. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய ஒழுக்கங்கள் நிலத்தின் பெயரைச் சார்ந்து அமைந்துள்ளன என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற உரையில் அதன் வைப்புமுறை அமைந்திருப்பது, பண்டைத் தமிழரின் வாழ்க்கை நிலையை எடுத்துக்காட்டும் கருவூலமாகத் தொல்காப்பியம் அமைகின்றது.

வரலாற்று பார்வையில் நாலடியார் தரும் வாழ்வியல் அறிவுரைகள் – ஓர் ஆய்வு

முனைவர். க. கற்பகம், உதவி பேராசிரியர், வரலாற்றுத்துறை, த.ஞா. அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

முன்னுரை

நாலடியார் கால மக்கள் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வந்த அறநெறியை கடைப்பிடித்து வாழ்ந்தனர். திருக்குறள், நாலடியார் முதலான நூல்கள் வாழ்வியல் தத்துவங்களை எடுத்து இயம்புகின்றன. அக்கால மக்களின் பெருமையையும் அறவுணர்வுகளையும் நாலடியார் தெள்ளத்தெளிவாக விளக்குகிறது. நாலடியார் உணர்த்தும் வாழ்வியல் அறிவுரைகளை தெளிவாக உள்ளன.[1]

செல்வம் நிலையாமை

செல்வம், வண்டியின் சக்கரம் போல ஓரிடத்தில் நிலையாக நில்லாமல் மேலும், கீழும் செல்லும். செல்வம் எப்பொழுதும் ஒரே இடத்தில் நிலைத்து நிற்காது. ஆகவே செல்வம் உள்ளபொழுதே பல்லோருடன் பகுத்துண்டு வாழ்தலே சிறப்பாகும். புகழுக்கு உரியன செய்யாமல், நெருங்கிய உறவினர் துயரைத் துடைக்காமல், பிறருக்குச் சிறிதும் ஈயாமல், தானும் உண்ணாமல் இருப்பவன் தான் பெற்ற செல்வத்தின் பயன்பெற்றவன் இல்லை. அதனை அவன் வீணே வைத்து இழந்தான் என்றே எண்ணப்படுவான். இவ்வாறு செல்வத்தின தன்மை அறியாத கீழ்மக்களின் செல்வம் எவ்வளவு தான் பெருகி இருந்தாலும், மேகத்தில் தோன்றி மிகவும் ஒளிவிட்டு விரைவிலேயே மறைந்து விடும் மின்னல் போல், யாருக்கும் எப்பயனும் இன்றிக் கேட்டு ஒழியும்.[2]

இளமை நிலையாமை

நாம் என்றும் இளமையுடன் இருப்போம் என்று எண்ணாமல் மூப்பு விரைவில் வரும் என்று எண்ணி இளமையைப் பெருமையாக அறிவுடையவர்கள் எண்ணமாட்டார்கள். இத்தகைய அறிவுடையவர்களுக்கு முதுமையிலும் துன்பம் இல்லை. ஆனால் இலம்னையை என்றும் மாறாத மலையாகக் கருதுவோர், தனது இளமைப் பருவத்தை வீணாகக் கழித்து முதுமையில் வருந்தி ஒடுங்கித் துன்புறுவர். பலத்த காற்றினால் மரத்தில் கனியிருக்க, காய் உதிர்ந்து விழுதலும் உண்டு. அதையெண்ணி இளமையிலேயே நல்லனவற்றைச் செய்தல் வேண்டும். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று சோம்பித் திரிந்தவர்கள் முதுமையில் துன்புறுவர். தன்னைப் பலி செய்ய வரும் பூசாரியின் ஒரு கையிலுள்ள கொலைவாளை உணராமல், மறுகையில் உள்ள தளிரைத் தன நுனிவாயால் கடித்து மகிழும் ஆட்டைப்போல் பின்னால் தமக்கு நிகழக்கூடியதை எண்ணாமல், நல்லதை செய்யாமல் தனது வாழ்நாளைக் கழித்தவர்கள் பிற்காலத்தில் பல இன்னல்களை அனுபவிப்பார்கள்.[3]

யாக்கை நிலையாமை

மலைமீது தோன்றும் சந்திரனைப் போன்ற குடையின் கீழ் இருந்து ஆணை செலுத்தி நாட்டை ஆண்ட அரசரும் இவ்வுலகில் நிலைத்திருக்கவில்லை. வானத்தில் தோன்றி மறையும் மேகம் போல் இவ்வுடல் தோன்றி, விரைவில் மறைந்து விடும். புல் நுனியில் உள்ள நீர்த்துளி பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைதல் போல்

நின்றான், சென்றான், இருந்தான் எனப் பேசிக்கொண்டிருக்கும் போதே சுற்றமெல்லாம் அழுது அலறும்படி உடலைவிட்டு உயிர் மறைந்து போதலை நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். மணப்பந்தலில் எழுப்பப்படும் இசை ஒலியே தீவினையால் மணமகன் இறந்து போக பிணப்பறையாய் ஒலிக்கும். நமது உடல் மழை நீரில் தோன்றும் குமிழி போன்று நிலையில்லாதது. ஆகையால் வாழ் நாள் கழியும் முன் தனக்கும் பிறர்க்கும் பயன் தருவனவற்றை முடிந்தவரை செய்து இவ்வுடலைப் பெற்ற பயனைப் பெறுதலே சிறப்பு ஆகும்.[4]

அறன் வலியுறுத்தல்

வாழ்நாட்கள் கழிந்து கொண்டே இருக்கின்றன என்பதை உணராமல், சூரியன் தினம் உதித்தலைக் கண்டு தன வாழ்நாள் நிலைத்திருக்கின்றது என்று எண்ணி நடப்பது பேதைமையாகும். முப்பிறவியில் நல்ல அறசெயல்கள் ஏதும் செய்யாமல் வீணாக தன் வாழ்நாளைக் கழித்தவர்கள் இப்பிறவியில் வினைப்பயனால் வருந்தி துன்புறுவர். கரும்பிலிருந்து சாறு எடுத்து வெல்லக் கட்டிகளாகிய பின் அதன் சக்கை எரிந்து போவதைக் கண்டு யாரும் வருந்துவதில்லை. அதைப்போன்று இவ்வுடல் நல்ல அறசெயல்களைச் செய்தபின் அழியும் போது துன்புற வேண்டியதில்லை. ஆகையால் மக்கள் யாக்கை பெற்ற பயனைப்பெற இவ்வுடலுக்கு உகந்ததையே செய்து கொண்டிராமல், மறு உலகிற்கு உறுதுணையாக அமையும் அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறது நாலடியார்.[5]

சினம் கொள்ளாமை

கீழோர் தகுதியல்லாதவற்றைக் கூறினாலும் அதை ஒரு பொருட்டாக எண்ணிச் சான்றோர் சினம் கொள்ளமாட்டார்காள். ஆனால் கீழ்மக்களோ பிறர் கூறுவனவற்றைப் பெரிதுபடுத்தி துள்ளிக் குதிப்பர். தவறு கண்டும் சினம் கொள்ளாத வலிமையுடையவரின் பொறுமையே சிறந்ததாகும். கீழ்மக்களின் சினம் எவ்வளவு நாட்கள் ஆனா போதிலும் அதிகமாகிக் கொண்டே இருக்கும்.[6]

ஈகை

மழை போன்று பயன் ஏதிர்பாராமல் எளியவர்க்குக் கொடுக்கும் கொடையே சிறந்த கொடையாகும். பயனை எதிர்ப்பார்த்து கொடுக்கும் கொடை கொடையல்ல. முரசு கொட்டினால், ஊரில் உள்ளவர்களுக்கு மட்டும் கேட்கும், இடி இடித்தால், இடித்த பகுதியில் மட்டும் கேட்கும். ஆனால் நல்லோர் செய்த ஈகையின் பெருமையோ யாவராலும் எப்பகுதியிலும் பேசப்பட்டு எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருக்கும். மூப்பும், நோயும், இறப்பும், எதிரே உள்ளது என்றுணர்ந்து இயன்ற அளவு தினம் தினம் உதவுதலே சிறந்ததாகும்.[7]

கல்வி கற்க வேண்டும்

உடலழகும், உடையழகும், அழகல்ல. கல்வியிம்ன் அழகே உயர்ந்த அழகு என நாலடியார் கூறுகிறது. கல்வி எப்பிறப்பிற்கும் பயன் செய்யும். கொடுத்ததல் குறையாது, உயிர் உள்ளவரை ஒருவர் கற்ற கல்வி அழியாது. கல்வி போன்ற துன்பம் போக்கும் மருந்து எவ்வுலகத்திலும் இல்லை. ஆற்றைக் கடக்கும் பொழுது தோணியை ஓட்டுவன் எந்த இனத்தில் பிறந்தவன் என்று யாரும் ஆராய்வதில்லை. அது போலவே கற்றவர் எந்த இனத்தைச் சார்ந்தவர் என்று பார்க்காமல் எல்லோரும் அவருடன் சென்று தம் அறிவை பெருக்கி கொள்வர். இதிலிருந்து கல்வியின் சிறப்பு தெரியவருகிறது. ஆகவே கல்வி கற்க வேண்டும் என்கிறது நாலடியார்.[8]

பெரியோரை மதிக்க வேண்டும்

தன்னை போன்ற பெருமையுடையவர் யாரும் இல்லை என்று செருக்கு கொண்டு திரியாமல் அறநெறி போற்றும் சான்றோரைத் தன்னைவிட பெரியோராக கருதி அவர்களுடன் நட்பு கொள்வதே சிறந்ததாகும். நிழல் தரும் மரம் தன்னிடம் வந்த யாவருக்கும் பேதமின்றி நிழலைத்தரும். அதுபோன்று பெரியோர்களிடம் யார் வேண்டுமானாலும் நெருங்கிப் பழகி அப்பெரியோரின் நட்பை பெற்று கொள்ளலாம். எல்லோருக்கும் பணிதலும், கற்றுணர்ந்து நடத்தலும் பெரியோர்களின் பண்பாகும்.[9]

ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும்

நன்கு பழகி இருந்தும் பாகனையே கொல்லும் யானையின் தன்னமையை ஒத்தவர்களின் நட்பை விடுதல் வேண்டும். ஈட்டியால் குத்தியபோதும் வாலைக் குழைத்து நிற்கும் நாயைப் போன்றவரின் நட்பை விடாது பற்றிக் கொள்ளவேண்டும். நண்பர்களை ஆராய்ந்து நல்லவர்களோடு நட்பு கொண்டு பிரியாது இருப்பதே பெருமையாகும்.[10]

நல்ல மனைவிக்குரிய இலக்கணம்

எவ்வளவு செல்வமும் வசதியும் பெற்றிருந்த போதிலும் நல்ல மனைவி இல்லாத இல்லம், வாழ இயலாத காடு போன்றதேயாகும். அடங்கி நடந்து, இன்சொல் பேசி, பணிவிடை செய்தலுடன் நல்ல மனைவி கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். கணவனை எதிர்ப்பவள் எமனை ஒப்பாள். நேரத்தோடு வேலைச் செய்யாதவள் நோயை ஒப்பாள். சமைத்ததைக் கணவனுக்கு கொடுத்து மகிழாதவன் பேயை ஒப்பாள். இம்மூன்று வகை மனைவியரும் கணவனைக் கொல்லும் கருவிகள் எனக் கருதப்படுவர்.

செல்வமும், பெருமையும் உடையவளாயினும், கணவனைத் தவிர வேறு ஆண்கள் தன் பின்னால் வந்து நிற்கமுடியாத ஒழுக்கமுடையவளே நல்ல வாழ்க்கைத் துணையாகும். நீரைக் குடித்தே வாழ வேண்டிய வறுமை வந்த போதும் நெறி தவறாமல் இன்சொல் பேசி கணவனை மகிழ்விப்பவளே பெருமைக்குரியவள். நாற்பக்கமும் இடிந்து மேற்பக்கமும் ஒழுகும் வீடாக இருந்தாலும் கற்புடைய மனைவி இருந்தால் அது நல்ல வீடேயாகும்.

கண்ணுக்கினியவளாய் கணவன் மீது அன்பு நீங்காதவளாய், அச்சமும், நாணமும், நிறைந்தவளாய், கணவனுடன் இருந்து பிரியாது வாழ்பவளே சிறந்த மனைவியாவாள். [11]

முடிவுரை

இந்த நாலடியார் என்ற நூலும் மூலம் தமிழ்நாட்டில் கி.பி 7 – ஆம் நூற்றாண்டில் நிலவிய மக்களின் வாழ்வியல் நெறிகளை தெரிந்துக் கொள்கிறோம். மேலும் இந்நூல் அக்காலக்கட்டத்தில் நிலவிய நிலையாமை பற்றி தெளிவுபடுத்துகிறது. இவற்றை உள்ளடக்கிய இந்நூல் தமிழக வரலாற்றை எழுதுவதற்கு பெரிதும் துணைபுரிகிறது. இலக்கியத்தால் வரலாறும், வரலாற்றால் இலக்கியமும் தெளிவு பெறுகிறது என்று என்னும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. அ. சுகுமாரன், நாலடியார் பாதை, ப.3.
2. நாலடியார், பா.2,5,6,7,8,9.

3. நாலடியார், பா.11,12,14,15,18,20.
4. புலியூர்க்கேசிகன், நாலடியார் தெளிவுரை, பா. 21,22,23,27,39,30.
5. நாலடியார், பா.37,38,39,40.
6. நாலடியார், பா.61,63,64,66,67,70.
7. ஜெ.ஸ்ரீசந்திரன், நாலடியார் மூலமும் தெளிவுரையும், 131,133,134,135,136,138,139.
8. நாலடியார், பா.141,142,143,145,147,148,150.
9. நாலடியார், பா.171,172,175,177,178,180.
10. எஸ். முத்துரத்னம், நாலடியார் உரைவளம், பா.233,234,236,238.
11. நாலடியார், பா.371,372,373,374,380.

சோழர்குல மாணிக்கம் - செம்பியன்மாதேவி

முனைவர் செ. கற்பகம், உதவிப்பேராசிரியர், இசைத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

சோழ மாளிகைகளிலே செம்பியன்மாதேவி வசித்த மாளிகை நடுநாயகமாக இருந்தது. அதன் சபாமண்டபத்தில், பொன்னால் செய்த நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் அந்த பெருமூதாட்டி அமர்ந்திருந்தார். காரைக்காலம்மையார் திலகவதியார் முதலான பரமசிவ பக்தர்களின் வழித்தோன்றிய அப்பெண் வெண்பட்டாடை உடுத்தி, விபூதியும், ருத்ராட்ச மாலையும் தரித்து, வேறு எவ்வித ஆபரணங்களும் பூணாமல், அளவற்ற செல்வங்களுக்கிடையில் அஷ்ட ஐசுவரியங்களுக்கு மத்தியில் வைராக்கிய சிலையாக வாழமுடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள். தலையில் மணிமகுடம் வேறு ஆபரணங்கள் அணியாதிருந்த போதிலும் அவருடைய கம்பீரத் தோற்றமும் சுயம்பிரகாசமான முகமும் அரசகுலத்தில் பிறந்து அரச குலத்தில் புகுந்து அரசர்க்கரசி என்பதைப் புலப்படுத்தின. சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனைபேரும் விதிவிலக்கின்றி இந்தப் பெருமூதாட்டியைத் தெய்வமாகப் பாராட்டிக் கொண்டாடி அவருடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் சொல்லாமல் நடந்து வந்ததில் யாதொரு வியப்பும் இல்லை என்றே நினைக்கத்தோன்றும் என்று செம்பியன் மாதேவியின் சிறப்பினை பொன்னியின் செல்வன் குறிப்பிடுகின்றது. ***(பொன்னியின் செல்வன் பாகம் I. 43. பழையாறை, ப.11)***

தோற்றம்

தமிழக வரலாற்றில், பண்டைச் சோழரின் மரபு வழியில் புதிய வரலாற்றினைத் தோற்றுவித்த பெருவீரன் பரகேசரி விசயாலய சோழன் ஆவான். இம்மன்னன் பழையாறைச் சோழர் மரபில் வந்தவனாக, கி.பி.846ல் முத்தரைய மன்னர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி புதிய சோழர் மரபினை நிறுவினான். பரகேசரி முதல் பராந்தகன் கி.பி.907இல் அரியணையேறி நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். இம்மன்னன் சிவபக்தியிற் சிறந்திருந்ததுடன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து பொன்னம்பலமாகச் செய்தான். இப்பேரரசனுக்குரிய மனைவியருள் சேரமன்னன் மகள் கோக்கிழானடிகள் பட்டத்தரசியாக இருந்தாள். பராந்தகனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயம், உத்தமசீலி என்ற நான்கு புதல்வரும், வீரமாதேவி, அனுபமா என்ற இரண்டு புதல்வியரும் இருந்தனர், முதல் மகனான இராசாதித்தன் தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே தக்கோலத்தில் நிகழ்ந்த இராட்டிரகூடர் போரில் இறந்ததால் இரண்டாவது மகன் கண்டராதித்தன் பராந்தகனுக்குப் பின்னர் அரியணை ஏறினான். இம்மன்னனின் பட்டத்தரசியாகவும் பராந்தகனது மருமகளுமாக அமைந்தவரே செம்பியன்மாதேவியாவார்.

கண்டராதித்தன்

கண்டராதித்த சோழன், இராசகேசரி என்ற பட்டப் பெயருடன் கி.பி.953ல் முடிசூட்டப் பெற்றான். சிறந்த சிவ பக்தனாகவும் சிவனடியாராகவும் திகழ்ந்த இம்மன்னன் சிதம்பரத்தைப் புகழ்ந்து திருவிசைப்பா பாடிய நாயன்மாருள் ஒருவனாகவும் விளங்கினான். இவனது ஆட்சிக்காலம் ஏறத்தாழ மூன்றாண்டுகளேயாயினும் திருமழபாடிக்கு மேற்கே கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரினை நிறுவிப் புகழ் பெற்றான். (Ins.78 on 1920) இவன் இரு மனைவியரை மணந்தவனென்பது கல்வெட்டுகளால் புலனாகிறது. ***(தெ.இ.க.மடலம்22, பகுதி1, எண்.108, தெ.இ.க.மடலம் 4, எண். 543)*** இவ்வரசியார் வீரநாரணி, செம்பியன்மாதேவி என்போராவர்.

பட்டத்தரசி

முதல் மனைவி வீரநாரணி கண்டராதித்தன் அரசுரிமை பெறுவதற்கு முன்னரே இறந்தமையால் செம்பியன்மாதேவி பட்டத்தரசியாகத் திகழ்ந்தார். இவ்வம்மையார் மழநாட்டுச் சிற்றரசன் ஒருவன் மகள் என்பதை, மழவரையார் மகளார் ஸ்ரீகண்டராதித்தர் பெருமாள் தேவியார் செம்பியன்மாதேவியார் என்று தென்னிந்திய கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது *(S.I.I. Vol III, No.141).*

கண்டராதித்த சோழனின் தாயார்களாக விளங்கியவருள் பராந்தகன் பட்டத்தரசியார் கோக்கிழானடிகளும் பழுவேட்டரையர், மகள் ஒருத்தியும் சேரர் குலத்தவராகத் திகழ்ந்தமையால் பராந்தகன் தன் மகனுக்கு அவர் வழியே மழவர் குலத்தில் பெண் கொண்டிருப்பதை அறியமுடிகின்றது. இவ்வம்மையார் சோழமன்னனை மணந்த சிறப்பினாலேயே செம்பியன்மாதேவி (செம்பியன் - சோழன்) எனப்பெயர் பெற்றுள்ளார்.

மக்கட்பேறு

கண்டராதித்தனுக்குப் பல ஆண்டுகள் மகட்பேறின்றி சிவதொண்டின் பயனாகச் செம்பியன்மாதேவி ஒரு தவப் புதல்வனைப் பெற்றெடுத்தாள். அவனே மதுராந்தகன் உத்தமசோழனாவான். மதுராந்தகன் சிறுவனாக இருந்தபோதே கண்டராதித்தன் கி.பி.957இல் இயற்கை எய்தினான். தன் இளம் புதல்வனைப் பாதுகாத்து வளர்க்கும் கடமையுடன் செம்பியன்மாதேவியார் சிவஞானப் பெருமகளாக வாழ்ந்தார். இவர் தனது மாமனார் பராந்தக சோழரைப் போலவே திருக்கோயில்கட்கு அறச்செயல்கள் பல செய்ய முற்பட்டதால் "மாதேவடிகள் ஸ்ரீ செம்பியன்மாதேவியார்" என்று புகழப் பெற்றுள்ளார்.

இவ்வம்மையாரைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டுகளில் "மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார்" என்பதுடன், பிற சோழ இளவரசியார்க்கு அமையாத சிறப்பாக "கண்டன் மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தமசோழ தேவனாரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியா பராந்தக மாதேவடிகள் ஸ்ரீ செம்பியன் மாதேவியார்" என்று குறிக்கப் பெறுதலிலிருந்தும், "ஸ்ரீ உத்தமசோழ தேவரை திருவயிறு வாய்த்த ஸ்ரீ செம்பியன்மாதேவிப் பிராட்டியார்" என்பதிலிருந்து மதுராந்தகன் உத்தமசோழனைப் பெற்றுத் திகழ்ந்த அருமையினை கல்வெட்டுகள் பாராட்டுகின்றன.

ஆறு சோழ பேரரசர்களைக் கண்ட மாதேவி

இவ்வம்மையார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்திருந்தார். இவர் காலத்தில் சோழப் பேரரசை ஏற்று நடத்திய மன்னர்கள்

1. மாமனார் - முதலாம் பராந்தக சோழன்
2. கணவர் - கண்டராதித்த சோழன்
3. கொழுந்தன் - அரிஞ்சய சோழன்
4. கொழுந்தன் மகன் - இரண்டாம் பராந்தக சுந்தரசோழன்
5. மகன் - உத்தமசோழன்
6. கொழுந்தன் பேரன் - இராசராசன் ஆகியோர்

இத்தகு புகழ்பெற்ற பெருவேந்தர்களின் ஆட்சியைக் கண்டுகளித்த பெருமையுடன் முதல் இராசேந்திரனையும் காளைப்பருவம் வரை வளர்த்தார். இவ்வரசர்களால் மேன்மையுடன் பாராட்டப் பெற்றவராக பெருமூதாட்டியார் செம்பியன்மாதேவி திகழ்ந்தார். இவர் நிலவுலகில் வாழ்ந்திருந்த காலம் கி.பி.910-1001க்கு மேல் எனக் கொள்ளலாம்.

இவ்வம்மையாரது நீண்டகால சைவ சமய நல்லறத் திருப்பணி வாழ்க்கையே, பின் தோன்றிய சோழ மன்னரும், அரசியரும் பெருங்கோயில்களைக் கட்டுவதற்கும் நல்லறங்கள் பல செய்வதற்கும் ஊக்கமளித்தது எனலாம்.

மருமகள்கள்

இவ்வம்மையார் தன் மகன் உத்தமசோழனுக்குத் தக்க பருவத்தில் திருபுவனமாதேவி என்பாரைத் திருமணம் செய்வித்தார். அரசச் சுற்றமும், அரசியல் சுற்றமுமாக விளங்கிய சோழர், பாண்டியர், மழவரையார். இருங்கோவேள், விழுப்பரையர், பழுவேட்டரையர் ஆகியோரிடத்து செம்பியன் மாதேவியின் தம் மகனுக்குப் பெண் கொண்டுள்ளமை இவரது அரசியல் முன்னேற்பாடான நுண்ணறிவைப் புலப்படுத்துகின்றது. மருமகளார் யாவரும் மாமியாரிடத்துப் பெரிதும் பேரன்புடனும் மரியாதையுடனும் இருந்தனர் என்பதை செம்பியன்மாதேவி திருக்கயிலாயசத்திலுள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது.

உத்தமசோழன் 17 மனைவியரை மணந்திருந்தார். அவர்கள் கோயில்களுக்குக் கொடைகள் வழங்கியதோடு மட்டுமின்றி தன் மாமியார் பிறந்த நாளான சித்திரை மாதக் கேட்டை நட்சத்திர நாளன்று அவருடைய பிறந்த நாளைச் செம்பியன் மாதேவி கோயிலில் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். பல்வேறு பூஜை வழிபாடுகளை நடத்தவும், பிராமணர்களுக்கும், அடியார்களுக்கும் திருவமுது படைக்கவும் எனப் பல்வேறு தேவைகளுக்கு விலைக் கொடுத்து நிலங்கள் வாங்கிக் கொடையாகக் கொடுத்துள்ளனர்.

கற்றளி அமைத்தல்

இவரின் மகன் உத்தமசோழனது ஆட்சியின் ஏழாம் ஆண்டில் (கி.பி.977இல்) தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநல்லம் என்னும் கோனேரிராசபுரத்தில் செங்கற்களால் கட்டப் பெற்றிருந்த பெருங்கோயிலைக் கற்றளியாக எடுப்பித்து அக்கோயிலுக்கு ஸ்ரீகண்டராதித்தன் என்று பெயரிட்டு, அக்கோயிலில் தம் கணவர் கண்டராதித்தன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்வதுபோல் சிற்பம் அமைத்து வழிபட்டு மன நிறைவடைந்துள்ளார். *(Vol-III Part III Ins146)* மற்றொரு கல்வெட்டு கோயிலில் அறச்சாலையை நிறுவியுள்ளதைக் குறிக்கின்றது.

ஊரும் பேரும்

இவ்வம்மையார் தம் பெயரால் அமைத்த ஊர் செம்பியன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்பதாகும். இவ்வூரில் ஸ்ரீ கயிலாயம் என்ற பெயருடைய திருக்கோயிலில் புதிய கற்றளி அமைத்தார். இவ்வூரும் கோயிலும் உத்தமசோழன் ஆட்சியில் கி.பி.981க்கு முன்னர் அமைக்கப் பட்டதாகும். செங்கல்லில் இருந்த பழைய சிவன்கோயிலை கருங்கற்களில் அமைத்து திருப்பணி செய்தவர். இச்சிறப்பினாலேயே முதல் இராசேந்திர சோழன் இக்கோயிலில் கி.பி.1019இல் செம்பியன் மாதேவியாரின் படிமத்தினை உருவாக்கி, நாள் வழிபாட்டிற்கென வருவாய் உடைய நிலங்களை ஊர்ச் சபையாரிடம் அளித்துள்ளதை கோயில் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. *(481 of 1925)*

இக்கோயிலின் பெருமண்டபம் செம்பியன்மாதேவியார் பெரியமண்டபம் என்று பெயர் பெற்றது. இம்மண்டபத்திலேயே திங்கள்தோறும் செம்பியன்மாதேவி சதுர்வேதிமங்கலத்து ஊர்ச்சபை கூடும். மண்டபத்தில் கூடிய சபை தர்மாசனம் (நீதிநெறி அவைக்களம்) என்று பெயர் பெறும். இவ்வழியே வானவன்மாதேவி, திருபுவனமாதேவி போன்ற ஊர்ப்பெயர்கள் சோழநாட்டில் அமைந்துள்ளன.

ஆதுலர் சாலை

செம்பியன்மாதேவியார் தாமமைத்த செம்பியன்மாதேவியெனும் இவ்வூரில் பொதுமக்களுக்கென மருத்துவசாலையொன்று அமைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. (கல்வெட்டுகளில் மருத்துவசாலை ஆதுலர் சாலை என்று வழங்கப் பெறும்.

பிறந்தநாள் பெருவிழா

செம்பியன்மாதேவியார் சித்தரைக்கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர். அதனால் அருமொழி அரிஞ்சகை பிராட்டியாரும் (அரிஞ்சய சோழனின் பட்டத்தரசியார்) குந்தவையாரும் (இராசராசனின் தமக்கை) 220கழஞ்சு பொன்னைச் செம்பியன்மாதேவி பிறந்தநாள் விழாவிற்காகக் கோயிலுக்கு அளித்துள்ளனர். மேலும், அவரின் மருமகள் திரிபுவனமாதேவியார் 100 பொற்காசுகளும், மற்ற மருமகள் எழுவரும் விழாவிற்கு நிபந்தமாக நிலங்களும், பொற்காசுகளும் அளித்துள்ளமை கல்வெட்டுகளின் வாயிலாகப் புலப்படுகின்றது. *(490-96 of 1925)*

எடுப்பித்த கற்றளிகள்

செம்பியன்மாதேவியார் 10 பழங்கோயில்களுக்குக் கருங்கல் திருப்பணி (கற்றளி) செய்துள்ளார். அவை திருநல்லம், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), திருவாரூர் அரநெறி திருமணஞ்சேரி தென்குரங்காடுதுறை, திருக்கோடிகா, ஆநாங்கூர், திருத்துருந்தி (குத்தாலம்) திருவக்கரை, திருச்சேலூர் ஆகும்.

அறப்பணிகள்

இவ்வம்மையார் தமிழகத்தில் அமைந்த சிவத்தலங்கள் பலவற்றிற்கு நன்கொடைகளைச் செய்துள்ளார்.

1. காட்டுமன்னார்குடி – நந்தாவிளக்கு
2. திருவேள்விக்குடி – வெள்ளிக்கலசம்
3. திருமழபாடி – நிலம்கொடை
4. தேவராயன்பேட்டை – நிலம் கொடை
5. கோபுரப்பட்டி – நந்தாவிளக்கு
6. திருமுல்லைவாயில் – விளக்கெரிக்க நிலம்
7. திருவேத்தூர் – ஆடுகள் வழங்கல்
8. கொல்லிமலை அறப்பள்ளி ஆழ்வார்க்கு – நிலக்கொடை

போன்றவை தம் அருமை மகனார் உத்தம சோழனின் பிறப்பின் சிறப்பிற்காக வழங்கினார்.

முதல் கல்வெட்டு (கி.பி.941)

செம்பியன்மாதேவிப் பற்றிய முதல் குறிப்பு திருச்சி அருகே உள்ள உய்யக்கொண்டான் திருமலை சிவன்கோயிலில் முதலாம் பராந்தகனின் 34ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. உய்யக் கொண்டான் திருமலைக் கோயிலுக்கு இவ்வம்மையார் நந்தாவிளக்கு எரிக்க 90 ஆடுகள் வழங்கியுள்ளார். ***(96/892, தெ.இ.க.மடலம் 4, எண் 543)***

இக்கல்வெட்டில் கண்டராதித்த தேவர் தேவியார் மழபெருமாள் மகளார் பிராந்தகன் மாதேவடிகளார் என்று குறிப்பிடுகிறது. இவருடைய தந்தை "மழபெருமாள்" என்று குறிப்பிடுவதால், இப்பெண்மணி மழவர் குலத்தில் பிறந்தவர் என்பதும், "மாதேவடிகள்" என்பது இவருக்கு வைக்கப்பட்ட பெயர் என்பதும், கணவரின் பெயரையும் சேர்த்து "பிராந்தகன் மாதேவடிகள்" என அழைக்கப்பட்டார் என்றும் அறியமுடிகின்றது.

கடைசிக் கல்வெட்டு (கி.பி.1001)

இவ்வம்மையார் பற்றிய கடைசிக் கல்வெட்டு திருவக்கரை சிவன் கோயிலில் எழுதப்பட்டுள்ள முதலாம் இராஜராஜனின் 16ஆம் ஆண்டு கல்வெட்டு ஆகும். கி.பி.1001இல் எழுதப்பட்ட இக்கல்வெட்டு இவர் பெயரையும் இவர் கணவர் பெயரையும், இவர் மகன் உத்தமசோழன் பெயரையும் இவர் திருவக்கரைக் கோயிலைக் கருங்கல்லால் கட்டியது பற்றியும் கூறுகிறது.

செம்பியன்மாதேவி கலைப்பாணி

இவருடைய காலத்தில் தனக்கென ஒரு புதிய கலைப்பாணியை கோயில் கட்டுமானப் பணியில் இவர் பின்பற்றியுள்ளார். இவருக்கு முன் அமைக்கப்பட்ட கோயில் கருவறை, அர்த்த மண்டப வெளிச்சுவர்களில் 2,3 தேவகோஷ்டங்கள் அமைக்கப்படும். அதனை மாற்றி கருவறை அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய இடங்களில் கூடுதலான எண்ணிக்கையில் தேவகோஷ்டங்கள் அமைத்து சிவபெருமானின் பல்வேறு திருக்கோலங்களை அழகிய சிற்பங்களாக வடித்து அவற்றில் நிறுவச் செய்துள்ளார். புதிய கோயில்களில் மட்டுமின்றி ஏற்கனவே கட்டப்பட்டிருந்த பழைய கோயில்களில் அர்த்த மண்டப வெளிச்சுவர்களில் புதிய மாடங்களைக் குடைந்து எடுத்து அதில் சிற்பங்களை அமைத்துள்ளார். இவ்வாறு அதிக எண்ணிக்கையில் மாடங்கள் அமைத்து சிற்பங்கள் அமைக்கப்படும் கலைப்பாணியே "செம்பியன்மாதேவி கலைப்பாணி" என்று கோயிற்கலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவர் உருவாக்கிய அழகிய செப்புத் திருமேனிகள் அதிகமான ஆடை ஆபரணங்கள் இன்றி புன்சிரிப்பு தோன்றும் முகத்துடன் வடிக்கப்பட்டிருக்கும். இறைவித் திருமேனிகள் அழகிய முகபாவம், இடையழகு, மெலிந்த தேகம் உடையனவாக வார்க்கப்பட்டுள்ளன.

செம்பியன்மாதேவியின் பிற சிறப்புகள்

செம்பியன்மாதேவியின் பெயரில் செம்பியன்மாதேவி நல்லூர் (இன்றைய செம்பியக்குடி) என்ற ஊரும், உத்தமசோழன் காலத்தில் உருவாக்கப்பட்ட செம்பியன்மாதேவிப் பேரேரி என்னும் ஏரியும், செம்பியன்மாதேவி மரக்கால், செம்பியன் மாதேவன் நாழி என்ற அளவைகளும், செம்பியன் மாதேவி வயக்கல் (நிலம்) வீதி, சேரி ஆகியன உள்ளன. இவற்றுடன் மழபாடியில் வாழ்ந்த அரசியலதிகாரிகளும் மழவரையர் வழி மங்கையரின் பெயர்களும் செம்பியன்மாதேவியார் பெயருடன் சேர்ந்தே வழங்கப்பட்டன.

இத்தகு சிறப்புப் பெற்ற கண்டராதித்த சோழருக்கும் செம்பியன் மாதேவியாருக்கும் 25.04.2016 சித்திரைக்கேட்டை நட்சத்திரத்தில் சிலை அமைக்கப்பட்டது. செம்பியன் மாதேவியின் சிறப்பினை வெளிக்கொணர 22.03.2014 அன்று செம்பியக்குடியில் செம்பியன்மாதேவி விழாவில் புலவர் க.மருதமுத்து எழுதிய "செம்பியன் மாதேவியார்" என்ற தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியல் களஞ்சியக் கட்டுரை வெளியிடப்பட்டது.

சோழர் வரலாற்றில் ஆறு சோழப் பேரரசை வழிநடத்தி, பெண்களும் கோயில் அறச்செயல்களை செய்ய வழிகாட்டி, சோழர் குல மாணிக்கமான செம்பியன்மாதேவி சோழர் வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளார் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

தஞ்சைக் கலைக்கூடம் - அரிய சிற்பங்கள்

கனிமொழி, முனைவர் பட்ட ஆய்வாளர், சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

முன்னுரை

நீர் வளமும், நிலவளமும் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில் கலை வளமும் சிறந்து விளங்குகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள இக்கலைக் கூடத்தில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய எங்கும் காணக்கிடைக்காத கலை நுட்பம் பொருந்திய அரிய தெய்வீக கற்சிலைகளும் செப்புப் படிமங்களும் உள்ளது. இவை நமது பண்டைய கலாச்சாரத்தை பறைசாற்றுகின்றன.

பண்டைத் தமிழர்கள் கல்லிலும், செம்பிலும் நமது வழிபடு மூர்த்தங்களை அமைத்து வழிபட்டனர். அவ்வாறு நம் சிற்பக் கலைஞர்கள் உருவாக்கிய கற்படிமங்கள், செப்புத் திருமேனிகள் கடவுளின் அருள் வடிவங்களை வெளிப்படுத்தி நமக்கு ஆன்மீக உணர்வுகளை செப்புகின்றன[1].

பண்டைக் காலத்தில் வாழ்ந்த சைவ, வைணவ அடியார்களும், தமிழ் பெரியார்களும் சைவ, வைணவ இறை தத்துவத்தையும், ஆடவல்லான் தத்துவத்தையும் விவரித்து தங்கள் பாடல்களில் கூறியுள்ளனர்[2]. அவர்களின் பாடல்களில் பொதிந்துள்ள மெய்ப்பொருளையும் அழகையும் திரட்டி இறை உணர்வோடு சிலைகளில் சிற்பிகள் வடித்துக் காட்டியுள்ளனர்[3].

சிற்பங்களும் தஞ்சையை ஆண்ட மன்னர்களும்

தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ள அரிய கற்சிலைகளும், செப்புத் திருமேனிகளும் பெரும்பாலும் தஞைசயை ஆண்ட புகழ்மிக்க சோழ மன்னர்கள் காலத்தவை. சில விஜயநகர பரம்பரையில் வந்த தெலுங்கு நாயக்க மன்னர்கள் காலத்தவை. எஞ்சிய சில மராட்டிய மன்னர்கள் காலத்தவை. தமிழ் நாட்டை சோழ மன்னர்கள் ஆண்ட சுமார் நானூறு ஆண்டு காலம் பொற்காலம் எனக் கூறப்படுகிறது[4].

கலைக்கூடத்தின் பிரிவுகள்

இக்கலைக் கூடத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. நுழைவாயிலில் உள்ள பூஜா மண்டபம், 2. அதற்கு தெற்கே எதிரில் உள்ள கோபுரத்தின் அடிமண்டபம், 3. நாயக்கர் (தர்பன்) கொலு மண்டபம், 4. அதனை அடுத்த விரிவாக்கப்பகுதி[5].

பூஜா மண்டபம்

பூஜா மண்டபத்தில் செந்தலை, திருவலஞ்சுழி, தஞ்சை, தாராசுரம், பட்டீஸ்வரம் முதலிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அற்புதமான கற்சிலைகள் அழகிய மேடைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன[6].

கோபுர அடி மண்டபம்

கோபுர அடிமண்டபத்தில் தாராசுரம், மதசுரம், தஞ்சை முதலிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற எழில் மிகு கற்சிலைகள் தகுந்த மேடையில் வைக்கப்பட்டுள்ளன[7].

பிரம்மா (சிலை எண்16)

இக்கலைக் கூடத்தின் உள்ளே நுழைந்ததும் நமக்கு காட்சியளிப்பவர் உலக படைப்புத் தொழிலின் அதிபதியான பிரம்மதேவர் இந்த நான்முகக் கடவுளே இக்கலைக்கூடம்[8] அமைவதற்கான சிருஷ்டி கர்த்தா ஆவார்.

நர்த்தன விநாயகர் (சிலை எண்-8)

நம் நாட்டு மக்கள் எந்தக் காரியத்தை தொடங்கினாலும் அது முட்டின்றி முடிய விநாயகர் வழிபாடு செய்வது உண்டு. இவ்வரை கணேசர்[9] என்றும் பிள்ளையார் என்றும், கணபதி என்றும் கூறுகின்றோம் நீலமேனி நெடியோன்.

விஷ்னு: சிலை எண்.7.

இதன் சிற்பி இடைக்கால சோழ மன்னர்கள் காலத்தில் (கி.பி 9ஆம் நூற்றாண்டு) பல்லவர் கால அமைப்பில் இச்சிற்பததை வடித்துள்ளர்[10].

கஜசம்காரமூர்த்தி: சிலை எண்.19

இந்திய சிற்பக் கலையை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். 1. சிற்பத்தின் வரலாற்றுப் பின்னணி, 2. கலை நுணுக்கம், 3. உணர்ச்சி பாவம். இம்மூன்றையும் இச்சிற்பத்தில் அழகுற வெளிப்படுத்தியிருக்கிறார். சோழர் காலத்திய சிற்பி கி.பி.12ஆம் நூற்றாண்டில் மேற்கண்ட சிற்பத்தை வடித்துள்ளார்.

திரிபுராந்தகர்: சிலை எண்.28

ஒரு கையில் வில்லும், ஒரு கையில் அம்புமாகச் சர்வ அலங்கார மூர்தியாக சிவன் காட்சி தருகிறார்[11].

துவார பாலகர் : சிலை எண்.27

முதலாம் இராஜராஜன் (கி.பி.1018-1054) வட நாடு நோக்கி படையெடுத்துச் சென்று மேலை காளுக்கிய மன்னனை 1048இல் நடந்த போரில் வென்று அந்த வெற்றியின் சின்னமாக அங்கிருந்து ஒரு அற்புதமான துவாரபாலகர் சிலையை சோழநாட்டிற்கு கொண்டு வந்ததாக ஒரு அற்புதமான வரலாற்றுப் பின்னணியை உடையதாகும்[12].

தெட்சிணாமூர்த்தி: சிலை எண்.21

தெட்சிணாமூர்த்தியார் நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகியவற்றை மடக்காமல் நிமிர்த்தியும், ஆட்காட்டிவிரல், கட்டைவிரல் ஆகியவற்றை இணைத்தும் சின் முத்திரையைக் காட்டுகிறார்[13]. கட்டைவிரல் - பதி (இறைவன்) ஆட்காட்டி விரல் - பசு (உயிர்), நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் முறையே ஆவணம், தண்மம், மாயை என்ற மும்மூலங்களைக் குறிக்கும். இந்தப் பசுவாகிய உயிரானது மும்மூலங்களை சேர்ந்திருக்கும் வரையில் இறைவன் விலகியே இருப்பான். இதை விலக்கி பதியாகிய இறைவனை நாடினால் இறைவன் தானே வந்து ஆட்கொள்கிறான் என்ற உண்மைப் பொருளை உலகுக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது[14].

சிவன்-பார்வதி (சிலை எண்.31)

இந்த அழகிய சிற்பத்தில் சிவனும் பார்வதியும் ஒரே கல்லில் இணைந்த கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளார்கள். முதலில் சிவனுருவை மட்டும் செதுக்கிய சிற்பி எஞ்சி இருந்த இடத்தில் அழகும்[15], கூச்சமும், நாணமும் ஒருங்கே

உருவெடுத்தாற்போல் உமையவளின் அழகிய திருமேணியை இறைவனை ஒட்டி செதுக்கியுள்ளார்.

நாயக்கர் கொலு மண்டபம்

நாயக்கர் கொலு மண்டபத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட அழகிய வேலைப்பாடமைந்த புராதன தெய்வ செப்புத் திருமேணிகள் அழகிய மரப்பபீடங்களில் பாங்குற அமைக்கப்பட்டுள்ளது[16].

விரிவாக்க கூடம்

இக்கூடத்தில் செப்புப் படிமங்களாலான சிற்பங்கள் கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டள்ளன. மேலும் வேளாங்கண்ணி – மாதா கோயில், நாகூர் தர்கா, தஞ்சை பெரிய கோயில் இவை மூன்றும் நன்றாக ஒரே இடத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் ஒற்றுமையை பறைசாற்றும் விதமாக அமைக்கப்பட்டள்ளது. இராஜராஜனின் நூறாவது ஆண்டு விழா முழு உருவ சிலை காண்போர் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது[17].

இக்கலைக் கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சிலைக்கும் அதன் அடி பீடத்தில் சிலையின் பெயர் கிடைத்த இடம் எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்ற விவரங்கள் தெளிவாக ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. இக்கலைக்கூடத்தில் உள்ளே நுழைந்ததும் உள்ள பூஜா மண்டபத்தில் உள்ள சிலைகளின் சிற்பம் சங்கங்களை இப்போ காணலாம்.

தெற்கு கோபுர அடிமண்டபம்

இம்மணடபத்தில் புத்தபிரான், சிவலிங்கம் - சாக்கிய முனிவர்களும், நாராயணி (துர்க்கை) பிட்சாடனரும் ரிஷி பத்தினிகளும், கங்காதரர், அர்த்தநாரீசுவரர் போன்ற சிற்பங்கள் அழகிய வேலைப்படுகளுடன் வரலாற்றுப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது[19].

தெய்வீக செப்புச் சிலைகள்: நாயக்கர் கொலு மண்டபம்

இந்த நாயக்கர் கொலு மண்டபம் கி.பி.16ஆம் நூற்றாண்டில் நாயக்கர் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது. இந்த மண்டபத்திற்குள் சுமார் 100க்கும் மேற்பட்ட தெய்வச் செப்புத் திருமேணிகள் மரப்பீடங்களின் மேல் கண்ணாடி பேழைகளுக்குள் அழகுற காட்சிக்கு வைக்கப்பட்டள்ளத. இச்சிலைகளில் அநேக சிலைகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பூமியில் புதைவுற்றுச் சென்ற 45 ஆண்டுகளுக்கும் முன் கண்டெடுக்கப்பட்டவை. இக்காலக் கட்டதிற்காக இவையாவும் பெறப்பட்வையாகும்[20].

அறந்தாங்கி தாலுக்கா ரெட்டைபாளம் என்னும் ஊரிலிருந்து பூமியில் தோண்டி எடுக்கப்பட்டவை. இந்த சிலைகள், இவை பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இதில் ருக்மணி வேனுகோபாலன், சீதாராமன், சோமஸ்கந்தர், ஆடவல்லான் (நடராஜர்) போன்றோரின் அற்புத சிலைகள்[21] உள்ளன.

கோபுரம்

கலைக்கூடத்தின் தென்புறம் உள்ள படிக்கட்டுகள் வழியாக ஏறிக் கோபுரததின் முதன் தளத்தில் வைக்கப்பட்டிருக்கும் 92 அடி நீளமுள்ள திமிங்கலத்தின் எலும்புக் கூட்டைக் காண சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வருகின்றனர்[21].

26.02.1955இல் தரங்கம்பாடி கடற்கரையில் ஒதுங்கிய இந்த திமிங்கலத்தின் எலும்புக்கூடு பின் இலாக்காவால் கலைக்கூடத்திற்கு இனாமாக அளிக்கப்பட்டன. இதன் மதிப்பிட்ட வயது 400 வருடங்கள் ஆகும்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்த எங்கும் காணக்கிடைக்காத சிற்பச் சிறப்பும், கலை நுட்பமும் கொண்ட அரிய சிற்பங்களைக் கொண்டு காட்சியளிக்கும் இக்கலைக்கூடம்[22] தஞ்சை மாநகரின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

துணைநூற்பட்டியல்

1. கோ. வீரச்சாமி, ***கவின் மிகு தஞ்சைக் கலைக்கூடம்,*** தஞ்சாவூர், 1997, ப.1
2. ***The Art Gallery***, Thanjavur, Fourth Edition, 2009, p.9
3. Thanjavur ***Art Gallery and Museum,*** www. Thanjavur Art Gallery
4. முன்னர் கூறியது, கோ.வீராச்சாமி, ப.3
5. Thanjavur ***Art Gallery 1000 years of Indian History***
6. Rathna Sabhapathy, ***Thanjavur Art Gallery Bronze Sculpture,*** Thanjavur, 2009, p.42
7. ***Images of Thanjavur Art Gallery***, www. Thanjavur
8. ***Images of Thanjavur Art Gallery***, www. Thanjavur
9. ***Thanjavur Art Gallery journeymat***. www. .com.
10. கோ. வீரச்சாமி, ***கவின் மிகு தஞ்சைக் கலைக்கூடம்,*** தஞ்சாவூர், 1997, ப.16
11. ***Thanjavur Art Gallery Tamil Nadu*** www. Thanjavur Art Gallery T.N.com
12. ***Thanjavur Art Gallery and museum***
13. கோ. வீரச்சாமி, கவின் மிகு தஞ்சைக் கலைக்கூடம், தஞ்சாவூர், 1997, ப.73
14. ***Field Work, Indiviudul***
15. ***Thanjavur Art Gallery and museum*** www. Thanjavur Art Gallery
16. கோ. வீரச்சாமி, ***கவின் மிகு தஞ்சைக் கலைக்கூடம்,*** தஞ்சாவூர், 1997, ப.73
17. *மேலது, ப.3*
18. *மேலது, ப.73*
19. *மேலது, ப.14*
20. *மேலது, ப.24*
21. *மேலது, ப.5*
22. *மேலது, ப.9*

எட்டுத்தொகை பெண்பாற் புலவர்களின் புலமைத் (மொழி) திறம்

ம.கிறிஸ்டி பாப்பரசி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 613005.

முன்னுரை

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே . (தொல்.சொல்.640) சொற்கள் அனைத்தும் பொருள் குறித்து வருவனவாகும். ஒரு மனிதன் பயன்படுத்தும் மொழியமைப்பினையும் மொழிப் பயன்பாட்டையும் ஒருங்கிணைத்து நோக்கி அதன் தன்மையினைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இதன் வழியாக அம்மனிதனின் மொழியறிவு, ஆளுமைத்திறன், தனித்திறன், மையப் பொருண்மை. அதை வெளிப்படுத்தும் பாங்கு, எளிமை, தெளிவு, செறிவு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு காலகட்டத்தில் இலக்கியத்திறனையும் ஒருவரின் படைப்பினையும் தெளிவாக ஆய்வதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்க்கும் உதவுகிறது என்பதைப்பற்றி இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

இலக்கியத்தின் நடை

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலைப்படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்று குறிப்பிடுவர். ஒவ்வொரு கால இலக்கியமும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளையம், பழக்க வழக்கங்களையும், பண்பாடு, அரசியல், பொருளியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. ஓர் இலக்கியத்தின் கருத்தமைவு பெரும்பாலும் அது சார்ந்துள்ள சமுதாயத்தையும் அதன் இயக்கத்தையும் பிரதிபலிக்கிறது. சமுதாயத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை மையப் பொருண்மையாக்கி அதன் வழிச் சமுதாயச் சிக்கல்களையும் அவை தோன்றுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான அணுகு முறைகளையும் கதையாக, புதினமாக, கவிதையாக, கட்டுரையாக வடிவமைத்து இலக்கியமாகத் தரப்படுகிறது. இவ்வாறு வெளிப்படும் இலக்கியங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு அமைகின்றன. சிலவற்றிடையே பொதுமையும் ஓரளவிற்குக் காணப்படுகிறது.

சங்கஇலக்கிய மொழிநடை

சங்ககால மக்களின் வாழ்க்கையானது அகவாழ்க்கை, புறவாழ்க்கை என்ற இருநிலைகளில் அமைந்துள்ளது. அக்கால மக்களது அகவாழ்வின் ஒழுக்கப் பண்புகளையும் நெறிமுறைகளையும் அக இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. புறவாழ்க்கையில் நிகழும் போர், வெற்றி, தோல்வி, வீரம், கொடை, புகழ், கல்வி, பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் ஆகியவற்றைப் புற இலக்கியங்கள் விளக்குகின்றன.

சங்கமொழிநடை விளக்கம்

சங்க மொழியானது அதன் அங்கங்களான கருத்தமைவு – மொழியமைப்பு என்ற இரண்டையும் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கம் சங்க இலக்கியம் காட்டும் உண்மைப் பொருளைப் புலபடுத்துவதற்கு ஒருவகையான மொழிநடையைப் பின்பற்றுவதை எடுத்துக்காட்டுகிறது.

நடை விளக்கத்தில் மொழிக்கூறுகள்

ஒரு படைப்பாளியின் மொழியில் ஒலிகள் முதல் உரைக்கோவை வரை இடம் பெறும் கூறுகள் மற்றும் அமைப்புகள் பயன்பாட்டிற்கு ஏற்ப பொருண்மையின் வெளிப்பாட்டிற்கு ஒப்ப, கருத்துப் புலப்பாட்டுத் தன்மைக்கு ஏற்ப அமைவதை முன்பே விளக்கப்பட்டுள்ளது. ஈண்டுச் சங்கபெண்பாற் புலவர்களின் மொழியில் இவையெல்லாம் எவ்வாறு வழங்கிச் சங்க இலக்கியக் கருத்து வெளிப்பாட்டில் பங்கேற்கின்றன என்பது தக்க எடுத்துக்காட்டுத் தந்தும் விளக்கம் தந்தும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மொழியமைப்பின் ஆற்றலுக்கு மொழிக்கூறுகள் மட்டுமே ஆக்கம் தந்துவிடா. அவற்றோடு இணைந்து பங்கேற்கும் நடைஉத்திகளும் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்று விளங்குகின்றன. ஒரு மொழியில் ஒரே தொடரமைப்பினைக் கொண்ட ஒரு வாக்கியம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருகின்றது. இதற்கு அடிப்படையாக அமைவது அவ்வாக்கியம் ஒலிக்கப்படும் முறை மற்றும் அதற்குச் சமுதாயம் கொடுக்கும் சமுதாயப் பொருள் (Social Meaning) போன்றவையாகும்.

அளபெடைச் சொற்கள்

தளைதட்டாமல் இருக்கவும் படிப்பதற்கு இனிமை தரக்கூடியதாக இருப்பதற்கும் அளபெடைச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன எனலாம். ஆங்காங்கே அளபெடைச் சொற்கள் பயின்று வருவதைக் காண முடிகிறது.

"மள்ளர் குழீஇய அசைஇ குக்கூ
மகளிர் தழீஇய குரீஇயினம் என்தூஉ நெஞ்சம்
மெய்உற மரீஇ தரீஇயர்" போன்றவை.

எதிர்மறைச் சொற்கள்

ஒரு கருத்தை மறுத்துச் சொல்வதற்கு எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்படுவதுண்டு. இருமுறை எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தி உடன்பாட்டினை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுவதுண்டு. சில நேரங்களில் எள்ளி நகையாடுவதற்கும் எதிர்மறை பயன்படுத்துவதுண்டு.

நுமக்கரிதாகுவதில்லை
செல்லாது
உண்ணாது
படாது
உதவாது

கூடுநர்ப் பிரியலன்
கொடுநா மொழியிலன்

ஒருபொருள் பலசொற்கள்

ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உண்டு. மது என்ற சொல்லிற்குத் தேறல், கள், மட்டு, நறவு, பிழி, மகிழ், வல்சி போன்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்
சிறிய கள் பெறினே
மகிழ்தரன் மரபின் மட்டே
பிழிமகிழ் வல்சி

போன்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

பலபொருள் ஒரு சொல்

சில இடங்களில் ஒரே சொல் பல பொருளைக் குறிக்க கையாளப்பட்டுள்ளது. 'ஐ' என்ற சொல் தலைவன், அரசன், கொழுநன், நண்பன் என்ற பொருள்களைத் தருகின்றது.

"ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்ஐ" (புறம்.103)

"என்னைக்கு ஊரி∴தன்மை யானும்
என்னைக்கு நாடி∴தன்மை யானும்" (புறம்.387)

"என்ஐ மார்பில் புண்ணும் வெய்ய" (புறம்.323)

இவ்வாறு ஒரே சொல் பல பொருளைத் தருகிறது எனலாம்.

உத்திகள்

ஒருவர் ஒன்றைச் செய்யும்போது பயன்படுத்தும் தொழிற்கலை நுட்பக் கூறுகளே உத்தி எனப்படுகிறது என்கிறார் சிலம்பொலி செல்லப்பன் (1987:19-20).

"பொதுவாகப் படைப்பாளன் தான்கூறவந்த
செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும்
முறையே உத்தி எனலாம்". என்கிறார் ந.பிச்சமுத்து (1982:4).

"ஒரு கலைஞன் தன்துறையில் செவ்விய
வெளியீட்டிற்குப் பயன்கொள்ளும் ஆற்றலும்
ஆக்கமுறையும் உத்தியாகிறது"

என விளக்குகிறார் ச.வே.சுப்பிரமணியன் (1984:6).

சங்க இலக்கியங்களில் பாடியுள்ள பெண்பாற் புலவர்கள் உவமை, உருவகம், வருணனை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

உவமை

அறிந்த பொருளைக் கொண்டு அறியாத பொருளை ஒப்புமைப்படுத்தி விளக்குவது உவமை எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

"வினை பயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்" (தொ.பொ.200).

என்ற நூற்பாவில் உவமையானது வினை, பயன், மெய், உரு என்ற நான்குடன் வரும் என எடுத்துக்காட்டுகிறார். உவமையானது,

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" (தொ.பொ.274)

உயர்ந்த பொருளுடன்தான் உவமிக்க வேண்டும் என்கிறார். அவை,

"சிறப்பே நலனே காதல் வலியொரு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப" (தொ.பொ.275).

என்ற நான்கின் நிலைக்களன்களையும் பெற்றுவரும் என்று சுட்டிக் காட்டுகிறார் தொல்காப்பியர்.

சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் உவமையினை இயற்கைப் பொருட்களோடும், பண்பாட்டோடும், பழமொழியோடும், நடைமுறைப் பழக்கவழக்கங்களோடும் ஒப்புமைப்படுத்திக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். உவமையணியே எல்லா அணிகளுக்கும் தாய் போன்றது. இதிலிருந்து தான் பிற அணிகள் உருவாக்கப்பட்டன எனலாம். சங்க இலக்கியங்களில் உவமைகள் வெறும் சொல்லலங்காரமாக இல்லாமல் கருத்திற்கேற்ப எடுத்தாளப்பட்டுள்ளது.

உருவகம்

உவமிக்கப்படும் பொருள் உவமையாகவும் உவமையாக வருவது பொருளாகவும் வருவதே உருவகம் எனலாம்.

மதிமுகம் - உவமை
முகம்மதி - உருவகம்

"முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே" (அகம்.273)

என்ற பாடல் காதல் நோய் எவ்வாறு வளர்ச்சியடைந்து துன்பப்படுத்துகிறது என விளக்குகிறது.

மார்பில் தோன்றிய	>	நோய்	>	காதல்
அசைவுடை நெஞ்சம்	>	நிலம்		
உயவுத்திரள்	>	செடி		
அம்பல் அம்சினை	>	கிளைகள் பரப்பி		
காதல்	>	தளிர்		
நார் இல்	>	பெருமரம்		
அலர் அரும்பு	>	மலர்		

காதல் என்ற நோய் நெஞ்சாகிய நிலத்தில் செடியாக முளைத்துக் கிளையாகப் பரவித் தளிராகவும் பெருமரமாகவும் வளர்ந்து அலர் எனும் மலராக எல்லோர் பார்வையிலும் / சொற்களிலும் விளங்குகிறது என்று உருவகப்படுத்துகிறார் ஔவையார்.

வருணனை

மனிதன் இயற்கையை வெல்ல முடியாது அதற்கு ஆட்பட்டே வாழ்கிறான். இயற்கை மனிதனின் அறிவியல் வாழ்விற்கு மட்டுமின்றிக் கலைவாழ்விற்கும் காரணமானது. எல்லா உயிரையும் உடன்பிறந்தனவாகக் கொள்ளுதல், இயற்கையில் இறைமையைக் காணுதல் என மனிதனின் ஆன்மீக வாழ்விற்கும் அஃது அடிப்படையாகின்றது.

இலக்கியத்தில் இயற்கையைத்தரும் நிலைகள் பல உள்ளன. அவை இயற்கையை அவ்வாறே காட்டுதல் இயற்கையைச் செயற்கையுடன் கலந்து தருதல், இயற்கையை அழகுறப் புனைதல், இயற்கையில் பல கூறுகளை இணைத்து விளக்குதல் என்பனவாகும்.

இயற்கையினை நுட்பமாகக் காட்சிப்படுத்துதல் அல்லது மேற்கோளாகத் தருதல், செயற்பாடு இல்லாது ஓவியம் போலத் தருதல் அல்லது இயக்கங்கள் புலப்பட அமைத்தல் என இயற்கையை எடுத்துச் சொல்லும் முறையில் வேறுபாடுண்டு இயற்கையை எடுத்து மொழிதல் அல்லது முன்னிலைப்படுத்தி அதனுடன் நேரடியாக அழைத்துப் பேசுதல், அல்லது இயற்கைப் பொருளே தன்னைப் பற்றிக் கூறுவதாக அமைத்தல் எனவும் வகைப்படுத்தலாம்.

இலக்கியத்தின் இயல்பு, தகுதி, தேவை போன்றவற்றிற்கு ஏற்ப இயற்கையைப் பயன்படுத்துவதில் வேறுபாடு ஏற்படலாம். பின்புல வருனை, அறிவுறுத்துதல், உள்ளுறை, இறைச்சி, குறியீடு ஆகிய பல்வேறு உத்திகளில் இயற்கை கையாளப் படுகிறது.

"பல்பூங் கானல்முள் இலைத் தாழை
சோறு சொரிகுடையின் கூம்புமுகை அவிழ" (நற்.335).

எனவும்,

"கானே பூமலர்கஞலிய பொழில் அகந்தோறும்
தாம்அமர் துணையொடு வண்டு இமிழ்க்கும்மே" (நற்.348).

எனவும் நெய்தல் நிலத்தைக் குறிப்பிடும்போது தாழை மடலின் தன்மை, பூ, மொட்டு, கானல், பொழில், வண்டுகள் ஆகியவற்றை விவரித்தும் விளக்கப்படுகிறது.

கருத்து வெளிப்பாடு

கருத்து வெளிப்பாட்டிற்கு மொழி முதன்மையான கருவி எனலாம். ஒருவர் எழுதியுள்ள கருத்துகளைப் படிப்போர் உணர்ந்து கொள்ள முடிகிறது. அதாவது கருத்தும் மொழியும் தொடர்புபடுத்தப்படுகிறது. இத்தொடர்பினால் பொருண்மை வெளிப்படுகிறது. பொருண்மை வெளிப்பாடு கேட்போருக்கும் படிப்போருக்கும் தெளிவாகப் புரியும் நிலையில் கருத்துக் புலப்பாடு செம்மையாக அமைகிறது.

புலவர் தம் கருத்தினை வெளிப்படுத்தும் போது எடுத்துக் கொள்ளும் மையப் பொருண்மைக்கு ஏற்ப மொழிப்பயன்பாடும், சொல் தேர்வும் வேறுபடுத்திக் காட்டுவார். இதனை,

"முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானும் ஓர்பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந்.28).

என்ற பாடலில் காதலனைப் பிரிந்து தலைவியின் துயரம் வெளிப்படுகிறது. பிரிவுத் துயரினால் தவிக்கும் தலைவி ஆவேசப்படுபவள் போல் காணப்படுகிறாள். அதனால் முட்டுவேன்கொல் தாக்குவேன்கொல் ஓரேன், ஆஅ, ஒல் என்ற சொற்களின் வாயிலாக அவளது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார் ஔவையார். எந்தவொரு படைப்பாளியும் தான் எடுத்துக் கொண்ட கருத்திற்கும் உணர்விற்கும் ஏற்பவே சொல்லாட்சித்திறனை ஆற்றல் வாய்ந்தவையாகப் பயன்படுத்துவர் என்பது இதன்வழி புலனாகிறது.

முடிவுரை

ஒவ்வொரு படைப்பாளியும் தான் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்பச் சொற்களைக் கையாளுகிறார். ஒரு புலவர் ஒரே திணையைப் பற்றிப் பாடினாலும் அதில் கூறப்படும் கருத்து, உணர்வுக்கு ஏற்பச் சொற்பயன்பாடு மாறிவரும் என்பதை மேற்காட்டிய பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. ஆகவே மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும் கருத்து, உணர்வு, பொருண்மைக்கு ஏற்ப ஆற்றல் வாய்ந்தவையாக விளங்கும் என்பது இதன்வழிப் புலனாகிறது.

பெண் மொழி

ஆ.கிறிஸ்டினா, ஆய்வியல் நிறைஞர், மொழிபெயர்ப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முன்னுரை

மொழி என்பது வரலாற்றின் முதன்மையில் ஒலியின் வடிவிலே பரிமாற்றங்கள் செய்யப்பட்டன. தற்போது ஒவ்வொரு எழுத்துக்களின் வடிவமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 'அ' என்பது ஒலியின் வடிவில் உள்ளதை உச்சரிப்பின் மூலம் 'அ' என்பதற்காக எழுத்தின் கூட்டமைப்புகள் தற்போது ஒவ்வொரு வார்த்தையும் அதன் பின்னணியில் வாக்கியமாகும். இப்பொழுது சரளமாக பேசவும், மனிதனின் எண்ணங்களை தெரிவுப்படுத்தவும் மொழி என்பது சரியான இலக்கண முறையில் பேசும் தகவல் பரிமாற்றத்தினை மொழியமைப்பு என்கிறோம். மொழி என்பது அனைவரின் தற்காப்பு அமைப்பாக உள்ளது. மொழி என்பது மிக சிறந்த பயன்பாட்டை அளிக்கின்றது. அனைத்து துறை செயல்பாடுகளில் மொழியின் அவசியம் பெரும் பங்கு வகிக்கின்றது. எனவேதான் மொழியின் பயன்பாடு மக்களின் தகவல் பரிமாற்றமாக உள்ளது.

பெண்மொழி விளக்கம்

பெண் உடல் தாய்மை, பாலியல் முதலியவைகளை வெளிப்படுத்தும் நிலையே பெண்மொழி என்கிறேம். தமிழர் பண்பாட்டுச் சூழலில் பெண்மொழி குறித்து பெண்ணிய எழுத்தாளர்கள் பலரும் தம் எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றாரகள். பெண்ணியத் திறனாய்வின் வழி பெண் எழுத்து என்பது முதன்மைப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகின்றது.

பெண்மொழி அமைய முதலில் என்ன செய்ய வேண்டுமெனில் பெண்கல்வி வழி, பெண் முன்னேற்றத்தை வலிமை பெறச் செய்ய அவளுக்கான மொழி தனியாக அமைய வேண்டும். தாய்மொழி, தாய்நாடு, பாரதமாதா என்று பெண்ணை உயர்வு பெறச் செய்யும் சொல்லாட்சி வெறும் வாய்வார்த்தையில் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றது எனலாம். தாய்க்கான மொழி என்பது, சமூகம் சார்ந்து கற்பிக்கும் மொழியில் ஆதிக்கம் செலுத்தவில்லை என்று உறுதியாகக் கூறலாம். இதன் மூலம் பெண்ணைப் பொறுத்தவரை, அவளது மொழியாளுமை என்பது குறிப்பிட்ட வரையறையைக் கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. தாய்மொழி என்ற சொல்லாட்சி பெண்ணை இழிவுபடுத்தும் விதவை, மலடி என்ற சொற்பிரயோகங்களின் வழி இழிநிலை எய்துவதை அறிய முடிகின்றது.

பெண்மொழி பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்

பெண்ணின் உடலைக் காலங்காலமாக ஆண்கள் வர்ணித்து வந்துள்ளதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் ஒளவையார், வெள்ளிவீதியார் பாடல்கள் வழி பெண்ணின் காமம் பதிவு செய்யப்பட்டு இருப்பதன் மூலம் மணநூல் அடைத்து ஒடுக்கப்பட்டிருந்த உணர்வு வேட்கை மரபுமீறி வெளிப்பட்டிருப்பதை அறியலாம்.

மொழியினைப் பயன்படுத்தும்விதம், சொல்லப்படும் தோனியில், இருபாலரது கூறுகள் வேறுபட்டிருப்பதை உணரலாம். அதில் குறிப்பர்க ஆணின் மொழியில் பெண் இப்படித்தான் இருக்க வேண்டும். கற்புநிலை கொண்டு ஆணின் விருப்பத்தை

நிறைவேற்றுபவளாகவும் தனக்கென உணர்வில்லாது ஆணுக்குச் சார்பான நிலையிலும், சித்தரிக்கப்பட்டிருப்பதன் மூலம் அவளது உணர்வு ஒடுக்கப்பட்டு இருப்பதனையும் சமூகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருப்பதனையும் அறியலாம்.

பெண் உடல், மொழியில் இடம்பெறும் நிலை

பெண் தன் காமத்தினை வெளிப்படுத்தக் கூடாது என்ற தொல்காப்பியர் காலச் சமூக வரையரையிலிருந்து விடுபட்டு தன்னுடைய உடல் உணர்வுகள், சூழல் ஏற்படுத்தும் கிளர்ச்சிகள் வேட்கை, வலி, உடலுறுப்புகளைப் பெருமிதத்துடன் விதந்தோறும் தன்மை பெண்படைப்புகள் வழிப்பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் தனக்கான மொழியை வெளிப்படுத்துவதில் பயம், வெட்கம், எதிர்ப்புகள் இப்படிப் பலவற்றைச் சந்திக்க நேர்ந்தாலும், பின்பு அதனை எதிர் கொள்ளும் சூழலில் உடலுறுப்பு, பாலியல் உணர்வு பற்றிய செய்திகள் படைப்பில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்து வருகின்றன.

பெண் உடல் என்பது பெண்ணை ஒடுக்கும் ஒன்றாக இருப்பதாலும், தன் உடல் தனக்குச் சொந்தமில்லை என்ற நிலை ஏற்படும் நிலையில் ‘பெண்ணின் உடல்’ மொழி என்பது தீவிரப்படுத்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெளிந்து உணரலாம்.

பெண் மொழியின் தேவை

ஆண் சமூகத்தில் பெண் மொழி என்ற ஒன்று சாத்தியப்படுமா? உணர்வுகளை வெளிப்படுத்த தருணம் அமையுமா? மேலும் இப்படி உணர்வுகளைக் கூறும் நிலை ஏற்படின் மேற்கூறப்பட்ட சொல்லாடல்கள் உறுதுணையாக இருக்குமா? என்பனவெல்லாம் கேள்விக்குறியாகவே இருக்கும். ஆண்கள் தங்களது வேட்கை உள்ளக்கிடக்கைகள், வெளிச்சமாக்க, இவையனைத்தும் பெண்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்டவையே என்று இதன் மூலம் பெண்ணுக்கான மொழி ஆண் மொழியை உடைத்து தன் மொழியை வலியுத்தும் நிலையில் எய்த முடியும்.

பெண் மொழிக்கு முதன்மை தரும் பிரெஞ்சுப் பெண்ணியக் கோட்பாடு

பெண்ணிய வகைகளில் தீவிரப் பெண்ணிய நிலையை மேற்கொள்ளும் பிரெஞ்சுப் பெண்ணியக் கோட்பாடே மொழியமைப்பிற்கு முதன்மை அளித்துப் பேசி வருகின்றது. இது ஆணுக்கான மொழியை விடுத்துப் பெண்ணுக்கான மொழியை விவாதிக்கின்றது.

பிரெஞ்சுப் பெண்ணியக் கோட்பாட்டாளர்களான ஹெலன் சிக்ஸ், ஜீலியா கிறிஸ்தெவா, லூசி இரிகரே போன்றோர் பெண்மொழி குறித்த தங்கள் கருத்துக்களைச் சீரிய முறையில் பேசி வருகின்றனர்.

ஹெலன் சீக்ஸ் ‘பெண் எழுத்து’ என்பதற்கு முதன்மை அளித்து தன் கருத்தை வலியறுத்திக் கூறியுள்ளார்.

பெண் மொழிக்கான வெளி, களம்

இன்றளவும் கூறப்பட்டு வரும் ஆண் மொழியைத் தகர்த்துப் பெண்ணுக்கான இருப்பை, ஒடுக்கப்பட்ட உடலினை, மனப் படிமங்கள், வலி, வேட்கை, உள்ளுணர்வுகள் இவற்றை வெளிப்படுத்த உகந்த மொழி அமைய பெண்ணின் சுய அடையாளங்களை,

தன் பால் சார்ந்த அக உணர்வுகளைக் குறியீட்டுத் தன்மையில் காரணக்காரியங்களுடன் வெளிபடுத்திக்கொள்ள 'கவிதையே' சிறந்த களமாகும். உள்ள உணர்வினைக் கவிதைக்குள் உள்ளீடாகச் செலுத்தும் நிலையில் அவை அழகியல் சார்ந்து வெளிப்படும் போது தான் பெண்மொழி புலப்படும் என்று கூறலாம்.

பெண்களின் அனுபவப் பதிவுகளான உடல், தாய்மை, பாலியல் என்பவற்றை ஆண்களைவிடப் பெண்களே உணர்ந்து எழுதினால் அதன் வீரியம் இன்னும் செழுமை பெறும் எனலாம். இந்நிலையில் மாலதிமைத்ரி, சுகிர்தராணி, சுகந்தி சுப்பிரமணியன், குட்டி ரேவதி, வதஸ்லா, கிருஷ்ஷாங்கினி போன்றோர் தம் கவிதைகள் வழி பெண் மொழி பற்றிய கருத்துக்களை, வெட்ட வெளிச்சமாகப் பேசி வருகின்றனர். இதில் மாலதிமைத்ரி, தீவிரமான நிலையில் தன் கவிதையில் பெண் மொழியினைப் பதிவு செய்து வருகின்றனர்.

முடிவுரை

மொழி என்பது தகவல் பரிமாற்று கருவியாகும் மனிதன் அதனை மேலும் பண்பாட்டுச் சூழலில் வாழ நெறிமுறைகளை முறையாக வகுத்து கொள்ளவும் ஒவ்வொரு செயலிலும் தேவைகளிலும் மொழி அவசியமாக உள்ளது. எனவே மொழியினால் பிற மாநிலங்களிலும் தங்களின் செயல்திறன்களை தெளிவுப்படுத்தும் வகையில் மொழியின் பயன்பாடுகள் உள்ளது.

வில்லியனூர் கோயில் கல்வெட்டு கூறும் செய்திகள்

க. கோமதி, உதவிப் பேராசிரியர்,வரலாற்றுத்துறை, கு.நா. அ.ம.கலைக்கல்லூரி, தஞ்சாவூர்

முன்னுரை

கவிநூறு கலைக் கோயில் பல பெற்ற காஞ்சி மாநகர் மாண்புரு மாமல்லை, பல்லவன் கண்ட பனைமலை காந்தரூர் சாலை கல மறுத்தருளிய இராசராசசோழனின் புகழ் பரப்பும் தஞ்சை பெருநகர், இராஜேந்திரசோழனின் கங்கை கொண்ட சோழபுரம், மதுரை ஆகிய ஊர்களின் வரலாறுகளென தமிழ்நாட்டின் அரசியல், சமுதாய பொருளாதார வரலாறுகளை அறிந்துகொள்ள உதவுகின்றது. இலக்கியங்கள் கல்வெட்டுகள் செப்பேடுகுறிப்புகள், கோயில்கள் குளங்கள் சிற்பங்கள் திருமேனிகள் ஓவியங்கள்,எல்லாம் வரலாற்றை அறியஉதவும் பெரும் மதிப்புடைய கருவூலங்கள் ஆகும்.

இவைகள் நம் முன்னோரின் வாழ்க்கை முறையை கலைமேம்பாட்டை வீரத்தின் செறிவை தொழில்நுட்பத் திறனைக் காட்டவல்லவை இதுபோன்று கருவூலமாகக் கருதப்படும் சிற்றூர்களின் ஒன்றுதான் வில்லியனூர். இக்கோயில் புதுச்சேரிக்கு தென்மேற்கே 10 கி.மீ தொலைவில் விழுப்புரம் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இக்கோயில் கல்வெட்டுகள், சைவமடங்கள் இந்தஊரின் பழைமை வரலாற்றைப் கூறுகின்றன. புராணங்கள், பிள்ளைத்தமிழ்நூல், தனிபாடல் அனந்தரங்கம் பிள்ளைநாட்குறிப்பு இவ்வூரின் சிறப்பைக் கூறுகின்றன. கமலாபுரி அரசரான தருமபாலச் சோழனால் இந்தஆலயம் கட்டப்பட்டது. இதனை வில்லைப் புராணத்து தருமபாலச்சருக்கம் என்ற நூல் கூறுகிறது.

கல்வெட்டுகள்

வில்லியனூரில் உள்ளதிருக்காமிச்சுரம் சிவன் கோயில் மற்றும் அக்கோயிலின் தெற்கே உள்ள கல்வி மடத்திலும் இதுவரை 44 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் சோழர், கோப்பெருஞ்சிங்கன் பாண்டியன் சம்புவராயன் விசயநகர பேரரசர்கள் போன்ற அரசர்கள் காலங்களில் எழுதப்பட்டது. கி.பி 1060 முதல் 1599 வரை 32 கல்வெட்டுகளும் 17, 18-ம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட 12 கல்வெட்டுகளும் இவற்றில் அடங்கியுள்ளன. இந்தியதொல்லியல் ஆய்வுத் துறையின் கல்வெட்டு பிரிவினர். இவற்றுள் 28 கல்வெட்டு வாசகங்களை வெளியிட்டு 26 கல்வெட்டுகளைப் பற்றி ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.[1]

கல்வெட்டுக்கூறும் செய்தி

முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டே இக்கோயிலில் கிடைத்துள்ள முதல் கல்வெட்டாகும். இதுவே மிகபழமையான கல்வெட்டு. இம்மன்னன் காலத்து கல்வெட்டு மூன்று கிடைத்துள்ளது. அதில் ஒன்றுசெய்யுள் வடிவில் அமைந்துள்ளது. "ஒன்பது நூற்றாண்டுடனேசகராயாண்"என்றவரியில் நூற்றாண்டு என்ற சொல்லை தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேதமிழர் பயன்படுத்தினர் என்பதற்கும் குலோத்துங்க சோழனின் இக்கல்வெட்டுபாடல் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. மற்ற கல்வெட்டுகள் அதன் துண்டுபகுதிகளாக மட்டுமே கிடைத்துள்ளன. அப்பகுதிகளில் இம்மன்னனின் மெய்கீர்த்திகளும் சிலசெய்திகளும் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் குலோத்துங்கசோழன் 1178 – 1218 கல்வெட்டு வில்லியனூர் கோயிலில் கிடைக்கப் பெற்றுள்ளது. இவன் காலகல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. இவன் காலத்துக் கல்வெட்டுகள் வடஆர்கடகாடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் மிகுதியாக கிடைக்கின்றன. வில்லியனூரில் இவன் காலத்துக் கல்வெட்டு கிடைத்துள்ளன.[2]

சோழபேரரசு வீழ்ச்சி அடைந்த பின்னர் இரண்டாவது பாண்டிய பேரரசு தோன்றியது. அதில் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு வில்லயனூர் சிவன் கோயிலில் இரண்டு கிடைத்துள்ளது. பாண்டியருக்கு பின்னர் விஜயநகரபேரரசின் சம்புவராய அரசர்களில் இராசநாராயணச் சம்புவராயனின் மூன்று கல்வெட்டுகள் வில்லியனூர் கோயிலில் கிடைத்துள்ளன.

குமாரகம்பணர் ஆட்சிகாலத்தில் கி.பி.1370 வரையபெற்ற கல்வெட்டு வில்லியனூரில் காணப்பெறுகின்றது.[3] விஜயநகரபேரரசை தோற்றுவித்த ஹரிஹரர் புக்கர் கால கல்வெட்டு மூன்று இங்கு உள்ளன. சாவனதேவர் என்பவர் முதலாம் புக்கரின் மகன் இவர் கல்வெட்டு வில்லியனூர் கோயிலில் கிடைத்துள்ளது. சங்கமவம்ச அரசர்களின் ஒருவரான விருபாட்சர் சைவராக இருந்தகாலத்தில் கி.பி. 1472-ல் வரையப் பெற்ற கல்வெட்டு ஒன்று வில்லியனூரில் கிடைத்துள்ளது.[4] அச்சுததேவராயர் காலத்து கல்வெட்டு (1530 - 1542) மூன்று கல்வெட்டு வில்லியனூரில் கிடைத்துள்ளது. சதாசிவதேவராயர் ஆட்சிகாலத்தில் வரையப் பெற்ற கல்வெட்டு இங்கு கிடைத்துள்ளது. இத்துடன் ஸ்ரீரங்கதேவர், வேங்கடதேவராயர் ஆகியோர் காலத்தில் வரையப் பெற்ற இரண்டுகல்வெட்டுக்கள் வில்லியனூர் சிவன் கோயிலில் உள்ளது.

சோழர் காலத்தில் வரிசிறந்த முறையில் வசூலிக்கப்பட்டன என இக்கல்வெட்டு கூறுகின்றது. இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் வால்வரியைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு மிகசிலவேயாகும். அவற்றுள் வில்லியனூர் கல்வெட்டு மிகமுக்கிய இடத்தைப் பெறுகிறது. இரண்டாம் அரியன உடையார் காலத்தில் கி.பி 1381-ல் எழுதப்பட்ட கல்வெட்டில் வால்வரி பற்றி விளக்கம் கிடைக்கிறது. பசுவுக்கு அரைப்பணமும், எருமைக்கும் முக்கால் பணமும், எருதுக்கு கிடாவும் கால் பணமும் வால்வரி விதிக்கப்பட்ட பெற்றதாக அக்கல்வெட்டு கூறுகிறது. இனவரி, தலைவரி, ஆள்வரி என சிலவரிகள் பற்றி அக்கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆதைதவிர அரிசிக்காணம், ஆள்தேவை, கடைக் கூற்றிலக்கை, கீற்றுவரி, கூற்றிலக்கை, சீகாரியக் கொற்றிலக்கை, பொகக் கடமை போகாண்மை, மேற்கடம் வரி, வரிக்கடைப்பு முதலானவரிகளின் பெயர்களும் வில்லியனூர் கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன.

நிலஅளவுகள் அவற்றின் தரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி வகைகள் பற்றிய கல்வெட்டும் கிடைத்துள்ளன. இரண்டாம் சரியான உடையார் ஆட்சிகாலத்தில் பங்குனி மாதந்தோறும் திருக்காமீச்சுரமுடைய நாயனாரைக் கடலுக்கு எழுந்தருள செய்து திருமுழுக்குத் திருநாள் கொண்டாடினார். இவ்விழாவிற்கு வில்லியநூர் 10 மா அளவுக்கு நிலங்கள் இறையிலி தேவதானமாக வழங்கப்பெற்றன. இதே திருநாளுக்கு வால்வரியின் மூலம் வரும் பெருந்தொகை முழுவதும் முதற்பொருளாக வழங்கப்பெற்றது. கி.பி1379, 1381 ஆகிய ஆண்டுகளில் வரையப் பெற்ற இரண்டாம் அரியன உடையார் காலத்திய கல்வெட்டுக்கள் இதை கூறுகின்றன.

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் திருக்காமீச்சுரமுடைய நாயனாருக்கு ஆண்டு பெருவிழா நடத்தினர் என்பதை பராக்கிரமபாண்டியன் கல்வெட்டு கூறுகிறது. வில்லியனூர் தேர்த் திருவிழா இம்மாநிலத்திலேயே பெரும் புகழ்பெற்ற திருவிழாவாகும். இங்குள்ள திருத்தேர் தென்னிந்தியாவிலுள்ள மிகஉயரமான திருத்தேர்களில் ஒன்றாகும். இத்திருத்தேர் பற்றி குறிப்பிடும் கல்வெட்டே இக்கோயிலில் காணபெறும் கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது அதுமுதலாம் குலோத்துங்க சோழனின் பத்தாவது ஆட்சியாண்டில் கி.பி 1080 உருவாக்கப்பட்டது.[6] இது நேரிசை வெண்பா வடிவில் அமைந்த கல்வெட்டுப் பாடலாகும். புதுவை மாநிலத்தில் பதிவுசெய்யப் பெற்ற கல்வெட்டுகளில் இது ஒன்றேபாடல் வடிவில் உள்ள கல்வெட்டாகும்.

இக்கோயில் கல்வெட்டில் பழமையானது முதலாம் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டு ஆகும். இவற்றுள் ஒன்றுபாடலாகவும் ஏனையவை அம்மன்னனின் மெய்கீர்த்திகளாகவும் சிதைந்த காணப்படுகிறது.

முடிவுரை

இதுகாறும் கூறிய செய்திகளைக் கொண்டு வில்லியனூர் அதன் முற்காலத்தில் அமைவிடம் கிடைத்துள்ள கல்வெட்டுகள் அதன் மூலம் அதன் வரலாறு அறிந்துக் கொள்ள முடிகிறது. அக்கல்வெட்டுகளை மேலும் விரிவாக ஆராய்ச்சி செய்ய முயற்சிகள் மேற்க் கெண்டால் இன்றும் வில்லியனூர் பற்றிய பல செய்திகள் வரலாற்றிற்குக் கிடைக்கும்.

அடிக்குறிப்புகள்

1. Annual Report on South Indian Epigraphy for the year 1936-37 Nos 181, 207 south Indian Inscriptions, Vol, VII, Nos 815, 816. பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களுக்கும் நடைபெற்ற போர்களில் இவ்வூர் முக்கிய இடமாக கருதப்பட்டது.
2. கல்வெட்டு எண்கள் 6 – 9.
3. கல்வெட்டு எண்கள் 20.
4. கல்வெட்டு எண்கள் 21 - 23.
5. கல்வெட்டு எண்கள் 26 (S.II Vol, VII.No.815)
6. கல்வெட்டு எண்கள் 21 – 23

தந்தை பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்

செ. சதீஷ்குமார், முனைவர் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கும். இச்சொல் 'Femine' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. 'பெண்' என்னும் சொல்லுக்குப் 'பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்று பொருள். பெண்ணியம் என்ற சொல் 1890-களில் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது.

'பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அவை மாற்றிட மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்' என்று கார்டன் (Garden) என்னும் அறிஞர் வரையறுத்துள்ளார். இது முற்றிலும் உண்மை. சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலைகளை ஆய்ந்து அறிந்து அவற்றை மாற்றி அமைப்பதே முற்போக்குப் பெண்ணியச் சிந்தனையாளர்களின் கடமையாகும்.

'பெண் விடுதலை பற்றிப் பேசும்போது உங்களுடைய தாயை, சகோதரியை நினைத்துக் கொண்டு பேசுங்கள். மனைவியை நினைத்துக் கொண்டு பேசாதீர்கள்' என்று தந்தை பெரியார் பெண்ணியச் சிந்தனையாளர்களுக்கு வலியுறுத்துகின்றார் ***(கு.ம.இராமாத்தாள், பெரியாரியப் பெண்ணியம், ப.viii).*** அப்போதுதான் பெண்ணடிமைத் தன்மை சமுதாயத்தை விட்டு முழுமையாக நீங்கும். பெண்களுக்கு முழு சுதந்திரம் கிடைக்கும், என்பது பெரியாரின் கருத்தாக அமைகிறது.

பெண் கல்வி

பெண்கள் குறைந்தது 20 வயது வரை கல்வி பயில வேண்டும். அதுவும் தொழிற்கல்வி பெண்களுக்கு அவசியம் தேவை. கோயிலுக்குச் செல்வதைத் தவிர்த்து விட்டுப் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டும். வேலைக்குச் செல்பவர்களைத் தவிர மற்ற பெண்கள் வீட்டில் சும்மா இருக்காமல், ஏதாவது கைத்தொழில் செய்து அதன்மூலம் தங்கள் வாழ்விற்குரிய வருவாயைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று பெரியார் விரும்புகிறார்.

'ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறத்தக்கபடி ஒரு தொழில்கல்வி கற்றிருக்க வேண்டும். தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால் எந்தக் கணவனும் அடிமையாய் நடத்த மாட்டான்' ***(சௌ. ராமகிருஷ்ணன், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள், ப.42).***

பெண் சம்பாதித்தால் ஒருவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போகும். தன்னம்பிக்கை தானாக வரும். அடிமையாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் தன் மனத்தைவிட்டு அகலும். இவற்றில் இருந்து பெண்கள் தன்

சொந்தக்காலில் நிற்க வேண்டுமானால் அவசியம் கல்வியைக் கற்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

பெரியாரின் அறிவுரை

கல்வியறிவு பெற்ற பெண்களும், பணம் படைத்த பெண்களும் சமுதாயத் தொண்டாற்றுவதற்கு முன்வருவது இல்லை. வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வதற்கே பெண்கள் விரும்புகிறார்கள். தற்காலத்தில் பெண்கள் நகைகள் மீது பற்று வைத்து அலைகிறார்கள். இவை கூடாது என்று பெரியார், பெண்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறார்.

'படித்த பெண்களும், பட்டதாரிப் பெண்களும், பணம் படைத்தவர் வீட்டுப் பெண்களும் மனித சமுதாயத்துக்காகப் பணியாற்றுவதே கிடையாது. மோட்டார் கார், நகை நட்டுகள், உயர்தர உடைகள், உல்லாசப் பொழுதுபோக்கு (சினிமா, நாடகம், இசைவிழா, அரட்டைக் கச்சேரி போன்றவை) ஆகிய ஆசைகளைத் தவிர இவர்களுக்கு வாழ்க்கை இலட்சியம் என்பதே பெரும்பாலும் இருப்பதில்லை' ***(கி.வீரமணி, பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை தொகுதி (2), ப.153).*** படித்த மற்றும் பணம் படைத்த பெண்களும், சமுதாயத் தொண்டு செய்வதற்கு முன்வரவேண்டும் என்று பெண்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்பதை இவற்றின் மூலம் அறியமுடிகிறது.

பெண்கள் முடியைக் கத்திரித்துக் கொள்ள வேண்டும். லுங்கி அணிய வேண்டும். சட்டையணிந்து கொள்ள வேண்டும். நகை அணியக் கூடாது. வரவிற்குள் செலவிட்டுப் பழக வேண்டும். கூடுமானவரை குழந்தை பெறுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பெரியார் ***(11.04.1971)*** அறந்தாங்கியில் நடைபெற்ற திருமண விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் வழி அறியமுடிகிறது ***(கி. வீரமணி, பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை பாகம் (5), ப.163).***

சொத்துரிமை

ஆணும் பெண்ணும் சமம் என்ற அடிப்படையில் சொத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்றும், வேலைவாய்ப்பில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும். அப்போதுதான் பெண்கள் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக தலைநிமிர்ந்து நடக்க முடியும்.

'பெண்ணின் பெற்றோர் இப்பெண்ணுக்குத் தங்கள் சொத்தில் ஒரு பாகம் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். புருஷர்களைப் போலவே பெண்களுக்கும் சொத்து உரிமை உண்டு. தொழில் உரிமை உண்டு என்கின்ற கொள்கை ஏற்படாவிட்டால் எப்படி அவர்கள் சுயமரியாதை உடையவர்களாவார்கள்? ஆகையால் அவர்களுக்குச் சொத்துரிமையும் அவசியமானதாகும்' ***(கி. வீரமணி, பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை பாகம் (1), ப.91).*** பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்தால்தான் பெண்ணடிமைத்தனம் மாறும் என்பது பெரியாரின் கருத்தாக அமைகிறது.

குழந்தை பெறுதல்

பெண்களின் உடல் நலம் பற்றிய தனது அக்கறையைப் பெரியார் இடைவிடாது வெளிப்படுத்தி வந்தார். பெண்கள் நோயாளிகளாக ஆவதற்கும், சீக்கிரம்

கிழப்பருவம் அடைவதற்கும், ஆயுள் குறைவதற்கும் இந்தக் கர்ப்பம் என்பதே மூலகாரணமாய் இருக்கிறது. பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புத் தங்களுக்கே என்று கருதுவதால் சுதந்திரமும் வீரமும் இன்றி அடிமையானதுமான காரியங்களுக்கு ஆளாகிறார்கள்.

'குழந்தைகள் பெறுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். குறைந்தது இன்னும் ஐந்து ஆண்டுகளாவது குழந்தை பெறாமலிருக்க வேண்டும். திருமணமான பத்து மாதங்களிலேயே குழந்தையைப் பெற்றுவிட்டால், அதைக் கொஞ்சத்தான் நேரமிருக்குமே தவிர, தன் கணவனின் காரியங்களைக் கவனிக்கவோ, அவனோடு மகிழ்வாக இருக்கவோ நேரமில்லாமல் போய் விடுகிறது. குழந்தையைக் கொஞ்சவே நேரம் சரியாகப் போய்விடுகிறது. எனவே, குழந்தை பெறுவதைக் கொஞ்ச காலம் தள்ளி வைத்துக் கொள்ள வேண்டும். அதோடு அளவாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும். வதவதவென்று பெற்றுக் கொண்டு தாங்கள் திண்டாடுவதோடு, நாட்டிற்கும் கேடு செய்யக்கூடாது' *(கி. வீரமணி, பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை பாகம் (3), ப.166).*

சமையல் அறை

தமிழர்களின் உணவு முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று பெரியார் விரும்புகிறார். சமையல் செய்வதிலேயே பெண்கள் நேரத்தை மிகுதியாகச் செலவிடுகின்றனர். எளிமையான முறையில் சத்தான உணவினை குறைந்த நேரத்தில் சமைத்து வைத்துவிட்டு மற்ற நேரங்களில் அறிவுப் பூர்வமான வேலைகளில், சுயத் தொழிலில் ஈடுபடுதல் வேண்டும். மேலை நாடுகளில் பெண்கள் எளிமையான முறையில் சத்தான உணவுகளைச் சமைத்து உண்கின்றனர். இதனால் பெண்களின் நேரம் வீணாவது தடுக்கப்படுகிறது.

'நம் நாட்டில் பெரும்பாலான பெண்கள் பிள்ளை பெறவும், சோறு ஆக்கவும்தான் இருக்கின்றனரே தவிர, அந்த வேலையிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றனரே தவிர, நேரத்தை வீணாக்குகின்றனரே தவிர, சமுதாயத்திற்கோ, நாட்டிற்கோ அவர்கள் பயன்படுவது கிடையாது. இந்த நிலை மாற வேண்டும். நான் மேல் நாடுகள் எல்லாம் போய் வந்திருக்கின்றேன். அங்குள்ள பெண்கள் அடுப்பைக் கட்டிக்கொண்டு அழுதில்லை. அதனால்தான் அவர்கள் உத்தியோகம் பார்க்க முடிகிறது. மற்ற பொதுக் காரியங்களில் எல்லாம் பங்கேற்க முடிகிறது. இந்தக் காட்டுமிராண்டிகால உணவுப் பழக்கத்தை நம் மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்' (கி. வீரமணி, பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை பாகம் (4), ப. 28). பெண்கள் சமைப்பதில்கூடப் பெண்ணடிமை இருக்கிறது என்று பெண்ணியச் சிந்தனைகளை வகுத்துக்கூறிய ஒரே தலைவர் தந்தை பெரியார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமண விடுதலை

திருமணம் என்ற முறை, பெண்களை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். திருமண வாழ்க்கை பெண்ணுக்குப் பிடிக்கவில்லை என்றால் அவற்றில் இருந்து விலகிக் கொள்ளுவதற்கு உரிமை வழங்க வேண்டும். ஒருவருடன் திருமணம் ஆகிவிட்டதே என்று கணவன் செய்யும் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு வாழ்வது பெண் அடிமைத் தனத்தினைக் குறிப்பதாகும். ஆணும் பெண்ணும் நண்பர்களாகப் பழகி ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துக் கொண்டு திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் திருமணம் செய்து கொள்பவரின்

தன்மையினை அறிந்து பெண்கள் முன்னேற விலகிக் கொள்ள முடியும் என்று பெரியார் கூறுகின்றார்.

'பொதுவாகக் கவனித்தால், நமது நாடு மாத்திரமல்லாமல், உலகத்திலேயே அநேகமாய்க் கல்யாண விஷயத்தில் பெண்கள் மிகக் கொடுமையாயும், இயற்கைக்கு விரோதமான நிர்ப்பந்தமாயும் நடத்தப்படுகிறார்கள் என்பதையும் நடுநிலைமையுள்ள எவரும் மறுக்க முடியாது. ஆனால், நமது நாடோ இவ்விஷயத்தில் மற்ற எல்லா நாட்டையும்விட மிக்க மோசமாகவே இருந்து வருகிறது' *(தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, ப.32).* திருமண வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால் அதில் இருந்து விலகிக் கொள்ளப் பெண்களுக்கு முழு சுதந்திரம் தரவேண்டும் என்று பெரியார் விரும்புகிறார்.

பெண்கள் அனைவரும் சமுதாயத்தில் முழு சுதந்திரம் அடைய வேண்டுமானால், குறைந்தது 20 வயது வரையாவது கல்வியறிவு அதாவது தொழிற்கல்வி கொடுக்க வேண்டும். சொத்திலும் சரிபாதி உரிமைக் கொடுக்க வேண்டும். படித்த பெண்களும், பணம் படைத்த வீட்டுப் பெண்களும் சமுதாயத் தொண்டாற்றுவதற்கு முன்வர வேண்டும். திருமணத்திற்குப் பிறகு குழந்தை பெறுவதைக் குறைந்தது ஐந்து வருடமாவது தள்ளி வைக்க வேண்டும். சமையல் அறையில் நேரத்தை வீணடிக்காமல் அறிவுப்பூர்வமான வேலையிலும், கைத்தொழில் செய்வதிலும் பெண்கள் ஈடுபட வேண்டும். திருமண வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால் அவற்றில் இருந்து விலகிக் கொள்வதற்குச் சட்டப்படி பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டும். அப்போதுதான் பெண்ணடிமைத் தன்மையினைச் சமுதாயத்தைவிட்டு விரட்டி அடிக்க முடியும் என்பதைப் பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்வழி அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

தந்தை பெரியார், *'பெண் ஏன் அடிமையானாள்?'*, பெரியார சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 600 007, இருபத்தொன்பதாம் பதிப்பு: 2015.

கி. வீரமணி, *'பெரியார் களஞ்சியம்' பெண்ணுரிமை* (தொகுப்பாசிரியர்) பாகம் (1), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, நான்காம் பதிப்பு: 2011.

கி. வீரமணி, *'பெரியார் களஞ்சியம்' பெண்ணுரிமை* (தொகுப்பாசிரியர்)பாகம் (2), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, நான்காம் பதிப்பு: 2001.

கி. வீரமணி, *'பெரியார் களஞ்சியம்' பெண்ணுரிமை* (தொகுப்பாசிரியர்), பாகம் (3), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, நான்காம் பதிப்பு: 2007.

கி. வீரமணி, *'பெரியார் களஞ்சியம்' பெண்ணுரிமை* (தொகுப்பாசிரியர்) பாகம் (4), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனவெளியீடு, நான்காம் பதிப்பு: 2007.

கி. வீரமணி, *'பெரியார் களஞ்சியம்' பெண்ணுரிமை* (தொகுப்பாசிரியர்) பாகம் (5), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, நான்காம் பதிப்பு: 2007.

சௌ. ராமகிருஷ்ணன், *'பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்'* L.S.G. பப்ளிகேஷன், தஞ்சாவூர் -4, இரண்டாம் பதிப்பு:2012.

சங்க இலக்கியத்தில் மருத்துவம்

முனைவர் அ. சசிகலா, கௌரவப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு.

தமிழ் மருத்துவத்தில் மிகவும் பழமை வாய்ந்தது சித்த வைத்திய முறையாகும். தமிழகத்தில் பண்டையக் காலம் தொட்டு வாழ்ந்து வந்த சித்தர்கள் அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள். நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருக்க உதவும்படியான காயகற்பம் எனும் அருமருந்தைச் சித்தர்கள் கண்டுபிடித்துக் கையாண்டு வந்தனர். இத்தகைய சித்த மருத்துவத்தைச் சங்க இலக்கியத்தில் எங்ஙனம் கையாண்டனர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐம்பூதக் கோட்பாடு

தமிழ்நாட்டின் இயற்கைச் சூழலிலே தமிழர் பண்பாட்டில் வளர்ந்த மருத்துவக் கலையே "சித்த மருத்துவம்." இதனாலேயே இதற்குத் தமிழ் மருத்துவம் எனவும் வழங்கினர். வாதம், பித்தம், கபம் என்ற முக்குற்றங்களின் அடிப்படையில் நோய்கள் தோன்றின. இவை மனித உடலில் கால், அரை, ஒன்று என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இவை மிகினும், குறையினும் உடலில் நோய் ஏற்படுகின்றது.

மருத்துவர்கள் மட்டுமின்றி, புலவர்களும் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் இயல்புகளையும் நன்கறிந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தொல்காப்பியர் காட்டுகிறார். இதனை,

நிலம், நீர், வளி, விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் - (தொல். 664 : 1 - 2)

என்று பொருளதிகாரத்தில் குறிப்பிட்டு விவரிக்கின்றார். இவ்வுடம்பு ஐம்பூதங்களால் ஆக்கப் பட்ட பிண்டம் என்பது மருத்துவர்களின் கோட்பாடாகும். ஐம்பூதங்களின் இயல்புகள் பற்றிச் சங்க காலப் புலவர்கள் அறிந்திருக்கிறார்கள். இதனை,

மண்டி மணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசிப்புதைவரு வளியும் வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும்
பூதத் தியற்கை போல - (புறம். 2 : 1 - 6)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் விவரிக்கின்றன.

நோய்

சங்க அகத்திணைப் பாடல்களில் நோய் என்ற சொல் பெரிதும் பயின்று வந்துள்ளது. குறுந்தொகையில் நோய் என்ற சொல்லுக்கு வருத்தம், பசலை என்று குறிக்கப்பட்டுள்ளன. பிணி, வருத்தம் என்ற சொல்லுக்கு இலக்கியத்திலே மனம் சார்ந்த காமநோயைக் குறிக்கும் என்பர். பிணி என்பது உடல் சார்ந்த நோயினைச் சுட்டுகிறது. இதனை நற்றிணையில் உயங்குபிணி உருத்தமொடு இயங்கல் செல்லாது (நற். 46), நடுங்குபிணி (நற். 46) என்றும் பெண்டிரும் பிணியுடையீரும் (புறம். 9) என்று வரும் தொடர்களால் அறியப்படுகிறது.

சிறுபாணாற்றுப்படையின் இறுதியில் நோய் தனி மருந்து என தனி வெண்பா வாகவும், கலித்தொகையில் நோய்தீரு மருந்து (கலி. 60) என்று குறிப்பதன் மூலம் அறிய முடிகிறது.

சுர நோய்

உடல் வெப்பம் அதிகரிப்பால் உண்டாகும் நோய் சுரமாகும். உடலில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும்போது அதனைச் சுரநோய் என மருத்துவர் குறிப்பிடுவர். ஆனால், அதிக வெப்பம் காணப்படும் பாலை நிலத்தைச் சுரம் எனச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. கலித்தொகையில்,

> அழிந்து அயல் அறிந்த எவ்வம் மேற்படப்
> பெருமபேதறுதல் களைமதி பெரும!
> வருந்தியசெல்லல் தீர்த்த திறன் அறிஒருவன்
> மருந்து அறை கோடலின் கொடிதே யாழிநின்
> அருந்தியோர் நெஞ்சம் அறிந்து உகவிடினே

என வரும் பாடலில் நோய் வருமுன் காத்தல், வந்தபின் போக்குதல் என மருத்துவ சிகிச்சை முறை இரு வகையாகப் பிரித்துள்ளனர். நோய்க்குறி கண்டவுடனோ அல்லது நோய் உற்ற முதலோ பரிகாரம் தேடவேண்டும். அப்போது நோயை அகற்றுதல் எளிது. நோய் முற்றிய பின்பு செய்யும் மருத்துவம் முற்றிலும் பயனளிப்பதில்லை என விவரிக்கிறது.

மகப்பேற்று வைத்தியம்

கர்ப்பம் அடைந்த பெண்ணிற்குச் செய்யும் சடங்குகள், புதல்வரைப் பெற்றவுடன் நடைபெறும் மருத்துவம் மற்றும் அது தொடர்பான கிரியைகள் ஆகியன பற்றித் தொல்காப்பியம் (கற்பி. 5 : 26 - 29) எனும் நூற்பாவும் குறிப்பிடுகிறது.

ஈன்றணிமையுடைய தாய் ஒருத்தி சிறுவெண்கடுகு பூசிப்படுத்திருக்கும் செய்தி நற்றிணையில் காட்டப்பட்டுள்ளது. இதனை,

> வாராய் பாண நடுக்கம் நேரிழை
> கடும்புனம் கடுஞ்சூல் நங்குடித்த உதவி
> நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரங்காழ்
>
> விறங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிற்
> புதல்வன் ஈன்றெனப் - (நற். 1 - 5)

என வரும் பாடலால் அறியப்படுகிறது.

நீண்ட கால வாழ்க்கை

சிரஞ்சீவியாக வாழ்வாயாக என வாழ்த்துவது மரபு. சிரஞ்சீவி என்பது நீண்ட நாட்கள் வாழ்வதையே சுட்டுகிறது. காயகற்பம் என்னும் மருந்தை உண்பதன் மூலம் நீண்ட காலம் வாழ முடியும் என்பது சித்தர்கள் கொள்கையாகும். அதியமான் என்னும் சங்ககால அரசன் ஔவைக்கு நெல்லிக்கனியை கொடுத்தான். அதை உண்டதால் நீண்ட காலம் வாழ்ந்தார் என்ற செய்தியைத் தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம் (ப. 34) எனும் நூலின் வாயிலாக அறிய முடிகிறது. புறநானூற்றுப் பாடலின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. நல்லொழுக்கம் மேற்கொண்டால் நீண்ட காலம் வாழலாம் என்பது ஆசாரக்கோவையின் மூலம் அறியப்படுகிறது.

மருத்துவத்தில் சோதிடம்

பஞ்ச பூதத்தினாலே இவ்வுடம்பானது இயங்குகின்றது. இதனைச் சித்தர்கள்,

அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்தில் உள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும்போதே - (சட்டை முனி. 50)

உடம்பில் ஏற்படுகின்ற மாற்றங்களாகக் கண்டறிய நாள், கோள், கிரகங்களின் நிலைகள், செயற்பாடுகள், அஷ்டமி, அமாவாசை முதலான நாட்களையும் மருத்துவன் அறிந்திருக்க வேண்டும்.

ஒழுக்கமும் அகவாழ்வும்

ஒழுக்கம் விழுப்பந் தருவதால் அது உயிரினும் சிறந்ததென்கிறார் வள்ளுவர். இதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள். 131)

என்பதில் உளநோய் மருத்துவரின் கருத்தைக் கொண்டு ஆழமாக விவரிக்கின்றார். அன்பு, கருணை, சமத்துவம், சகோதரத்துவம், உண்மையை உணர்தல் என்பனவற்றின் மூலமே ஒருவருக்கு நல்லொழுக்கம் கைகூடுகின்றது. அகவாழ்வுக்குரிய வாழ்வியல் தத்துவத்தைச் சங்கப் புலவர் அனுபவ ரீதியாகக் கூறும்போது,

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே (புறம். 191 : 1 - 6)

சமுதாய போதனையை முன்னிறுத்தி ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்தனர்.

முடிவுரை

ஐம்பூதக் கோட்பாடு, நோய், சுரநோய், மகப்பேற்று வைத்தியம், மருத்துவத்தில் சோதிடம், ஒழுக்கமும் அகவாழ்வும், நீண்டகால வாழ்க்கை என வரும் பகுதிகளின் மூலம் மருத்துவத்தினைப் பற்றியும், சங்கப் பாடல்களில் மருத்துவம் எங்ஙனம் கையாளப்படுள்ளது பற்றியும் நன்கு அறிய முடிகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற புறநானூற்றுப் பாடலின் கருத்துக்களைப் பின்பற்றுவதே சித்த மருத்துவத்தின் நெறிப்பாடாகும் என்பதை அறிய முடிகிறது.

திருச்செங்காட்டாங்குடி அருள்மிகு உத்திராபதீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள்

திருமதி.க.சரஸ்வதி, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை-609 001.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் ஆலயங்கள் எண்ணற்றவை உள்ளன. அகமும், புறமும் ஆன்மீக நெறியும் தமிழ் நாட்டின் அழியாத மரபுகள். அருளாளர்கள் எண்ணற்றோர் தெய்வ அருள் திளைக்கின்ற இடங்களை அடையாளங்காட்டி ஆலயங்களைக் கட்டி வைத்து ஆண்டவனை உணர வைத்தனர்.

சிவன் கோவில்களில் சைவ சமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடல் பெற்ற தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், பிற புலவர்களால் பாடல்கள் பெற்ற தலங்களும் பெரும்பான்மையாக உள்ளன. அத்தகைய தலங்களில் ஒன்று திருச்செங்காட்டாங்குடி. இது சோழவள நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. நன்னிலம் புகை வண்டி நிலையத்தில் இருந்து கிழக்கே ஏறக்குறைய ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

மகத நாட்டை ஆண்ட மகத மன்னனின் புதல்வனான யானைத் தலையும், அசுர உடலும் கொண்ட கஜமுகாரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். அவன் கொடுமை தாளாமல் அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். உடனே சிவன் விநாயகரைத் தோன்றச் செய்து கஜமுகனை வெல்லுமாறு செய்தார். கஜமுகனின் உடம்பிலிருந்து இத்தலமெங்கும் குருதி பரவியது. அதனால் இவ்வூருக்கு "செங்காடு" எனப்பெயர் ஏற்பட்டது. இவ்வாறு செந்நிறக்காட்டின் இடையே அமைந்து குடியிருப்புகள் அதிகம் நிறைந்த பகுதியாய் காணப்படுவதால் "திருச்செங்காட்டாங்குடி" என்றும் பெயர் பெற்றது.

இத்தலத்தின் பெருமையும் சிறப்பும் பரஞ்சோதியார் வாழ்ந்தமையால்தான் விளைந்தது என்று கூறலாம். இவருடைய தவவாழ்வு தமிழ்நாட்டிலேயே அன்பு நெறியின் உச்சக்கட்டத்தை அடைந்த ஒன்றாகும்.

பரஞ்சோதியார் திருச்செங்காட்டாங்குடி வேதியர் குலத்தில் அவதரித்து முதலாம் மகேந்திர பல்லவரின் நம்பிக்கைக்குரிய தளபதியாகி வேத அத்யானமும் மந்திரிந்த் தொழிற்குரிய வில்வித்தை முதலியவைகளைக் கற்று வல்லவராய் திகழ்ந்து வந்தார். இவர் சிறந்த சிவபக்தர். சிவ பெருமானையன்றி முழுமுதற் கடவுளில்லை என்றும் சிவனடியார்களுக்கு அமுதளித்து வழிபடுதலும் நாள்தோறும் தவறாமல் செய்து வந்தார்.

அப்பொழுது பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் கி.பி.642-ம் ஆண்டில் இவரை வடநாடு சென்று பகைவனை வெல்லுமாறு கூறி சேணைத் தலைவராக அனுப்பினான். இவர் சென்று வென்று சாளுக்கியர்களுடைய நகரை பாழாக்கி சாளுக்கியருடைய யானைகளையும், குதிரைகளையும் மற்ற செல்வங்களையும் கவர்ந்து சென்று நரசிம்மவர்மனின் முன்வைத்தார். அப்பொழுது பரஞ்சோதியார் அங்கிருந்த ஒரு விநாயகப் பெருமான் திரு உருவையும் தனக்கென கொண்டுவந்தார். அதனை

செங்காட்டாங்குடிக் கோயிலில் எழுந்தருளச் செய்து நித்ய பூஜைகள் செய்ய நிபந்தங்கள் வைத்து வழிப்பட்டார்.

பரஞ்சோதியார் சிவப்பணியிலும் சிவனடியார்களை வழிபடுவதிலும் சிறந்தவராக விளங்கி வருவதைக் கண்ட பல்லவ மன்னன் இத்தகைய சிவபக்திமானை நாம் ஓர் அலுவலராகச் சேனைத்தலைவராக வைத்துப் பணிக்கொள்கிறோமே என்று எண்ணி இவருக்கு வேண்டிய நிதி கொடுத்து உம்முடைய கருத்தின்படி சிவத் தொண்டில் ஈடுபடலாம் என்று கூறி அனுப்பினார்.

பரஞ்சோதியார் நாள்தோறும் சிவனடியார்களை அழைத்து வந்து அவர்களைச் சிவமாகவே பாவித்து அவர்களுக்கு அறுசுவை அமுதூட்டி வந்தார். இவர் சிவன் அடியார்களுக்கு முன்பு “தான் மிகச் சிறியவன்” என எண்ணி நடந்து வந்ததால் இவர் “சிறுத்தொண்டர்” என்று அழைக்கப்பட்டார்.

திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சிறுத்தொண்டர் அழைத்ததின் பேரில் இத்தலத்திற்கு வந்து சிறுத்தொண்டரைப் போற்றி பாடியுள்ளனர். இருவரும் சிறுத்தொண்டரின் சிவபக்தியினையும் உயர் குணங்களையும் உயர்த்திக் கூறியுள்ளனர்.

இக்கோயில் கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுகள் அதிகமாக காணப்படுவதால் இக்கட்டுறை மூன்றாம் குலோத்துங்கன் கால கல்வெட்டுகளை எடுத்தியம்புகிறது.

இக்கோயிலில் சுமார் நாற்பத்திரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டின் மூலம் நாம் கோயிலின் வரலாறு மற்றும் பலசெய்திகளை அறிய முடிகின்றது.

திருச்செங்காட்டாங்குடி கோயிலில் சோழ மன்னர்களான உத்தமசோழன், முதலாம்இராசராசசோழன், முதலாம் இராஜாதிராஜசோழன், முதலாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்கசோழன், இராஜேந்திரசோழன் போன்றோர்கள் காலகல்வெட்டுகளும், விஜயநகர வேந்தர்கள வீரவிருப்பண்ண உடையார், வீரபூபதிராய உடையார், போன்றோர்களது கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

மூன்றாம் குலோத்துங்கனின் முதலாம் ஆட்சி ஆண்டின் கல்வெட்டு (கி.பி1178) ஒன்று இக்கோயிலின் மகா மண்டப வடவாயில் கீழ்புறச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டில் இக்கோயில் திருக்கண்ணபுரம் இராமநதீச்சர கோயிலைச் சேர்ந்தது என்ற செய்தி உள்ளது.

மூன்றாம் குலோத்துங்கனின் பதினெட்டாம் ஆண்டின் (கி.பி 1188) கல்வெட்டு மகாமண்டப வடபுற சுவரில் உள்ளது. இக்கல்வெட்டில் நிலங்கள் காணிக்கையாக அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கனின் பதினெட்டாம் ஆண்டின் (கி.பி1196) கல்வெட்டு ஒன்று மகாமண்டப வடபுறச்சுவரில் உள்ளது. இதில் சீராளப் பிள்ளையாருக்கு வேண்டிய அர்ச்சனை செலவுக்கு நிலம் கொடுத்த செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டில்

மற்றொரு கல்வெட்டும் கோயில் மகாமண்டபத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் சீராளப்பிள்ளை ஊர்வலத்திற்காக நிலம் கொடுத்த செய்தி உள்ளது.

மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தி இரண்டாம் ஆண்டு (கி.பி1200)கல்வெட்டு ஒன்று வாதாபி சன்னதியில் மேற்குபுறச் சுவரில் உள்ளது. இதில் நெல் காணிக்கையாக கொடுக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

மேலும் கி.பி 11,12 ம் நூற்றாண்டு என்று கணிக்கப்பட்ட கல்வெட்டுகள் இரண்டு உள்ளது. மகாமண்டப ஆதிட்டானத்தில் ஒன்றும், கோயில் மகாமண்டப வடப்புறச்சுவரில் ஒன்றும் உள்ளது. இவைகளில் தேவதானமாத நிலம் அளித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகள் இல்லாமல் பல மன்னர்களின் பெயர் தெரியாக் கல்வெட்டுகளும் இருக்கின்றன. அவையாவும் கோயிலுக்கு தானமாக நிலம் அளித்ததையே கூறுகின்றன.

இக்கோயிலில் உள்ள வாதாபி கணபதி இறைவனை வழிப்பட்டதால் 'கணபதீச்சுரம்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. சைவ சமய பெரியார்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். விநாயகர் கஜமுக அரக்கனைக் கொன்ற பாவம்தீரச் சிவபெருமானை வழிபட்ட தலம், இறைவன் பைரவத் திருக்கோலத்துடன் சிறுதொண்டருக்காக எழுந்தருளி வந்து வீற்றிருக்கும் தனிப்பெருமை படைத்த தலம். இக்கோயில் கலை வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் ஓர் இருப்பிடமாகத் திகழ்கிறது.

துணை நூற்பட்டியல்

1. பத்மாவதி,ஆ - தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் (நன்னிலம் கல்வெட்டுகள்) முதல் தொகுதி – 1979.
2. பிற்காலச்சோழர் வரலாறு - தி.வை.சதாசிவ பண்டாரத்தார்
3. திருஞான சம்பந்தர் - தேவாரம், மூன்றாவது திருமுறை, பன்னிருதிருமுறை வெளியீடு, தருமபுரம்,1954.
4. இராசமாணிக்கனார். மா - சைவ சமய வளர்ச்சி ஞானசம்பந்தர் அச்சகம் தருமபுரம், 1972
5. செல்லம்.வே.தி - தமிழக வரலாறும் பண்பாடும், மதுரை பப்ளிஷிங் □வுஸ், மதுரை,1976.
6. கந்தையாப் பிள்ளை - தமிழகம், கழகவெளியீடு. 1972
7. ஆறுமுக நாவலர். கே - இந்துமத பாலபாடம், ஞானசம்பந்தர் அச்சகம், தருமபுரம், 1976.
8. பிள்ளை.கே.கே-சோழர் வரலாறு, சென்னை, 1998.
9. சேதுப்பிள்ளை.இரா.பி – தமிழகம் ஊரும் பேரும், கழக வெளியீடு, 1946.

தஞ்சை மராட்டியர் கால மருத்துவமனை

முனைவர் சு. சாந்தி, உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, குந்தவை நாச்சியார்அரசு மகளிர், கலைக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்

தஞ்சை மராட்டியர் காலக் கட்டடக்கலையின் வளர்ச்சிக்கூறுகள், கட்டுமானச்சிறப்புகள் கட்டடக்கலையில் ஏற்பட்ட மாற்றங்கள், மன்னர்களின் கொடை, தானம், வீடுகள், கோயில்கள், நீர் வசதிகள், சத்திரங்கள், மருத்துவ வசதிகள் போன்றவை ஆகும். அவ்வகையில் தஞ்சை மராட்டியர்களின் அரிய பணிகளில் ஒன்று மருத்துவமனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததாகும். மரபு நிலையில் மருத்துவத்தை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டிருந்தனர் என்பதைப் பல்வேறு மோடி ஆவணங்கள் புலப்படுத்துகின்றன. ஐ ம் துளஜா தன்வந்தரி சாரநிதி என்னும் ஆயுர்வேதம் பற்றிய வைத்திய நூலை இயற்றியுள்ளார்.[1]

தன்வந்திரி மகால் (ஓபல் நாயக் பங்க்)

தற்போதைய இராஜா உயர்நிலைப்பள்ளியின் கிழக்குப்பகுதி முழுவதும் ஓமல் நாயக் பங்க் என்ற பெயரால் அழைக்கப்பெற்றது. இது சரபோஜி மன்னர் காலக் கட்டடமாகும். அரசு அலுவலர் ஒருவர் இருந்த இடமதல் கூடும். இப்பகுதியில் தன்வந்திரி மஹால் இருந்ததாகவும் மருந்து வாங்கக் கூடிய இடமாகவும் கருதப்படுகின்றது.[2]

இங்கு பறவைகள், விலங்கினங்கள், மனிதர்கள் எனப் பலரும் பயன்படும் வகையில், மருத்துவ வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இங்குப் பல மருத்துவர்கள் பணி செய்தும் வந்துள்ளனர் இதனை.

“தன்வந்திரி மகால் - வைத்தியரின் சங்கதிகளை எழுத யுக்தசாலையிலிருந்து நகல் கடுதாசிகள் 4 ஹுஜுர் மகாலிலிருந்து பேனா 4, பென்சில் 4” என்ற குறிப்பாலும்[3].

தற்போதைய மேற்கு காவல் நிலையம், பொதுப்பணித்துறைப் பொறியாளர் அலுவலகம் ஆகியவை அடங்கியதே ஹீஜீர் மஹாலாகும். இரண்டாம் சிவாஜி மன்னரின் ஆசைக்குரிய பெண்கள் சிலரும் அவர்களது குழந்தைகளும் இங்கு வசித்தனர் என்பதை மோடி ஆவணம் வாயிலாக அறிவதால் தற்போது பீட்டர் உயர்நிலைப்பள்ளியின் விளையாட்டு திடலாக விளங்கும் பகுதி மராட்டியர் காலத்தில் ஹீஜீர் மஹால் தோட்டம் என அழைக்கப்பட்டது. என்ற மோடி ஆவணக் குறிப்பாலும்[4].

கி.பி. 1858 இல் தன்வந்திரி மகால் சௌ. காமாட்சியம்பாபாயி சாகேப் அவர்களுக்கு ஸ்நானத்திற்குத் தைலம் தயார் செய்வதற்கு வில்வவேர் சேர் 15, நன்னாரி சேர் 3 என்ற குறிப்பாலும்[5].

கி.பி. 1859 இல் தன்வந்திரி மகால் லாயத்தில் ஆறுமுகம் என்பவனுக்குக் காயம் ஏற்பட்டதினால் பட்டிகட்டுவதற்கு மருந்து வைத்தியர் “தேவாஜி கோவிந்தராவ் ஜாபிதா “என்ற பெயர் குறிப்பாலும்[6].

தஞ்சை மராட்டியாரின் ஆட்சிக் காலத்தில் தஞ்சை அரண்மனையின் ஒரு பகுதியிலும், மற்றொன்று தெற்கு வீதியிலும் மருத்துவமனைகள் இருந்துள்ளன. என்பதை மோடி ஆவணச் செய்திகளின் வாயிலாக உறுதி செய்யப்படுகின்றது. இம்மருத்துவனைகள் தன்வந்திரி மகால், ஆரோக்கியசாலை எனப் பெயரிட்டழைக்கப்பட்டன.

மருத்துவத்துக்கெனத் தனித்ததொரு கட்டடம் இருந்தும் செயல்பட்டதும் மராட்டிய மன்னர்களின் மேலை பண்பாட்டின் தொடர்பாக ஏற்பட்ட விளைவுகள் எனக் கருதலாம். "தன்வந்திரி மகால் சம்பளம் மட்டும் கி.பி 1858 ஆம் ஆண்டு பன்னிரண்டு மாதங்களுக்கு ரூ2262-2-1 கொடுக்கப்பெற்றது எனக்குறிப்பு இருப்பதால"[7] அங்கு பல வைத்தியர்கள் இருந்துள்ளமை அறியமுடிகின்றது. மருத்துவ தொடர்புடைய ஓவியவரைவுகளும் சரசுவதிமகால் நூலகத்தில் மிகுதியாகச் சேகரிக்கப்பட்டுள்ளன என்பதும் தன்வந்திரி மகால் வைத்திய சாலை ஏற்பட்டதின் பயனாகக் கருதலாம்.

அவுஷதக் கொட்டடி

மருந்துகள் எல்லாம் வைக்கப்பட்டிருந்த அறை அவு'தக் கொட்டடி என அழைக்கப்பட்டது. பல்வேறு விதமான மாத்திரைகள், லேகியங்கள் கற்கம், மசாலா முதலிய மருந்துகள் இவ்வறையில் வைக்கப்பட்டு, யார் யார்க்கு கொடுக்குமாறு ஆணை வருகிறதோ அவர்களுக்கு அம்மருந்துகள் முதலியன அளிக்கப்பெற்றன. அவு'தக் கொட்டடி தன்வந்திரி மகாலின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. என்பதை

"அவுஷதக் கொட்டடி" முத்துசாமியிடத்தில் "சுவ்ர்ண மாலிகா வசந்த மாத்திரை" ஒன்று "அசுவகெந்தாதி லேகியம்" ஒரு சேரும், வாங்கிச் சாவடி ஆதினம் சாயங்காலத்தில் நான் அக்காவிடத்தில் கொண்டு போய் கொடுத்து அவர்களும் வெங்கோஜி பண்டிதர் இடத்தில் சேரப் பண்ணினார்கள் என்ற ஆவணச் செய்தியால்[8] அவுதக் கொட்டடி என்பது மருந்துகள் வைத்திருக்கும் கட்டடம் என்பதை அறியமுடிகின்றது.

இந்த மருத்துவக் குறிப்பில் (Recipe) வைத்தியர் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற எல்லாவற்றிலும் வைத்தியர் பெயர் கொடுக்கப்பட்டிருத்தல் கூடும். மருந்தினால் ஏதாவது குறைபாடு ஏற்படின் மருத்துவக் குறிப்பு கொடுத்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு இப்பெயர்க்குறிப்பு உதவுகின்றன.

தாமஸ் ஹால் கட்டடம்

கி.பி. 1875 ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டின் இளவரசர் தென்னிந்தியாவிற்கு வருகை புரிந்துள்ளார் அவரது வருகையின்போது "வேல்சு", இளவரசர் மருத்துவப்பள்ளி என்ற பெயரில் ஒரு மருத்துவப்பள்ளி தஞ்சையில் தொடங்கப்பட்டது. இந்த மருத்துவப்பள்ளி சுமார் 50 ஆண்டுகளாகச் சிறந்த நிறுவனமாகச் செயல்பட்டு வந்தது. பின்னர் 1933 இல் மூடப்பட்டு விட்டது. தஞ்சையில் மருத்துவக் கல்விச் சிறப்பினை உணர்ந்த ஆங்கிலேயர் "ஹென்றி சல்லியன் தாமஸ்" என்பவர் கி.பி. 1876 இல் ஒரு மருத்துவமனையைக் கட்டினார். முதலில் இந்த மருத்துவமனை அரண்மனை தோட்டமாகிய இராணி பூங்காவில் கட்டப்பட்டது. இந்த இடத்தை கொடையாக வழங்கியவர் மன்னர் இரண்டாம் சிவாஜியின் மனைவி "காமாட்சியம்மாபாயி" அவர்களாவார். மருத்துவமனைக்குரிய 40 ஏக்கர் நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.[9] இந்த 40 ஏக்கர் நிலமும் தஞ்சைப் பெரிய கோயிலின் முன்பகுதியில் அமைந்திருந்த இராணி பூங்காவாகும்.

இந்த மருத்துவமனையில் பல்வேறு பெரியவர்கள் அளித்த கொடைகளால் பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் தவத்திரு இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், பூண்டி வீரையாவாண்டையார் கபிஸ்தலம் துரைச்சாமி மூப்பனார், பொறையாறு தவசிமுத்து நாடார், டி. கோபால கிரு'ணபிள்ளை போன்றவர்களால் பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

தற்பொழுது அரசினர் இராசா மிராசுதார் மருத்துவமனை என்று அழைக்கப்படும் இந்த மருத்துவமனையிலுள்ள அவசர நோயாளிகள் பகுதியாக விளங்கும் தாமஸ்ஹால் என்னும் கட்டடத்தில் சிவாஜி மன்னரின் துணைவியார் காமாட்சியம்மா பாயின் பெயர் குறித்த செய்தியை

This Hospital
Was built
On the site presented by
Her Higherss the princess at Thanjore JOCJ
By the voluntary contributions of
The District
A.D. 1879

என்ற ஆங்கில மொழிக் கல்வெட்டு அம்மையாரின் கொடையைக் குறிப்பிடுவதாக அமைகின்றது.[10] தற்பொழுது இந்தக் கல்வெட்டானது தாமஸ் ஹாலின் முகப்பில் தென்கீழ்மூலையின் அடிப்பகுதியில் உள்ளது.

தஞ்சை மராட்டியகால மருத்துவமனைகளில் தன்வந்திரி மகால் அரண்மனையில் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு, வைத்தியத்திற்கு வேண்டிய மருந்துகள் வைக்கப்பட்டிருக்கும் அறையாக "அவு'தக் கொட்டி" என்ற கட்டடம் தன்வந்திரி மகாலின் ஒரு பகுதியாகவும் செயல்பட்டிருந்துள்ளது பின்னர் கி.பி.1876-ல் ஹென்றி சல்லியன் தாமஸ் என்பவரின் முயற்ச்சியாலும் காமாட்சியம்மாபாயின் நன்கொடையாலும் பெரியவர்களின் உதவியாலும் பெரிய மருத்துவமனையாக உருவாக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. கே. எம் வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், 1984 ப. 335
2. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர் ப. 335
3. Bundle No.1 S.B. 280 Year 1834
4. Bundle No. 2 Vol: No. 30 Year 1848
5. கே.எம். வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய
   வாழ்க்கையும், 1984, ப.290
6. மேற்படி. ப. 290
7. ச. ம. மோ. து. 3-6
8. மோ. ஆ. கு 7 – 830
9. செ. இராசு. நெஞ்சை அள்ளும் தஞ்சை 1994, ப. 33
10. செ. இராசு. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் 1987 ப. 16

———

தமிழ் இலக்கியத்தில் மகளிர் மருத்துவம்

ஆ. சாந்தி ஒலிவியா, முனைவர் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

தொல்காப்பியர் பெண்களின் பருவங்கள் ஏழுவகை எனக் கூறியுள்ளார். அவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பவையாகும்.

"ஊரோடு தோற்றம் உரித்தெனமொழிப" (தொல். 83)

பேதை என்பது 5 வயது முதல் 9 வரையுள்ளவை. பெதும்பை என்பது 10 வயது முதல் 16 வரையுள்ளவை. மங்கை என்பது 13 வயது முதல் 16 வயது வரையுள்ளவை. மடந்தை என்பது 16 வயது முதல் 20 வயது வரையுள்ளவை. அரிவை என்பது 20 வயது முதல் 25 வயது வரையுள்ளவை. தெரிவை என்பது 25 வயது முதல் 30 வயது வரையுள்ளவை. பேரிளம் பெண் என்பது 30 வயது முதல் 40 வயது வரை. இந்த ஏழு பருவங்களிலும் வயதளவையும் உணர்ச்சிகளையும் உடல் அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு தித்தினி, பத்தினி, அத்தனி, சங்கினி என நான்கு தன்மையினர் இருப்பதாக வீரமாமுனிவர் கூறுகிறார்.

குழந்தைப்பேறு

12 வயது தருணிப் பருவம் கர்ப்பத்திற்கான பருவமெய்துங்கால் என்று பிரிவுடைப் பருவம். 16 வயது கர்ப்பந்தரிக்க ஏற்ற பருவம் என்றும் 45 வயது குழந்தைப் பேறுரும் காலம் முடிவடையும் என்றும் விளக்கம் தருகிறார். ருதுவாகும் நான்காவது நாள் முதல் பன்னிரண்டாவது நாள்வரை கருவுருவாவதற்கு இசைந்தகாலம் என்று குறிப்பிடுகின்றனர். எனவே திருமணம் ஆகி குழந்தை பெற,

"பூப்பின் பிறப்பாடீராறு நாளும்
நீத்த கன்றுரை யாரென் மனார் புலவர்
பரத்தையர் பிரிந்த காலையான" - (தொல். பொருள். 46)

விரும்புவோர் பூப்பும் புறப்பட்ட 12 நாள்கள் கரு உருவாகும் என்பதை தொல்காப்பியர் கூறுகிறார்.

குழந்தைப்பேறு இல்லாதவர்கள்

திருமணமாகிய பெண்ணுக்குக் குழந்தை இல்லையென்றால் அந்தப் பெண்ணை காரணம் காட்டி ஒதுக்கிவைப்பதை,

"மாண்ட குணத்தொடு மக்கட்பேறில்லென்னும்
பூண்டான் கழித்தற் கருமையால் பூண்ட
பீடியென்னும் காரணத்தின் மேன்முறைக் - கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்" - (நாலடியார் 56)

இப்பாடல் விளக்குகிறது. ஒரு பெண் கருவுருவாகாமல் இருப்பதற்குப் பெண்மட்டும் காரணம் அன்று. ஒரு பெண் கருவுறாமல் இருப்பதை மலடு என்ற சொல்லால் பெண்களில் மலடு இல்லை (ஆண்மைக் குறைவு ஏற்படுவதில்லை என்று உறுதிபட சொல்வதை அறிவியலுடன் அதன் உண்மையுடன் பொருந்திப் பார்க்கலாம்). இவர் கூறுவதிலிருந்து பெண்கள் அண்ட செல்லிற்கு வீரியம் குறைவதில்லை என்பதை உணர முடிகின்றது. குழந்தை இல்லாத பெண்ணை குறைகூறும் சமூகத்திற்கு

இதனை அறிமுகப்படுத்துவது அவசியமான ஒன்றாகும் *(கண்ணகி கலை வேந்தன், 2005:180).*

மகப்பேறு அடைய முடியாததற்கான காரணங்கள்

1. கருக்குழியினைச் சுற்றி மாசு படர்ந்து இருந்தால் விந்து உள்ளே செல்ல முடியாது.
2. கருக்குழியில் வாயு நிறைந்திருந்தால் விந்து உள்ளே செல்ல முடியாது.
3. கருக்குழியை மூடி தசை வளர்ந்திருந்தால் விந்து செல்லாது.
4. கருக்குழியில் சிறு புழுக்கள் நிறைந்திருப்பின் விந்து செல்லாது.

குழந்தைப்பேறு உண்டாவதைத் தடுக்கும் உட்புற நோய்களையும் பெண்ணைக் கருவுறாமல் தடைசெய்யும் நோய்களைப் பத்து வகையான வரிசைப்படுத்தினர். வாதமலடு; 2. பித்தமலடு; 3. அய்யமலடு; 4. திமிர்மலடு; 5. அலகை மலடு; 6. பெற்ற மலடு; 7. சோலை மலடு; 8. புழுமலடு; 9. வாயு மலடு; 10. வறட்சி மலடு. இந்த நோய்களோடு புழுவு, விற்புருதி சூலை, கற்சூலை, இரத்தசூலை எனத் தடைகள் இருப்பின் அதற்கான மருத்துவ முறைகளையும் இந்நூலில் பரந்து படக்கூறுகின்றாள்.

கருவுறுவாதலுக்கான மருந்து

கர்ப்பம் தரிக்க வேண்டிய காலத்தில் கர்ப்பம் தரிக்காமல் இருந்தால் அதற்கான மருந்து, விளக்கெண்ணெய் ஒருபடி எடுத்து, சிற்றாமணக்கு இலை, விழியிலை, வேளை இலை, நிலவாகையிலை இவைகளின் சாற்றையும் நன்கு மணக்கின்ற கஸ்தூரி மஞ்சள் இந்துப்பு, வெண்பூண்டு, வெண்காரம், கடுகு இவைகளை அளவோடு எடுத்து அரைத்து ஒன்றாகக் காய்ச்சி அடர்கள்ளிப்பால் இரண்டு கழஞ்சு சேர்த்து நன்கு மணக்கும்படி சூதக நாள்களில் கடைசியளவு முறைப்படி உண்ண வேண்டும். பத்தியத்துடன் இருந்தால் நீண்ட நாள்களாக உள்ள வாயு முதலாக வயிற்றுநோயும் மிகக் கொடிய விற்புருதி கர்ப்பசூலை நீங்கும். நீரக் கஞ்சியும் முறைப்படி உண்ணவேண்டும். நீரக்கஞ்சியும் முறைப்படி செய்த நெய்யையும் உண்டு வந்தால் பெண்கள் நல்லுடம்பு எய்தி சிறந்த மக்களைப் பெறுவர்.

சர்வாங்க தைலம்

திப்பிலியும், கிராம்பு நீர்விட்டு அரைத்து வடிகட்டி இந்துப்பு, மேல் பொடியிட்டு கொடுத்தால் கொடிசுற்று மாறும் என்றும் பதிமூன்று வகையான சன்னிகள், ஐந்து வகையான வலிகள் இவற்றிற்கு ஏற்றமருந்து சர்வாங்கத்தைலம் என்று தமிழர்களின் மூலிகை மருத்துவத்தினை உலகிற்கு அகத்தியர் கொடையாக அளித்துள்ளார் என்றால் மிகையாகாது.

குழந்தைப் பிறப்பு: பாலினம்

ஆண் பெண் புணர்ச்சியின் போது விந்து செல்லானது வலப்பக்கமாக சென்றால் ஆண் குழந்தையும், இடப்பக்கமாகச் சென்றால் பெண் குழந்தைப் பிறக்கும்.

கருவுறுதல்

உயிர்கள் தோன்றக் காரணம் காரியம் யாவுமே இறைவன் திருக்கருணை ஆணின் சுக்கிலமும் பெண்ணின் சுரோணிதமும் ஒன்றுடன் ஒன்று கலப்பதால் கருவானது தோன்றுகிறது. எல்லாக் காலங்களிலும் இவ்வினை செயலானது இல்லை. ஒரு ஆத்மாவானது எந்த நேரத்தில் எவ்வடிவத்தில் உருவாக வேண்டும் என்பது முன்வினைப்பயனை புருடத் தத்துவத்துடன் ஈசன் இணைக்கும்போதுதான் நடைபெறும்.

ஆணின் உடலில் இரண்டு மாதங்கள் தங்கியிருக்கின்ற சுக்கிலமாகிய கருவானது வினையின் காரணமாக பெண்ணின் சுரோணிதத்தோடு கலக்கும் போது இறைவன் கருவாகின்ற ஆத்மாவின் முன் வினையாகி இறப்பின்போது பிரிந்து நிற்கின்ற 24 தத்துவங்களைப் புருடத்தத்துவத்துடன் ஏற்றும் போதே கருவாகி தாயின் கருப்பையில் ஈரைந்து மாதங்கள் வளர்கின்றது.

ஆண் பெண் தன்மை பாலினம்

போகத்தில் ஈடுபடும் இருவரில் யாருடைய தன்மை அதிகமாகின்றதோ அப்பண்பையே குழவியும் அடைகின்றது. ஆண் மிகில் ஆணாகவும் பெண்மிகில் பெண்ணாகவும் உருவாகும். போக காலத்தில் ஆண்பெண் இருவரும் ஒத்துப் பொருந்தும் போது உருவாகும் கருவானது. அலியாகவே பிறக்கும் என்கிறார் திருமூலர்.

"ஆண்மிகில் ஆணாகவும் பெண்மிகிற் பெண்ணாகவும்
பூணிரண்டொத்துப் பொருந்தில் அலியாகும்"
"தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்"
- (சொல் (487 கிளவி வரி 3)

உயிர் கருவாவதற்கு முன்னால் வரை இத்தகு பேதங்கள் இல்லை என்றபோதும் தாய் தந்தை வழியே பிறவியானது அமைகின்றது.

அழகும் ஆயுளும் உள்ள உயிரில் குறைபாடு

இருவர் மட்டுமே நிகழ்கின்ற போக காலத்தில் சுக்கிலம் சென்றடைய வாயுவே காரணமாக அமைகின்றது. அவ்வாறு பாய்கின்ற வாயுவானது குறைவாக இருந்தால் குட்டையான சிசு தோன்றும். மத்திமமாக வாயு பாயும் போது கூனாகிய சிசுவே தோன்றும் என்றார்.

போக காலத்தில் கருக் கொண்ட நாள்களிலும் தாயானவள் தம்முள் சலம், மலம் என்ற அழுக்குகளைத் தாங்கியவளாக இருந்தால் தோன்றும் கருவானது குறையுடையதாகவே வளரும். தாய் வயிற்றில் மலம் மிகுந்திருந்தால் கருவானது மந்தமாக மாறுகின்றது. சலம் மிகுந்தால் ஊமையாகப் பிறக்கின்றது. மலம், சலம் இரண்டும் மிகுந்திருந்தால் அச்சிசுவானது கண்ணிழந்தே தோன்றி வளர்கின்றது.

பிராணவாயுவானது தாய் தந்தைக்கு நல்நிலையில் ஒத்தெழும்போது நல்ல அழகான சிசுவானது உருவாகின்றது.

கருச்சிதைவு

சங்க காலத்தில் கருச்சிதைவு பெண்ணுக்கு ஏற்படுவது பாவச் செயலாகக் கருதப்பட்டது. கருச்சிதைவு செய்வதற்குத் தடை கூறப்பட்டது.

"மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
... உய்தி இல்லையென அறம்பாடிற்றே" - (புறம். 34)

"பூப்புப் புறப்பட்ட மூன்று நாளும்
தீண்டாநாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின்
ஈராறு நாளும் இறவற்க என்பதே
பேரறிவாளர் துணிவு" - (ஆசாரக். 29)

பூப்புப் புறப்பட்ட மூன்று நாள்களும் போகத்தில் ஈடுபட்டால் கரு வயிற்றில் தங்கி அழியும் என்று கருச்சிதைவு பற்றித் தொல்காப்பியர் கூறுகின்றார்.

மேனியில் ஏற்படும் தேமல்

மேனியில் ஏற்படும் தேலை சுணங்கு என்றனர். தேமல் மார்பின் மேலும் முகங்களின் மேலும் தொடைகளிலும் காணப்படும் என்பர்.

"பொன் பொதிந்தன்ன சுணங்கின்" - (நற். 26)

"பொன்னென ஆகந்த ரும்பிய சுணங்கும்
பொன்போல் மார்பில் தோன்றும் தேமல் என்றும்,
தித்திக் குறங்கின் திருந்த" - (அகம். 385)

தேமல் பொருந்திய தொடையாள் என்றும் கூறப்படுகிறது. தேமல் பசிய மலர்கள் போலவும் தாழம்பூ போலவும் மஞ்சள் கலந்த சிவப்பு நிறமாகவும் பொன்னைப் பொதிந்து வைத்தாற்போலவும் பொன் நிறத்தில் மார்பில் தோன்றுவது என்றும் கூறுவர். இதுவே சுணங்கு என்பதாம். தலைவனைப் பிரிந்த தலைவிக்கு குளிக்காமல் சாப்பிடாமல் இருப்பதால் மேனியில் தோன்றும் ஒரு நோய் ஆகும். புறத்தூய்மை இல்லாதவரிடம் தோன்றுவதாகும். அதனால்தான் காமவயப்பட்ட மகளிரிடம் தோன்றும் என்று கூறியுள்ளார்.

புனிற்று நீராடுதல்

தாய் மகப்பேறு அடைந்தவுடன் 16-ஆம் நாள் தாயையும் குழந்தையையும் நீராடவைத்து தீட்டுக்கழித்து அவர்களுடைய உடல்நலத்தைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

"திருந்திழை அல்குல் பெருந்தோள் குறுமகள்
மணிபேர் ஐம்பால் மாசறக்கழீஇக்" - (நற். 366)

வெண்சிறு கடுகால் ஆன எண்ணெயைத் தேய்த்துக் குளிப்பதால் சோர்வும் களைப்பும் தீர உறங்குவாள்.

"பூ"க்கின்ற "பூ"வையரும் "பூ"ஜிக்கப்படும் "பூ"க்களும்

முனைவர் சி.சாவித்ரி, இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி,
தமிழ்ப் பல்கைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

"பூ" என்ற ஒற்றை எழுத்து மந்திரமே பூவையரைக் குறிக்கும் ஓர் ஒலிச்சொல் ஆகி பூவையரின் குணங்களையும், மென்மையையும் சித்தரிக்கும் உவமைச் சொல்லாக மணம் வீசுகின்றது. பூக்களில் மறைந்திருக்கும் தேன் போன்றே பூவையரும் இனிமையானவர்கள். பூவையரின் இனிமை குரலில் மட்டும் எதிரொலிக்கவில்லை., பூவையரை நினைத்தாலே மனது இனிக்கும். பூவையரோடு இணைந்து வாழ்ந்தால் ஆரோக்கியம் கூடும், ஆயுள் நீளும், வாழ்வே இனிமையாகும்.

தலையில் (தலைப்பில்) உள்ள நான்கு "பூ"க்களும் கீழ்க்காணும் நான்கு தலை சிறந்த பூவையருக்கு சமர்ப்பனம் செய்து அஞ்சலி செலுத்தி பூஜிக்கப்படுகின்றன. இந்த ஒவ்வொரு "பூ"வும் தான் பெற்ற சிறப்புகளை, அடைந்த பெருமைகளை, புகழை, செய்த சாதனைகளை, பின்னர் வந்த பூவையர் எவரும் இது வரை அடையவில்லை என்ற தனித்துவத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

1. அன்னை தெரஸா
2. வேலுநாச்சியார்
3. ஔவைப்பாட்டி
4. சாவித்ரி

அன்னை தெராஸா

உலக மக்கள் அனைவராலும் 'அன்னை' என மதித்துப் போற்றப்படும் அன்னை தெரஸா அயல் நாட்டில் பிறந்து வளர்ந்து படித்தவராயினும் அவர் அதிகமாக தொண்டாற்றியது, சேவை செய்தது எல்லாமே இந்தியத் திருநாட்டில்தான் என்றால் அது மிகையாகாது. "அன்னை" என்ற அடைமொழி அவரது பெயரோடு தானாக ஒட்டிக் கொண்டது எளிதான, தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. அவர் ஏழை, எளிய மக்களிடம் காட்டிய அன்பு, நோயாளிகளிடம் காட்டிய அக்கரை, இரக்கம், மனிதாபிமானம், அனாதைகள் மற்றும் முதியோர்களிடம் காட்டிய பரிவு, பாசம் மற்றும் அவர்களுக்காகச் செய்த சேவைகள், உதவிகள் போன்றவற்றால் பூலோகத்தில் யாருமே பெற இயலாத மதிப்பு, மரியாதை, அந்தஸ்து, கௌரவம், புகழ் அனைத்தையும் பெற்று பூவையருள் தலைச் சிறந்த பூவாக விளங்கி அன்னை என்ற அடைமொழியைப் பெற்று அகில உலகத்திற்கும் அன்னையாகிப் பூஜிக்கப்படுகின்றார்.

அவர் தன் குழந்தைப் பருவத்தில் இருந்தே தன் தாயால் நல்வழிச் சிந்தனைகளைப் பெற்றவர். தன் தாயின் அறிவுரையான "பகிர்ந்து உண்ணாமல் ஒரு வாய் உணவுக் கூட உண்ணாதே" என்பதை தன் வாழ்நாள் முழுவதும் தவறாமல் கடைப்பிடித்ததுடன் தரணி எங்கும் பசிப் பிணியைத் தீர்க்கக் கடுமையாகப் போராடியவர். தனது எட்டாவது வயதிலேயே சமுதாயப் பார்வையோடும், சமூகத்தை அக்கறையோடும் நேசிக்கத் தொடங்கியவர். தனது பன்னிரண்டாவது வயதில் சமயத்தில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு சமயப்பணிகளை மேற்கொண்டவர். தன்னையும்,

தன்வாழ்வையும் துன்பப்படும் மக்களுக்காக அர்ப்பணிக்கும் உயரிய நோக்கத்தில் கன்னியாஸ்திரியாக மாறியவர்.

துன்பப்படும் மக்களின் துயரத்தைத் துடைப்பதையே தனது வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட அவர் தனது பயணத்தை மதத்தின் மூலமாகவே தொடங்கி மத வழிபாடுகள், அது தொடர்பான சேவைகளைச் செய்து வந்தார். பின்னர் தனது லட்சியப் பாதையின் அடுத்த நிலையாக கல்கத்தாவின் சேரிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் பிணியுற்று வாழ்ந்த மக்களைத் தேடிச் சென்று அவர்களின் துன்பங்களைப் போக்கினார். இந்தியாவின் பல பகுதிகளில் எங்கெல்லாம் மக்கள் பஞ்சம், பசி, பட்டினி, வறுமை, பிணியில் உள்ளார்கள் என தேடித்தேடி உதவிகளையும், பணிவிடைகளையும் செய்து வந்தார். மேலும், சேவை நிறுவனத்தை தொடங்கி அதன் மூலம் உலக நாடுகள் அனைத்தில் இருந்தும் நிதித் திரட்டி அதைக் கொண்டு அனாதை இல்லங்கள், மருத்துவமனைகள், நடமாடும் மருத்துவமனைகள், தொழுநோய் சிறப்பு சிகிச்சை மையம் போன்றவற்றைத் தொடங்கினார்.

அந்தக் காலக்கட்டத்தில் மிகவும் கொடுமையான குணப்படுத்த இயலாத மிகவும் கொடூர வேதனை தரும் நோயான தொழுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களையும், அவர்கள் படும் துயரத்தையும், அவர்களைத் தொட்டு மருத்துவம் செய்யக்கூட யாரும் முன் வராத நிலை கண்டு பேரதிர்ச்சி அடைந்தார். அந்நோயாளிகளை அப்பிணியிலிருந்து காப்பாற்றுவதே தன் வாழ்வின் லட்சியமாகக் கொண்டு எவ்வித அருவெறுப்போ நோய்த் தாக்கும் பயமோ இன்றி தானே முன்வந்து முன் மாதிரியாகச் செயல்பட்டு அந்நோயாளிகளைத் தொட்டு, புண்களைச் சுத்தம் செய்து மருந்திட்டு சிகிச்சை அளித்து பல ஆயிரக்கணக்கானவர்களை குணப்படுத்தினார். உலக அளவில் தொழுநோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதில் பெரும்பங்கு நம் அன்னையையே சேரும்.

அவரது சீரிய அயராத சேவைகளுக்காக அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அந்த பரிசளிப்பு விழாவில் அவர் பேசும்போது இன்றைய அமைதியைக் கெடுப்பதில் மிக முக்கிய காரணியாக இருப்பது "கருக் கலைப்புத்தான்' என்பதை வலியுறுத்தினார். கருக் கலைப்பு என்பது மனித இனத்திற்கு இழைக்கப்படும் மிகவும் கொடுமையான அநீதி என்று அதனையும் எதிர்த்துப் போராடினார். கருக் கலைப்பு தடுப்புச் சட்டம் இயற்ற முக்கியத் தூண்டுக்கோராக இருந்தார். அவரைக் கௌரவப்படுத்தும் நோக்கத்துடன் அவரது நினைவாக "அன்னைத் தெராஸா பல்கலைக்கழகம்" தொடங்கப் பெற்று கல்விப்பணியும் தொடர்கின்றது.

20-ஆம் நூற்றாண்டில் பூத்த இத்தகைய சிறப்பானப் "பூ" இம்மண்ணில் இருந்து உதிர்ந்தாலும் இன்றும் அவரது சேவைகள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களின் மனதில் அன்பு "பூ" வாக மலர்ந்து மனம் வீசிக்கொண்டிருக்கும் நம் அன்னையும் பூஜிக்கத்தக்கவரே.

வேலுநாச்சியார்

உலக வரலாற்றிலேயே ஆங்கிலேய சாம்ராஜியத்தை எதிர்த்து வீராவேசமாக போராடிய பூவையர்களின் பட்டியலில் சிறப்பான இடத்தைப் பெற்ற ஜான்சிராணி உட்பட பலரும் பாடப் புத்தகங்களில் இடம் பெற்று உலகை வலம் வந்து தங்களை

இவ்வுலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இச்சூழலில் அப்பட்டியலின் மணி மகுடமாக விளங்பவர் வேலு நாச்சியார்.

சூரியன் அஸ்தமிக்காத நாடு எனப் பெருமையோடு மார் தட்டி இருமாப்பாய் இருந்து உலகின் பெரும் பகுதியை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஆட்சி புரிந்து ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி தன் கணவரையும், தன் நாட்டையும் இழந்த நிலையிலும் மன உறுதியை இழக்காமல் அன்னிய ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து எட்டு ஆண்டுகளாக விடா முயற்சியுடன் பல்வேறு சோதனைகளுக்கிடையே, இயந்திரமயமான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய வலிமை மிக்க ஆங்கிலேயப் படைகளை எதிர்த்து கடுமையாகப் போராடி தன்னுடைய மதி நுட்பத்தாலும், மன உறுதியாலும், வீரத்தாலும், ஆளுமையாலும், வெற்றிக்கொண்ட முதல் பெண்மணி வேலுநாச்சியார்தான்.

உலக வரலாற்றிலேயே ஒரு பெண் ஆங்கிலேயப் பேரரசைத் தோல்வி அடையச் செய்து மன்னிப்பும் கோரச்செய்து அதனை அரசு சாஸனப் பட்டயத்தில் ஆங்கிலேயரையே தம் தோல்வியை ஒப்புக்கொண்டு கையொப்பமிடச் செய்த சாதனையாளர். இத்தனைக் கொடுமைகளைச் செய்த ஆங்கிலேயர்களையும் மன்னித்து தம் நாட்டை விட்டு பத்திரமாக வெளியற வாய்ப்பளித்த பெருந்தன்மையான பரந்த மனம் படைத்த ஒரே பூவையர் நம் வேலுநாச்சியார்தான். போராட்டங்களால் வறண்ட பாலைவனமாகிப்போன தம் நாட்டினை ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாகவே சீரமைத்து பழைய செல்வச் செழிப்புடன் மேம்படுத்தி மிகவும் சிறப்பாக ஆட்சி புரிந்த "பொருளாதார நிபுணி" வேலுநாச்சியார் என்றால் அது மிகையாகாது. அவரது வீரத்தையும், நாட்டுப் பற்றையும், தியாகத்தையும் பெருமைப்படுத்தி கௌரவப்படுத்தும் நோக்கில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சூரக்குளத்தில் "வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம்" எழுப்பப்பட்டுள்ளது. அவரது இத்தனை சிறப்புகளும் பலராலும் அறியப்படாமல் இருந்தாலும் பூஜிக்கப்படவேண்டிய "பூ"வாகவே நறுமணம் வீசிக்கொண்டிருக்கின்றார்.

ஔவைப் பாட்டி

"ஔ" எனும் சிறப்பு உயிரெழுத்தை தன் "தலை" (முதல்) எழுத்தாகக் கொண்டு சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரது மனதிலும் பதிந்து அனைவருக்கும் "பாட்டி" என்ற உன்னதமான உறவைக் கொடுத்து இன்றும் வாழ்ந்துக்கொண்டிருப்பவர் ஔவைப்பாட்டி.

பண்டைய பெண்ணடிமைச் சமூகத்தில் பெண்களுக்கு உரிமைகளும் படிப்பறிவும் மறுக்கப்பட்ட காலத்திலேயே அறிவின் சிகரமாக விளங்கி தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டினையும், காட்டிய வாழ்வியல் நெறிகளையும், சமூக சீரமைப்புக்கு ஆற்றிய பணிகளையும் பட்டியலிட இயலாது. அவர் காட்டிய வாழ்க்கை நல்வழிகளை நாம் இன்றளவும் கடைப்பிடிக்க வேண்டிய மந்திர வேதங்களாகவே உள்ளன.

தமிழ் உயிர் எழுத்துக்களை முதல் எழுத்தாகக்கொண்டு அவர் வடிவமைத்துக் கொடுத்த நீதிகள் சமுதாயத்திற்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் ஒரு சிறந்த வழிக்காட்டியாகவே அமைந்துள்ளது. அனைவராலும் எளிதாகப் புரிந்துக்கொண்டு மனதில் பதியவைத்து வாழ்வில் கடைப்பிடிக்கத்தக்க வகையில் எளிமையாகவும் சுருக்கமாகவும், ஆனால் ஆழமான கருத்துக்களையும் நீதி போதனைகளாக

வடித்துக்கொடுத்த பாட்டியின் அறிவின் ஆழத்தை அளவிடமுடியாது. முழுமுதல் கடவுளாகிய விநாயகப் பெருமான் மீது அளவற்ற பக்திக் கொண்டிருந்தார். அவரை வணங்கி முன்னிலைப் படுத்தியே தனது தமிழ்ச் சேவையைத் தொடங்கி ‘விநாயகர் அகவல்’ என்ற நூலை எழுதியுள்ளார். அவர் எழுதிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை போன்ற பல அரிய நூல்கள் தமிழ்த் தாயின் மகுடத்தில் பதிந்த ரத்தினங்கள் என்றால் மிகையாகாது.

ஆத்திச்சூடியில் அவர் குறிப்பிட்டுள்ள நீதிகள் ஒவ்வொருவரும் பிறப்பு முதல் இறப்பு வரை கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டிய வாழ்க்கை நெறிமுறைகளாகவே அமைந்துள்ளன.

அறம் செய்ய விரும்பு	-	**Enjoy giving alms**
ஆறுவது சினம்	-	**Anger is to be controlled**
இயல்வது கரவேல்	-	**Never stop learning**
ஈவது விலக்கேல்	-	**Don|t prevent charity**
உடையது விளம்பேல்	-	**Avoid injurioues words**
ஊக்கமது கைவிடேல்	-	**Don|t give up persevering**
எண் எழுத்து இகழேல்	-	**Don|t despise learning**
ஏற்றது இகழ்ச்சி	-	**Accepting alms Is despicable**
ஐயமிட்டுண்	-	**Eat after donating**
ஒப்புர வொழுகு	-	**Act vortuously**
ஓதுவது ஒழியேல்	-	**Don|t give up prayers**
ஔவியம் பேசேல்	-	**Don|t carry tales**

சாதித் தீ வேரூன்றி இருந்த ஒன்பதாம் நூற்றாண்டிலேயே சாதியைத் துணிச்சலாக சாடிய முதல் பெண்மணி நம் பாட்டிதான்.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெறியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி

என்று தம் எழுத்துக்கள் மூலம் சாதி மறுப்பு கொள்கைகளுக்கும், சாதி எதிர்ப்பு சட்டங்களுக்கும் வித்திட்ட வித்தகர். உயர்ந்த குலத்தோர் யார்? இழிக்குலத்தோர் யார்? என்பதையும் தெளிவாகக் கூறி, ஷபிறப்பால் வருவதல்ல குலம்’ என்பதை வலியுறுத்திய செம்மல்.

எத்தனையோ பூவையர் பல்வேறு காலங்களில் தமிழ்த் தொண்டாற்றினாலும் “தமிழ் மூதாட்டி” என்று கூறினால் அது ஔவையாரை மட்டும்தான் குறிக்கும் என்றால் அது மிகையில்லை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

கண்களுக்கு அகப்படாத கடவுள்களைக் காட்டிலும், கண்ணெதிரில் இருக்கும் பெற்றோர்களே முதல் தெய்வம் என வலியுறுத்திய ஔவையும் நாம் வணங்கத்தக்கவரே!.

நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை

அனைவரும் நல்லவர்களாக மாறவேண்டும். அதன் மூலம் நாடு செழிக்கவேண்டும். என்ற சமுதாயப்பார்வையில் பாடிய பாட்டிக்காகத்தான் இன்றும் மழைப் பெய்துக்கொண்டிருகின்றது என்றால் மிகையில்லை.

"அரியது எது?" என்ற இறைவனின் கேள்விக்கு, மிகவும் தெளிவாக மதிநுட்பத்துடன் -

அரிதரிது மானிடர் ஆதல் அரிது மானிடராயினும்
கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயத்தலரிது

என்று மானிடப்பிறவியின் மகத்துவத்தையும், பெருமையையும் கூறி அத்தகைய சிறப்பான பிறவியினைப் பெற்றவர்கள் எவ்வாறு சிறப்பாக வாழ்வது என்றும் அவர் வகுத்துக் கொடுத்த வாழ்வியல் நெறிமுறைகளினாலே இன்றும் தமிழ் உலகில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

ஔவைதான் தொடக்கக் கல்வி முறைக்கு பிள்ளையார் சுழிப் போட்டவர். அடித்தளம் அமைத்தவர் என்றால் அது மிகையாகாது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

என்ற கோட்பாட்டினை கல்வி உலகிற்கு கற்றுக் கொடுத்ததே நம் ஔவைப் பாட்டிதான்.

சித்திரமும் கைபழக்கஞ் செந்தமிழ் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

என்று கல்வி கற்கும் முறையினை மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்ததுடன்,

"கற்பித்தல் மற்றும் கற்கப்படுதல்" (Teaching and Learning Methodology) என்ற இன்றைய கல்வித் துறை திட்டங்களுக்கெல்லாம் முழுமுதல் முன்னோடி நம் தமிழ் மூதாட்டிதான்.

ஔவைப் பாட்டி நீண்ட ஆயுளோடு இருந்தால் தமிழ் மேலும் மேலும் வளரும் என்ற உயர்ந்த எண்ணத்தால் அரசன் அதியமான் தனக்குக் கிடைத்த ஆயுளை நீட்டிக்கும் அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் அவருக்கு அளித்தார் என்றால் ஔவையின் சிறப்புக்களைச் சொல்லி மாளாது. சிறுவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து நல்லோர்கள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கி எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பெற்ற இந்த வாடாத "பூ" வை பூஜிப்பதில் பெருமைப்படுவோம்.

சாவித்ரி

சாதனைப்பெண் சாவித்ரியை அறியாதவர் யாரேனும் உண்டோ! அதுவும் குறிப்பாக "கணவரே கண்கண்ட தெய்வம்" என போற்றி வணங்கி பூஜிக்கும் நம்

இனப்பூவையர் அனைவராலும் அறியப்பெற்று, விரும்பப்பெற்று, போற்றப்பெற்று, பூஜிக்கப்படும் "பூ" என்றால் அது மிகையாகாது.

இப்புவியிலேயே எவராலும் வெல்லமுடியாத ஒருவர் உண்டென்றால் அவர்தான் "யமதர்மர்". இதை யாரேனும் மறுக்க முடியுமோ! மறுக்க இயலுமோ! பணம், பதவி, அந்தஸ்து, செல்வாக்கு, அறிவியல், மருத்துவம், இயற்கை போன்ற எந்த சக்தியாலும் தடுக்க இயலாத, வெல்லமுடியாத, மீட்டெடுக்கவோ, தாமதப்படுத்தவோ, காலம் கடத்தவோ இயலாத ஒன்று இருக்குமானால் அது உடலை விட்டுப் பிரிகின்ற "உயிர்" தான். அந்த உயிரைப் பறிப்பதையே தம் தொழிலாகவும், கடமையாகவும் கொண்ட ஆற்றல் மிகுந்த, இறைவனின் பிரதிநிதியான யமதர்மரை தன் அறிவாலும், மதி நுட்பத்தாலும் ஒரு பெண் வென்று தன் ஆருயிர் கணவர் சத்தியவானின் உயிரை மீட்டுக்கொண்டு வந்தார் என்றால் அது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. இது ஒரு வரலாறு படைத்த சரித்திர சாதனை நிகழ்வாகும்.

பூவையருக்கு மிகுந்த அழகு சேர்ப்பது அவர்கள் அணியும் "பூ"வும், "பொட்டு"மே தான். அத்தகைய பூவையும், பொட்டையும் விரும்பாத பூவையர் யாரேனும் உண்டோ? நமது பண்டைய தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த பூவையர் ஷகணவன்' என்ற உறவை, மற்ற அனைத்து உறவுகளையும் விட மிகவும் சிறப்பான உறவு என்பதனையும், இந்த உறவு மட்டும்தான் குருதியில் கரைந்து, உயிரில் உறைந்த உறவு என்றும் தன்னைத் தாய்மை என்ற உன்னதமான நிலைக்கு அழைத்துச் சென்று செல்வத்துள் சிறந்த செல்வமான மழலைச் செல்வத்தை அளித்து, வம்ச விருத்திக்கு வித்திடும் உறவு என்பதையும் அறிந்து உணர்ந்து, அத்தகைய கணவரை தன் உயிரினும் மேலாக மதித்து, போற்றி வணங்கி வந்தார்கள். தன் கணவருக்காக எதை வேண்டுமானாலும் இழக்கச் சம்மதிப்பார்கள். ஆனால் எதற்காகவும் தன் கணவரை விட்டுக் கொடுக்காத உயரிய ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் சிறந்தவராக விளங்கினார்கள். அத்தகைய கணவரைத் தவிர்க்க இயலாத சூழலில் இழந்த பின் அவரை மீட்டுக் கொண்டுவர இயலாத பூவையர் பலர் "மயிர் நீத்தால் உயிர் நீக்கும் கவரிமான்" போல தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட வரலாறும் உண்டு.

கணவரை இழந்த பூவையர் தங்களது "பூ"வையும், "பொட்டு"ஐயும் நிரந்தரமாக வாழ்நாள் முழுவதும் இழக்கவேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அத்தகைய பூவையும் பொட்டையும் தன் இரு கண்களாகவும், கணவரின் பிரதி வடிவாக எண்ணும் பூவையரில் பூத்த மூத்த "பூ" யமதர்மரிடம் போராடி வரம்பெற்று இழந்த கணவரையும், பூவையும், பொட்டையும் மீட்டெடுத்து அதன் பின் தாய்மை அடைந்து மழலைச் செல்வத்தையும் பெற்று பூவையரால் போற்றி வணங்கப்படும் சாதனைப் "பூ" என்றால் மிகையாகாது. இது வரை இது போன்ற சாதனையைச் செய்தவர் எவருமில்லை என்பதே உண்மை. இன்றளவும் பல்வேறு ஆலயங்களில் தெய்வமாக பூஜிக்கப்படும் இந்த "பூ"வை வணங்கி யமனையே எதிர்க்கும் வல்லமையை வேண்டிப் பெறுவோமாக.

பூக்கள் எத்தனையோ வண்ணங்களையும், நறுமணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதோ அது போலவே பூவையரும் எண்ணற்ற வகையினராகவும், தன்மையுடையவராகவும் இருப்பினும் அவர்கள் தங்களது அடிப்படை குணங்களை மாற்றிக்கொள்ளாமல் பல மாற்றங்களை உருவாக்குபவர்கள். மாற்றங்களே வாழ்வின் முன்னேற்றத்திற்கு அறிகுறி என்பதையும் நன்கு உணர்ந்தவர்கள்.

பூ பூவா பூத்திருக்கு!
பூமியிலே ஆயிரம் பூ!
பூவிலே சிறந்த பூ - என்ன பூ?

என்ற கவிதை வரிகளின் புதிர் கேள்விக்கு "அன்பு" என்றே பதில் அளிக்க முடியும். ஆகவே "பூ"வுக்கும், "அன்பு"க்கும் பூர்வீக பந்தம் இன்றளவு தொடர்ந்துக் கொண்டே இருக்கிறது. அத்தகைய அன்பின் பிறப்பிடமாகவும், ஊற்றாகவும், உறைவிடமாகவும், வடிவமாகவும் திகழும் பூவையர் பூஜிக்கத் தகுதியுடையவர்களே.

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

என்ற வாழ்த்து ஒலியில் மிக முக்கியமான சிறப்பான நம் எல்லோராலும் விரும்பப்படுகின்ற வாழ்வை அர்த்தமுடையதாகும் வரம் எனப் பலராலும் வேண்டப்படும் குழந்தைச் செல்வத்தை பூவுலகத்தில் பூக்கவைக்கும் பூவினமே!

"உன்னை பூஜிக்காவிட்டால் இப்புவியே பூஜ்ஜியமாகிவிடும்"
"பூவையரை புரிந்துப் போற்றினால் புவியையும் வெல்லலாம்"
என்ற இறுதியான உறுதியான கருத்தை முன்வைத்து பூவையரைப் பூஜிப்போம்.

கோயில்கள் ஏன்?

மா.சிதம்பரேஸ்வரர், கௌரவ உதவிப்பேராசிரியர், கட்டடக்கலைத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

இன்றைய நவீன காலக் கட்டத்தில் பிரம்மாண்டமாய் தொழில்நுட்பம் வளர்ந்தும் இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கின்ற சூழ்நிலையிலும் நாம் எதையெல்லாம் இழந்துகொண்டிருக்கிறோம் என்பது கண்கூடாகத் தெரிகிறது. மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இயற்கைச் சீற்றங்களுக்குப் பயந்து இயற்கையைத்தான் தெய்வமாக வணங்கி வந்தான். ஆரம்பத்தில் விலங்குகளுக்கு பயந்து பின்னர் அதனை தன் தோழனாக்கி பிறகு அவற்றையும் தெய்வமாக வணங்கத் தொடங்கினான்.தமிழ் நாட்டு வரலாற்றுக்கான அடிப்படைச் செய்திகளைப் புதை பொருள்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், புராணங்கள் கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அயல்நாட்டு வரலாற்று நூல்களில் காணப்படும் குறிப்புகள், அரசாங்க ஆவணங்கள், கிறித்துவப் பாதிரிமார்களின் நாட்குறிப்புகள், சுற்றுலாப் பயணிகளின் நாட்குறிப்புகள் போன்றவற்றில் காணமுடிகின்றன.

ஆதிகாலத்தில் மரங்களிலும் குகைகளிலும் பாறை இடுக்குகளிலும் வாழ்ந்து வந்தபோது தாங்கள் வாழ்ந்ததற்கான அடையாளமாக பல பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன. தான் வாழ்ந்து வந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் தங்களுடைய வாழ்வியலைத் தொடர்ந்து பதிவு செய்து வந்துள்ளனர்.

கோவில்கள் மரம்,செங்கல்,சுண்ணாம்பு,கல் போன்றவற்றினால் கட்டமைக்கப்பட்டன. மண் தளி சுடுமண்ணைக் கொண்ட அமைக்கப்பட்ட கோவில்கள் மண்தளிகள் என்று அழைக்கப்பட்டன. மரத்தினால் செய்யப்பட்ட கோவில்கள் தொடக்கக் காலக் கோவில்கள் மரத்தினாலேயே அமைக்கப்பெற்றன. இவை மரத்தினைச் செதுக்கி அமைப்பதால் எளிமையாக இருந்தன. ஆனால் இயற்கைச் சீற்றங்களால் விரைவில் பழுதடைந்தன. மரத்தினால் செய்யப்பட்ட கோவில் விமானங்கள் மழையிலிருந்து பாதகாக்கப்பட்ட செப்புத் தகடுகள் வேயப்பட்டன. சில அரசர்கள் கோவில்களுக்கு தங்க தகடுகளும் வேய்ந்தனர். இதற்குச் சான்றாக சிதம்பரம் நடராஜர் கோவிலைச் சொல்லலாம். அங்கு சபாநாதர் மண்டபம் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி ஆலயம் போன்றவை மரத்தினால் செய்யப்பட்டிருந்தவை பிற்காலத்தில் அவைகள் அமைப்பு மாறாமல் கற்களால் செய்யப்பட்டன என்ற போதிலும் மரத்தினால் செய்யப்பட்டவை போலவே அமைக்கப்பெற்றன. சிதம்பரம் நடராஜர் கோவில் விமானம் பொன்னால் வேயப்பட்டதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மரத்தினாலான கோவில்கள் எளிதில் தீப்பற்றவும் பழுதடையும் அதிகவாய்ப்புகள் இருந்தமையினால் கோவில்கள் செங்கற்கட்டடங்களாயின.

கி.பி.4—ம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கருதப்படுகிற சோழன் செங்கணான் கட்டிய கோயில்கள் அப்பர் காலத்தில் இருந்தன என்றும் சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோயில்களைக் கட்டினான் என்றும் நாவுக்கரசர் கூறுகிறார். நாவுக்கரசருக்குப் பின்னர் இருந்தவரான திருமங்கை யாழ்வார் இந்தச் செங்கட்சோழன் திருநறையூர் மணிமாடக் கோயில் உட்பட எழுபது கோயில்களைக் கட்டினான் என்று கூறுகிறார்.

'இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோளீசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே'
(பெரிய திருமொழி 6-ஆம் பத்து 6-ஆம் திருமொழி.8)

செங்கட் சோழன் கட்டிய கோயில்களைப் பெருங் கோயில் என்று திருநாவுக்கரசரும் எழில் மாடம் என்று திருமங்கை ஆழ்வாரும் கூறுகிறபடியினாலே அவை பெரிய கட்டடங்களாக இருந்தன என்று அறிகிறோம். ஆனால் அக்கோயில் கட்டிடங்கள் செங்கல்லினால் கட்டப்பட்டவை. ஆகையினாலே அவை திருநாவுக்கரசர் காலத்திலே பழுதுப்பட்ட நிலையில் இருந்தன என்பது தெரிகிறது. செங்கற்களினாலே அமைக்கப்பட்ட அந்தக் காலத்தைக் கோயில் அமைப்பு பலவிதமாக அமைந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனென்றால் அக்காலத்துக் கோயில் விமான அமைப்புகள் சிலவற்றின் பெயரைத் திருநாவுக்கரசர் கூறுகிறார்.

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும்: மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்.
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலயக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.'

என்பது அப்பர் பாடல். *(அப்பர் திருஅடைவு திருத்தாண்டகம்05.)*

'ஏதநிஷ்டக மத்ருமமலோஹ
மசுத விசித்ரசித் தேன
நிர்மாபிதம் ந்ருபேண ப்ரமஸ்வர
விஷ்ணுலகூஷதாய தனம்'.*(Ep.Ind.Vol.XVII.P.14.)*

செங்கல் இல்லாமலும் மரமில்லாமலும் உலோகம் இல்லாமலும் சுண்ணாம்பு இல்லாமலும் பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு 'விசித்திரசித்தன்' என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது.இதனால் அவன் காலத்துக்கு முன்னே அமைக்கப்பட்ட கோயில்கள் செங்கல் சுண்ணாம்பு,மரம், கல் மற்றும் இரும்பு முதலிய பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டன என்பதும் தெரிகின்றன. விரைவில் அழிந்துவிடக்கூடிய செங்கல் சுண்ணாம்பு முதலிய பொருள்களை கொண்டு கட்டப்பட்ட பண்டைக் காலத்துக்கோயில்கள் இப்போது காணமுடிவதில்லை.

மகேந்திரவர்மனுடைய ஆட்சிக் காலத்தில் பௌத்தம் ,சமணம் ,சைவம் காளமுகம்,பாசுபதம் போன்ற பல சமயங்கள் இருந்ததாகத் தெரிகிறது. மகேந்திரவர்மன் முதலில் சமண சமயத்தைப் பின்பற்றினான். முதலில் சமண சமயத்தவராக இருந்து பின் சைவ சமயத்தைத் தழுவிய அப்பரை மீண்டும் சமணராக மாற்ற வேண்டிப் பல கொடுமைகளை அப்பருக்கு மகேந்திரவர்மன் செய்தான் என்றும் பெரியபுராணம் கூறுகிறது.அதன்பின் தீவிர சைவனாக மாறிய மகேந்திரவாமன் சமணப்பள்ளிகள் பலவற்றை இடித்துத் தள்ளி அவற்றின் பொருட்களைக் கொண்டு சைவக் கோயில்கள்

கட்டினான் எனத் தெரிகிறது. மகேந்திரவர்மன் பல்லவ நாட்டின் பல இடங்களில் குகைக்கோயில்களை அமைத்தான். இவன் காலத்தில் திருச்சிராப்பள்ளி, திருக்கழுக்குன்றம், பல்லாவரம்,தளவானூர்,சீயமங்கலம்,வல்லம் ஆகிய இடங்களில் சிவன் கோயில்களும் மாமண்டூர், மகேந்திரவாடி, நாமக்கல், மண்டகப்பட்டில் மும்மூர்த்தி கோவிலும் சித்தன்னவாசல் சமணக்கோவிலும் மலைகளில் குடையப்பட்டன.

மகேந்திரவர்மன் கட்டடக் கலையில் மட்டுமின்றி ஓவியத்திலும் சிற்பத்திலும் அதிக ஆர்வம் காட்டினான் என்பதை அவன் விருதுப் பெயர்களில் ஒன்றான **'சித்திரக்காரப்புலி'** நன்கு விளக்குகிறது. சித்தன்ன வாசலில் உள்ள குகைக்கோயில் ஓவியங்களும் குடுமியான் மலைக் கல்வெட்டுகளும் மகேந்திரவர்மனுக்கு ஓவியத்திலும் நடனத்திலும் இசையிலும் இருந்த ஆர்வத்தையும் தேர்ச்சியையும் விளக்குகின்றன. இவன் காலத்தில் கவிதை இலக்கியம் நாடகம் முதலியனவும் நன்கு வளர்ந்தன. மகேந்திரவர்மனே **'மத்தவிலாசப் பிரகசனம்'** என்ற நாடகத்தை வடமொழியில் எழுதினான்.

சமுதாய வாழ்வினை வளர்க்க இக்கோயில்கள் எப்படி உதவியிருக்கின்றன என்பதனை நாம் அறியலாம்.நகர நிர்மாணத்திலேயே கோயில்கள் முக்யஸ்தானம் வகித்திருக்கின்றன. எந்த ஊரிலும் ஊருக்கு நடுவில்தான் கோயில் அதைச் சுற்றித்தான் தெருக்கள் கடைவீதிகள் வீடுகள் எல்லாம். மதுரை,ஸ்ரீரங்கம் போன்ற ஊர்கள் நகர நிர்மாணத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாகும். கோயிலின் நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள். வாயில்கள் ஒவ்வொன்றிலும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பி நாட்டையும் நகரத்தையும் காத்து நிற்கும் காவல் கூடமாக அல்லவா கோயில்களை உருவாக்கி இருக்கிறார்கள் தமிழர்கள். கோயில்களைச் சுற்றிய வீதிகளில் வியாபரங்கள் வலுத்திருக்கின்றன. வியாபாரம் பெருகப்பெருக நாட்டின் வளம் பெருகியிருக்கிறது. பல நாடுகளில் இருந்து வியாபாரிகள் தங்கள் பண்டங்களைக் கொண்டுவந்து கொடுத்து தங்கள் நாட்டில் கிடைக்காத பண்டங்களை இங்கிருந்து வாங்கிப் போயிருக்கிறார்கள். இப்படி வருகின்றவர்களது வசதிகளைத் தெரிந்தே கோயிலை ஒட்டிச் சந்தைகள் உத்ஸவங்கள் திருவிழாக்கள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன. பொருளாதாரக் கண் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு விழாவுமே ஒரு பெரிய சந்தைதான். கூட்டுறவு சம்மேளனம்தான்.

பல பக்கங்களிலிருந்தும் மக்கள் இப்படி வந்து கூடக் கூட நாட்டின் வளம் நகரத்தின் வளம் பெருகியிருக்கிறது. வந்தவர்களுக்கு உணவு அளிக்க அன்ன சத்திரங்கள் தோன்றியிருக்கின்றன. கோயிலை ஒட்டிக் குளங்கள் குளங்களை ஒட்டி நந்தவனங்கள் உருவாகி இருக்கின்றன. இவைகளை நிர்மாணித்தவர்கள் அவரவர்கள் காலத்திற்குப் பின்னும் இவைகள் சரியாக நடக்க நிலங்களை மான்யமாக வழங்கியிருக்கிறார்கள். நிபந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.அவைகளைக் கோயிற் சுவரில் கல்வெட்டாக எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படித்தான் தேவதானங்கள் தேவபோகங்கள் எல்லாம் எழுந்திருக்கின்றன.

கோயில்களால் விவசாயம் விருத்தியடைந்திருக்கிறது. கைத்தொழில் பெருகியருக்கின்றது. கட்டிட நிர்மானத்தில் கைதேர்ந்த தச்சர்கள் சிற்பிகள் வர்ண வேலைக்காரர்களுக்கு எல்லாம் தக்க ஆதரவாய் கோயில்கள் இருந்திருக்கின்றன.அதனால் பரம்பரை வேலைக்காரர்கள் பெருகி இருக்கிறார்கள். மேலும் கோயில்கள் கலா நிலையங்களாக கலைக் கூடங்களாக வளர்ந்திருக்கின்றன. இசையும் நடனமும் கோயில்களின் நித்யோத்சவத்தில் பங்கு பெற்றிருக்கின்றன.

கல்விச் சாலைகள் பொருட்காட்சிச் சாலைகள் எல்லாம் கோயிலுக்குள்ளேயே அமைத்திருக்கிறார்கள். கல்யாண மண்டபம், நாட்டிய மண்டபம், வியாக்யான மண்டபம், வியாகர்ண மண்டபம், சரஸ்வதி மண்டபம், அலங்கார மண்டபம், ஊஞ்சல் மண்டபம், வசந்த மண்டபம், பதினாறு கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், அன்னதான மண்டபம் முதலியன கோயில்களுக்கு உள்ளேயே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. தென்னாற்காடு ஜில்லாவில் எண்ணாயிரத்திலும் செங்கற்பட்டு ஜில்லாவில் திருமுக்கூடலிலும் பெரியபெரிய கலாசாலைகளே நடந்திருக்கின்றன. 340 மாணவர்களுக்கு தங்க இடமும் உண்ண உணவும் உடுக்க உடையும் இனாமாகவே வழங்கப்பட்டிருக்கிறது. திருமுக்கூடல் பள்ளி இத்தனை சிறப்பு வாய்ந்ததாக இருக்கவில்லை என்றாலும் 60 பிள்ளைகள் படிக்க உதவியாக இருந்திருக்கிறது. ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதுடன் மற்ற பணிகளையும் செய்து ஊதியம் பெற்றிருக்கின்றனர். இப்படியே பல இடங்களில் பல கல்விச் சாலைகள் கோயில்களின் ஆதரவிலேயே நடந்து வந்திருக்கின்றன. மருத்துவச் சாலைகளும் கோயில்களுக்குள்ளேயே இருந்திருக்கின்றன.

பதினோராம் நூற்றாண்டில் உள்ள ஒரு சோழர் கல்வெட்டிலிருந்து 15 படுக்கைகள் ஒரு மருத்துவர், ஒரு ரண வைத்தியர், இரண்டு தாதியர் இன்னும் இதர சிப்பந்திகள் கொண்ட ஒரு மருத்துவச் சாலையே நடந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. மருந்துகளும் மூலிகைகளும் கூட அங்கு ஏராளமாய்ச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதோடு கால்நடை மருத்துவச்சாலைகள் கூட கோயில் ஆதரவில் நடந்திருக்கின்றன. கோயில்களைச் சுற்றி விவசாய நிலங்களை ஏற்படுத்தி அதற்கென்று தனித்தனிச் சட்டத்தை ஏற்படுத்தி விளைந்ததில் ஒரு பகுதியை கோயில்களுக்கு கொடுக்கவும் பின்பற்றி வந்துள்ளனர். பஞ்சம் ஏற்படும் சமயத்தில் அந்த நெல் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மற்றும் விதை நெல் கோயில்களின் கலசத்தில் வைக்கப்பட்டிருக்கும். பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை குடமுழுகு செய்கிறபொழுது மாற்றப்படுகிறது. மேலும் இந்தக் கலசம் மழை காலங்களில் இடி மின்னல் தாக்காமல் இருக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா கோயில்களிலும் குளங்கள் கண்டிப்பாக இருந்திருக்கின்றன. இந்த குளத்தில் இருந்துதான் தெய்வங்களுக்கு அபிஷேகத்திற்கான நீர் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் இந்தக் குளங்கள் எப்பொழுதும் தூய்மையாக இருப்பதால் குடிநீர்க்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இந்த குளங்கள் தீர்த்த குளங்கள் என்றும் அழைப்பது உண்டு. காரணம் இதில் பல மூலிகைகளும் வேர்களும் கலக்கப்பட்டிருக்கும். இதனால் பல நோய்களும் தீர்க்கப்படுகின்றன. நல்ல செய்திகளை மக்களிடம் நேரடியாக எடுத்துச் செல்லும்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதாலும் அலட்சியப்படுத்துவதாலும் நம் முன்னோர்கள் கடவுள் பெயரைச் சொல்லி அதன் மூலமே அனைத்தும் பின்பற்றிவரப்பட்டுள்ளன. இன்றைய சமூக சூழலில் கடவுள் பக்தி மக்களிடையே குறைந்ததன் காரணமாக கலாச்சாரம் கலை பண்பாடு மொழி மருத்துவம் என்று அனைத்தையும் இழந்துகொண்டிருக்கின்றன.

கோயில்கள் மனிதனையும் வாழ்வியலையும் அடிப்படையாக கொண்டே அமைக்கப்பட்டன. மனிதன் நின்ற நிலையில் அதிஸ்டானம் - கால் பாதம் - முழங்கால் பிரஸ்தரம் - தோல் கண்டம் - கழுத்து சிகரம் - தலை கலசம் - முடி. கர்ப்பகிரஹகத்தை தாயின் கருவறையோடு ஒப்பிட்டு வணங்கினர். விலங்குகள் தாவரங்கள் என அனைத்து உயிர்களின் பெயரையும் கோவில்களின் உறுப்புகளுக்கு வைத்துள்ளனர். உதாரணத்திற்கு அதிஸ்டானத்தில் வரக்கூடிய பத்மம் -

தாமரை,கபோதகம் - புறாவின் முதுகு,நாஸிக்கூடு - மூக்கு,பீஜம் - ஆண்குறி, ஹஸ்தம் - கை,ஹஸ்திபாதம் -யானையின் கால், ஹஸ்திபிரிஷ்டம் -யானையின் பின்புறம் , ஹஸ்திநேத்ரம் - யானையின் கண் ,கோபுரம் - பசு.

கோயில் என்பது தெய்வத்தின் இருப்பிடம் மட்டுமில்லை. கோயில் என்பது விஞ்ஞானபூர்வமாக மனிதனுக்கு உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பல நன்மைகள் செய்வதற்காகவும் அமைக்கப்பட்டது. சாஸ்திரப்படி அமைக்கப்படும் கோயில்கள் பூமியின் காந்த அலைகள் அடர்த்தியாகப் பாயும் இடத்தில் அமைகின்றன. ஊர்க்கோடியிலோ ஊர் நடுவிலோ மலையுச்சிலோ எங்காயினும் கோயிலுக்கென்று இடம் அந்தக் காலத்தில் அமைக்கப்பட்டது இந்த அடிப்படையில்தான். இந்த உயர்காந்த அலைகள் (ஹைமேக்னடிக் வேவ்ஸ்) அடர்ந்திருக்கும் இடத்தின் மையப்பகுதியில் கர்ப்பகிரஹம்(மூலஸ்தானம்) அமைக்கப்படுகிறது. அதனால்தான் கர்ப்பகிருகத்தில் மூல விக்கிரகத்தின் அடியில் யந்திரங்கள் பதித்தார்கள். சில உயரிய மந்திரங்கள் பொறிக்கப்பட்ட செப்புத்தகடுகளே யந்திரங்கள்.பூமியின் காந்த அலைகளை செப்புத்தகடுகள் உள்வாங்கி சுற்றுப்புறத்துக்கு அதைப் பாய்ச்சுகிறது.இந்த விஞ்ஞான அடிப்படையில்தான் மின்சாரத்தைக் கொண்டுசெல்ல செப்புக்கம்பிகளை உபயோகப்படுத்துகின்றனர் கர்ப்பகிரஹத்தை பிரதட்சணமாக சுற்றும் பக்தர்களின் உடலில் தானாகவே இந்த காந்த சக்தி மென்மையாகப் பாய்கிறது.அடிக்கடி கோயிலுக்கு வந்து பிரதட்சணம் செய்யச் செய்ய இந்த காந்த சக்தி உடலில் கணிசமாக ஏறுகிறது.இதனால் உடலில் நேர்மறை ஆற்றல் உண்டாகிறது.

இந்தச் சக்தி பூரணமாக பக்தர்களைச் சென்றடைவதற்காகவே மூலஸ்தானம் மூன்று பக்கமும் பெரிய ஜன்னல்கள் இல்லாமல் அடைக்கப்பட்டிருக்கும்.இதனால் கர்ப்பிரத்திற்கு வெளியில் நின்று தரிசிக்கும் பக்தர்களின் மேல் யந்திரத்தின் காந்த சக்தி முழுதாகப் பாய முடிகிறது. மூலஸ்தானத்தில் ஏற்றப்படும் விளக்குகள் உஷ்ண சக்தியையும் வெளிச்ச சக்தியையும் பாய்ச்சுகிறது.பூஜை முடிந்ததும் பக்தர்களுக்கு வழங்கப்படும் தீர்த்தத்தில் ஏலக்காய் துளசி கிராம்பு போன்றவை கலக்கப்படுகின்றன. இந்தப் பண்டங்கள் எல்லாமே மனித ஆரோக்கியத்துக்கு உதவுவதால் தீர்த்தம் புனிதமானதாக மட்டுமில்லாமல் உடல் வளத்துக்கு உபயோகமானதாகவும் ஆகிறது. பெருமாள் கோயிலில் மஞ்சளும் குருவாயூரப்பன் கோயிலில் சந்தனமும் சிவன் கோயிலில் திருநீறும் பொதுவாகக் குங்குமமும் பிரசதமாகக் கொடுக்கப்படுகின்றன. இவை எல்லாமே மருத்துவ குணமுடைய வஸ்துக்களை உள்ளடக்கியது.

பெருமாள் கோயிலில் தீர்த்தத்தில் கலக்கப்படும் பச்சைக் கற்பூரம் வாசனையாகவும் வித்தியசமான சுவையுடையதாகவும் இருக்கும். உடலில் ரத்தக்காயம் ஏற்பட்டால் நாம் உடனே காயத்தின்மீது தடவுகிறோமே பென்சாயின். அது பச்சைக் கற்பூரக் கலவையில் உருவாவது. நம்மேல் பாயக்கூடிய நேர்மறை காந்த அலைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் பல கோயில்களில் ஆண்கள் சட்டை அணியாமல் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். பொதுவாகப் பெண்கள் அணியும் தங்க நகைகளில் கலந்திருக்கும் செம்பின் மூலம் அவர்களுக்கும் இதே ஆற்றல் பாய்கிறது. கோவில் கொடி மர வழிபாட்டில் மருத்துவம் உள்ளது. ஆண்கள் நெடுஞ்சாண் கிடையா வழிபடுவதால் அவர்களின் உறுப்புகள் அனைத்தும் கோவில் கல்லில் படும்போது வலுவடையும்.பெண்கள் உடலை வளைத்துக் கும்பிடும் போது அவர்களின் கர்ப்பப்பை வலுவடையும்.

துணை நூற்பட்டியல்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், *இந்திய கலைச்செல்வம்*, தமிழ் வளர்ச்சி இயக்கம் - 2014

அ. இராமசாமி, *தமிழ்நாட்டு வரலாறு*, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அக்டோபர் 2009

இராசு பவுன்துறை, *தமிழகப் பெருங்கற்காலக் கட்டடக்கலை மரபு*, மெய்யப்பன் பதிப்பகம், அக்டோபர் 2013

கா. ராஜன், *கல்வெட்டியல்*, மனோ பதிப்பகம் 2012

மயிலை சீனி வேங்கடசாமி , *மகேந்திரவர்மன்*, பாவை பதிப்பகம் ஜனவரி 2012

சமுதாயத்தில் பெண்கள்

முனைவர் க.சித்ரா, விரிவுரையாளர், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புப் பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு

தொழிற்புரட்சியும் கல்வி மறுமலர்ச்சியும் உலகெங்கும் பல்வேறு சிந்தனைகளை உருவாக்கின. அறிஞர்கள் சமூக மாற்றம் குறித்துச் சிந்திக்கத் தலைப்பட்டனர். உலகில் ஆணும் பெண்ணும் ஒருமித்த சமநிலையில் உள்ளவர்கள் என்பதனை உணர்ந்து செயல்பட்டால் சமூகம் முன்னேறும். நல்ல சமுதாயமும் உருவாகும் எனக் கருதினர். எனவே, பெண்ணுரிமை இயக்கங்கள் மகளிரின் உரிமைக்குக் குரல் கொடுக்கத் தொடங்கின.

மகளிர் உரிமை

பெண்கள் முன்னேற்றத்திற்காகத் தலைவர்கள் பலர் தொண்டாற்றினர். அவர்கள் விவேகானந்தர், இராஜாராம்மோகன்ராய், காந்தியடிகள், பாரதியார், பெரியார், திரு.வி.க., இராஜாஜி, அண்ணா, பாரதிதாசன் முதலானோராவார்கள். அவர்கள் ஆற்றிய அரும்பணியின் விளைவாய் இன்று மகளிர் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளனர். இந்தியாவின் தலைமை அமைச்சர் பதவி முதல், அரசு உயர் அலுவலர் நிலை வரை மகளிரும் சமவாய்ப்புப் பெற்றுத் தொண்டாற்றும் உயரிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

சங்ககால மகளிர்

மகளிர் சங்ககாலத்திலும் உயர்ந்த கல்வியைப் பெற்றுப் புகழுடன் வாழ்ந்திருந்தனர். சங்ககாலப் பெண் மக்களுள் பலர் புகழ்பூத்த கவிஞர்களாய்த் திகழ்ந்துள்ளனர். அரசியல் புலமையால் அரசர்களுக்கும் அறிவுரை நல்கி அவர்களை நல்வழிபடுத்தியுள்ளனர். மன்னர்களுக்கு இடையில் தூது சென்று போரை நிறுத்தி அமைதி காத்துள்ளனர். இத்தகைய பெருமை பெற்றவர், ஔவையார்.

ஔவையார், தமிழினத்தின் பெருமையினை, தமிழ் இலக்கியத்தின் வளத்தினைத் தம் பாடல் திறத்தால் உலகுக்கு உணர்த்தியவர். அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையில் நிகழவிருந்த பெரும் போரைத் தம் மதி நுட்பத்தால் தவிர்த்தவர்.

தொண்டைமானிடம் தூது

தொண்டைமான் ஔவையாரைத் தன் படைக்கலக்கொட்டிலுக்கு அழைத்துச் சென்றான். மின்னும் படைக்கலன்களைக் கண்டதும் அவர்தம் அறிவு நுட்பத்திற்குச் சான்றாக இப்பாடல்,

> "இவ்வே பீலிஅணிந்து மாலை சூட்டிக்
> கண்திரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
> கடியுரை வியன்நக ரவ்வே அவ்வே
> பகைவர்க் குத்திக் கோடுறுதி சிதைந்து
> கொல்துறைக் குற்றி மாதோ என்றும்
> உண்டாயின் பதங் கொடுத்து

இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே"
- (புறம்.95)

இந்தப் படைக்கலங்கள் எல்லாம் மயிற்பீலி அணிவிக்கப்பெற்று, மாலை சூட்டி, பிடி திருத்தி, கூர்மழுங்கிக் கெடாதிருக்க நெய் தடவி, காவல்மிக்க காப்பறையில் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் எம்தலைவன் அதியமானிடம் உள்ள படைக்கருவிகள் பகைவர் உடலைக் குத்திக் கிழித்ததால் நுனி முறிந்து கொல்லன் உலைக்களத்தில் செப்பம் செய்யக் கிடக்கும் படைக்கலன்கள் அதியனின் போர் ஆற்றலைத் தெரிவிப்பன என அரசியல் திறத்தோடு ஔவையார் பேசினார். ஔவையின் ஆற்றலை உணர்ந்த அதியன் அவருக்குக் கருநெல்லிக்கனி ஈந்தான்ஞு நெடுநாள் வாழுமாறு செய்தான். ஔவையும் அதியனை, ஷநீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும' என வாழ்த்தினார். இவ்வாறு சங்க காலத்தில் பெண்ணின் பெருமை பேசப்பட்டுள்ளன. மேலும் மகளிர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்கள் பலர் உள்ளனர்.

பெண்ணை எந்த நாடு மதிக்கவில்லையோ அந்த நாடு முன்னேறாது என்று சுவாமி விவேகானந்தர் முழங்கினார். மூடப்பழக்கங்களாலும் சமுதாய ஆதிக்கத்தாலும் பெண்கள் பெற்ற துன்பத்தைத் துடைத்தவர், இராஜாராம்மோகன்ராய், சமுதாய முன்னேற்றத்திற்குப் பெண்ணுரிமை அடிப்படை எனப் போதித்தவர், காந்தியடிகள், திரு.வி.க., பெண்மையைத் தெய்வமாகப் போற்றினார். பெண்ணுரிமைச் சிந்தனையை வெளிக்கொணர்ந்தவர், பாரதியார், அண்ணா, பாரதிதாசன் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட அறிஞர்கள் ஆவர்.

பாரதி

பாரதியின் பெண்ணுரிமை இயக்கம் வீறு கொண்டு எழுந்தது ஷஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்கும்' என முழங்கிப் பெண்ணுரிமை வாழ்வுக்கு வழி வகுத்தவன் பாரதி. இதனை,

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'

எனப் புதுமைப்பெண்ணின் புரட்சிக்குரலை உலகத்தின் முன் வைத்தவன் பாரதி, ஷவீட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்' என ஆணும் பெண்ணும் அறிவில் சமம் எனப் போற்றியவன், பாரதி.

பாரதிதாசன்

பாரதியாரைப் பின்பற்றிப் பாரதிதாசன் பெண்ணுரிமை, பெண்விடுதலை என்னும் முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்தினார்.

'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென் கின்றீரோ
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை
பெண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'

என்று பெண்ணுரிமையை வேண்டினார். அவர் ஆண், பெண் இருவருள் ஒருவருக்கு ஒரு நீதி எனப் பேசினால் உலகம் உங்களை இகழும் என்று கூறிச் சிந்திக்க வைத்தார். இதனை,

'பெண்ணுக் கொருநீதி கண்டீர்!
பேதமெனும் மதுவை உண்டீர்!
கண்ணிலொன்றைப் பழுது செய்தாய்
கான்றுமிழாதோ?

கான்றுமிழாதோ? புவிதான்
பழியாதோ?

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மக்களைப் பார்த்து வினவினார்ளு சமவுரிமைக்கு வழிவகுத்தார்.

பொதுவுடைமைக் கவிஞர் ஜீவா

பாரதி முழங்கிய விடுதலைப் போர் முரசைத் தொடர்ந்து ஜீவாவின் உரிமைக்குரல் ஒலிக்கத் தொடங்கியது.

'உடனடிமை யொழிய வேண்டும் பெண்கள்
வேறென்ன வேண்டும்?
பேணும் சமசந்தர்ப்பத்தால்
பெருகும் சுதந்திரத்தால்
ஆணும் பெண்ணும் இன்புற வேண்டும்
வேறென்ன வேண்டும்?'

என்று வினவி, பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவர், கவிஞர் ஜீவா.

பெரியார்

பெண்ணுரிமைக்காகத் தம்முடைய இயக்கம் வாயிலாக மாநாடுகள், கருத்தரங்குகள், ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்தி நேரிடையாகக் களமிறங்கிய பெருமைக்குரியவர் தந்தை பெரியார். 13-11-1938 இல், சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடைபெற்ற "தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்" பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரியார் ஆற்றியுள்ள தொண்டுகளுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, ஈ.வே. இராமசாமி அவர்களுக்குப் ஷபெரியார்' என்னும் சிறப்புப் பட்டப்பெயரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சி பெண்ணின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.

பெண்கள் காவல்துறையிலும், படையிலும் பணிபுரிய வாய்ப்பு அளிக்க வேண்டும். அரசு அலுவல்களில் ஐம்பது விழுக்காடு பெண்களுக்கு என்றும், சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்க வந்த சட்டமட் 1967 இல், திராவிட முன்னேற்றக் கழக அரசால் நிறைவேற்றப்பட்டது. இதுபோலவே 1986 -ல் கூட்டுடைமைச் சொத்தில் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை வழங்கிச் சட்டமியற்றப்பட்டது. அதே ஆண்டில் பெண்களுக்கு அரசுப் பணிகளில் 33ூ இடஒதுக்கீடும், பஞ்சாயத்து அரசாங்கத்தில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடும் செய்யப்பட்டது. தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

திரு.வி.க.

பெண்களின் உரிமைகள் ஆண்களின் ஆணவத்தாலும், வஞ்சகத்தாலும், துறவு கொள்ளும் உரிமையாலும் அவர்தம்நோக்கத்திற்கேற்பப் பலியிட்டதைக் கண்டு கண்ணீர்விட்டவர் திரு.வி.க. முற்காலத்தில் நிலவிய இயற்கையொடு ஒப்பிய வாழ்வில், மகளிர் பெற்றிருந்த உரிமை வாழ்வுக்கு வழிகாண விழைந்த

திரு.வி.க. ஷபெண்ணின் பெருமை' என்னும் ஓர் நூலில் இயற்றியுள்ளார். பெண் தாயாகலான், பெண்ணலன் பெரிதும் ஓம்பப் பெறல் வேண்டும். பெண்ணலன்

ஓம்பப்படாத இடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவல் அரிது. ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கும் என்று உணர முடிகிறது.

இன்றைய சமுதாயத்தில் பெண்களின் பார்வைக்கு

காலங்காலமாய்ப் போராடிப் பெற்ற உரிமைகளைப் பெண்கள் தக்கவாறு காத்து, அதன் விளைவைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது சமுதாயத்தின் பயனாகும். அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றவாறு சமுதாயத்தின் ஒவ்வொரு நிலையிலும் மகளிரைப் பங்கேற்கச் செய்தல் வேண்டும். வலிமைமிக்க நாடாய் உருவாக்குவதில் பங்குபெறப் பெண்களுக்கு, ஆணுக்கு இணையாய் உரிய வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

படித்த பெண்கள் தாம் பெற்ற கல்வியின் கல்வியறிவால் மற்றையோரையும் திருத்தித் தாமும் விடுதலை உணர்வோடு வாழ வேண்டும். சமுதாயக் கொடுமைகளுக்கு ஆளாகி எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்கும் பெண்ணினம் நல்வாழ்வினைப் பெறத் தொண்டாற்ற வேண்டும். புதிய சமுதாயம் உருவாக, எல்லா நிலையிலும் பெண்கள் உரிமை பெற்றுத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் எல்லாரிடையும் மலர்தல் வேண்டும். மேலும் இல்லறத்திற்கு ஆணும் பெண்ணும் இணையாய் வாழும் அறமே எல்லா அறத்தினும் உயர்ந்தது என்று நம் முன்னோர் வகுத்தனர்.

"மங்கையராய்ப் பிறப்பதற் கேநல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

கவிமணி கூற்றுக்கு இணங்க,

ஒன்று கூடுவோம்
உயர்வோம்
வாரீர்!

திருவிந்தளூர் செப்பேடும், அதன் தனிச்சிறப்பும்

திருமதி ஜெ.ச.சித்ரா, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை-609 001.

வரலாற்றை அறியஉதவும் ஆதாரங்களில் கல்டவெட்டிற்கு இணையாக செப்பேடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இச்செப்பேடுகளின் மூலம் மன்னரின் முன்னோர்கள் குடிவழிப்பட்டியல், காலவரைமுறை, எழுத்துக்களின் மொழி, நடை, எழுத்து மற்றும் பிற்காலச் சோழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலை பற்றியும், இவர்களது போர்கள் அதாவது திருஇந்தளூர் செப்பேடு, முதலாம் இராஜாதிராஜனின் மேலை சாளுக்கியர் போர், முதலாம் இராஜேந்திரனின் கொப்பத்துப்போர், வீரராஜேந்திரனின் போர்களைச் செப்பேடுகள் தெளிவாகக் காட்டுகின்றது. சோழர்காலச் செப்புப்பட்டயம் முறையே,

1. உதயேந்திரம் செப்பேடு
2. வேலஞ்சேரிச் செப்பேடு
3. அன்பில் செப்பேடு
4. திருச்செங்கோடு பட்டயம் - 1
5. திருச்செங்கோடு பட்டயம் - 2
6. பள்ளன் கோறல் செப்பேடு
7. சென்னை அருங்காட்சியக செப்பேடு
8. பெரிய லெய்டன் செப்பேடு
9. திருவாலங்காடு செப்பேடு
10. கரந்தை செப்பேடு
11. திருக்களர் செப்பேடு -1
12. திருக்களர் செப்பேடு -2
13. சிறிய லெய்டன் செப்பேடு -1
14. சிறிய லெய்டன் செப்பேடு -2
15. சிறிய லெய்டன் செப்பேடு -3
16. சிறிய லெய்டன் செப்பேடு -4
17. சராலய செப்பேடு
18. திருவிந்தளூர் செப்பேடு ஆகியவை ஆகும்.

இத்தகைய வரிசையில் உள்ள 18-வது திருவிந்தளூர் செப்பெடு சிறந்த தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறது. பிற்காலச் சோழர்காலத்தில் எசாலம் செப்பேட்டுக்குப் பின், திருவிந்தளூர் செப்பேடு கிடைக்கப் பெற்றது. இச்செப்பேடு தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில், மயிலாடுதுறையிலிருந்து ஆணைதாண்டவபுரம் செல்லும் சாலையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருவிந்தளூரின் உட்கிராமமான கழுக்காணிமுட்டம் என்ற பகுதியில் பிற்காலச் சோழன் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் உள்ளது. தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை மூலம் அக்கோயிலின் முன் மண்டபம் கட்டும் பணிக்காக நிலத்தை தோண்டியபோது பன்னிரண்டு அடி ஆழத்தில் செப்புத் திருமேனிகள், பூஜைப் பொருள்கள், இசைக்கருவிகள், சோழர் காலத்தைச் சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்பேடுகள் ஆகியவை 20.05.2010 அன்று கண்டெடுக்கப்பட்டன.

திருவிந்தளூர் செப்பேடு 85 ஏடுகளைக் கொண்டதாய், அரசு முத்திரையுடன் கூடிய 2.5செ.மீ கனமும், 50செ.மீ விட்டமும், கொண்ட பெரிய வளையத்தில் கோர்க்கப்பட்டுப் பிரிக்கப்படாத நிலையில் இருந்தது. பொதுவாகச் செப்பேடு முத்திரைகளில் உள்ள சின்னங்கள் புடைப்பாடு அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தச் செப்பேட்டின் முத்திரையில் உருவங்கள் குழிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் வலப்புறம் திரும்பி அமர்ந்த நிலையில் புலி, இரண்டு கயல்கள்(மீன்கள்) நாணுடன் கூடிய நெடிய வில், இவற்றிற்கு இருபுறமும் குத்து விளக்குகள், மேலே நடுவில் வெண்கொற்றக் குடை, அதன் இருபுறமும் சாமரம் ஆகியவை இடம் பெற்றுள்ளன, இம்முத்திரை 11 செ.மீ விட்டமும், 2 செ.மீ கனமும் கொண்டதாகும். இவ்வளையத்தில் 86 செப்பேடுகள் கோர்க்கப்பட்டுள்ளன என்று எழுதப்பட்டிருப்பினும், தற்போது இத்தொகுப்பில் 85 செப்பேடுகளே உள்ளன. முதல் செப்பேடு காணக் கிடைக்கவில்லை. இதன் ஏடுகள் ஒவ்வொன்றும் 44செ.மீ நீளமும், 21செ.மீ அகலமும் உடையதாய் மொத்தம் எடை 150 கிலோவாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

அச்செப்பேட்டின் முத்திரையின் விளிம்புப் பகுதியில் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இதன்பொருள் "இராஜேந்திர தேவன் என்கிற பரகேசரிவர்மனின் இந்த தர்மம் உலகத்தின உச்சியின் மீது வைக்கப்படுகிறது" என்பதாகும்.

திருவிந்தளூர் செப்பேட்டின் தொகுப்பில் ஒன்று முதல் ஒன்பதாம் ஏட்டின் பின்பக்கம் இரண்டாம் வரியின் பகுதிவரை கிரந்த எழுத்தில் சமஸ்கிருதப் பகுதியும், அதன் பின் இறுதிச் செப்பேடு வரை தமிழ் எழுத்தில் தமிழ்ப் பகுதியும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஏட்டிலும் இடது புறம் வளையத்தினைக் கோர்ப்பதற்கு உரிய 30 செ.மீ அளவுள்ள துளையினை ஒட்டியவாறு எண் இடப்பட்டுள்ளது. கிடைத்திருக்கும் முதல் ஏட்டில் எண் இரண்டில் தொடங்கி 86 வரை தொடர்ச்சியாக எண் இடப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதியில் ஒரு ஏட்டின் ஒரு பக்கத்தில் குறைந்த அளவாக 20 வரிகளும், அதிக அளவாக 30 வரிகளும் எழுதப்பட்டுள்ளன. அதற்கேற்ப எழுத்துக்கள் பெரியனவாகவும், சிறியனவாகவும் அமைந்துள்ளன. கிடைத்திருக்கும் முதல் ஏட்டின் வலது கீழ் மூலையில் சிறிது உடைந்துள்ளதால் வரிகள் 13 முதல் 19 வரை இறுதியில் சில எழுத்துக்கள் கிடைக்கவில்லை. இவ்வேட்டின் நடுவிலும் ஒரு பிளவு காணப்படுகிறது. இருப்பினும் இணைந்தே உள்ளது.

சோழ மன்னர்கள் முதலாம் இராஜாதிராஜனாலும், இரண்டாம் இராஜேந்திரனாலும் வெளியிடப்பட்ட ஆணைகளைத் தாங்கியதாய், வீரராஜேந்திரனின் காலத்தில் எழுதப்பட்டதாய்க் கிடைத்திருக்கும் முதல் செப்பேடு என்ற பெருமைக்குரியது திருவிந்தளூர் செப்பேடு.

மேலும் இரு மன்னர்களின் ஆணைகளும் இணைக்கப்பட்டு, ஒரே தானமாக வழங்கப்பட்டதைக் குறிக்கும் செப்பேடாக விளங்குவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ஏன் இந்தியாவிலேயே கிடைத்துள்ள செப்பேடுகளில் பெரிய செப்பேட்டுத் தொகுதியாக இதுவரை கருதப்பட்டு முதலாம் இராஜேந்திர சோழனின் 57 ஏடுகளைக் கொண்ட கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியை விட, அளவிலும், ஏடுகளின் எண்ணிக்கையிலும் இத்தொகுப்பு மிகப்பெரியதாக விளங்குகிறது. மேலும் செப்பேடுகளை இணைக்கும் "இவ்வளையத்தில் கோத்த ஏடுகள் என்பத்தாறு" என்று எழுதப்பட்டிருப்பதும் திருவிந்தளூர் செப்பேட்டின் தனிச்சிறப்பாகும்.

திருவிந்தளூர்ச் செப்பேட்டில் இடம் பெறும் 172பக்கங்களில் கிடைக்காத முதல் ஒரு ஏடு நீங்கலாக, மீதமுள்ளவற்றில் முதல் 17பக்கங்கள் சமஸ்கிருதப் பகுதியும் இடையில் முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரனின் மெய்க்கீர்த்திப் பகுதிகள் இடம் பெறும் சுமார் மூன்று பக்கங்களும் போக, எஞ்சிய 152 பக்கங்களில் இரு அரசர்களின் ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கொடுக்கப்பட்ட கொடையூர்கள் ஏறத்தாழ 50, இவற்றுள்ளும் சில பழைய ஊர்களின் பகுதிகள் மட்டும் வேறு ஊர்களில் பகுதிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. பிரம்மதேய நிலங்கள், தேவதான நிலங்கள், சபை உரிமைக்குரிய நிலங்கள், ஊருக்குரிமையுடைய நிலங்கள் ஆகியவை பல்வேறு வகைப் பிரிவுகளில் இருந்த ஊர்களும் பிரிக்கப்பட்டும், விலைவாங்குதலும் விற்றலும் செய்யப்படும், தலைமாறு கொடுத்ததுப் பெறப்பட்டும், இணைக்கப்பட்டும், உரிமை மாற்றம் செய்யப்பட்டும், இந்தக் கொடைக்குரிய நிலமாக மாற்றப்பெற்று, இறுதியில் அனைத்தும் இணைந்த அகர பிரம்மதேயம் இராஜேந்திரச் சதுர்வேதிமங்கலமாக உருவாக்கம் பெற்றுள்ளது. இவ்வாறு பல்வேறு பதிவு மாற்றங்களைச் செய்த போது, ஒவ்வொரு மாற்றத்தின் போதும் உடனிருந்து செயல்பட அதிகாரிகள், நில உரிமை உடையவர்கள் ஆகியோரும் விரிவாகக் குறிப்பிடுகின்றன.

முதலாம் இராஜேந்திர சோழனின் மகனாகிய இராஜாதிராஜனின்(கி.பி1018 - 1054) முப்பத்தி ஐந்தாவது ஆட்சியாண்டின்(கி.பி 1053) நாற்பதாவது நாளில் முடிகொண்ட சோழபுரம் என்று அழைக்கப் பெற்ற பழையாறை அரண்மனையில் கீழைச் சோபானம் என்னும் இடத்தில் வீஜயராஜேந்திரக்காலிங்கராஜன் என்னும் அரச இருக்கையில் அமர்ந்து இராஜேந்திரனின் அறக்கொடைக் கொண்ட அரசாணை திருவிந்தளூர் செப்பேட்டின் முதற்பகுதியில் காணமுடிகிறது. அறக்கொடைகளைத் தாங்கிய அரசாணை திருவிந்தளூர் நாட்டுநாட்டார், பிரம்மதேயக்கிழவர்கள், தேவதான, பள்ளிச்சந்த, கணிமுற்றூட்டு, வெட்டிப்பேறு, பழவறச்சாலபோன உரிமையர்களுக்கு இவ்வாணை அனுப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டின் இரண்டாம் பகுதி ஏடு 19-யிலிருந்து தொடங்குகிறது. முதலாம் இராஜாதிராஜனை தொடர்ந்து இரண்டாம் இராஜேந்திரன்(கி.பி1051-1063) நான்காம் ஆட்சி ஆண்டில் அதாவது(கி.பி1065) ஆம் ஆண்டின் கங்கைக் கொண்ட சோழபுரம் அரண்மணையில் அமைந்த சோமகேளரளன் மாளிகைப் பகுதியில் குளிக்கும் நேரத்தில் அரசாணை அனுப்பியதாக திருவிந்த;ர் நாட்டு நாட்டார், குறுக்கை நாட்டு நாட்டார், நாங்கூர் நாட்டு நாட்டார், பிரம்மதேயக் கிழவர்கள், தேவதான, பள்ளிச் சந்த, கணமுற்றூட், வெட்டப்பேறு, அறச் சாலபோகம் உள்ளிட்ட நில உரிமையுடையோர்கள். ஊர்களிலார். நகரங்களிலார் ஆகியோருக்கு அனுப்பப்படுவதாக குறிக்கப்பட்டுள்ளது.

சோழர்கள் ஆதிக்கத்தில் கீழிலிருந்து ஜெயங்கொண்ட சோழமண்டலம்(தொண்டை நாடு) இராஜராஜப் பாண்டி மண்டலம்(பாண்டி நாடு), சோழநாடு ஆகிய தமிழகத்தில் முப்பெரும் பிரிவுகளையும் சேர்ந்து சதுர்வேதி பட்டர்கள் இவ்வாணையின் மூலம் நிலதானம் பெற்றுள்ளனர். மன்னனின் குருதேவர் சாசன ஸ்லோகம் செய்தவர், மன்னனைச் சிறப்பித்து பாடியவர். ஊரைச் சிறப்பித்து பாடியவர், செப்பேட்டில் எழுத்தை வரைந்தவர், எழுத்தை வெட்டியவர் ஆகிய செப்பேட்டோடு நேரடித் தொடர்புடையோர் அனைவரும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள். பாண்டி நாட்டின் முக்கியமான தளங்களைச் சேர்ந்த பட்டர்களும் சோழ நாட்டிலமைந்த திருவந்தளூரில் நிலப்பங்கு பெற்றுள்ளனர் என்பதும் திருவிந்தளூர் செப்பேட்டின் மற்றொரு தனிச்சிறப்பாகும்.

மேற்குறித்த விவரங்களுடன் பயன்பெற்ற சதுர்வேதி பட்டர்களின் பெயர்கள், கொடையளிக்கப்பட்ட ஊர்களில் பல்வேறு பெரிய மற்றும் சிறிய கோயில்கள், பல்வேறு தெய்வங்கள் ஆகியவற்றுக்கும், பல்துறை புலமை வளர்ச்சிக்கும், அவ்வூர்களில் பணிபுரியும் பல்வகைப் பணியாளர்களுக்கும் ஒதுக்கப்பெற்ற பங்குகள், நில எல்லைகள், ஓம்படைக் கிளவி உள்ளிட்ட ஓர் ஆணையில் இடம் பெற வேண்டிய அனைத்து விவரங்களையும் இச்செப்பேட்டில் 152 பக்கங்களில் இருந்து தெரிந்துக் கொள்ள முடிகிறது.

இத்தகைய நீண்ட திருவிந்தளூர் செப்பேடு வாசகத்தில் சோழர் கால அரசாணையில் ஏதோ ஒரு இடத்தில் விளக்கம் பெறுவதில் இடர்பாடோ, சிறு தவறோ இல்லாமல் இருப்பது தமிழர் திறமைக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாகும். மேலும் சோழர் தம் அரச கட்டமைப்பில் நிர்வாகிகளின் திறமையை நினைக்கும் போது பிரமிக்க வைக்கிறது.

திருவிந்தளூர் செப்பேட்டில் சமஸ்கிருத பகுதியில் சில செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. அச்செய்திகள் செப்பேட்டின் தமிழ்ப பகுதியில் காணப்படவில்லை. இச்செப்பேட்டில் முதல் ஏடு நீங்கலாக மீதமுள்ள பதினேழு பக்கங்கள் சமஸ்கிருத பகுதியில் காணப்படுகின்றன.

இரண்டாம் இராஜேந்திரனின் அரசவையில் சிறப்பிடம் பெற்றவனும், மதிக்கப்பட்டவனும் சிறுநாவலூர் என்ற ஊரைச் சார்ந்தவனும், சக்கரபாணியின் புதல்வனும், ஆரியசர்மனின் முதல் மாணாக்கனுமான பிரம்மதேவன் என்னும் பிரம்ம பல்லவராஜன் என்று அழைக்கப்பெற்ற பிராமாத்மனுக்கு கப்பலூர் என்ற ஊர் இராஜேந்திரமங்கலம் என்று புதிதாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பட்டாபிஷேகதட்சிணையாக மன்னனால் அவனுக்கு வழங்கப்பட்டது.

அபிஷேக தட்சிணையாக இரண்டாம் இராஜேந்திரன் நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி.1055) பிரம்ம தேவனுக்குக் கொடுக்கபட்ட தானம் நிலை நிறுத்தப்பட்டது வீரராஜேந்திர சோழனின்(கி.பி1063-1070) இரண்டாவது ஆட்சி ஆண்டில்(கி.பி 1065-89) -ஆம் நாளில் கங்கை கொண்ட சோழபுரத்து திருமஞ்சனை சாலையில் இருந்து சந்திர பூஷண கவிக்கு இராஜாதிராஜ வனநாட்டிலுள்ள புல்லூரின் தென்பகுதியில் அமைந்த 12 வேலி நிலம் "சாசன ஸ்லோக தட்சினை"யாக வழங்கப்பட்டது என்றும் இந்நிலத்தின் மூலம் அரசு வருவாயான 627.5 பாரம் அளவுள்ள நெல் விரிவாக்கம் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவிந்தளூர் செப்பேட்டு தமிழ்ப் பகுதிக்கும், சமஸ்கிருத பகுதிக்கம் "ஸ்வாபிஷேக தட்சினை" என்ற பொருளில் ஏதோ குழப்பம் இருந்திருக்கலாம் என்றும் வீரராஜேந்திரனால் இச்செப்பேட்டு எழுதப்பட்ட காலத்தில் தீர்வு செய்யப்பட்டு தமிழ்ப் பகுதியின் இறுதியில் "வீரராஜேந்திரனின் நியோகம்" சந்திரபூஷனின் சாசனம் என்று குறிப்புரைகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக கல்வெட்டுகளுக்கு இணையாக பேசப்படும் செப்பேடுகள் எவ்வித இடைச்செருகல்கள் இல்லாமல், காலத்தால் அழியாத ஒன்றாக திகழ்கின்றது. தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பெடுகளில் திருவிந்தளூர் செப்பேடு பெரிய செப்பேட்டு தொகுதிகளாக கருதப்படுகிறது. இச்செப்பேடு மன்னரது ஆட்சி, அரசியல், சமூக,

பொருளாதார, சமயநிலை, மக்களது வாழ்வியல் முறைகளை எடுத்தியம்பும் ஒரு காலப்பொக்கிஷமாக வரலாற்று ஆய்வாளர்களுக்கு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

துணைநூற்பட்டியல்

1. S.I.I. Vol:III No.76
2. S.I.I. Vol:III No.128
3. ஞா.மாணிக்கவாசகம், புறநானூறு பாடல், சென்னை-01.
4. ஓ.ஏகாம்பரநாதன், அரங்க பொன்னுசாமி, தொல்லியல் அகழ்வாய்வு நெறிமுறைகள், சென்னை-20.
5. ச.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாட்டுச் செப்பேடுகள், தொகுதி – ஐஐஐ, சிதம்பரம்.
6. மா.சந்திரமூர்த்தி, எசாலம் வரலாற்றுப்புதையல், சென்னை-1995.
7. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் (தொகுதி-2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.1990.
8. கே.கே.பிள்ளை, சோழர் வரலாறு, சென்னை.1998.
9. கே.வி.இராமன், - “கல்வெட்டியியல் கோட்பாடும் முறையியலும், தொல்லியல்துறை. சேன்னை-1982.
10. தி.ஸ்ரீ.ஸ்ரீதர் - திருவிந்தளூர் செப்பேடுகள்.

புறநானூற்றில் காதல்

செ.சிபிவெங்கட்ராமன், முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

காதல் என்பதற்கு அன்பு, ஆசை, ஆந்தை, கௌளி முதலியவைகளின் ஒலி, ஆவல், ஒரு, பாடல், கொலை, கொல்லல், தறித்தல், மகன், முறித்தல், விரகம் என்று பொருளுரைக்கின்றது கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி. காதலால்தான் இந்த பூமி வழிவழியாக வாழ்கிறது. காதலால்தான் இந்த உலகில் அத்துணை உயிர்களும் பிறக்கின்றன. ஒருவருக்கொருவர் சாதி மத இன மொழிகளைக் கடந்த பின்னும் கூட அன்பென்ற ஒற்றை வார்த்தைக்கு கட்டுப்பட்டே நடக்கின்றனர். அந்த வகையில் உலகின் இயக்க சக்திகளுள் ஒன்றாக இந்தக் காதல் அமையப் பெற்றுள்ளது. அது முறையே புற இலக்கியமான புறநானூற்றில் எந்தெந்த நிலைகளில் பயின்று வந்துள்ளது என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

காதல் வாழ்க

பொறையாற்றுக் கிழான் தன் வளமனையின்கண் நெஞ்சமர்ந்த காதலை உடைய மனைவியுடன் கூடி வாழ்வானாக என்று கல்லாடனார் என்னும் புலவர் வாழ்த்துவதாக புறநானூற்றின் 391 ஆம் பாடல் அமைகின்றது. அப்பாடல்,

. . . . பெரும மாண்டக
இருநீர்ப் பெருங்கழி துழைமீ னருந்தும்
துதைந்த தூவியம் புதாஅஞ் சேக்கும்
புதைந்த புன்னைச் செழுநகர் வரைப்பின்
நெஞ்சமர் காதனின் வெய்யோளொ
பின்றுயில் பெறுவதில் நீயே வளஞ்சால்
துளிபத னறிந்து பொழிய
வேலியாயிரம் விளைகநின் வயலே (புறம்.391)

என்கிறார் கல்லாடனார். ஒருவரை வாழ்த்தும் போது கூட காதல் மனைவியுடன் நெடிது நாள் வாழ்க என்று வாழ்த்துமளவுக்கு காதலின் சிறப்பு இருந்துள்ளது. ஏனெனில் காதல் மனைவி அவனருகில் இருக்க அவன் வாழ்வில் அத்துணை அறங்களும் நிலைப்பெற்று நிற்கும் என்பதை கல்லாடனார் அவ்வாறு வாழ்த்துகிறார்.

காதல் தந்த கள்

முதுகுடி மறவருள்ளும் வேந்தன் தனக்கு, முகந்தேந்திய கள்ளை காதலால் தன்னருகேயுள்ள வீரனுக்குத்தருக எனக் கூறி அவனைச் சிறப்பித்தான் என்கிற செய்தியை, கழாத்தலையாரின் பாட்டு வழி அறிந்துக் கொள்ள முடிகின்றது. இவ்விடம் வீரனின் பால் கொண்ட காதலால், மன்னன் அவ்வீரனுக்கு கள் வழங்கச் சொல்வதாக அமைக்கப்பட்டுள்ளது. அது அவ்வீரனின் மறத் தன்மைக்குக் கிடைத்தப் பரிசு, மன்னன் விரும்பியது அவ்வீரனின் வீரப் பண்பையே ஆகும், வீரமும் கூட அக்காலத்திய மனிதர்களால் காதலிக்கப்பட்டு இருப்பதை இதன் வழி அறிந்துக் கொள்ள முடிகின்றது. காளையை அடக்கி கன்னியரைக் கவர்வதும், இளவட்டக் கல்லைத் தூக்கி கன்னியரை மணப்பதும் கூட அக்காலத்திய மக்கள் வீரத்தின் மீது கொண்டிருந்த காதலையே வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
மூதிலாள ருள்ளும் காதலிற்
. . . . மதுவுமன் றிசினே (புறம்.289)

என்பதே அப்பாடலாகும்.

கனவிலும் வந்த காதல்

ஒருவர் மீது அளவற்ற அன்பு கொண்டிருப்பின் அவர் மீதான எண்ணமும், ஏக்கமும் நம் மனதிடையே ஆழ்ந்துப் பதிந்துப் போய்விடும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் அவ்வன்பு கொண்ட ஒருவரை நினைத்துக் கனவிலும் கூட பிதற்கும் நிலைக்கு ஆளாகவும் கூடும். அப்படிப் பட்ட புலவர் ஒருவர் சங்க காலத்தில் இருந்திருக்கிறார். வடம்வண்ணக்கன் பேரிச் சாத்தனார் என்னும் புலவர் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவர் மீது கொண்டிருந்த தீராத காதலின் காரணமாக அவனை நினைத்து கனவிலும் அரற்றுவதாக அவரே பதிவு செய்கிறார். இதனை,

அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பின் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டேரண்ண னிற்பாராட்டிக்
காதல் பெருமையிற் கனவினு மரற்றுமென்
காமர் நெஞ்சமே மாந் துவப்ப. . . . - (புறம்.198)

என்கிறார். அருவி தாழ்ந்த பெரிய மலைபோல, ஆரத்தோடு பொலிந்த மார்பின்கண் வேட்கை தனியாத தெய்வத் தன்மையமைந்த கற்பினையும், ஆபரணத்தையுமுடைய உன் மடவோள் பெறப்பட்ட அழகிய புதல்வர் பொலிக என்று வாழ்த்தித் திண்ணிய தேரையுடைய வேந்தே! நின்னைப் புகழ்ந்து பரிசின்மேல் அன்பு பெரிதாகலின் கனவின் கண்ணும் நின் புகழையே கூறும் எனது விருப்பத்தை உடையதாக என் நெஞ்சம் அமைகின்றது என்று கூறுகிறார். அளவற்ற அன்பு கனவிலும் பிதற்ற வைக்கும் என்கிற செய்தியை இப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

காதலற்ற காதல்

காதலற்ற காதலும் உலகில் உண்டு. அன்பே இல்லாமல் சில பொருட் காரணங்களுக்காவோ, ஏனைய ஏதாவதொரு காரணத்தை மட்டும் முன் வைத்தோ இல்லாத காதலை வலிய வந்து பொழியும் சிலரும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த வகையில் சோழன் நலங்கிள்ளி, வஞ்சினமுரைப்பதாக அமைந்துப் பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகின்றது எனது அடியை அடைந்து எமக்கு ஈதல் வேண்டுமென்று தாழ்ந்து இரப்பாராயின் அவர்க்கு எனது அரசாட்சியைக் கொடுப்பது எளிது. இனிய உயிரையும் தந்து விடுவேன். அமைச்சர் படைத்தலைவர் முதலானவர்களின் வலிமையை அறியாமல் என்னை இகழ்ந்த அறிவில்லாதோன், தூங்கும் புலியை இடறிய குருடன் போலப் பிழைத்துப் போதலோ அரிது. வலிய மூங்கிலைத் தின்னும் யானையின் காலின்கண் அகப்பட்ட திண்ணிய மூங்கிலது முளையைப் போன்று மேற்சென்று அவ்விடத்துப் போர் செய்யேனாயின் காதல் கொள்ளாத பொதுப் பெண்டிரின் பொருந்தாத புணர்ச்சியிடை என் மாலை துவள்வதாக! என்று வஞ்சின முரைக்கிறான். காதல் கொள்ளாத பொதுப் பெண்டிரின் பொருந்தாத புணர்ச்சி என்கிறான் சோழ அரசன். புணர்ச்சியானது காதலுடன் பொருந்திவர வேண்டும் என்பதே இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய செய்தி. இதனை,

தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயங்கிடக் குழைக என்தாரே (புறம்.73)

என்பதே அவ் வஞ்சினமாகும்.

முகம் பாரா காதல்

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கையில் சான்றோர் பலர் அவனைச் சூழ இருந்தனர். வேறு பலரும் வந்து பார்த்தவாறு இருந்தனர். பலர் வந்தும்சோழனது எண்ணம் பிசிராந்தையார் பால் ஒன்றியிருந்தது. அவ்வப்போது அவன் அவரை நினைத்து சான்றோர்பால் உரையாடினான். சோழன் வடக்கிருக்கும் செய்தி பிசிராந்தையாருக்கு தெரியாது. அவர் ஊர் பாண்டி நாட்டுத் தொலைவில் உள்ளது. அவர் வர வாய்ப்பில்லை என்றிருந்தனர். மன்னனிடம் வேந்தே! பிசிராந்தையார் நின்னை கேள்விப்பட்டிருக்கிறாரே அன்றி நேரில் கண்டதில்லை. பல ஆண்டுகள் பழகிய நண்பரே நேரில் வருவதில்லை. இவர் வருவது அரிது எனக்கூற மன்னன் கோப்பெருஞ்சோழன்,

தென்னம் பொருப்பனன் னாட் டுள்ளும்
பிசிரோன் என்பவென் னுயிரோம் புறனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே (புறம்.215)

தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோா னென்னுந் சிறந்த
காதற் கிர்மையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே (புறம்.216)

என்கிறான். தன் பெயரைக் கேட்கும்போது என் பெயரையும் சேர்த்துச் செல்லும் பிசிராந்தையர் என்னை இதுநாள் வரையிலும் காணாது இருந்தாலும், இப்பொழுது வராது போனாலும், கண்டிப்பாக வருவார் அவர்க்கும் இடம் ஒதுக்குக என்றான். சொன்னபடியே அவரும் பின்னாளில் வந்து தாமும் உயிர் துறந்ததை வரலாறு கூறுகிறது. கண்ணால் ஒருவரை ஒருவர் காணாது காதல் கொள்ளும் அல்லது நட்பு கொள்ளும் இன்றைய காதலுக்கு முன்னோடிகளாக இவ்விருவரும் இருந்துள்ளனர் என்பது இவண் எண்ணத்தக்கது. இவையாவும் புறநானூற்றின் வழி அறியலாகும் காதல் பற்றிய செய்திகள் புறப்பாட்டில் இருக்கும் காதலைப் பற்றி சற்றே சிந்திக்கும் நோக்கில் இக்கட்டுரை அமையப் பெற்றது.

துணை நின்றவை

1. புறநானூறு, உ.வே.சா.
2. புறநானூறு, ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை
3. புறநானூறு பொருளுரை, கோ. இளையபெருமாள்
4. நா.கதிரைவேற்பிள்ளை அகராதி

கல்வெட்டுகள் மூலம் அறியப்பெறும் பிற்கால சோழர்கால கிராமசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் முறை

முனைவர் செ.சியாமளா, உதவி பேராசிரியை, வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை–609001.

சோழ மன்னரின் ஆட்சி சிறப்புற்றிருந்தமைக்கும் நாட்டு மக்கள் பன்னலங்களும் எய்தி அமைதியாக வாழ்ந்து வந்தமைக்கும் முதற்காரணம் அக்காலத்தில் ஊர்தோறும் நிலைபெற்றிருந்த ஊராட்சி மன்றங்களின் தன்னலமற்ற தொண்டேயாகும். சோழர்களின் ஆட்சிகாலத்தில் அமைக்கப் பெற்றிருந்த அந்த ஊர்ச் சபைகள் எல்லாம் பொறுப்புணர்ச்சியுடையனவாய் அறநெறி பிறழாமலும் நடுவு நிலைமை குன்றமலும் ஒழுங்காகத் தம் கடமை சபைகள் பால் பெருமதிப்பும் நம்பிக்கையும் வைத்து அவற்றின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து நடந்து வந்தனர். அத்தகைய ஊர்ச்சபையின் நேரான ஆளுகையின் கீழ்க் கிராமங்கள் அமைந்திருந்தபடியால்தான் அந்நாட்களில் பொதுமக்களுடைய வாழ்க்கை அமைதியாக இனிது நடைபெற்று வந்தது என்பது உணரற்பாலதாம். நன்மக்கள் தீயோரால் நலிவுறாமல் நல்வாழ் வெய்தவும், தீயோர்கள் அடங்கியொழுகவும் எந்நிலையினரும் பொருட்செலவின்றி விரைவில் நீதி பெறவும், அறநிலையங்கள் தமக்கரிய கடமைகளை ஆற்றிவரவும், அறப்புறங்கள் நன்கு பரிபாலிக்கப்படவும், ஊர்க்காரியங்கள் ஒழுங்காக நடந்து பொதுமக்கள் வாழ்வு வளம்பெற்றுத் திகழவும் கிராம சபைகள் செய்து வந்த அரும் பெருந்தொண்டுகள் அளவிலடங்கா என்பதை ஆங்காங்குக் காணப்படும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் நன்கு அறிவிக்கின்றன.

உத்திரமேரூரில் காணப்படும் இரண்டு கல்வெட்டுகளும் முறையே கி.பி.919, 921–ஆம் ஆண்டுகளில் வரையப்பெற்றனவாகும். இவற்றுள் முதல் கல்வெட்டு அவ்வூர்ச் சபையார், சம்வத் சரவாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்சவார வாரியம், பொன் வாரியம் ஆகிய நிறைவேற்றக் கழகங்களை நிறவுதற்குரிய விதிகளையும் முறைகளையும் எடுத்துரைக்கின்றன. இதிற் கண்டவை முதல் பராந்தக சோழனது ஆணையின்படி அக்கூட்டத்திற்கு வந்திருந்த தத்தனூர் மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரியின் முன்னிலையில் உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் தாமே அமைத்துக்கொண்ட விதிகளாகும். பிறகு இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்தால் அவ்விதிகளைத் திருத்தியும் விளக்கியும் அமைப்பது இன்றியமையாததாயிற்று. ஆகவே முதற் பராந்தக சோழனது பதினான்காம் ஆட்சியாண்டாகிய கி.பி.921-ல் அவ்வேந்தனது ஆணையின்படி அங்கு வந்திருந்த சோமாசிப்பெருமான் முன்னிலையில் உத்திரமேரூச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நிறைவேற்றுக் கழகங்களாகிய வாரியங்களை அமைத்தற்குரிய விதிகளை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

உறுப்பினராதற் குரிமையுடையோர்

கிராம சபையால் வாரியப் பெருமக்களாகத் தேர்நெடுக்கப்பெறும் உரிமையுடையவர்கள், தம் சொந்த மனையில் விடு கட்டிக் குடியிருப்பவர்களாகவும் காணிக்கடன் செலுத்தற்குரிய கால் வேலி நிலமுடையவர்களாகவும் சிறந்த கல்வியறிவுடையவர்களாய் அறநெறி பிழையாமல் நடப்பவர்களாகவும் தூய வழியில் பொருள் ஈட்டி வாழ்ந்து வருபவர்களாகவும், காரியங்களை நிறைவேற்றுவதில்

வள்மையுடையவர்களாககவும் முப்பத்தைந்துக்கு மேல் எழுபதுக்குட்பட்ட வயதினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெறாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். பெருங் கல்விமான்களாயிருப்போர் அரைக்கால் வேலி நிலமுடையவர்களாயிருப்பினும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமையுடையவராவர்.

உரிமை இழந்தவர்கள்

நிறைவேற்றுக் கழகத்தில் உறுப்பினராயிருந்து இறுதியில் கணக்குக்காட்டாமல் இருந்தவர்களும், இவர்களுடைய நெருங்கிய உறவினர்களும் கூடத்தகாதவர்களோடு கூடியவர்களும், இவ்விரு வகையாருடைய நெருங்கிய சுற்றத்தினர்களும், எத்தகைய கையூட்டும் (இலஞ்சம்) வாங்கியப் பிறகு, பிராயச்சித்தம் செய்து தூய்மை அடைந்தவர்களும் மாபாதகஞ் செய்து பிராயச்சித்தம் புரிந்தவர்களும். ஊர்க்குத் துரோகஞ் செய்து பிராயசித்தம் புரிந்தவர்களும், கூடத்தகாதவர்களோடு கூடிப் பிராயச்சித்தஞ்செய்தவர்களும், குற்றம் காரணமாகக் கழுதை மேல் ஏற்றப்பட்டவர்களும், கள்ளக் கையெழுத்திடலாகிய கூடலேகை செய்தவர்களும் ஆகிய இன்னோர் கிராம காரியஞ் செய்யும் வாரியப் பெருமக்களாகத் தெரிந்தெடுக்கப்படும் உரிமையினைத் தம் வாழ்நாள் முழுவதும் இழந்தவராவர். தீயோர்களின் கூட்டுறவால் கெட்டுப்போனவர்கள் மாத்திரம் பிராயச்சித்தஞ் செய்த பின்னர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையை மீண்டும் பெறுவர்.

உறுப்பினரை தேர்ந்தெடுக்கும் முறை

ஒவ்வொரு சதுர்வேதி மங்கலமும், ஊரும், நகரமும் அக்காலத்தில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு (ward) என்று வழங்கினர். ஒவ்வொரு குடுப்பிற்கும் பிரதிநிதியாக உவ்வோர் உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடுப்புகளின் எண் அவ்வூரின் பெருமை சிறுமைக்கு ஏற்றவாறு மிகுந்தும் குறைந்தும் இருந்தன.

செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உத்திரமேரூர் முப்பது குடுப்புகளையுடையதாகவும், தஞ்சாவூர் ஜில்லாவில் திரக்காட்டுப்பள்ளிக் கண்மையிலுள்ள செந்தலை அறுபது குடும்புகளை உடையதாகவும் இருந்தமை இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பிலுள்ளவர்களும் தாமே கூட்டம் நடத்தி நிறைவேற்றுக் கழகத்தில் உறுப்பினராக இருந்ததற்குரிய தகுதியும் உரிமையும் உடைய எல்லோருடைய பெயர்களையும் தனித்தனி ஓலைத்துண்டுகளில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்குசேர்த்து, அவை எக்கடும்பிற்குடையவை என்பதுநான்கு புலப்படுமாறு அக்குடும்பின் பெயர் வரையபெற்ற வாயோலை யொன்றைச் சேர்த்து அவ்வோலைக்கட்டை ஒரு குடத்திலிட்டு வைப்பர். இங்கனமே எல்லாக் குடும்புக்கட்கும் செய்து வெவ்வேறு வாயோலையுடன் தனித்தனியாகக் கட்டி குடத்திலிடுவர்.

பிறகு, உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தற்குக் குறிக்கப்பட்ட நாளிலே அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈருகவுள்ள எல்லோரும் ஓர் இடத்தில் கூட்டப்பெறுவர். அக்கூட்டத்திற்கு அரசர்பெருமானது ஆணையின்படி அரசாங்க அதிகாரி ஒருவர் வந்திருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனிப்பது வழக்கம். அன்றியும், அவ்வூர் நம்பிமார் அனைவரும் தவறாமல் அக்கூட்டத்திற்க்கு வந்து மகாசபை மண்டபத்தில் அமர்ந்தித்தல்வேண்டும். அங்குள்ள நம்பிமாருள் வயது முதிர்ந்தோர் ஒருவர் குடும்புகளின் ஓலைக்கட்டுக்கள் போடப்பெற்றிருந்தக் குடத்தை

மேல் நோக்கி எல்லோருங்காணுமாறு எடுத்துக் கொண்டு அக்கூட்டத்தின் நடுவில் நிற்றல் வேண்டும். பிறகு, ஒன்றும் உணராத இளைஞன் ஒருவனைக்கொண்டு அக்குடத்திலிருந்த ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்த வேறொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அக்குடத்திலுள்ள ஓலைத் துண்டுகளுள் ஒன்றை அச்சிறுவனைக் கொண்டு எடுக்கச் செய்து, அதனை மத்தியஸ்தன் கையில் கொடுப்பித்தல் வேண்டும். அவன் தன் ஐந்து விரல்களையும் அகல விரித்து அவ்வோலைத் துண்டை உள்ளங்கையில் ஏற்று, அதில் எழுதப்பெற்றுள்ள பெயரைச்சபையிலுள்ளோர் யாவரும் தெரிந்துகொள்ளும்மாறு படிப்பான்.

பின்னர், அங்குள்ள நம்பிமார் எல்லோரும் ஒவ்வொருவராக அதனை வாசிப்பார்கள். அதன்பிறகு அப்பெயர் ஓலையில் வரைந்து கொள்ளப்படும். அவ்வோலையில் குறிக்கப்பெற்றவரே அக்குடும்பிற்குரிய நிறைவேற்றுக்கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவராவர். இங்ஙனமே மற்றைக் குடும்புகளுள் ஒவ்வொன் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பெறுவர். ஊரிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர் நிறைவேற்றுக் கழகங்களாகிய வாரியங்கள் அமைக்கப்பெறும்.

இவ்வாரியங்கள் சம்வற்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம், கழனிவாரியம், கணக்குவாரியம், கலிஞ்குவாரியம், குடும்பவாரியம், என்று வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலில் குறிப்பிடப்பெற்ற ஐந்து வாரியங்களே உத்தரமேரூர்ச் சபையால் அமைக்கப்பட்டிருந்தன என்பது இரண்டாங் கல்வெட்டால் நன்கறியக் கிடக்கின்றது. பிற வாரியங்கள் இருந்தமை வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள திருப்பாற்கடலில் காணப்படும் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது.

வாரியங்கள் எல்லாம் நிறைவேற்றுக் கழகங்களாதலின் ஒவ்வொரு கிராம சபையும் அவ்வவ்வூர்க்கும் சூழ்நிலைக்கும் இன்றியமையாத சில வாரியங்களை மாத்திரம் அமைத்துக்கொண்டனவேயன்றி எல்லா வாரியங்களையும் அமைத்துக் கொள்ளவில்லை என்பது அறியற்பாலதாகும். எனவே, எல்லா ஊர்ச் சபைகளாலும் எல்லா வாரியங்களும் அமைக்கப்படவில்லை என்பது தேற்றம். சம்வற்சரவாரியம் எல்லா ஊர்களிலும் இருந்தது. இதனை ஆட்டை வாரியம் என்றும் கூறுவர்.

உத்திரமேரூரிலிருந்து முப்பது குடும்புகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் முப்பது உறுப்பினருள் பன்னிருவர் சம்வற்சரவாரியராகத் தெரிந்தெடுக்கப் பெறுவர். மற்றையோருள், பன்னிருவர் தோட்டவாரியராகவும் எஞ்சி நின்ற அறுவர் ஏரிவாரியராகவும் இருப்பார்கள். மேற்குறித்த முப்பது குடும்புகளிலுமிருந்து குட வோலைவாயிலாக மீண்டும் பன்னிரண்டு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுள் அறுவர் பஞ்சவார வாரியராகவும் எஞ்சியுள்ள அறுவரும் பொன்வாரியராகவும் இருப்பர். ஈண்டுக் குறிக்கப்பெற்ற வாரியங்களுள், சம்வற்சர வாரியத்திற்கு உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படவோர். முன்னர் ஏரிவாரியத்திலும் தோட்டவாரியத்திலும் உறுப்பினராயிருந்து அனுபவம் பெற்றவர்களாகவும் கல்வியிலும் வயதிலும் முதிர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கிராம சபையால் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று இவ்வாரியங்களில் உறுப்பினராயமர்ந்துள்ளோர் எல்லோரும் ஏதேனும் குற்றம் பற்றி இடையில் விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெற்றுக்கொள்ளாமல் கிராம வாரியங்களைச் வெய்வதற்கு உரிமையுடையவர் ஆவர்

இவ்வுறுப்பினரும் எக்காரணம் பற்றியேனும் அபராதம் கொடுக்க நேர்தவர் அவ்வாரியத்திலிருந்து விலக்கப்படுவர். உடனே குட வோலை வாயிலாக வெறெருவர் உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பெறுவர். நிறைவேற்றுக் கழக உறுப்பினர் எல்லோரும் ஆளும் களத்தார் எனவும், வாரிய பெருமக்கள் எனவும் அந்நாளில் பொதுமக்களால் பெருமையாக வழங்கப்பட்டது. இச்செய்திகள் அனைத்தும் நம்க்கு தெரியவருகிறது.

Reference :

1. Annual report on south Indian Epigraphy 1931-32.
2. Travancore archaeological vol.II & vol.VI
3. Ins.326 of 1910
4. Ins.322 of 1910
5. Ins.308 of 1910

சதக இலக்கியங்களில் பெண்கள்

முனைவர் த.சுகன்யா, விரிவுரையாளர்-தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு.

தமிழ் மொழி தோன்றிய காலம் தொட்டு இக்காலம் வரை உலக வரலாற்றில் பண்பாட்டையும் நாகரீகத்தையும், கலைகளையும் பேணிக்காத்து வளர்ப்பதில் தமிழ்ச்சமுதாயம் சிறந்து விளங்குகிறது. இத்தகு தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு அங்கமான மகளிரின் மாண்புகளும் பண்புகளும் குறிப்பிடுகின்றது.

இலக்கிய வகைகள் ஒவ்வொன்றும் அக்காலச் சமுதாயத்தில் வாழ்ந்த பெண்களின் நிலைப்பற்றி வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் போன்றே சதக காலங்களிலும் பெண்கள் வாழ்ந்திருப்பதை காணலாம். மேலும் இறை உணர்வு கொண்டும் நாட்டு மருத்துவமுறையில் உயிர் மீட்டு கொடுத்தலும் கற்பில் சிறந்தவர்கள் சில அரிய செயல்களையும் பெண்ணை உயர்வாக மதித்தலும்இ மனித நேயம் மற்றும் பல அரிய செயல் போன்ற இவ்வகை இயல்புகளை உடைய பெண்களைச்சதகங்களின் வழி சான்றுடன் இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளன.

கன்றாப்பூரில் வாழ்ந்த பெண்

திருநாட்டியத்தான் குடியில் பரமவேளாளருக்கு பிறந்த மகளை கன்றாப்பூர் அரும்புடையான் மகன் ஆதிவராகனுக்குத்திருமணம் செய்து கொடுத்தனர். பரம வேளாளர் மகன் சைவ சமயத்தை சார்ந்தவர். இவளது கணவன் வைணவ சமயத்தவர். இவள் நாள் தோறும் கணவனுக்கு தெரியாமல் மாட்டு நடுதறியை சிவலிங்கமாக் கொண்டு வணங்கி வந்தாள். இவளின் செயலை அறிந்த கணவன் அந்நடுதறியைக் கோடரியால் வெட்ட அந்நடுதறியில் சிவபெருமான் தோன்றினார். அவள் கணவன் சிவனடியாராகி வீடு பெற்றான் என்ற இச்செய்தியைத் தேவாரத்தில்,

"கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"

என்று அப்பர் பாடினார். சிவலிங்கத்தில் கோடரிக்காயம் இன்றும் உள்ளது. என்பர்.

"தேளார் தொடையின் அரும்புடையின்
தோன்றல் திருமால் தொண்டனுமாய்
வேளாண் மகளை மணம் புணர்ந்து
விழைந்தான் அவளும் விடைபூர்த்திக்கு
ஆளாய் அன்பின் நடுதறியை
அருச்சித்து இலிங்கமாக வைத்து
மாளா நிலைமைக் கற்புடையாள்
மரபோர் சோழ மண்டலமே"

எனச் சோழ மண்டல சதகத்தின் வழி அறிய முடிகிறது.

கன்று+ஆப்பு+ஊர், கன்று கட்டிய ஆப்பினை இறைவனாக எண்ணி வழிபட்ட — மொக்கணி என்னும் குதிரைக் கொள்ளுப்பையைக் சிவலிங்கமாக வழிபட்ட மொக்கணீச்சுரம் கொங்குநாட்டில் உள்ளது ***(திருவாசகம் - கீர்த்திரு அகவல் 33-34).***

மோகனூர் பெண் தேனாயி

நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூர் எனும் ஊரில் தேனாயி என்ற பெண் மணியகுலத்து வேளாளர் ஒருவனை மணந்தாள். அவள் தினமும் வெளியூர் சென்று தயிர் விற்று வருவது வழக்கமாக கொண்டிருந்தாள் அவள் ஒரு வில்வகாட்டின் வழியே வந்துக்கொண்டிருந்நபோது அவ்வழியில் 'எனக்கு ஒரு விளக்கு வை' என்றும் ஒலி மட்டும் கேட்க, அங்கு ஒருவரையும் காணவில்லையாம் மறு முறையும் அவ்வொலி கேட்க, அங்கு யாரும் தென்படவில்லை என்பதை அறிந்து அவ்வொலி வந்த வழி நோக்கி அவ்வில்வக் காட்டினுள் சென்று அங்கு ஒரு சிவலிங்கம் காட்சியைக் கண்டு அதிசயமடைந்த அப்பெண் அன்று முதல் தினந்தோறும் தயிர் விற்கும் பாவனையில் மாலை நேரத்தில் சிவலிங்கப்பெருமானுக்கு விளக்கேற்றி வழிபட்டு வந்துள்ளாள்.

அச்சிவனருளாள் அப்பெண் சில நாட்களுள் கருவுற்றிருந்ததால் அவ்வூர் மக்கள் இவள் நெடுநாளாக கர்ப்பம் அடையாமல் இருந்த இப்பெண் இப்போது கர்ப்பம் அடைந்ததற்கு காரணம் இவள் நாள்தோறும் மாலை நேரத்தில் வில்வக்காட்டினுள் சென்று விபசாரம் செய்வாளோ என்று தீர்மானித்தார்கள். ஒரு நாள் அவ்வூர் மக்கள் உண்மையை அறிவதற்காக அவள் அறியாத வண்ணம் அவளைப்பின் தொடர்ந்து சென்றனர். அவள் சிவலிங்க பெருமானுக்கு விளக்கேற்றி வழிப்பாடு செய்துகொண்டிருந்த போது பெருங்காற்று அடித்த போது அனையாமலும் சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்த அக்காட்சியைக் கண்ட அவ்வூர் மக்கள் எல்லோரும் அதிசயமடைந்து அப்பெண்ணை மிகவும் பாராட்டிய அம்மக்கள் அவ்விடத்திலேயே சிவலிங்கப் பெருமானுக்கு கோயில் எழுப்பி வழிபட்டனர் என்பர்.

குமரி பூசித்தால் 'குமரீசுவரர்' என்றும் காற்றில் விளக்கு அசையாமலிருந்ததால் 'அசலதீபேசுவரர்' என்றும் சிவபிரானுக்குப்பெயருண்டாயிற்று என்பது தலப்புராணமாகும். தேனாயிக்கு மகவு அளித்ததனால் 'மகவனூர்' என்றும் அதுவே முகவனூர் என்றும் மோகனூர் என்று திரிந்து வழங்கப்படுகிறது என்று கூறுவர்.

இத்தலம் காவிரிக்கரையை அடுத்து அமைந்துள்ளதால் அம்பிகையின் முலைப்பால் சுரந்து அருவியாகக் காவிரியில் கலப்பதால் அங்குள்ள காவிரித்துறைக்கு குமரித்துறை என்று பெயராயிற்று. இத்தலத்திலுள்ள அம்மனுக்கு தேனாயி குமரியம்மன் எனும் பெயர் வழங்குகிறது என்பர்.

"நந்தூர் நெடுவயல் சூடு முகவை நகர்தனிலே
இந்தூர் சடையான் நசையால் விளக்கமொன்று ஏற்றுதற்கு
சந்தோச மாயொடு பாவனை கொண்டு தயிருவிற்கு
வந்தோர் குமரி யருச்சித்தும் கொங்கு மண்டலமே"

அப்பர் தேவாரம் சேத்திரக்கோவையில் கொங்கு என்றும் திருக்குநற்தொகையில் கொங்கு தென்குமரித்துறை என்றும் கூறப்பட்டுள்ளது இச்சான்றின் வாயிலாக அறிந்துக்கொள்ளமுடிகிறது.

மருத்துவச்சி

குறும்பி நாட்டிலுள்ள கற்றாங்கானி எனும் ஊரில் கொங்குக்குயவன்' என்ற மருத்துவர் வாழ்ந்து வந்தார். இவர் மக்களுக்கு ஏற்படும் தீராத நோய்களுக்கு மருத்துவம் செய்வதில் சிறப்பு பெற்றவர். கரிகால் சோழனின் மகளுக்கு ஏற்பட்ட நோயை குணப்படுத்தியவர். மன்னன் தன் மகளுக்கு ஏற்பட்ட நோய்க்கு எத்தனையோ

வைத்தியம் செய்தும் சற்றேனுங்குணமாகவில்லை. குயவன் ஒருவன் இந்நோயை வெகு விரைவில் நீ உடம்பில் படாமல் மண்ணால் ஆன பாவை, செய்து, அதில் சூடுபோட்டு வலிப்பு நோயை நீக்குவாயென்று பலர் சொல்லக் கேள்வியுற்றேன். அதனால் என் இளங்குழந்தை தாங்காது என்றனர். பலர் அரசிளங்குழந்தையின் உறுப்பிற்படாது சூடு போட்டு நீக்குகின்றேன் என்று குயவன் கூறினான். கூறியது போலவே குயவன் மண்ணாலான பாவை செய்து அச்சுந்தரிக்கு வலி எவ்விடத்திலிருக்கிறதே என்பது தெரிந்து அவ்வங்கக்குறிப்பார்த்து நெருப்பில் காய்ந்த இரும்புகோலால் அந்த மட்பார்வையில் சுட்டனன் அந்நோய் நீங்கிற்று.

இச்செயல்களை கற்றறிந்தவர்கள் மருத்துவத்திற்கும் மந்திரத்திற்கும் பயன்படுத்தினர் என்பர். குறிப்பிட்ட பொருளில் உறுச்செய்து அப்பாவையின் உறுப்பில் ஊசி முதலியவற்றை குத்தல், சுடுதல் ஆன கருமஞ்செய்து, உண்டான வியாதியை நீக்கல், இல்லாத வியாதியை உண்டாக்கல் போன்ற தொழில் செய்யும் முறை ஒட்டியும் சல்லியம் என்னும் மந்திரசாத்திரமும் உண்டு என்பர்.

இக்காலங்களிலும் பில்லி சூனியம்,செய்து வினை என்றும் பிறருக்கு செய்வது எடுப்பது மருத்துவ முறையில் சரிசெய்தல் தெய்வத்தின் அருளால் இன்றும் நாட்டுப் புறங்களில் தொழில் முறையில் காணலாம். இதனை,

"கரிகாலச்சோழன் மகளுக்கு வந்த கனவலிப்பும்
ஏரியா முடலை மயக்கமப் கோவன் மறைமகளைப்
பரிபாலனம் செய மட்பாவையில் குறிபார்த்துச்சுட
மரியாமல் அவ்வலி ஏகியதும் கொங்கு மண்டலமே"

இச்சான்றின் வழி அறியலாம்.

கற்பு மகளிர்

தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று வருணிக்கப்பட்ட காலமும் சங்ககாலம் தான் சங்ககால மகளிரின் மாண்புகளாய் அமைந்தவை அவர்களின் பண்பட்ட அரும்பண்புகள் எனலாம். ஆணும், பெண்ணும் இணைந்து நடத்துகின்ற இல்லற வாழ்வின் முழுப்பயனே மகளிரின் மாண்பால் சிறப்புற்றது என்பர்.

பெண்கள் இல்லற வாழக்கையிலும் பதிபத்தியிலும் சிறந்து விளக்கினார்கள். ஓவ்வொரு ஆணின் முன்னேற்றத்திலும் பெண்கள் முக்கிய பங்கு காணப்படுகின்றது.

சோழிய மகளிர்

சோழிய மகளிர் கடவுளாக நினைத்து இல்லற வாழ்வு சிறப்புற்று விளங்க அம்மகளிர் உலக்கை தீட்டுதல் முதலிய குற்றேவல் சொல்லுதல், ஆண்சித்திரம் வரைதல், கணவன் பெயரைக் கூறுதல், கணவனின் ஊரை தாண்டி செல்லுதல் போன்ற செயல்களை செய்தால் கணவனுக்கு இழிவு என்று நினைத்து செய்யாமல் அறநெறி தவறாமல் சிறப்புற்று வாழ்ந்தனர். இத்தன்மையை தேவரும் அறிந்ததால் சோழ நாட்டில் மாதம் மும்மாரி பொழிந்தது என்பதை கீழ்காணும் சான்றின் வாயிலாக அறிய முடிகிறது. இதனை,

"ஓதம் ஆண்சித்திரம் குறியள்
உலக்கை தீண்டார் குலக்கொழுந்தாய்
ஆதிக்காலம் கற்புடைமைய
அறகா புரியில் அறிய நின்றார்
சோழ மண்டலமே"

வேளூர் கிழானின் மகள்

வேளூர் நாட்டில் வேளூர் கிழான் எனும் வள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தோட்டத்தில் கத்திரிச்செடி இருந்தது அச்செடியில் அவர் மகளின் முந்தானை மாட்டிகொண்டது. அதனை பரிசிகத்துடன் 'சீவிடு' என்றாள். அவ்வார்த்தையை கேட்ட தந்தை தன் மகள் ஆணிடம் பேசியதாக எண்ணி தீ பாய கட்டளையிட்டனர். மகள் தீயில் பாய்ந்துவிட்டாள்.

தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் திருவாஞ்சியம் சிவன்கோவில் கல்வெட்டில் இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது என்பர். நன்னிலம் கல்வெட்டுக்கள்,

"தாளூர் மலரான் மனைப்படப்பைத்
தனிக்கத்தா முள் தகைந்திழுப்பத்
கேளூர் முந்தானையை விடுவாய்
வளம் சேர் சோழ மண்டலமே"

சோழ மண்டல சதகத்தின் வழி உணர்த்துகின்றது.

தேவமகளிர்

சிறுநல்லாள், பெருநல்லாள் என்ற இவ்விருவரும் தேவ கணிகை குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார். இப்பெண்கள் ஈரோட்டில் தொண்டீசுவரரை வழிபட்டும் இந்திரனை வேண்டி தவம் மேற்கொண்டும் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் வாழ்ந்த பெருநற்கிள்ளி எனும் சோழ மன்னன் அம்மகளிரிடம் நீங்கள் ஏன் ஆடவர் தரும் பொருளைப் பெற்று அவர்களைக் கூடுவதில்லை என்றார். அதற்கு அப்பெண்கள் நாங்கள் தேவேந்திரனைத் தவிர வேறு ஆடவரை புணர மாட்டோம் என்றனர். அதைக் கேட்ட சோழ மன்னன் இந்திரனை மணக்கும் கற்புடைய மகளிரே பொன்மாரிப் பொழிய செய்ய வேண்டும் என்றார். அதற்கிசைந்து அன்றிரவே தேவேந்திரன் அம்மகளிரைக் கட்டி மகிழ்ந்து அவர்கள் வேண்டியவாரே, பொன் மாரி பொழிய செய்தார். அந்நாட்டிற்கு பூந்துறை நாடென்று பெயர் வழங்கப்பட்டது. இச்செய்திகள் சென்னி மலைதலப்புராணத்தில் புட்கிரிச்சுருக்கம் கூறுகிறது.

'தேமாரி நிகழ்வானம் செறிபாரி சாத மலர்
பூமரி பொன்மாரி பொழிமூதூர் பூந்துறையூர்'

என்பது சென்னி மலைத்தலப்புராணத்தில் செப்பேடு கண்ட மான்மியம் எனும் பகுதியில் 23 ஆவது பாடலாக விளக்கப்பட்டுள்ளது.

"சீரிய செங்கம லாய மேகவும் திருவெழின்பமிக்
காரிருவோருடன் கூடிக்கலந்தங்கவர் பொருட்பால்
கோரியல் வேல்வழி இந்திராணி நாயகம் பொன்னோடு
பூமாரி பொழிந்தது மீரோடை சூழ் கொண்டு மண்டலமே"

இச்செய்திகளின் மூலம் இவ்விரு மகளிர் கூறிய வார்த்தைகளை மெய்யானவை என்று நிருபித்தனர்.

சதக இலக்கியங்களில் இறைபற்றுடன் வாழ்ந்த பெண்களின் செயல்கள், பெண் இறைவன் மேல்கொண்ட அன்பினால் வேற்று சமய கணவனை சமய கணவனை தன் சமயமான சைவத்திற்கு மாற்றிய சக்திகொண்டு வாழ்ந்ததை மோகனூர் தேனாயி நீண்ட நாள் மகப்பேறு இன்றி வாழ்ந்தவள் சிவன் அருளால் குழந்தையை ஈன்றெடுத்தாள் என்பதனையும் இன்றளவு மருத்துவத்தின் வளர்ச்சி நிலையே அறிந்த ஒன்றாகும். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இவ்விலக்கியத்தில் மருத்துவர்கள் முன்வந்து உயிர்களை மீட்க செய்தாள். இவ்வகை செய்திகள் எல்லாம் சான்றுடன் இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளன.

நாட்டுப்புற மக்களின் உணவுமுறைகள்

இரா.சுகுணா, முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

உயிரினங்கள் உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவு ஆகும். மனிதன், விலங்கு என அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ உணவையே சார்ந்திருக்கின்றன. எனவே அவற்றின் செயல்பாடுகள் உணவு தேடுவதையே அடிப்படையாக கொண்டுள்ள பண்டைத் தமிழர்கள் சுவைமிக்க உணவுகளை சமைப்பதில் கைத்தேர்ந்தவர்களாக இருந்தனர். இன்று அறிவியலாலர்களால் கண்டுபிடிக்கப்பட்ட உணவு சமைக்கும் முறையினை அக்காலத் தமிழர்கள் கண்டுணர்ந்துள்ளனர்.

தங்கள் நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் பொருளாதாரத்தின் அடிப்படையிலும் உணவைச் சமைத்து உண்டனர். உண்ணும் உணவினைப் பலப்பகுதிகளாகச் சுவையுடன் சமைத்து உண்பதில் அறிவையும் உணர்வையும் ஒருசேரப் பயன்படுத்தியுள்ளனர். தமிழரின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் உணவினைப் பின்வருமாறு காணலாம்.

"உணவு, கனி, புறமும் அரிசியும்
தாளித்த உணவு, பருகு நீர்"

என்றும்,

"உண்டிமுதற்றே உணவின் பிண்டம்,
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே (நிலத்தொடு)
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே"

உணவின் இன்றியமையாமை

உணவு எனப்படுவது நமது உடம்பாகும். உடம்புக்கு அந்த உணவைத்தருவது நிலமும், நீரும் ஆகும். நிலத்தையும், நீரையும் சேர்ப்பவர்கள் உயிரையும், உடம்பையும் சேர்ப்பவர்கள் ஆவார்கள். இதன் மூலம் வேளாண்மைத் தொழில் செய்வோரின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

உணவிற்குரிய பெயர்கள்

உணவிற்கு தமிழில் பலசொற்கள் உள்ளன என்பதைப் பிங்கல நிகண்டு எடுத்து இயல்புகிறது.

"உணவே வல்சி உண்டு ஓதனம்
அசனம் பகதம் இசை ஆசாரம்
உறை, ஊட்டம்"

என வகைப்படுத்துகிறது. மேலும் புகா, மிசை என்னும் சொற்களும் உள்ளன.

உணவின் வகைகள்

நாட்டுப்புறமக்கள் உணவு முறைகளை பலவகையாகப் பகுப்பர் அந்த வகையில் முதலில் தினை உணவே உட்கொள்ளப்பட்டது. அதன் பிறகே கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய உணவுகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. கிழங்கு வகை உணவுக், வாழை மரங்கள், தென்னை மரங்கள், பனை மரங்கள் ஆகியவற்றிலிருந்து

கிடைக்கும் உணவு வகைகள், கீரை உணவு வகைகள், வற்றல் உணவு வகைகள், உணவுக்குப் பயன்படுத்தப்படும் தொடுகறி உணவு வகைகள், துவையல் வகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

உணவு

உணவு என்பது பொதுவாக உண்ணக்கூடிய அனைத்துப்பொருள்களையும் குறிக்கும். உணவு, உணா, உண்டி, உண்டிகை ஆகிய சொற்கள் பண்டைய தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிரினங்கள் வரை தன்னுடைய தன்மைக்கு ஏற்றவாறு உணவினை சேகரித்தும், பதப்படுத்தியும் உண்ணும் முறையைக் கற்றுக்கொண்டுள்ளன.

தமிழகத்தில் பழங்காலம் தொட்டே உணவு பதப்படுத்தப்பட்டும், தயாரித்தும் வந்த செய்தியைப் பற்றிப் பேசும் இலக்கியங்கள் உள்ளன. தொல்காப்பியத்தில் 'உணா' என்ற சொல் உணவைக் குறிப்பதாகும் ***(சாமி.சிதம்பரனார், 1998:86,87).***

உணவைப் பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியத் தமிழர்களிடத்தில் பல்வேறு வகைகளில் நிலைத்து இருந்தன, உணவு என்பது பசிக்கு வயிற்றை நிரப்பும் ஒரு பொருள் மட்டுமல்ல, உயிர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைச் சிந்தனைகளைத் தருவதுமாகும்.

நாட்டுப்புற உணவுமுறைகள்

வேளாண்மைத் தொழில் செய்து வருகின்ற மக்களின் உணவு முறைகள் பற்றிய குறிப்புகளையும், செய்திகளையும் பின்வரும் பாடல் மூலம் அறியப்படுகின்றது. மக்கள் வேளாண்மையின் சிறப்புகளைப் பற்றியும், நாட்டின் வளம் பற்றியும் பாடிய பாடல்

"கட்டுக் கலங்கானும் கதிர் உழக்கு நெல் காணும்
அரிதால் அறுத்துவர மறுதால் பயிராகும்
அரிதாயின் கீழாக ஐங்காத்தேன் கூடுகட்டும்
மாடுகட்டி போரடித்தால் மாலாது செந்நல் என்று
யானைக் கட்டிப்போரடிக்கும் சோழராசா சீமையிலே"

- (நாட்டுப்புறப் பாடல்)

என்னும் பாடலுக்கு ஏற்ப வேளாண்மக்கள் நெல்லின் சிறப்பு பற்றி கூறியிருப்பது சிறப்பிற்குரியவையாகும்.

வேளாண்மைத் தொழில் செய்யும் நாட்டுப்புறங்களில் உணவுமுறைகளாவன வேளாண் தொழிலில் முதல்பணி எருவல்லுதல், எருவு என்பது மாடு, ஆடு ஆகியவற்றுடன் சாணங்களையும் அவர்கள் குடியிருக்கும் இடத்தில் உள்ள மரங்களில் இருந்து விழும் இலைசருகுகளைக் கூட்டி சேகரித்து அதனை குப்பை என்று சிறிது குழி வெட்டி, அதிலே இட்டு அதனைப் பக்குவப்படுத்துவது தான் முதல் பணியாகும். வேளாண்மை செய்யும் மக்கள் உண்ணும் உணவுகள்

உழவுத்தொழில் செய்யும் மக்கள் காலை உணவாக கஞ்சியையும் அவற்றிற்கு துவையல், கீரை, வற்றல், வடகம் போன்றவற்றை உணவாகப் பயன்படுத்துவர். முதல்நாள் இரவே உணவினைத் தயாரித்துவிடுவர். எத்தனை நபர்கள் பணிக்கு வருகிறார்கள் என்பதைக் கணக்கிட்டு உணவினை நன்றாக வேகவைத்து அவற்றை வடித்து வைத்துவிடுவார்கள்.

மாங்காய் வற்றல் நன்றாக தாளித்தும், ஊறுகாய், நார்த்தங்காய், எலுமிச்சங்காய் போன்றவற்றுடன், கொத்தவரங்காய் கூட்டு, கத்தரிக்காய் கூட்டு, வாழைக்காய் என்று அவர்களுக்கு எளிதில் கிடைக்கும் பொருட்களை வைத்தே உணவினைத் தயார் செய்வர். முருங்கைக்கீரை, சிறுகுறிஞ்சான் இலையையும் சேர்த்து அவற்றில் மிளகாய் சேர்த்து கீரையை நன்றாக சுண்டி அவற்றையும் உட்கொள்வர். காலைப் பணிக்கு மட்டுமே இவ்வுணவினைப் பயன்படுத்துவர்.

மாலை உணவு

வயலில் நடவுநடும் போது அவர்க்கு சுடுசோறு, சாம்பார், ரசம், வாழைக்காய் பொறியல், உருளைக்கிழங்குப் பொறியல் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். மதிய உணவிற்கு முன் தேநீர் பருகுவது, வீட்டில் செய்த பதார்த்தங்கள் வடை, பச்சி, சுண்டல் மசாலா, கிழங்கு கூட்டு, சிறுதானிய அவியல் என்று பலவற்றையும் உட்கொள்வார்கள்.

இரவு உணவு

வேளாண்மைத் தொழில் ஈடுபட்டு ஒருநாள் முழுமையும் தங்கள் பணி இடைவிடாது நடைபெற்ற காலங்களில் இரவு நேரங்களிலும் உணவுகள் வேலை செய்த வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு உணவு வழங்கப்படும். அந்தவகையில் இரவு வேலையில் கருவாட்டுக் குழம்பு, பொடிக் குழம்பு, மீன்குழம்பு என்று அசைவ உணவினைப் பரிமாறுவார்கள்.

கடுமையான வேலைக்கு பிறகு நல்ல உணவினை உட்கொண்டு செல்வது உடம்புக்கு நன்மை என்று கருதி அசைவ உணவினைத்தான் உண்ணுவார்கள். அவற்றுடன் மோர், ரசம் போன்றவற்றையும் பயன்படுத்துவார்கள். அவ்வாறு உண்ணுவதால் தான் மறுநாள் அவர்களால் மற்ற வேலைகளை எளிமையாக செய்ய முடிகிறது.

தொகுப்புரை

நாட்டுப்புற மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவு முறைகள் என்ற தலைப்பில் உருவான இக்கட்டுரையானது வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் மக்களின் உணவுமுறைகளைப் பற்றியும், உணவு என்பது பற்றியும், உணவின் பெயர்ப்பற்றிய குறிப்புகளும், சங்ககால மக்கள் பயன்படுத்திய உணவு முறைகள் பற்றியும், உணவின் இன்றியமையாமை பற்றியும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு கிடைத்த பசுமையான காய்கறிகளை அவர்களே தங்கள் தோட்டங்களில் பயிரிட்டு அவற்றிக்கு எருவிட்டு தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்து அவற்றிற்கு போதுமான வசதிகளைச் செய்து அவற்றை உண்டனர். அம்மக்கள் தங்கள் வயல்களில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, பயிர், நெல், எள், கடலை, உளுந்து, பாசிப்பயிரு, துவரை, அவரை, கொத்தவரங்காய், கத்தரிக்காய், முள்ளங்கி, வெண்டக்காய், பாகற்காய், வாழைக்காய் போன்றவற்றைத் தாங்களே பயிர் செய்து அவற்றை உட்கொண்டு ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர். அவர்களது அகவையும் கூடுதலாகவே இருந்தது ஆனால் இன்றைய காலத்தில் இரசாயனத்திற்கு மாறி, வேதியியல் மாற்றத்திற்கு ஆட்பட்டு, அனைத்தும் காசு கொடுத்து வாங்கி, உணவோடு நமக்கு வேண்டாத நோயையும் பெறுகிறோம். மீண்டும் மக்கள் நாட்டுப்புற உணவு முறைக்கு மாறிவரும் சூழலில் மனிதனின் ஆயுளும், வாழ்வும் சிறப்பாக அமையும் என்பது உறுதியான ஒன்றாகும்.

சங்க கால மக்களின் நம்பிக்கைகள்

சே.சுதா, முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

முன்னுரை

சங்ககாலம் (பொ.ஆ.300 முதல் பொ.ஆ.300 வரை நிலவியதாகக் கருதப்படுகிறது). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவையே சங்க இலக்கியங்கள் ஆகும். இக்காலத்தைச் சங்ககாலம் என்றும், சங்க மருவிய காலம் எனவும் குறிப்பர்.

இக்கால இலக்கியங்கள் சங்ககால மக்களின் வாழ்க்கை நிலையையும், அவர்களின் நம்பிக்கைகளையும் செம்மையாக வெளிப்படுத்துகின்றன[1]. இலக்கியம் என்பது வாழ்க்கையிலிருந்து பிறக்கிறது, வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது, வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது என்று கார்லைல் (Carlyle)லும், மொழியை ஊடகமாகக் கொண்டு வெளிவரும் வாழ்க்கை ஆய்வே இலக்கியம் என்று ஹட்சனும், (Hudson) குறிப்பிடுகின்றனர்.

சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் நம்பிக்கைகளை இக்கட்டுரையில் சுருக்கமாக விவரித்துள்ளேன். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் இக்கட்டுரையின் முதன்மைச் சான்றாக கையாளப்பட்டுள்ளது. இக்கட்டுரை வழி தரப்பட்டுள்ள சங்ககால மக்களின் நம்பிக்கைகள் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு எவ்வாறு துணைபுரிந்துள்ளன என்பதனை விளக்குகிறது. மனித வாழ்வில் நம்பிக்கை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இவை பிறப்பிலே தோன்றியவை அல்ல. வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் அனுபவங்களே நம்பிக்கைக்கு வலுவூட்டி நின்றன எனலாம்.

பின்னாளில் இயற்கைச் சீற்றம் மற்றும் பிற அழிவுகளினால் பயந்து போன மனிதர்கள் நம்பிக்கை மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது மனிதனின் அவாவாயின. நம்பிக்கையின் நிமித்தம் சடங்குகளைச் செய்வதன் மூலம் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படக் கூடிய துன்பங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் எனக் கருதினான். அதன் அடிப்படையில் நிகழ்ந்ததுவே நம்பிக்கை என்ற நிமித்தம்.

நம்பிக்கைகள்

காக்கை கரைதல்

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்று சங்ககால மக்கள் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இச்செய்தியினை

"விருந்துவரக் கரைந்த காக்கை" (குறு.210:6)[2]

என்று குறுந்தொகை கூறுகிறது.

விருந்து வருவதற்கு முன்னறிவிப்பாகக் காக்கையின் குரல் ஒலிக்கும் என்பதனை

"பச்சூன் பெய்த பைந்திண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகு வென் மாதோ
வெஞ்சின விறல் வேற் காளையோடு
அஞ்சிலோதியை வரக்கைந் தீமே"[3]

- (ஐ.நூறு. 391: 3-6)

என்ற ஐங்குநுறூறு பாடல் வரிகள் மூலம் காணமுடிகிறது.

பல்லி நிமித்தம்

சமுதாயத்தில் சங்ககாலம் முதல் இன்றுவரை அதிகமாகப் பின்பற்றப்படும் நிமித்தம் பல்லியின் நற்சொல்லை ஏற்பதாகும். இப்பல்லி நிமித்தம் பெரும்பாலும் சங்க இலக்கியங்களில், தலைவன் தலைவியை மையப்படுத்தியே அமைந்துள்ளது. இல்லத்தில் பல்லி ஒலிக்குந்தோறும் அதனைப் போற்றி வணங்குவர். இதனையே அகநானூற்றுப் பாடலிலும் காணமுடிகிறது,

"ஓங்கிய நல்லில் ஒரு சிறை நிலை இப்
பாங்கப் பல்லி படுதொறும் பரவி"[4]

- (அகநானூறு. 9: 17-19)

பல்லியின் நற்சொல்லை நன்னிமித்தமாக ஏற்றது குறித்து இரகுநாதாச்சாரியார் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

"மனித உற்பத்திக் காரண பூதங்களாகிய
பிராணிகளில் பல்லியினம் முதன் முதலில் நிலத்தில்
வசிக்க வல்லமை பெற்றவையாக இருந்தமையால்
பல்லியினத்தைப் படைப்புக் கர்த்தாவாகக் கருதி
வணங்குகின்றனர் எனவும் பிராணிகளின் படைப்பில்
பல்லி இனத்திற்கே முதல் மதலில் வாயினால் சப்தம்
செய்யும் சக்தி உண்டான காரணத்தால் பல்லி
சொல்லுக்குப் பலனை ஏற்படுத்தினார்கள்"[5]

(இரகுநாதச்சாரியாரியார். பக். 35-42)

பச்சோந்தி நிமித்தம்

இப்பச்சோந்தி நிமித்தம் பார்க்கும் வழக்கம் பாலை நிலத்துப் பொது மக்களிடமிருந்து வந்தமையைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. பச்சோந்தி நிமித்தத்தினை

"வேதின வெரிநினோதி முதுபோத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர்"[6] *- (குறு. 140: 1-3)*

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

மழை பற்றிய நம்பிக்கை

உலகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது மழையாகும். குன்றக் குறவர்கள் தாம் விளைவிக்கும் திணை முதலியவற்றிற்கு மழை வேண்டிக் கடவுளை வாழ்த்திப் பாடினால் நிறைவேறும் என்று நம்பியதை

"குன்றக் குறவனார்ப்பினெழிலி
நுண்ப வழிதுளி பொழிய நாட"[7] *- (ஐங்குறுநூறு.251: 1-2)*

என்ற பாடல் வரிகள் மூலம் அறியப்படுகிறது.

பேய் பற்றிய நம்பிக்கை

சங்க காலப் பொதுமக்களிடத்துப் பேய் பற்றிய நம்பிக்கை பெரிதும் இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. பேய்கள் நள்ளிரவில் உலாவும் என்பதை,

"பானாட் கொண்ட கங்கு விடையது
பேயு மணங்கு மரவு கொண்டாய்தோற்
கூற்றக் கொ.்.கழுதோடு கொட்ப"[8]

(மதுரைக்காஞ்சி 631-33)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

விரிச்சுக் கேட்டல்

சங்கக் கால பொது மக்களிடத்து 'விரிச்சி' எனும் நற்சொல் கேட்கும் பழக்கம் இருந்தது. வித்தியானந்தன் தமிழர் சால்பு எனும் நூலில்,

"வருங் காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பது
என்றும் ஒரு செயலை மேற்கொள்ளுங்கால்
அம்முயற்சி இன்னவாறு கைகூடும் என்பதனை
அறிதற்கே இவ்வாறு செய்வர், செய்து ஆக்கம் பெறுவர்"[9]

என்றும் விளக்கிக் கூறுகிறார்.

விரிச்சி என்பது அசரீரி, அச்சொல் நல்லதோ, கெட்டதோ அதைப் பொருத்து நன்மை தீமை விளையும் என்பது நம்பிக்கை. சுவரேறிச் செல்லும் பல்லியைக் கவனித்து அது எந்தத் திசையிலிருந்து செல்கிறதோ அதைக் கண்டு சகுணம் பார்த்தனர்.

அரசன் போருக்குப் புறப்படும் முன் கணி நிமித்தம் பாரத்தனன். சில பறவைகள், குறிப்பாக காரி எனப்படும் கரிக்குருவி பறக்கும் திசைக்கு தவறாத நிமித்தமாகும்.

விதைப்பு சடங்கு

மலைவாழ் பொது மக்கள் விதை விதைப்பதற்கு நல்ல நாள் பார்த்து விதைத்தனர். இந்நம்பிக்கை இன்றைக்கும் எல்லாத் தரப்பு மக்களிடத்தும் இருந்து வருவதை அறிய முடிகிறது. குறிஞ்சி நில மக்களிடம் இவ்விதைப்புச் சடங்கு குறித்த ஒரு நம்பிக்கை நிலவியது.[10]

கண் துடித்தல்

பெண்களுக்கு இடது கண் துடித்தால் நன்னிமித்தமாகவும், ஆண்களுக்கு வலக்கண் துடித்தால் நன்னிமித்தமாகவும் நம்பிக்கையாகக் கொண்டனர். ஆவ்வாறு மாறாக பெண்களுக்கு வலக்கண் துடித்தால் தீமை நேரும் என்றும், ஆண்களுக்கு இடக்கண் துடித்தால் தீங்கு நேரும் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தனர்[11].

உன்னம் பார்த்தல்

உன்னம் என்பது ஒருவகை மரம், இம்மரத்தைக் கொண்டு நிமித்தம் பார்க்கும் வழக்கம் குறித்துத் தொல்காப்பியர்,

"ஓடாக் கழல் நிலை சளப்பட ஓடா
உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்"[12]

என்று குறிப்பிடுகிறார்.

இம்மரம் தழைத்துக் காணப்படின் வெற்றிக்கிட்டும் என்று கரிந்து காணப்படின் தோல்வி கிட்டும் என்றும் நம்பினர். இவ்வுன்ன மரம் இலவ மரம் என்றும், போருக்குச் செல்வோர். நிமித்தம் பார்ப்பதற்குரிய மரம் என்றும் உ.வே.சாமிநாதய்யர் குறிப்பிடுகிறார்.

கனவு பற்றிய நம்பிக்கை

கனவு என்பது 'விருப்பத்தின் விளைவு' என்று சிக்மெண்ட் பிராய்டும், ஆழ்மனதில் உள்ள எண்ணங்களின் வெளிப்பாடு என்று ஆர்பர்ட் மார்டெலும் கூறுகின்றனர்[13].

எத்திசையும் எரிகொள்ளி எரிந்து வீழ்தல், இலையில்லாத நெடுங்கோடு வற்றல் பற்றல், ஞாயிறு பலவிடத்தும் செறிந்து தோன்றல், அஞ்சத்தக்க பறவை ஒலி எழுப்பல், பல்லி நிலத்தில் வீழ்தல், தலையில் எண்ணெய் தேய்த்திருத்தல், யானை ஏறுதல், ஆடை நீங்கல், படைக்கலம் கவிழ்தல் போன்ற நிகழ்ச்சிகளைக் கனவில் கண்டால் தீமைவரும் என்று நம்பினார்கள்[14].

வான் நிமித்தங்கள்

எரி நட்சத்திரம் வீழ்தல்

'விண் வீழ் கொள்ளி' என்றும் கூறுவர். எரி நட்சத்திரம் வீழின் ஆளும் மன்னனுக்குக் கேடுவிளையும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர்[15].

சனி நிலை

"மைம்மீன் புகை பினுந்த தூமந் தோன்றினும்"[16]

சனி நிலை புகைந்தால் நாட்டிற்கு கேடு நிகழும் எனவும் சங்ககால மக்கள் நம்பினர்.

முடிவுரை

நம்பிக்கைகளின் பிற செய்திகள்

மேலும் சங்ககால மக்கள் நம்பிக்கையின் ஊடே பல செயல்களைப் பின்பற்றி வந்துள்ளனர். என்பது இக்கட்டுரையின் வாயிலாக உணர முடியும்.

- குறிப்பாக சிலவற்றை இம்முடிவுரையில் காணலாம்.
- இரவு "முதல் சாமத்தில்" காணும் கனவு ஓராண்டில் பலிக்கும் என்றும்
- "இரண்டாம் சாமத்து கனவு" எட்டு மாதத்தில் பலிக்கும் என்றும்
- "மூன்றாம் சாமத்து கனவு" மூன்று மாதத்தில் பலிக்கும் என்றும்
- "நான்காம் சாமத்து கனவு" பத்து நாட்களில் நிகழும் என்னும் நம்பிக்கையில் வாழ்ந்து வந்துள்ளனர். அவற்றின் அனுபவங்களையும் உணர்ந்துள்ளனர். மேலும்
- கொள்ளிக் கட்டைகள் நாற்புறமும் வீழ்தல்
- பட்ட மரம் தீபற்றல்
- வானத்தில் பல் ஞாயிறு தோன்றுதல்
- தீச்சகுனம் குறிக்கும் பறவைகள்
- பற்கழன்று தரையில் விழுதல்
- எண்ணெய் தேய்த்துக் குளித்தல்
- படைக்கலக் கொட்டிலிலிருந்து படைக்கலம் நழுவி வீழ்தல்
- தன்னைத் தானே ஆடையின்றிக் காணல்
- ஆண்பன்றி மீதேறிச் செல்லுதல்[17]

மேலும் பெண்கள் வேப்பிலையும் வெண்சிறு கடுகும் பேயினின்றும் மக்களைக் காக்கக்கூடியவை என்று எண்ணினர். இயற்கை கடந்த சக்திகளால் குழந்தைகளுக்கு தீது நேரிடாமல் மகளிர் தமது தலையில் வேப்பிலையைச் செருகிக் கொண்டனர். தீய சக்திகளிலிந்து காக்க குழந்தைகளின் தலையில் நெய்யும் வெண்சிறு கடுகும் அப்பினர்[18]. மனைவியின் பூப்பிற்குப் பின் பதினைந்து நாட்கள் கணவன் அவளை நீங்காமை வேண்டும் என்று விதித்தனர். பூப்புக்காலத்தில் அவளோடு களவாமை வேண்டும். விஞ்ஞான முறையில் நோக்கினும் இவை வெற்று நம்பிக்கைகளல்ல கவனத்தால் பிறந்த அறிவு என்பது நோக்கதக்கதாகும்.

அம்மூன்று நாட்களும் கூப்பிடு தூரத்திற்கும் அவளை அணுகக்கூடாது[19]. ஈன்றனிய மகளிர் ஊர்பொதுக் குளத்திற்குக் குளிக்கச் செல்வர். தீட்டுக் காலத்தில் அவர்கள் தீண்டாதார் மட்டுமல்லர் நெருங்கற்கும் ஆகார். அவர்கள் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக்கூடாது[20]. போன்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்துள்ளனர். இவ்வாறு சங்ககால மக்கள் வாழ்வில் எண்ணிலடங்கா நம்பிக்கைகள் பரவி காணப்பட்டு கிடந்துள்ளன என்பதனைச் சங்க நூல்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகை நூல்களும் தெளிவாக நமக்கு உணர்த்துகின்றன.

இவ்வாறு சங்ககால மக்கள் தங்களது வாழ்க்கையினை நம்பிக்கையின் நிமித்தம் வாழத்தொடங்கி பலனும் அனுபவித்து வந்துள்ளனர் என்பதனை மேல்குறிப்பிட்ட நம்பிக்கைகள் மூலம் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது.

அடிக்குறிப்பு

1. இராசரெத்தினம். கு, *சங்க இலக்கியத்தில் பொதுமக்கள்*-2004, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.ப.1
2. குறுந்தொகை - பாடல் 210:6
3. ஐங்குறுநூறு - பாடல். 391:3-6
4. கலைமகள் தொகுதி-6,பல்லி:இரகுநாதாச்சாரியார்.35-42
5. அகநானூறு பாடல் 9:17-19
6. குறுந்தொகை பாடல். 140:1-3
7. ஐங்குறுநூறு, பாடல். 251:1-2
8. மதுரைக்காஞ்சி, பாடல். 631:33
9. சு.வித்யானந்தன், தமிழர் சால்பு.ப.196
10. புறநானூறு, பாடல்.168:5-7
11. கலித்தொகை, பாடல்.11:22
12. தொல்காப்பியம்-பொருளதிகாரம், பாடல்.63:7-8
13. இராசரத்தினம். கு, *சங்க இலக்கியத்தில் பொதுமக்கள்,* 2004, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.ப.163
14. புறநானூறு, பாடல்.41:4-11
15. புறநானூறு, பாடல்.229:11-7
16. புறநானூறு, பாடல்.117:1
17. புறநானூறு, பாடல்.41.
18. புறநானூறு, பாடல்.41.
19. புறநானூறு, பாடல்.287;மணி:vii,73.
20. புறநானூறு, பாடல்.299

புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள்

ஜெ. சுவையா, முனைவர் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

உலகம் போற்றும் பண்பாடு தமிழர் பண்பாடு ஆகும். இப்பண்பாட்டுச் சிறப்பின் வேர்கள் சங்கச் சமூகத்தில் காணக்கிடக்கின்றன. மரபு மீறிய மனித வாழ்வில் பண்பாட்டுச் சீரழிவுகள் நிறைந்துள்ளன. இச்சீரழிவுகளில் மனிதநேயமும் ஒன்று.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழன் வகுத்துக் கொடுத்த வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்தால் சமூகச் சீரகேடுகளைக் களையலாம். அதன்வழி சமூக மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. சங்க இலக்கியத்தில் போரும் வீரமும் கூறும் புறநானூற்றுப் பாடல்களில் விரவிக் காணப்படும் மனிதநேயச் சிந்தனைகள் இக்கட்டுரையின் வாயிலாக வெளிப்படுகின்றன.

மன்னர்களின் அரசாட்சியில் மனிதநேயம்

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம் என்பர். தமிழர்கள் நாகரிகத்திலும், பண்பாட்டிலும் தலைசிறந்து விளங்கினர். தமிழ் மன்னர்கள் அறநெறி பிறழாமல் ஆட்சி புரிந்தனர். குடிதழீ-இக் கோலோச்சிய காரணத்தினால் மன்னர்களை மக்கள் இறைக்கு ஒப்பாகக் கருதிப் போற்றினர். எப்படி இறைவன் உலக உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதமின்றி காக்கின்றாரோ அதைப்போல வேந்தன் குடிமக்கள் எல்லோரையும் காக்கவேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வ.:தே முறை"

என்கிறார் வள்ளுவர்.

பண்பாட்டின் வழி மனித நேயம்

பண்பாடு எனும் சொல் மிக அண்மைக்காலத்தில் உருவானதாகும். 'பண்பு' என்ற சொல் தொன்றுதொட்டு வழக்கில் இருந்துவந்துள்ளது. தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'பண்பு' என்ற சொல் அமைந்துள்ளது.

நேயம்

நேயம் என்பது அன்பு. அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிர்களிடம் பற்றுக் கொள்வதே நேயம். இது இனம், மொழி நிறங்களைக் கடந்தது. பிற உயிர்களுக்கு ஏற்படுகின்ற துன்பத்தைத் தமக்கு நேர்ந்ததாக நினைவில் நிறுத்துவது ஆகும்.

சங்க காலம் முதல் இக்கால இலக்கியம் வரை அமையும் தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் மனித நேயக் கூறுகள் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன.

புறநானூற்றில் மனித நேயம்

மக்களிடம் அன்பு பாராட்டும் மனிதநேயம்.

குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகளை யானையால் கொல்லச் சென்றபோது, புறவின் அல்லல் நீக்கிய குடியிற் தோன்றிய நீ இவ்வாறு செய்தல் தவறு என அவனை அச்செயலினின்று நீக்குகிறார் கோவூர்கிழார்.

"களிறு கண்டு அழுஉம் அராஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்தின் புன்கணோ உடையர்
கேட்பனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே" - (புறம். 46)

என்ற புறநானூற்றுப் பாடல் வாயிலாக பகை மன்னன் மக்களுக்கும் அன்பு பாராட்டும் மனித நேயம் புலவரால் மன்னனுக்கே பகரப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

தமிழ் பற்றும் மனித நேயமும் வெளிப்படுதல்

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப் பார்க்கச் சென்ற மோசிக்கீரனார் அரசனின் கட்டில் என்று அறியாமல் அக்கட்டிலில் களைப்பால் படுத்து உறங்குகிறார். ஆனால் பெருஞ்சேரல் இரும்பொறை அவர் செய்த தவறுக்கு தண்டிக்காமல் தமிழ்மீதுள்ள பற்றின் காரணமாக அப்புலவருக்கு அருகில் சென்று சாமரம் வீசுகிறான். இதன் மூலம் அரசனின் தமிழ்ப் பற்றும், மனிதநேயமும் வெளிப்படுவதை,

"அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நற்றமிழ் முழுது அறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழுவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசியோயே வியலிடம் கமழ" - (புறம். 50)

என்று புலவர் புகழ்கிறார்.

இயற்கையோடு இணைந்த மனிதநேயம்

இயற்கை என்பது மனித வாழ்வோடு இணைந்த ஒன்று. மலை, கதிர், மழை, நிலவு, அருவி, ஆறு, கடல், தாவரங்கள், விலங்குகள் என இயற்கையின் பரிணாமம் பெரியது. ஆக்கமும், அழிவும் இயற்கையின் கரங்களில் இருப்பதால் மனிதனின் செயல்பாடுகள் கட்டிற்குள் நிற்கின்றன.

இயற்கையின் இன்றியமையாமையை உணர்ந்த முன்னோர் தாம் துய்த்த இன்பவுணர்வுகளின் பிரதிபலிப்பை இலக்கியங்களில் சுட்டிச் சென்றனர். அகம் சார்ந்த இலக்கியக் காட்சிகள் இயற்கையை வருணிப்பது இயல்பாகும். ஆனால் புற இலக்கியங்கள் இயற்கையை வருணிப்பதில் மனிதனின் உளப்பாங்கு வெளிப்படுவது பெருமைக்குரியது.

ஒரு மனிதனுக்கு இயற்கை அனுபவப்பாடம் கற்றுத் தருகிறது. தன் மனவுணர்வுகளை இயற்கையிடம் வெளிப்படுத்துவதில் பெரும்பான்மையான மனிதர்கள் ஆர்வம் கொள்கின்றனர். பறவையைத் தூதுவிடுதல், பூக்களிடம் பேசுதல் போன்ற செயல்களை இதற்குச் சான்று கூறலாம்.

புறநானூற்றுப் பாடல்கள் புலவர், அரசர் நட்பினைப் படம் பிடித்துக்காட்டும் அரும் பெட்டகங்களாக உள்ளன. அகத்தில் தோன்றுகின்ற நட்பு உணர்வு பூர்வமானது மட்டுமன்றி உண்மையானதும் ஆகும். இதைத்தான் வள்ளுவர்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்கிறார்.

உண்மை நட்பு இறந்த பிறகும் வாழும் என்பதை இயற்கைக் காட்சியோடு இணைத்துப் பாடி கீரத்தனார் பாடல் மிகச் சிறந்த மனிதநேயச் சிந்தனையை உணர்த்துகின்றது.

மனித நேய உணர்வு

அதியமான் நெடுமானஞ்சி பெரிய மலையில் கிடைத்த நெல்லிக்கனியின் பெருமையை அறிந்தும் தாம் உண்ணாமல் ஔவை மூதாட்டியிடம் அந்நெல்லிக்கனியின் பெருமையைக் கூறாமல் அவள் உண்ணுமாறு அவளிடம் அளித்த செயல் அவனது மனிதநேய உணர்வை வெளிப்படுத்துகின்றது என்பதை,

"பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே" - *(புறம். 91)*

என்ற புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகிறது.

பகிர்ந்துண்ணும் மனித நேயப்பண்பு

அரசர்கள் மட்டுமல்லாமல் அரசரிடம் பரிசு பெறும் புலவர்களும் மனிதப் பண்போடு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் புறநானூறு காட்டுகிறது.

"பன்மான் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழம்வாய"
• - *(புறம். 163).*

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் குமணனிடம் பரிசு பெற்றுச் செல்கிறார். பரிசு பெற்ற பொருள்களை மனைவியிடம் கொடுக்கின்றார். அப்பொழுது புலவர் மனைவியிடம் தமக்கு வேண்டும் எனச் சேர்த்து வைக்காமல் தம் சுற்றத்தார் தமக்கு பொருள் கொடுத்து உதவியவர்கள் மற்றும் பிற மக்களுக்கும் அவர்கள் வறுமை நீங்குமாறு கொடுத்து உதவி செய்யுமாறு கூறுகின்றார் என்பதன்வழி பிறரோடு பகிர்ந்துண்ணும் மனித நேயப்பண்பு புலப்படுகின்றது.

மனிதம் போற்றும் மனிதநேயப்பண்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் மேன்மையுற்று விளங்கியதெனினும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் 'மனிதநேயம்' என்ற சொல்லாட்சி உருவாக்கப்பட்டது எனலாம்.

சங்க காலம் ஒரு பொற்காலம் என்று போற்றப்பட்டதற்குக் காரணம் மன்னனும், மக்களும், மனிதநேயம் நிறைந்தவர்களாக விளங்கியதாகும். போரிலும் அறத்தைக் கடைப்பிடித்து மனிதநேயம் வளர்த்தவர்கள் மன்னர்கள். கருணை, அன்பு, இரக்கம், மனிதனை மனிதனாக மதிக்கும் தன்மை ஆகிய பண்பாடுகள் தமிழ்ச் சமுதாயத்தை உலகம் போற்றும் அளவிற்கு எடுத்துச் சென்றுள்ளன என்கிறது புறநானூற்றுப் பாடல்கள். இங்ஙனம் புறநானூற்றில் காணக்கிடக்கும் மனிதநேயப் பண்பின்வழி செயல்களை மேற்கொண்டால் எதிர்வரும் சமுதாயம் வன்முறையற்று அமைதியில் மகிழும் என்பது சிறப்பிற்குரியது.

துணைநூற்பட்டியல்

1. அ. பாலையன், புறநானூறு மூலமும் உரையும்
2. கா.சு.பிள்ளை, திருக்குறள்
3. தொல்காப்பிய பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை

கம்மாண்சேரியும் அக்கசாலையும்

முனைவர் வீ.செல்வகுமார், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613010

இடைக்கால இந்தியாவில் பரவலாகக் காணப்பெற்ற கைவினைஞர்கள் கம்மாளர்களாவர். இந்தியாவில் வரலாற்றுத் துவக்ககாலம் வரை மட்கலங்களே பெருமளவில் பயன்பாட்டில் இருந்தன. இடைக்காலத்தில்தான் வெண்கலப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்தது. இக்காலத்தில் வெண்கலப் பாத்திரங்கள், படிமங்கள் செய்யவும், கோயில்களின் கூரைகளில் பதிக்கவும், செம்பு பயன்படுத்தப்பட்டது. குறிப்பாகக் கோயில்களிலும், அரண்மனைகளிலும் மற்றும் சில குறிப்பிட்ட மக்கள் குழுக்களாலும் வெண்கலப் பொருள்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. சங்க இலக்கியங்களிலும் கம்மியர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பெருங்கற்படைச் சின்னங்களிலும் வெண்கலப் பொருள்கள் கிடைக்கின்றன. பொ.ஆ. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து வெண்கலப் பொருள்கள், வெண்கலம் செய்யும் கம்மாளர்கள் குறித்த தகவல்கள் தமிழ்க் கல்வெட்டுகளில் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. வெண்கலப் பொருள்களைச் செய்த கைவினைஞர்களுக்கென்று தனி வாழ்விடப்பகுதிகள் இருந்தன. இவை கம்மாண்சேரி எனக் கல்வெட்டுகளில் சுட்டப்பெறுகின்றன. இக்கட்டுரை இடைக்காலத் தமிழகத்தில் இருந்த கம்மாண்சேரி மற்றும் அக்கசாலை குறித்த சில தகவல்களையும் விளக்கங்களையும் அளிக்கின்றது.

கன்னான்

கன்னான் என்ற சொல் உலோகப் பாத்திரங்கள் செய்வோரைச் சுட்டுவதாகக் கல்வெட்டுச் சொல்லகராதி பொருள் தருகின்றது (த.க.சொ 2003: 166). இச்சொல் நிகண்டுகளில் செம்புத்தொழில் செய்வர்களைக் சுட்டுவதாகக் குறிக்கப்பெறுகின்றது (வ.த.இ.பே. 2001: 655). கன்னான் என்ற சொல்லாட்சி தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டில் (பொ.ஆ. 1014) உள்ளது. இங்குள்ள கல்வெட்டு "இடைக்கரைக் காரியான க்'த்திரிய சிகாமணிப் பெருங்கன்னானுக்கு பங்கு ஒன்றும்" (தெ.இ.க. 2, (ஹ) 66) என்று குறிப்பிடுகின்றது. பொ.ஆ. 1276 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று "கன்னாரிறை" என்ற வரி பற்றிக் குறிப்பிடுகின்றது. உலோகப் பாத்திரங்கள் செய்பவர்கள் கன்னார பத்தர் என்று ஊர்ப்பகுதிகளில் அழைக்கப்படுகின்றனர். தமிழகத்தின் பல இடங்களில் கன்னாரத் தெரு என்ற பெயரில் இக்குழுக்கள் வாழ்ந்த பகுதிகள் இன்றும் உள்ளன. கன்னான் என்ற சொல் கம்மாளர் என்ற சொல்லின் திரிபாகலாம்.

கம்மாளர்கள், கம்மாண்சேரி

கம்மாளர்கள் ஐங்கம்மாளர்கள் என்றும் அழைக்கப்பெற்றனர். தட்டான், கன்னான், சிற்பி, தச்சன், கொல்லன் ஆகியோர் இப்பிரிவில் அடங்குவர் (வ.த.இ.பே. 2001: 609). ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த, கேரளாவின் தெரிசாப்பள்ளி செப்பேடு ஐங்கம்மாளர் பற்றிக் குறிப்பிடுகின்றது. கம்மாளர்களைக் குறிக்கும் சொல்லாக, 'கம்மியர்' தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. இது உலோகப் படிமங்கள் செய்பவர்கள், துணி நெய்பவர்கள், பொற் கொல்லர்கள், மரத்தச்சுத் தொழில் செய்பவர்கள், பணியாளர்கள், வெண்கலத்தொழில் செய்பவர்களைக் குறிக்கும் வகையில் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது (Subrahmaniam 1966: 220-

221). கம்மாளர்களின் வாழ்விடம் கம்மாண்சேரி என்று இடைக்காலக் கல்வெட்டுகளில் சுட்டப்பெறுகின்றது (Epigraphia Indica 22, 34). கம்மாள மகழ்மை (மகமை) என்பது இவர்கள் மீதான வரிகளில் ஒன்றாகும் (பொ.ஆ. 1068 ஆண்டுக் கல்வெட்டு, தெ.இ.க 7, 467). புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் ஒன்று (ஜீஜு 421), 'கம்மாளர் பேறு' என்ற நிலவிளைச்சலில் ஒரு பகுதியை கம்மாளர்களுக்கு வழங்கும் முறைமை பற்றிக் குறிப்பிடுகிறது.

அக்கசாலை

அக்கசாலை என்ற சொல் தமிழ் மற்றும் பிறமொழிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. அக்கசாலை பொற்கொல்லர்களைக் குறிக்கும் சொல்லாகும் (த.க.சொ 2003: 1 Karashima 2009: 146). அக்கசாலை, அக்கம் என்ற ஒருவகை நாணயத்தைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்திருக்கவேண்டும். அக்கம் என்ற தமிழ்ச் சொல் அக்'ம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிபா என்பது தெரியவில்லை. இது தாவரத்தின் விதையைக் குறிக்கும் சொல்லாகவும் இருக்கலாம். இச் சொல் பொ.ஆ. 994ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்படுகின்றது (தெ.இ.க. 27, 472). அக்கம் ஒரு காசின் 12ல் ஒரு பங்கு எடையுள்ளதெனக் கருதப்படுகிறது (Narasimha Murty 1975: 73; Desikachari 1933: 151). திவாகர நிகண்டு 'அக்கசாலையர்' என்பது கண்ணாளர் என்பவர்களைக் குறிக்கும் என்கிறது (வ.த.இ.பே 2001: 2). கர்னாடகத்தில் இன்றளவும் பொற்கொல்லர்கள் 'அக்கசாலே' என்று அழைக்கப்படுகின்றனர் (Census of India, 1911: 1974). அக்கம் மிகவும் சிறிய எடையளவு என்பதால், இது பொன் மற்றும் பிற உலோகங்களை நிறுக்கப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உலோக வேலை செய்த சமூகக் குழுக்களிடையே, காலப்போக்கில் பொன் வேலை செய்பவர்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். இதன் காரணமாக இவர்கள் அக்கசாலை என்ற சொல்லாட்சி வந்திருக்கவேண்டும் என ஊகிக்கலாம்.

அக்கசாலைப் பெரும்பள்ளி

இடைக்காலத்தில் நாகப்பட்டினத்தில் அக்கசாலை இருந்தமைக்கு ஆவணச் சான்று உள்ளது. நாகப்பட்டினத்தில் கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவில் தற்போது உள்ள புத்தரின் செப்புத்திருமேனியில் "அக்கசாலைப் பெரும்பள்ளி நாயகர்" என்ற குறிப்பு உள்ளது. இக்கல்வெட்டு பொ.ஆ 1100 ஐச்சேர்ந்ததாகும் (சுப்பராயலு 1992). எனவே இவர்கள் புத்தரையும் வழிபட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. தமிழகத்தில் பரவலாகக் காணப்பெறும் புத்தர் சிலைகளை இந்தக் கைவினைஞர்கள் வழிபட்டனரா என்பதும் ஆய்வுக்குரியதாகும்.

மஞ்சக்கொல்லை அக்கசாலைப் பிள்ளையார்

நாகப்பட்டினத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் சுமார் 4 கிமீ தொலைவில் உள்ள மஞ்சக்கொல்லை என்ற ஊரில் அக்கசாலைப் பிள்ளையார் கோயில் உள்ளது. இக்கோயில் உள்ள தெரு கன்னாரத்தெரு என்று அழைக்கப்பெறுகின்றது. இக்கோயிலின் அருகில் கம்மாங்குளம் என்ற பெயருடைய நீர்நிலை ஒன்றும் உள்ளது. இது கம்மாளர்களால் தோண்டப்பெற்றிருக்கலாம் அல்லது அவர்களது பயன்பாட்டிற்காக உருவாக்கப்பெற்றிருக்கலாம். இவ்வூரில் நடத்தப்பெற்ற கள ஆய்வின் (கள ஆய்வு: பிப்ரவரி 2017) வழியாக, இப்பகுதியில் பொன்வேலை, வெண்கலத்தொழில் செய்யும் கம்மாளர்களின் குடியிருப்பு இருந்துள்ளமை புலனாகின்றது. சுமார் 70 வருடங்களுக்கு முன்பு, அதாவது 1930களில் இப்பகுதியில் வெண்கலப்படிமங்கள் மற்றும் பாத்திரங்கள் செய்யும் பட்டறைகளும், அவற்றைச் செய்யும் கம்மாளர்களும் இருந்துள்ளனர். இங்கு கம்மாளர்கள் வசிக்கும் ஒரு தெருவில்,

ஒரு மாரியம்மன் கோயிலும் உள்ளது. இப்பகுதியில் மாரியம்மன் உலாவரும் சமயத்தில், அத்தெய்வம் அக்கசாலைப் பிள்ளையார் கோயில் உள்ள தெருவிற்கு வரக்கூடாது என்பதற்காக, கன்னாரத்தெருவில் வாழ்ந்தவர்கள் வெண்கல ஆணிகளைச் செய்து தெருவில் வீசுவார்கள் என்ற செவிவழிச் செய்தியை, இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். கம்மாளர்களை ஆசாரி என்று உள்ளூர் மக்கள் குறிப்பிடுகின்றனர். தற்போது இக்கிராமத்தில் ஒரு சில ஆசாரி வீடுகளே உள்ளன என்று இவர்கள் கூறுகின்றனர். தமிழகத்தில் பல இடங்களில் அக்கசாலைப் பிள்ளையார் கோயில்கள் காணப்படுகின்றன (அட்டவணை எண் 1.).

அட்டவணை எண் 1.
தமிழகத்தில் அக்கசாலைப் பிள்ளையார் காணப்பெறும் இடங்கள்

வ.எ.	வழிபடும் மக்கள்	தெய்வத்தின் பெயர்	அமைவிடம்
1	விஸ்வகர்மா	அக்கசாலை விநாயகர்	வடசேரி, அகத்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்
2	கம்மாளர்கள்	அக்கசாலை பிள்ளையார்	இஞ்சிகொல்லை, நாகப்பட்டினம்
3	கம்மாளர் தெரு அருகில் உள்ளது	அக்கசாலை விநாயகர்	திருச்சி, தாரனல்லூர்
4	-	அக்கசாலை பிள்ளையார்	மதுரை
5	-	அக்கசாலை பிள்ளையார்	கொற்கை
6	-	அக்கசாலை விநாயகர்	திருநெல்வேலி
7	-	அக்கசாலை விநாயகர்	வள்ளியூர்

முடிவுரை

கம்மாண்சேரி பொதுவாக உலோகத்தொழில் செய்பவர்கள் வாழ்ந்த இடத்தைக் குறித்தது. அக்கசாலை, குறிப்பாகப் பொற்கொல்லர்களின் தொழிற்கூடத்தையும், பொற்கொல்லர்களையும் குறிக்கும் சொல்லாக காலப்போக்கில் உருப்பெற்றிருக்கலாம். அக்கம் என்பது மிகச்சிறிய எடை என்பதால் இது காசு, மற்றும் பொன் நகைகள் செய்யும் தொழிற்கூடத்தைச் சுட்டியிருக்க வேண்டும் எனக்கருத இடமுண்டு. பொன் வேலைசெய்தவர்கள், பொன்னின் உயர்ந்த மதிப்பின் காரணமாக தங்களை உயர்ந்த வகுப்பினராக கருதிக்கொண்டிருக்கவேண்டும். சங்க காலத்தில் 'பொன் செய் கொல்லர்கள்' தனிப் பிரிவாகக் கருதப்பட்டனர். இக்காலத்தில் கொல்லர் என்ற சொல் பொன் வேலை செய்பவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் கொல்லர் என்ற சொல் இடைக்காலத்திலிருந்து (த.க.சொ. 2003: 215) இன்று வரை, இரும்புத் தொழில் செய்பவர்களை மட்டுமே குறித்துவந்துள்ளது. தனி அடையாளத்தையும் மதிப்பையும் பெறுவதற்காக பொன்வேலை செய்பவர்கள் "அக்கசாலை" என்ற சமஸ்கிருதக் கலப்புள்ள சொல்லைப் பயன்படுத்தத் துவங்கியிருக்கலாம். தமிழகத்தில் மரபுவழியாக உலோகத்தொழில் செய்பவர்கள் வசிக்கும் இடங்களில் மாரியம்மன், திரௌபதி அம்மன் போன்ற பெண் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. சில இடங்களில் அக்கசாலைப் பிள்ளையாரும் வழிபடப்பட்டுள்ளது. எனவே, 'பொன் வேலை செய்பவர்கள் பிள்ளையார் அல்லது விநாயகரை மட்டுமே வழிபடத் துவங்கினரா?' என்பது குறித்து மேலும் ஆராய வேண்டும். பொதுவாக, அக்கசாலை மற்றும் கம்மாண்சேரி ஆகியவற்றைப்

பொன் வேலை செய்பவர்களும், வெண்கலப் படிமங்கள், பாத்திரங்கள் செய்யும் பணிப்பட்டறைகளும், அத் தொழிலைச் செய்துவந்த மக்களும் இருந்த இடங்களாகக் கருதலாம்.

மேற்கோள் சான்றுகள்

Census of India,1911 – Vol. 21 (1).

Desikachari ,T, 1933, *South Indian Coins,* Chennai, AES, 1993 Reprint.

IPS = Inscriptions of Pudukkottai State, no. 421.

Karashima, Noboru, 2010, *South Indian Merchant Guilds in the Indian Ocean and Southeast Asia,* in Herman Kulke, K. Kesavapany and Vijay Sakhuja, eds., Nâgapattinam to Suvarnadwipa, *Reflections on the Chola Naval expeditions to Southeast Asia,* Singapore: Institute of Southeast Asian Studies, 2009

Narasimha Murthy A. V. , *The coins of Karnataka,* Geetha Book House, 1975.

Subrahmanian, N., *Pre-Pallavan Tamil Index,* Chennai, University of Madras, 1966.

சுப்பராயலு, எ., *நாகப்பட்டினம் சூடாமணி விகாரத்தைச் சேர்ந்த ஒரு புதிய படிமம் ஆவணம்* 3, 1992, 43-47, 1992.

த.க.சொ., *தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி,* சென்னை, சாந்தி சாதனா, 2003.

தெ.இ.க., *South Indian Inscription Volume.*

வ.த.இ.பே., *வரலாற்று முறை தமிழ் இலக்கியப் பேரகராதி,* சென்னை, சாந்தி சாதனா, 2001.

ஆசாரக்கோவையில் அறக்கருத்துக்கள்

ஜெ.செல்வகுமார், முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

மனித வாழ்க்கையை நல்லமுறையில் வாழ அறக்கருத்துகள் மிகமிகத் தேவை. இந்த அறக்கருத்துக்கள் வயல் வரப்புபோல தீங்கிலிருந்து தடுத்து வாழ்க்கையை வளமாக்க முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த அறக்கருத்துக்கள் மனிதனின் வாழ்வைச் செப்பணிடும் ஒரு கருவியாக விளங்குகின்றன. ஒரு சமூகம் செம்மையானதாக விளங்க அறக்கருத்துகள் உள்ளும், புறமும் நின்று சீராக்கி சமூகத்தை சிறக்கச்செய்கின்றன. *''செத்த எலி எறப்பிலே இருந்தாலும், கீழே இடுக்கிலே இருந்தாலும் வீடே நாறும்''* இதுபோல ஒழுக்கம் கெட்டவர்கள் உயர்மட்டத்தில் இருந்தாலும், அடிமட்டத்தில் இருந்தாலும் சமுதாயத்திற்குரிய மரியாதை கிடைக்காது. தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கக் கட்டுப்பாடுடன் வாழாத மனித சமுதாயம் என்றும் உயர்வுபெறாது. மனிதவாழ்க்கை சிறக்க அறக்கருத்துகள் தேவை.

ஆசாரக்கோவையில் அறக்கருத்துகள்

நன்றி அறிதல் பொறை உடைமை, இன்சொல்லோ(டு)
இன்னாத, எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ(டு)
ஒப்புரவு ஆற்ற லறிதல், அறிவு உடைமை
நல் இனத்தாரோடு நட்டல், இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து - என்கிறது சூத்திரம்

அதாவது ஒருவர் செய்த நன்றியை உணர்ந்து நடக்கவேண்டும். பொறுமையுடன் சொல்லவேண்டியவற்றை இனிமையாகச் சொல்லவேண்டும். எந்த உயிருக்கும் கொடுமை செய்யக்கூடாது. கல்வியுடைமையுடன் முறைதெரிந்து சமூக நெறியோடு உறவாட வேண்டும். புத்திகூர்மையுடன் நேர்மை, ஒழுக்கம் போன்ற குணங்கள் கொண்டுள்ளவர்களுடன் நட்புறவு கொள்ளவேண்டும் என்கிறது ஆசாரக்கோவை. இக்குணங்கள் இருந்தால் மனிதர்கள் நல்லவண்ணம் மண்ணில் வாழலாம்.

ஒழுக்கமுடன் வாழ்பவர்கள் பெறும் செல்வங்கள்

பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு
நிலக்கிழமை, மீக்கூற்றம், கல்வி, நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்

என்று ஒழுக்கத்துடன் வாழ்பவர்கள் பெறும் செல்வத்தை ஆசாரக்கோவை கூறுகின்றது. நல்ல குழந்தைகளுடன், நெடுநாள் உயிர்வாழ்வு (புகழ்) பொருள் வளங்கள பொலிவான தோற்றம், நிலபுலன்கள், சுற்றம், வீடு, செல்வாக்கு, மேன்மை, செயல்திறமை, பகுத்துணரும் கல்வித்திறம், நோயில்லா உடல் இவையனைத்தும் ஒழுக்கம் தவறாதவர்கள் பெறும் செல்வங்கள் ஆகும்.

நீராடல் நெறி

தேவர் வழிபாடு தீக்கான வாலாமை
உண்டது கான்றல், மயிர்களைதல், ஊண்பொழுது
வைகு துயிலோடு, இணைவிழைச்சு, கீழ்மக்கள்
மெய் உறல் ஏனை மயல் உறவு ஈரைந்தும்

ஐயுறாது ஆடுக நீர் எனும் பாடல் நீராடல் நெறியை விளக்குகிறது. நீராடுதல் செய்யும்பொழுது நாம் செய்யவேண்டியவை தெய்வ வழிபாட்டிற்கு முன்னரும், கெட்ட கனவு கண்டு விழித்த உடனும், இறப்பு, பிறப்பு போன்றவற்றால் வரும் தீட்டுகளிலும், வாந்தி எடுத்தாலும், தலை, முகம் முதலியன சிதைத்துக் கொண்டபோதும், சாப்பிடுவதற்கு முன்பும், தூங்கினால் எழுந்தவுடனும், உடல் உறவு கொண்ட பின்னரும், தூய்மையில்லாத கீழ்மக்கள் மேல் பட்டுவிட்டாலும், மல, ஜலம், கழித்து ஆடை உடலில் பட்டபோதும் கட்டாயமாகக் குளித்தே ஆக வேண்டும்.

குரவர்கள் - பெரியவர்களிடம் மரியாதை

ஐம்பூதம், பார்ப்பார், பசு, திங்கள், ஞயிறு
தம்பூதம் எண்ணாது இகழ்வானேல், தன் மெய்க்கண்
ஐம்பூதம் அன்றே கெடும் எனும் கோவைச் செய்தியின்

மூலமாக உலகம், உயிர்கள் ஆவதும் வாழ்வதும் மண், நீர், தீ, காற்று, ஆகாசம் (வெளி) சந்திரன், சூரியன் இவைகளால் ஆகும். அறிவையும், தர்மங்களையும் வளர்த்துக் காப்பவர்கள் அந்தணர்கள். தாய்க்கும் மேலாகக் காப்பன பசுக்கள் ஆகும். அதனால் வாழவைக்கும் தெய்வங்களைப் போற்றிக் காக்கவேண்டும். அதுபோல அரசன், தனது ஆசிரியர், தாய், தந்தை, மூத்த சகோதரர்கள் இவர்களைத் தெய்வமாக மதித்துத் தொழுது உயர்வடைய வேண்டும். இந்தக் கருத்து அனைத்து பெரியோர்களும் உணர்ந்து சொன்ன கருத்தாகும்.

உணவு உண்ணும் நெறி

நீராடி, கால்கழுவி, வாய்பூசி, மண்டலம் செய்து
உண்டாரே உண்டார் எனப்படுவார் - அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வர், அது, எடுத்துக்
கொண்டார் அரக்கர் குறித்து

எனும் பாடல் மூலம் நீராடி, உடை உடுத்தி (மடி) கால் கழுவி, வாய்கொப்பளித்துச் சாப்பிட ஆசனமிட்டு அமர்ந்து பரிமாறிய பின் அமைதியாக உண்ணவேண்டும். சுத்தமின்றி ஆத்திரச்சோறு உண்ணக் கூடாது. உணவைச் சிந்தாமல், காக்கைகள், சிறுகுழந்தைகள், பசுக்கள், விருந்தினர், வயது முதிர்ந்த வீட்டுப் பெரியோர்கள் இவர்களுக்கு முறையாக உணவு கொடுத்த பின்னரே இல்லறத்தார் உண்ண வேண்டும். பெரியவர்கள் பக்கத்தில் சாப்பிடும்போது வலப்புறத்தில் உட்காரக்கூடாது. உணவுகள் பரிமாறப்பட்டாலும் பெரியவர்களை முந்திக் கொண்டு சாப்பிட்டுவிட்டு எழக்கூடாது. அறுசுவை உணவுகளில் முதலில் தித்திப்பும் கடைசியில் கசப்பு உணவுகளையும் இடையில் மற்ற உணவுகளையும் உண்ணவேண்டும். என்று உணவு சாப்பிடும் முறைய்ய ஆசாரக்கோவை அழகாக எடுத்துக்கூறியுள்ளது.

பொது ஒழுக்கம்

பெரியவர்களிடம் எதை வாங்கினாலும், கொடுத்தாலும் இரண்டு கைகளாலுமேச் செய்தல் வேண்டும். சூரியன் மறைந்து மயங்கும் இருள் மாலையில் படுத்தல், வழிப்பயணம் கிளம்பல், உணவு சாப்பிடுதல், ஆத்திரப்படல் கூடாது. விளக்கேற்றி வணங்கி, இருட்டியபின் இல்லத்தில் உணவு உண்டு உறங்கவேண்டும். இரண்டு தெய்வங்களுக்கு இடையில் நுழைந்தோ, இரண்டு பெரியவர்களுக்கு இடையில் நுழைந்தோ போகக்கூடாது. பெயரியவர்களின் பாதத்தில் விழுந்து வணங்கவேண்டும். ஒத்த பருவ நண்பர்களைக் கண்டவுடன்முகமும், அகமும் மலர எதிர் வரவு கூறி வரவேற்க வேண்டும். இவையே வாழ்வை உயர்த்தும் உன்னத நெறியாகும்.

தூய்மை செய்யும் முறை

ஆறு,வாய்க்கால், ஏரி, குளங்களில் நின்று கை, கால் கழுவி வாய் கொப்பளிக்கக்கூடாது. பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்து கரையில் வைத்து சுத்தம் செய்துகொள்ள வேண்டும் என்று தூய்மை பற்றி கூறியுள்ளது.

உணவு உண்ணும் முறைகள்

சமைக்கும்போது தெய்வ நிவேதனத்திற்கு என்று எண்ணியே உலைவைக்க வேண்டும். சமையல் அறையில் தூய்மையின்றிநுழையக்கூடாது. சாப்பிடும்போது திட்டவோ, கண்டிக்கவோக் கூடாது. குடும்பப் பெரியவர்கள் உணவு உண்ணும்போது அவர்கள் எதிரில் உயர்ந்த ஆசனத்தில் அமரக்கூடாது. இதுவே உணவு உண்ணும்போது கடைபிடிக்கும் நெறிமுறைகள் ஆகும்.

இல்லற ஒழுக்கம்

குடும்ப இன்பம் அனுபவிக்கும் இளவயதுடைய கணவனும், மனைவியும் வீட்டுக்கு விலக்காக இருக்கும் போது ஒருவரையொருவர் பார்க்கக்கூடாது. வீட்டில் மங்கல நெறிகள் விளங்க விடியும் முன் பெண்கள் எழும்பி வீட்டைச் சுத்தம் செய்து, பாத்திரங்கள் கழுவி, குளித்து பூச்சூடி, அலங்கரித்து தீமூட்டிச் சமைக்கத் தொடங்கினால் வீடு நல்லமனையாகும். இதனையே தெய்வப்புலவர்

இல்லதென் இல்லலள் மான்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

என்று கூறியுள்ளார். நல்ல குணமும், நல்ல செயல்களும் உடையவளாய் மனைவி அமைந்து விட்டால் எல்லா இன்பங்களும் இல்லத்தில் வந்து சேரும். அப்பொழுதே இல்லறம் நல்லறமாக மாறும். வீடு கோயிலாக அமையும்.

சமூகத்தில் பழகவேண்டிய நெறிகள்

உடை, நடை, சொற்சோர்வு, வைதல் இவை நான்கும்
நிலைமைக்கும், கல்விக்கும், ஆண்மைக்கும் தத்தம்
குழமைக்கும் தக்கள் செயல்

எனும் பாடல் மூலம் ஒவ்வொருவரும் தமது குடும்பத்தகுதி, தன்னுடைய பொருளாதார வசதி, கல்வி, அறிவு, தம் உள்ளம், உடல் வலிமை இந்த நான்கிற்கும் தக்க வகையில் உடுப்பதும், நடப்பதும், மற்றவரைக் கண்டிப்பதும் செய்தல் வேண்டும்.

பொய்கள், வெட்டிப்பேச்சுகள், விதண்டவாதம், காணாத இடத்தில் பிறரைக் குறை கூறிப்பேசல், முகஸ்துதி செய்தல், இவைகளை திடஞான உள்ளம் உடையவர்கள் செய்யமாட்டார்கள். இதனைப்,

படுறும் பயன் இலவும் பட்டி உரையும்
வசையும் புறனும் உரையாரே - என்றும்
அசையாத உள்ளத் தவர்

எனும் செய்யுள் அழகாக விளக்குகிறது. மேலும் தம் வீடு நாடிவரும் பெரியோர்கள், விருந்தினரை மகிழ்ச்சியோடு வரவேற்று, இனிய சொற்கள் பேசி நல்லுணவு வழங்கவேண்டும்.

பகையாளிகள் மோதும் இடத்தில், மதுக் குடித்துக் கூத்தடிக்கும் இடத்தில், கற்பு நெறியற்ற விலைமகளிர் தெருக்களில், ஆண்கள், பெண்கள் பலர் கூடுகின்ற ஆறு, குளக்கரையில் அதிகநேரம் நிற்கக் கூடாது. புல், பூண்டு, புதர் நிறைந்த காடுகளுக்குச் செல்லக்கூடாது.

காலவாய்த்தொழுவு சமயம் எழுந்து இருப்பு
ஆசாரம் என்பர் - குரவர்க்கு இவை இவை
சாரத்தால் சொல்லிய மூன்று

எனும் செய்யுள் மூலமாக பெரியவர்களைப் பார்த்தவுடன் எழுந்தே நின்று அவர் திருவடிகளில் விழுந்து வணங்குவது, ஆசனம் கொடுப்பது போன்றவற்றைச் செய்தல் வேண்டும். துறவிகளை ஆதரிக்க வேண்டும். பெரியவர்கள் முன்வாய் தவறியும் பெருமை பேசக்கூடாது என்று சமூகத்தில் கடைபிடிக்கவேண்டிய நெறிகளை வகுத்துரைத்துள்ளது.

பெரியோரை மதித்தல்

உடக்கை இகவார் செவி சொறுண்டார் கைமேல்
எடுத்து உரையார் பெண்டிர் மேல் நோக்கார் - செவிச் சொல்லும்
கொள்ளார் பெரியார் அகத்து

என்னும் பாடல் மூலம் ஆடையை அவிழ்த்தல், உதறி உடுப்பது, நெகிழவிடுவது முதலியவற்றைச் செய்யக்கூடாது. காது குடைதல், கைகளை மேலே உயர்த்துதல், ஆட்டி, நீட்டிப் பேசுதல் கூடாது. பிறர் காதில் ரகசியம் கூறக்கூடாது. பேச அனுமதிக்கவும் கூடாது. தாம் பேச நேர்ந்த போதில் சடசடவெனப் பேசுதல் கூடாது. சொன்னவற்றைத் திரும்பப் பேசக்கூடாது. பொய்க்கு வக்காலத்து வாங்கக்கூடாது.

முடிவுரை

மனிதனைப் பண்படுத்தி பண்பான வாழ்க்கைக்குத் திருப்பி வாழ்வன் இனிமை உணர்த்தி, இல்லறத்தை நல்லறம் ஆக்கி, வாழ்வை வளமாக்கி, சங்கடம் இல்லா சமூகத்தை உருவாக்கி, சமூக சீர்கேட்டை மாற்றி, சிந்தனைக்கு ஊற்றாகி, சுகமான வாழ்வை அமைக்க அறக்கருத்துக்கள் நம் வாழ்விற்கு உதவுகின்றன. இவ்வாறு அறக் கருத்துக்களை உணர்த்தி தனிமனிதனை மேம்படுத்தி, சமூகத்தைச் சீர்திருத்தி, நாட்டில் இன்பம் மலர உதவுகின்றன. பண்பில்லா மனிதனைப் பண்படுத்தி வாழ்வைச் செழுமையடையச் செய்கின்றன.

பெண்களின் காதணிகள்

முனைவர் சி.சேமசுந்தரி, உதவிப் பேராசிரியர், அகராதியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

அணிகலன் என்பதற்கு ஆபரணம் நகை, தடையம், பணி அலங்காரம் என்று பல பொருள் கூறப்படுகின்றன. அந்தக் காலத்தில் வெள்ளி, பொன் அணிகலன் செய்திருந்த காலத்தில்கூட அணிகலன்களுக்குப் பணி என்று பெயர் கூறப்பட்டுள்ளது. பணி என்னும் பதத்திற்கு பாம்பு என்பது ஒரு பொருள். இன்றும் தமிழர்கள் தங்கள் தெய்வமாகிய கொற்றவைக்கும் சிவபெருமானுக்கும் சர்ப்ப குண்டலம் சர்ப்பகங்கணம் போன்ற பாம்பு வடிவ அணிகள் செய்து பூட்டி மகிழ்ந்து அணியப்படுவதால் அதற்கு அணிகலன் என்று பெயர் எழுந்தது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒரு வருடம் அல்லது மூன்று வருடம் என்ற ஒற்றைப்படை மாதங்களிலோ வருடங்களிலோ முதன்முதலில் மொட்டை அடித்து காதுகுத்தும் பழக்கம் நம் தமிழகத்திலே இருந்து வந்துள்ளது. சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலும் ஆண் பெண் இருவரும் காதுகளில் அணிகலன் அணிவது வழக்கமாக உள்ளது.

காது குத்தும் பழக்கம் இன்றளவில் மாறாமல் உள்ளது. திருமணம் ஆகப் போகும் ஆண்களுக்கு காதுகுத்தினால் மட்டும் திருமணம் நடக்கும் இதுவும் பரம்பரை நிகழ்வாக இன்றளவும் உள்ளது.

காதணிகள் வடிவமைப்பு

காது வடிப்பது என்பது ஒரு புதுமையான செயல்வகை என்றாலும் அதில் பூணும் நகைகளின் வடிவமைப்போ மிகவும் பிரமிப்பில் ஆழ்த்தக்கூடியவை ஆகும். தங்கம் சிறிது ஒளிபட்டாலும் அதன் பொன்நிற மஞ்சள் ஒளியை வீசி மக்களை ஈர்க்கக்கூடிய சக்தி படைத்தவை ஆகும். இதை நான்கு பக்கத்திலிருந்தும் ஒளிபெற்று பொற்சுடர் ஒளிரும்படி அழகுற வடிவமைக்கப்பட்டதாகும்.

பல அளவுள்ள கோளங்கள், சதுரக்கனவடிவ, முக்கோண வடிவு, சிறுசிறு கலசக் கூம்புகள் போன்ற வடிவங்கள் என்று பலவிதமான வடிவ அமைப்புகளை வியத்தகு வகையில் அமைக்கப்பட்டு மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன.

காதணிகளின் தோற்றம்

மிகத் தொன்மையான காலத்திலிருந்தே தமிழர்கள் காதணிகளை அணிந்து வந்துள்ளனர். இக்காதணிகள் ஆதிகாலத்தில் குழையாகவும் இலையாகவும் ஓலையாகவும் பூந்தோடாகவும் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் பல்வேறு விதமாகப் பரிணமிக்கப்பட்டன. எனவே, பிற்காலத்தில் பொன் அணிகள் குழை வடிவமாகவும் ஓலை என்றும் தோடு என்றும் பொன் அணிகள் பெயர்பெற்றன. காதணிகள் ஆண்-பெண் இருவருக்கும் உரிய அணியாக அமையப்பட்டுள்ளன. இன்று ஆண்கள் அணியும் நின்றுவிட்டது. மகளிர்கள் தோடு தவிர மற்ற அணிகளை அணிந்துகொள்வதைப் பெரும்பாலோர் கைவிட்டுவிட்டனர். தோடு அணியும் வழக்கம்கூட இப்பொழுது மறையத் தொடங்கிவிட்ட நிலை இன்று காணப்படுகிறது.

ஆதியில் தோடு அணிந்த தமிழக மகளிர் பிற்காலத்தில் காது வடித்து தோள்வரை தொங்குமாறு பெரிதாக்கி 4.5 பெரிய காதணிகளை அணிந்து வந்துள்ளனர். இவ்வழக்கம் போர்னியோ நாட்டுப் பழங்குடி மக்களிடம் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது என்ற செய்தி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

காது வடிக்கும் வழக்கம் தமிழகத்தில் எப்பொழுது நிலவியது என்று அறிய முடியவில்லை. சிலர் இந்தியாவில் மொகலாயர் ஆட்சி எழுந்தபின் காது வடிக்கும் வழக்கம் நிலவியது என்று கூறுகின்றனர். இவ்வழக்கம் மற்ற மாவட்டங்களைவிட நெல்லை மாவட்டத்தில்தான் பெண்கள் மிக நீளமாகக் காதுகளை வடித்திருந்ததோடு அதற்கென்று பல புதிய நகைகளையும் உருவாக்கி இருந்தனர். மேலும் தமிழ்நாட்டில் வேளாளர்கள், பரதவர்கள், நாடார்கள், கம்மாளர்கள், வாணியச் செட்டியார்கள், மறவர்கள், இடையர்கள் போன்ற இனத்தவர்களின் பெண்கள் நீண்ட காதுகளைப் பெற்று இதில் பாம்படம், தண்டட்டி, முடிச்சு, இட்டடிக்கை (சிலுவணி) மேலீடு போன்ற பெரிய நகைகளை அணிந்திருந்தனர். இவை அயல் நாட்டார்களை வியப்பிக்கக்கூடிய நிலையை உண்டாகியதாகும். ஆனால் இன்று இவ்வழக்கம் பெரிதும் மறைந்து காணப்படுகின்றன.

காதணிகளின் வகைகள்

1. அட்டிகை, 2.இட்டடிக்கை, 3.ஓலை, 4.கடிப்பினை, 5.கடுக்கன், 6.கம்பி, 7.கன்னப்பூ, 8.குண்டலம், 9.குணுக்கு, 10.குதம்பை, 11.குழை, 12.குவளை, 13.கொப்பு, 14.சன்னாவதஞ்சம், 15.சின்னப்பு, 16.செவிப்பூ, 17.தடுப்பு, 18.தண்டட்டி, 19.தாளுருவி, 20.திரசரி, 21.தோடு, 22.நவசரி, 23.நவகண்டி, 24.நாகபடம், 25.பஞ்சசரி, 26.பாம்படம், 27.பாம்பணி, 28.புகடி, 29.பூடி, 30.மகரி, 31.மஞ்சிகை, 32.மடல், 33.மாத்திரை, 34.முடிச்சு, 35.முருகு, 36.மேலீடு, 37.வல்லிகை, 38.வாளி போன்றவைகளாகும். காதுகளில் பூட்டப்படும் அணிகள் பலவற்றில் குதம்பையும் குழையும் முக்கியமானவையாகும்.

வளர்ந்து தொங்கும் காதின் துளையில் நுழைத்து காதுக்கு அணியாகச் செய்யும் பனையோலைச் சுருளே குதம்பை எனப்படும். இவை இரண்டு வகைப்படும். அவை, 1.நீலமணிக்குதம்பை, 2.மாணிக்கக் குதம்பை.

1. நீலமணிக்குதம்பை

நீலமணிகள் பதித்த பொன்னாலான குதம்பை நீல மணிக் குதம்பை எனப்படும். மேலும் இவை பனை ஓலைக்கு மாற்றாகப் பொன்னோலையினைச் செருக்கிக் கொள்வது வழக்கில் இருந்து வந்துள்ளன. சுருட்டியமைத்த இக்குதம்பையின் இடைவெளியில் மலர்ந்த நீலோற்பலத்தைச் செருகி அழகுபடுத்துவதால் இது நீலக்குதம்பை என்று பெயர் பெற்றது. நீலக்குதம்பையின் பக்கத்தில் அதன் விளிம்பில் முத்துக்களை வரிசையாகப் பதித்து அமைப்பவை ஆகும். கோவலன் நீலமணிக்குதம்பையையும் சந்திரபாணி என்னும் கடிப்பிணையும் அணிந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுவதன் வாயிலாக அறிய முடிகின்றது.

மாணிக்கக் குதம்பை

முகப்பிற் கட்டின மாணிக்க மணியின் இடையிடையே வயிரங்கட்டின மாணிக்கக் குதம்பையும் பழங்கால மக்கள் அணிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் வைரக் குதம்பை ஒரு காதிலும் நீல குதம்பை ஒரு காதிலும் கோவலன் அணிந்தான் என்ற செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

குழை

குழை எனப்படும் குண்டலம் மூன்று வகைப்படும். அவை,

1. மகர குண்டலம்
2. சிம்ம குண்டலம்
3. வியாழ குண்டலம்

என்பனவாகும்.

1. மகர குண்டலம்

மகர மீனை விளைவாக அமைத்துக் குழையாக அணிந்துகொள்வது மகர குண்டலம் எனப்படும். இது 2, 4, 5 விரல் அகலமிருத்தல் வேண்டும்.

2. சிம்ம குண்டலம்

காதுத் துளையில் வளையம் ஒன்றினை வைத்து அடைத்து அவ்வளையத்தின் மையத்திலிருந்து சிம்மம் வெளிவருவதுபோல் அமைக்கப்படும் குண்டலம் சிம்மக் குண்டலம் என்ற அழைக்கப்படுகிறது.

3. வியாழ குண்டலம்

வியாழமாகிய பாம்பினை வளைத்துக் குழையாக்கியது வியாழ குண்டலம் என்பனவாகும். இவை உருண்டை வடிவமானதும் வளையம் பொருத்தப்பட்டதுமான அணி விருத்த குண்டலம் என்றும் அழைக்கப்படுகின்றன. இதில் அகலம் 18 ஆகவும், கனம் 4 ஆகவும் இருத்தல் ஆகவும் இருத்தல் வேண்டும். இவை வாழைப்பூ தாமரை மொட்டு ஆகிய அமைப்பில் இருப்பவை ஆகும். உருத்திராட்சத்தையும் காதில் குண்டலமாக அணிந்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்படுகிறது. இவை எளிமையா்ன காதணிகள் ஆகும். உலோகத்தால் ஆன இக்குண்டலத்தை அனுமன் படிமத்திலும், உருத்திராட்சக் குண்டலத்தை (ஆறு முகங்கொண்டது) முருகன் காதிலும் அணியப்பட்டுள்ளதை அறிய முடிகின்றன என்ற செய்தியைச் சிற்ப செந்நூல் ஆசிரியர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

இக்குண்டலத்தை மேலும் ஐந்து வகையாகப் பாகுபடுத்துகின்றனர். அவை,

1. ஒண்குழை
2. கனங்குழை
3. பூங்குழை
4. பொற்குழை
5. மகரக்குழை

1. ஒண்குழை

குழை வடிவமாகச் செய்யப்பட்ட குண்டலத்திற்கு குழை என்ற பெயர் எழுந்தனவாகும். சங்கக்கால மகளிர்கள் எல்லாம் இத்தகைய ஒண்குழைகளை அணிந்துகொண்டனர் என்ற செய்திப் புலப்படுகிறது.

2. கனங்குழை

முற்கால மகளிர் கடிப்பு என்னும் அணியை இட்டுக் காதைப் பெரிதாக்கி அப்பால் கனங்குழை அணிந்திருந்ததை,

கடிப்பிகு காதிற் கனங்குழை பெயர்

என்ற பரிபாடல் வரி மூலம் அறிய முடிகின்றது.

3. பூங்குழை

சங்ககால மகளிர் அணிந்த குழைகளில் பூங்குழையும் ஒன்றாகும். இவை பொன்அணி, பூந்தொழில் நிறைந்திருந்தனவாகும். பொன் குழைகளோடு அசோகத் தளிரையும் குவளை மலரையும் அணியும் வழக்கம் பழங்கால மகளிரிடம் இருந்துள்ளது.

4. பொற்குழை

சங்க காலத்தில் ஆடவர்களும் மகளிரும் இலை வடிவமான பொன்குழை என்னும் அணியை அணிந்து வந்துள்ளனர்.

5. மகரக்குழை

மகரமீன் (சுறாமீன்) வடிவமாகச் செய்யப்பட்ட குழைக்கு மகரக்குழை என்று பெயராகும். இது பொன்னால் செய்யப்பெற்று மணிகள் இணைக்கப்பட்டிருப்பவை சுறப்பட்டவை அனைத்தும் காதணிகளின் வகைப்பாடுகளாகும்.

ஓலை

ஓலை இரண்டு வகைப்படும். அவை,

1. பொன்ஓலை
2. மாணிக்க ஓலை

என்பனவாகும்.

1. பொன் ஓலை

ஓலை வடிவமாகச் செய்யப்பெற்ற காதணியாகும். பண்டைய காலத்தில் பெண்கள் காதுகளில் இளவோலையை அணிந்து வந்தனர். இதனை மையமாகக் கொண்டு பின்பு உலோகக் காலத்தில் பொன்னால் ஓலை வடிவமாகச் செய்து அதைச் சுருட்டி வட்டமாகச் செய்து வந்துள்ளனர்.

2. மாணிக்க ஓலை

பொன் ஓலை அணிந்த மகளிர் பிற்காலத்தில் மணிகள் கிடைத்த பொழுது அதில் மாணிக்கங்களைப் பதித்து அணிந்து வந்துள்ளார்கள். அதனால் இதற்கு மாணிக்க ஓலை என அழைக்கப்பெற்றனவாகும்.

ஓலையே பிற்கால குண்டலங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளன என்பது சுட்டத்தக்க ஒன்றாகும்.

கடிப்பிணை (சந்திரபாணி)

முற்கால மக்கள் முதலில் காதுகளில் கடிப்பு என்னும் அணியையிட்டுக் காதுத் துளையைப் பெரிதாக்கியபின் பிற அணிகளை அணிந்துகொண்டனர்.

> வயிரக் கடிப்பிட்டு வார் காது தாழப் பெருக்கி

என்றார் ஆழ்வார் (நா.தி.பிர.142:1) மேலும் கடிப்பிணை என்னும் அணிக்குச் சந்திரபாணி என்ற பெயரும் உண்டு. இக்கடிப்பு இந்திர நீலத்தையும் இடை இடையே வைர மணிகளையும் இட்டுச் செய்யப்பெற்றனவாகும். இது தலைக்களி என்ற பெயர்க்கொண்டு அழைக்கப்பட்டது.

> இந்திர நீலத்து இடையிடை திரண்ட
> சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
> அங்காது அகவயின் அழகுற வணிந்து

என்று சிலப்பதிகாரச் செய்யுளுக்கே உரை செய்த உரையாசிரியர் நீலக்குதம்பை, வயிரக்குதம்பை ஆகிய இரண்டையும் இரு காதுகளிலும் அணிந்திருந்தனர் என்ற செய்தி புலப்படுகிறது.

தோடு

தோடு மூன்று வகையாகப் பாகுபடுத்தி உள்ளனர். அவை,

1. பூந்தோடு
2. பொற்றோடு
3. மணித்தோடு

1. பூந்தோடு

தோடு பூவின் அடிப்பகுதியாகும். பூவரசுப் பூவின் அடிப்பகுதியைப் பார்த்தார் பொன்னாற் செய்து செம்மணி பதித்த பொற்றோடு போல் இருக்கும். பூ வடிவில் செய்யப்பெற்றமையால் பூந்தோடு எனப் பெயர் பெற்றனவாகும்.

2. பொற்றோடு

தோடு மணிகள் பதித்து அழகுறச் செய்த தோட்டிற்கு மணித்தோடு என்று பெயர். மாணிக்கங்கள் சுற்றிலும் நடுவில் வைரம் பதிப்பதும் உண்டாம். முழுவதும் வைரம் பதித்து வைரத்தோடு என்று கூறி அணிவதும் உண்டு.

சய்து பன்னிற மணிகள் பதித்து அழகுறச் செய்த மாலையாகும். இதன் முகப்புச் சிறுத்தும் நடுப்பாகம் வரை பெருத்தும் நடுவில் வரிசையாக பெருமணிகளும் விளிம்பில் சிறிய மணிகளும் நடுவில் பதக்கமும் அதன் கீழே பொன்சதங்கைகளும் தொங்குமாறு அமையப்பட்டிருக்கும். இந்த அணி இன்றும் மதுரை மீனாட்சி அம்மன் இவ்வணியை அணிந்துக்கொண்டு மிகவும் அழகாகக் காட்சி அளிக்கும் வண்ணம் காணப்படுகின்றது.

பஞ்சசரி

பஞ்ச சரி ஐந்து வடங்களான ஒரு பொன் அணியாகும். இவ்வணி தெய்வங்களுக்குச் சிறப்பாக அணியப்படும் ஒரு அழகிய காதணியாக உள்ளன. மேலும் இது போன்று பல காதணி வகைகள் பற்றி சிறப்பாகக் கூறப்படுகின்றன.

முடிவுரை

காதணிகள் வகைகள் பற்றியும் அமைப்பு முறைகள் எவ்வாறெல்லாம் காதணிகள் செய்யலாம். குறைந்த தங்கத்தில்கூட காதணிகள் செய்ய முடியும் என்பதும் கண்களைக் கவரக் கூடியதும் முகங்களின் பொலிவான தோற்றத்திற்குக் காதணிகள் இன்றியமையாதது எனலாம்.

சுற்றுச்சூழல் கல்வியை கற்பிப்பதில் பல்லூடகத்தின் பங்கு

ச. சைமன், முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

முன்னுரை

இன்று கல்வி பயிலவரும் மாணவர்கள் சிலர் படித்து அறிவதை விட கேட்டலே சிறந்ததாக அமையும் என்று கருதுகின்றனர். சிலருக்குப் பார்த்தலே பொருந்தும் வேறு சிலருக்குக் கேட்டலும், பார்த்தலும் சேர்ந்து நிகழ வேண்டும். ஆகவே இதுபோன்ற வேறுபாடுகளும் ஏற்ப கற்க வழி அமைப்பது பல்வகை ஊடகங்களே. பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்பவும், கருத்தூட்டம் பரவலாகவும் தெளிவாகவும் குறைந்த செலவிலும் நிகழ வழிவகுப்பது 'கற்பித்தல் மூலங்களே'.

கற்பிக்கும் நிகழ்ச்சிகள் மாணவரது புலங்களைத் தூண்டி செயற்படுபவையாக இருப்பின் தெளிந்த அறிவை மாணவர் பெறவும் அதன் காரணமாக வகுப்பறை கருத்தூட்டம் நிகழ்ச்சி என்றால் மிகையாகாது. ஆசிரியர் செய்திகளைத் திணிப்பவராக இல்லாமல், சிறந்த கருத்தூட்டத்திற்கு வழியமைப்பவராக இருத்தல் வேண்டும். கற்பித்தல் பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தினால் கற்றலிலுள்ள தனியாள் வேறுபாடுகளுக்கு ஈடுகொடுத்து அனைத்து மாணவர்களும் திறம்பட கற்க வழிவகை செய்ய முடியும். தற்போது கல்விக் கூடங்களில் புத்தகங்கள் மட்டும் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு நூலகத்தில் மாணவர் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வரைபடங்கள், தேசப்படங்கள், ஒலிநாடாக்கள், ஒளிப்பேழைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கல்வித்திரைப்படங்கள் கணிப்பொறி மென்திட்டங்கள் ஆகியனவும் வாங்கப்பட்டு அவற்றை தனித்தனியாக வகைப்படுத்தி எண்குறியிட்டு வரிசைபடுத்தி அடுக்கி வைக்க வேண்டும். மாணவர்களுக்குத் தேவைப்படுபவற்றை எடுத்துக் கொள்ளவும் அவற்றை அவர்கள் தாமே இயக்கிக்கொள்ளவும் தகுந்த ஆலோசனைகளை வழங்கவும், கல்வி நுட்பவியலில் பயிற்சி பெற்ற ஆசிரியர் இதற்கெனத் தனியாக நியமிக்கப்படுதலும் அவசியமானதாகும்.

மனிதனின் அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மனிதர்களின் வாழ்க்கை முறை, இயற்கை வளங்களையே சார்ந்துள்ளது. மனித வள மேம்பாட்டில் இத்தகைய இயற்கை வளங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவரை எந்தவித பாதிப்பும் இல்லை. அவன் பெற்ற அனுபவ அறிவு, நாகரீகத்தின் அடிப்படையில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி, அதன் பயனாகக் கிடைக்கப்பெற்ற எண்ணற்ற அறிவியல் சாதனங்கள் மனித வாழ்க்கையை மிகவும் எளிமையாக்கியுள்ளது. மக்கள்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திட்டமிடாத மற்றும் தவறான உபயோகத்தினால் இயற்கை வளங்கள் குறைவதோடு மட்டுமில்லாமல் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது. மக்கள்தொகைப் பெருக்கம், மனித வாழ்க்கை முறை, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், மாசுபடுத்திகளை ஏற்படுத்தாமை போன்ற காரணங்களால் சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு மனிதர்களே முக்கிய காரணங்களாக இருக்கிறார்கள். இதனால் நீர், நிலம், காற்று, தீ மற்றும் வளி ஆகிய இயற்கையின்

அனைத்து அங்கங்களும் மாசடைகின்றன. மேலும் மனிதனின் சுயநலப்போக்கு புவியின் மீதுள்ள பிற உயிரினங்களையும் வெகுவாக பாதித்துவிடுகிறது.

பல்லூடகம்

பல்லூடகம் என்பது இரண்டிற்கு மேற்பட்ட ஊடகங்களைக் கணினியுடன் ஒருங்கிணைத்து ஒரு தகவலைப் பயனாளிகளுக்கு வழங்கும் அமைப்பு முறையே பல்லூடகம் ஆகும்.

பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவல் அளித்தல் என்பதன் விளக்கம்

கற்றலுக்கான தகவல்களை, வண்ணக்காட்சிகளாகவும் (பொருட்கள், மனிதர்கள், உருவங்கள் , நிகழ்வுகள், செய்முறைகள் போன்றவை இடம் பெறும்) காட்சிகளில் இடம் பெறுபவை இயற்கையில் அமைவதைப் போன்றே அசைவுகளுடன் கூடியதாகவும் , ஒவ்வொரு காட்சியிலும் தேவையான இடங்களில் பொருத்தமான ஒலிகளை (பேச்சுகள் உட்பட) இணைத்தும் கணினித் திரையில் தோன்றச் செய்தலையே தகவல் நுட்பவியலில் பல்லூடக வழி தகவலளித்தல் என்றழைக்கப்படுகிறது.

பல்வகை ஊடக வழி தகவல் அளித்தல் முறைகள்

சில பல்லூடகவழி தகவலளிப்பு முறைகளில், காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நேர்க்கோட்டு முறையில் நகரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இம்முறையில் காட்சிகளை முன்னோக்கிச் சென்றோ அல்லது பின்னோக்கிச் சென்றோ பார்க்க முடியும். ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் திட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு காட்சி அல்லது அக்காட்சியில் இடம்பெறும் பொருள் பற்றி மேலும் விரிவான தகவல்கள் இடம் பெற்றிருக்கும் வேறொரு கோப்புக்கு தாவிச் செல்ல முடியாது. அதாவது கற்பவர் தான் பயன்படுத்தும் திட்டத்தின் வழியேதான் செல்ல முடியும் மாறாக தான் விரும்புவனவற்றைக் கேட்டுப் பெற முடியாது. இங்கு புத்தகத்தைப் போன்றே பல்லூடகக் காட்சிகள் அடங்கிய தொகுப்பைப் பார்வையிட வேண்டியுள்ளது. ஆனால் கற்பவரோடு இடைவினை புரியும் பல்ஊடகவழி தகவல் அளிக்கும் திட்டத்தில் ஏதேனும் ஒரு காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே (உரைநடைப்பகுதி, உருவங்கள் போன்றவை) அதில் கூறப்பட்டுள்ள புதிய கருத்து அல்லது அதில் இடம்பெறும் உருவம் ஆகியவற்றைப் பற்றி மேலும் என்னென்ன தகவல்கள் (செய்திகள், படங்கள், ஒலிகள், வடிவம்) உள்ளன என்பதை அறிய அதன் மீது(Hot spot),Mouse கொண்டு "கிளிக்" செய்தால் நாம் அதனுடன் தொடர்புடைய வேறு ஒரு கோப்பை(File) பார்வையிட முடியும். ஆகவே நாம் அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வண்ணம் "புரோகிராமின்"(Programme) ஒரு கோப்பிலிருந்து தாவித்தாவி பல்வேறு கோப்புகளுக்குச் சென்று பார்வையிட முடியும். அதாவது நாம் காட்சிகளைப் பார்வையிட ஒரு சட்டத்திலிருந்து(Frame) அடுத்த சட்டத்திற்கு நேர்கோட்டில் செல்ல வேண்டும் என்ற நியதி இல்லாமல் பக்கவாட்டிலும் தாவிச் செல்ல முடியும்.

பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவலளித்தலை நடைமுறைப்படுத்த தேவையான கருவிகள்

1) கம்ப்யூட்டர்

2) டிஜிட்டல் கம்ப்யூட்டர் "அனலாக்" முறையில் மாற்றியமைக்கும் கருவிகள் ஆகியவற்றிற்கு இடையே பாலமாக அமையும் வன்கலங்கள்

3) பல்லூடகவழியில் தகவல்களைப் பகுத்து ஆராயவும், முறைப்படுத்தவும் தேவையான கம்ப்யூட்டர் வன்கலங்கள்.

4) பல்வேறு வகை தகவல்களை ஆய்வுசெய்து ஒருங்கிணைக்கும் மென்பொருட்கள்

பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவல் அளித்தலின் பயன்கள்

அனைத்துத் தகவல்களும் சிறந்த முறையில் வகைப்படுத்தப்பட்டு சேமித்து வைக்கப்படுகின்றன வேண்டும்போது தேவையானவற்றை மட்டும் விரைவாகப் பெற்றிட முடியும். இதைத் திட்டமிடுதல், விவரத் தொகுப்பு, கல்வியளித்தல், பொழுதுபோக்கு, தொழிற்சாலைகள், வியாபாரம் ஆகிய துறைகளில் திறன்பட பயன்படுத்த முடியும்.

பல்நோக்குடை ஊடகப் பெட்டகங்கள்

மாணவர்கள் தாமாகக் கற்க உதவும் வகையில் ஒரே தலைப்பைச் சார்ந்த கற்றல் பொருட்கள் வெவ்வேறு வகை ஊடக வடிவங்களில் தயாரிக்கப்பட்டு கையடக்கமாகவுள்ள பெட்டகங்களில் கிடைக்கின்றன. இவற்றில் அடங்குபவை பின்வருமாறு

- ❖ அச்சிடப்பட்ட சிறு கையேடு
- ❖ ஒளிஊடுருவும் விளக்கங்கள்
- ❖ நழுவங்களின் தொகுப்பு
- ❖ ஒலி நாடா
- ❖ ஒளிநாடா
- ❖ அச்சடிக்கப்பட்ட விளக்கப்படங்கள்
- ❖ படச்சுருள்கள்
- ❖ குறுவடிவத் திரைப்படங்கள்

இத்தகைய பெட்டகங்களைத் தயாரிப்போர் அப்பாடத்துறையில் வல்லுநர்களாகவும் கற்பித்தல் அனுபவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். ஒலி, ஒளிநாடாக்கள் சிறந்த ஆசிரியர்கள் அப்பாடத்தலைப்பை, கற்பித்தலைப் பதிவு செய்தவையாகும். தொலைநிலைக் கல்வியில் இத்தகைய பல்நோக்கு ஊடகங்களைப் பயன்படுத்துதல் அதிகரித்து வருகிறது.

சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் என்ற சொல்லின் நேரடியான பொருள் சுற்றுப்புறம் என்பதாகும். 1960 -க்கு முன்னால் சுற்றுச்சூழல் என்ற சொல் வெப்பம், ஒளி போன்ற இயற்பியக் காரணிகள் உள்ளிட்ட உயிரிகளின் சுற்றுப்புறத்தைக் குறிக்கப் பயன்பட்டது. 1960-பின் சுற்றுச்சூழல் என்ற சொல்லினை மறுவரையறை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. துரிதமான தொழில்மயமாக்கல், விவசாய முன்னேற்றம், சுற்றுச்சூழல் மாசு, மாசு உருவாக்கிய பிரச்சினைகள் மற்றும் சுற்றுச்சூழல் தரம் குறைக்கப்பட்டமை ஆகியன மறுவரையறை செய்யவேண்டிய தேவையை உருவாக்கிய காரணங்களாகும். சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் ஆகும்.

வளர்ந்து நிற்கும் மரங்கள், பச்சைப் பசேலெனத் தோன்றும் வயல்வெளிகள், பூத்துக் குலுங்கும் செடிகள், கொடிகள், பாய்ந்தோடும் அருவிகள், அலைமோதும் பரந்த கடல், உயர்ந்து நிற்கும் மலைகள், உயிர்வாழ உதவும் காற்று போன்றவை சுற்றுச்சூழல் அமைப்பில் அடங்கும். அதேபோல் நாம் வாழும் வீடு, நம் வீட்டிற்கு

அருகிலிருக்கும் வீடுகள், வீதி, பள்ளிகள், அலுவலகங்கள், கடைப்பகுதிகள், திரையரங்குகள், கோயில்கள், பேருந்து நிலையங்கள் இது போன்றயாவும் சுற்றுப்புறச்சூழலே. இயற்கைச் சூழ்நிலை அமைப்பில் பசுமையான தாவரங்களும், மரங்களும், விலங்கினங்களும், மற்ற உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. சுற்றுச்சூழல் மக்களின் வாழ்விற்கும், பொருளாதார சமூக வளர்ச்சிக்கும் உதவும் உயர்ந்த கருவி. மரம், செடி, கொடிகளும் மனிதரைப் போன்று மனிதனின் உணர்ச்சிகளுக்குப் பதில் உணர்ச்சியை வெளிப்படுத்துபவை என்று இரு அமெரிக்கர்கள் தங்களின் தாவரங்களின் இரகசிய வாழ்வு என்ற படைப்பில் குறிப்பிட்டுள்ளனர். சுற்றுச்சூழலை இயற்கைச் சார்ந்த சூழல் (வைரஸ், பாக்டீரியா, தாவரங்கள், விலங்குகள்) சமூகம் சார்ந்த சூழல் (மக்கள், பண்பாடு, அரசியல், பொருளாதார அமைப்பு நிலைகள்) என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

சுற்றுச்சூழல் என்ற வார்த்தை பொதுவாக ஒரு உயிரினம் வாழும் புறநிலைமைகளைக் குறிக்கிறது. உயிரினங்கள் அவற்றைச் சூழ்ந்துள்ள உயிர் காரணிகள் மற்றும் உயிரற்ற காரணிகளுக்கிடையே உள்ள ஒரு தொடர்பினையே சுற்றுச்சூழல் என்கிறோம்.

சுற்றுச்சூழல் பொருள்

❖ **எர்னஸ்ட் ஹெக்கல் (1869)** சூழ்நிலையியலை ஓர் உயிரிக்கும் அதனைச் சூழ்ந்துள்ள உயிருள்ள மற்றும் உயிரற்று காணப்படுகின்ற நேச மற்றும் விரோத உறவுகளை விளக்கும் அறிவியல் பிரிவு என விளக்குகிறார்.

❖ **கென்டே(1961)** என்பவர், சூழ்நிலையியல் என்பது விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் இடையே உள்ள உறவுகளையும் இவை சூழ்நிலையோடு கொண்டுள்ள உறவுகளையும் விளக்கும் அறிவியல் பிரிவு எனக் கூறுகின்றார்.

❖ **ஓடம்(1969)** என்பவர், சூழ்நிலையியல் உயிரினங்களுக்கும், சூழ்நிலைக்கும் இடையே உள்ள உறவுகளை விளக்குகின்றது எனக் கூறுகின்றார்.

❖ **பார்க் (1980)** குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச்சூழலாகும் எனக் கூறுகின்றார்.

சுற்றுச்சூழல் கல்வியின் முக்கியத்துவம் (Importance of Environmental Education)

புவி என்பது நீர், நிலம், காற்று. வானம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமைப்பு ஆகும். இவற்றில் ஏதேனும் ஒன்றில் மாற்றம் ஏற்பட்டாலும் அம்மாற்றம் ஏனைய அமைப்புகளின் சமநிலையைப் பாதிக்கும். இப்பொழுதும் மாறி வருகிறது. இவ்வாறு மாறிவரும் சுற்றுச்சூழல் மனிதனுக்கு மட்டுமின்றி பிற உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

நாகரீகம் தோன்றிய காலத்திற்கு முன்னரே மனிதன் சுற்றுச்சூழலில் காடுகளை அழித்தல் மற்றும் விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற செயல்களினால் குறுக்கிடத் தொடங்கினான். ஆனால் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட மக்கள்தொகைப் பெருக்கம், அறிவியல் மற்றும் தொழிற்புரட்சியினை உருவாக்கி அதன் மூலம் மனிதன் அளவற்ற தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். இத்தாக்கம் சுற்றுச்சூழலின் சமநிலையை முற்றிலும் நிலைகுலைய வைக்கும் என்பதை மனிதன் அறிய தவறிவிட்டான். பெருகி வரும் தொழிற்சாலை, அதிவேகப் போக்குவரத்துகள், நகரியப்பெருக்கம் ஆகியன சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன.

உலகில் நிகழும் பல்வேறு வகையான மாசுபாட்டிற்கு அடிப்படை ஆதாரம் மனிதனுடைய செயல்பாடே ஆகும். சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு முதல் காரணம் மனிதனின் சுயநலம்தான்.

மாசுபாட்டின் முக்கியத்துவத்தை அறிந்திருந்த அன்றைய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1972 ஜீன் 14 ஆம் நாள் சுவீடன் தலைநகர் ஸ்டாக்கோமில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பற்றிய ஐக்கிய தேசிய மாநாட்டில், இன்றைய மனித சமூகம் உயிரகளுக்கும், இயற்கைக்கும் இடையே துண்டிக்கப்படாத உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தினார். இம்மாநாட்டின் மூலம் பல்வேறு முக்கிய கருத்துகள் வலியுறுத்தப்பட்டன.

- கழிவுகளைச் சுற்றுச்சூழலில் வெளியேற்றுவதில் மனித வசிப்பிடங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் சிக்கல்களை ஆராய்ந்து தவிர்க்க வேண்டும்.
- நில மற்றும் நீர் மாசினைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- வாணிபம், தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை சுற்றுச்சூழலைப் பாதிக்காமல் பலப்படுத்த வேண்டும்.
- பெருங்கடல் மாசினைக் கட்டுப்படுத்தி கடல்வளங்களைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்.
- காட்டு விலங்குகள், எரிப்பொருள் வளம் ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும்.

ஒரு காலத்தில் தொழிற்சாலைகளை மட்டுமே சார்ந்ததாக இருந்த இரைச்சல் இன்று எதிலும் இரைச்சல் என்ற நிலைமைக்கு வந்துவிட்டது. பேரிரைச்சல் மனித உறுப்பு மண்டலத்தையே நிலைகுலைய வைத்துவிடுகிறது. காற்று மாசுபாடு ஆஸ்மா போன்ற இரைப்பு நோய்க்கு வழிவகுக்கிறது.

அனைத்துவகை மாசுபாட்டையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறமை இயற்கைக்கு இருந்த போதிலும் கதிரியக்க மாசுபாட்டை இயற்கையினால் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியாது. இம்மாசுபாடு உயிரினங்களை பாதிப்பதோடு மட்டுமில்லாமல் மரபு கோளாறுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

சுற்றுச்சூழல் பிரச்சனைகளினாலேயே பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. எனவே சுற்றுச்சூழல் சிக்கல்களைத் தீர்ப்பது பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து உற்பத்தியைப் பெருக்க முடியும். ஒருபுறம் காட்டை அழிக்காமலும், மறுபுறம் சமூகநலக் காடுகளை வளர்த்தும் மண்வளம், நீர்வளம் போன்றவற்றை காத்து உற்பத்தியினைப் பெருக்கலாம். ஒரு நாட்டில் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாடு உலக நாடுகள் எல்லாவற்றையும் பாதிக்கிறது என்பதை உணர வேண்டும். அதனால் ஒவ்வொரு நாடும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் கல்வி அவசியமாகும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் சுற்றுச்சூழல் பற்றிய கல்வியைச் சிறந்த முறையில் கற்பித்தால் மாணவர்களுக்கு விழிப்புணர்வையும் அதற்கு தேவையான அறிவு மற்றும் அறநெறிகளை ஏற்படுத்தி நாட்டை மாசுபாட்டிலிருந்து பாதுகாத்து, வளத்தை முறையாகப் பயன்படுத்தி நாட்டை மேம்படுத்தலாம்.

சுற்றுச்சூழல் கல்வியின் தேவை (Need of Environmental Education)

- இயற்கைச் சூழல் பற்றிய உண்மை அறிவை மாணவர்களுக்கு வளர்க்க துணைபுரிகிறது. குறிப்பாக இயற்கை அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் இயற்கைச் சூழலில் மனிதனுடைய தாக்கம் குறித்த அறிவையும் பெற உதவுகிறது.

- சுற்றுச்சூழல் மதிப்புகள் பற்றிய அறிவை மாணவர்களுக்கு வளர்க்க.

- இயற்கையோடு இயைந்து வாழும் பழக்கமான குறைவான கழிவுகளை வெளியேற்றுதல் மற்றும் கழிவுப்பொருட்களை மறுசுழற்சி செய்வதை வளர்க்கவும்,

- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான களப்பணி மற்றும் நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்த சுற்றுச்சூழல் கல்வி தேவைப்படுகிறது.

- இயற்கையுடனான புனிதமான மற்றும் உளவியல் ரீதியிலான உறவுகளை மாணவர்களுக்கு வளர்க்க சுற்றுச்சூழல் கல்வி தேவைப்படுகிறது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு (Environmental Awareness)

பெருகி வரும் மக்கள் வெள்ளத்தின் கோரப் பிடியில் நாட்டின் இயற்கை வளங்கள் நாளுக்கு நாள் சுருங்கி நலிவுறும் நிலையில் எஞ்சியிருக்கும் நலன்களை காத்திட இயற்கை வளக்கல்வியும், சூழல் விழிப்புணர்வும் நமக்கு இன்றியமையாதவை. ஜெர்மன் நாட்டு விலங்கியல் நிபுணர் எர்னஸ்ட் ஹெக்கல் என்பவர் சுற்றுச்சூழல் பற்றிய கருத்தினை முதலில் உலகிற்கு 1866 இல் எடுத்துணர்த்தினார். ஐக்கிய நாடுகள் நிறுவனம் 1972 இல் ஸ்டாக்ஹோமில் சுற்றுச்சூழல் பற்றிய கருத்தரங்கை நடத்தியதுதான் உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், சுற்றுச்சூழல் விழிப்புணர்விற்கும் அடிக்கல் ஆகும்.

முடிவுரை

நாம் தொழில்நுட்ப யுகத்தில் வாழுகிறோம். நமது அன்றாட வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடு தவிர்க்க முடியாததால். அனைவரும் கணினி குறித்த அடிப்படை பயன்பாடுகளை அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். கணினியைப் பாடமாகக் கற்பது கணினி அறிவியலாகும். ஆனால் அனைத்துப் பாடங்களின் கற்றல் - கற்பித்தலில் கணினியைக் கருவியாக அல்லது ஊடகமாக பயன்படுத்துவதே கல்வியில் கணினி ஆகும். ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கணினிக் கல்வியின் தேவை முக்கியத்துவம் நாம் அனைவரும் அறிந்ததே. அதற்கென முறையான பயிற்சிபெற்ற கணினிக் கல்வி ஆசிரியர்கள் தேவை. அவர்கள் கணினி குறித்த அடிப்படை அறிவு விழிப்புணர்வு பயன்பாடுகள் ஆகியவற்றைக் கற்பித்தலில் நவீன உத்திகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களையும் திறமைகளையும் பெற்றிருக்க வேண்டும். அனைத்துப் பாடங்களின் கற்பித்தல் - கற்றலில் தேவைக்கேற்ப உரிய இடத்தில் கணினித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிப்பதே கல்வியில் கணினி கற்பித்தலின் நோக்கமாகும்.

பயன்பட்ட நூல்கள்

1. கல்வியியல் புதுமைகள் (2000) பேராசிரியர் கி.நாகராஜன் & திரு.தேவசகாயம் செல்வக்குமார், சென்னை, இராம் பதிப்பகத்தார்.
2. S.Sampath, A.Panneer selvam S.Santhanam, (1981) Introduction to New Delhi, Educational Technology – Publishers.
3. R.N.Patel (1984) Educational Evaluation : Theory and practice Mumbai Himalaya Publishing House.
4. J.C.Aggarwal (1996) Principles methods and Techniques of teaching, New Delhi, Vikas Publishing House Pvt.Ltd.
5. Archana Tomar. (2011). Environmental education. Delhi: Kalpaz Publications.
6. Goleman, Daniel. (2012). Eco literate. United States: Jossey – Bass.
7. Joshi, P.C & Namita Joshi. (2012). A text book of environmental science, New Delhi: A.P.H. Publishers.
8. Palmer, J.A. (1998). Environmental education in the 21st century: Theory, practice, progress and promise. Routledge.
9. Patil, C.S. & Prabhu M. Biradar. (2013). Environmental education. New Delhi: A.P.H. Publishers.

தஞ்சை மராத்தியர் கால தமிழ் ஆவணங்களில் காணப்படும் மகளிரின் நிலை

முனைவர் க. தனலெட்சுமி, உதவிப் பேராசிரியர், வரலாறு, கு.நா. அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த), தஞ்சாவூர் - 613 007

முன்னுரை

தஞ்சை மராத்தியர் கால மகளிரின் நிலையினைப் பற்றி அறிவதற்கு பல சான்றுகளான இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மற்றும் மோடி ஆவணங்கள் மட்டுமின்றி தமிழ் ஆவணங்களிலும் மகளிரின் நிலைப்பற்றி அறிய பல சான்றுகள் புதைந்துள்ளன என்பதனை இக்கட்டுரை ஆராய்கின்றது.

போகப் பொருளாகப் புறந்தள்ளப்பட்ட பெண்கள் பொது மகளிராக விளங்கிய நிலையையும், விலைமாதராக மட்டுமல்லாமல் ஆடு, மாடுகளை விற்பனை செய்வது போல விற்பனைப் பொருளாக பெண்கள் விளங்கிய நிலையையும் அறிந்துகொள்ள மராத்தியர் கால ஆவணங்கள் தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. அன்றையக் கால சூழலில் இழிந்த நிலையிலும், மிகவும் இரங்கத்தக்க நிலையிலும் இருந்த பெண்களின் அவலநிலையை ஆராய்ந்துரைப்பது சமூக வரலாற்றுக்கு வளம் சேர்ப்பதாய் அமையும்.

தமிழ் ஆவணங்கள் மூலம் அறியப்படும் மராத்தியர் காலத்துச் சமூக, பொருளாதார அரசியல் கூறுகளுள் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் பெண்களின் நிலையைப் பின்வருமாறு பிரித்து ஆராய்வது பொருத்தமாகும்.

1. *இளமைத் திருமணம்*
2. *பெண்களை விற்றல்*
3. *அரண்மனை*
   - *i. வேலை*
   - *ii. ஓய்வூதியம்*
   - *iii. பிற உதவிகள்*
4. *தேவரடியாள்*

இளமைத் திருமணம்

அக்காலச் சமுதாயத்தில் பெண்கள் பூப்படைவதற்கு முன்பே திருமணம் செய்யும்முறை இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இம்முறையானது மராத்தியர் காலத்தில் அதிகளவில் நடைமுறையில் இருந்துள்ளதை மோடி ஆவணங்கள் மற்றும் தமிழ் ஆவணங்கள் உணர்த்துகின்றன. பெண்ணின் திருமண வயது ஐந்திலிருந்து பன்னிரண்டாக இருந்தது.

ஒரு பெண்ணின் தந்தை பெண்ணிற்கு ஐந்து வயதானது முதற்கொண்டே அவளுக்கு நல்ல கணவனை அமைத்துத் தர வேண்டி இறைவனை வணங்கி வேண்டுவதை,

"அஞ்சு வயது முதற்கொண்டு நித்தம்
அல்ந்த மலரெடுத்து
பஞ்ச நதீசருக் கருச்சனை செய்திரு
பாதந்தனைப் பணிந்து

கெஞ்சிக் கெஞ்சி நல்ல புருடன் தாருமென்று
கேட்டீர்”

என்று *‘காவேரி கல்யாணம்’*[1] எனும் நூல் கூறுகிறது.

அடுத்து ‘மோடி ஆவணச் சான்றின்’ மூலமும் பெண்கள் பூப்படைவதற்கு முன் திருமணம் செய்வதையும், ஆண்கள் பரிசம் போட்டுத் திருமணம் செய்வதையும் அறியமுடிகின்றது[2].

இளமைத் திருமணத்திற்குச் சான்றாக அமைந்துள்ள ஒரு தமிழ் ஆவணம் பின்வருமாறு:

> *“எனக்கு 16 வயதுள்ள பெண்ணும், 13 வயதுள்ள ஆணும் உள்ளனர். அதுக்கு எங்கள் மாற்க்கட்படிக்கி 8 வயதுக்குள்ளாக கலியாணம் செய்ய வேணும். என்னுடைய பெண் பிள்ளைக்கு பரிஷம் போட்டு 5 வருஷம் ஆகுது. இந்த அஞ்சு வருடத்தில் பரிசம் போட்டவன் கல்யாணம் பண்ணத் தொந்திரவு செய்கிற படியினாலே ஆண்பிள்ளைக்கு சுன்னத்து கல்யாணம் பண்ணவும் கையில்லாத ஏழையான படியினாலே என்னுடைய பிள்ளைக்கு கலியாணஞ் செய்து வைத்து கன்னியாதானஞ் செய்த பலனுண்டாகும் என்று தர்சீ சேக்கு அமீன்”*[3].

இந்த ஆவணத்தின் மூலம் இசுலாம் சமயத்தைச் சார்ந்த பெண்ணுக்கு 8 வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டதையும், சாதி, மத வேறுபாடின்றி அரண்மனையார் இவர்களுக்கு உதவினர் என்பதையும் அறியமுடிகின்றது.

பெண்களை விற்றல்

சமுதாயத்தில் அடிமை முறையும், பெண்களின் நிலையும் தாழ்ந்தே காணப்படுகின்றன. சோழ, நாயக்கர் காலத்தைவிட மராத்தியர் காலத்தில் ‘பெண்விற்பனை’ முறை நடைமுறையில் இருந்ததை அறியமுடிகின்றது.

இரண்டாம் சரபோசி மன்னர் மற்றும் கடைசி சிவாசி மன்னருடைய (1798-1855) காலங்களில் வீட்டு வேலைகள் செய்வதற்கெனப் பெண்கள் விற்கப் பெற்றனர். அரண்மனைப் பணிகளுக்காகவும், கோயில் பணிகளுக்காகவும் விற்கப்பட்டதுமுண்டு. 10 அல்லது 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளை அரண்மனையில் வாங்கி, அங்கே பணிபுரிவதற்காகச் சாதிமத வேறுபாடுமின்றி அனைவரும் தங்கள் குழந்தைகளை விற்றனர்.

பெண் விற்பனை முறைகள் மோடி ஆணங்களில் மட்டுமின்றித் தமிழ் ஆவணங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. சில பெண்கள் பணத்திற்காகவும் விற்கப்பட்டுள்ளனர். சில பெண்கள் காணிக்கையாகவும் விற்கப்பட்டுள்ளதைத் தமிழ் ஆவணங்கள் எடுத்தியம்புகின்றன. இதற்குச் சான்றாக[4],

> *“கோட்டைக்குள் தாஸ்தான் மால்[5] சந்தில் சித்திவிநாயக கோயில் தேவரடியாள் அமிர்தம் மகள் விசாலாட்சி என்பவள் 20 கலம் கிறையத்திற்கு[6] வாங்கிய 14 வயது கோமளவள்ளி என்கிற பெண்ணை அரண்மனைக்கு நஜர்[7] கொடுத்து விட்டதற்காக அரண்மனையார் சந்தோஷப்பட்டு ரொக்கம் ரூ.350 விசாலாட்சிக்கு கொடுக்கப்பட்டதால் இனி தனக்கும் அப்பெண்ணுக்கும் யாதொரு வியாச்சியமும்[8] இல்லை”*

என்று அவ்வாவணத்தில் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதை வைத்துப் பார்க்கும்பொழுது கோயில்களுக்கென்று வேண்டிச் சில பொருள்களைக் காணிக்கையிடுவது போல மராத்தியர் காலத்தில் பெண்களைக் காணிக்கைப் பொருளாக்கி அரண்மனையில் விட்டுவிடுவது போன்ற செய்திகளை அறியமுடிகின்றது. இவ்வகையான சான்றுகளைப் பார்க்கும்பொழுது பெண்ணின் நிலை தெரிய வருகின்றது. 1785-இல் திருமுல்லை வாசலைச் சேர்ந்த செவத்தையா தன் சகோதரனுடைய பெண்ணை 6 சக்கரத்திற்கு (பணம்) விற்பனைச் செய்துள்ளார்[9].

1845-ஆம் ஆண்டுக்குரிய ஓர் ஆவணத்தில் காவேரி வயது 10 என்ற பெண்ணை 6 சக்கரத்திற்கு அரண்மனைக்கு விற்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது[10].

அரண்மனை

மராத்தியர் காலத்தில் அரசாங்கமாக அரண்மனை செயல்பட்டது. மக்கள் தங்கள் குறைகளைக் களைய அரண்மனையாரிடம் பல மனுக்களைக் கொடுத்து உதவிகளைப் பெற்றனர். பெண்களும் தங்களின் தேவைகளுக்காக அரண்மனையின் உதவியை நாடினர்.

கணவரை இழந்த பெண்கள் வேலை, ஓய்வூதியம் மற்றும் பிற உதவிகளையும் வேண்டி அரண்மனைக்கு விண்ணப்பித்துள்ளமையைத் தமிழ் ஆவணங்களின் மூலம் அறியமுடிகின்றது.

வேலை

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரண்மனையில் இருந்து வேலை பார்த்து, இறந்த பின்னர் அந்த வேலை இறந்தவரின் மனைவி, மகன், தத்து மகன், தம்பி ஆகிய இவர்களில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர்களைத் தவிர வேறு எவருக்கும் அவ்வேலை கொடுக்கப்படவில்லை. இம்முறை இன்றையளவில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியலாம்.

1838-ஆம் ஆண்டிற்குரிய ஓர் ஆவணக் குறிப்பின் மூலம் காவேரி என்ற பெண்ணும் (கருந்திட்டாங்குடி) அவருடைய கணவராகிய வெங்கடாசல நாயக்கனின் வேலையை அவர் இறந்ததும், அவரின் வேலையைக் கேட்டு ஒரு விண்ணப்பமும் அரண்மனையாரிடம் கொடுக்கப்பட்டது தெரிய வருகின்றது[11].

ஓய்வூதியம்

அரசு வேலையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அந்த வேலையாளுக்கு மாதாமாதம் கொடுக்கப்படுகிற தொகையே ஓய்வூதியம் ஆகும். மராத்தியர் காலத்தில் ஓய்வூதியம் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்பதைப் பல்வேறு ஆவணங்களின் மூலம் அறியமுடிகின்றது[12].

கணவர் இறந்த பின்னர் அரண்மனையில் வேலை செய்ததற்குப் பணமும், பின்னர் வரவேண்டிய ஓய்வூதியப் பணமும் வரவில்லை என்று அவ்விண்ணப்பத்தில் காணப்படுகின்றது[13]. அதேபோன்று 1829-ஆம் ஆண்டிற்குரிய ஆவணத்திலும் கணவரின் ஓய்வூதியம் கேட்கப்பட்டுள்ளதைத் தமிழ் ஆவணச் சான்றுவழி அறியமுடிகின்றது[14].

> *"தஞ்சாவூர் கல்யாண மகால் - 6 நெம்பர் லெஷ்மியம்மாள் கொடுத்த ரசீது இதுவாகும். லெஷ்மியம்மாள் தனக்கு 1833-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு சேரவேண்டிய பென்ஷன் ரூ.24 ழி (இருபத்தி நாலரை)யும் தன் அதிகார பத்திரம் பெற்ற நாராயணசாமி நாயக்கன் மூலமாய் கவர்மெண்டு ஏஜண்டாபிசில் தான் பெற்றுக் கொண்டபடியால் அதற்கு இதுவே (இவ்விண்ணப்பம்) ரசீதாய் காட்டிக் கொள்ள வேண்டியது"*

என்று காணப்படும் இவ்வாவணத்தில் ஓய்வூதியம் பெறப்பட்டதற்கான சான்று உள்ளது[15].

இச்செய்தியிலிருந்து அரசரின் காமக்கிழத்தியரும் ஓய்வூதியம் பெற்றுள்ளனர் என்பதைத் தமிழ் ஆவணங்கள் மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

தேவரடியார்கள்

மோடி ஆவணங்களில் *'தேவரடியார்கள்'* பற்றிய குறிப்புகள் அதிகமாகக் காணப்பட்டாலும் தமிழ் ஆவணங்களிலும் ஒருசில குறிப்புகள் காணப்படுகின்றன. *'தேவதாசிகள்'* அல்லது *'தேவரடியார்கள்'* என்று இவர்கள் அழைக்கப்பட்டனர். தேவரடியார்கள் என்பதற்கு *'கடவுளின் அடிமை'* என்று பொருளாகும். கோயில்களுக்குச் சென்று பக்தி பாடல்களைப் பாடி ஆடுவதும், இறைவனுக்குத் தொண்டு செய்வதும் தேவதாசிகளின் பணிகளாகும்.

"கோயில்களுக்குப் பொட்டு கட்டுதல்", பழக்கமும் ஏற்பட்டது. இதற்குச் சான்றாக, "1842-இல் யமுனாம்பாள்புரம் சந்தானராமசுவாமி கோவிலில் பொட்டுக் கட்டிக் கொண்ட தாசி அன்னம் வயது 10[16]" என்ற ஆவணக் குறிப்பால் அறியமுடிகின்றது.

இவர்கள் சமயப்பற்று மிக்கவர்களாக இருந்தனர். 'தேவதாசிகள்' கோயிலுக்கு விலைக்கு வாங்கி விடுபட்டனர் என்பதைச் சான்றுவழி அறியமுடிகின்றது17. இவ்வாறாகத் தேவதாசிகள் பல சலுகைகளைப் பெற்றாலும், பல இன்னல்களையும் பெற்றனர் என்பதைப் பல ஆவணங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றன. அதிலும் சில பெண்கள் சிறுவயதிலேயே கோயிலுக்கென்று பொட்டுக் கட்டிக் கொள்ளும் வழக்கத்தினால் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர். சமுதாயத்தில் இப்பெண்கள் ஒதுங்கியே வாழ வேண்டிய நிலையில் இருந்துள்ளனர் என்பது தெரியவருகின்றது.

முடிவுரை

இதுவரையில் பெண்களின் நிலையினை ஆவணச் சான்றுகளின் மூலம் பெறப்பட்ட செய்தியிலிருந்து மராத்தியர் காலத்தில், மிகக் குறைந்த வயதில் திருமணம் நடைபெற்றதை அறியமுடிகின்றது. அதுமட்டுமின்றி பெண் விற்பனை முறைப்பற்றி பல உண்மையானச் செய்தியினைச் சான்றுகள்வழி நம்மால் அறியமுடிகின்றது. பெண்கள் அரண்மனையில் வேலை வேண்டியும், ஓய்வூதியம் கேட்டும் பல சான்றுகளைப் பார்க்கும்போது அக்காலத்தில் உள்ள பெண்களின் தைரியம், துணிச்சல் பற்றி அறியமுடிகின்றது.

இதுபோன்று இன்னும் பெண்களைப் பற்றிய பல உண்மைகளை அறிந்துகொள்ள இன்னும் பல ஆவணங்கள் ஆய்வுக்குரியதாக இருப்பதை உணரமுடிகின்றது. இத்தமிழ் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டால் மராத்தியர் கால

பெண்களின் நிலை பற்றிய பல வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர முடியும் என்பது திண்ணம்.

சான்றெண் விளக்கம்

1. காவேரி கல்யாணம் - ப. 237
2. மோடி ஆவணக் குறிப்பு – 6 – 46
3. மூட்டை/ஆவண எண் 3/52, தமிழ்ப் பல்கலைக்கழகம்
4. 1841- சூன், மூட்டை/ஆவண எண் 1/1
5. தாஸ்தான் மால் - நெற்களஞ்சியம்
6. கிறையம் - விலைக்கு வாங்குதல்
7. நஜர் - பெரியவர்களுக்குக் கொடுக்கும் காணிக்கை
8. வியாச்சியம் - வழக்கு
9. R. Vivekananda Gopal, 'The Position of Women during the Marathas of Thanjavur', Sansadhak, p.8.
10. மூட்டை/ஆவண எண்: 7/42
11. மூட்டை/ஆவண எண்: 3/28
12. மூட்டை/ஆவண எண்: 3/79
13. 1853, மூட்டை/ஆவண எண்: 5/69
14. மூட்டை/ஆவண் எண்: 6/18
15. 1863, மூட்டை/ஆவண எண்: 6/11
16. மோடி ஆவணக் குறிப்பு 2-41
17. மூட்டை/ஆவண எண்: 8/142

பெண்ணின் பெருமையே மண்ணின் பெருமை

கா. திவ்யா, ஆய்வியல் நிறைஞர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முன்னுரை

பெண்ணின் பெருமை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளது. தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆணுக்கு சமமாகவும், ஆண்களை விட அதிகமாகவும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். சர்வதேச மகளிர் தினம் கொண்டாப்படும் இந்த நேரத்தில் பெண்களின் பெருமையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு பலரும் ஆற்றிய பங்கினையும் அறிந்து கொள்வோம்.

பெண் அரசிகள்

பெண்களின் பெருமையை பல நுற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம். புராணக் காலத்து காரைக்காலம்மையார், சாவித்திரி, சந்திரமதி, மண்டோதரி, சீதா போன்ற பெண்ணரசிகளை இன்றும் கற்றோரும், மற்றோரும் போற்றுகின்றனர்.

காப்பிய நாயகிகள்

சங்க காலம் தழுவிய காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணியத்திற்கு பெருமையைத் தேடி தந்துள்ளனர். சிலம்பில் கண்ணகி, மாதவி போன்றவர்களின் வரலாறுகள் பல பண்புகளை உயர்த்தி நிற்கின்றன. கண்ணகி தெய்வமாகியது பெண் மக்களுக்கே உயர்வு தருகின்றது. மாதவி, மணிமேகலையின் துறவு, மேன்மை போன்றவற்றை மறக்க முடியாது.

பெண்பாற் புலவர்கள்

சங்க காலத்திலே பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். தலைமைப் பண்பு மிக்கவராகவும் சரித்திர சாதனையும் புரிந்துள்ளனர். ஔவையார், பாரிமகளிர், குறமகள், இளவெயினி, வெண்ணிக்குயத்தியார், நன்முல்லையார், வெண்பூதியார், காக்கைபாடினியார் போன்றவர்களும் இன்னும் பலரும் காட்டப்படுகின்றார்கள். மன்னர்களுடன் இப்புலவர்களின் தொடர்பு, அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தது, தூது போன காட்சிகளும் உண்டு. ஆதி சங்கருடன் வாதம் செய்த பெண் பற்றியும் வரலாறு உண்டு.

இலக்கியத்தில் பெண்ணின் பெருமை

பக்தியைப் பற்றி பேசும் இலக்கியத்தில் பெரியபுராணம் முதன்மையானது. 28 பெண்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. இருப்பத்தியொரு நாயன்மாரது மனைவியர், தாயார் நால்வர், மகள்மார் இருவர், உடன் பிறப்பு ஒருவர், காரைக்காலம்மையார், இசைஞானியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரும் நாயன்மார்களுக்கு இணையான பேறு பெற்றனர். "சிவனுக்காக பிள்ளைக்கறி சமைத்த" சிறுத்தொண்டர் மனைவியை பற்றி சேக்கிழார் புகழ்ந்துள்ளார். புராணக் கதைகள் கற்பனை என்று சாதித்து வாதிப்பவரும் உண்டு.

வீர மங்கைகள்

சங்க காலத்தில் வீரத்தின் விளை நிலமாகவும் பெண்கள் விளங்கினர். போர்க்களத்தில் தைரியத்துடன் போராடிய வீர மங்கையர்களையும் படித்திருக்கிறோம். ஆங்கிலேய ஆட்சியில் ஜான்சிராணியை நம்மால் மறக்க முடியாது இவரை ஆணின் வெற்றிக்குப் பின் பெண் இருக்கிறாள் என்பதை நிருபித்துள்ளது.

பாரதியும் பெண்ணியமும்

பெண்ணின் பெருமையை உலகிற்கு பறைசாற்றியதில் பாரதிக்கு பெரும் பங்குண்டு. பெண்ணின் விடுதலைக்காக பாடினார். வேதநாயகம் பிள்ளை சுகுண சுந்தரியின் குழந்தை திருமணத்தை கண்டித்தார் பெண் கல்வி வளர்ந்தது, சமுதாயம் உயர்ந்தது, தொழில் பகுதி உயர்ந்தது, மகளிரும் தொழில் வாய்ப்பை பெற்றனர். மேலும் இவர்களை தொடந்து பின் வந்தவர்களும் பெண்ணின் பெருமை பேசினர், மகளிருக்கென சிறந்த ஊடகங்களாக விளங்கினார்கள். இதனை,

"பெண்மையே தெய்வீகக் காட்சியடா"

என்று பெண்மையைப் போற்றும் மகாகவி பாரதியாரை விடுதலைக் கவிஞரா நாம் அழைக்கின்றோம். காரணம் இவர் நாட்டு விடுதலைக்காக மட்டுமல்லாது, பெண் விடுதலைக்காகவும் பாடுபட்டவர். பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த முதல் கவிஞர். அந்நியரிடம் அடிமைப்பட்ட காலத்தில் அனைவரும் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட நேரத்தில் பெண் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தார் பாரதியார்.

மும்மூர்த்திகள் என்று நாம் போற்றுகின்றவருள் ஒருவரான பிரம்மா, சரஸ்வதியைத் தம் நாவில் வைத்தார். சிவனோ தம் உடலின் பாதியை உமக்களித்தான். திருமாலோ, திருமகளை இதயத்தில் வைத்தான் இப்படிக் கடவுளர் எல்லாரும் பெண்ணை மதித்துப் போற்றினார்கள்.

பெண்ணின் பெருமை

"மாதராய் இவ்வுலகில் பிறந்திட
மாதவம் செய்திட வேண்டும்."

பாரதியின் வாக்கு பொய்மையில்லாதது.

"பெண்ணுக்கு நிகர்
பெண்ணே அன்றி
இவ்வுலகில் எவருமிலர்!
தாய்மையின் பிறப்பிடமே பெண் தான்
தயவின் தாயகம் பெண் தான்
நீரின்றி அமையாது உலகு"

ஆம்!

"நீரின்றி நவரசங்களையம் கொண்டவள்
பெண் மட்டும் தான்"

நீரின்றி அமையாது உலகு!

"பெண் தெய்வங்களை வழிபடும்
நம் பண்பாடு
வெண் நிலவில் வரும் தேய்மானம் என

கண் இன்றி பல கயவர்கள் கத்தினாலும்
விண் உலகமே வியக்கும்படி
தன் முனைப்புடனே முன்னேறும்
பெண் இன்றி அமையாது உலகு!"

"ஆயிரம் சூரியனின் வெளிச்சம்
கொண்டவள் பெண்"

"இவ்வுலகே வியக்கும்படி எடுத்துரைக்கும்
ஒரு எடுத்துக்காட்டு தான்...."

பெண் இன்றி அமையாது உலகு!
பெண் இன்றி அமையாது உலகு!
பெண் இன்றி அமையாது உலகு!

முடிவுரை

எழுத்தாளர்கள், இசையரசிகள், சொற்பொழிவாளர்கள், அரசியல் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் எனப் பல்வேறு துறைகளிலும் கொடிகட்டிப் பறப்பது நாட்டிற்கும், வீட்டிற்கும் பெருமையே, பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்து சாதிப்பதோடு, அன்றாடம் கிடைத்த ஊடகங்கள் மூலமும் போதித்து பெண்ணுரிமையை பேணிக்காக்க, பாரதி பெண்மையினைப் போற்றி மதிக்கின்றார். பெண்ணை அடிமைப்படுத்துவது என்பது நம்மை நாமே அடிமைப்படுத்துவதற்குச் சமம் என்கிறார். "நாட்டை ஆட்சி செய்ய ஒரு பெண்தான் வேண்டும்" என்பது எவராலும் மறுக்க முடியாது உண்மை.

சூழலிய அறம்

முனைவர் த. தெய்வீகன், இணைப் பேராசிரியர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

மரங்கள், செடிகொடிகள், பாலூட்டிகள், ஊர்வன, பறப்பன, நீர் -நிலவாழ்விகள், பூச்சிகள் எனப் பாக்டீரியா முதல் பல்லுயிர்களும் வாழத் தகுதியானது இப்புவிக்கோளம். இயற்கை அல்லது சூழல் என்பது உலகில் உள்ள உயிர்களுக்கும் உயிரற்றப் பொருள்களுக்கும் உள்ள உறவைக் குறிப்பதாகவே விரிந்த அளவில் நோக்கப்படுகிறது. இதனையொட்டியே பல்லுயிரியம் அல்லது பல்லுயிர்ப்பெருக்கம் (biodiversity) என்ற கருத்தாடலும் இக்காலச் சூழலியல் அறிஞர்களால் விளக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் மாந்த இன மேம்பாட்டிற்கென ஆய்வாளர்கள் மேற்கொண்டுவரும் கண்டுபிடிப்புகளும் அதனைத் தொடர்ந்த செயல்பாடுகளும் பல்லுயிர்ப் பெருக்கச் சமன்பாட்டில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியுள்ளன. இயற்கையில் காணப்படும் மனிதன் உட்பட அனைத்துக் கூறுகளும் ஒன்றுடன் ஒன்று இயைந்தும் சார்ந்தும் வாழ்ந்து வந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இம்மாற்றத்தின் விளைவுகள் கடுமையானவையாக உள்ளன.

தமிழ் இலக்கியங்களில் வீரம், காதல், கொடை, போர்வன்மை போன்ற மனித இனச் செயல்பாடுகளுடன் இயற்கைப் பற்றிய குறிப்புகளையும் பெருமளவில் காணமுடிகிறது. ஐவகை நிலப்பாகுபாட்டையும் அந்நிலவாழ்மக்களுக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களையும் வகுத்துக்கொண்டு நிலஞ்சார்ந்த விலங்குகளோடும், மரங்களோடும், புள்ளினங்களோடும் நேசம் கொண்டு வாழ்ந்துவந்த தமிழர்களின் இயற்கைச் சார்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் கடந்த சில நூற்றாண்டுகளில் உலக அளவில் உருவான பல்துறைசார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் வீச்சுகள் தமிழக மக்களிடத்திலும் காணக்கூடியதாக உள்ளது.

உடல் உழைப்பின் தேவை குறைந்து எந்திரங்களின் வழியாக ஏறத்தாழ பெரும்பாலான செயல்பாடுகள் செய்து முடிக்கப்படுகின்றன. இதன் இன்னொரு பரிணாமமாக, மண்ணுக்கும் மாந்த இனத்திற்கும் இருந்த தொப்புள்க்கொடி உறவு சிறிதுசிறிதாக அறுப்பட்டுக் கொண்டு வருவதையே அண்மைக்காலமாக பருவநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் உணர்த்துகின்றன.

ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பு இவற்றை ஆதிகால மனிதன் தொடக்கநிலையில் கண்டு பயந்து, பின்னர் அவற்றைத் தொழுது இயற்கையின் கூறுகளோடு இயைந்து வாழ முற்பட்டான். இயற்கையோடு மேற்கொள்ளப்படும் முரண், எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதைப் பண்டைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தமையைப் பின்வரும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

“நீர்மிகின், சிறையும் இல்லை; தீமிகின்,
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை;
வளிமிகின் வலியும் இல்லை; ஒளிமிக்கு
அவற்று ஓர் அன்ன சினப்போர் வழுதி

'தண் தமிழ் பொது' எனப் பொறாஅன், போர் எதிர்ந்து"
- (புறம். 51:1-5)

இயற்கையைப் பேணுதலின் இன்றியமையாமையை இதன்வழி அறிய முடிகிறது. பேணுதல் அல்லது இணங்கி இருத்தல் (பராமரித்தல்) என்பதை சூழலிய அறமாகவே கருத முடியும். காட்டாக, நிலத்திலிருந்து விளைச்சலை எடுக்கும்போது அதற்கீடாக எருக்களைக் கொடுக்கிறோம். இவ்வாறு ஒன்றைக் கொள்ளும்போது வேறொன்றை அதற்கீடாகக் கொடுப்பதும் சமநிலையைச் சீராக்கும். அவ்வாறு இல்லையெனில் நிலத்தில் சத்துக் குறைபாடு ஏற்பட்டு விளைச்சலும் குறையும். காலப்போக்கில் விளைநிலமே பயிர் செய்வதற்குப் பயனற்றுப்போகவும் நேரிடும். இவ்வாறு இயற்கையமைப்பில் கொள்வினையும் கொடுப்பினையும் ஓர் அறமாகவே பேணப்படுதலைக் காணமுடிகிறது.

திருவள்ளுவர் 'பல்லுயிர் ஓம்புதலின்' இன்றியமையாமைக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" - (குறள். 322)

இக்கால இயற்கை ஆர்வலர்களும் சுற்றுச்சூழல் சிந்தனைவாதிகளும் குறிப்பிடும் பல்லுயிரியம் பேணுதலை இதனோடு தொடர்புபடுத்தலாம். பல்லுயிர் ஓம்புதலை இயற்கையைப் (சூழலைப்) பேணுதலாகவும், உயிரினங்களைப் பேணுதலாகவும் கொள்ளலாம்.

நீர், நிலம், காற்று போன்ற இயற்கை வளங்களைச் சரியாக பேணுவதால் உயிரினங்களின் வாழ்வும் வளமாக அமைய முடியும். இயற்கை வளங்களில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் மனிதன் உட்பட அனைத்து உயிரிகளிலும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. சான்றாக, உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையானவை நிலமும் நீரும் எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" - (புறம். 18:18-23)

நீரில் கொட்டப்படும் கழிவுகளாலும் நிலத்தில் கொட்டப்படும் நச்சுக் கழிவுப் பொருள்களாலும் 'உணவென'க் குறிக்கப்படும் நிலமும் நீரும் பெருமளவில் மாசடைந்துள்ளது. அண்மைக் காலத்தில் நிலத்திலிருந்து கிடைக்கும் வேளாண் விளைபொருள்களிலும், நிலத்தடி நீரிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் நச்சுப்பொருள்கள் கலந்திருந்தமை அறியப்பட்டுள்ளது. நில-நீர் மாசால் அதனைச் சார்ந்து வாழும் தாவரங்களும் பிற உயிரினங்களும் கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன் அவ்வினங்களில் சில அழிந்தொழியும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

நீரைப் போலவே நிலத்தின்கண் காணப்படும் மலைகளும் காடுகளும் மனித வாழ்வில் இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன. மழைப்பொழிவின்றேல் உயிர்கள் செழித்து வாழ முடியாது என்பதை வள்ளுவர் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். மழைநீரை உயிர்நீர் எனப் பொருள்படும்படி அதனை அமிழ்தம் எனச் சுட்டுகிறார். மேலும் நீரில்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றும் எடுத்துரைக்கிறார்.

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று - (குறள். 11)

நீர்இன்று அமையாது உலகெனின், யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு - (குறள். 20)

வான்மழை குடிநீருக்கும் வேளாண்மைக்கும் இன்றியமையாதது. உலகில் கடல்நீர் பெருமளவில் எங்கும் சூழ்ந்திருந்தாலும் அந்நீர் உயிர்ச்சூழலியலுக்குப் பயன்படாது. எனவே மழைநீரே முதன்மையான ஆதாரமாகும். இத்தகைய மழைப்பொழிவில் மலைகளின் பங்கும் காடுகளின் பங்கும் குறிப்பிடத்தக்கவை. வனவளமும் அவற்றுள் காணப்படும் விலங்கின வளமும் சுற்றுச்சூழல் ஒருங்கமைவில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இத்தகைய வளங்களைப் பேணுதலை சிறப்பான அறமாகவே பண்டைத் தமிழர்கள் போற்றியிருந்தனர். அரண் போன்றமைந்த காடுகளை ‘அழனி நிழற்காடு’ என வள்ளுவர் விளிக்கிறார். அடர்த்தியான தாவர மற்றும் விலங்கினத் தொகுதிகளையுடைய காடுகளைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் மிகையளவில் காணப்படுகிறது. சான்றாக, பின்வரும் பாடல் பல்லுயிர்ப் பெருக்க அமைப்பைக் காட்டும் பாடலாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

“அடி ஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை ஏறி
கடுவிசைக் கவணையில் கல்கைவிடுதலின்
இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா,
தேன் செய் இறாஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் மைந்துணர் உழக்கி,
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியா,
பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்”
- (கலித். 41:8-16)

இதேபோல் இப்புவியில் அனைத்து உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று சார்ந்து வாழ்வதும் ஓர் அறமாகும். இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவர் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என வலியுறுத்துகிறார்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” - (குறள். 972)

உயிரினங்களின் வாழ்வில் சார்புத்தன்மை மிக இன்றியமையாத சூழலிய அறமாகக் கருதப்படுகிறது. தாவர இனங்களிலும், விலங்கினங்களிலும் இத்தகைய சார்ந்தியங்கும் இணக்கத்தைக் காணமுடிகிறது. காட்டாக, நிலகிரிமலையில் காணப்படும் இருவாசிப் பறவைகள் (horn bills) அழிந்தால் அது தொடர்பான 10 வகை மரங்கள் அழிந்துவிடக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஏனெனில் இருவாசிப் பறவைகள்

உட்கொண்டு வெளியேற்றும் இம்மரத்தின் விதைகளே உயிர்ப்புத் தரமிக்கதாக இருக்கின்றன. இவ்வகையிலான மரங்கள் யாவும் இருவாசிப் பறவைகள் மூலமே காடெங்கும் பரவியுள்ளன.

இதேபோல் காடுகளில் புலிகளின் எண்ணிக்கைச் சரியாக இருந்தால் அதன் இரை விலங்குகளான மான், காட்டுமாடு போன்றவையும் சரியான விகிதத்தில் இருக்கும். அவ்வாறில்லாமல் புலிகளின் எண்ணிக்கைக் குறைய நேரும்போது இரையாகக்கூடிய விலங்குகளின் எண்ணிக்கை மிகுந்து அவை உண்ணக்கூடிய இலை, தழை, புல் போன்றவற்றிற்கு பெருந்தட்டுப்பாடு ஏற்படும். உணவுச் சங்கிலியோடுத் தொடர்புடைய இத்தகைய இயற்கைச் சமநிலையைப் பேணுவது இயற்கையைப் பேணுதலில் ஓர் அறமாகும்.

தமிழ் இலக்கியங்களிலும் உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்தியங்கும் குறிப்புகளைக் காணமுடிகிறது. சான்றாக, வேங்கை மரத்தோடு மயிலும் மாமரத்தோடு குயிலும் பனை மரத்தோடு அன்றில் பறவையும், யா மரத்தோடு பருந்தும் பிணைந்து இருந்தமையை பின்வரும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

"கோங்கும் கொய்குழை உற்றன; குயிலும்
தேம்பாய் மாஅத்து ஓங்கு சினை விளிக்கும்"
- (அகம். 341:2-3)

"பராரைப் பெண்ணைச் சேக்கும் கூர்வாய்
ஒருதனி அன்றில் உயவுக்குரல் கடைஇய" *- (அகம். 305)*

"வருந்தினை – வாழி, என் நெஞ்சே! -பருந்திருந்து
உயாவிளி பயிற்றும், யா உயர் நனந்தலை" *- (அகம். 19)*

இதே போன்றதொரு சார்புத்தன்மையை பயிரினங்களிலும் காணமுடிகிறது. பாதிரி மரத்தைப் பற்றிப் படரும் அதிரல் எனும் கொடி பற்றி பின்வரும் பாடல் சுட்டுகிறது.

"புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ
நுண்கொடி அதிரலொடு நுணங்கு அரல் வரிப்ப"
- (அகம். 237:1-2)

இதன்வழி பாதிரி மரம் சார்பிடமாகவும் அதிரல் கொடி சார்புயிரியாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பழந்தமிழகத்தில் சுற்றுச்சூழல் பேணுதலை முதன்மையான கடமையாகக் கொண்டு இயற்கையின் பல்வேறு கூறுகளோடு இணங்கி வாழ்ந்துள்ளனர். இத்தகைய ஒத்திசைவு பல்லுயிர் ஓம்புதலில் முதன்மையான அறமாக விளங்கியுள்ளமையை அறிய முடிகிறது.

நற்றிணையில் கண் பேசும் மொழிகள்

இரா.தேவி, முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

•

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல - என்பார் திருவள்ளுவர்.

வாய்ச்சொல்லை விட கண்ணால் பேசும் பேச்சுக்கு வலிமை அதிகம் போலும். ஆதலால்தான் கண்கள் இரண்டும் பேசிக்கொள்ளும் போது வாய்ச்சொல்லே தேவையில்லை என்கிறார் வள்ளுவர். வார்த்தைகள் ஆயிரமானாலும், கோபமானாலும், தாபமானாலும் எல்லாவற்றையும் பிரதிபலிக்கும் அழகிய உறுப்பு கண் என்றால் அதுமிகையல்ல. உலகில் தோன்றிய அத்துணை உயிர்கட்கும் கண் உண்டெனினும், பிறரால் வருணிக்கும் அளவுக்கு அமையப் பெற்றவை பெண்களின் கண்களேயாகும். அந்த வகையில் ஒரு பெண்ணின் கண், நற்றிணையில் எவ்வாறெல்லாம் அழகுற அல்லது அழுகையுற பயின்று வந்துள்ளது என்பதை விளக்கிப்பார்க்க முற்படுவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

துயிலாத கண்கள்

காதலுக்கு கண் இல்லை என்பர். இந்த காதல் வந்துவிட்டால் கண்ணுறக்கம் காணாது போய்விடும்.

இமைப்பின் கரப்பார்க்கு அறிவல்: அனைத்திற்கே
எதிலர் என்னமிவ் வூர் - *(குறள்.1129)*

என்பார் திருவள்ளுவர். கண்ணிமைக்குமாயின் அவர் ஒளிக்குமது யான் அறிவேன். அவ்வொளித்தற்கு அவரை நமக்கு எதிலர் என்று சொல்லும் இவ்வூர் அதற்காக இமைக்கிலன் என துயில் மறுக்கும் மெய்ப்பாட்டை விளக்குவதாக அமைந்தது இத்திருக்குறள். சங்கப் பெண்ணொருத்தி இரவில் தூங்காமல் கண்விழித்து இருக்கிறாள். அதைக் கண்ட அவள் தாய் என் மகளே! தூங்கவில்லையோ? என்று வினவுகிறாள். அதற்கு தலைவியோ, எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்து,

சொல் வெளிப்படாமை மெல்ல என் நெஞ்சில்
படுமழை பொழிந்த பாறை மருங்கில்
சிரல்வாய் உற்ற தளவின் பரல் அவல்
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ? என்றிசின் யானே - *(நற்.61)*

என்று தனக்குள்ளேயே தலைவனின் நினைவுகளைத் தாங்கிய கண்களுக்கு உறக்கம் வருமோ? என்று கூறிக் கொள்கிறாள். காதல் வரின் கண்ணுறக்கும் கெடும் என்புதை வெளிப்படுத்துவதே அப்பாடலாகும்.

கண்கள் மறப்பதில்லை

எந்தவொரு செயலையும் கண்கள் அவ்வளவு எளிதில் மறப்பதில்லை. ஆதலால்தான் கல்வியில் கூட கற்றலில் கேட்டல் நன்று, கேட்டலில் பார்த்தல் நன்று என்று பார்வையின் பதிவுத் திறனை வரையறுப்பர். சங்கப் பெண்ணொருத்தி தான் கண்ட காட்சியின் மறக்க முடியாத நிலையை எடுத்தியம்புகிறாள். கோங்கு மலர்கள் மலர்ந்து காடெல்லாம் மணம் வீச, கரடுமுரடான வழியில் மறவர் மோதலுக்குத் தயாராய் உள்ளனர். கூர்மையான வேலையுடைய மறவருடன் அஞ்சாது போரிட்டு வென்றாய், அப்போது எம் தமையன்மார் எங்களைத் தேடிப் பின்தொடர்ந்தனர்.

அதனைக் கண்ட நீ எங்களை அப்படியே விட்டு விட்டு அவ்வடர்ந்த காட்டிடை ஓடி ஒளிந்தாய் அவ்வாறான காடு என் கண்களில் இன்றும் நிற்கிறது. நீயோ, பிரிவு மேற்கொள்கிறாய் அவ்வச்சம் தரும் காட்டில் எப்படிச் செல்வாய் எனக் கேட்பதாக

அன்றைய அணைய ஆகி, இன்றும் எம்
கண் உள போலச் சுழலும் மாதோ
புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் நினையத் தோன்றி
. . . .
. . . . . எரிஇடை உறுதர ஒளித்த காடே - (நற்.48)

என்னும் பாடல் அமைகின்றது.

மையுண்ட கண்களின் மருட்சி

கண்ணுக்கு மையழகு என்பர். இம்மைத் தீட்டும் மரபு பழந்தமிழரிடத்து இருந்து வந்துள்ளது. மையெழுதிய கண்களாலேயே கண்கள் ஒளிபெறுகின்றன. மருண்டு நோக்கும் கண்கள் மானுக்கு உண்டு. மனித இனத்தில் பெண்ணுக்கும் உள்ளதென சங்கப் பாடல்கள் விளக்குகின்றன. மருண்டு நோக்கும் பார்வையும் கூட பெண்களுக்கு ஒருவித அழகாகத்தான் இருக்கும். அந்த வகையில் தன் மகள் மாற்றானோடு உடன் போயினாள் என்கிற செய்தி கேட்டு அன்னை வருத்தமுற்றாள். அயல் பெண்டீர் யாவரும் ஆறுதல் கூறுகின்றனர். அதற்கு அத்தாய், என்னால் எப்படி அடக்கிக்கொள்ள இயலும், அழகிய சாயலை உடைய என் மகளின் இமைகள் மையுண்ட கண்ணின் உள்ளிருந்தபாவை வெளியில் நடைபயின்று நடந்ததைப் போன்றவள், அவள் விளையாடிய இடம், நீல மணி போன்ற பூவையுடைய நொச்சி வேலியும், திண்ணையும் ஆகும். இவற்றைப் பார்க்கு போதெல்லாம் என் உள்ளம் அழுகிறது. என்று சுரநெறிச் சென்ற மகளின் துயர் நினைத்து வாடுகிறாள் அத்தாய்.

உள்ளின் உள்ளம் வேமே உண்கண்
மணிவாழ் பாவை நடைகற்று நன்னவென்
அணியியற் குறுமகள் ஆடிய
மணியேர் நொச்சியும் தெற்றியும் கண்டே - (நற்.184)

என்பதே அப்பாடல் அடிகளாகும்.

கயல் கண்

கயல் என்பது ஒருவகை மீனின் பெயர். கண்ணினை ஒத்த அம்மீன் கண்ணுக்கு உவமையாக சங்கப்பாடல்களில் பயின்று வந்துள்ளது. தேன் போல் இனிய சொல்லை உடையவளும் மீனை ஒத்த மையுண்ட கண்களை உடையவளுமானவள் தலைவி என்கிற பதிவு

தாமே ஒப்புரவு அறியின் தேமொழிக்
கயலேர் உண்கண் குறுமகட்கு
அயலோர் ஆக லென்று எம்மொடு படலே - (நற்.220)

என்கிற நிலையில் காணக் கிடைக்கின்றது.

கண்ணால் பேசிய தோழி

சங்கப் பாடலில் தோழியொருத்தி தன் தலைவியை நோக்கிக் கண்ணால் சைகை செய்து பேசிய செய்தி காணப்படுகிறது. அன்புடைய தோழியே கடற்கரையில் எம்மை ஒருவர் சந்தித்தார். வந்தவர் தம் குறையை என்னிடம் கூறினார். அதனைப் பொறுக்காத நான் நீ உன் வாயினால் சொல்வதை நான் தலைவியிடம் கூற

மாட்டேன் என்கிறாள். உன் குறையை நீயே சொல் என்றேன். அதற்கு அவர் மயங்கிக், குதிரையென நினைத்து பனைமடலேறி வந்தார். இது காவல் நிறைந்த மதில் என எண்ணிப் பேய்த் தேரினைச் சென்று மோதிப் பார்த்து நீ இருக்கும் சேரியைச் சார வருகின்றார். அவருக்கு அருள வேண்டும் என எண்ணி என் கண்ணால் குறிப்புத் தோன்ற தலைசாய்த்துக் காட்டியும் ஒளிவளையில் அணிந்த தலைவி அறிந்துக் கொள்ளவில்லை என்கிறார்.

மாவென மதித்து மடலூர்ந் தாங்கு
மதிலென மதித்து வெண்தேர் ஏறி
என்வாய் நின்மொழி மாட்டேன் நின்வயின்
சேரி சேரா வருவோர்க் கென்றும்
அருளல்வேண்டும் அன்புடை யோய்! என
கண்ணினி தாகக் கோட்டியும் தேரலள் - *(நற்.342)*

என்பதே அப்பாடலாகும்.

பிரிவால் வாடிய கண்கள்

பெரும்பான்மைப் பாடல்கள், பிரிவால் வாடிய தலைவியின் கண்ணீரை வெளிபடுத்தும் பாடல்களாகவே அமைந்துள்ளன. வேலின் விளங்கும் இலையை ஒழுங்குப்பட மாசு போகத் துடைத்தார் தலைவர். கேடயத்திற்கு மயிற்பீலிச் சூட்டி மணியை அறிவித்தார். முன் போலன்றி என்னைப் பலபடப் பாராட்டிக் கூடுதலாக அன்பு செய்தார். ஆதலின் யான் மிக மிக வருந்தினேன், ஓவியர் எழுதுவதற்குத் தகுந்த அழகிய என் மையுண்ட கண்ணில் பாவை தோன்றாதபடி வெள்ளம் போல் கண்ணீர் பெருகியது. அவ்வெள்ளத்தில் நீந்தியுழலும் நாள் இப்போது வந்துள்ளது. இனி எவ்வாறு இத்துயரைத் தாங்குவேன்? எனப் புலம்புவதாக,

பரந்துபடு கூர் எரி கானம் நைப்ப
. . . . *எழுது எழில் உண்கண் பாவை*
அழிதரு வெள்ளம் நீந்தும் நாளே - *(நற்.177)*

என்ற பாடல் அமைகின்றது.

இவ்வாறாக மையுண்ட மகளிரின் கண்கள், மானின் மிரட்சி, மீனின் அமைப்பு, மழையன்ன கண்ணீர், பசலையுற்ற கண், காதல் ததும்பும் கண், ஏக்கமுற்ற கண் என பல நிலைகளில் உவமைப்படுத்தப்பட்டு, வாய்ச்சொல் அல்லாமல் கண்கள் பேசும் வார்த்தைகளை விளக்குவதாய் இவ்வாய்வுக் கட்டுரை அமையப்பெற்றது.

துணை நின்றவை

1. நற்றிணை - மூலமும் உரையும் அ.ப.பாலையன்
2. திருக்குறள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேவரடியார்கள் - ஓர் வரலாற்று பார்வை (18, 19 ஆம் நூற்றாண்டு)

ச.தேன்மொழி, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-5.

முன்னுரை

கோயில்களில் கோயிற் பணிகளைச் செய்ய மகளிர் நியமிக்கப் பெற்றிருந்தனர். சிலர் சுவாமி உலாப் போகுங்காலங்களில் நாட்டியம் ஆடுதலும் உண்டு. நல்ல இசைவாய்ப்பு உடையவர்கள் ஆடலுடன் பாடுதலும் உண்டு. இவர்கள் இறைவன் தம்மை ஆட்கொண்டதாக எண்ணி வழிபாடு செய்து வந்தார்கள். ஆகவே தளிப்பெண்டுகள் எனப் பெயர்பெற்று கோயிற் பணிவிடை செய்து வந்தமையோடு இசை, நாடகம், நாட்டியம் ஆகியவற்றை வளர்த்தனர்.

தலைக்கோல் பட்டம்

சிறந்த தளிப்பெண்டுகள் இசை, நாடகம், நாட்டியத்தில் "தலக்கோல்" பட்டம் பெற்றனர். அத்தகைய தளிப்பெண்டுகள் 360 பேர் தஞ்சைப் பெரியகோயிலில் நியமிக்கப் பெற்றிருந்தனர் என்று முதலாம் இராசராச சோழனின் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு விவரிக்கிறது.[1]

இவ்வாறாக கோயில்களில் இருந்தவர்கள் பொது மகளிர் என்றோ விலை மகளிர் என்றோ கருதவில்லை. இவர்கள் மணவாழ்க்கையை விரும்பினால் கோயில் பணியைத் துறந்து மண வாழ்க்கையை மேற்கொள்வதும் உண்டு.[2]

பிற்காலத்தில் பெண்கள்நிலை

கோயில்களில் ஆடு மாடுகளைக் காணிக்கையாகப் படைத்தலைப் போலப் பெண்களைக் காணிக்கையாக்குவதையும் வழக்கமாக்கி கொண்டார்கள். தேவடியார்கள் இசை, நடனம், நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். ஆடவர்கள் நெறியற்ற போக்கின் காரணமாய்க் காலப்போக்கில் அவர்தம் காமவேட்கைக்கு இரையான பெண்குலம் அவர்களாலேயே கேவலமாகச் சமூகத்தில் ஒதுக்கியும் வைக்கப்பட்டிருந்தது.

பெண்களை கேவலமாகக் குறிக்கும் இந்த சொற்கள் 'தேவடியாள்', 'கூத்தி' என்பன. 'தேவனுக்கு அடியவள்' என்பதே முதற்சொல்லின் பொருள். 'நடனமாது' என்பதே இரண்டாவது சொல்லின் பொருள். இந்த இரண்டு நிலைகளில் வாழ்வைத் தொடங்கிய பெண்களின் முடிவு என்னவாயிற்று என்பது இச்சொற்கள்வழி அறிந்துகொள்ள முடிகிறது.[3]

மராட்டியர் காலத்தில் தேவரடியார்கள்

தஞ்சை மராட்டியர் காலத்துக் கோயில்களில் பலர் பொட்டுக் கட்டிக்கொண்டனர் என்றும், அன்னோர் தேவதாசிகள் எனப் பெயர் பெற்றனர் என்று பின்வரும் செய்திகள்வழி அறியலாம்.

1819 தேவஸ்தானம் முக்தம்பாள்புரம் காசி விசுவநாதசுவாமி கோயில் தாசி ஹீரா கோவிலில் பொட்டுக்கட்டிக் கொள்வதற்கு வழக்கம்போல் சத்திரம்

ஐவேஜில் கொடுக்கிறது[4] என்ற ஆணை இதற்குச் சான்று பகரும். மேலும் ஒரு பெண் கோயிலில் பொட்டுக் கட்டிக் கொள்வதற்குக் கோயிலிருந்து ஒரு தொகை கொடுக்கப் பெறுவாள் என்றும் அறியலாம் மற்றும் அவளுக்கு மாத ஊதியம் உண்டு.

பெண்கள் திருமணம் ஆவதற்குள்ளாகவே சிறுவயதினராக இருக்கும் போதே பொட்டுக் கட்டுவர். இது, 1842 எழுனாம்ராபுரம் சந்தான ராமசுவாமி கோயிலில் பொட்டுக் கட்டிக்கொண்ட அன்னம் தாசி வயது 10 – மாதம் 1க்கு நெல் கலம் 1; தினமும் சாதம் பட்டை 1½[5] என்ற கூற்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு கோயிலிருந்து தாசி வேறொரு கோயிலுக்குப் பொட்டுக் கட்டிக்கொள்ள அனுமதி தருவதும் உண்டு. காமாட்சியம்மன் கோயில் தாசிகள் குளவாய் (வயது 12) கம்பாலயம் (வயது 10) ஆகிய இருவரும் தஞ்சைப் பெரியகோயிலில் பொட்டுக் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.[6] இது 1882இல் நடைப்பெற்றது.

கோயிலுக்குப் பொட்டுக் கட்டிக்கொள்ளச் சர்க்கார் அல்லது கோயிலார் அனுமதி தேவை. இஃது ஓர் அலுவல் ஆகையால் அனுமதி தேவைப்பட்டது போலும், என்பதை கீழ்க்கண்ட கூற்றுகள்வழி அறியலாம். கோட்டையில் எல்லையம்மன் கோயில் தெருவில் பெரியகோயில் நாட்டியப் பெண் ஒருத்தியிருந்தாள். அவளுக்குக் கிருஷ்ணா என்ற ஒரே பெண் இருந்தாள். அப்பெண்ணைக் கோயிலுக்குப் பொட்டுக்கட்ட இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். கோயிலில் உள்ளவர் காலதாமதம் செய்தனர். அதனால் அவள் அரசனிடம் முறையிட்டாள். கோயிலில் இல்லாமற் போனாலும் அரசாங்கத்தில் வேறு எந்தத் துறையிலாவது பொட்டுக்கட்ட வேண்டும் என்று வேண்டினாள். இதனால் தேவதாசிகளைக் கோவிலில் மட்டும் அன்றிப்பிற அரசாங்கத் துறைகளிலும் பொட்டுக்கட்டி அழைத்துக் கொள்வதுண்டு என்பது தெரிகிறது.[7]

1843 சரபேசந்திர ராசபட்டிணம் தாசி வீரலஷ்மி இறந்தாள். அவட்குப் பதிலாக நீலாவின் பெண் லஷ்மி (வயது 15) சேர்த்துக்கொள்ளப்பட்டாள்[8] என்ற குறிப்புகள் மூலம் கோயிலில் பணிவிடைக்குத் தடை நேராவண்ணம் ஒரு தேவதாசி போனதும் உடனே வேறொருவரை நியமிப்பர் என்பதை அறியலாம்.

சில தேவதாசிகள் சிலரால் துன்புறுத்தப்பட்ட செய்திகளும் பின் அவர்கள் அரசின் ஆதரவைத் தேடி அலைந்தனர் என்பதை இச்செய்திவழி அறியமுடிகிறது. 'கோட்டைக்குள் மேலவீதி கொங்கணேசுவர சுவாமி கோயிலுக்கு அடுத்த சந்திலிருக்கும் ராவ் சாயபு அவர்கள் என் வீட்டுக்கு வரத்துப் போக்காயிருந்தார். இப்படியிருக்க ஷயார் நாளடைவில் நடக்கப்பட்ட நடவடிக்கை எனக்குச் சம்மதம் இல்லாததினால் நான் வரவேண்டாம் என்று சொன்னதைப் பற்றி ஷராவ் சாகேபு என்பவர் நான் கோவிலுக்கு வரும்போது அடித்துத் தொந்தரவு செய்ததனைப் பற்றி அமீனா அவர்களிடத்துச் சொல்லிக் கொண்டதற்கு அமீனா அவர்கள் சேவகனை என்கூட அனுப்புவித்ததின் பேரில் அப்பால் என்கூட சேவகனும் இருக்கும்போது ராவ் சாகேபு கற்களால் அடித்துத் தொந்தரவு செய்தார் ....(17.02.1846).[9]

பெண்களை விலைக்கு வாங்கித் தாசிகளாக ஆக்கிய தோடன்றிச் சிலரை வேலைக்காரிகளாகவும் ஆக்கியுள்ளனர். இங்ஙனம் விலைக்கு வாங்கப் பெற்றவர்

அடிமைகள் போல் - அடிமைகளாகவே இருந்து தம்மை விலைக்கு வாங்கியவரிடத்தில் ஆயுள் முழுவதும் வேலை செய்து மடிந்தனர்.[10]

ஆங்கிலேயர் காலத்தில் தேவடியார்கள்

வெள்ளையரும் இவ்அடிமை வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது, 'சென்னையிலிருந்து லாட்பிகட் 16 பெண்களைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார்' என்ற குறிப்பும், குழந்தைகளாக இருக்கும்பொழுதே விலைக்கு வாங்கிவிடுவார் (1776), ஹுஜுர் குழந்தையை வாங்கினதற்குப் பரங்கிப்பேட்டை வராகன் 8 என்ற குறிப்பு[11] இதற்கு ஆதரவாக உள்ளது.

கல்யாணம் ஆன பெண்களையும் விலைக்கு வாங்கியதாக ஓர் ஆவணம் கூறுகிறது. இது 1842 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 10 ஆம் நாள் சென்னைக் கவர்னர் லார்ட் எல்.ஃபின்ஸ்டன் என்பவரிடத்தில் கொடுத்த 'டிராது' ஆகும்.[12]

சித்தூர் மாவட்டம் வேலூர் கோட்டையில் இருந்தவன் சோலையா. இவன் மகன் கும்பகோணம் சபாபதியா பிள்ளை. இவன் கும்பகோணத்திலிருந்தபோது ஏறத்தாழ 1831இல் திருவையாற்றுக்கு வந்தான். அங்குப் பெரிய நாயக்கொத்தன் என்பவன் கள்ளச் சாதியைச் சேர்ந்தவன் வேளாளன் என்று கூறிக்கொண்டு, தன் மகள் மீனாட்சி என்பவளைச் சபாபதியாபிள்ளைக்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறினான். சபாபதியா பிள்ளை 21¼ ரூபா பரிசம் கொடுத்து ரூ.100 வரையில் செலவு செய்து கல்யாணம் செய்து கொண்டான். இரண்டாண்டுகள் மாமனார் வீட்டிலேயே இருந்தான். பின்னர் வேலூருக்கு வேலைதேடிச் சென்றான். செல்லுங்கால் தன் மனைவியை உடன் அனுப்புமாறு சொன்னான். அப்பொழுது அந்த மீனாட்சிக்கு வயது ஏழு. ஆகவே அவள் பெரியவள் ஆனபின்பு அனுப்புவதாகப் பெண்ணின் தந்தை கூறினான். சில ஆண்டுகள் கழிந்தன. திருவையாற்றிலிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. அப்போது கண்டிய ராஜா அவர்களின் தாய் தஞ்சைக்கு வந்தார். அந்தச் சவாரியில் சபாபதியாபிள்ளை வந்தான்; திருவையாற்றுக்குத் தன் மனைவியை 1842 ஜுலை மாதத்தில் பார்க்கச் சென்றான்; அவள் தஞ்சையில் அரண்மனைக்கு விற்கப்பட்டாள் என்றும், ஆனந்தவல்லி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டாள் என்றும் சொல்லப் பெற்றான். ரெஸிடிடண்டு N.W.கிஸ்டர்ஸிலி துரையினிடத்தில் 'பிராது' கொடுத்தான். துரை அப்பெண்ணை விடுதலை செய்யாமல் கும்பினிக்குப் பிராது செய்துகொள்ளச் சொன்னார். அதன்படி சென்னைக் கவர்னரிடம் 10.08.1842இல் பிராது கொடுத்தான்.

30.08.1942இல் அரசாங்கத்தார் இதில் தலையிடுவதற்கு இல்லை என்று பதில் வந்தது.[13] இச்செய்தியினின்று திருமணம் செய்தவராய் இருந்தபோதிலும் 'மைனர்' பெண் ஆகையால் அந்தப் பெண்ணைத் தந்தையானவன் விற்றுவிட்டான். அரசும் தடை செய்யவில்லை என்பது பெறப்படும்.

முஸ்லீம்களும் சர்க்காருக்குத் தம் பெண் குழந்தையை விற்றமைக்குப் பின்வருவது சான்றாகும். "இப்ராம் ஸாதான் வளர்ந்துவந்த துலுக்கப் பெண் ஹமீன்ஷா வயது 6 சர்க்காரிலே கிரயம் சக் 6" வீட்டில் பெற்றோர் இல்லாத நேரத்தில் பெண்களைப் பிடித்துக்கொண்டு போய் அரண்மனைக்கு விற்றதாகவும் ஓராவணத் தகவல் உண்டு.[14] இங்ஙனம் செய்தமை அரண்மனை மாதரசிகளுக்குப் பணிவிடை அல்லது வேலைகள் செய்தற்காகவேயாம் என்று ஊகித்தறியலாம்.[15] 'புதிய கல்யாண மகாலுக்கு வாங்கிய பெண்களில் 25 பேர்களை அவர்களிடம் இருந்த தஸ்தாவேஜிகளை வாங்கி ஆஸாமிக்கு 3 வாங்கி வெளியே விட்டார்'[16] என்ற குறிப்பு, அங்ஙனம்

விலைக்கு வாங்கப்பெற்ற பெண்களை மீண்டும் விடுதலை செய்தார்கள் என்பதற்குச் சான்றாகும்.

பெண்களை அடைமானம் வாங்கிப் பின் விற்கும் வியாபாரமும் நடைபெற்று வந்ததாகத் தோன்றுகிறது. "புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் சிலம்பாயி; இவருக்கு 9 வயது மகள் ரங்காயி இவர்களைத் தாசி விசாலாட்சி என்பாள் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். சிலம்பாயிக்கு 3½ ரூபாய்க்கு ஒரு சேலை எடுத்துக்கொடுத்துப் பிள்ளையைத் தன்னிடம் இருக்கச்செய்து, ரூ.3½ கொடுத்துவிட்டுப் பிள்ளையை அழைத்துச் செல்லலாம்" என்றாள். சின்னாட்டின்னர்ச் சிலம்பாயி ரூ.3½ கொடுத்துவிட்டுத் தன் மகளை அனுப்புமாறு கேட்டாள். இதற்கிடையில் தாசி விசாலாட்சி, ரங்காயி என்ற அந்தப் பெண்ணைச் சர்க்காருக்கு 400 ரூபாய்க்கு விற்றுவிட்டாள். ஆகவே சிலம்பாயி ரெஸிடெண்டிடம் மனுச்செய்து கொண்டாள்.[17] இதனால் பெண்களை நிலங்கள் ஒற்றி வைத்துப் பணம் பெறுவது போன்ற செயலுக்கு ஒப்பாக உள்ளது.

முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை தேவதாசி முறை நாடெங்கும் பரவியிருந்தது. பரத்தமைத் தொழிலும் பெண்களைப் புற்றுநோயாகப் பீடித்திருந்தது. ஆங்கிலேயர்கள் வகையினாலும், சமுதாயச் சீர்த்திருத்தச் சிந்தனையாளர்களாலும், தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. முத்துலெட்சுமி ரெட்டியின் முயற்சியால், 'தேவதாசி ஒழிப்புச்சட்டம்' நிறைவேறவும் செய்தது. தேவதாசி இனம் என்ற ஒன்று இன்று மறைந்தும் வருகிறது. ஆனால் பரத்தமை ஒழியாமல் தழைத்து வருகிறது.

அடிக்குறிப்புகள்

1. South Indian Inscriptions, Vol.II.
2. கே.எம்.வேங்கடராமையா, **தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.321.
3. சக்திபெருமாள், **பெண்**, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை 1993, பக்.55-56.
4. சரஸ்வதி மகாலில் உள்ள மோடி தமிழாக்கச் சுவடிகளில் 9 ஆவது சுவடியில் 13 பக்கத்தில் உள்ளது.
5. மேற்படி., 2-41.
6. மேற்படி., 6-19.
7. மேற்படி., 22-24.
8. மேற்படி., 4-6.
9. த.ப.க. கையெழுத்துப் பிரதி எண் 6இல் ப.402, 403.
10. கே.எம்.வேங்கடராமையா, மு.கா.நூ., ப.325.
11. த.ப.க. கையெழுத்துப் பிரதி எண் 6இல் ப.141.
12. மேற்ப்டி., 2-383 முதல் 389 முடிய.
13. கே.எம்.வேங்கடராமையா, மு.கா.நூ., பக்.327-328.
14. மேற்படி., 6-376.
15. மேற்படி., 5-229.
16. மேற்படி., 1-200.
17. கே.எம்.வேங்கடராமையா, மு.கா.நூ., ப.326.

சங்க இலக்கியத்தில் நீர் தாவரங்கள்

முனைவர் ந. நாகராஜன், தலைவர், தொல்லறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர் - 613 010

முன்னுரை

சங்க இலக்கியம், தமிழரின் மொழி, இலக்கியம், இசை, நாடகம், கலை, மருத்துவம், வேளாண்மை, வானியல் திறன், நிலவியல், சோதிடவியல், தொழில் நுட்பவியல், மண்ணியல் சமயம், பண்பாடு, வாழ்க்கை முறை, இவற்றோடு பின்னிப் பிணைந்து, வளமும், செறிவும் பெற்று, தமிழ் மக்களின் பண்பாட்டைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இவ்விலக்கியங்கள்வழி தமிழ்வாழ் மக்களுக்கு இயற்கையிடத்து ஈடுபாடும் தம்மைச் சுற்றியிருந்த தாவரங்களையும் அதன் பயன்பாட்டையும் நுணுகி, ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் மிக்கிருந்தமை நன்கு புலப்படுகிறது. இத்தகு சிறந்த நுண்மான் நுழை புலத்தினராய் விளங்கிய புலவர் பெருமக்கள் பன்முக ஆற்றலை இவ்விலக்கியங்களே எடுத்துக் காட்டுகின்றதெனலாம் *(பி.எல்.சாமி, 1976).* இவ்விலக்கியங்களில் தாவரங்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. எனவே, இக்கட்டுரை நீரில் பூத்தக் கொடிகளைப் பற்றிய செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்தே வாழ்ந்தனர் என்பதால், புல், பூண்டுகள், செடி கொடிகள் பிற தாவரங்கள் மற்றும் தாவரவியல் பெயர் சொற்களை இனங்கண்டு, தொகுத்துப் பிரித்தெடுத்து, அவை சங்க இலக்கியத்தில் பெற்றுள்ள இடங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றின் வகை, வாழிடம், வளரியல்பு, மலரும் பருவம், நிறம், பயன் போன்றவற்றை, அறிவியல் நோக்கிலும், அவை தரும் செய்திகளை மொழியியல் நோக்கிலும் ஆராய்ந்து அவற்றை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டியது நமது இக்கால அறிவியல் சந்ததியினரின் கடமையாகும்.

1. ஆம்பல்

சங்க இலக்கியப் பெயர்	:	ஆம்பல், அல்லி
வழக்குப் பெயர்	:	குமுதம்
மலையாளம்	:	அல்லி, ஆம்பல்
கன்னடம்	:	அல்லி, ஆம்பல்
தெலுங்கு	:	ஆம்பல். அல்லி
ஆங்கிலம்	:	Water Lily, Skt: Kumudam
தாவரவியல் பெயர்	:	Nymphaea nouchal, Burn. f.

ஆம்பல் அருவி, ஓடை, பொய்கையென நன்னீர் நிலைகளில் வாழும். மாரிக்காலத்து மதியை நோக்கி மலரும்; சிவப்பு நிறமானது; மணமுடையது; குளிர்ச்சியானது. இப்பூவைத் தலையில் சூடுவர் என்றும் நண்டுகள் ஆம்பல் கொடியை அறுக்கும் என்றும், வரால் மீன்கள் மெல்லிய இலைகளைக் கிழிக்கும் என்றும், இவ்விலை வௌவாலின் சிறகைப் போன்றதென்றும், உழவர்கள் மதுவுண்ணவும், சோறுவுண்ணவும் பயன்படுத்துவர் என்றும், இவ்விலையில் நத்தை (snail) கூடி மகிழும் என்றும், இத்தண்டினால் வளையல் செய்து மகளிர் அணிந்து கொள்வர் என்றும், இம்மலர் மகளிரால் பறிக்கப்படாதவை என்றும், இம்மலரை எருமை மேயும்

என்றும், கொக்கின் கரிய மூக்கிற்கும் பெண்டிர் வாய்க்கும், தாமரை இதழை உவமையாக புலவர்கள் பாடியிருப்பதை,

"ஆம்பல் அமன்றதீம் பெரும் பழனத்துப்" - *(நற். 200:6)*
"பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை" - *(குறுந். 370:1)*
"ஆம்பல் நாறும் தேம் பொதி துவர்வாய்" - *(குறுந். 300:2)*
"வெறி மலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்" - *(ஐங். 91:2)*
"புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்" - *(ஐங். 21:2)*
"ஆம்பல் மெல்அடை கிழிய குவளைக்" - *(அகம். 36:3)*

என்னும் சங்க இலக்கியப் பாடல் வரிகள் கொண்டு அறியலாம்.

2. குவளை

சங்க இலக்கியப் பெயர்	:	குவளை, செங்குவளை, நீலம், காவி, செங்கழுநீர்
வழக்குப் பெயர்	:	அல்லி, குவளை

பிறமொழிப் பெயர்கள்

மலையாளம்	:	காவி, செங்கழிநீர்
கன்னடம்	:	காவி
தெலுங்கு	:	காவி
ஆங்கிலம்	:	Indian Blue water lily
தாவரப் பெயர்	:	Nymphaea Nouchali; Burm.f.

குவளை குளம், குட்டைகளிலும், நன்னீரிலும், அருவி ஓடைகளிலும், பல்லாண்டு வாழும் நீர்ச்செடி. மகளிர் இம்மலரைச் சூடிக்கொள்வர். குவளை மலரினைக் பெண்களின் கண்ணுக்கும், முகத்திற்கும் உவமிப்பர். இம்மலர் வண்டுகளால் உழக்கப்படும். கடலின் பேரலையால் குவளைக் குவியும்; குவளை மலரைக் கொய்து விற்பர்; எருமைகள் குவளை மலரை உண்ணும்; ஆண் வரால் மீன், குவளையின் மலர் சிதையுமாறு பாயும். வெளியூரிலிருந்து வரும் சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பி வழங்குவர். இதன் தழையை ஆடையாக உடுத்திக் கொள்வர், குவளை, 'பேரெண்ணையும்' குறிக்கும் எனப் புலவர்கள் பாடியிருப்பதை

"தன் குயக் குவளை குறிஞ்சி வெட்சி" - *(குறிஞ். 63)*
"மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி" - *(பட். 241)*
"கள் கமழ் அல தண் நறுங் காவி" - *(நற். 123:6)*
"மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி" - *(பட். 241)*
"அமளி கைவந்தனனே: குவளை" - *(குறுந். 30:4)*
"குவளை குறுநர் நீர் வேட்டாங்கு" - *(நற். 332:2)*

என்னும் சங்க இலக்கிய வரிகள் கொண்டு அறியலாம்.

3. தாமரை

சங்க இலக்கியப் பெயர்	:	தாமரை, கமலம். அரவிந்தம், எரிப்பூ, பதுமம், முளரி
வழக்குப் பெயர்	:	தாமரை

பிறமொழிகளில் பெயர்

மலையாளம்	:	தாமர, கமலம்
கன்னடம்	:	தாமரை. தாவரை. கமல
தெலுங்கு	:	தாமர, தம்மி, கமலமு

ஆங்கிலம்	:	Sacred Lotus, Skt: Pankja, Kamalam
தாவரப் பெயர்	:	Nelumbo Nucifera Gaertn

தாமரை குளம், குட்டை, பொய்கை முதலிய நன்னீர் நிலைகளில் வளரும் இயல்புடையது. இதன் இலைக்காம்பு நுண்ணிய துளைகளையுடையவை. இவற்றுள் காற்று நுழைந்திருக்கும். இதனால் இதன் இலைகளும், மலர்களும் நீரில் மிதக்க இயலும். அக இதழ்கள் செந்நிறமானவை. பூவின் நடுவே நீண்ட உருண்ட *'பொகுட்டு'* இருக்கும். சுற்றிலும் மகரந்தம் தாழ்கள் இருக்கும். இவற்றை உண்ணுதற்கு வண்டுகள் மொய்க்கும். இம்மலரை மகளிரின் கண், முகம், வாய், முலை, கை போன்றவற்றிற்கும், தெய்வத்தின் திருவடிகளுக்கும், முயலின் செவிக்கும் உவமையாகிக் கூறுவர்.

"பழனத் தாமரைப் பனிமலர் முனைஇ" - *(நற். 260:2)*
"மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்" - *(ஐங். 6:4)*
"நுற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்" - *(ஐங். 20:2)*
"வள் இதழ்த் தாமரை நெய்தலொடு அரிந்து" - *(பதிற்று. 78:4)*
"ஆய் இதழ் உண்கண் அல் முகத் தாமரை" - *(பரி. 8:113)*
"அடை இறந்து அவிழ்ந்த வள் இதழ்த்தாமரை" - *(பரி. 13:50)*

என்னும் சங்க இலக்கிய வரிகள் கொண்டு அறியலாம்.

4. நெய்தல்

சங்க இலக்கியப் பெயர்	:	நெய்தல், கருநெய்தல், கருங்குவளை
வழக்குப் பெயர்	:	நெய்தல்
பிறமொழிகளில் பெயர்	:	
மலையாளம்	:	Kakapola
தெலுங்கு	:	Nirkancha
தாவரப் பெயர்	:	Monochoria, Vaginalis, C.pre.

பல்லாண்டு வாழும் நீர்ச்செடி. சில இடங்களில் உப்பளங்களில் வளரும். அகன்ற நீண்ட இதழ்களுடைய இம்மலர், விடியற்காலையில் மலர்ந்து, மாலையில் கூம்பும் இயல்புடையது என்றும் நீலம் கருநீல வண்ணம் கொண்டவை, நறுமணத்துடன் தேன் சுரப்பவை மிகுந்திருக்கும். வண்டினம் மொய்க்கும். இதனை நாரை உண்ணும். எருமை மேயும் என்றும், பூ நீலமணி போன்றதெனவும், கண் போன்றதெனவும், இதன் இலை யானையின் செவி போன்றதெனவும் மாந்தர் இம்மலரைச் சூடிக்கொள்வர் என்றும் நெய்தல் என்னும் பெயரில், எண், நிலம், பறை போன்றவை பற்றிய புலவர்கள் பாடியுள்ளனர்.

"மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி" - *(பட். 24)*
"சாயும் நெய்தலும் ஓம்புமதி எம்மில்" - *(நற். 60:9)*
"வள் இதழ் நெய்தல் கூம்ப, புள் உடன்" - *(நற். 117:3)*
"வள் இதழ் நெய்தற் தொடலையும் புனையாய்" - *(பதி. 27:10)*
"நெய்தல் மரபின் நிறைகட் செறுவின்" - *(பதி. 27:10)*

என்னும் சங்க இலக்கிய வரிகள் கொண்டு அறியலாம்.

5. பகன்றை

சங்க இலக்கியப் பெயர் : பகன்றை

பிறமொழிப் பெயர்கள்

மலையாளம் : Chivaka, trikol pakonna, rochani, tribhant

கன்னடம் : Bili tigada, bangada

தெலுங்கு : Tellategada

Skt : Trivirt

தாவரவியல் பெயர் : Operculina turpethum (L.) A. Silva

பகன்றை நெல் முற்றிய கழனியிலும், நீர்த்துறைகளிலும் உள்ள மற்ற கொடிகளுடன் சேர்ந்து வளரும் இயல்புடையது. இதன் முகை நீரில் முறுக்கிப் பிரியாமல் இருக்கும் துணியைப் போன்றது என்றும், முகை விரிந்த இதழ் பால் பெய்த வட்டக் கிண்ணம் போன்றது என்றும், இப்பூவிற்கு வெண்மையான புத்தாடையும் உவமிப்பர் என்றும் இப்பூவால் கட்டப்பட்ட மாலையை ஏர் உழுபவர் தம் தலையில் சூடியாடி உழுவர் என்றும், எருமைக்கும் சூட்டிவிடுவார்கள் என்றும், இதன் மிக வெள்ளிய நிறம் கருதி, கள்விற்கும் மகளிர், கண்ணியாகச் சூடிக் கொள்வர் என்றும் புலவர்கள் பாடியிருப்பதை,

"ஒலித்த பகன்றை விளைந்த கழனி" - (மதுரை.261)

"பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்"
- (பதிற்.76:12)

"பகன்றை வான்மலர் மிடைந்தக் கோட்டைக்"
- (ஐங். 97:1)

"பாசலைப் பொதுளிய புதல்தொறும் பகன்றை"
- (அகம்.217:6)

"பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்"
- (பதிற்.76:12)

குருஉக் கொடிப் பகன்றை சூடி, மூதுர்ப்"- (அகம்.316:6)

போன்ற இலக்கிய வரிகளிலும் காணமுடிகிறது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் பயின்றுவரும் நீர்த்தாவரங்களின் பெயர், வேறுபெயர், தாவரப்பெயர், அவற்றின் வாழிடம், வளரியல்பு, கருத்து நிலைகளின் அடிப்படையில் முறையே பூக்கும் காலம், பயன்பாடு போன்ற செய்திகள் விளக்கப்பட்டு, இவ்விளக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

எனவே, மனிதகுல வளர்ச்சியோடும், உறவுகளோடும், உணர்வுகளோடும் இழைந்து செல்கின்ற பண்பாடு காலத்தால் நிலைத்து நிற்பதாகும். இவ்வகையில் சங்க இலக்கியத்தில் நீர்த் தாவரங்கள் என்னும் தலைப்பிலான, இக்கட்டுரை சங்க காலத் தமிழ் மாந்தர் எவ்வெவ்வடிப்படையில் இத்தாவரங்களுக்கெல்லாம் பெயர் சூட்டியுள்ளனர் என்பதை மெய்வரலாற்று அறிவியல்சார் ஆராய்ச்சி முறையில் ஆராயுங்கால் வாய்ப்புக்குரிய தமிழர்தம் சமயம், பண்பாடு, கலாச்சாரம், அறிவியலில் தோய்ந்த நுண்ணறி மனப்பான்மையின் நோக்கங்களையும் விளங்கிக் கொள்வதற்கும், உலகிற்கு உணர்த்துவதற்கும் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்பது திண்ணம்.

துணைநூற்பட்டியல்

அகத்தியலிங்கம், ச. (பதி.ஆ.), 1972, *தமிழகப் பழங்குடி மக்கள்,* மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவர் வெளியீடு, சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர்.

அகநானூறு, 1976, கழக வெளியீடு, சென்னை.

அருணாசலம், ப., *சங்க இலக்கியப் பொருள் களஞ்சியம், தொகுதி 3, ச-தோ,* தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, 52-3.

அருளி, ப., 1992, *யா (வேர்ச்சொல் விளக்கவுரை),* அறிவன் பதிப்பகம், காளிக் கோயில் தெரு, தமிழூர், புதுச்சேரி.

அறிவியல் களஞ்சியம், தொகுதி 3, 2003, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 251.

ஆரோக்கிய தாஸ், பா., 2008, *சங்க இலக்கியத் தாவரவியல் பெயர்ச் சொற்கள் - பெயராய்வு,* முனைவர்பட்ட ஆய்வு அறிக்கை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Nagarajan, N, 2012, ***Ethnobotany of Eastern Ghats in Tamil Nadu,*** Annam Akaram Publication, Thanjavur.

அடிமைப்பெண்கள் - ஒரு சமூகப் பார்வை

முனைவர் மா. பவானி, உதவிப்பேராசிரியர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

சங்க காலத்திலும் சரி அதைத் தொடர்ந்து வந்த இடைக்காலத்திலும் சரி சமூகத்தைப் பற்றிப் பேசும் வரலாற்றிஞர்கள் பெண்களின் வீரத்தையும் சிறப்பையுமே எடுத்துரைத்து வருகின்றனர். நாணயத்தின் இருப்பக்கங்கள் போல உலகின் அனைத்துச் சமூகத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பது இயற்கையே. சிறப்பைப் பெருமையோடு வெளிபடுத்தும் அதே நேரத்தில் சமூகத்தின் பின்னடைவுகளையும் வெளிப்படுத்துதல் அவசியமாகும். சங்க கால அரசர்களின் வீரத்தையும் வள்ளல் தன்மையையும், புலவரின் திறத்தையும் பேசும் அறிஞர்கள் சமூகத்தின் அவல நிலையினை வறுமையினை எடுத்துரைப்பதில்லை.

இடைக்காலம் என்றாலே அதில் அதிக காலம் ஆட்சி நடத்திய சோழர் காலமே அனைவரின் சிந்தனைக்கும் முன்வரும். சோழர்களது காலம் தமிழக வரலாற்றின் பொற்காலம் என்றெல்லாம் பேசப்பெறுகிறது. ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் அரச மகளிரும் கலைத்துறையைச் சேர்ந்தோருமே கோலோச்சிய காலமாகவுள்ளது. சமூகத்தின் அடித்தட்டு மக்களைப்பற்றி சோழர் கல்வெட்டுகள் எவையும் பேசவில்லை. பெரும்பாலும் கல்வெட்டுகள் என்பதே ஓர் அரசிதழ் போன்றதே இதில் பெரும்பாலும் ஆட்சியாளரின் சிறப்புகளும், பெருமைகளும் மட்டுமே இடம்பெறும். எனவே வறுமையின் காரணமாக வாயிருந்தும் ஊமைகளாகத் திகழ்ந்து சமூகக்கொடுமைகளுக்கு ஆளான அடிமைப்பெண்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

அடிமை - சொல் வழக்கு

'அடிமை' என்ற சொல் 'அடி' என்ற தமிழ் சொல்லிலிருந்து வழங்கப்பெற்றுள்ளது. பக்தி இலக்கியங்களில் இச்சொல் இறைவனின் அடி பற்றியவர் என்ற பொருளில் வழங்கப்பெற்றுள்ளது. தமிழகத்தில் பொதுஆண்டு (பொ.ஆ.) 6 ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே 'அடிமை' என்ற சொல் காணப்பெறுகிறது. பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் ஒன்றான தேவாரப் பாடலில் "செறிவு அடிமை செய்ய" என்றும் (வரி: 237) 'சகமலாது அடிமையில்லை' என்றும் (வரி: 394) இறைவனின் அடிமையாக திருநாவுக்கரசர் தன்னைக் குறிப்பிடுகிறார். கல்வெட்டுகளில் 12ஆம் நூற்றாண்டிலிருந்தே வழங்கப்பெற்றுள்ளதாக லெஸ்லி சி ஓர் குறிப்பிடுகிறார்.[1] ஆனால் கல்வெட்டுகளின் இச்சொல் 9 ஆம் நூற்றாண்டு முதலேயே காணப்படுகிறது. பொ.ஆ 845 சேர்ந்த திருவிதாங்கூர் கல்வெட்டொன்றில் 'ஏவல் தொழில் செய்யும் அடிமையாள்' என்ற வாசகம் இடம்பெறுகிறது.[2]

சங்க காலத்தில் ஆண், பெண், இருபாலரும் அடிமைப்படுத்தப்பெற்றுள்ளனர். "அடிமை" என்ற சொல்லாட்சி சங்க காலத்தில் இல்லையேயொழிய அடிமைகள் இருந்துள்ளனர். அதிலும் பெண்கள் அடிமைகளாக்கப்பெற்றுள்ளனர். வெற்றிப்பெற்ற மன்னன், பகை வேந்தனின் மனைவிமார்களை அடிமைப்படுத்திய செய்திகளை இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்விதம் அடிமைப்படுத்தப்பெற்ற பெண்களை "கொண்டி மகளிர்" என பட்டினப்பாலைச் சுட்டுவதையும், "தொழுதைமார்" என நாலடியார்

சுட்டுவதையும் ஆ. சிவசுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்[3]. இவ்வாறாக சங்க காலந்தொட்டே பெண்கள் அடிமைப்படுத்தப்பெற்றுள்ளனர். அதைத் தொடர்ந்து வந்த காலங்களில் பெண்கள் சூழல் காரணமாக தாமே அடிமையாகியுள்ளனர். சிலர் அடிமையாக்கப்பெற்றுள்ளனர். இவ்வகையில் அடிமைப் பெண்கள் இருந்துள்ளமையை இடைக்காலத் தமிழகத்தில் ஒரு சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இடைக்காலத் தமிழக மகளிர்

இடைக்காலத் தமிழக வரலாறு 90% கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பெறுகிறது. இக்காலத்தைச் சேர்ந்ததாக இதுவரை சுமார் 25000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் வெளியிடப்பெற்றுள்ளன. அவற்றில் 20000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் இடைக்காலச் சோழர்களைச் சேர்ந்தவை. அவற்றில் சுமார் 1000 கல்வெட்டுக்களிலேயே பெண்கள் பற்றியக் குறிப்புகள் உள்ளன. கல்வெட்டுகள் பெரும்பாலும் சமய நிறுவனங்களான கோயில்களிலேயே பொறிக்கப்பெற்றுள்ளன. இதில் தமிழகத்தில் கோயில் பெண்களைச் சேர்ந்த கல்வெட்டுகள் 304 என லெஸ்ஸி சி ஓர் குறிப்பிட்டுள்ளார்.[4] மீதமுள்ள 700 கல்வெட்டுகளுள் அரசு மகளிர் பற்றியக்கல்வெட்டுகளே அதிகம் இடம்பெறும். சாதாரண நிலையிலுள்ளப் பெண்கள் குறித்த கல்வெட்டுகள் அரிதாகவே இடம்பெறும். பெண்களின் பெயர்களைக்கொண்டு அவர்களது சமூகத் தரத்தினை ஓரளவு அறியயியலும். அரசியர், கொடையாளர், கோயில் பணியாளர், தேவரடியார், அரசு அதிகாரிகளின் இல்லத்தரசிகள் (பாரியாள், அகமுடையாள்), நிலவிற்பனையாயின் நிலத்திற்கு தொடர்புடைய வகையில் விற்போர் அல்லது வாங்குவோர், அரசன் அல்லது அரசியரின் செவிலியர்கள் , பணிப்பெண்கள் (அதிகாரிச்சி, தாதி, வெள்ளாட்டி, பெண்டாட்டி) என்ற நிலையிலேயே இடைக்காலக் கல்வெட்டுகள் பெண்களைக் குறிப்பிடுகின்றன. இதில் அரசியர் முதல் அடிமை வரை இடம் பெற்றாலும், சமூகத்தில் அடித்தட்டு மக்களைப் பற்றிய விரிவான செய்திகள் எதுவும் பெரும்பாலும் இடம் பெறுவதில்லை. இவை அதிகார வர்க்கத்தினர் செய்த அறக்கொடைகளையே குறிப்பிடுகின்றன.

கல்வெட்டுக்களில் அடிமை

கல்வெட்டுகளில் அடிமை என்ற சொல் பொ.ஆ. 845 லேயே காணப்பெறுகிறது. இது திருவிதாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்தது. “அடியார்” என்ற சொல் அடிமையையும் இறை பக்தர்களையும் ஒருங்கே குறித்துள்ளது. மரியாதைக்குரிய பன்மைச்சொல்லான “அடியார்” என்ற சொல் அடிமையைக் காட்டிலும் பக்தரையே அதிகம் குறித்துள்ளது. ஆண் பக்தர்களை ‘ஆண் அடியார்” என்றும் பெண் பக்தர்களைப் பெண் அடியார் என்றும் குறித்துள்ளனர்.[5] அடியார் என்ற வரிசையில் கடவுளின் அடிமைகளான தேவரடியார்களும் அடிமைகளாக்கப்பட்டவர்களே என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியம்.

சோழர் காலத்தில் பிற்பகுதியில்தான் இச்சொல் அடிமைகளையே குறித்துள்ளது அதுவும் பெண் அடிமைகளையே பெரும்பாலும் குறித்துள்ளது. இடைக்காலத் தமிழகத்தில் கோயிலுடன் இணைந்த பெண்அடிமைகளைக் குறித்து 19 கல்வெட்டுகளும் ஆண் அடிமைக்குறித்து 1 கல்வெட்டும் உள்ளதாக லெஸ்லி சி ஓர் குறிப்பிடுகிறார்.[6]

கே.கே. பிள்ளை கோயிலிற்கு மட்டுமே அடிமைகள் விற்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகிறார்[7]. பெரும்பாலும் இவருடைய கருத்துக்களை ஏற்றுள்ள லெஸ்லி சி ஓர் சோழர் காலத்தின் பிற்பகுதியிலேயே அடிமைகள் குறித்த செய்திகள் பரவலாகவும் அருகியுமே கல்வெட்டுகளில் கிடைப்பதாகக் குறிப்பிடுகிறார்.[8]

ஆனால் இவரது நூலின் ஒரு சில கூறுகளை மொழியாக்கம் செய்து சிறு நூலாக வெளியிட்டுள்ள வி. நடராஜ் என்பவர் மத்திய காலத் தென்னிந்தியாவைச் சேர்ந்த பெண்களில் பெரும் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் செய்ய கூடியவர்களாக இருப்பவர்கள் கல்வெட்டுகளில் அடிமைகள் என்ற பெயரில் இடம் பெற்றவர்களாகவே இருக்கக்கூடும் என்கிறார்.[9]

ஆள்விலைப்பிரமாண இசைவுத் தீட்டு

மனிதனை விலைபேசி விற்று அதற்காக ஆவணம் எழுதிப் பதிவு செய்வதற்கு 'ஆள்விலைப்பிரமாண இசைவுத்தீட்டு' என்று பெயர்.[10] மூன்றாம் இராஜராஜனின் மூன்றாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற (பொ.ஆ. 1218 - 19) வேதாரண்யம் கல்வெட்டு மனிதர்களை விலைக்கு விற்ற ஆவணம் குறித்துப் பேசுகிறது. இக்கல்வெட்டே இந்த ஆய்விற்கு காலத்தால் முற்பட்டதாக கிடைக்கும் கல்வெட்டாகும். "ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்வஸ்தி ஸ்ரீ இராசராச தேவருக்கும் யாண்டு 3ஆவது ஆள்விலைப்பிரமாண இசைவுத் தீட்டு குடுத்த பரிசாவது என் அ(டி)யாரில் சதையாண்டி (கூ)ட்டத்து வே(த)னான பட்ட நாயக கண்ணப்பனையும் குரம்பன் ஆதிநாயக கண்ணப்பனையும் உடையானான சொக்க நாயக கண்ணப்பனையும் கங்கனையும் திருவனையும் முன்னாளிலே எங்கள் முதலியார் தங்கப்பிள்ளையான இராசராச கங்கை நாடாழ்வார் நாயநாற்கு அடிமையாக கொடுத்தமையில் இவர்களையும் பின்பு கழநி ஆண்டியையும் பெற்றானையும் ஆண்டாளியையும் - இவர்கள் வற்கத்தாரையும் விட்டுக் கொடுத்து கொள்வதான காசு 1000மும் பண்டாரத்து கைகொண்டு இவர்களை விற்றுக்கொடுத்தேன் அரியான் பிச்சனான எதிரிலி சோழ கங்கை நாடாள்வானென் இப்படிக்கு இவை...".[11] இப்படி வம்சம் முழுவதையும் அடிமையாக்கிய செய்தியை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அடிமைகள் "சதையாண்டி" கூட்டத்தவர் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இவர்கள் ஏற்கெனவே கங்கப்பிள்ளை என்கிற ராஜராஜ கங்க நாடாழ்வார்க்கு அடிமையாக இருந்துள்ளனர். எதிரிலி சோழ கங்கை நாடாழ்வான் என்ற அரசு அதிகாரி இவர்களையும் இவர்கள் வர்க்கத்தாரையும் 10 அடிமைகள் 1000 காசு என்ற அளவில் ஒரு அடிமை 100 காசிற்கு வேதாரண்யம் கோயிலிற்கு விற்பனை செய்துள்ளதை மேற்கூறிய கல்வெட்டு சுட்டுகிறது. அடிமை விலைப்பிரமாணம் அரசின் நேரடிக் கண்காணிப்பிலேயே நடைப்பெற்றுள்ளது. எனவே அரசு அடிமை விற்பனையை ஊக்கப்படுத்தியுள்ளது என்றே கூறலாம்.

இதே மன்னனின் 19ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர், கோவிலின் நெற்குற்று சாலைக்கு ஐந்து பெண்களைத் தானமாக வழங்கியமையைக் குறிப்பிடுகிறது (பொ.ஆ.1234).[12]

மூன்றாம் ராஜராஜன் காலந்தொட்டே இவ்விதம் ஆள்விலை பிரமாணங்கள் இடம்பெற்றுள்ளன. முற்கால சோழர் காலத்தில் இத்தகைய மனிதனை விலைக்கு விற்கும் ஆவணங்கள் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

பெண்களை அடிமைகளாக விற்றுள்ளமை

இதே மன்னனின் 23 ஆம் ஆட்சியாண்டின் 1239 ஆம் ஆண்டு, ஆதிசண்டேஸ்வர தேவர் கன்மிகளுக்கு இந்நாட்டு காவல் செய்யும் அரியான் பிச்சன் என்கிற கங்கை நாடாழ்வான் என்பவர் அவரது அடிமைகளில் பெற்ற மகள் கழனி, குடியாள், ஆகிய இருவரை அடிமைகளாக விற்றுள்ளார். இவர்கள் அடிமை என்றே குறிப்பிடப்பெற்றுள்ளனர்.[13] இதுபோல் அரசு அதிகாரிகளும், செல்வந்தர்களும் கோயிலிற்கு கால்நடைகள், நிலங்கள் போன்றவற்றை வழங்குவது போலவே நாம் பெற்றிருந்த அடிமைகளைக் கோயிலிற்கு விற்றும் தானம் வழங்கியும் உள்ளனர்.

விஜயநகர காலத்தில் அடிமைகள்

விஜயநகர ஆட்சியாளர் வீரகம்பண உடையாரின் பொ.ஆ.1374 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு

22 . வெள்ளான் அடியாரில் தவஞ்செய்தால்
மகள் ... ... வெள்ளாட்டி சிவந்தாலும் ... ...

24. புலை அடியாரில் ... ... முன்னால் கங்கைபுரத்தில்
பாட்டத்தில் நின்ற புல அடியாராய
உடையர் கம்பண உடையார்
காரியப் பேர் சந்தரசர்

25. விற்க நான் கொண்டுடையனானேன்
சாதனப்படியால் உள்ள
பள்ளன் பிறவியும் இவன் பள்ளி
அழகியாலும் இவள் மகள்
நம்பாளும்... ... ...

என்று 10 அடிமைகள் விலைக்கு விற்கப்பெற்றமையைக் குறிப்பிடுகிறது. வெள்ளான் அடிமை, புலை அடிமை, பள்ளன், பள்ளி என அனைத்து வகுப்பினரும் அடிமையாக விற்கப்பெற்றுள்ளனர்.. இக்கல்வெட்டில் அடிமைகள் "அடியார்;" என்றே குறிப்பிடப் பெற்றுள்ளனர். [14]

10 அடிமைகளுள் தவஞ்செய்தாள், வெள்ளாட்டி சிவந்தாள், பள்ளி அழகியாள், நம்பாள் ஆகிய நால்வரும் பெண்களாவர். கணவன்மாருடன் சேர்ந்து மனைவி மற்றும் மகள்களும் அடிமையாகியுள்ளனர்.

வறுமையின் காரணமாக தங்களைத் தாங்களே விற்றுக் கொள்ளுதல்

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் உள்ள 1453 ஆம் ஆண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு, மல்லாயி மற்றும் அவர் மகள் உலகுடையநாச்சி ஆகிய 2 பெண்கள் தங்களைக் காப்பாற்ற ஆட்கள் இல்லாததால் நலங்கெட்டு கடன்காறர்களாகியுள்ளனர். தங்களை கோயிலிற்கு அடிமையாக எடுத்துக்கொள்ளும்படி கோயில் அதிகாரிகளிடன் இறைஞ்சியுள்ளனர். அவர்களது வேண்டுகோளை ஏற்று அவர்கள் இருவரையும் எம்பெருமான் அடிமைகளாக திருஇலச்சினை குத்தி கோயில் அதிகாரிகள் ஏற்றுள்ளனர். தஞ்சை மாவட்ட சூலமங்கத்திலும் இத்தகைய நிகழ்வு நடைப்பெற்றுள்ளன. [15]

தேவடிமை

'தேவடிமை' என்பதற்கு தேவரடியார் தொழில் என்று கல்வெட்டுச் சொல்லகராதியில் பொருள் கூறப்பெற்றுள்ளது. [16] இச்சொல்லாட்சியும் பொ.ஆ 1461ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டிலேயே முதன்முதலாக இடம்பெற்றுள்ளது.[17] அதே பகுதியைச் சேர்ந்த பொன்னமராவதி கல்வெட்டில் மாணி என்ற பெண்ணும், அவரது மகள் சந்தனத்தாயாரும் இவள் தங்கை மாலையாரும் இன்னும் பிற உறவினரும் 1478 ஆம் ஆண்டு பொன்னமராவதி சோழேசுவரர் சிவன் கோயிலிற்கு தேவடிமையாக விடப்பட்டு சூலமும் பொறிக்கப்பெற்றுள்ளனர். [18]

இதுபோன்ற அவல நிலைகள் விஜயநகர காலம் வரை மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து பல காலக்கட்டங்களிலும் தொடர்ந்துள்ளதை ஓலைச்சுவடிகளும், மராட்டிய மோடி ஆவணங்களும் சுட்டுகின்றன.

'எங்களை நாங்களே அடிமை விலை பிரமாணம் செய்து குடுத்த பரிசாவது' 'அய்யனடியானேன் வெள்ளாட்டி விலை ஓலைக் கரணம் . . . . .'

'நான் குருபரமுடையோனாய் ஆண்டு அனுபவித்து வருகிற. . .. . . கொள்வாருளரோ! கொள்வாருளரோ! என்று விலைப் பொருள்களை விற்பது போல நான் இதுவரை வைத்திருந்த அடிமைகளை விலைக்கொள்வதற்கு யாரேனும் உள்ளீரா? என்று நகரின் மத்தியில் அடிமைப் பெண்களை நிற்கவைத்து அவர்களின் முதலாளி கூவிய செய்தி மனத்தைப் பதைபதைக்க வைக்கிறது. பெண்கள் தங்களைத் தாங்களே இப்படி கூவி விற்றுக் கொள்வதுமுண்டு. ½ காசிற்காகவும் 1 காசிற்காகவும் தாய் தனது 7 வயது மகளை கணவருக்குத் தெரியாமல் அரண்மனையில் விற்ற செய்தியும் உண்டு. கல்வெட்டுகளில் இதுபோன்ற செய்திகள் இலைமறை காய் போலவே இடம் பெறுகிறது. 16,17, ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர் மற்றும் மராட்டியர் காலத்தில் அடிமைகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட கொடுமைகளை ஆ. சிவசுப்பிரமணியன் மனக்குமுறலோடு வெளிப்படுத்துகிறார்.[19]

அடிமைகள் செய்த பணிகளும் நிலை தாழ்தலும்

பெரும்பாலும் அடிமைப் பெண்கள் உணவுக் கூடங்களில் பிராமணர்களும், யோகிகளும் உணவு அருந்திய பின்னர் தூய்மை செய்வது, எச்சில் இலை எடுப்பது, சாணமிட்டு தரையைத் துடைப்பது, போன்ற கீழ்நிலைப்பணிகளுடன் கோலம் போடுவது, நெல் குத்துதல் போன்ற பணிகளையே செய்துள்ளனர்.[20] இத்தகைய பணிகளைச் செய்து வந்த அடிமைப்பெண்கள் தங்கள் கணவர், குழந்தைகளுடனேயே அடிமைப்படுத்தப் பெற்றுள்ளனர். இப்பணிகளுடன் இவர்கள் பாடுதல், கவரி வீசுதல் போன்ற பணியினையும் செய்துள்ளனர். பிற்காலத்தில் இவர்கள் இழிவான தொழிலையும் செய்ய வற்புறுத்தப்பெற்றுள்ளனர்.

ஆ. சிவசுப்ரமணியன் தேவரடியார் என்பதும் அடிமைத்தனத்தின் ஆரம்பமே என்று விளக்குகிறார். ஆனால் கல்வெட்டுகளில் இவர்கள் துவக்கக்காலம் தொட்டே அரசியற்கு இணையாக கொடையாளர்களாக செல்வச் செழிப்புடனும் கடவுளுடன் தொடர்புடைய ஆடல், பாடல், பூதொடுத்தல் போன்ற நல்ல மேன்மையான செயல்களையே செய்துள்ளதாகவே காட்டப்படுகின்றனர். ஆனால் தேவரடியார்கள்

கோயில்களில் சித்ரவதை செய்யப்பெற்றிருக்கும் செய்தியை இலக்கியங்கள் சுட்டுவதாக ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். முன்பே சுட்டியதை போல் கல்வெட்டுக்கள் அரசனின் ஆணையாகவே உள்ளன. அவர்களது அதிகாரிகளால் கோயிலிற்கு விற்கப்பட்ட அடிமைகளை அரசு எப்படி தவறாகக் கருதும்?

திரிசூலஸ்தாபனமும், பொட்டுக்கட்டுதலும்

இந்த அடிமைப் பெண்கள் முதலில் கோயிலுக்கு மட்டும் அடிமையாக்கப்பெற்றுள்ளனர். அதற்கு அடியாளமாக 'திரிசூல முத்திரை' அவர்களது உடலில் பொறிக்கப்பெற்றுள்ளது. அரசர்க்கு சொந்தமான அடிமைகள் உடலில் அரச முத்திரை பொறிக்கப்பெற்றுள்ளது. முதலாம் குலோத்துங்கச் சோழனின் காலத்தில் (பொ.ஆ. 1088) திருக்காளத்தி கோயிலுக்குரிய தேவரடியார்கள் தவறுதலாக அரண்மனை சேவகத்திற்குச் சென்றுள்ளனர். இதை அறிந்த குலோத்துங்கச் சோழன் அவர்களை மீண்டும் கோயிலிற்கு அனுப்பியுள்ளார். அவர்கள் உடலில் பொறிக்கப்பெற்ற அரசமுத்திரை அழிக்கப்பெற்று மீண்டும் சூல முத்திரை பொறிக்கப்பெற்றுள்ளது. அடிமைகளுக்கு மட்டுமின்றி பக்தர்களுக்கும் இத்தகைய சூலம் பொறிக்கப்பெற்றுள்ளது.

பிற்காலங்களில் இவர்கள் தனிப்பட்ட செல்வந்தர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் சொந்தமாகியுள்ளனர். இறைவனுக்காக பக்தியின் சின்னமாக (திரிசூலஸ்தாபனம்) திரிசூலம் பொறிக்கப்பட்டவர்களுக்கு பிற்காலத்தில் 'தாசி' என்ற பட்டமும் கழுத்தில் பொட்டும் கட்டப்பெற்றுள்ளது. அருருபமாயும் உடலை விற்க யோக்கியம் இல்லாதவளாகவும் இருந்ததால் ஒரு தாய் தன் பெண்ணை மணம் முடித்துக்கொடுத்துள்ள செய்தியினை மராட்டிய ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது.[21]

முடிவுரை

சங்க காலத்தில் துவங்கிய பெண்அடிமைமுறை ஐரோப்பியர் காலம் வரை மட்டுமே இருந்துள்ளது. தற்பொழுது இல்லை என உறுதியாகக் கூறயியலாது. இடைக்காலத்தில் இருந்தைப்போல் வெளிப்படையாக பரவலாகயில்லை என்றே கூறயியலும்.

முதலில் பக்தியின் பெயரால் (இறைவனுக்கு) கோயிலுக்கு மட்டும் சொந்தமான இந்த அடிமைப் பெண்கள் பின்னர் தனிப்பட்ட அரசு அதிகாரிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் சொந்தமாகியுள்ளனர். இறைவனுக்காக பக்தியின் சின்னமாக (திரிசூலஸ்தாபனம்) திரிசூலம் பொறிக்கப்பட்டவர்களுக்கு பிற்காலத்தில் தாசி என்ற பட்டமும் கழுத்தில் பொட்டும் கட்டப்பெற்றுள்ளது. சோழர்காலத்தில் நலிந்த அவர்களது நிலை மேலும் அவலநிலைக்த்கு தள்ளப்பட்டுள்ளதை இக்கட்டுரை உணர்த்தும்.

தற்காலத்தைப் போன்றே வரலாற்றுத்துவக்க காலம் முதற்கொண்டு சமூகத்தின் மேல் தட்டு மக்களின் செயல்களை எடுத்துரைப்பதாகவே வரலாற்றுச் சாதனங்கள் உள்ளன. ஒரு புறம் 'பெண்கள் நாட்டின் கண்கள்' 'மாதராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்றெல்லாம் நம்மை நாமே திருப்திசெய்து கொண்டாலும் மற்றொரு புறம் ஆணாதிக்க அடிமைத்தனத்திலிருந்து விடுபடாத பெண் சமூகம் இன்னும் அடிமையாகவே தொடர்கிறது.

அடிக்குறிப்புகள்

1. Leslie C. Orr, *Donors, Devotees, And Daughters of God*, OUP, New York, 2000, p.216.
2. *Travancore Archaeological Series* (TAS), vol.II, p. 80.
3. ஆ. சுப்பிரமணியம், தமிழகத்தில் அடிமை முறைகள், விடியல், கோயம்புத்தூர், 2002, ப.63.
4. Leslie C. Orr, *Opcit*, 2000, ▯.66.
5. *South Indian Inscriptions (SII)*, vol, 13, no. 218.
6. *South Indian Inscriptions (SII)*, vol, 13, no. 218
7. கே.கே.பிள்ளை, சோழர்கள், என்.சி.பி.எச். பதிப்பகம், 1998, ப. 339.
8. Leslie C orr, Opcit., 2000, pp.117 – 120.
9. வி. நடராஜ், தமிழக கல்வெட்டுகளில் பெண்கள், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 2003, பக். 25.
10. சு. இராசகோபால், 'சோழர் காலத்திய ஆவணப்பதிவு முறைகள்', தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், (எ. சுப்பராயலு, செ. இராசு, பதி.,) தமிழ்ப் பல்கலைக்கழகம், 2001, ப.91.
11. *SII*, vol.17, no. 541.
12. *SII*, vol. 4, no. 558.
13. *SII*, vol.17, no. 544.
14. *SII*, vol.13, no. 590.
15. Annual Reports on Indian Epigraphy (ARE). 296/1911.
16. எ. சுப்பராயலு, தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்திசாதனா பதிப்பகம், சென்னை, 2003, ப.332.
17. IPS, no.710.
18. *Inscriptions of Pudukkottai States* (IPS), no.817; *SII*, vol.26, no.8
19. *ஆ. சிவசுப்பிரமணியன், மு.சு.நூ, 2002, பக். 117-154.*
20. ARE, 374/1972-73; SII.vol, 19, no. 357.
21. வேங்கடராமையா, தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1984, ப.322.

பேரண்டத்தில் பெண்

பார்த்தசாரதி. ம, இளநிலை திட்ட ஆய்வாளர், சுற்றுபுற சூழல் துறை, தமிழ்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010

"அண்டத்திலுள்ளது பிண்டத்திலும்... பிண்டத்திலுள்ளது அண்டத்திலும்" என்ற கூற்று அனைவரும் அறிந்ததே...

அண்டம் என்றால் இந்த உலகத்தையும், பிண்டம் என்றால் நமது உடலையும் கூறுவார்கள். அதாவது அண்டம் (பேரண்டம்) என்று அழைக்கப்படும் பிரபஞ்சம் கோடானகோடி கோள்களின் தொகுதிகளின் மூலக்கூறுகள், நிலம், நீர், தீ, வளி, வெளி என்ற ஐம்பூதங்கள் சார்ந்த பொருட்களாகும். இவை நம் உடலிலுள்ள 5 அடிப்படைக் கூறுகளாகும். அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்ற முறையில் உடல் அண்டக்கோடுகளோடு இயைந்துள்ள கருவி என்பது நமது சித்த மருத்துவ அடிப்படைக் கோட்பாடு என்பர். ஆகமொத்தம் இதன்படி அண்டத்திலுள்ளதை பொறுத்தே நமது பிண்டமானது இயங்குகின்றது. என ஒத்துக்கொள்கிறோம். எனவே அண்டமில்லாமல் உடல், உயிர் ஆனது தோன்றுவதுமில்லை. இயங்குவதுமில்லை.

மீண்டும் ஒருமுறை தெள்ளத்தெளிவாக நாம் யோசிப்பின் அண்டம் இல்லாமல் இவ்வுலகினில் உயிரானது இல்லை. அது இவ்வுலகில் முதலில் தோன்றிய நுண்ணுயிரியான பாக்டீரியாவாகட்டும் அல்லது பலசெல் உயிரியான மனிதனாகட்டும் அனைத்தும் அண்டமில்லாமல் தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

அடுத்து நமக்குத் தெரிந்த மற்றொரு அண்டம் என்ற சொல்... அண்டச் செல் அதாவது பெண் இனச் செல் (ovum) என்பதை குறிக்கும். இந்த அண்டமில்லாமலும் எந்த உயிரும் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. அண்டச் செல்லும் விந்தணுவும் இணைந்தே ஓர் உயிரானது இந்த உலகில் பிரசவிக்கின்றது. ஆனால் அண்டச்செல் மட்டுமே தனித்து ஓர் உயிரினைத் தோற்றவிக்கும் என்பதும். அண்டச்செல் அத்தகைய சக்தியை பெற்றிருக்கிறது என்பதும் நமக்கு விந்தையே.... ஆனால் விந்துவுக்கு இந்த விந்தை இல்லாமல் போய்விட்டதாக இன்றுவரை அறிவியலாளர்களால் கூறப்படுகின்றது. அதெப்படி? ஆண்துணையின்றி பெண்ணின் அண்டம் மட்டுமே அல்லது ஓர் பெண்ணால் தனியாக ஓர் உயிரினை படைத்துவிட முடியும்? இது இயற்கைக்கு புறம்பானது என்றாலும் பெண்ணுக்கு அப்படி ஓர் சக்தி இந்த பிரபஞ்சத்தால் உருவாக்கப்பட்டுள்ளது போலும். ஆம் நாம் அறிந்தது போலவே அண்டத்திலுள்ளதே பிண்டத்தில், அது பிரபஞ்சம் என்பதைக் குறிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது பெண் இனச்செல் அண்டமானாலும் சரி. அது இருக்கட்டும் .அதெப்படி பெண்ணால் தனியாக ஓர் உயிரினைப் படைத்து விட முடியும். நாம் வழிப்படக்கூடிய பல பெண் தெய்வங்கள் தங்களுடைய சக்திமூலமாக ஓர் உயிரினைப் படைத்திருக்கிறது என்று நாம் நம்பி வருகின்றோம். ஆனால் தற்போதைய காலகட்டத்தில், நவீன அறிவியலின் ஒருபிரிவான உயிர்தொழில்நுட்பவியலின் (Biotechnology) உதவியுடன், குளோனிங் (படியெடுப்பு) என்ற ஒரு தொழில்நுட்பம் மூலம் அண்டச்செல் அல்லது ஒரு பெண் துணை மட்டுமே இருந்தால் போதும் ஆணின் துணையின்றி ஒரு உயிரினை உருவாக்கிட முடியும்.

ஒரு பெண்ணின் அண்டத்திலிருந்து, ஆணின் துணையில்லாமல் ஓர் உயிரை படியெடுக்க (குளோனிங் செய்ய) அல்லது கருவினை உருவாக்க அல்லது அண்டச்செல்லிருந்து ஓர் உயிரினை முழுமையாக பிரசிவிக்க எவ்வாறு முடியும் என்பதைப் பார்ப்போம். உயிரியலில் படியெடுப்பு (குளோனிங்) என்பது மரபியல் (Genetics) ரீதியில் ஒன்றையொன்று ஒத்த உயிரணு மூலக்கூறுகள், உயிரணுக்கள், உயிரினங்கள் போன்றவை ஒரு தனி மூதாதையிலிருந்து உருவாக்கப்டும்.

இயற்கையில் பாக்டீரியாக்களிலும், சில பூச்சிகள் மற்றும் தாவரங்களிலும் (உதாரணமாக முருங்கை மற்றும் செம்பருத்தி செடிகளின் ஏதாவதொரு உடல்பாகத்தை தனியாக நட்டுவைத்தாலே மற்றொரு செடியாக வளரும் தன்மையைப் போன்றது). நடைபெறுகின்ற கலவியற்ற இனப்பெருக்கம் நிகழும்போது இவ்வகையான இனப்பெருக்கத்தின் மூலம் மற்றொரு சந்ததியானது தோற்றுவிக்கப்படுகின்றது அல்லவா? அது போலத்தான். இன்னும் நாம் சற்று உள்ளே சென்று பாரப்போமேயானால் சாதாரணமான மனித இனப்பெருக்க முறையில் ஓர் உயிர் உருவாக தேவைப்படுவது பெண்ணிடமிருந்து ஓர் அண்டச்செல், ஓரே ஒரு அண்டச்செல் அதாவது சினைமுட்டை. அடுத்து இந்த அண்டச்செல்லின் உள்ளேயிருக்கின்ற உட்கருவுடன் இணைகின்ற தகுதி வாய்ந்த ஓர் ஆணின் ஒரு விந்துச் செல், பின்பு அவை இணைந்து நன்கு வளர்ச்சியுற்ற ஓர் கருவான நிலை (Embryo) .

இறுதியாக இந்தக் கரு வளரத் தேவையான ஓர் அறை – கருவறை. ஆகமொத்தம் சாதாரணமான இன்ப்பெருக்க முறையில் பெண்ணிடமிருந்து ஓர் கருவறை, ஒரு அண்டச்செல் மற்றும் ஓர் ஆணிடமிருந்து விந்துச் செல் இவையிருந்தால் போதும். ஓர் உயிரானது இவ்வுலகத்திற்கு தயார். இது விலங்குகளின் இயற்கையான கருத்தரிப்பு முறையாகும்.

ஆனால் குளோனிங் முறையில் கலவியற்ற இனப்பெருக்கத்தில் அறிவியலறிஞர்களுக்கு தேவையானது. ஒரு பெண்ணிடமிருந்து உட்கரு நீக்கப்பட்ட அண்டச்செல் (சினைமுட்டை) அடுத்து ஓர் உடலச்செல்- (Stem Cell இந்த உடலச்செல்லானது விந்து மற்றும் பெண் சினைமுட்டை இணைந்த ஓர் பண்பிணைப் பெற்றிருக்கும். இந்த உடலச்செல்லை உடலின் எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம். ஆனால் இனச்செல்களைத் தவிர்த்து, ஆக நமக்கு விந்து செல் என்பது இங்கு அவசியமில்லாமல் போய்விடுகின்றது). பின்பு உட்கரு நீக்கப்பட்ட அண்டச்செல்லில் உட்கரு இருக்கவேண்டிய இடத்தில் உடல்செல் ஆனது சில உயிர்தொழில்நுட்ப முறைகளின்படி வைக்கப்பட்டுவிடும். பின்பு இவை நன்கு வளர்ந்து கரு போன்ற நிலையை அடைந்தவுடன் ஓர் பெண்ணின் கருவறையில் வைக்கப்பட்டுவிடும். நமக்கும் ஓர் உயிரானது இங்கு கிடைத்துவிடுகின்றது. இது ஓர் மிகப்பெரிய சிக்கலான தொழில்நுட்பமுறையானாலும் இது சாத்தியப்பட்டு குளோனிங் முறையில் ஏற்கனவே சில உயிரினங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகமொத்தம் உடலச்செல்லானது ஒரு பெண்ணிடமிருந்தும். உட்கரு நீக்கப்பட்ட ஒரு அண்டச்செல்லானது அதே பெண்ணிடமிருந்தோ அல்லது வேறொரு பெண்ணிடமிருந்தோ இறுதியாக ஒரு பெண்ணிடமிருந்து ஒரு கருவறை போதும். ஓர் உயிரானது பிரசவித்துவிடும். இவ்வாறு பிரசவிக்கும் உயிரும் பெண்ணாகவே இருக்கும். அதேசமயம் உடல்செல் மட்டும் ஆணிலிருந்தும் எடுக்கும்பட்சத்தில் பிரசவிக்கும் உயிர் ஆணாக இருக்கும். எதுவாயினும் உடல்செல் மட்டுமே ஆண் அல்லது பெண்ணிலிருந்து எடுக்கமுடியுமோ தவிர, மற்ற அனைத்திற்கும் பெண்ணே ஆதாரம்.

அண்டமே மூலாதாரம் இத்தகைய முறையில் உடலச்செல்லும் ஆணிடமிருந்து எடுக்காதபட்சத்தில் பெண்ணிடமிருந்து உடலச்செல்லும் நாம் எடுத்துவிட்டால் ஓர் ஆணின் துணையின்றியே ஓர் உயிரை இவ்வுலகத்தில் பெண்ணால் தந்துவிட முடியும். இத்தகைய முறையிலேயே டாலி என்ற குளோனிங் செம்மறியாட்டுக்குட்டியானது 1996 ஜீலை 5-ல் பிரசவிக்கப்பட்டது. இதனை அறிவியலறிஞர்கள் Dr. அயன்வில்மட் மற்றும் Dr. கேயித்கேம்பல் குழுவினர்கள் உருவாக்கினார்கள். டாலி உருவான விதத்தில் அதற்கு உடலச்செல் அண்டச்செல் மற்றும் கருப்பையை வழங்கிய அனைத்தும் பெண் செம்மறியாடு என்று அறியப்படுகிறது.

மீன், கோழி, ஆடு எனத் தொடங்கி மனித குளோனிங் முறையிலும் இவ்வுலகில் உயிர்கள் படைக்கப்பட்டிருக்கிறது. முதல் குளோனிங் மனித உயிரானது 2002-ல் படைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல காரணங்களால் இதுமறைக்கப்பட்டிருந்தாலும் அவ்வாறு படைக்கப்பட்ட உயிரானது முற்றிலும் பெண்ணிலிருந்தும் ஆணுடைய துணையின்றியே படைக்கப்பட்டது. இக்குழந்தை பிறப்பில் இங்கு ஆண் செல் ஏதும் பயன்படுத்தப்படவே இல்லை. பதிலாக அந்தத்தாயின் உடலச்செல்லில் டி.என்.ஏ மாறுதல்களை (Gene Transfer Methods) ஏற்படச்செய்து, அதை கருவாக மாற்றி அதை கருப்பையில் வைத்து வளரச் செய்தனர். இது அமெரிக்காவில் பாஸ்வேகாஸ் நகரில் உள்ள குளோன்எய்ட் ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்டது.

ஒருவேளை இந்த குளோனிங் தொழில்நுட்பம் எதிர்காலத்தில் மாற்றம் செய்யப்பட்டாலும் அல்லது தடைசெய்யப்பட்டாலும், என்னுடைய பார்வையில் அண்டத்திலிருந்தே அனைத்தும் என்பது மாற்றத்திற்க்கு அப்பாற்பட்டதாக விளங்குகின்றது. அண்டமே மாசக்தியாகவும் விளங்குகிறது. அது பேரண்டமானாலும் சரி, பெண்ணின் அண்டமானாலும் சரி. பல மில்லியன் கோடி ஆண்களின் (விந்தணுக்கள்) தாக்குதலுக்கு தன்னந்தனியாக ஒற்றைப்பெண் (அண்டச்செல்) எதிர்த்து நின்று இவ்வுலகத்திற்கு ஓர் உயிரினைத் தரக்கூடிய பெண். ஓர் மாசக்தி தானே... பராசக்தி தானே....

இறுதியாக இவை இயற்கைக்கு புறம்பாயினும் சிவனில்லாமல் சக்தியில்லை. சக்தியில்லாமல் சிறுதுரும்பும் இல்லை. அயன்(வில்மட்) இல்லாமல் டாலியும் இல்லை..... என்பதையும் நாம் மறுக்கமுடியாது.

நோக்கு / சான்று நூல்கள்;

1. Clone .By Fartex . The Free Dictionary
2. One India Tamil Website . date:Oct30,2015.
3. Lederberg Joshua (1996) . “Experimental Genetics and Human Evolution”. The American Naturalist. 100(915):519-531.doi10.1086/282446

"ஆனையாம்பட்டி செ.நா.ஆதிசேசய்யரின் வாழ்வும், இசைப் பணிகளும்"

வி.ச.பாலமுரளி, ஆய்வாளர், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

அறிமுகம்

உலக அரங்கிலே இந்திய மரபு இசைக்கு, அதிலும் குறிப்பாக தென்னாட்டு மரபு இசைக்கு ஒரு தனிச் சிறப்பும், இடமும் உண்டு. செறிவான, நயம் மிக்க இசை உருக்கள் இந்த இசை மரபிலே அதிக அளவில் இருப்பதே இதற்குக் காரணம்.

இந்த இசை வடிவங்களை நமக்கு அளித்துள்ள பெருமக்கள் மிகப் பலர். அவர்களில் சிலருக்கு ஒரு விசித்திர பெருமை உண்டு: அது என்னவென்றால், அவர்களின் இசைவடிவங்கள், அவர்களை விடவும், அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அதற்குப் பிறகும், அறியப்பட்டும், போற்றப்பட்டும் இருக்கின்றன என்பதே ஆகும். இது போன்ற ஒரு பெருமைக்குரியவர் ஆனையாம்பட்டி ஆதிசேசய்யர் என்ற பெயருடன் விளங்கி, பின்னர் குஹானந்த பாரதி என்ற நாமம் தாங்கி துறவியான இசை மேதை.

"தனித்திருந்து வாழும் மெய்த்தவமணியே" என்ற தோடி ராகப் பாடலை கே பி சுந்தராம்பாள் அம்மையாரின் வெண்கலக்குரலில் நாம் அனைவரும் கேட்டிருப்போம் – அதே போல, "என்ன கவி பாடினாலும்" என்ற நீலமணி ராகப் பாடலை மதுரை திரு. சோமசுந்தரம் அவர்களுடைய உருக்கும் குரலில் கேட்டிருப்போம் - இந்தப் பாடல்களையும், இவை போன்ற பல இன்னிசைப் பொக்கிஷங்களையும் நமக்கு வழங்கி இருப்பவர் இந்தப் பெருமகனாரே.

இப்பெருமகனார் தமிழ் மீதும், இசை மீதும், இறைவன் மீதும் வைத்த தீராக் காதலால், பெயர், புகழ், பொருள் இவற்றைப் புறந்தள்ளி தெய்வீகப் பாடல்கள் வடிப்பதற்கே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர். இவர்தம் வாழ்க்கை பற்றிய விவரங்களையும், மேலும் இப்பெருமகனார் இசைக்கும், தமிழுக்கும் ஆற்றிய சிறப்பான பணி குறித்த செய்திகளையும் இக்கட்டுரை சுருக்கமாக வழங்குகிறது.

ஆதிசேசய்யரின் வாழ்க்கைக் குறிப்பு

ஆதிசேசய்யர் சேலம் மாவட்டம் நாமக்கல்லில் காவேரி நதிக்கரையில் உள்ள வெங்கரை என்னும் ஊரில் 1896 – ஆம் ஆண்டில் பிறந்தார் தந்தையார் சனபிரட்டி நாகேஸ்வர அய்யர், தாயார் சாரதா அம்மையார். சிறு வயது முதல் இவர் தந்தையாரிடம் கல்வி பயின்றார் – குறிப்பாக திருப்புகழை பொருளுடனும், இசையுடனும் நன்கு பயின்றார். பள்ளியில் படித்து அறிந்ததை விட தந்தையிடம் இருந்து இவர் கற்றதே அதிகம்.

இளமைக்காலம்

இறைப்பற்றும் தமிழ்ப்பற்றும் இசைப்பற்றும் இவருக்கு சிறு வயதிலேயே வாய்த்திருந்தன. அதன் காரணமாக இவர் கோவில்களுக்குச் சென்று வழிபடும்போது திருப்புகழ் பாடி மகிழ்வார். மேலும் பக்திப்பெருக்கினால் தானே இறைவன் மீது புதிய பாடல்கள் புனைந்து, அவற்றை அர்ப்பணிப்பார். தமிழ்ச்சுவையும் பக்திச்சுவையும் இவருடைய பாடல்களில் ஒன்றையொன்று விஞ்சும் படி அமைந்திருந்தன.

கற்ற கல்வியும், சீரிய ஒழுக்கமும் இவருக்கு இளம்வயதிலேயே நல்ல அராசாங்கப் பணியைப் பெற்றுந்தந்தது 18 வயது முதல் 22 வயது வரை தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சாமிசெட்டிபட்டியில் "கர்ணம்" பதவியில் பணி புரிந்தார். பின்னர் 23 வயதில் இராஜம்மாள் என்பவரை மணந்து தேவகுஜ்ஜரபுரி என்னும் ஆனையாம்பட்டிக்கு குடி பெயர்ந்தார்.

ஆனையாம்பட்டி வாழ்க்கை

தன்னுடைய 23 வயது முதல் 79 வயது வரை சேலம் மாவட்டம் கெங்கவல்லியிலேயே "கர்ணம்" பதவியில் பணி புரிந்தார். அப்போது ஆனையாம்பட்டியிலேயே அவர் வசித்து வரலாயினர். அங்கே அவருக்கு மைசூர் ஆஸ்தானவித்வான் ஜலதரங்கம் சுப்பையர் மற்றும் இசை ஆர்வலர் ராமச்சந்திர அய்யர் ஆகியோர்களுடன் நட்பு ஏற்பட்டது. இம்மூவரும் இசையிலும் திருப்புகழ்பாடி வழிபடுதலிலும் ஈடுபட்டுத் தெய்வீகப் பணியில் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர்.

1921-ஆம் ஆண்டு இம்மூவரின் அரும்முயற்சியால் ஆனையாம்பட்டியில் தைப்பூச விழா தொடங்கி வைக்கப்பட்டது மாபெரும் இசைக்கலைஞர்களும் இறை அருளாளர்களும் ஆனையாம்பட்டிக்கு வரவழைக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய இசையும், ஆன்மீகச் சொற்பொழிவுகளும் ஆனையாம்பட்டியை ஒரு புதிய பாதையிலே இட்டுச் சென்றன. இசையும் தமிழும் இறைவுணர்வும் சங்கமிக்கும் ஒப்பற்ற திருத்தலமாக ஆனையாம்பட்டி திகழத் தொடங்கியது. அன்று இப்பெருமகனார் ஆரம்பித்த வைத்த தைப்பூச விழா இன்றுவரை இறைவன் அருளால் தடையின்றி நடந்துவருகிறது.

இது போலவே, ஆத்தூரை அடுத்து உள்ள வடசென்னிமலையில் அப்பண்ணா சுவாமிகள் என்ற அருளாளரிடமும் தொடர்பு கொண்டு, ஆதிசேசய்யர் பங்குனி உத்திர விழாவைத் தொடங்கிச் செவ்வனே நடத்திவந்தார். இந்த விழாவும் ஆரம்பித்த நாள் முதலாய் இன்று வரை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழிசைப் பாடல்கள்

இத்தகைய பணிகளுக்கிடையேயிலும் அவர் இறைவன் மீது தமிழ்ப் பாடல்கள் தொடர்ந்து இயற்றி வந்தார். அவற்றுள் "தனித்திருந்து வாழும் மெய்த்தவமணியே", "என்ன கவி பாடினாலும்", "வேலன் வருவாரடி" மற்றும் "திருட்டு குலத்தினிலே" ஆகியவை மிக பிரபலம் அடைந்தன.

அக்காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த பெரும் இசைக்கலைஞர்களான சங்கீத கலாநிதி ஜி.என்.பாலசுப்பரமணியன், மதுரை சோமு மற்றும் கே.பி.சுந்தராம்பாள் அம்மையார் ஆகியோருடன் ஆதிசேசய்யருக்கு நல்ல நட்புறவு இருந்தது. அவர்களுக்காகக் கச்சேரியில் பாடுவதற்காகப் பிரேத்தியேகமாக பாடல்கள் புனைந்து கொடுத்து இருக்கிறார். எடுத்துகாட்டாக மதுரை சோமுவிற்காக அவர் இயற்றி கொடுத்த "என்னகவி பாடினாலும்" மற்றும் "முருகனை நினைந்துருகி" ஆகியவற்றை குறிப்பிடலாம். அதே போல, கே.பி. சுந்தராம்பாள் அம்மையாருக்காக "தத்துவம் என்ன சொல்லுவாய்?" போன்ற தமிழ்ச்சுவையும், இசைச்சுவையும், பக்திச்சுவையும் நிறைந்த பாடல்களைக் குறிப்பிடலாம். இத்தகைய பாடல்கள் கேட்போர் மனதைக்

கேட்ட மாத்திரத்திலே கொள்ளை கொண்டன. தமிழ் உணர்வையும், பக்தியையும் வளர்த்தன.

இசையும் தமிழும் இரண்டறக் கலந்த இவர் தொண்டு இத்துடன் நின்று விடவில்லை. வடபழனி திருக்கோவில் போன்ற முக்கிய ஆலயங்களுடனும் ஆதிசேசய்யர் தொடர்பு கொண்டு விழாக்காலங்களுக்காக வாழ்த்துப்பாக்களும் துதிப்பாடல்களும் இயற்றிக் கொடுக்கலானார். இந்த வகையிலே குறிப்பாக "நாமாவளிப் பாடல்கள்" என்னும் பிரிவில் எல்லோரும் எளிதாக இசையுடனும் தாளக்கட்டுடனும் பாடும் பொருட்டு அவர் இயற்றி வழங்கிய பாடல்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

தேடி வந்த விருதுகள்

இவருடைய தெய்வீகத் தமிழ்ப் பாடல்களைக் குறித்துக் கேட்டறிந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இவருக்கு "தமிழிசைமணி" என்ற விருது வழங்கி கௌரவித்தார். அவர்தம் பாடல்களைச் செவிமடுத்து ஆசி அளித்தார். அதே போல, ஸ்ரீ சிருங்ககிரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யா தீர்த்த பாரதி ஸ்வாமிகள், இவரை ஆஸ்தான வித்வானாக நியமித்து, "புலவர் மணி" என்ற விருதும் வழங்கினார்.

இறுதி ஆண்டுகள்

ஸ்ரீ சிருங்கரி ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருளாசியால் 25.5.1975 அன்று துறவறம் மேற்கொண்டார். அப்பொன்னாளில் இருந்து ஆதிசேசய்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸாது ஆனையாம்பட்டி குஹானந்த ஸ்வாமிகள் என்று அறியப்பட்டார்.

இவர் இயற்றிய இசைவடிவங்கள் "குஹாநந்த சிந்து" , ஸ்ரீ குஹாநந்த புகழ்", "ஸ்ரீ குஹாநந்த மணிமாலை", "மணிப்புகழ் மலர்" மற்றும் "ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மாலை" ஆகிய நூல்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கின்றன.

இவர் தனது 82 ஆவது வயதில், 2-12-1977 அன்று இறைவன் அடி எய்தினார்.

இசைக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு

தென்னிந்திய (கர்நாடக இசை) மரபிசையைச் செழிக்கச் செய்யும் வகையில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பல பாடல்கள் இருந்தாலும், தமிழ் இசைக்கு ஒரு தனி இடம் உண்டு. சமயக் குரவர் நால்வர், அருணகிரியார், ஆதிமூவர் இவர்கள் முதல் பல அருளாளர்களும், இசை மேதைகளும் வளர்த்த தமிழ் இசைக்கு ஆனையாம்பட்டி ஆதிசேசய்யர் ஆற்றிய தொண்டு புதுமையும் சிறப்பும் கொண்டு விளங்குகிறது.

பல மேதைகளின் தமிழ் இசைவடிவங்கள், இன்று மரபு இசை அரங்குகளில் பாடப்பட்டு வருகின்றன. நாமும் கேட்டு மகிழ்கிறோம். எனினும், சில சமயங்களில், இன்னும் ஆழ்ந்த பொருட்சுவைக்கும், சொற்சுவைக்கும், செறிவான தமிழுக்கும் நாம் ஏங்குகிறோம். ஆனையாம்பட்டி செ.நா.ஆதிசேசய்யரின் இசைப்படைப்புகளில் இத்தகைய கூறுகள் மிக அதிக அளவில் உண்டு

ஆதிசேசய்யர் இயற்றி நமக்குக் கிடைத்துள்ளவை (சற்றேறக்குறைய) 300 (முன்னூறு) இசை உருக்கள் ஆகும்.

இந்த இசை வடிவங்களில், கீழ்க்காணுபவை அடங்கும்:

1. புதிய தமிழ் கீர்த்தனைகள்
2. "மோக்ஷமு கலதா" போன்ற பிரபலமான உருப்படிகளின் மெட்டுக்கு ஏற்ப இயற்றியுள்ள தமிழ் பாடல்கள்
3. தைப்பூசம் போன்ற குறிப்பிட்ட விழாக்காலங்களுக்கென சிறப்பாக இயற்றியுள்ள "தைப்பூச உத்சவ சிந்து" போன்ற இசை வடிவங்கள்
4. நாமாவளிக் கீர்த்தனைகள்
5. நவக்கிரகக் கீர்த்தனைகள்
6. கீர்த்தனைகள் பாடும் முன்பு (விரித்துப் பாடி) இசைக்கத்தக்க வகையில் இயற்றப்பட்டுள்ள வெண்பாக்கள், விருத்தப் பாக்கள் போன்றவை.
7. மேற்கண்ட பிரிவுகளில் அடங்காத வாழ்த்துப் பாக்கள், கோவில் விழாப் பாடல்கள் முதலியவை.

ஆதிசேசய்யரின் பாடல்களை சங்கீத கலாநிதி திரு ஜி.என். பாலசுப்பிரமணியன் (வேலன் வருவாரடி), மதுரை திரு.சோமசுந்தரம் (என்ன கவி பாடினாலும், முருகனை நினைந்துருகி), அம்மையார் கே பி சுந்தராம்பாள் (தனித்திருந்து வாழும் மெய்த்தவமணியே, தத்துவம் என்ன சொல்லுவாய், திருட்டுக் குலத்தினிலே, காவடி ஆடி வந்தால்) போன்ற இசை மேதைகள் பாடி இருக்கிறார்கள். இப்பாடல்கள் தமிழிசை உலகில் இசை ஆர்வலர்கள் கொண்டாடிப் போற்றும் புதிய வரவுகளாய் அமைந்தன. நாகத்தைக் குறிக்கும் "பணி" என்ற சொல்லை அவர்தம் முத்திரையாய்ப் பயன்படுத்தினார். அவர் வழங்கியுள்ள இன்னபிற பாடல்கள் சிலவற்றை இசைக்கலைஞர்கள் திரு டீ ஏ இராமன், இலட்சுமணன், மற்றும் ஆனையாம்பட்டி திரு. கணேசன் அவர்களும் இசையமைத்து இசை அரங்குகளில் பாடியுள்ளார்கள்.

முடிவுரை

இப்பெருமகனாரின் அரிய இசைப்படைப்புகள் இன்னும் பல இசையுலகில் இன்னமும் அறியப்படாமலே இருக்கின்றன. அவர் வாழ்க்கை பற்றிய குறிப்புகளையும், அவர் நமக்கு வழங்கியுள்ள இசையோவியங்களைப் பற்றிய முக்கியமான விவரங்களையும் ஆவணப்படுத்தும் வகையில் தஞ்சைப் பல்கலைக்கழகம் உதவியுடன் சில ஆய்வுகள் தற்சமயம் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆய்வுகள் தமிழ் இசை உலகிற்குப் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயம் இல்லை. அவர்தம் இசைப்படைப்புகளை இசையுலகில் உள்ள அனைவரும் அறிந்து கொண்டு பாடித் தாமும் மற்ற இசை ஆர்வலர்களும் இன்புற்று இறையருள் பெற்றுப் பயன்பெறுவதே நாம் அப்பெருமகனாருக்கும் தமிழிசைக்கும் செய்யும் மரியாதையும் நன்றிக்கடனுமாகும்.

ஆதாரங்கள்:

1. ஆனையாம்பட்டி ஆதிசேசய்யர், (கட்டுரை) பி.வி இராமன், தமிழ் இசை, ஆண்டு மலர் – 1991, சரஸ்வதி வாக்கேயக்கார அறக்கட்டளை

2. "ஸ்ரீ குஹாநந்தப் புகழ்" , 1931, விசாக விஜயசன்னிதானம் வெளியீடு

3. திரு.வீரபத்திரன் (சீடர்) அவர்களுடன் நேர்காணல்

திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் கோயில் ஓர் ஆய்வு

சு.பிரகதாம்பாள், முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு குந்தவை நாச்சியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்.

முன்னுரை

கடலூர் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவது கடலூர் என்னும் பெருநகரமாகும். அந்நகரம் தற்போது பழைய நகரம் என்றும், புது நகரம் என்றும் இரு பிரிவுகளாக உள்ளன. புது நகரம் இருக்கும் இடம் தற்காலத்தில் திருப்புலியூர் என அழைக்கப் பெறுகின்றது. இவ்வூரின் பழம் பெயர் திருப்பாதிரிப்புலியூர் என்பதாகும். இவ்வூரில் கி.பி. 7ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற பாடலீஸ்வரர் என்ற திருக்கோயில் உள்ளது. அக்கோயில் பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர் என்னும், அப்பர் அடிகளின் வரலாற்றோடு தொடர்புடைய ஒன்றாம் பல்லவர் காலத்திய இக்கோயில் செங்கத் தெளியாக பண்டு திகழ்ந்து இருந்து உள்ளது. பின்னர் பராந்தகச் சோழன் காலத்தில் கற்றலியாகப் புதுப்பிக்கப் பெற்றது. பராந்தகன் சோழன் காலம் தொட்டு இவ்வாலயத்திற்குப் பலராலும் அழிக்கப் பெற்ற நிபந்தங்கள் பற்றிய கல்வெட்டு சாசனங்கள் இங்கு பதிவுச் செய்யப்பட்டிருந்தன. சோழர்கள் காலம் கடந்து கோப்பெருஞ்சிங்கன் காலத்தும், பிற்கால பாண்டியர் காலத்தும், விஜயநகர அரசர்கள் காலத்தும் விஜயநகர அரசர்கள் காலத்தும் பல கல்வெட்டு சாசனங்கள் இவ்வாலயத்து கருவறை சுவரிலும், பிற இடங்களிலும் பதிவுச் செய்யப்பட்டிருந்தன.

கி.பி. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ் நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்ற பழையக் கட்டுமானப் பகுதிகளை அகற்றி புதியக் கற்கள் கொண்டு கோயிலை எடுத்துள்ளனர். இதனால் பண்டைய கல்வெட்டுக்கள் அனைத்தும் இடம் பெயர்ந்ததோடு, முழுமையில்லாமல் அழிந்துவிட்டன. பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயத்து வரலாற்றுச் சிறப்புக்களையும் மேலே குறிப்பிட்ட கல்வெட்டுக்களின் சிறப்புகள் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

திருக்கோயில் அமைப்பும் வரலாறும்

திருப்பாதிரிப்புலியூர் இறைவனின் திருநாமங்களாக பாடலீஸ்வரர் தோன்றா துணைநாதர் கன்னிவனநாதர், சிவகொழுந்தீசர், உத்தாரநாதர், கரையேற்றும்பிரான், என்ற பெயர்களும் இறைவியின் திருநாமங்களாக பீர்கன்நாயகி, பெரியநாயகி தோகை அம்பிகை, அருந்தவ நாயகி என்ற பெயர்கள் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் காலம் காலமாக, குறிப்பிடப் பெற்று காணப் பெறுகின்றன.

இத்தலத்தின் தலமரமாக 'படலம்' எனக் குறிப்பிடப் பெறும் 'பாதிரிமரம்' விளங்குகின்றது. இக்கோயிலின் தீர்த்தமாக பிரம்ம தீர்த்த குளமும், வங்கக் கடலும், திகழ்கின்றன. இவ்வூர் கெடில் நதிக்கரையில் திகழ்கின்றது. அகத்தியர் உபமன்யூ முனிவர் வியாக்கிரபாதர், கங்கை, அக்கினி, ஆகியோர் வழிபட்ட தலமாகப் புராண நூல்கள் குறிக்கின்றன. இத்தலத்திற்குக் கடைஞாழல், கன்னிவனம், பாடலபுரம், ஆதிமாநகர், உத்தாரபுரம், பாதிரிப்பதி, புலிசை எனப் பல பெயர்கள் வடக்கில் இருந்துள்ளன. திருநாவுக்கரசரை அப்பரை கல்லிற்பூட்டிக் கடலில் இட்டபோது சொற்று வேதியன் பதிகம் பாடி, நமசிவாய நற்றுணையாகக் கல்லே தெப்பமாக, வருணன் தன் கைகளால் தாங்கித் திருப்பாதிரிப்புலியூரின் பக்கத்தே அவரைக் கொண்டு

வந்து. கரை சேர்த்தான். அவ்விடம் தற்போது கரையேறவிட்ட குப்பம், வண்டிப்பாளையம் என்று வழங்குகின்றது.

ஞானசம்பந்தர், அப்பர், ஆகியோர் பாடல் பெற்ற தலம் அருணகிரிநாதரின் திருப்புகழ் உள்ளது. திருக்கோயில் உள்ள வீதி, பாடலேஸ்வரர் சந்நிதி வீதி என்றழைக்கப்படுகிறது.

கிழக்கு நோக்கிய கோயில், முன் மண்டபமுள்ளது. பக்கத்தில் உள்ள சிவகர தீர்த்தம், நல்ல படித்துறைகளுடன் உள்ளது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கோபுரத்தில் ஏராளமான சுதை சிற்பங்கள் உள்ளன. வாயிலைக் கடந்து உட்சென்றால் உயரத்தில் பநடிடம், செப்புக் கவசமிட்ட கொடிமரம், முன்னால் நந்தி முதலியவைகளைத் தரிசிக்கலாம். இடப்புறம் திரும்பின் திருக்கோயில் அலுவலகம், வெளிப்பிரகாரத் தலமரங்கள் உள்ளன. மரத்தடியில், விரஸகர், நாகப்பிரதிஷ்டை முதலியவை காணலாம். பாதிரி பூக்கும், ஆனால் காய்க்காது. சித்திரை மாதம் முழுவதும் பாதிரிப்பூ, பூத்திருக்குமாம். வலம் முடித்து துவார விநாயகர், துவார சுப்பிரமணியர், தொழுது வாயிலைக் கடந்து இடப்புறமாகத் திரும்பினால் உள் சுற்றில் சந்திரனை அடுத்து திருநாவுக்கரசர், உற்சவ மூர்த்தமும் அடுத்து மூலமூர்த்தமும் தனித்தனி சந்நிதிகளாக உள்ளன. அமர்ந்த கோலத்துடன் அப்பர் கை கூப்பி உழவாரத்துடன் காட்சி தருகின்றார். பக்கத்தில் பள்ளியறை அமைந்துள்ளது.

உற்சவத் திருமேனிகள் சந்நிதி வியாக்ரபாதர் அகத்தியர் முதலியோர் பூசித்த லிங்கங்கள், மீனாட்சி சுந்தரரேசர், வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகர் சந்நிதிகள் எதிரில் வலப்பால் தலமரமாக ஆதிபாதிரிமரம் கவசமிட்டுக் காக்கப்பட்டு வருகின்றது.

அம்பாள் கோயில் பக்கத்தில் தனியே உள்ளது. கிழக்கு நோக்கியது. முன் மண்டபத்தில் ரிஷபாருடன் காளிங்க நர்த்தனம், மோகினி நடனம், காமதேனு வழிபாடு, வீணவாணி, அவிர்சடைப் பெருமான் ஆஞ்சநேயர் முதலிய உருவங்கள் கற்றூணில் செதுக்கப்பட்டுள்ளன.

உள் சுற்றில் விநாயகர், ஆறுமுகர், உற்சவ அம்பாள் சந்நிதிகள் உள்ள. அம்பாள் நின்ற திருக்கோலம் நல்ல அழகு. அம்பாள் சந்நிதியை ஒட்டியே எதிரில் வீதியோரமாகப் பிற்காலப் பிரதிஷ்டையாகிய பிடாரி கோயில் உள்ளது. கோயிலில் எல்லா மாதாந்திர விழாக்களும், நவராத்திரி சஷ்டி, கார்த்திகை, சோமவாரங்கள், மாசிமகக் கடலாட்டு முதலிய அனைத்தும் நடைபெறுகின்றன. வைகாசியில் பிடாரி உற்சவமும் ஒருவார காலம் நடைபெறுகிறது.

அப்பர் சதயவிழா சித்திரை சதயத்தில் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. வெள்ளி ரிஷபத்தில் வீதியுலா, திருவையாறு கயிலைக் காட்சி, திருப்புகலூர் அ/மி. பாடலேஸ்வரர் ஒரு நாள் வண்டிப்பாளையத்திற்கும் எழுந்தருளுகிறார். அன்று அப்பர் சாமிகுளத்தில் தெப்பவிழா நடைபெறுகிறது.

இந்த ஆலயத்தில் இருந்த 28 கல்வெட்டுக்களை இந்திய தொல்லியல் வீட்டுதுறையின் கல்வெட்டு துறையினர் 1902ம் ஆண்டு படியெடுத்து பதிவு செய்துள்ளனர். இவற்றில் 21 கல்வெட்டுக்களைத் தென்னிந்திய கல்வெட்டு சாசனங்கள் தொகுதி 7 என்ற நூலில் கல்வெட்டு எண் 739ல் தொடங்கி 759 வரை கல்வெட்டின் மூல நகல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. எஞ்சிய கல்வெட்டு பதிவு செய்துள்ளனர். மதுரை கொண்ட பரகேசரி எனப்பெறும் முதலாம் பராந்தகச் சோழனின் 2 கல்வெட்டுக்கள்

தாம் இவ்வாலயத்தை பொறுத்தவரை பழமையான கல்வெட்டுக்களாகும். அவை கி.பி.925ம் ஆண்டில் இக்கோயிலில் வெட்டப்பெற்றவையாகும்.

இரண்டாம் கல்வெட்டு கோயில் ஊழியர்களுடன் நாராயணன் என்பவன் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றி குறிப்பிடுகின்றது.

பரகேசரிவர்மனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டில் பாக்குத்தோட்டம் பற்றியும், தென்னந்தோப்புப் பற்றியும் அவைகளை வழங்கிய கொடையாளர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. முதலாம் ராஜராஜசோழனின் சாசனங்களாக 2 கல்வெட்டுக்கள் இக்கோயிலில் பதிவுச் செய்யப்பெற்றுள்ளன.

முதலாம் ராஜேந்திர சோழனின் கல்வெட்டு சாசனமாக இவ்வாலயத்தில் ஒன்று மட்டுமே காணப்பெறுகின்றது. இக்கல்வெட்டில் திருமன்னி வளர எனத் தொடங்கும் இப்பேரரசரின் மெய்கீர்த்தி மட்டுமே காணப்பெறுகின்றது.

ராஜேந்திர சோழனின் மகனான இரண்டாம் ராஜேந்திர சோழனின் 5ஆம் ஆண்டு கல்வெட்டு கி.பி.1057 சேனாபதி ராஜேந்திர சோழபேனரையன் என்பானின் மனைவி சாத்தன் பிறாத்தலை என்பாள் திருப்பாதிரி புலியூர் சபையோரிடமிருந்து நிலம் ஒன்றினை விலைக்கு வாங்கி இக்கோயிலுக்கு அளித்தமையை விவரிக்கின்றது.

இரண்டாம் ராஜேந்திரனின் மைந்தன் ஆன ராஜமகேந்திரனின் 3ம் ஆட்சியாண்டில் கி.பி.1063 இக்கோயிலுக்கு இரண்டு திருவிளக்குகளுக்காக அளித்த கொடைப்பற்றி விவரிக்கின்றது.

இக்கோயிலில் உள்ள ஜனநாதவிடங்கர் என்ற பெயரில் உள்ள இறைவனுக்காக வரியில்லாத நிலமாக அளித்த கொடைப்பற்றி விவரிக்கப் பெற்றுள்ளது. கிழக்கு கோபுரத்தில் உள்ள வடமொழி கல்வெட்டு ஒன்றில் சபாபதி தீட்சிதர் என்பவர் பெயர் குறிக்கப் பெற்றிருப்பதோடு அவனிபாலன காடகமல்லன் என்பானின் மகனாகத் திகழ்ந்த அரசன் ஒருவன் பற்றியக் குறிப்புகளும் உள்ளன.

முடிவுரை

இவ்வாலயத்துக் கட்டுமான அமைப்புகள் மற்றும் சிற்பங்கள், ஆகியவற்றை ஆராயும்போது பெரும்பாலானவை 20 ஆம் நூற்றாண்டில் நகரத்து செட்டிமார்களால் புதுப்பிக்கப் பெற்ற ஆலயமாக உள்ளது. இதனால் சோழர் காலத்து கல்வெட்டுகளையோ, கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டுக்களையோ மூலஸ்தான சுவர்களில் காண இயலவில்லை. இவ் ஆலயம் புதுப்பிக்கப் பெறுவதற்கு முன்பாகவே இந்திய தொல்லியல் துறையினர் கல்வெட்டுக்களைப் படியெடுத்து பாதுகாத்தாலும் அவற்றை நூல்களில் வெளியிட்டதாலும் நாம் அக்கோயில் பற்றியச் செய்திகளைக் கால வரிசைப்படி அறிய இயலுகிறது.

கல்வெட்டுக்களைத் தொகுத்து நோக்கும்போது இவ்வூரின் பெயரும், இறைவனின் பெயரும் காலந்தோறும் பல மாற்றங்களைப் பெற்றமையை அறிய முடிகிறது. மேலும் சோழர் காலத்தில் இவ்வாலயத்தின் புராணச் சிறப்புகளை விவரிக்கின்ற கன்னிவன புராணம், ஏகாதச புராணம் போன்ற நூல்கள் நாடகங்களாக எழுதப்பட்டன என்பதும் அறிகிறோம். இக்கோயிலுக்காக காலந்தோறும் அளிக்கப் பெற்ற கொடைகள் பற்றிய விவரங்களை விரிவாக நம்மால் அறிய இயலுகின்றது. நிலமாகவும் கால்நடைகளாகவும், பொற்காசுகளாகவும் அத்தகைய கொடைகள் வழங்கப் பெற்றன என்பதும் அறிகிறோம். இத்திருக்கோயில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற இரு அருளாளர்களால் தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்கோயில் என்பதால்

கி.பி.7ஆம் நூற்றாண்டில் இத்திருக்கோயில் பெற்ற முக்கியத்துவம் பற்றி நம்மால் அறிய முடிகிறது. திருவிடைமருதூர் திருக்கோயில் போன்றே திருப்பாதிரிப்புலியூர் திருக்கோயிலும், திருப்பணிகளால் வரலாற்று கல்வெட்டுகளை இழந்த கோயில் என்பது வருத்தம் அளிக்கும் செய்தியாகும். நற்பேரரசு இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுத் துறையினர் 1902 ஆம் ஆண்டிலேயே இக்கோயில் கல்வெட்டுச் சாசனங்களைப் படி எடுத்துக் காப்பாற்றியதால் மட்டுமே இன்று நாம் அக்கோயிலின் வரலாற்றை அறிய இயலுகிறது.

அடிக்குறிப்புகள்

1. S.I.I. Vol VII. Nos 740,744.
2. மேலது, கல்வெட்டு எண். 742.
3. மேலது, எண்.754, 739.
4. மேலது, எண். 755
5. S.I.I. Vol. VII. Nos. 748.
6. மேலது, கல்வெட்டு எண். 743.
7. ARE, 1953 -4 எண். 301.
8. S.I.I. Vol. VII. Nos. 759.
9. ARE, 1954 -5 எண்.296.
10. ARE, 1954 -5 எண்.297.
11. ARE, 1953 -5 எண்.300.

பாரதிதாசன் கவிதை வழி பெண்ணியல் சித்தரிப்பு

ந.பிரபாகரன், முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

முன்னுரை

19 ஆம் நூற்றாண்டுகளில் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர் பாரதிதாசன். பாரதிக்குத் தாசனாக விளங்கியவர். பாரதியால் நீர் ஊற்றப்பட்டு, பகுத்தறி பகலவனிடமிருந்து சூரிய ஒளியை பெற்று வளர்ந்த மரம் பாரதிதாசன் ஆவார். பாரதி பெரியாரின் வழி நின்று பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். எதற்கும் அஞ்சாமல் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்தவர். அவர் வழி நின்று பெண்ணியல் சித்திரிப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கைம்பெண் காதல்

கணவனை இழந்த பெண்களின் வாழ்வு மிகவும் துயரம் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. அவர்களின் இந்நிலையை எடுத்துரைத்தவர் புரட்சிக்கவிஞர். கைம்பெண்ணானவள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று ஒரு வரையறையை வகுத்தனர். ஆனால் பாரதிதாசன், அவர்களுக்கும் உடல் இருக்கிறது. உள்ளம் இருக்கிறது என்று நினைத்துப்பார்த்து அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தார். அதற்குத் தீர்வு அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தல் என்னும் முடிவுக்கு வந்தார்.

இவருடைய அரசியல் குருவான தந்தை பெரியாரின் இயக்கம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளித்திட தீவிரமாகப் போராடியது. பல விதவைகளுக்குத் திருமணம் நடத்தி வைத்தது. துணையிழந்த ஆண் ஒரு பெண்ணோடு வாழ்க்கையைத் தொடர்வது போன்று, பெண்ணும் துணையிழந்தபின் வேறு ஆணோடு வாழ்க்கையைத் தொடர தகுதி பெற்றார்கள். காதல் என்பது இதயம் உடைய ஒவ்வொரு உயிருக்கும் உரியது. அப்படி இருக்கும்போது ஏன் ஒரு விதவைக்கு காதல் உணர்வு இருக்கக்கூடாது என்று நினைத்த கவிஞரின் உள்ளம்.

இளமை தந்தாய் உணர்வு தந்தாய் இன்பங் காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கை தேவி
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட்டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மை கூறி!

என்று பாடுகிறது. காதல் என்பது இயற்கையின் ஆற்றலால் ஏற்படுவது. அதனைத் தடுக்க இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறார். இவ்வாறு உணர்ச்சிப் பொங்க கேட்கின்ற கவிஞர் அதற்கு தீர்வையும் கூறுகிறார். கைம்பெண்ணானவள் அக்கைமைச் சுமையை வேறொரு ஆணின் துணையால் இறக்கி வைக்க வேண்டும் என்கிறார். பெண்ணின் கைம்மை நிலைக்கு ஆதரவு கொடுப்பவர்களும் அதற்குத் தடை ஏற்படுத்துபவர்களும் பெண்கள்தான். அதனால் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றார். கவிஞர் இதனை,

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர் - ஒரு
கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திடச்

சாத்திரம் பார்க்காதீர்

என்று பாடுகிறார். இப்பாடலின் மூலம் கைம்பெண்களின் காதலுக்கு மதிப்புக் கொடுங்கள், திருமணம் செய்ய சாத்திரம் பார்க்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கணவனின் மறுமணம்

சமூக அநீதிகளில் ஒன்றாகக் கருதப்படுவது மனைவி இருக்கும்போதே வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துக்கொள்வதுதான். இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுவது குழந்தையின்மை. குழந்தைகளைப் பெற்றெடுத்த தம்பதியர்களின் ஆணுக்கு கடைசி பிள்ளையின் மீதும், மனைவிக்கு முதல் பிள்ளையின் மீதும் அன்பு அதிகமாய் இருக்கும் என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் கடைசிப்பிள்ளை கணவனின் ஆண்மையையும், முதல் பிள்ளை கணவனின் குடும்பத்தில் அப்பெண்ணுக்குத் தாய் என்ற உரிமையையும் பெற்றுத் தந்ததாகக் கூறுவர். ஆகவே பெண்ணுக்குத் திருமணமானவுடன் குழந்தைப் பெற்றுத்தருவது ஒரு கடமையாக கருதுவர். இந்நிகழ்வு நிகழவில்லை என்றால் கணவன் வீட்டாரால் வசைச் சொற்களுக்கு ஆளாகிறார்கள். இது கைம்மை நிலையை விட மிகக் கொடுமையானது.

இச்சூழ்நிலையில் அப்பெண், தன் கணவன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்ய சம்மதிக்க வேண்டும். இக்கொடுமையைக் கண்ட பாவேந்தர், முத்துமாலை என்னும் பகுதியில் ஒரு பெண்ணின் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். அப்பெண் கணவனிடம் கெஞ்சுவதை,

ஒடுக்கிடுமோ ஆற்று நீரைக் கடல்வெள்ளம் - என்னை
ஒதுக்கிவைக்க எண்ணலாமோ முத்துமாமா
முதல்மனைவி நானிருந்தும் முத்துமாமா - அந்த
மூளியை நீ எண்ணலாமா முத்துமாமா?
குதிகுதியாய்க் குதித்ததுண்டு முத்துமாமா - எனக்குக்
குழந்தையில்லை ஆனாலும் முத்துமாமா
எதிலும் எனக்கதிகாரம் முத்துமாமா - நீதான்
எப்போதுமே என் சொத்து முத்துமாமா!

என்று குழந்தையில்லாத பெண்ணின் நிலையை மிகவும் உருக்கமாகக் கூறுகிறார்.

கேலி கிண்டலுக்குப் பெண்கள் ஆளாகுதல்

பெண்கள் கேலி, கிண்டலுக்கு ஆளாக்கப்பட்டு மன உலைச்சலுக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் அவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு வந்து விடுகிறார்கள்.

கல்விநிலையங்கள், ஆலயங்கள் மற்றும் இதர வழிபாட்டுத்தளங்கள், பேருந்து நிலையம் அல்லது பேருந்து நிறுத்தங்கள், பேருந்து இதுபோன்ற இடங்களில் பெண்கள் பெரிதும் ஆண்களால் கேலி செய்யப்படுகிறார்கள்.

இதனைத்தடுக்க பெண்களுக்கு தொல்லைக்கொடுத்தல் தடுப்புச்சட்டம் 1998 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. (தமிழ்நாடு சட்டம் 39\2002) The TamilNadu Prohibition of Harassment of women Act.1998. Tamil Nadu Act No.39\2002).

ஆனால் இதுபோன்ற தடுப்புச் சட்டங்கள் பாரதிதாசன் வாழ்ந்தகாலத்தில் இல்லை. இருப்பினும் பெண்கள் ஆணாதிக்க சமூகத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை, தெளிவுபடுத்துகிறார். பாரதி கூறிய ரௌத்திரம் பழகு என்ற கருத்தை மனதில் கொண்டு பெண்களுக்கு அறிவுரை கூறுகிறார். இதனை,

தனித்து வரும்போது - கெட்ட
தறுதலை கண்வைத்தால்
இனிக்க நலம்கூறு - பெண்ணே
இல்லாவிடில் தாக்கு

என்று கூறுகிறார். இதன் மூலம் பெண்ணே! நீ தனியாக வரும்போது ஆண்கள் தொந்தரவு செய்தால் பெண்ணுக்குள்ள குணத்தால் அவனுக்கு அறிவுரை கூறு. அதையும் மீறி அவன் செயல்பட்டால் எவ்விதத் தயக்கமுமின்றி அவனைத் தாக்கிவிடு என்று அறிவுரைகூறுகிறார்.

பெண் கல்வி

நாடு முன்னேற்றம் அடைய பெண்களின் முன்னேற்றம் இன்றியமையாதது. பெண்கள் உரிமைப் பெற கல்வி வேண்டும். ஆடவன் மட்டும் படித்துப் பெண்கள் படிக்காமலிருப்பது பாதியுடலில் உயிரும், பாதியுடலில் உயிர் இல்லாமலும் செய்கின்ற பாரிச வாயு போல என்று வேதநாயகம் பிள்ளை அவர்கள் பெண் கல்வி வேண்டுமென வலியுறுத்துகிறார்.

இதே போன்று பாரதிதாசனும் பெண்கள் கல்விபெற்று பல கலைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று அழகின் சிரிப்பில் கூறுகிறார்.

நிலைப்பூ விழிமங்கையர்
தலையாய கலைகள் ஆய்ந்து
தம்வீடு போதல் கண்டேன்
உலவிடு மடைமை போயின
உடம்பின் தோல் உரிதல் கண்டேன்

என்று பாடுகிறார். இதில் பெண்கள் கல்விக்கற்றால் அறியாமைப் போய்விடும் என்கிறார். மேலும் பெற்றோரிடத்தில்

பெற்ற நல்தந்தை தாய்மாரே - நும்
பெண்களை கற்கவைப்பீரே
இற்றை நாள் பெண் கல்வியாலே - முன்
னேற வேண்டும் வையமேலே

என்று பெண்கல்வியை வலியுறுத்துகிறார்.

பெண்களின் முன்னேற்றத்துக்கும் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கும் எதிர்த்துக் குரல் கொடுத்து வந்துள்ளார். அவரது கவிதைகளை ஆராய்ந்து எதிர்நோக்கும் போது பெண்களாலே இந்த நாடு முன்னேறக்கூடும் என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். எனவே பாரதிதாசனின் வழிநின்று நாமும் பெண்ணினத்தைப் போற்றிப் பாதுகாப்போம்.

செம்பனார் கோவில் அருள்மிகு ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் கல்வெட்டுச் செய்திகள் - ஒரு பார்வை

முனைவர் ம.பிரியா, கௌரவ விரிவுரையாளர், தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

தமிழக வரலாற்றையும் கோவில்களையும் அதன் பண்பாட்டையும் அறிந்து கொள்ள இலக்கிங்களை விட கல்வெட்டுகளே பெரிதும் துணைபுரிகின்றன. செம்பொன்னார் கோயில் சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் ஆறு கல்வெட்டுகள் கி.பி.1965-ம் ஆண்டில் அரசாங்கத்தாரால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் எழுதப்பட்டிருக்கும் செய்திகள் மூலம் இத்திருக்கோயிலின் வரலாற்றுப் பின்னணி அறியப்படுகிறது. இக்கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்க சோழன் கால கல்வெட்டுகள் மூன்றும், ராஜாதிராஜ சோழ தேவர் காலத்திய கல்வெட்டுகள் இரண்டும் தஞ்சை சரபோஜி மன்னன் கால கல்வெட்டுகள் ஒன்றும் உள்ளது.

கோவிலின் தோற்றம் பற்றிய கல்வெட்டு செய்திகள்

அங்கு கிடைக்கப் பெற்றுள்ள இக்கல்வெட்டுகளை ஒப்பு நோக்கும் பொழுது அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோவில், முதலாம் ஆதித்தசோழன் (கி.பி. 871-907) காலத்தில் கட்டப்பட்ட கற்றளி என்பது புலனாகிறது. ஆனால் ஆதித்த சோழனால் எடுப்பிக்கப்பட்ட இக்கற்றளி பின்னாளில் அழிந்துவிட்டது. அதன் பின் இம்மன்னனின் வழித்தோன்றலான மூன்றாம குலோத்துங்க சோழன் (கி.பி.1178-1218) அக்கற்றளியில் இடம் பெற்று இருந்த இறை உருவங்களையும் கட்டுமானக் கற்களையும் அப்படியே பின்னாளில் திருப்பணி செய்யும் போது பயன்படுத்தியுள்ளான். ஆதித்தன் காலத்திய அற்புதப் படைப்புகளான கருங்கல் திருமேனிகள் எல்லாம் இத்திருக்கோயிலில் அப்படியே உள்ளன. ஆதித்தன் காலத்து கற்றளி அழிந்ததற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. அவை,

திருச்செம்பொன் பள்ளியார் திருக்கோயிலின் வடக்கு திருமதில், திருத்தேரேற்றுக் கூடம் இவற்றை எடுத்துக்கட்டி நன்னிலைப் படுத்த ஆக்கூர் நாடாள்வார் என்பாருக்கு மூன்றாம் குலோத்துங்கச் சோழன் ஆணை இட்டதை இக்கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது. இதிலிருந்து பெருமழை, பெரும்புயலால் இத்திருக்கோயில் அழிந்தது என்று உணரப்படுகிறது.

இது தவிர கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் ராஜாதி ராஜனின் காலத்தில் இம்மன்னன் சிங்களவருடன் போர் தொடுத்தான். அப்போது எதிரிகளுக்கு அஞ்சி இத்திருச்செம்பொன் பள்ளி உடையார் கோவிலின் தேவரடியாரும், நியாயத்தாரும் இக்கோயிலில் திருமேனிகளை எல்லாம் திருவிடைக்கழி திருக்கோவிலில் வைத்து பாதுகாப்பு செய்திருந்தனர். பின்னர் மூன்றாம் குலோத்துங்கன் அவற்றை மீட்டுக்கொண்டு வந்து எழுந்தருள்வித்து பூஜை தொடங்கச் செய்தார் என்று இதே கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆதித்தனின் கற்றளி அழிந்துபடுவதற்கு சிங்களவர் படையெடுப்பும் ஒரு காரணமாகி இருந்துள்ளது என்பதனை இக்கல்வெட்டு தரும் செய்திகளால்

அறியமுடிகிறது. இக்கல்வெட்டு திருக்கோயிலின் மண்டபத்தில் கிழக்குபுறச் சுவற்றின் நடுவில் பதிக்கப்பட்டுள்ளது.

ஆதித்தன் காலத்து எழில்மிக்க இக்கற்றளி இயற்கை சீற்றத்தால் இடிபாடுற்ற போது முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்பு வந்த மன்னன் புனர்நிர்மானம் செய்ததுடன் வேறு கோயிலுக்கு எடுத்துச்செல்லப் பட்ட திருமேனிகளை மீட்டது கூட வியப்பில்லை. ஆனால் பகைவர்களால் அழியும் என்றநிலை வந்தபோது கோயில் சிலைகளையெல்லாம் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்ற நியாயத்தார் மற்றும் தேவரடியாரின் செயல் போற்றப்படக்கூடிய ஒன்று. இதனை குலோத்துங்கசோழனே கல்லில் எழுதி வைத்துள்ளமை அவர்களில் செயல்களை பாராட்டுவதாக அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் மிகவும் ஏற்றம் பெற்றிருந்தது என்பதற்கு முற்காலச் சோழர்களின் கலைப்பாணியில் அமைந்துள்ள பல சிற்பங்கள் சான்று பகர்கின்றன. இக்கோயிலின் முகமண்டபத்தின் தென்புறம் ஆதித்த சோழன், அவனது அமைச்சர், மகன் பராந்தகன் ஆகியோரின் கல்லுருவங்கள் சிற்பங்களாக செதுக்கப்பட்டு பின்னர் அவற்றில் பதிக்கப்பட்டுள்ளன. இத்திருக்கோவில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்ட போது இத்திருக்கோவிலில் இடம் பெற்றிருந்த முதல் ஆதித்த சோழனின் உருவச்சிலை உள்ள கற்பலகையை மீண்டும் முன் மண்டபத்தின் தென்புறச் சுவற்றில் இடம்பெறச் செய்துள்ளான். இதில் மூவரின் உருவங்கள் காணப்படுகிறது. நடுவில் உள்ளது ஆதித்தன் சிலை என்றும், அருகில் தாடியுடன் உள்ளது அவரது அமைச்சர் சிலையாகவும், இளம் வயதினராக திகழ்வது பராந்தகன் சிலை என்றும் கொள்ளலாம்.

மூன்றாம் குலோத்துங்கசோழன் காலக் கல்வெட்டு

இக்கல்வெட்டு எந்த ஆண்டு எழுதப்பட்டது என்று தெளிவாகத் தெரியவில்லை. இத்திருக்கோவில் மண்டபத்தின் தென்புறச் சுவற்றின் மத்தியில் இக்கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது.

"திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர் ஆட்சிக்காலத்தில் திருச்செம்பொன்பள்ளி உடையார் திருமுனை திரு அர்த்தசாமத்தில் சந்திவிளக்கு ஏற்றுவதற்காக கௌதமன் மாதன பூஜ்யர் என்னும் சிவப்பிராமனரிடம் இக்கோயில் பூசகர்கள் அலுவலர் நாற்பது பொற்காசு பெற்றுக்கொண்டதைக் குறிக்கிறது." இக்கல்வெட்டு தரும் செய்தியிலிருந்து கோவிலில் விளக்கு எரிப்பதற்கு மன்னர்கள் மட்டுமல்லாது. மற்றவர்களும் அறக்கொடைகள் அளித்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

ஸ்ரீ ராஜதிராஜ சோழதேவரின் காலத்திய கல்வெட்டு

இக்கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ சோழதேவரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு திரு இந்தளூர் நாட்டு மணற்குடி ஊர்ச் சபையார் மேல் பிடாகை அபிமான மேருநல்லூரில் உள்ள திருவாலங்காடுடையார் என்னும் இறைவனுக்கு இம்மன்னனின் திருமேனிநலம் வேண்டி நில தானம் செய்ததைக் குறிக்கிறது.

இக்கல்வெட்டுச்செய்தி ராஜாதி ராஜன் உடல் நலம் குன்றியிருந்ததும், நோய்தீர வேண்டி மன்னன் மீது பற்றுக் கொண்ட மக்கள் இறைவனுக்கு தானம் வழங்கியதையும் உணர்த்துவதாக உள்ளது. இந்த கல்வெட்டு, கோயில் மண்டபத்தில்

வடக்குபுற சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது. இதே மண்டபத்தில் இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டும் உள்ளது.

"திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதி ராஜசோழ தேவரின் ஐந்தாம் ஆட்சி ஆண்டில் விளநகர் ஊர்ச் சபையார் 'திருவாலங்காட்டுடையார்' என்னும் இறைவர்க்கு நிலத்தானம் செய்ததைக் குறிக்கிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டு

இத்திருக்கோயிலின் அர்த்தமண்டபத்தில் மேற்குச் சுவரின் வெளிப்புறம் இக்கல்வெட்டு காணப்படுகிறது. "திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவரின் ஆறாம் ஆட்சி ஆண்டு துவங்கி ஐம்பத்து ஐந்தாம் நாள் இக்கல்வெட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அபிமான மேருநல்லூரில் "திருவாலங்காடுடையார்" என்னும் இறைவர்க்கு தலைச்சங்காட்டு ஊர்ச்சபையார் நிலத்தானம் செய்ததைக் குறிக்கிறது.

தஞ்சை சரபோஜி மன்னன் கால கல்வெட்டு

இக்கல்வெட்டு இந்தத் திருக்கோயிலின் முகப்புச் சுவற்றில் பதித்து வைக்கப்பட்டுள்ளது. கிராமங்களின் நன்மைக்காக தலைச்சங்காட்டுச் சபையார் "கறிகளின் வரிகளோடு" கூடிய உற்பத்தியளவையொட்டி ஆயம் வசூலித்துக் கொள்ள உரிமை கொடுத்தும், அவ்வசூல் செய்யும் அதிகாரிகளாக காவேரிப்பட்டிணம் ஐயாவையன், தாண்டவராய முதலியார் என்பவர்களை நியமித்தும் ஏற்படுத்திய கல்வெட்டு, செம்பொன்னாதர் கோவிலில் இவ்வரி வருமானத்தைக் கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும் என்பது அக்கல்வெட்டின் குறிப்பு, இந்த கல்வெட்டுகள் அனைத்தும் பழைய தமிழ் மொழியிலேயே உள்ளன. தலைச்சங்காட்டு ஊர் சபையினரால் மிகவும் போற்றப்பட்ட திருக்கோயில் இது என்பதை இந்த கல்வெட்டு சாசனங்கள் தரும் செய்தியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

சோழர் காலத்தில் கோவில் சமுதாயத்தின் முதுகெலும்பாகவும், உயிர்நாடியாகவும் விளங்கியுள்ளது. செம்பனார்கோவில் ஸ்ரீசொர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் கல்வெட்டுகள் மூலம் கோவில் பராமரிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் மன்னன் மட்டும் அல்லாமல் மக்களும் தானங்கள் அளித்துள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. சோழ மண்டலத்து வரலாற்று சிற்பங்களும் ஓவியங்களும் – குடவாயில் பாலசுப்பிரமணியன்-பக்கம்-66.; 2. Annual Reports an Indian Epigraphy for the year 1922-1925 Printed as S. Narayanan & Sons 1986. S.No.171.; 3.சிறப்புக் கட்டுரை – குடவாயில் பாலசுப்பிரமணியன் தினமணிக்கதிர் நாள் 04.11.1983.; 4. அட்ட வீரட்ட தலங்கள் – அ.அறிவொளி பக்கம்-118 to 119.; 5. ஸ்ரீசுவர்ண புரீஸ்வரர் திருக்கோயில் தல வரலாறு -அலுவலகப் பேரேடு மற்றும் தனிக்கை அறிக்கைகள்.; 6. திருச்செம்பொன்பள்ளி தல வரலாறு – வி.சா. குருசாமி தேசிகர் திருப்பறியலூர் பக்கம்-21.;7.இந்திய கோவில் கட்டிடகலை வரலாறு – Dr. R. வெங்கட்ராமன். பக்கம்-2.

திருவிடைமருதூர் வட்டாரக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் மருத்துவர்கள்

ச.ச. பீஷ்மஷங்கர், முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இடைக்காலத் தமிழகக் கல்வெட்டுக்கள் சோழர் கால மருத்துவம் தொடர்பான பல அரிய தகவல்களைத் தருகின்றன. அவ்வகையில் திருவிடைமருதூர் வட்டாரத்திலுள்ள மருத்துவம் தொடர்பான சில கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வே இக்கட்டுரை.

சோழர் காலத்தில் மருத்துவக்கலை சிறப்பாக வளரச்சியடைந்திருந்தது. தலைமுறை தலைமுறையாக மருத்துவக்கலை பயின்ற மருத்துவ குலத்தினர் நோய்களை நீக்குவதற்குரிய மருந்துகளையும் மூலிகைகளையும் பயன்படுத்தி மருத்துவம் செய்தனர். அறுவை மருத்துவம் சிறப்புற்று விளங்கியது. போரில் புண்பட்டவர்களுக்கு பல்வகையான அறுவை மருத்துவம் செய்யப்பட்டது. அக்காலத்தில் மருத்துவமனைகளும் நிறுவப்பட்டிருந்தன. அவை ஆதுல சாலைகள் என்றும் ஆதூர சாலைகள் என்றும் அழைக்கப்பட்டன.[1] கோயில்கள் பலவற்றிலும் அவற்றின் ஒரு பகுதியாக ஆதூலர் சாலைகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. ஆதுலர் எனும் சொல்லுக்கு நோயாளி என்றும் ஆதுலர் சாலை எனும் சொல்லுக்கு மருத்துவசாலை என்றும் பொருள் ஆகும்.[2]

தமிழ்க் கல்வெட்டுக்களைப் பொறுத்தவரையில் பொ.ஆ. 781 ஆம் ஆண்டிலேயே மருத்துவன் என்ற சொல் முதன் முதலாகக் குறிப்பிடப்படுகிறது.[3] பொ.ஆ. 1307 ஆம் ஆண்டைச் சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டு ஒன்று வைத்தியரை ப்ராணோபகாரன் என்றும் குறிப்பிடுகிறது.[4]

அறுவை மருத்துவர்

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டத்தில் அமைந்துள்ள திருவிசலூர் சிவயோகிநாதர் கோவிலில் உள்ள முதலாம் இராஜேந்திரசோழனின் பொ.ஆ. 1016 ஆம் ஆண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுகள் சோழர் காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த அம்பட்டர் குலத்தினர் பற்றிய செய்திகள் பதியப்பட்டுள்ளதால் இவை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

முதல் கல்வெட்டு முதலாம் இராஜேந்திரசோழனின் அத்தையும் அவனது மூத்த சகோதரியுமான ஆழ்வார் ஸ்ரீபிராந்தகன் குந்தவைப் பிராட்டியார் பழையாறு அரண்மனையில் இருந்த போது திருவிசல்லூர் ஸ்ரீ சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலத்து அம்பட்டன் அரையன் உத்தம சோழனான இராஜேந்திரசோழ பிரயோகதரையன் மற்றும் அவனது குடும்பத்தினருக்கு ஸல்யக்ரியாபோகம் எனும் பெயரில் 1 வேலி 4 மா நிலமும் ஒரு மனையும் கொடையாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இந்நிலமானது நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டு பிரம்மயேம் ராஜகேசரி சதுர்வேதி மங்கலத்தில் அமைந்துள்ளது. இராஜேந்திரசிங்க வளநாட்டு மண்ணி நாட்டு பிரம்மதேயம் வேம்பாற்றூரில் மனையும் ஒதுக்கபட்டுள்ளது.[5]

இரண்டாம் கல்வெட்டு குந்தவைப் பிராட்டியே மேற்சுட்டிய அதே நபருக்கு சல்லிய போகம் எனும் பெயரில் மற்றொரு கொடை வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இந்நிலமானது பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்காட்டுக் கூற்றத்து ஸ்ரீ பிராந்தக சதுர்வேதி மங்கல பிரம்மதேயத்தில் அவ்வூர்ச் சபையாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.[6]

ஆட்பெயரின் முன்னொட்டான 'அம்பட்டன்' எனும் சொல் நாவிதர் அல்லது மயிர் வினைஞர்களைக் குறித்தாலும்,[7] சிறப்பான பொருளில் மருத்துவர் என்று பொருள் கொள்வதே இங்குச் சரியானதாகும்.[8] ஏனெனில், அம்பஸ்த எனும் சமஸ்கிருத சொல்லின் தமிழ் ஒலி பெயர்ப்பே (Transliteration) அம்பட்டர் என்பது. அம்பஸ்தா என்னும் சொல்லுக்கு வடமொழி வேர்ச்சொல் அம்பா (பக்கம்) + ஸ்தா (நிற்பவன்) = அம்பஸ்தா. ஆண்பாலைக் குறிக்கும் இச்சொல் மருத்துவசாதியினரையும் குறிக்கும்.[9] இதன் பொருள் பக்கம் இருப்பவன் என்பதாகும். தன்னிடம் மருத்துவம் பார்த்துக் கொள்பவன் அருகிலோ சவரம் செய்து கொள்பவன் அருகிலோ இருப்பவன் என்னும் பொருளை இது தருகிறது. இப்பெயர் முதலில் இவர்கள் செய்த மருத்துவத் தொழிலுக்கு உரியதாயிருந்திருக்கலாம். பின்னர் சவரத்தொழிலும் இசைத் தொழிலும் இவர்களுக்கு உரியதாயிருக்கலாம்.[10]

'ஸல்யக்ரியாபோகம்', 'சல்லியபோகம்' எனும் சொற்கள் முறையே அறுவை மருத்துவருக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலத்தையும் குறிக்கும்.[11] 'பிரயோகம்' என்பதும் மருத்துவ சிகிச்சையைக் குறிக்கும்.[12] ஸல்யக்ரியா எனும் சமஸ்கிருத சொல்லுக்கு முள் அல்லது உடலுக்கு ஊறு விளைவிக்கும் பொருட்களை உடலிருந்து அகற்றுதல் என்றும் பொருள்.[13] பௌத்த மத இலக்கியங்களும் அறுவை மருத்துவரை 'சல்லகட்டா' என்று குறிப்பிடுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[14] 'அரையன்' எனும் பட்டப்பெயர் இடம்பெறுவதும் இங்கு நோக்கத்தக்கது. அரையன் பட்டம் சாதாரணத் தொழிலாளர்கள் பெற இயலாது.[15] ஆகையால் சீரிய அரச சேவைக்காக வழங்கப்படும் சிறப்புப்பட்டப் பெயராக இதனைக் கருதலாம்.

மேற்கண்ட செய்திகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி நோக்கினால் கல்வெட்டில் கொடை பெற்றவராகக் குறிப்பிடப்படுபவர் மருத்துவத் தொழில் புரிந்த அம்பட்டர் குலத்தைச் சேர்ந்த சிறந்த அறுவை சிகிச்சை மருத்துவர் என்பதும் அவரது சிறப்பான மருத்துவ சேவையைப் பாராட்டியே அவரும் அவரது குடும்பத்தினரும் அனுபவிக்க இந்நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளதும் தெளிவாகும்.

நாவித அல்லது மருத்துவ சமூகத்திற்கும் இடையேயான நீடித்தத் தொடர்பை பின்வரும் கல்வெட்டுத் தகவல்களும் உறுதிசெய்கின்றன.

தமிழகத்தின் மருத்துவ அறிவியல் வரலாற்றிற்கு மிகச் சிறந்த சான்றாக விளங்கும் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் திருமுக்கூடல் வெங்கடேசப் பெருமாள் கோவிலில் உள்ள வீரராஜேந்திர சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டு அங்கு செயல்பட்ட ஆதுலர் சாலை பற்றிய தகவலை மிக விரிவாகக் கூறுவதுடன் அங்குள்ள நோயாளிகளுக்குப் பணிவிடை செய்த நாவிதர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு நான்கு நாழி நெல் ஊதியமாக வழங்கப்பட்டதையும் குறிப்பிடுகிறது.[16]

துறவிகளுக்கு மருத்துவம்

பொ.ஆ. 1129 ஆம் ஆண்டு திருக்கோடிக்காவல் திருக்கோடீஸ்வரர் கோவில் நிர்வாகிகள் தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டில் உள்ள திருவாவடுதுறை கோவிலில் 10 துறவிகளுக்கு உணவிட 1 வேலி நிலம் கொடையாக வழங்கியுள்ளதோடு, அத்துறவிகளுக்கு மருத்துவ சேவை புரிவதற்காக சத்ருமானியன் ஆளப்பிறந்தான் என்பவருக்கு ½ வேலி நிலமும் கொடையாக வழங்கியுள்ளனர்.[17]

அடிக்குறிப்புகள்

1. தமிழ் நாட்டு வரலாறு, சோழப் பெருவேந்தர் காலம், (நான்காம் தொகுதி - இரண்டாம் பகுதி - பொ.ஆ. 900 - 1300), ப. 74 - 75.
2. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்தி சாதனா, சென்னை, முதல் தொகுதி, ப. 51.
3. மேலது, இரண்டாம் தொகுதி, ப. 482.
4. மேலது, இரண்டாம் தொகுதி, ப. 378.
5. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 23/350.
6. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 23/ 351.
7. லிப்கோ தமிழ் அகராதி, ப. 29.
8. எ.சுப்பராயலு மற்றும் செ.இராசு, தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
9. Monier Williams, Sanskrit English Dictionary, Motilal Banarsidass, p. 83. (இச்சொல்லின் பிற பொருள்கள் - ஒரு நாடு மற்றும் அந்நாட்டிலுள்ள குடிகள், பிராமணனுக்கும், வைசியப் பெண்ணுக்கும் பிறந்த குழந்தைகள், யானைப் பாகன்.)
10. பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், ப. 122.
11. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்தி சாதனா, சென்னை. ப. 235.
12. எ.சுப்பராயலு மற்றும் செ.இராசு, மு.சு.நூல், ப. 124.
13. Sir Monier Williams, *Sanskrit English Dictionary*, p.1059.
14. Ranabir Chakravarti & Krishnendu Ray. *Healing and Healers Inscribed: Epigraphic Bearing on Healing Houses in Early India*, Institute of Development Studies Kolkata, July. 2011.P. 14.
15. எ.சுப்பராயலு மற்றும் செ.இராசு, மு.சு.நூல், ப. 116.
16. T.S.Sridhar, *Select Inscriptions of Tamil nadu*, pp.139-153.
17. ARE: 1930 -31/ 47.

தன்மதிப்பிற்கும் பெண்கல்விற்க்கும் இடையேயுள்ள தொடர்பு

கோ.புகழேந்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப் பல்கலைகழகம், தஞ்சாவூர்

முன்னுரை

கல்வி என்பது ஒரு மாணவன் அவன் எதிர்காலத்தில் சந்திக்கக்கூடிய சவால்களை திறம்பட கையாளுவதற்கேற்ப தயார் செய்வதாகும். இக்கல்வியானது மாணவனின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மிகத் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். சமூகத்தில் தோன்றும் மாற்றத்திற்கு ஏற்ப கல்வி முறையிலும் அவ்வப்போது சில மாறுதல்களைக் கொண்டுவர வேண்டும். இவற்றில் பெண்கல்விக்கென அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். கோத்தாரி கல்விக் குழுவானது மகளிர் கல்வி பற்றிக் குறிப்பிடும் கருத்தானது சிந்தனைக்குரியது. ஓர் ஆணுக்கு கல்வி அளித்தல் என்பது தனி நபருக்கு கல்வி தந்ததாக விளங்கும் . ஆனால் ஒரு பெண்ணுக்குக் கல்வி தரல் என்பது ஒரு குடும்பத்திற்க்கு கல்வி தந்ததாக அமையும் என்கிறது. ஆகவே பெண்கள் இவற்றில் உயர்ந்து விளங்க தன்மதிப்புகளை வளர்த்துக் கொண்டு தங்களது கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

கல்வி மதிப்புகள்

ஆதம்ஸ் என்பவரது கூற்றுப்படி , கல்வியானது இரு பக்கங்களைக் கொண்டது. ஒன்று ஆசிரியர், மற்றொன்று மாணவர். ஒரு ஆசிரியர் என்பவர் நடத்தையில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக பலவகையான உத்திகளையும், வழிமுறைகளையும் பயன்படுத்துகிறார். ஆசிரியர்களும் நல்ல பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்கவேண்டும். ஏனெனில் இவையனைத்தும் மாணவர்களுக்கு நல்ல மதிப்பைத் தரக்கூடிய பயன்பாட்டுச் செயலாக இருக்கும். ஆசிரியர் மாணவர்களுக்கும் சமுதாயத்திற்க்கும் மதிப்புள்ள மற்றும் பயன்தரக்கூடிய பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். இதேபோன்று மாணவர்களும் எது தங்களுக்கு மதிப்புள்ளதாகவும், பயன்படக்கூடியதாகவும் உள்ளதோ அவற்றில் பங்கேற்கிறார்கள் ஆசிரியர்களும், மாணவர்களும் இம்மாதிரியான செயல்களில் பங்கேற்பதால் கல்வியானது நல்ல மதிப்புள்ளதாகவும், பயன்தரத்தக்கதாகவும் இருப்பதாகக் கருதுகிறார்கள்.

தன் மதிப்பு

ஒருவன் யாராக இருக்கிறான். அவன் எவ்வாறு சிந்திக்கிறான் என்பதையே அவனது தன் மதிப்பு என்கிறோம். இதில் ஒருவனது தன்னம்பிக்கை சுதந்திர உணர்வு பலம் பெற்றுத் திகழ விழைதல் தேர்ச்சியும் திறனும் பெற்றுத்திகழ முயலுதல் போன்றவை அடங்கும். ஆகவே ஒருவர் தன்னைப் பற்றி உருவாக்கும் மதிப்பீடே தன் மதிப்பாகும்.

தன்மதிப்பு வரையறை

ரோஷன் பெர்க் - (1965)

தன் மதிப்பு என்பது தனிநபர் ஒருவர் எவ்வாறு தன்னைத்தானே ஆய்வு செய்து கொள்கிறார் என்பதையும் மற்றும் அவற்றை எவ்வாறு நிர்வாகிக்கின்றார்

என்பதையும் குறிக்கின்றது. மேலும் தன்மதிப்பு என்பது சுயமரியாதை மற்றும் சுயமதிப்பிற்கு இணையாகக் கூறப்படுகிறது.

காப்பர் ஸ்மித் (1967)

தன் மதிப்பு என்பது தன்னைக் குறித்த ஒரு சுய மதிப்பீடாகும். இம்மதிப்பீடு தனிநபர் ஒருவர் தன்னைக் குறித்து எவ்வாறு சிந்திக்கிறார் என்பதில் வெளிப்படுகிறது. என்கிறார். ஒருவர் தன் மீது கொண்டுள்ள தன்மதிப்பு அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் வழியாகவும் அவரின் வெளிப்படையான நடத்தையின் வழியாகவும் பிறர்க்கு வெளிப்படுத்தும் எண்கிறார்.

ஆபிரகாம் மாஸ்லோ (1954)

இவர் கருத்துப்படி தன்னம்பிக்கை சுதந்திர உணர்வு பலம் பெற்றுத் திகழ விழைதல் தேர்ச்சியும் திறனும் பெற்றுத் திகழ முயலுதல் போன்றவை அடங்கும். பிறரால் பாரட்டப்படும் அளவுக்கு தான் மதிற்புற்றுத் திகழ வேண்டும் என்றே ஒவ்வொருவரும் நினைக்கிறோம் என்கிறார் . மேலும் தன் மதிப்பு தேவை நிறைவேறாத காரணத்தால் தாழ்வு மனப்பான்மை தன்னைப்பற்றிய அவநம்பிக்கை பிறரோடு கூடி செயல்பட முடியாத தன்மை ஆகியவை தோன்றுகின்றது.

பெண் கல்வி

ஒரு ஆணுக்கு கல்வி கற்பித்ததால் தனிமனிதனுக்கு கல்வி கற்பிப்பது. ஆனால் ஒரு பெண்ணுக்கு கல்வி கற்பிப்பது ஒரு குடும்பத்திற்க்கு கல்வி கற்பிப்பது ஆகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண் கல்வியின் வளர்ச்சியைக் கண்டு மற்ற நாடுகளும் பெண் கல்வியின் வளர்ச்சியின் முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தனர் , சுருங்கக் கூறின் "தொட்டிலை ஆட்டும் கைகளே உலகை ஆளும்". உண்மையில் நாடு அல்லது சமுதாயம் இந்நாட்டில் உயர்வடைவதற்குப் பெண் கல்வி சிறந்த வழி முறையாகும்.

பெண் கல்வியின் சிறப்பியல்புகள்

பெண்களுக்குக் கல்வி வழங்குவதால் சுகாதாரம், மக்கள் தொகை கட்டுப்பாடு, ஊட்டச்சத்து போன்றவை சரியான முறையில் கடைபிடிக்கப்படுகிறது. மனிதவளம் வளர்ச்சி அடைவதற்குக் கல்வி ஒரு முக்கியமான கருவியாகக் கருதப்படுகிறது. எனவே பெண்களுக்குக் கல்வி வழங்குவதால் இந்தியாவில் உள்ள பெண்ணின் நிலை உயர்வடைகிறது. ஒரு பெண் கல்வி பெறுவதால் சமுதாயத்தில் தன்னுடைய நிலை உயர்வடைகிறது. ஒரு பெண் கல்வி பெறுவதால் சமுதாயத்தில் தன்னுடைய நிலை எவ்வாறு உயர்த்தப்பட முடியும் என்று அவளால் அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, ஐந்தாண்டு திட்டங்களில் பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் பெண்களின் கல்விக்கு மைல் கல்லாக அமைந்துள்ளது. 1986ம் ஆண்டு தேசிய கொள்கையில் பெண்களின் கல்விக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்களின் சமத்துவத்திற்காக கல்வி என்று தேசியக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. 1901ம் ஆண்டு கல்வி கற்ற பெண்களின் சதவீதம் 06.% , 1951ம் ஆண்டு கல்வி கற்ற பெண்களின் சதவீதம் 7.9%, 1991ம்

ஆண்டு கல்வி கற்ற பெண்களின் சதவீதம் 39.4% , 2001ம் ஆண்டு கல்வி கற்ற பெண்களின் சதவீதம் 54% சதவீகிதமாக உள்ளது.

பெண் கல்வியின் அவசியம்

"சமூகமே ஒரு பள்ளியாகும், தனி மனிதனுக்கு நற்கல்வி அளிக்கப்பட்டதால் சமூகத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை" என்பது அறிஞர் கூற்று . தற்போதைய சமுதாயப் பிரச்சனைகள், பொருளாதார நிலை, முதலியன கல்வியின் நோக்கங்களை முடிவு செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன். மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 விழுக்காடு பெண் பாலராக இருப்பதால் நாட்டில் முன்னேற்றத்திற்கு பெண்கல்வி இன்றியமையாததாகிறது.

முடிவுரை

தன்மதிப்பிற்கு பெண்கல்விக்கும் உள்ள தொடர்பு யாதெனில் இந்தியாவில் இன்னும் பல கிராமங்களில் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்ற வினா எழுகிறது. இந்நிலை மாற்றப்படவேண்டும். இதற்கு பெண்கள் தாமாகவே முன்வந்து தங்களுடைய மதிப்புகளை உயர்வதாக மாற்றிக்கொள்ள வேண்டும். ஒருவருடைய தன்மதிப்பு வளர்ச்சியடையும் பட்சத்தில் தான் அவர் பிற்காலத்தில் தான் என்னவாக முடியும் என்பதைத் தீர்மானிக்கிறது. ஆகவே பெண்கள் தன்மதிப்புகளை வளர்த்துக் கொண்டால் அவர்களது வாழ்வு நிச்சயம் மேம்படும்.

மேற்கோள் நூல்கள்

1. முற்போக்கு கல்வி உளவியல் பேராசிரியர் முனைவர் அ.மீனாட்சிசுந்தரம் காவ்யமாலா பப்ளிஷர்ஸ் 7-8, S.S நகர் சின்னாளப்பட்டி - 624301.
2. பெண்கல்வி, பேராசிரியர் முனைவர் அ.மீனாட்சிசுந்தரம் காவ்யமாலா பப்ளிஷர்ஸ் 7-8, S.S நகர் சின்னாளப்பட்டி- 624301.
3. தமிழ்நாட்டில் பெண்கல்வி சீர்காழி ஏ.இராம்தாஸ மணிவாசகர் பதிப்பகம் 31- சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை.
4. கற்றல் - கற்போர் உளவியல் , முனைவர் குமரிச்செழியன் சாரதா பதிப்பகம், இ-4, சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014.

அண்ணாவின் பார்வையில் பெண்கள்

முனைவர்.வி.புனிதா, விரிவுரையாளர், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு

அறிஞர் அண்ணா அவர்கள் தன் பேச்சுக்கள் வாயிலாகவும், எழுத்துக்கள் வாயிலாகவும் பெண்ணுரிமை பற்றிப் போராடி வந்திருக்கிறார். தனி மனிதனிடமும், சமுதாயத்திடமும் தேங்கிக் கிடந்த அழுக்குகளை அண்ணா புலப்படுத்தினார். அவர் புலப்படுத்திய சிந்தனைகளில் சிறப்பிடம் பெறுவது மகளிரின் அடிமைத்தன்மை. அண்ணாவின் காலத்தில் விதவைக் கொடுமை எங்கும் நிலவியது. பரத்தமை அழிக்க முடியாத தீயென வளர்ந்தது. சொத்துரிமை இன்மையால் மகளிர் வாழ வகையின்றி அவலத்திற்கு ஆளாயினர். இதற்கிடையே வரதட்சணை என்னும் நச்சுப்பாம்பு மகளிரைத் துன்புறுத்தியது. வரதட்சிணை தர இயலாத நிலை, இளங்கன்னியைக் கிழவனுக்கு மணமுடிக்கும் அவலத்தை ஏற்படுத்தியது. பொருந்தா மணம், விதவைப் பெருக்கத்திற்கு அடிகோலியது. விதவைகள் தங்களுக்குச் சொத்துரிமையில்லாத காரணத்தால், ஏழ்மையின் பிடியில் சிக்கிப் பரத்தைகளாயினர். இப்படி வாழ்வு முழுவதும் துன்பக் கேணியில் சிக்கிக் கண்ணீர் விட்ட மகளிரை எங்கும் காண நேர்ந்ததால், அண்ணா, ஏழை அழுத கண்ணீர் மட்டுமல்ல, ஏந்திழையார் சிந்திடும் கண்ணீரும் நமது சமுதாயத்தை நாசமாக்கும் நச்சுநீராக மாறும் என்று சமுதாயத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஆடவரின் காமம்

மகளிர் ஆளாகும் எல்லாக் கொடுமைகளுக்கும் ஆடவர் காரணமாகின்றனர். மகளிரைக் காட்டிலும் ஆடவரே உயர்ந்தவர் என்று கற்பித்து, ஆடவருக்கு ஒரு நீதி, மகளிருக்கு ஒரு நீதி என்று எல்லா நிலைகளிலும் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திவிட்டனர். தன் மனைவி இன்னோர் ஆடவனைப் பற்றிப் புகழ்ந்து கூறக்கேட்ட அளவில் கோபம் கொள்ளும் ஓர் ஆடவன், பல மகளிருடன் குடும்பம் நடத்தவும், பல மகளிருடன் திருமணம் செய்து கொள்ளாமலே உறவு வைத்துக் கொள்ளவும் தயங்குவதில்லை என்பதை அண்ணா பல நிலைகளில் சுட்டிக் காட்டுகிறார்.

இரங்கோன் இராதா என்னும் புதினத்தில் தமக்கென அன்புடன் பணி செய்யும் ஒரு மனைவி இருந்தும் மிட்டாவிற்காக ஆசைப்பட்டு அரங்கத்தின் தங்கை, தங்கத்தினை மணக்கிறார் தர்மலிங்கம். தாம் தங்கத்தை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக அளவுக்கு அதிகமான கொடுமைகளை அரங்கத்திற்கு இழைக்கிறார். அவரையன்றிப் பிறரைக் கனவிலும் நினையாத மனைவியின் மேல் வீண் பழி சுமத்துகிறார். தங்களுக்கு இன்பம் வேண்டும் என்பதற்காக மனைவியர்க்கும் கூடத் துரோகம் இழைக்கத் தயங்காதவர்களாக ஆடவர் இருக்கும் போது எப்படி நிலையான சமத்துவம் ஏற்பட முடியும் என்பதை அண்ணா சுட்டிக் காட்டுகிறார்.

ஒரு பெண்ணிடம் ஒருவர் தந்தை போல் பொய்யாகப் பழகி பின்னர் அவளைக் கன்னியிலேயே தாயாக்கி விடுகின்றார். காம வெறித்தனத்தைத் திருமலை கண்ட திவ்யசோதி என்னும் சிறுகதை காட்டுகிறது.

வரதட்சணை

வரதட்சணை, ஆடவர் மகளிர் ஏற்றத்தாழ்விற்காக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வேலி, ஆடவர் உயர்ந்தவர், அவர்களை மணந்து கொள்ளப் பெண்கள் வரதட்சணை கொடுக்க வேண்டும், மேலும் அவர்களுக்குக் காலம் முழுவதும் அடிமைகளாய்ப் பணிபுரிய வேண்டும். தொன்றுதொட்டு சமுதாயம் ஏற்படுத்தியிருக்கும் இத் தீயப் பழக்கம் பெண்ணின் அழகும், இளமையும் பணத்திற்கு முன்னே செல்லாததாகிவிடும் போது ஏழை மகளிர் எப்படி நல்வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும்? பெண் வளர்ந்து விட்டாளே இன்னும் திருமணம் செய்யவில்லையா? என்று கேட்க ஆயிரம் பேர் வருவர்? வரதட்சணைக் கொடுமையால் பல திருமணங்கள் தடைபடுகின்றன. பல மகளிர் வாழாவெட்டியாக ஆகின்றனர். எனினும் இந்நிலை இன்றும் தீர்க்கப்படாமல்தான் உள்ளது. அண்ணாவின் வள்ளித் திருமணம் என்ற சிறுகதை வரதட்சணையின் காரணமாகக் காதல் கனியாததைக் காட்டுகிறது. வள்ளி ஏழை, அதனால் ஆறுமுகம் பிள்ளை பெரிய இடத்துப் பெண் சாவித்திரியைத் தன் மகனுக்கு மணமுடிக்கிறார்.

பொருந்தா மணம்

ஓர் ஆணும் பெண்ணும் ஒன்று கூடிச் சமுதாய வாழ்க்கையில் அடியெடுத்து வைப்பதைத் திருமணம் என்கிறோம். வாழ்க்கையில் ஒன்று கூடுகின்ற அவ்விருவருக்கும் பார்க்க வேண்டிய பொருத்தங்களை விடுத்துப் பணம் பொருத்தம், குலப் பொருத்தம், இரண்டையுமே பெரிதாக எண்ணுகின்றனர். பெற்றோர் பெண்ணுக்கு ஏற்றவனைத் தேடும்போது ஏழ்மைக் குறுக்கிட்டால், அதற்காக கிழவனுக்கு மணமுடித்துக் கொடுப்பதற்கும் தயங்குவதில்லை. கிழவனாகிவிட்ட நிலையிலும் பணத்தின் துணையால் மிரட்டி அழகும், இளமையும் கொண்ட மகளிரை மணந்து, அவர்கள் வாழ்வை அழித்து விடுவோர் ஏராளம். கபோதிபுரக் காதலில் வரும் மாரியப்பப் பிள்ளை இத்தகையவர் மனைவிக்குத் தன்னிடம் அன்பு உள்ளதா? இல்லையா? என்று கூட அறிந்து கொள்ள முடியாமல் உடல் அழகிலேயே கவனம் செலுத்தும் கணவன் அமைந்துவிடும் பொழுது பெண் மனதில் உண்மையான அன்பு எப்படித் தோன்றும். இரங்கோன் இராதாவில் இடம் பெறும் பேய் ஓட்டும் பூசாரியின் மனைவி துளசி. அவனுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டவர். அவன் எல்லோருக்கும் பேய் ஓட்டி என்ன பயன்? அவனோ துளசியைப் பிடித்து ஓட்டமுடியாத பேய்தான் என்று அண்ணா அவனைப் பேயாக உருவகப்படுத்துகிறார்.

விதவைத்தன்மை

மகளிருக்கு இழைக்கப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான அநியாயம் விதவைத்தன்மை என்று பாரதியார் கூறுகின்றார். மகளிரை எவ்வளவு கொடுமையான நிலையில் நடத்தினர் என்பதற்கு விதவைத் தன்மை சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆண், பெண் என்ற இருபாலரில் மகளிர் என்றுமே ஆடவருக்கும் கட்டுப்பட்டவர்கள், சமுதாயத்தில் என்றும் ஒடுங்கிக் கிடக்க வேண்டியவர்கள் என்று என்றோ விதித்துவிட்ட சட்டத்தை மீற முடியாமல் மகளிர் துன்புறுகின்றனர். விதவைத் தன்மையை எதிர்த்து மகளிர் புரட்சிக்குரல் எழுப்பவும் முடியவில்லை. இதற்கு மகளிரே தடையாகவும் இருந்ததுண்டு. இவ்வாறு பெண்ணுரிமைக்குத் தடையாக அமைவது மட்டுமின்றி மகளிர் சமுதாயத்தில் இழிநிலையை அடையவும் மகளிரே காரணமாகின்றனர். அதனால்தான் விதவைக் கொடுமை காலம் காலமாக மாற்றப்படாமல் வழக்கில் இருந்து வருகிறது.

பெரும்பாலான விதவைகள் வயதுப் பொருத்தமற்ற திருமணங்களின் விளைவுகளாவர். மனைவியை இழந்தால் சாகப் போகின்ற கிழவனாயினும் நிலையைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல் மற்றொரு இளமங்கையைத் திருமணம் செய்து கொள்கின்றான். ஐம்பது, அறுபது வயதுக் கிழவனுக்குப் பதினைந்து வயது பாவையை மணமுடித்து வைத்துவிட்டு, அவன் இறந்தது விதி என்று கூறிவிட்டுக் கொடுமைக்குப் பாதை வகுக்கிறது சமுதாயம்.

கணவனை இழந்த துன்பம் மட்டுமின்றிப் பூவும், பொட்டும் இழந்து, அணிகலன்கள் இழந்து உற்றாரும் உறவினரும் விதவை என்று விலக்க, மங்கள நிகழ்ச்சி எதிலும் கலந்து கொள்ளும் மாண்பற்றவளாகவும், அந்த இளம் பெண் ஒதுக்கப்படுகிறாள். இப்படி விதவையர் பலரும் கேட்கத் தொடங்கிவிட்டால் விதவை என்பது பழமையாகிவிடும். பண்டை வழக்கம் என்று அதனை அப்படியே பாதுகாப்பது தன்னலம். அதற்கு அஞ்சுவது அறியாமை. பழைமை ஒரு தர்ப்பைப்புல். வெள்ளத்தைக் கண்டால் வளையும் அடிபணியும். வெள்ளமில்லை என்றால் நம்மைக் கேட்க யாருமில்லை.

சொத்துரிமை

ஒரு பெண் பிறந்து ஒருவனுக்கு வாழ்க்கைப்படும் வரை தந்தையைச் சார்ந்து இருக்கிறாள். திருமணமான பின் கணவனைச் சார்ந்து இருக்கிறாள். தன் சிறு தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பொருளுக்காக கணவனை எதிர்பார்க்க வேண்டி உள்ளது. கணவன் இறந்துவிட்டால் பின் தன் மகனை நம்பி வாழ வேண்டியவளாகிறாள். இவ்வாறு வாழ்நாள் முழுவதும் தன்னிச்சையாகச் செயல்படும் வகையின்றிப் பிறரை நம்பியே பெண்கள் காலந்தள்ள வேண்டி உள்ளது. நம்பியவர் கைவிட்டு விட்டால் அவர்கள் நிலை மிகவும் பரிதாபத்துக்கு ஆளாகிவிடுகிறது. கட்டிய கணவனும், பெற்ற மகனுமே கைவிடும் போது சமுதாயத்தில் அவளுக்கு வேறு யார் உதவக்கூடும்? அதனால்தான் மகளிர்க்குச் சொத்துக்கள் இருக்குமாயின் பிறர் கைவிடினும் பிறரைச் சாராது வாழ இயலும்.

விதவை மகளிர், கணவனால் கைவிடப்பட்டோர் மகனால் துரத்தப்பட்டோர் என எண்ணற்றவர்களின் வாழ்க்கை சொத்துரிமையற்றதால் பாழ்பட்டது. சமூகத்தில் பல்வேறு கொடுமைகளுக்கு இலக்காயினர். அரங்கம் சொத்துரிமையற்ற காரணத்தால், தன் மகனின் எதிர்காலத்திற்காகக் கணவனின் பழியை ஏற்று, வீட்டைவிட்டுச் சென்று, பல இன்னல்களுக்கு ஆளாக நேர்கிறது. காந்தா கிழவரை மணந்து விதவையாகிறாள். சொத்து இன்மையால் ஏழ்மை அவளை விரட்ட பரத்தையாகும்படி கட்டாயப் படுத்தப் படுகிறாள். கமலா பல வசதிகளுடன் மிட்டாதாரரின் காமக் கிழத்தியாக வாழ்ந்து கொண்டிருந்த போதும் அவரது கோபத்திற்கு முன் ஏழையாகிறாள். அதுவரை அவள் பெற்ற வசதிகளை இழந்துவிடும் பரிதாபகரமான நிகழ்ச்சி, சொத்துரிமை இல்லாமையால் உண்டாகிறது. இத்தகைய கொடுமைகளை நீக்க வேண்டுமானால் மகளிர் செய்யும் முதல் கிளர்ச்சி ஆடவரைப் போல சொத்துரிமை பெறுவதாக அமைய வேண்டும் என்று அண்ணா கூறுகிறார்.

விதவை மறுமணம், பரத்தையும் சமூகத்தில் திருமண வழக்கம் ஏற்படுத்தல் ஆகியவற்றை மிகுதியாகத் தமது படைப்புகளில் எடுத்துரைக்கும் அண்ணா, சொத்துரிமை பற்றியும், தமது படைப்புகளில் காட்டுகிறார். இரங்கோன் இராதாவில் வரும் இராதா. மகளிர்க்குச் சொத்துரிமை வேண்டும் என்ற பேசுகிறாள். சொத்துரிமை இல்லாததால் இன்னலுக்கு உட்பட்டதை குமாஸ்தாவின் பெண் காட்டுகிறது.

உண்ணாவிரதம் ஒரு தண்டனை என்ற சிறுகதை, மகளிர்க்குச் சொத்துரிமை தர வேண்டும் என்ற அண்ணாவின் சிந்தனையில் முகிழ்ந்தது.

இவ்வாறாக ஆடவரின் காமத்தாலும், கல் மனத்தாலும் துன்புறும் மகளிர் அவல நிலைகளைக் காட்டி, இளமை மணம் தவிர்த்தல், வரதட்சணை கொடுமை நீங்கல், பரத்தையருக்கும் திருமண வழக்கம் ஏற்படுத்தல் ஆகியவை அவர்களின் வாழ்வை நன்னிலைப் படுத்தும் என்றும், கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை திருமண விடுதலை உரிமை, சொத்துரிமை ஆகிய சில உரிமைகள் தரப்படுவதன் மூலம் மகளிரின் வாழ்வை மேலும் வளப்படுத்தலாம் என்றும் தமது படைப்புகளில் இருந்து பெற வைக்கிறார் அண்ணா.

பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்று குரல் கொடுத்தவர்களில் அறிஞர் அண்ணா முக்கியமானவராவார். இன்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்றால் அதற்குக் காரணமானவரில் பெரியாரும் அண்ணாவும் நிற்பர். பெண்மக்கள் படிப்பு, வேலையில் முன்னுரிமை இடஒதுக்கீடு முதலிய கொள்கைகளுக்காக அண்ணா பாடுபட்டதைத் தமிழுலகம் மறக்காது. பெண்களின் முன்னேற்றத்துக்குக் குரல் கொடுத்தத் தமிழ் மகன் அண்ணா என்று கூறினால் அது மிகையல்ல.

குழந்தையின் சமூகப் பங்கேற்பும் பெற்றோரின் கல்வி நுட்பவியலும்

முனைவர் ரெ. பெரியசாமி, உதவிப் பேராசிரியர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

முன்னுரை

குழந்தையின் கற்றலில் முக்கியத்துவம் வாய்ந்த முதல் ஆசானாகப் பெற்றோர் விளங்குகின்றனர். குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சி நிலைகளிலும், கற்றல், மற்றும் கற்றல் அடைவிலும் அவர்களின் பங்கு முக்கியமான ஒன்றாகும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இவ்வுலகைப் பற்றியும், இவ்வுலக வாழ்க்கையைப் பற்றியும், வாழ்க்கையில் பெற வேண்டிய அறிவாற்றல், நினைவாற்றல், புரிதல், மொழி, மொழியின் இயல்பு, கணிதவியல், மானுடவியல், தத்துவவியல், அறிவியல், குடிமையியல் பண்புகள், அரசியல், ஆன்மீகம், வாழ்வியல் தத்துவம், வாழ்க்கையின் நெறிமுறைகள் போன்ற அனைத்துத் துறைகளின் அனுபவங்களைக் கற்பித்து இவ்வுலகில் ஒரு நல்ல குடிமகனாக மாற்றுகின்றனர். இந்தக் கட்டுரையில் குழந்தையின் சமுகப் பங்கேற்பு மூலம் கற்றலில் பெற்றோரின் கல்வி நுட்பவியல் பற்றி ஆராய்ந்த முடிவுகளைப் பற்றி அறியலாம்.

சமூகப் பங்கேற்பு

சமூகப் பங்கேற்பு என்பது மக்கள் சமூகத்தோடு ஏற்படுத்திக்கொள்ளும் உறவும் அதன் வழி ஏற்படுத்திக் கொள்ளும் அனுபவங்களின் தொகுப்புமாகும். நான் கேட்டேன், நான் மறந்தேன்; நான் பார்த்தேன், நான் நினைவுக் கூர்ந்தேன்; நான் செய்தேன், நான் புரிந்துகொண்டேன்; என்ற சீனப் பழமொழி பார்வையிடல் மற்றும் களப்பயணம் மேற்கொள்ளலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. தன் சொந்த அனுபவங்களிலிருந்து ஒரு பொருளைச் சூழ்நிலையோடு எவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கிறதோ அதைப் பொறுத்தே அக்குழந்தையின் உள்வாங்கும் திறன் அமைகிறது. பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் குழந்தையின் கற்றல் முறையை அறிந்திருந்தால்தான் உற்றுநோக்குதல் அல்லது பார்த்தலினால் குழந்தையின் கற்றல் எளிதாக அமையும். குழந்தையின் கற்றலானது கேட்டல், பார்த்தல், தொடுதல் மற்றும் இம் மூன்றின் தொகுப்பு வழியே குழந்தையின் கற்றல் சிறப்படையும் என்று ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

பொதுவாக கேட்டல் மூலம் கற்கும் குழந்தைகள் பொருட்களைப் பற்றி செவிவழி, எழுத்து வடிவில் கற்பதைவிட விளக்கம் அளிப்பதன் மூலம் அதிகமாக கற்கின்றனர். பார்த்தல் மூலம் கற்கும் குழந்தைகள் அதிகளவில் படங்கள், வரைபடங்கள மற்றும் உருவங்கள் அச்சடிக்கப்பட்ட புத்தககங்களை அதிகம் விரும்பி படிப்பார்கள். அதே சமயம் படம் வரைதல் வண்ணம் தீட்டுதலில் அதிகம் ஈடுபாடு காட்டுவார்கள். செயலைச் செய்தல் மூலம் கற்கும் குழந்தைகள் பொருட்களைத் தொட்டு உணர்ந்து பொருட்களின் வேலைப்பாட்டை உணர்ந்து கொள்வார்கள். கைவினைப் பொருட்கள் மற்றும் கலைகளைக் கண்டும் சில சமயங்களில் அப்பொருட்களைப் போல் அல்லது அவ்வுருவங்களைப்போல் தன்னை நினைத்துக்கொண்டு நடித்து மகிழ்வார்கள்.

குழந்தையோடு பயணம் செய்ய பெற்றோர் திட்டமிடல்

பரந்து விரிந்த குழந்தைகளின் உலகம் பல வகையான அனுபவங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. குழந்தைகளை பூங்கா, பாதுகாப்பு வனப்குதி, மிருகக்காட்சி சாலை, நூலகம், நீச்சல் குளம். ஏரி, ஆறு, நீர்த் தேக்கங்கள், தீயணைப்பு நிலையம், காவல் நிலையம், அருங்காட்சியம், இசை நிகழ்ச்சி, கோளரங்கம், சந்தை ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று பல்வேறு வகையான அமைப்பு, செயல்பாடுகள், இயற்கை அழகு, இய்ற்கையின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும். பின்பு குழந்தைகள் பார்வையிட்ட போது ஏற்பட்ட அனுபவங்களை வைத்து படம் வரைதல், கதை எழுதல், அனுபவங்களை எடுத்துரைக்கும் திறன்கள் வளர உதவிபுரிதல் வேண்டும்.

நூலகப் பார்வை

பெற்றோர்கள் குழந்தைகளை அருகிலுள்ள நூல் நிலையங்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் அழைத்துச் சென்று புது வகையான படிக்கும் நூல்களை வாங்கிக்கொடுத்து புத்தககங்களை வாசிக்கும் பழக்கத்தையும் ஆர்வத்தையும்ம ஏற்படுத்த வேண்டும். இதனால் குழந்தைகளிடம் வாசிக்கும் பழக்கமும் நடைமுறைச் செய்திகளை அறிந்துகொள்ளும் திறனும் வளரும்.

அருங்காட்சியகப் பார்வை

ஆற்றல் மிக்க, இடைவினையை ஏற்படுத்தக்கூடிய மையமாக விளங்குகிறது. குழந்தைகளுக்கு புத்துணர்ச்சியையும் வாழ்நாள் முழுவதும் கற்றல் மன மகிழ்ச்சியையும் குழந்தைகளிடம் ஏற்படுத்தும் இடமாக விளங்குகிறது. இது தனியாள் மற்றும் குடும்பத்தின் மதிப்புகள் (விழுமங்கள்), மகிழ்வோடு சமூகத்துடன் இணைந்திருக்கும் உணர்வு, தன்னைப் பற்றியும், சமூக, பொருளாதாரம், குடிமை உணர்வு பற்றியும் உணர்த்தும் இடமாக உள்ளது. உலகப் படைப்புகள் உருவான அனுபவத்தையும், ஆர்வத்தையும் குழந்தைகளுக்கு ஏற்படுத்துகிறது. மனிதநேயம், மற்றும் ஜனநாயகத்தின் மீது ஈடுபாட்டை உருவாக்குகிறது. இவ்வாறு அருங்காட்சியகம் பல்வேறு கற்றல் அனுபவங்களை குழந்தைகளுக்கு ஏற்படுத்துகிறது. பல்வேறு வகையான அருங்காட்சியகங்களும் அவை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றல் அனுபவத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் ஒவ்வொன்றாக காணலாம்.

கலை அருங்காட்சியகம்

கலைக்கூடம் ஒரு கலைஞன் தன் முயற்சியால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்க்கும்போது ஆச்சரியத்தை ஏற்படுத்தி குழந்தைகளுக்குக் கற்பனைத் திறன் வளர வழி வகுக்கிறது.

வரலாற்று அருங்காட்சியகம்

வரலாற்று நிகழ்வுகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மக்கள் நாகரீக வளர்ச்சி அடைந்த விதம் ஆகியுவற்றைப் பற்றி அறிய முடிகிறது.

இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்

இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பதப்படுத்தப்பட்ட விலங்குகள், மீன்கள், பறவைகள், தாவரங்கள், ஊர்வன, தாதுக்கள், பாறைகள் போன்றவை இவ்வுலகு எவ்வாறு பரிணமித்துள்ளது (ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பூமி) என்பதை உணர முடியும், பேருருவம் படைத்த டைனோசார் விலங்குகள்,

ஊர்வன, பறப்பன, நிறம் மாறும் பண்பு கொண்ட பச்சோந்திகள் போன்ற விலங்குகள் வாழ்ந்திருந்தன என்பதை அறிய முடிகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியம்

அறிவியல் கண்டுபிடிப்புகள், நவீன தொழில்நுட்பம் வளர்ந்த விதம், அது எவ்வாறு சென்று கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இயங்கும் மாதிரிகள் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. சில அருங்காட்சியகங்கள் அறிவியல் தத்துவங்கள் மற்றும் விதிகளைச் செய்துகாட்டி உணர்த்தும் வகையில், இயங்கும் வகையில் மாதிரிகள் உள்ளன. இவற்றின் மூலம் அறிவியல் சிந்தனைகளை, அறிவியல் மனப்பான்மைகளை குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் உருவாக்கலாம்.

மிருகக்காட்சி சாலை

மிருகக்காட்சி சாலைகளுக்கு குழந்தைகளை அழைத்துச் சென்று விலங்குகளின் உருவ அமைப்பு, தகவமைப்பு, வாழும் விதம் ஆகியவற்றைப் பற்றி குழந்தைகள் அறிந்துகொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரலாம்.

நீர்நிலைகளுக்கு பார்வையிடல்

நீர்நிலைகளான கடல், ஏரி, குளம், குட்டை, ஆறு மற்றும் நீர்த்தேக்கங்கள் போன்ற இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் சென்று நீர்நிலைகளில் காணப்படும் தாவரங்கள், பூச்சியினங்கள், விலங்குகள் ஆகியவற்றைப் பற்றியும் அவற்றின் தகவமைப்புகள் பற்றியும் குழந்தைகளுக்கு பெற்றோர்கள் எடுத்துரைக்கலாம்.

கலாச்சார மற்றும் பாரம்பரிய இடங்களுக்கு அழைத்துச் செல்லல்

கலாச்சார மற்றும் பாரம்பரிய இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதால் இந்தியக் கலாச்சாரம், பாரம்பரியம் பற்றி அறிந்து கொள்வார்கள் அவை அயல் நாட்டினரின் பாரம்பரியத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகிறது என்பதையும் அறிந்துகொள்வார்கள்.

தாவரப் பூங்காக்களுக்கு அழைத்துச் செல்லல்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தாவரப் பூங்காக்களுக்கு அழைத்துச் செல்வதால் தாவரங்களின் அமைப்பு, வகைப்பாடு, தகவமைப்பு, பல வண்ணப்பூக்கள் ஆகியவற்றைப் பற்றியும், தாவரங்களின் இயற்கையழகையும் மகிழ்ச்சியோடு மனதில் பதிய வைத்துக்கொள்வார்கள்.

கோளரங்கத்திற்கு அழைத்துச் செல்லல்

கோளரங்கத்திற்கு அழைத்துச் செல்வதால் விண்ணைப் பற்றியும் விண்ணில் உள்ள கோள்கள் பற்றியும் தங்கள் வாழ்க்கையோடு இணைத்துக்கொள்வார்கள். டெலஸ்கோப் உதவியுடன் கோள்களைப் பற்றியும் கோள்களில் காணப்படும் வளையங்கள் பற்றியும் ஒவ்வொரு கோள்களிலும் தன்னுடைய எடை எவ்வளவு இருக்கும் என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்புகளைப் பெற்றோர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

பார்வையிடச் செல்வதற்கு முன் செய்ய வேண்டிய பணிகள்

பார்வையிட செல்வதற்கு முன் செய்ய வேண்டிய பணிகளில் திட்டமிடல் என்பது முக்கியமானதாகும். இவ்வாறு திட்டமிடலில் குழந்தைகளை ஈடுபடுத்தினால் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு திட்டமிடலில் கலந்துகொள்வார்கள். எந்தெந்த

இடங்களைப் பார்வையிட செல்கிறோம் என்பதைப் பட்டியலிட வேண்டும். பின்பு செல்லும் இடங்களில் எதைப் பார்க்க இருக்கிறோம், அவற்றிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம், செல்லும் இடங்களில் என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், எவ்வகையான முதல் உதவி வசதிகளை நாம் செய்துகொள்ள வேண்டும், எவ்வகையான பொருட்களைச் சேகரிக்க வேண்டும் என்பதைப் பற்றி முன்கூட்டியே குழந்தைகளோடு கலந்தாலோசித்து திட்டமிட வேண்டும். அவ்வாறு திட்டமிடுவதால் மேற்கொள்ளும் பார்வை சிறப்பாக அமையும்.

பார்வையிட்டப் பிறகு செய்ய வேண்டிய பணிகள்

பெற்றோர் குழந்தையைப் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று பார்வையிட்ட பின்பு பார்வையிட்ட இடங்களில் பார்த்த, மனதிற்குப் பிடித்த இடங்கள் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் குழந்தையிடம் கேட்டு அறியச் செய்து பட்டியலிடச் செய்ய வேண்டும். பார்வையின் போது பெற்ற அனுபவங்களைத் தொகுத்து எழுதச்சொல்ல வேண்டும் சேகத்தப் பொருட்களை வகைப்படுத்தி பட்டியலிட்டு பாதுகாக்க குழந்தையைப் பழக்கப்படுத்த பெற்றோர் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆய்வின் நோக்கம்

சமூகப் பங்கேற்பு மூலம் குழந்தையின் கற்றலில் பெற்றோர்கள் பயன்படுத்தும் கல்வி நுட்பவியலைப் பற்றியும் அதனால் குழந்தையின் கற்றல், கற்றல் அடைவில் ஏற்படும் முன்னேற்றதை அறிவதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறை

ஆய்விற்காக வினா நிரல் முறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதில் குழந்தையின் தன் விவரம் மற்றும் பெற்றோர் கல்வி நுட்பவியல் வினா நிரல் அடங்கும். ஆய்வு பெரம்பலூர் மாவட்டதிலுள்ள ஆறு ஒன்றியங்களில் ஐந்தாம் வகுப்பு பயிலும் 419 குழந்தைகளின் பெற்றோர்களிடம் இந்த வினா நிரல் கொடுக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி, பகுப்பாய்வு செய்து முடிவுகள் காணப்பட்டுள்ளன.

ஆய்வின் முடிவுகள்

1. 46.8 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 46.8 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை வரலாறு மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று அதன் முக்கியத்துவத்தைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கின்றனர். 41.3 சதவீதப் பெற்றோர்க்ள இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

2. 21.7 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 56.1 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை அருங்காட்சியகத்திற்கு அழைத்ததுச் சென்று அங்குள்ள பொருட்களைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுகின்றனர். 22.2 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

3. 33.7 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 48.9 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை பூங்காக்களுக்கு அழைத்துச் சென்று இயற்கை அழகையும் தாவரங்களைப் பற்றியும் குழந்தைகளுக்குக் கூறி கற்பிக்கின்றனர்.

17.4 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

4. 16.0 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 53.9 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை மிருகக்காட்சி சாலைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள விலங்குளின் தகவமைப்பு பண்புகளையும் அதன் முக்கியத்துவத்தைப பற்றியும் குழந்தைகளுக்குக் விளக்கிக் கூறி கற்பிக்கின்றனர். 30.1 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

5. 33.7 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 48.9 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை சுற்றுலா மற்றும் களப்பயணம் மேற்கொண்டு சூழ்நிலையைப் பற்றியும் இயற்கை அமைப்பைப் பற்றியும் குழந்தைகளுக்குக் விளக்கி கூறுகின்றனர். 17.4 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான் இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

6. 44.9 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 43.4 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் சென்று குழந்தைகளிடம் நல்லொழுக்கப் பண்புகளைப் பற்றி விளக்கிக் கூறுகின்றனா். 11.7 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை.

7. 35.1 சதவீதப் பெற்றோர்கள் அதிகமான நேரங்களிலும், 42.2 சதவீதப் பெற்றோர்கள் சில சமயங்களிலும் தங்கள் குழந்தைகளை நூலகத்திற்கு அழைத்துச் சென்று குழந்தைகளிடம் பல்வேறு வகையான புத்தகங்களைப் பழக்கும் பழக்கத்தையும் குழந்தைகளின் வாசிக்கும் திறனையும் வளர்க்கின்றனா22.7 சதவீதப் பெற்றோர்கள் இவ்வகையான இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்வதே இல்லை. அதிகமான நேரங்களில் சமூகப் பங்கேற்பு மூலம் கற்றலில ஈடுபடும் குழந்தைகளின் கற்றல் அடைவ மேம்பட்டுக் காணப்படுகிறது.

பரிந்துரை

இந்த ஆய்வு முடிவுகளிலிருந்து பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பதைப் பற்றி அறிந்திருக்கவில்லை. எனவே கல்வியாளர்கள், நிருவாகத்தினர். ஆசிரியர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு சமூகப் பங்கேற்பு மூலம் குழந்தையின் கற்றலுக்குப் பெற்றோர்கள் உதவ வேண்டும் என்பதை அறிந்திட செய்ய வேண்டும்.

பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் கிராமக் கல்விக்குழு மூலம் குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில் சமூகப் பங்கேற்பு மூலம் குழந்தைகளைக் கற்றலில் ஈடுபடுத்தும் வழிமுறைகள் பற்றியும், பெற்றோர்கள் குழந்தைகளோடு சேர்ந்து கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட சமூகப் பங்கேற்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றியும் விவாதிக்கலாம்.

வீட்டிலுள்ள அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் குழந்தையின் கற்றலுக்குத் துணைபுரிய வேண்டும்.

தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இவ்வகையான சமூகப் பங்கேற்பு மூலம் கற்றல் மிகவும் முக்கியமான ஒன்றாகும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்திட வேண்டும்.

குழந்தைகள் தங்கள் நேரத்தை செய்தித்தாள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, கணிப்பொறி, இணையம் ஆகியவற்றோடு செலவழிக்க பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

குழந்தையின் கற்றல் மேம்பட ஒரு ஆசிரியரைப்போல பெற்றோர்கள் செயல்பட்டு கற்பித்தல் புதுமைகளைப் பயன்படுத்தி குழந்தையின் கற்றல், கற்றல் அடைவு மேம்பட பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

முடிவுரை

இந்த ஆய்வு மூலம் குழந்தையின் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உறுதுணையாக இருந்தால் குழந்தையின் கற்றல் மற்றும் கற்றல் அடைவு மேம்படும் என்பதை அறியலாம். பெற்றோர், மற்றும் குடும்ப உறுப்பினர்கள் குழந்தையோடு படித்தல், பள்ளியோடும் ஆசிரியரோடும் தொடர்புகொள்ளுதல், குழந்தையின் கற்றலுக்கு கல்வி நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல் மூலமும் குழந்தைகளைச் சமூகப் பங்கேற்பு மூலம் கற்றல் செயல்களில் ஈடுபடுத்துவதன் மூலமும் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் குழந்தைகளிடம் ஏற்படுத்தலாம்.

தமிழ் மொழிபெயர்ப்பில் தாமஸ்கிரேயின் இரங்கற்பா

சு. ம. பெருமாள், துறைத்தலைவர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010.

ஒரு குறிப்பிட்ட மொழியில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் எந்த மொழிபெயர்ப்பும் வரவில்லை என்றால் அந்த மொழி உறைந்துவிட்டது என்றுதான் பொருள் என்கிறார் பாவாணர். எனவே ஒரு மொழியை உயிர்ப்புடன் வைத்து கொள்வதற்கு மொழிபெயர்ப்புகளும் அவசியமாகின்றன எனலாம். பிறமொழி இலக்கியங்கள் ஒரு மொழியில் மொழிபெயர்க்கப்படும்போது அந்த மொழியின் இலக்கியவாதிகள் அந்நூல்கள் (மொழிபெயர்ப்பு நூல்கள்) வழியாக அந்நூல்களுக்குரியப் படைப்பாளிகளுடன் (மூலநூலாசியர்) உறவாடுகிறார்கள் என்பர். அந்த வகையில் தாமஸ்கிரே என்னும் ஆங்கில கவிஞரோடு உறவாக நினைத்த மொழிபெயர்ப்பாளர்கள் **'எலிஜிப்பாடலின்'** கருத்தால் கவரப்பட்டு, அதனைத் தமிழ்வாசகர்களுக்கு தர பெருவிருப்பங் கொண்டுள்ளனர். எனவேதான் இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு காலக்கட்டங்களிலும் அடுத்தடுத்து பல மொழிபெயர்ப்பாளர்களால் இது மொழிபெயர்த்து தரப்பட்டுள்ளது எனலாம்.

எலிஜி – விளக்கம்

எலிஜி (Elegi) என்ற ஆர்மேனியச் சொல்லுக்கு வேய்ங்குழல் (Flute) எனும் பொருளுண்டாதலின், அவ்வகை இசைக் கருவியுடன் இப்பாவுடன் தொடர்புண்டு எனக் கருதுவர். கிரேக்க மொழியில் 'எலிஜியா' (Elegia) என்ற சொல்லுக்கு 'அவலம்' (Lament) எனப் பொருளுண்டென்றும் அதிலிருந்தே இச்சொல் பிறந்ததென்றும் கருதுவோர் உள்ர். ஆனால் எலிஜி பற்றிக் குறிப்பிடும் பிரிட்டானிகா கலைக் களஞ்சியம், "எலிஜியா' என்ற கிரேக்கச் சொல்லின் தொடக்க கால நிலையில் 'இறத்தலுக்கு இரங்குதல்' என்ற பொருள் இடம் பெற்றதற்கான சான்று ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை" எனக் கூறுகிறது.

ஆங்கிலத்தில் கிரேயின் எலிஜி

கிரேக்கத்தில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் கையறு நிலைப் பாடலாக எலிஜி தோற்றம் பெற்ற போதிலும் ஆங்கிலமொழிக்கு 16 ஆம் நூற்றாண்டில் தான் 'எலிஜி' வந்து சேர்ந்துள்ளது. தொடக்கத்திலிருந்து இன்றுவரை சவ அடக்கத்தை விவரித்துப்பாடும் பாடலாகவோ அல்லது இறப்பிற்காகவோ வருத்திப்பாடும் பாடாகவோதான் எலிஜி புனையப்பட்டுவருகிறது என பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. கி.பி.1591ஆம் ஆண்டு எட்மண்ட ஸ்பென்னர் எழுதிய ***'அஸ்ட்ரல்பல்'*** எனும் எலிஜி அக்காலத்தில் புகழ்பெற்ற எலிஜியாகத் திகழ்ந்தது. கி.பி.1637 இல் ஜான்மில்டனின் ***'லிஸிடஸ்'*** (Lycidas) சிறந்த எலிஜியாகக் கருதப்பட்டது. எட்வரட்கிங் தமது இறந்துபோன கேம்பிரிட்ஜ் நண்பரின் நினைவாக ஜான்மில்ட்டன் இக்கவிதையைப் பாடியுள்ளார். கி.பி 1821-இல் கவிஞர் ஜான் கீட்ஸ் இறந்த போது 'ஷெல்லி' எழுதிய ***'அடோனைஸ'*** எனும் எலிஜியும் ஆர்தர் ஹென்றி ஹாலமின் எனும் தமது நண்பன் இறந்த துன்பத்தில் டென்னிஸன் பாடிய ***'இன்மெமோரியம'*** என்ற எல்ஜியும்,மேத்யு அர்னால்டு எழுதிய ***'தர்ஸில்'*** என்னும் எலிஜியும் இரங்கற்பாக்களில் புகழ்பெற்றவையாகும் என ஆங்கில இலக்கிய வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

கி.பி 19ஆம் நூற்றாண்டில் எலிஜிப் பாடல்களின் வாயிலாக மக்களின் மனம் கவர்ந்தவர் வால்ட் மிட்மென். கி.பி. 1865 ஆம் ஆண்டில் ஆப்பிரகாம் லிங்கன் இறப்பிற்காக இவரால் பாடப்பட்ட இரங்கற்பா அமெரிக்காவின் சிறந்த இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆக ஆங்கிலத்தில் தோன்றிய புகழ்பெற்ற அனைத்து எலிஜிப் பாடல்களும் தனிமனித இறப்புக்காக வருந்திப் பாடும் பாடல்களாகவே எழுந்துள்ளமையை அறியமுடிகின்றது. ஆனால் தாமஸ் கிரேயின் எலிஜி மட்டும் தனி மனித இறப்பு என்ற நிலையிலிருந்து விடுபட்டு பொதுமை நிலை என்கிற தளத்தில் நின்று அவலக் குரலை வெளிப்படுத்துகிறது. நாட்டுப்புற தேவாலய முற்றம் ஒன்றில் நின்று கொண்டு, அங்குப் புதையுண்ட மனிதர்களின் இறப்புத் துயரில் தமக்கும் பங்குண்டு எனப் பாடுகிறார் தாமஸ்கிரே.

தாமஸ் கிரேயும் காலமும்

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் பிலிப்ஸ்கிரே டோரத்தி தம்பதியினருக்குக் கி.பி.1716 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் மகனாகப் பிறந்தார் தாமஸ் கிரே. இவர் கி.பி.1727ஆம் ஆண்டு ஈட்டன் கல்லூரியிலும், கி.பி 1734 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் தமது உயர் கல்வியைத் தொடர்ந்தார். லண்டனில் இருந்தபோது கவிதை எழுதும் ஆர்வம் மிகவே கி.பி.1742ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் கவிதை எழுதத் தொடங்கினார். இவரது முதற்கவிதை ரோமப் பேரரசின் வரலாறு தழுவியதாக அமைந்தது. இக் கவிதையைப் பாராட்டிய இவரது நண்பர் வெஸ்ட்டின் இறப்புச் செய்தி கேட்டு மிகவும் துயர் கொண்ட கிரே, இலத்தீன் மொழியிலும் ஆங்கிலத்திலும் இரங்கற்பாக்கள் எழுதி வெளியிட்டார். கி.பி. 1749ஆம் ஆண்டு 5ஆம் நாள் மேரி என்பவர் இறந்த செய்திகேட்டு மனமுடைந்தார். மேரி என்பவர் இளவயது முதல் தாமஸ்கிரேவுக்கும் அவரது தாயாருக்கும் உதவியாக இருந்தவர். இப்பிரிவும் துன்பமும் வாட்ட முன் தொடங்கிய மேலும் பலபாடல்களை எழுதி முடிக்கிறார் தாமஸ்கிரே.

தமிழ்மொழி பெயர்ப்பாளர்களும் பின்னணியும்

தாமஸ் கிரேயின் ‘எலிஜி’ யை வெவ்வேறு கால கட்டங்களில் அறுவர் மொழிபெயர்த்துள்ளனர். அவர்கள் முறையே த.பத்மாஸநி, சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார், செ.ஜேசுதாசன், நீ. கந்தசாமிப்பிள்ளை, ஞானம் தம்பி, தி.வே.சீனிவாசன் ஆகியோர் ஆவர். எலிஜியை முதலில் மொழிபெயர்த்தளித்த பத்மாவதி, ***‘செந்தமிழ்’*** மாத இதழில் இரங்கற்பா எனும் பெயரில் தமது மொழி பெயர்ப்பை வழங்கியுள்ளார். கிபி.1927 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கி கி.பி.1928 ஏப்ரல் மே இதழாக வெளிவந்த இதழ் உட்பட்ட நான்கு இதழ்களில் பகுதி பகுதியாக இவரின் மொழிபெயர்ப்புப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதன் மூலம் முதல் மொழிபெயர்ப்பு மதுரைச் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாக விளங்குவதை அறிய முடிகிறது.

அடுத்த மொழிபெயர்ப்பை ***‘கலாநிலையம்’*** எனும் வார இதழில் தந்துள்ளார் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார். கி.பி.1932இல் சென்னையிலிருந்து வார இதழாகிய ‘கலாநிலையம்’ ஜீலை மாதம் 7 ஆம் நாள் இதழில் தாமஸ்கிரேயின் பாடலை முழுவதுமாக ‘இரங்கற்பாக்கள்’ என்ற பெயரில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். இவ்விருவரின் மொழிபெயர்ப்புகள் தவிர பின்னர்வந்த மொழிபெயர்ப்புகள் யாவும் நூல்வடிவிலேயே வெளிவந்துள்ளன. நீ.கந்தசாமிப்பிள்ளை தவிர மற்றவர்கள் தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளனர். ஜேசுதாசன் தமது மொழிபெயர்ப்பை ‘முதற்கனி’ என்ற தொகுப்பு நூலில் தந்துள்ளார். இந்நூல் கி.பி.1954 ஆம் ஆண்டு

திருவனந்தபுரத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் 'கல்லறைகள்' என்ற பெயரில் 'எலிஜி' மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது மொழிபெயர்ப்பாகும். நான்காவது மொழிபெயர்ப்பு நூலாகக் கந்தசாமிப்பிள்ளையின் இரங்கற்பா கி.பி.1961 இல் தஞ்சாவூர் பள்ளியக்கரகாரத்திலிருந்து வெளிவந்துள்ளது. இவரது நூலில் முற்பகுதியில் தமிழ் மொழிபெயர்ப்பும்,பிற்பகுதியில் ஆங்கிலமூலமும் தரப்பட்டுள்ளன. இதனையடுத்து மொழிபெயர்ப்பு வரலாறும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஐந்தாவது மொழிபெயர்ப்பு நூலை மகராசபுரம் ஞானம் தம்பி என்ற புனைப்பெயரில் பேராசிரியர் இராசகோபால் ஆக்கித்தந்துள்ளார். தாமஸ் கிரேயின் எலிஜி(Elegy) தி பார்டு (The Bard))ஆகிய இரு கவிதை இலக்கியங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் எலிஜியை ***'சில கண்ணீர்'*** என்ற தலைப்பில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் ஞானம்தம்பி. இந்நூல் கி.பி.1983 ஆம் ஆண்டில் திருப்பதூரிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

இறுதியாக வெளிவந்த ஆறாவது மொழிபெயர்ப்பு 'Three Elegies' என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. ஜான் மில்டனின் 'இலிதியாஸ்' ஆலிவர் கோல்டுஸ்மித்தின் 'எலிஜி' ஆகியவற்றுடன் தாமஸ் கிரேயின் எலிஜியை ***"இடுகாட்டில் எழுதிய இரங்கற்பா"*** என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார் தி.வே.சீனிவாசன். அமரர் ரோஜாமுத்தையாவின் 5 ஆம் ஆண்டு நினைவு வெளியீடாக கி.பி.1997 இல் தஞ்சையிலிருந்து இந்நூல் வெளியிடப்பட்டது.

இந்த ஆறு மொழிபெயர்ப்புகளில் பத்மாஸநியின் மொழிபெயர்ப்பே காலத்தால் முந்தியதாக அமைகிறது. அதிலும் குறிப்பாக முதன்முதலில் மொழிபெயர்த்த இருவரும் இதழ்களின் வாயிலாகத் தங்கள் மொழிபெயர்ப்பைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாமஸ்கிரேயின் 'எலிஜி' யைப் பல்வேறு நோக்கு நிலைகளில் மொழிபெயர்த்துள்ள மொழிபெயர்ப்பாளர்கள் மூலநூல் ஒன்றாக இருந்தாலும்,பெயர்ப்பில் வெவ்வேறு வகையான வடிவங்களையும், சொல்லாட்சிகளையும், மரபுகளையும் பயன்படுத்தியுள்ளனர். கவிதையின் உள்ளடக்கத்தை உணர்த்துவதாகத் தத்தம் இயல்புக்கேற்ப நடையமைப்பினை கையாண்டுள்ளனர்.

இரங்கற்பா (எலிஜி) யின் பாடல் அளவும் கருத்தும்

தாமஸ்கிரேயின் இரங்கற்பா முப்பத்திரண்டு செய்யுள்களால் ஆனது. தமிழ் யாப்பின் மரபின்படி தொடர்நிலைச்செய்யுள் வகையைச் சார்ந்ததாகும். 'எலிஜி' எனும் செய்யுள் வடிவம் இரண்டிரண்டு அடிகளால் இயற்றப்படுவதென அமெரிக்கானாக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. ஆனால் தாமஸ்கிரே தமது இரங்கற்பாவை நான்கடிச் செய்யுளில் அமைந்த பாடல்களாக பாடியுள்ளார். இவரது முப்பத்திரண்டு பாடல்களும் மனித வாழ்வின் அவலத்தையும் நிலையாமையையும் நன்கு சித்தரித்துக் காட்டுகிறது. தொடக்கத்தில் நான்கு பாடல்களில் நாட்டுப்புறத் தேவாலயம் ஒன்றில் அமைந்த கல்லறையையும்,அதன் சுற்றுச்சூழலையும் வாசகனின் மனக்கண்ணில் கொண்டுவந்து நிறுத்துகிறார் தாமஸ்கிரே.

இருள்சூழ்ந்த சூழலில் அங்கு கேட்கும் ஒலியெல்லாம் கூட அவலத்தை மிகைப்படுத்துவனவாக உள்ளதை உணரமுடிகிறது. பின்னர் அங்குள்ள கல்லறைகளில் புதைக்கப்பட்டிருக்கின்ற மக்களைப்பற்றி பொதுமை அறம் பேசுகிறார் கவிஞர். இப்பொதுமைத்தன்மை உலகெலாம் வாழந்து இறந்துபோன மக்களுக்காக இரங்கிப்பாடும் நிலையில் அமைந்துள்ளது. நாட்டுப்புறங்களில் வாழ்ந்துவந்த ஒரே காரணத்திற்காக வாய்ப்புகள் அவர்களை சென்றடையாமல் இருந்துவிட்டதையும்

வாய்ப்புகள் கிடைத்திருந்தால் சாதனையாளர்களாக மாறியிருப்பார்களோ என்ற ஏக்கமும் இவரின் பாடல்களில் மேலோங்கி நிற்கிறது. புவியில் எந்த சாதனையும் புரியாமல் மாண்டு போனவர்களின் நிலையை எண்ணிப்புலம்பும் கவிஞனின் புலம்பல் ஒலி வாசகனையும் கவலைக்கொள்ளச் செய்கிறது எனலாம். இலக்கியம் முழுவதும் நிலையாமையை உணர்த்திச் செல்லும் கவிஞர், இரங்கற்பாவில் இறுதிப்பகுதியில் உச்ச நிலைக்குச் சென்றுவிடுகிறார். தாமும் ஒரு நாள் இறந்து போக, இதே கல்லறையில் புதைத்துவிடுவார்கள் என்று கூறி, தமது இறப்பிற்குப்பின்னர் எழுதவேண்டிய கல்லறைப்பாக்களையும் பாடிச்செல்கிறார். ஆக அவலமும் நிலையாமையும் பின்னிப்பிணைந்த இலக்கியமாகத் தாமஸ்கிரேயின் 'எலிஜி' திகழ்கிறது எனலாம்.

முதன்மை நூல்

சாகுல்ஹமீது கா. *தமிழில் கவிதை மொழிபெயர்ப்பு* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பிலிட்) அம்பத்தூர் சென்னை – 600098. 2004 (ப.கள்) 104-141.

பாரதி என்னும் சமுத்திரத்தில் பெண்ணியம் எனும் முத்து

முனைவர் க.மகேஸ்வரி, உதவிப் பேராசிரியர், பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி, தஞ்சாவூர் - 5

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே யிம்மூன்றுஞ் செய்!

என்ற உயரிய வரிகளை உலகிற்குத் தந்து, ஆண்டு பலக் கடந்தாலும் அழியாத புகழுடன் என்றும் நிலைத்து, கவிதை வானில் சிறகடிக்க துடிக்கும் தமிழ் கவி உள்ளங்களுக்கெல்லாம், புதுமை எனும் சிறகைக் கொடுத்து, சிந்தாமல் சிதராமல், புதுக்கவிதை என்னும் புதியதோர் இலக்கிய வடிவம் தமிழில் தோன்றக் காரணமாக இருந்தவர் புதுக்கவிதையின் முன்னோடியாக திகழ்ந்தவர், மேலைநாட்டுக் கவிதை வடிவத்தை முதன் முதலில் தமிழ் மொழிக்கு அறிமுகப்படுத்தியவர் மகாகவி பாரதியார் ஆவார்.

பாரதி எனும் சமுத்திரம்

ஒரு நூற்றாண்டைக் கடந்தும் பேசி முடியாமலும், எழுதி தீராமலும் இருக்கின்ற வார்த்தை வித்தகர் பாரதியார். பாரதி ஒரு மகா சமுத்திரம் போன்றவர். அச்சமுத்திரத்தில் மூழ்கி முத்தெடுக்கச் சென்றால், தலித்தியம், தேசியவியம், பெண்ணியம், சிறுபான்மையியம், விடுதலை வேட்கை, இயற்கை, சுற்றுச்சுழலியல், தெய்வ வழிபாடு, காதல் என்று பல முத்துக்களை எடுக்கலாம். இதில் பெண்ணியம் என்று பார்த்தோமானால், பாரதியாரின் விடுதலை உணர்வோடு பெண்விடுதலையும் வேரூன்றியிருப்பதை நாம் காணலாம்.

பெண்ணியத்தின் தோற்றம்

காலம் தோறும் சமுதாயத்தில் மாற்றங்கள் தோன்றுவது சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டு காலமும் குறிப்பிட்ட ஒரு சூழலுக்குட்பட்டு அதற்கான மாற்றங்களுக்கும் உட்படுகின்றது. அந்த மாற்றமானது ஒரு நூற்றாண்டையே ஆட்டி வைத்தாலும் அதன் தேவை, முக்கியத்துவம் இவற்றைப் பொறுத்து அவை தொடர்வதும், தொடங்கிய காலத்திலேயே அழிவதுமான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவ்வாறு 18 – ஆம் நூற்றாண்டில் தோன்றியதே பெண்ணியம் குறித்தச் சிந்தனையாகும். மூன்று நூற்றாண்டுகளைக் கடந்தாலும் இதன் தேவையும் முக்கியத்துவமும் இன்றும் குறையவில்லை என்பதைப் பார்க்கும் போது பெண்ணியம் குறித்த விழிப்புணர்வு இன்றும் தேவைப்படுவதை நாம் உணரலாம். 1776 – ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியும், 1789 – ஆம் ஆண்டில் தோன்றிய அமெரிக்கப் போரும் உலக அளவில் சமூகத்தில் பெரிய மாற்றங்களைத் தோற்றுவித்தன் விளைவாகத் தோன்றியதே பெண்கள் புரட்சியாகும். மக்கள் என்பது ஆண் பெண் இருபாலரையும் பொதுவாகக் கொண்டது. ஆனால் ஆண்களுக்கு உரிய உரிமைகளும் நியாயங்களும் பெண்களுக்கும் உண்டு என்ற வாதத்தை முன்வைத்து எழுந்த இந்த புரட்சியே பின்னாளில் மகளிர் தினம் கொண்டாடும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றது என்பது உண்மை. இதனைப் பாரதியின் வரிகளில் சொல்வதென்றால்,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்

என்றும்,,

கற்புநிலை என்று சொல்ல வந்தால்
இரு கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்

என்றும், சொல்வதில் பெண்ணுரிமை வாழ்வுக்கு வழிவகுத்து பெண்ணியம் பேசப்பட்டிருப்பதை காணலாம். பெண்ணியத்திற்கு அடிப்படையானது சமத்துவமும் சுதந்திரமும் ஆகும். இதனை இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் முதன் முதலில் எடுத்துச் சொன்னவர் மகாகவி பாரதியார் ஆவார்.

பாரதியின் விசாலப்பார்வை

பாரதியார் ஓர் உலகியல் அறிஞர். உலகில் எந்த மூலையில் எது நடந்தாலும் அதனை தெரிந்து கொள்ளும் ஆர்வமும், துடிப்பும் மிக்கவராக இருந்தார். அவரது இந்த விசாலப்பார்வைதான் இந்திய நாட்டில் விடுதலைக் குறித்து நாடெங்கிலும் பரவலாக பேசப்பட்டு வந்த நேரத்தில், பெண் விடுதலையின் அவசியத்தையும், விழிப்புணர்வையும் குறித்து மக்களிடையே அவரைப் பேசவைத்தது. உலகின் பல்வேறுப் பகுதிகளில் இருந்த பெண்கள் அமைப்புகள் குறித்தும் பெண்கள் செய்த புரட்சிகள் குறித்தும் அறிந்து வைத்திருந்த பாரதியார் தான் தெரிந்து கொண்ட செய்திகளை தமிழக மக்களுக்குத் தெரியப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், உலக அளவில் சிறந்த பெண்மணிகளை பாராட்டவும் செய்திருக்கின்றார்.

பெண்களைப் போற்றிய பாரதி

பெரியாருக்கு முன்பே பெண்களைப் போற்றியவர் பாரதியார். உலக அளவில் பெண்கள் செய்த மகத்தான செயல்களையும் சாதனைப் புரிந்த பெண்களையும் மதித்துப் பாராட்டியவர் பாரதி. தென்னாப்பிரிக்காவில் பெண்கள் விடுதலைச்சங்கம் என்ற ஓர் அமைப்பு 1910 – ஆம் ஆண்டு பியேட்டர் மாரிஸ் பார்க் என்ற நகரத்தில் தொடங்கப்பட்டதை அறிந்த பாரதியார் அதுகுறித்த செய்திகளை எழுதியதோடு அந்த சங்கத்தையும் பாராட்டியிருக்கின்றார். அச்சங்கத்தை குறித்தச் செய்திகளைத் தமிழர்கள் அறியும் வண்ணம் செய்து, தமிழ்ப் பெண்களுக்கு ஊக்கம் கொடுத்து உலக அளவில் உள்ள தலைசிறந்த பெண்களுக்கு, தமிழகப் பெண்கள் சிறிதும் சலித்தவர்கள் இல்லை என்ற நினைவோடு அழியாத பல கவிதைகளை வடித்தார்.

சீனப் பெண் விடுதலை வீராங்கனை 'சியூசின்' செய்திகளையும் தமிழகம் அறியச் செய்தார். புதுமையான புரட்சிகரமான வரவேற்கத் தகுந்த நிகழ்ச்சிகளை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல் அதனை பிறர் அறியும் படியும் செய்தார். இன்றும் நாம் அறியாத பல அறிஞர்களை, அவர்களின் பெயர்களை, பாரதியார் நன்கு அறிந்திருந்ததோடு தமது இதழ்களில் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். சீன தேசத்து ஞானி 'யாகத்ஸ் உங் - த்ஸே', கிரேக்க ஞானி 'எபிக்தெதுஸ், எகிப்திய ஞானி ஹெர்மஸ்' போன்றவர்களை குறிப்பிட்டு அவர்கள் குறித்த செய்திகளையும் அவர் வெளியிட்டார்.

உலக அளவில் அறிஞர்களையும் மகான்களையும் போற்றியதோடு நில்லாமல், இந்திய அளவில் பல தலைவர்களை தமிழகத்துக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் பாரதியைச் சாரும். பஞ்சாப் சீக்கியத் தலைவர் குருநானக் தேவ் மற்றும் குரு கோவிந்தசிங் போன்றோரை அறிமுகப்படுத்தி, அவர்கள் சாதியை

ஒழிக்கப் போராடியதையும் குறிப்பிட்டதோடு நிற்காமல் குருகோவிந்தசிங்கின் சீர்களில் பத்தாம் குருகோவிந்தசிங்கை பாராட்டி வாழ்த்துப் பரவு எழுதி அவரைக் கௌரவித்தார்.

திறமையாளர்களை தேடி கண்டுப்பிடித்து பாராட்டும் வழக்கம் கொண்ட பாரதியார், அந்த வரிசையில் பெண்களையும் சேர்த்து அவர்களைப் பாராட்டுவதையும் தனது வழக்கமாக கொண்டிருந்திருக்கின்றார். நாடு, மொழி, இனம் கடந்து பெண்களை பாராட்டியதோடு தமிழகத்தின் பெண்களும் அவ்வாறு உயர வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்திருக்கின்றார்.

டி.கே. கார்வே என்ற சீர்திருத்தவாதி பூனாவில் பெண்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் தொடங்க முயற்சி செய்த போது பாரதி அது பற்றி புகழ்ந்து கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றார். அதில் கல்வியறிவு பெற்ற பெண்களை குறித்து எழுதும் போது கவிக்குயில் சரோஜினி நாயுடுவைப் பற்றி குறிப்பிட்டு, 'ஆங்கிலேயர்களே பாராட்டும் அளவிற்கும், வியக்கும் அளவிற்கும் ஆங்கிலக்கவிதையை நன்றாக எழுதக் கூடியர் இவர்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அயர்லாந்தைச் சேர்ந்தவரும், இந்தியாவின் வீரத் துறவியான சுவாமி விவேகானந்தரின் தலைமை சீடருமான மார்கிரட் நோபின் எனும் இயற்பெயர் கொண்ட சகோதரி நிவேதிதா அவர்களால் தன் மனைவியையும் மதிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்ட பாரதியார் சகோதரி நிவேதிதாவை தனது ஞான குருவாக ஏற்றுக் கொண்டு அவர்களை புகழ்ந்து பலப் பாடல்களும் பாடியுள்ளார். அதனால்தான் பெண்சுதந்திரம் குறித்து பேசும் பொழுது மண்ணுலகில் எல்லா உயிரும் தெய்வம் என்றால் மனைவியும் தெய்வம்தான் என்ற கருத்துப்பட அவர் பாடியதை,

பெண்ணுக்கு விடுதலை யென்றிங்கோர் நீதி
பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றி கேளீர்!
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட்டீரே!
விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர்
விடுதலையென்பீர் கருணை வெள்ளமென்பீர்
பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை

என்ற கவிதை வரிகளில் நாம் அறியலாம்.

பாரதியின் பெண் கல்விச் சிந்தனை

பெண்ணியம் என்று பேசத் துவங்கினால் பெண் கல்வியும் அதில் ஒரு அங்கம் என்பது உண்மை. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டுவந்த அந்த காலத்தில், பெண் கல்வியை புறக்கணிப்பவர்கள் இறந்தவர்களுக்கு சமமானவர்கள் என்று கூறுவதை,

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.

என்பதில் நாம் அறியலாம். இதில் பெண் கல்வியை மறுத்தவர்களை சாடுவதோடு பெண்களை வெளியில் விடாமல் வீட்டினுள் வைப்பதால் மனித சமுதாயத்திற்கே அது கேடு என்ற பாரதியின் உணர்வை கவிதை வாயிலாக நாம் அறியலாம்.

புதுமைப் பெண்

பெண்ணியம், பெண் சிந்தனை, பெண் கல்வி, பெண் சுதந்திரம் என்று ஆயிரம் ஆயிரம் பாடி தீர்த்தாலும் அதில் எல்லாம் பெண்களுக்கான எந்த உயர்வையும் அவர்கள் பாரதி காலத்தில் எட்ட வில்லை என்பது உண்மை. இதனை உணர்ந்த பாரதி புதுமைப் பெண்ணை படைத்து இந்த சமுதாயத்தில் உலவவிட நினைத்ததை, அவரின் புதியச் சிந்தனை கவிதை வரிகளில் நாம் அறியலாம். அக்கவிதையில்,

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில - மூடர்
நல்ல மாதரறிவைக் கெடுத்தார்

என்ற வரிகளில் அறிவிலிகள் தான், பெண்கள் அறிவாளிகளாவதை தடுத்து நிறுத்தியிருக்கின்றனர் என்று பாரதியார் கூறுவதைக் காணலாம். நாணமும் அச்சமும் நாய்களுக்கு தான் வேண்டும். அவை ஞான நல்லறமும் வீர சுதந்திரமும் போற்றி பாதுகாக்கும் நல்குடியில் பிறந்த பெண்களுக்கு தேவையில்லை என்று பெண்களின் அச்சத்தையும் நாணத்தையும் போக்கியவர் பாரதியார். பெண்கள்தான் பெண் சுதந்திரத்திற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பது பாரதியின் கருத்து.

பாரதி ஓர் அக்கினிக் குஞ்சு

அக்கினக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்:
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

என்று பாடிய பாரதியார் ஓர் அக்கினிக் குஞ்சு. அந்த அக்கினியை எடுத்துக் கொண்டவர்கள் எல்லோரும் அக்கினியாக ஆவார்கள். அத்தகு ஆற்றல் மிக்க மனிதரான பாரதியார் பேசாத பெண்ணினத்தைப் பேச வைத்தார். அச்சம், மடம், நாணம் உள்ளிட்டவைகளால் அடங்கிக்கிடந்த பெண்ணித்தை தனது வைர வரிகளால் மாற்றியமைத்தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருந்தால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்

என்ற வரிகளின் வழியாக பெண்களை செம்மையானவர்கள் என்றும் பூமியில் யாருக்கும் அஞ்சாமல் ஞானத்தால் செருக்கு கொண்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடும் பாரதி என்ற சமுத்திரத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்கான முத்துக்களை மேலும் நாம் நிறைய எடுக்கலாம்.

தமிழ் விளம்பரங்களில் பிறமொழிப் பயன்பாட்டிற்கான காரணங்களும் அதனால் தமிழ்மொழிக்கு உண்டாகும் விளைவுகளும்

முனைவர் ப. மங்கையர்க்கரசி, உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10

விளம்பரங்கள் பொதுவாக விளம்பர ஆசிரியர்களின் படைப்பாற்றலையும் கற்பனை வளத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்து இருக்கின்றன. ஆகையால் இவ்விளம்பரங்களைப் பார்ப்பவர் மற்றும் கேட்பவர்களின் மனதிலும் நினைவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று கூறினால் அது மிகையாகாது. இளம் சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு மக்களும் விளம்பரங்கள் வழியாக வந்து சேரும் விளம்பர வரிகளை சினிமாப் பாடல்களைப் போன்று முனுமுனுப்பதை எங்கும் காணலாம்.

இத்தகைய வலிமை வாய்ந்த விளம்பர வரிகள் எழுதப்படும்பொழுது பொருள்களின் விற்பனையையும் கவர்ந்திழுக்கும் நோக்கத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் மொழியின் அமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் மொழி நடையிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தமிழ் விளம்பரங்கள் பல்வேறு பொருள்களைப் பற்றியும் பல்வேறு மனிதர்களுக்காகவும் அமைவதால் அவ்விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் மொழியும் பல்வேறு மொழி அமைப்புகளோடு அமைகின்றன. அகில இந்திய அளவில் பல மொழிகளில் தயார் செய்யப்படும் விளம்பரங்கள் மாபெரும் நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன. இலட்சக்கணக்கில் செலவு செய்து ஆங்கில மொழியிலேயே விளம்பரங்கள் தயாரிக்கப்படுகின்றன. பின்பு அதை தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் போது ஆங்கில மொழி அமைப்போடு அப்படியே மொழி பெயர்க்கின்றனர். ஆங்கில மொழியின் அமைப்பு வேறு; தமிழ்மொழியின் அமைப்பு வேறு. ஆகவே, ஆங்கில மொழியின் ஆதிக்கம் தமிழ்மொழியின் கட்டமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

ஒலி அளவில் பிறமொழித்தாக்கம்

பிறமொழித் தாக்கமானது ஒலி அளவில் மூன்று நிலைகளில் நடைபெறுகிறது.

1. ஆங்கில எழுத்துக்களைத் தமிழ்மொழியில் ஒலிபெயர்த்து எழுதுவது
2. ஆங்கில எழுத்துக்களை அப்படியே ஆங்கிலத்தில் எழுதுவது
3. தமிழ் எழுத்துக்களையும் ஆங்கில எழுத்துக்களையும் கலந்து கலந்து எழுதுவது

என்ற நிலைகளில் தமிழ் விளம்பரங்களில் மொழிக்கலப்பு காணப்படுகின்றன. இம்மொழிக்கலப்பிற்கு படிப்போரின் தகுதி காரணமாக இருக்கலாம்.

ஆங்கில எழுத்துக்களைத் தமிழ்மொழியில் ஒலிபெயர்த்து எழுதுவது

உதாரணம்,

1. மைக்ரோ கம்ப்யூட்டர் கண்ட்ரோல்

2. சென்ரல் போலீஸ் கேண்டீன்
3. மினி பவர் ட்ரில்லர்
பேர் அண்டு லவ்லி

ஆங்கில எழுத்துக்களை அப்படியே ஆங்கிலத்தில் எழுதுவது

உதாரணம்,

1. இலவசம் அனைத்து பிராண்ட் ஏசிகளுடன் ரூ. 3770 மதிப்புள்ள Premier 4 pcs Nonstick Cookware முற்றிலும் இலவசம்.

2. சுலபம் ரூ.10 மட்டும் Surf Excel Quick wash

தமிழ் எழுத்துக்களையும் ஆங்கில எழுத்துக்களையும் கலந்து கலந்து எழுதுவது

உதாரணம்

சக்திமsaலா saமையல் niயூசிniமா
ஒFஸ்டிவல் Bக்பாஸ் ராkavi kaதி r
டல்லா CFாம் மெத்தைகள் kaaர்த்திk
Fரெண்ட் ரvi

இதுபோன்ற பயன்பாடு அனைத்து விதமான ஊடகங்களிலும் வாகனங்களிலும் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. இப்பயன்பாட்டை இளம் சிறார்களும் பயன்படுத்துகின்றனர். இப்பயன்பாடு தமிழ்மொழியின் கட்டமைப்பில் பெரும் விளைவை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சொல் நிலையில் பிறமொழித்தாக்கம்

ஆங்கிலச் சொற்களை தமிழ்மொழியின் அமைப்பிற்கு ஏற்ப ஒலிபெயர்த்து எழுதுதல். உதாரணமாக,

- *ரிமோட்டுடன் கூடிய கலர் டெலிவிஷன்*
- *கேரண்டியுடன் கூடிய மிக்ஸி*
- *எக்ஸ்சேஞ்ச் விலையில் ஆ.்.பர்*

மொழிக்கலத்தல் (code mixing)

ஒரே வாக்கியத்தில் ஆங்கிலச் சொற்களையும் தமிழ்ச்சொற்களையும் கலந்து கலந்து எழுதுவதை மொழிக்கலத்தல் என்பர். உதாரணம்:

- *ஒவ்வொரு விசயத்தையும் அலசி ஆராய்ந்து முடிவு பண்றவங்க setup boxனு வரும்போது கண்டீப்பா Tataskyதான் choose பண்ணுவாங்க.*

மொழித்தாவல் (code switching)

ஆங்கிலத் தொடர்களையும் தமிழ்த் தொடர்களையும் மாற்றி மாற்றி எழுதப்படுவதை மொழித்தாவல் (code switching) என்றும் கூறலாம். இதுபோன்ற பயன்பாடு தமிழ் விளம்பரங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

(எ.கா.) சாதாரண Chemical மேனிய பாதுகாக்கும்
ஆனால் Ego Friendly Chemical மேனிக்கு Friend
Ego Friendly Chemical அடங்கிய
Friendly wash Detergent பாதுகாப்பு
மேனிக்கும் துணிகளுக்கும் இவை dry clean போல் சலவை

Yes my best Friend
My friendly wash

கலப்புத் தொடர்களின் பயன்பாடு

ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் அடைகளாகவும் தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலச் சொற்கள் அடைகளாகவும் பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்படும் கலப்புத் தொடர்களை தமிழ் விளம்பரங்களில் அதிகமாகக் காணமுடிகிறது. (எ.கா.)

ஆங்கிலப் பெயரடைகள் +	*தமிழ்ப் பெயர்ச் சொற்கள்*		*= கலப்புத் தொடர்கள்*
ஸ்பெசல் +	*ஊட்டச்சத்து*	*=*	*ஸ்பெசல் ஊட்டச்சத்து*
நேச்சுரல் +	*பொருட்கள்*	*=*	*நேச்சுரல் பொருட்கள்*
டிசைனர் +	*சேலைகள்*	*=*	*டிசைனர் சேலைகள்*

தமிழ்ப் பெயரடைகள் +		*ஆங்கிலப் பெயர்ச் சொற்கள்*		*= கலப்புத் தொடர்கள்*
புதிய	*+*	*பிரிமியர்*	*=*	*புதிய பிரிமியர்*
அதிநவீன	*+*	*இஞ்சின்*	*=*	*அதிநவீன இஞ்சின்*
புதிய	*+*	*குக்கர்*	*=*	*புதிய குக்கர்*
பழைய	*+*	*மிக்ஸி*	*=*	*பழைய மிக்ஸி*
அதிரடி	*+*	*சேல்*	*=*	*அதிரடி சேல்*
ரொம்ப	*+*	*ஈஸியா*	*=*	*ரொம்ப ஈஸியா*

தமிழ்ச் சொற்களுடன் ஆங்கில பன்மை உருபு

தமிழ்ச்சொற்களுடன் ஆங்கில பன்மை உருபான **'s'** என்ற எழுத்தை தமிழ்ப்படுத்தம் செய்து பயன்படுத்தும் போக்கு தமிழ் விளம்பரங்கிளல் பரவலாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, *வேலன்ஸ், மாமிஸ், குட்டீஸ், வாண்டூஸ் போன்றன.*

ஆங்கிலச் சொற்களுடன் தமிழ் வேற்றுமை உருபுகளின் பயன்பாடு

ஆங்கிலச் சொற்களுடன் தமிழ் வேற்றுமை உருபுகளான ஐ, ஆல், கு, இன், இல் போன்றவற்றை இணைத்துப் பயன்படுத்தும் போக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

மிக்ஸி	*+*	*ஐ*	*=*	*மிக்ஸியை*
மிஷின்	*+*	*கள்*	*=*	*மிஷின்கள்*
குக்கர்	*+*	*இன்*	*=*	*குக்கரின்*
மிக்ஸி	*+*	*இல்*	*=*	*மிக்ஸியில்*
மிஷின்	*+*	*க்கு*	*=*	*மிஷினுக்கு*
பட்டன்	*+*	*ஆல்*	*=*	*பட்டனால்*

மேற்கூறப்பட்ட வேற்றுமை உருபுகளில் 'கு' என்னும் வேற்றுமை உருபு விளம்பரங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

பிறமொழி கலப்பிற்கான காரணங்கள்

1. கலைச்சொல் இல்லாமை

தமிழ் மொழி பழமை வாய்ந்ததாகவும் இலக்கண இலக்கிய வளம் நிறைந்ததாகவும் பல மொழிகளுக்குத் தாய்மொழியாகவும் செம்மொழிகளின் வரிசையில் வைத்துப் போற்றக்கூடியதாக இருந்தாலும் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து மொழிபெயர்க்கும் அளவிற்கு அறிவியல் கலைச்சொற்கள் (Technical Terms) தமிழ் மொழியில்

உருவாக்கப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். மேலும் ஒலிபெயர்ப்புச் சொற்களும் நிலைபேறாக்கம (standardization) அடையவில்லை. மேற்கூறப்பட்ட காரணங்களால் தமிழ் விளம்பரங்களில் பிறமொழிப் பயன்பாட்டை தவிர்க்க இயலாதிருக்கலாம்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையில், சொல்வங்கி என்னும் திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் பல்துறை அறிஞர்கள், பத்திரிக்கை ஆசிரியர்கள் மற்றும் பலர் இணைந்து தற்போதைய தமிழ்ச சமுதாயத்தின் தேவைக்கேற்ப கலைச்சொற்களை உருவாக்கி அவற்றைத் தரப்படுத்தி வெளியிடுகின்றனர். இச்சொற்களை கல்வியாளர்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் உருவாக்கத்திலும் ஊடகத்துறையினர் பயன்படுத்தும் மொழிப் பயன்பாட்டிலும் பயன்படுத்துவதில்லை என்றே கூறலாம். இதுபோன்ற காரணங்களாலும் தமிழ் விளம்பரங்களில் பிறமொழிப் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகின்றன எனக் கூறலாம்.

2. விளம்பர ஆசிரியர்களின் மொழிப்பற்றின்மை

விளம்பர ஆசிரியர்கள் விளம்பரங்களைப் படைக்க ஆங்கிலத்தில் சிந்தித்து ஆங்கில மொழியிலேயே விளம்பரங்களை உருவாக்குகின்றனர். இதையே பல்வேறு இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்கின்றனர். மொழிபெயர்ப்பாளர்களுள் சிலருக்கு பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழிலேயே விளம்பரங்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வமின்மை மற்றும் மொழிப்பற்றின்மை என்றும் கூறலாம். மேலும் மொழிபெயர்ப்புக்கு ஏற்ப இருமொழி அல்லது பன்மொழிப் புலமைமிக்க ஆசிரியர்கள் இல்லாமையால் தமிழ் விளம்பரங்களில் பிறமொழிகளின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகின்றன எனலாம்.

3. கவன ஈர்ப்பு

ஒரு மொழியின் ஒலி மற்றும் சொல்லின் மரபுநிலைக்கு மாறுபட்டு விளம்பரங்கள் அமையும்போது அவற்றை கேட்டுணர்ந்து காண்பதற்கும் படித்தறிவதற்கும் ஆர்வமாய் அமைந்து விடுகிறது. இதுபோன்ற கவர்தல் பண்பு கருதியும் விளம்பரங்களில் பிறமொழிப் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் தமிழ்ச் சமுதாயத்தில் படித்தவர் மற்றும் பாமரர் என அனைத்துத் தரப்பு மக்களிடமும் ஆங்கில மொழியின் மோகம் அதிகமாகக் காணப்படுகிறது. ஆங்கிலம் பேசத் தெரிந்தவரைத்தான் சமுதாயம் மதிப்பு உடையவராகக் கருதுகிறது. இந்த மனப்பாங்கு (attitude) விளம்பரப் பண்புகளில் ஒன்றான கவன ஈர்ப்பு (attraction) பிறமொழிக் கலப்பிற்கு முக்கியக் காரணமாக அமைகிறது எனலாம்.

4. சட்டம் இல்லாமை

வணிக விளம்பரங்களுக்கும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளது போல தமிழ் விளம்பரங்களுக்கும் சில சட்டவிதிமுறைகளை கையாள வேண்டும். உதாரணமாக தமிழ்த் திரைப்படங்களுக்கு பிறமொழிக் கலப்பின்றி தூய தமிழில் பெயர் சூட்டினால் அப்படத்திற்கு வரிவிலக்கு உண்டு என்றிருப்பதைப் போல தூய தமிழ் விளம்பரங்களுக்கும் வரி விலக்கு உண்டு என்றிருந்தால் தமிழ் விளம்பரங்களில் பிறமொழிக் கலப்பைக் கணிசமாகத் தவிர்க்கலாம்.

மேற்கூறப்பட்டது போல சட்டம் இல்லாததும் பிறமொழிக் கலப்பிற்கு காரணமாக இருக்கலாம். எ.கா. சீனம் பிரெஞ்சு போன்ற சில மொழிகளில் பிறமொழியைக் கலந்து பயன்படுத்துதல் கூடாது என்ற சட்டம் உண்டு.

5. மொழிப்பற்றின்மை

வணிகத்துறையில் பொருள்களை உருவாக்குவோர், விற்பனையாளர், நுகர்வோர் என மூவர் ஈடுபடுகின்றனர். உருவாக்குவோரும் விற்பனையாளரும் பொருள் விற்பனை பற்றி கவலைப்படுகின்றனரே அன்றி மொழிப்பற்றிக் கவலைப்படுவதில்லை. நுகர்வோர் பொருளின் தரம் பற்றிக் கவலைப்படுகின்றனரே தவிர நுகர்பொருளின் வணிகக் குறியீட்டுப் பெயர் எம்மொழயில் உள்ளது என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. இது போன்ற காரணங்களும் பிறமொழிக் கலப்பிற்கு காரணமாக அமைகின்றன எனலாம்.

6. ஏற்பு நிலைகள்

விளம்பரங்களில் பிறமொழிக்கலப்பு ஏற்படுவதற்கு சமுதாய நிலை, விளம்பரப் பண்பு, விளம்பர ஆசிரியர்கள், பிறமொழிச் சொற்களை ஏற்கும் மக்களின் மனநிலை போன்றவை காரணங்களாக இருக்கின்றன. பிறமொழிச் சொற்களைத் தவிர்க்க இயலாதபோது அச்சொற்களை தமிழ்ப்படுத்தம் செய்து பயன்படுத்தப்படுகிறது. ஊடகத்தமிழுக்கென சில விதிமுறைகளைக் கையாள்வது அவசியமாகிறது. அரசுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும விளம்பரங்களுக்கெனச் சில சட்ட திட்டங்களை இயற்றினால்தான் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறையும். இருப்பினும் பிறமொழித் தாக்கத்தை முற்றிலும் அழித்துவிட முடியாது. அவ்வாறு அழிப்பது வணிக மரபன்று. ஆகையால் பிறமொழிக்கலப்பு தவிர்க்க இயலாது. எனினும் தேவையுற்ற இடங்களில் தவிர்த்தல் வேண்டும்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

என்ற திருவள்ளுவரின் கூற்றிற்கேற்ப பெரும்பாலான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான இனிய தமிழ்ச் சொற்கள் இருக்க அவற்றைப் பயன்படுத்தாமல் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்துவது கனியிருப்பக் காய் கவர்ந்தலுக்குச் சமம் ஆகும்.

பிறமொழிப் பயன்பாட்டால் தமிழ்மொழிக்கு ஏற்படும் கேடுகள்

- இனிய தமிழ்ச் சொற்கள் பல வழக்கிழந்து மறைதல்
- புதுச்சொல் மற்றும் கலைச்சொற்கள் புனைவின்மை
- தாய்மொழி உணர்ச்சி இழத்தல்
- தாய்மொழியின் வளத்தை இழத்தல்
- தமிழ்மொழி, பிட்ஜின் (pidgin) என்னும் வணிக மொழியாக மாறும் அபாயம் உருவாதல்.
- மேலும் விளம்பரங்களின் நோக்கமும் நிறைவேறுவதில்லை.

இசை வளர்ச்சிக்கு வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு

க.மதிவாணன், முனைவர்பட்ட ஆய்வாளர், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

இசை வளர்ச்சிக்கு வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு என்ற தலைப்பின்கீழ் இந்தக் கட்டுரையானது அமைகின்றது. சங்ககாலத்தில் இருந்து இன்று வரை எத்தனையோ இசை விற்பன்னர்கள் இசை வளர்ச்சிக்குப் பாடுபட்டிருந்தாலும் அதில் வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு என்பது தனித்திருக்கிறது.

இசைக்கருவிகளின் பிரிவுகளாக

1.தோற்கருவி
2. காற்றுக்கருவி
3. நரம்பிசைக் கருவி
4. கஞ்சக் கருவி

என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மூன்றாவதாக இடம்பெறும் நரம்பிசைக் கருவிகளில் வித்திட்டதாக

1. யாழின் தோற்றமும் வளர்ச்சியும்
2. வயலினிசைக் கருவியின் தோற்றமும் வளர்ச்சியும்
3. வயலினிசைக் கலைஞர்களின் படைப்புகள்
4. இசை மற்றும் நடன மேடைகளில் வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு

என்ற உட்கட்டத் தலைப்புகளின் பேரில் சுருக்கமாக இக்கட்டுரையைக் காண்போம்.

ஆதிமனிதனிடம் நரம்பிசைக் கருவி தோன்றிய விதம்

ஆதி மனிதன் தன் பசியைப் போக்குவதற்காக விலங்குகளை வேட்டையாடும் பொழுது வில்லையும், அம்புகளையும் பயன்படுத்தியுள்ளான். அவ்வாறு வில்லை இரு முனைகளிலும் நாண்களைக் கட்டி அம்பை எய்யும்போது அதிலிருந்து ஒரு ரீங்கார ஓசையுடன் ஒரு இனிய நாதம் ஏற்பட்டிருக்கிறது. அதை உணர்ந்த ஆதிமனிதன் அந்த இனிய ஓசையை ரசித்திருக்கின்றான்.

அவ்வாறு ரசித்த இசையை இரு கொம்புகளுக்கிடையே விலங்குகளின் நரம்புகளைக் கட்டி அதை மீட்டி அந்த இசையைக் கேட்டு இன்புற்றிருக்கிறான். பிறகு நரம்புகளுக்கிடையான சுருதி அளவையும் கட்டுப்படுத்தியுள்ளான். இதுவே நாளடைவில் பல்வேறு யாழ் அமைப்புகளாக உருவெடுத்திருக்கின்றது.

ராவணாஸ்திரம்

வயலினிசைக் கருவியின் முன்னோடியாகவும் நரம்பிசைக் கருவியின் முதன்மைக் கருவியாகவும் யாழ் தோன்றியிருந்தாலும் வில்கொண்டு

இசைக்கப்பெறும் கருவி வயலினிசைக்கருவிக்கு முன்னோடி இசைக்கருவியாக "இராவணாஸ்திரம்" எனும் இசைக்கருவி தோன்றியிருக்கின்றது.

வில்யாழ்

இராவணாஸ்திரத்தின் மறுஉருவமாக வில்யாழ் தோன்றியிருக்கிறது. ஒற்றை நரம்புடன் கூடிய வில்யாழ் தோன்றியிருக்கின்றது.

வயலின் இசைக்கருவியின் தோற்றம்

வயலின் இசைக்கருவியின் முன்னோடிகளாக யாழ், வில்யாழ், இராணவாஸ்திரம் என்று நாம் கூறிக்கொண்டிருந்தாலும் "வயலின்□ என்ற இசைக்கருவி, இந்துஸ்தானி, நாட்டை பிறப்பிடமாகக் கொண்டு "வயலின்" எனும் இசைக்கருவி தோன்றியது.

"ஸ்டாடிவோரிஸ்" எனும் கலைஞர் வயலின் இசைக்கருவியை வடிவமைத்து இசைத்துக் காட்டினார். ஆகவே அவர் பெயராலேயே "ஸ்டாடிவோரிஸ்" எனும் பெயர் பொறிக்கப்பட்ட வயலின் இசைக்கருவி உலகத்தில் மிக உயர்ந்த வயலினிசைக் கருவியாக அமைந்திருக்கின்றது.

கர்நாடக இசையில் வயலினிசையின் முன்னோடிகள்

மேற்கத்திய இசையில் இராணியாகத் திகழ்ந்துகொண்டிருந்த வயலினிசைக் கருவியை, கர்நாடக இசையின் முறையில் முதன்முதலாகக் கையாண்ட பெருமை திரு.பாலுசாமி தீட்சிதர் அவர்களைச் சாரும்.

இவர் சங்கீத மூவர்களில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதர் அவர்களது சகோதரர் ஆவார். இவரைத் தொடர்ந்து இவரது வழியில் வந்த தஞ்சை நால்வர்களில் ஒருவரான, சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆவர். இவர்களில் வடிவேலு அவர்கள் இந்த வயலினிசையில் விற்பன்னராக விளங்கினார்.

பாலுசாமி தீட்சிதர்

பிறப்பு மற்றும் பூர்வீகம்

இவர் இராமசாமி தீட்சிதரின் மூன்றாவது மகனாக கி.பி.1708 ஆம் ஆண்டு ஆனி மாதம் அசுவதி நட்சத்தில் கன்யா லக்னத்தில் பிறந்தார். இவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதரின் இரண்டாவது, உடன்பிறப்பாவார். நல்ல இசை ஞானமுள்ளவர். வீணை, ஸ்வரபத், வயலின், சித்தார், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் இசைப்பதில் தகுதி பெற்றவர். இசை இலக்கணங்களையும், சுவர ஞானத்தையும் நன்கு அறிந்தவர்.

இவரது இசை ஞானத்தை அறிந்த இவரது இளமையில் மணலி என்னும் ஊரைச் சார்ந்த சின்னைய்யா முதலியார் அவர்களின் தூண்டுதலின் பேரில் ஒரு ஆங்கிலேயர் ஒருவரிடம் மேற்கத்திய இசை (ON NOTES) கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார். I-E A-II D-III G-IV என்ற சுருதி அடிப்படையில் வயலின் கற்றுக்கொண்டு

அதில் தேர்ச்சியும் அடைந்து, இந்த வயலினிசைக் கருவியில் நமது நாட்டின் பாரம்பரிய இசையான சங்கீதத்தை இசைத்தால் எவ்வாறு இருக்கும் என்று நினைத்து அதில் I-ப II-ஸ III-ப IV-ஸ என்ற சுருதி கூட்டி நமது சங்கீதத்தை இசைத்துப் பெரும் வயலினிசை புரட்சியை செய்தார் பாலுசாமி தீட்சிதர் அவர்கள்.

திரு பாலுசாமி தீட்சிதர் அவர்கள் காலக்கட்டத்திற்குப் பிறகுதான் வயலினிசைக்கருவிக்குச் சங்கீத இசைப்பிரிவில் ஒரு தனியிடம் கிடைத்தது. அதுமட்டுமல்லாமல் இசை மேடைகளில் ஒரு சிறந்த பக்க இசைக்கருவியாகவும் தனிவயலினிசைக் கருவியாகவும், இருவயலினிசைக் கருவியாகவும் வலம் வந்து கொண்டிருக்கிறது.

அதன்பிறகு வந்த வயலினிசைக் கலைஞர்கள் இசைத்துறைக்கு பெரும் தொண்டாற்றியுள்ளார்கள் என்றால், அதற்கு மூலகாரணம் திரு பாலுசாமி தீட்சதர் ஆவார்.

திரு.வடிவேலு

கி.பி.1810 ஆண்டு திரு சுப்ராயன் அவர்களது நான்காவது மகனாகப் பிறந்தார். நாட்டிய உருப்படிகளை இயற்றி இசை மேதைகளாக வலம் வந்த தஞ்சை நால்வர்களுள் ஒருவரான தஞ்சை வடிவேலு அவர்கள் ஓர் வயலினிசைக் கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தஞ்சை நால்வர் அனைவரும் தீட்சிதர் அவர்களின் இசைவழிவந்தவர்கள் என்பது குறிப்பாகத் தஞ்சை வடிவேலு என்பவர் பாலுசாமி தீட்சிதர் அவர்களிடத்தில் நமது இசையான கர்நாடக இசை முறையில் வயலின் கற்றுக்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வயலின் இசைக்கலைஞர்கள்

திரு.பாலுசாமி தீட்சிதர், தஞ்சை வடிவேலு இவர்களைத் தொடர்ந்து பல வயலினிசைக் கலைஞர்கள் தோன்றி இசை வளர்ச்சிக்குத் தத்தம் இசைப்பங்கை அளித்துள்ளார்கள். அவர்களில் சிலர் பெயர்கள் பின்வருமாறு

வயலின் இசைக்கலைஞர்

1. துவாரம் திரு வெங்காட சாமி நாயுடு
2. மைசூர் ஸ்ரீ சௌடையா,
3. கும்பகோணம் ஸ்ரீ இராஜமாணிக்கம் பிள்ளை
4. ஏ.என். கிருஷ்ணன்
5. திரு. சிக்கல் பாஸ்கரன்
6. திரு லால்குடி. கோ. ஜெயராமன்
7. திரு. குன்னக்குடி ரா. வைத்தியநாதன்
8. ஸ்ரீ. அவஹல கன்னியாக்குமரி
9. திரு. சந்திரசேகரன்
10. குடந்தை இராமமூர்த்தி ஐயர்
11. திருவள்ளூர் திரு பார்த்த சாரதி
12. திரு பாலமுரளிகிருஷ்ணா

மற்றும் பலர்.

இவர்களில் தனது இசைப் படைப்புகளை இசை உருப்படிகளாகப் படைத்து வெளியிட்டு இசை உலகிற்குப் பெரும் தொண்டாற்றிய சில முக்கியமான வயலினிசைக் கலைஞர்களை இங்கு காண்போம்.

படைப்புகளை (உருப்படிகளை) இயற்றிய வயலினிசைக் கலைஞர்கள்

1. திரு பாலுசாமி தீட்சிதர்
2. தஞ்சை வடிவேலு
3. திரு லால்குடி. ஜி. ஜெயராமன்
4. திரு. எம். சந்திரசேகரன்
5. திரு எம்.பாலமுரளிகிருஷ்ணா
6. திரு திருவள்ளூர் பார்த்தசாரதி

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். மேலும் (இசை) சங்கீதத் துறைகளில் மட்டுமல்லாமல் (சினிமா) திரைப்படத்துறையிலும் வயலின் இசைக்கலைஞர்கள் பங்களிப்பினை ஆற்றியுள்ளார்கள். திரைப்பட இசையமைப்பாளர்களாக மாறித் திரையிசைப் படைப்புகளை இசை உலகிற்குத் தங்களது இசைப் பங்களிப்பை அளித்துள்ளனர். அவர்களில் சில வயலினிசைக் கலைஞர்களின் பெயர்களைக் காண்போம்.

1. திரு குன்னக்குடி வைத்தியநாதன்
2. திரு.டி.ஆர்.பாப்பா,
3. திரு டி.கே.இராமமூர்த்தி
4. திரு வி.எஸ்.நரசிம்மன் ஆவார்கள்.

மேற்கத்திய இசையில் பங்களிப்பவர்கள்

நம் தென்னக இசை (கர்நாடக இசைத்) துறையில் மட்டுமல்லாமல், மேற்கத்திய இசைத்துறைகளிலும் தங்களது இசைப்பங்களிப்பை அளித்துக்கொண்டு இருப்பவர்கள், எல்.சுப்பிரமணியன், எல்.சங்கர் ஆவார்கள். இவர்கள் துவக்கத்தில் எல்.சங்கர், எல்.வைத்தியநாதன், எல்.சுப்ரமணியன் ஆகிய மூன்று வயலினிசைக் கலைஞர்களும் இணைந்து மூவர் வயலினிசை நிகழ்ச்சியை (VIOLILN TRIO) கர்நாடக வயலினிசை நிகழ்வு நடத்திக் கொண்டிருந்தனர். இவர்கள் மூவரும் வயலினிசைக் கலைஞர். திரு.லெட்சுமி நாராயண ஐயர் அவர்களின் குமாரர்கள் ஆவார்கள்.

மூவர்களில் எல்.வைத்தியநாதன் அவர்களைத் தவிர இருவரும் வெளிநாடுகளில் மேற்கத்திய இசையில் பட்டம் பெற்று (MESTRU) மேற்கத்திய இசைத்துறைகளில் இசைத் தொண்டாற்றி வருகின்றனர். மேலும் மேற்கத்திய இசையையும், நமது நாட்டின் பாரம்பரிய கர்நாடக இசையையும் கலந்து கலப்பிசை (FUSSION) நிகழ்ச்சி நடத்தி நம் இந்தியா குறிப்பாகத் தமிழ்நாட்டின் பெருமையை இவ்வுலகில் வசிக்கும் அனைத்து இசை உள்ளங்களுக்கும் தங்களது இசைப் பங்களிப்பை அளித்து வருகிறார்கள்.

வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு

இசை நிகழ்வுகளில் வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு கர்நாடக இசை நிகழ்வில், வயலினிசைக் கலைஞர் ஒருவர், தனிவயலினிசைக் கலைஞராகவோ, ஒரு பக்க இசைக் கலைஞராகவோ அல்லது இரு வயலினிசை, மூவர் வயலினிசை நிகழ்ச்சிகளில் தங்களது சிறந்த பங்களிப்பை அளித்து வருகின்றனர்.

தனி வயலினிசை

தனி வயலினிசை நிகழ்வில் ஒரு வயலினிசைக் கலைஞர் நடுவில் விழா நாயகனாக இருப்பார். பக்க இசைக்கலைஞர்களான, மிருதங்கம், உப பக்க இசைக்கலைஞர்களாக, முகர்சிங், கடம் கஞ்சிரா ஆகியவற்றின் துணையுடன் இசைநிகழ்ச்சி நடைபெறும். அனைவருக்கும் நன்கு அறியப்பட்ட இசை உருப்படிகளை இசைத்து வயலிசைக் கலைஞர் இசை ஆர்வலர்களின் பாராட்டையும், பரிசையும் பெறுவார்.

பக்க இசைக் கலைஞராக

இசை மேடையில் ஒரு சங்கீதம் பாடும் கலைஞருக்கு ஒரு வயலினிசைக் கலைஞர் சிறந்த பக்க இசைக் கலைஞராகச் செயல்படுவார். அவர் பாடும் இராக ஆலாபனை, சுவரம், நிரவல் போன்றவற்றுக்கு இசையினை எடுத்துக்கொடுத்து இசை நிகழ்சிக்குச் சுவையூட்டுவார். இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு முக்கியப் பங்களிப்பும் அவரே அளிப்பார்.

இருவயலினிசை (VIOLIN DUET)

இரு வயலினிசைக் கலைஞர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு ஒரே இசை உருப்படியைச் சேர்ந்து இசைத்து இசைநிகழ்சி இருவயலினிசை நிகழ்ச்சி நடத்துபவர்கள் இரு வயலிசைக் கலைஞர்கள், இவர்களில் ஒருவருக்கொருவர் தத்தம் இசைப் பணிகளைச் சரியாக ஆற்றி இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறப் பாடுபடுவார்கள்.

மூவர் வயலினிசை (VIOLIN TRIO)

மூன்று வயலிசைக் கலைஞர்கள் இணைந்து ஒரே இசை உருப்படியை இசைத்து நிகழ்ச்சி செய்வது (VIOLIN TRIO) மூவர் வயலினிசை ஆகும். இருவர் ஒரு ஸ்தாயியிலும் மற்றொருவர் கீழ் ஸ்தாயியிலும் இசைப்பது கேட்பதற்கு இனிமை கூடுதலாக இருக்கும். மூவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து இசை நிகழ்ச்சி வெற்றியடையத் தத்தம் பங்கை அளிப்பார்கள்.

நாட்டிய நிகழ்வில் வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு

நாட்டிய மேடைகளில் பாடகர் பாடும் நாட்டிய உருப்படிகளுக்கு ஒரு சிறந்த பக்க இசையாகத் தங்களது பங்களிப்பை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள் வயலினிசைக் கலைஞர்கள். பாடகர் பாடும் நாட்டிய உருப்படிகளான, புட்பாஞ்சலி, கௌத்துவம், ஜதீஸ்வரம், மல்லாரி, கிருதி, தில்லானா போன்ற இசை வடிவங்களுக்கு ஏற்றாற்போல் வயலினிசைக் கருவியின் மூலம் ஒரு சிறந்த பக்க இசையை அளித்து வருகிறார்கள்.

முடிவுரை

இவ்வாறு இசை வளர்ச்சிக்கு வயலினிசைக் கலைஞர்களின் பங்களிப்பு என்பது இசை உலகிலும், இசை வளர்ச்சிக்கும் மிக முக்கிய அங்கம் வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்த இனிமையான இசைப்பங்களிப்பு தொடர வேண்டும் என்று ஆய்வாளர்கள் சார்பிலும் வயலினிசைக் கலைஞர்கள் சார்பிலும் வயலினிசைக் கலைஞர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

இலக்கியத்தில் பெண்ணியம்

முனைவர். இரா.மாலதி, கௌரவ விரிவுரையாளர், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புப் பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு.

சமுதாயத்தில் ஆண்களின் அடிமைப் பிடியில் சிக்கி தவிக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வு, ஊட்டுவதற்கும் சமுதாய முன்னேற்றத்தில் பெரும் பங்கு வைப்பவர்கள் பெண்களே ஆவர்கள் என்பதை தெளிவுறுத்தவும் பல இலக்கியங்கள் பெண்ணியத்தின் முக்கியத்துவத்தை பதிவுச் செய்துள்ளன.

பெண்ணியம் என்பதைச் சிறு கூட்டிற்குள் அடைத்து விடமுடியாது. வீட்டிற்குள் பூட்டிவைக்கப்பட்ட பெண்மை அப்பூட்டை உடைத்தெறிந்துவிட்டு வெளியேறிவிட்டது. இந்திய மக்கள் இருநூறு ஆண்டுகளாகக் கடுமையாகப் போராடி எப்படி வெள்ளையரை வெளியேற்றிப் பாரதத் தாயின் விலங்கை உடைத்தெறிந்தார்களோ அதுபோல் இன்று பெண்ணடிமையை விடுவிக்கத்தென்றல் புயலாய் வீசத் தொடங்கிவிட்டது. அவர்களைப் புயலாய் மாற்றிய ஆடவர்கள் உண்மையை உணர்ந்து விடின் அது இருபாலர்க்கும் நன்மை பயக்கும்.

சங்க இலக்கியத்தில் பெண்ணியம்

தமிழ் இலக்கியங்களைப் பார்க்கும் நிலையில் சங்க காலத்து மகளிர்க்கு இருந்த உரிமை அதன் பின்னர் வாழ்ந்த பெண்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் மிகுந்த கவி இன்பம் தந்துள்ளனர்.

ஔவையார் என்னும், சங்க காலப் பெண்பாற் புலவர் அரசத் தூதுவராகப் பணியாற்றியதை புறநானூறு எடுத்துக்காட்டுகின்றது. தொண்டை நாட்டு அரசானான கருணாகரத் தொண்டைமானிடத்து அதியமான் ஔவையாரை தூதாக அனுப்பி வைத்தான். நாட்டு மக்கள் போரில் இறப்பதைத் தடுக்கும் பொருட்டு ஔவையார் அரச தூதராக அரும்பணி புரிந்தார்.

அரசனுக்குத் தூது போகும் அறிவும், அரச தந்திர அறிவும், நாட்டு நடப்பை நன்குணர்ந்த நல்லறிவும் கொண்ட அம்மையாராக ஔவையார் விளங்கியதை, புறநானூறு கூறுகின்றது.

காக்கைப் பாடினியார் என்ற சங்ககாலப் பெண்பாற் புலவர் காக்கைப் பாடினியம், சிறு காக்கைப் பாடினியம் போன்ற தனி இலக்கியங்களைப் பாடுவதற்கு ஏற்ற வகையில் விளங்கினர் மற்ற பெண்பாற் புலவர்கள், இயல் சார்ந்த புலவர்கள் என்ற தகுதி நிலையைப் பெற்று உள்ளனர். இசை வளர்க்கும் பணியில் மகளிர் சிறந்து பணியாற்றி உள்ளனர். இசை இசைக்கும் மகளிரை விறலிகள் என்று சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. நாடகத்தில் நடிக்கும் திறமையை சங்க காலப் பெண்கள் பெற்றிருந்ததால் அவர்கள் நாடக மகளிர் என்று அழைக்கப்பட்டன.

சங்க காலத்திலும் பெண்கள் முத்தமிழில் சிறந்து விளங்கினார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் பெண்ணியத்தின் மேன்மையை பதிவுச் செய்துள்ளன.

ஆற்றுப்படையில் பெண்ணியம்

ஆற்றுப்படை நூல்களாவன திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) இவ்வைந்து நூல்களும், ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை என்பது ஒரு வள்ளல் அல்லது அரசனிடம் பரிசில் பெற்று வரும் ஒருவன் தன் எதிரில் வரும் ஒருவனை தான் பரிசில் பெற்றத் தலைவனிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும். இந்த ஆற்றுப்படை நூல்களில், மகளிர் பற்றிய குறிப்புகள் பண்புகள், இயல்புகள், சிறப்புகள் ஆகியன போற்றப்பட்டுகின்றன.

திருமுருகாற்றுப் படையில் சூரமகளிரின் இயல்பு அவர்கள் அலங்காரம், அவர்கள் ஆடும் சோலை பற்றிய வருணனையில் 'இம்மகளிர்' கோழி ஓங்கிய வென்று அடு விறர் கொடி, வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன் சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடிச் சூர மகளிர் ஆடும் சோலை (திருமுருகாற்றுப்படை 38-41) என்று வாழ்த்திப் பாடி ஆடுவதாக அமைகின்றது. இந்தப் பாடல்வரிகளில் மகளிரின் தெய்வப் பண்புகள் பதிவுச் செய்யப்பட்டு உள்ளன.

மேலும் தேவமகளிரானவர்கள் தங்கள் அலங்காரங்களுடன் கூடி வாழ்த்தி, பாடி, ஆடுதலால் மகளிர் ஒரு மேலான செயலைச் செய்யுங்கால் அதன் நன்மை சமூகத்தைச் சென்றடைகின்றது. பலரும் பயனடையும் பொருட்டு செய்யும் செயல்கள் மகளிருடன் இணைக்கப்பட்டுள்ள பாங்கினையும் திருமுருகாற்றுப்படையில் காட்டப்பட்டுள்ளது.

> 'சிறுமஞ்சளொடு நறுவிரை தெளித்து
> பெருந்தண்கண்வீர நறுந்தன் மாலை
> துணை அற அறுத்துத் தூங்கநாற்றி
> நன் மலைச் சிலம்பில் நல்கர் வாழ்த்தி
> நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
> இமிழ்இசை அருவியொடு இன் இயம் கறங்க'
>
> - திரு.மு.ஆ. 235 -240

குறமகள், சிறிய பசு மஞ்சளோடு நறுமணம் கொண்ட சந்தனம் முதலியவற்றையும் தெளித்து, செவ்வலரி மாலையும் மற்ற நறிய குளிர்ந்த மாலைகளையும், தமக்குள் ஒத்து இருக்கும்படி அறுத்து அசையும்படி தொங்கவிட்டுச் செறிந்த மலைப்பக்கத்தில் உள்ள ஊர்களில் பசியும், பிணியும் நீங்கிடுக என வாழ்த்தி நறுமணப் புகையைத் தந்து அந்த நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணை பாடி முழங்கும் ஓசையையுடைய அருவியோசையும் இனிதாய் வாத்தியங்கள் போல் முழங்க இறைவனை வாழ்த்திப் பாடினார்கள்.

பசியும், பிணியும் நீங்கும் பொருட்டு இறைவனை, வாழ்த்தி பாடியதால் பெண்களின் பொதுநலச் சிந்தனையை இவ்விலக்கியம் பதிவுச் செய்து பெண்மையை உயர்த்திக் காட்டுகின்றது.

சிறுபாணாற்றுப்படையில் விறலியர் இயல்பு பற்றிக் கூறுங்கால்

> 'மடமான் நோக்கின் வாள் நுதல் விறலியர்
> நடை மெலிந்து அசைஇய நல்மென் கீற'
>
> - சிறுபாணாற்றுப்படை - 13-83

என்று மான்போல் பார்வையும், ஒளியை பொருந்திய நெற்றியையும் உடைய விறலியர்கள், நடந்து வந்த சிறப்புற்ற அடியை கல்லாத இளைஞர் மெல்ல வருடினார்

இங்கு விறலியர் என்பர் உள்ளக்குறிப்பு புறத்தே வெளிப்படும்படி திறம்பட நடிப்பவர், உள்ளக்குறிப்பு வெளிப்பட ஆடுவர் என்பதனால் விறலியரான மகளிர் நடிப்புக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை இவ்விலக்கியம் பதிவு செய்துள்ளது.

பெரும்பாணாற்றுப்படையில் பாடல்வரில் 51-38 – ல் உமணய பெண்டிர் எருது பூட்டிய வண்டிய ஓட்ட, உமணர் வண்டியை பாதுகாத்து வருதலாக அமைந்துள்ளது. மகளிர் வண்டி ஓட்டும் திறமும் பெற்றிருந்தனர் என்பதற்கு இவ்வரிகள் சான்றாக அமைந்துள்ளன.

மேலும் ஆயர் மகளிர் தயிர் கடைந்து அதனால் உண்டாகிய மோர், நெய் முதலியவற்றை விற்று, குடும்பத்தை காப்பாற்றியதும், நெய்யை விற்கும் விலைக்கு எருமை, பசு மற்றும் கன்றுகள் வாங்குவார்கள் என்பதை,

'அறைவிலை உணவின்கிளை உடன் அருந்தி
நெய் விலைக்கட்டி பசும் பொன் கொள்ளல
எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம்
மடி வாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை நெண்டிச் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை முரல்பாலொடும் பெருகுவீர்'
- பெரும்பாணாற்றுப்படை 163-168

என்ற வரிகள் விளக்குகின்றன.

மகளிர், தான் பொருள் எய்தி, அதனால் எல்லோருக்கும் உணவு அளிக்கும் பாங்கு நயமாக விளக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்குச் சமமாக பெண்களும் குடும்பச் சுமையில் பங்கேற்ற நிலையை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

காப்பியங்களில் பெண்ணியம்

பாரத மடங்கலும் பசிப்பிணியறுக என வாழ்த்தி மணிமேகலை ஏந்திய அன்னப் பாத்திரம், அள்ள அள்ளக் குறையாது நிறையும் 'அமுதசுரபியாகியப் பசிப்பிணி நீக்கி, வசியும் வளமும், பெருகுமாறு வாழ்ந்து காட்டிய கற்புக்கோர் மங்கை ஆதிரையார் தமிழ்மண் ஈன்றெடுத்த காவேரிப் பூப்பட்டினம், மங்கை, மாநிலம் வணங்கும் பெருமைமிகு பெண்ணாகப் போற்றப்படுகின்றார்.

மணிமேகலையார்

'பூவினும் சாந்தினும் புலால் மறைத் துயாத்துத்
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
தஞ்சத்தெரியாய் மன்னவன் மகனே'

என அழிவுறுத்தும் யாக்கையில் இயல் நிலையை அரசியில் குமரன் உதயகுமாரனுக்கு எடுத்து இயம்பி, துறவற நெறியில் வாழ்ந்து அமுதசுரபியில் இருந்த உணவினை எல்லோருக்கும் அளித்து, உலகத்தில் நிலவிய பசிப்பிணியைப் போக்கி, நீங்காப் புகழும் பேரின்பமும் அடைந்த காவிரிப்பூம்பட்டினத்துக் காரிகை மணிமேகலையார், பெருமையுடைய பெண்ணாக மணிமேகலை காப்பியம் எடுத்துக் கூறுகின்றது.

புதுக்கவிதைகளில் பெண்ணியம்

சமுதாய அவலங்களைக் கண்டு கொதித்தெழும் போது மரபுகளைப் பற்றிக் கவலைப்படாமல் சொல்லவந்த கருத்துக்களுக்கு முதன்மைத் தந்து எழுதப்பெறும் கலை வடிவங்களாக்வே புதுக்கவிதைகள் அமைந்துள்ளன எனலாம்.

இன்றைய பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை ஔவை எழுதிய 'விடைகொடு அம்மா' என்ற கவிதைகளில்

'புத்தம் புதியதாய் உலகைக் காணவும்
நாட்டிற்காகவும் மக்களுக்காவும்
கரங்களை இணைக்க விழைகிறேன்
அம்மா
நான் போக வேண்டும்
விடைகொடு எனக்கு'

என்று பெண்களின் மறுமலர்ச்சி உலகத்தைக் காண விழைகின்ற ஆர்வத்தினை எடுத்தியம்புகிறார். மேலும் கவிஞர் வைரமுத்து தம்முடைய 'திருத்திய எழுதிய தீர்ப்புகள்' என்ற நூலில்,

'சுய சிந்தனை உள்ள
தோழியரே
உங்கள்
அறிவுக்குப் போட்டிருக்கும்
பர்தாவை அகற்றுங்கள்'

என்று கூறுகின்றார். பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமானால் அவர்கள் சுயசிந்தனை உணர்வுடன் செயல்பட வேண்டும் என்கிறார்.

கல்வி, அறிவு, ஆற்றல், ஏற்றம், புகழ் அனைத்தையும், அவனியில் ஆளும் திறங்கொண்டவர்கள் மகளிர்கள் உயர் லட்சியம், திண்மை எண்ணம், உண்மை வாழ்க்கை, உழைக்கும் மனப்பாங்கு அனைத்தையும், அன்று முதல் இன்றுவரை மகளிர் பெற்றுள்ளமையை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடியாக இலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

தஞ்சை மராட்டியர் ஆட்சியில் மேலை நாட்டினரின் சமயத் தாக்கம்

ஆ.மீனாட்சி, உதவி பேராசிரியர், வரலாறு, கு.நா.அரசு. மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

சோழர்களும், நாயக்கர்களும் இந்து சமயத்தின் காவலர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுக்குப் பின் தஞ்சையை ஆட்சி செய்த மராட்டியர்களின் ஆட்சியில் இந்து சமயம் மட்டுமின்றிக் கிறித்தவ சமயமும் தழைத்தோங்கி வளர்ந்தது. இதனால் இந்து சமயத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் பின்னரே கிறித்தவ சமயம் வெகுவாகப் பரவியது. எனவே இவ்வியலில் கிறித்தவ சமயம் பரவிய சூழலையும் அதன் நிலையையும் ஆராய்கிறது.

மராட்டியர் ஆட்சியில் இந்து. இசுலாம், கிறித்தவம் ஆகிய மூன்று பெரும் பிரிவினராக மக்கள் வாழ்ந்தனர். இந்து சமயம் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தது. கிறித்துவர்களும், இசுலாமியர்களும் சிறுபான்மையினராகவே விளங்கினர். ஆங்கிலேயர்கள் தஞ்சைக்கு வந்ததால் கிறித்துவ சமயம் முதலில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே பரவியது. இதனால் கிறித்து மார்க்கம் பறையர் மார்க்கம் எனப்பட்டது. பின்னர் உயர் சாதியினர் சிலர் கிறித்தவ சமயத்திற்கு மாறினர்.

கிறித்தவ சமயத் துறவிகள் கிறித்தவ சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். புரட்டஸ்டண்ட் சமயத்தை மராட்டியப் பகுதியில் ஹென்றி பளுசோவும் ஜீகன் பால்குவும் பரப்பத் தொடங்கினர். ஜீகன் பால்கு உள்ளூர் மக்கள் மொழியைப் பேசக் கற்றுக் கொண்டார். தமிழ் மொழியில் பைபிளின் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். 40,000 வார்த்தைகளைக் கொண்ட தமிழ் மொழி அகராதி ஒன்றையும் உருவாக்கினார்.

ஸ்வார்ட்ஸ்

பிரசிய நாட்டில் சோனேபர்க் என்ற ஊரில் 1726ஆம் ஆண்டில் பிறந்தவர் கிறிஸ்டியன் ஃபிரடெரிக் ஸ்வார்ட்ஸ். கி.பி.1749இல் டேனியஸ் மி'னரிக் குழுவில் சேர்ந்து கிழக்கிந்தியக் கம்பெனியின் கப்பலில் பயணம் செய்து 17.07.1750இல் கடலூரில் வந்திறங்கினார். பின்னர்ப் பதினாறாண்டுகள் தரங்கம்பாடியில் வாழ்ந்தார்.

1766 முதல் 1776 திருச்சபைத் தலைமையிடமாகக் கொண்டு வாழ்ந்தார். பின்னர்த் தஞ்சையை தலைமையிடமாகக் கொண்டு தம் வாழ்நாள் இறுதிவரை இங்கேயே தங்கினர். அப்போது தஞ்சை மராட்டிய அரசர் பொறுப்பிலிருந்த துளசா மன்னரிடம் சிறந்த நட்புக் கொண்டார். கி.பி.1787இல் துளசா மன்னர் இரண்டாம் சரபோசியை ஸ்வார்ட்சிடம் ஒப்படைத்தார்.

கிறித்தவக் கல்விநிலை

மராத்திய மன்னர் ஆட்சிக்காலத்தில் உரோமன் கத்தேலிக்கத் திருச்சபை போன்ற கிறித்தவ நிறுவனங்கள் இருந்தன. இவை மராத்திய மன்னர்களின் உதவியோடு மிகச் சிறப்பான கல்விப்பணியாற்றியது குறிப்பிடத்தகும்.

ஸ்வார்ட்ஸ் பாதிரியார் மராத்தியர் காலக் கிறித்தவக் கல்வியில் பெரும் பங்காற்றினார். 1763இல் ஐரோப்பியக் குழந்தைகட்காக அவர் ஏற்படுத்திய அனாதை

விடுதி தற்போது புனித ஜான் உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்துள்ளது. இப்போது இப்பள்ளி, கல்லூரியாக உருவாகியுள்ளது[1].

ஸ்வார்ட்ஸ் பாதிரியார் பெயரால் தஞ்சையிலும், இராமநாத புரத்திலும் கிறித்தவப் பள்ளிகள் அமைக்கப்பட்டு மேலை நாட்டுக் கல்வியைப் பரப்பி வந்தன.

தூய பேதுரு பள்ளி

தஞ்சைத் தலைநகரில் ஆங்கிலம் கற்பித்த முதல் இந்தியப் பள்ளி என்னும் இணையற்ற புகழோடு இப்பள்ளி கி.பி.1784இல் நிறுவப்பட்டது. இப்பள்ளியை சி.எ.ஃ. ப்.ஸ்வார்ட்ஸ் நிறுவினார். ஆங்கில அரசு ஸ்வார்ட்ஸின் கல்விப்பணியைப் பாராட்டி இப்பள்ளிக்கு நன்கொடை வழங்கியது. தஞ்சையில் வரலாற்றுச் சிறப்புடன் நிற்பது தூய பேதுரு மேல்நிலைப்பள்ளியாகும்.

"மிஸ்தர் ஜான் பாதர் பள்ளியை ஏற்படுத்த மாதம் 20 புலி ஹோன்னம்"[2]

கிறித்தவ தேவாலயம்

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் இந்து சமயக் கோயில்களான சைவ வைணவக் கோயில்களுக்கு மட்டுமல்லாமல் பிற மதமான கிறித்தவ சமயக் கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்துள்ளனர். இப்பகுதியில் கிறித்தவ தேவாலயங்களுக்கு இம்மராட்டிய மன்னர்கள் பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

ஸ்வார்ட்ஸ் தேவாலயம்

தஞ்சை சிவகங்கைப் பூங்காவில் இந்தத் தேவாலயம் உள்ளது. கி.பி.1878இல் துளசா மன்னர் இரண்டாம் சரபோசியை ஸ்வார்ட்ஸ் பாதிரியாரிடம் ஒப்படைத்தார். ஸ்வார்ட்ஸிடம் சரபோசியும் மிக்க அன்புடன் இருந்தார்.

"சிவகங்கைப் பூங்காவிலுள்ள சுவார்ட்சு சர்ச்சு என்ற கிறித்தவ தேவாலயயம் சரபோசியின் உதவியால் எடுப்பிக்கப் பெற்றது என்றும், சுவார்ட்சு பாதிரியார் படுத்த படுக்கையில் இருந்தபோது அவரைத்தான் பார்ப்பது போன்று ஒரு படிவம் இக்கோயிலில் இரண்டாம் சரபோஜி அமைத்தார் என்றும் சொல்லப்படுகிறது."[3] ஆனால் *"அத்தேவாலயம் கி.பி.1779இல் சுவார்ட்சு பாதிரியாரால் எடுப்பிக்கப்பட்டது"*[4]
என்று ஓர் ஆவணத்தில் காணப்படுகிறது.

தாவீது மரபினர் கல்லறைக் கல்வெட்டுக்கள்

தஞ்சாவூரில், சாகப்பட்டினம் சாலையிலுள்ள லூத்தரன் மி'ன் கோயில் உள்ளது. இக்கோயிலின் தோட்டத்தில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டாம் சரபோஜி காலத்தில் தாவீது பிள்ளை 'Head Accountant David pillai' என்பவர் உயரலுவலராக இருந்தார்.

சமயப் பரப்பு இயக்கம்

1706இல் டென்மார்க்கிலிருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பப் பெரும் குழு வந்தது. டென்மார்க் மன்னரான நான்காம் பிரடெரிக் அனுப்பிய இக்குழு புரட்டஸ்டண்ட் வளர வழி வகுத்தது.

"கிறித்தவர்கள் தங்கள் சமயப் பிரச்சாரத்தில் மட்டும் கவனம் செலுத்துவதாகவும் பிற சமயங்களுடன் பிரச்சனைகளில் ஈடுபடுவதில்லை"[6] என்ற மோடி ஆவணக் குறிப்பின் மூலம் இவர்கள் தமிழ்நாட்டில் எத்தகைய பொறுப்புடன் திகழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. தஞ்சை, நாகை, மாயாரம் போன்ற இடங்களில் இந்துக்களைத் தங்களின் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். "சிவகங்கைக் கோட்டையில் சிவகங்கைக்குப் போவோருக்கும் தொந்தரவாக இருப்பதால் இந்தச் சுவரை எடுத்து விடவேண்டும்"[7] என்பதால் அறியலாம்.

கிறித்தவர்களுக்கு அறக்கொடைகள்

"தஞ்சாவூரிலிருந்த கிறிஸ்தவ சபைகள் தஞ்சை அரசர்கள் சமயப் பொறை மிக்கவர்கள் என்றும் லார்டு வேலன்'யா என்ற ஆங்கிலேயர் இரண்டாம் துளசாவும் இரண்டாம் சரபோசியும் சமயச் சகிப்புத் தன்மையுடன் விளங்கியதோடு மட்டுமின்றிக் கிறித்தவர்களுக்கு உதவித் தொகைகளையும் பல்வேறு சமயக் கொடைகளையும் அளித்தனர்"[8] என்று தா.வி.தேவநேசன் குறிப்பிடுகின்றார்.

கி.பி.1814இல் மதுரையைச் சேர்ந்த கள்ளிக் கோட்டைக் கள்ளர் சாதி அங்காளி என்பவளின் மூன்று மாதத்துக் குழந்தையைக் குழந்தைக்காக 5 சக்கரம், புடவைக்காக 1 சக்கரம் கொடுத்துத் தஞ்சாவூர் ஃபகீர் மகமத் சமுத்வான் வாங்கியுள்ளார். கி.பி.1814இல் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைகள் தஞ்சையில் பக்கீர் முகமதுவால் 6 சக்கரத்திற்கு வாங்கப்பட்டனர். 1785இல் திருமுல்லைவால் சேர்ந்த செவத்தையா தன் சகோதரனுடைய பெண்ணை மசக் விற்பனை செய்தார்.

கிறித்தவர்கள் பெண்களை சமயத்தை பரப்புவதற்காக விலைக்கு வாங்கி மதமாற்றம் செய்தனர். இரண்டாம் துளசாவின் காலத்தில் அரச குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பிராமணப் பெண் சதியில் ஈடுபட்டாள். இச்சதியை பிரிட்டி' அலுவலர் லிட்டன் என்பவர் தடுத்து அப்பெண்ணைக் காப்பாற்றி அவளுக்குக் கிளாரிந்தா என்ற பெயரைச் சூட்டி அவளை மதமாற்றம் செய்து அப்பெண்ணையே தாம் திருமணமும் செய்து கொண்டார். இதைப் பாளையங்கோட்டையிலுள்ள மாதாக் கோயில் ஆவணம் மூலம் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. ஈ.எ.செல்லத்துரை, தஞ்சை மராத்திய அரசர்களும் கிறிஸ்தவர்களும்', **மாமன்னர் சரபோஜி ஆய்வுக் கோவை,** ப.25.
2. மோ.ஆ.கு.28-48.
3. "He (Serfoji II) commemorated his Love and esteem for the Father (Swardz) by constructions a Church near Sivagagga Garden, Thanjavur. "The Marble pleague installed in the Church depict the visit of the Raja to see the ailing Father Swartz', -R.Jayaraman. Saraswathi Mahal, p.14.
4. "The Swartz Church stands in the north east corner of the Fort, It Ws founded in 1779 by Swartz who resided principally in Tanjore from 1778 until his death" – **Tanjavur Gazetteer,** p.272.
5. மோ.ஆ.கு.9-41.
6. மோ.ஆ.கு.9-41.
7. தா.வி.தேவநேசன், **தஞ்சை வேதநாயக சாஸ்திரம்,** பக்.113-114.

வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் பண்பாடு

திருமதி எம்.மீனாட்சி, உதவி பேராசிரியை, வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை–609 001.

மக்களின் சிந்தனைகளையும் வழக்கவொழுக்கங்களையும் உள்ளபடி உணர்ந்து கொள்ளப் பெரிதும் பயன்படுவன நாட்டுப்பாடல்களாகும்.

மக்கள் வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்து இயற்கை மணம் வீசும் இப்பாடல்கள் மக்களின் சமூக பொருளாதார, சமய வரலாற்றை அறியவும், உயர்ந்த நோக்கங்களையும், பழக்க வழக்கங்களையும், இன்ப துன்ப உணர்ச்சிகளையும், ஆசைக் கனவுகளையும், வெற்றி தோல்விகளையும் உணர்ந்து போற்றவும் பயன்படுகின்றன. வாழ்வின் தொடக்கமாம் குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அனைத்து நிலைகளையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

தாலாட்டு

தாலாட்டுப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்களில் முதலிடம் வகிப்பவையாகும். பிள்ளைபேற்றினைப் போற்றும் மாந்தர் மனத்தினைத் திறந்து காட்டும் இவை எதுகை, மோனை, ஓசை நயம் கொண்டே நிலவும். அந்தந்த வட்டாரத்தின் சிறப்பியல்பையும், சமூக நிலைமையும் இவை காத்து நிற்கும். நாட்டுக்கோட்டை நகரத்தார் பாடல்களில் செல்வ வளம் செழித்துக் காணப்படும். ஏழை மக்களின் தாலாட்டில் தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய உணர்வுகளும் ஆசைகணவுகளும் நிரம்பியுள்ளன. பிறந்த இடத்துப் பெருமை இழைந்தோடுவதனைக் கானலாம். மாமனின் வளமும் அவனளிக்கும் சீரின் பெருமையும் இழைந்தோடுவதனைக் காணலாம்.

"ஏலக்காய் காய்க்கும் இலைநாலு பிஞ்சிறங்கும்
சாதிக்காய் காய்க்கும் உன்தாய்மாமன் வாசலிலே
தங்கக் குடைபிடிச்ச தாசிமாரை முன்னேவிட்டு உன் மாமன்
தாசிக்கே விட்டபணம் இரண்டுதங்க மடம் கட்டலாமே"

என்னும் பாடலிலே பிறந்த இடத்துச் செல்வப் பெருமையைக் கானலாம். பரத்தையர் கூட்டுறவு பாமரர் பாடலில் செல்வத்தின் அறிகுறியாகப் பேசப்படுதல் வியப்பாகும். குழந்தைகளைத் தெய்வங்கள் துணைநின்று காக்கவேண்டும் என்ற உணர்ச்சியையும் காணலாம்.

"தொட்டிலுக்குக் கீழாக என்கண்ணே - உனக்குத்
துணையிருப்பாள் மீனாட்சி
கட்டிலுக்குக் கீழாக – என்கண்ணே
காத்திருப்பார் சொக்கலிங்கம்"

என்பது சான்று, குழந்தைப் பேற்றினை எத்துணைப் பெருமையாகப் பாராட்டுகின்றனர் என்பதற்குப் பின்வரும் பகுதிகள் சான்றாகும்.

"பாண்டிப் படிமுத்து – கண்ணேநீ
பஞ்சவர்கள் ஆண்டமுத்து
ஆயிரம் முத்தினிலே
ஆராய்ந்தெடுத்த முத்து
தொண்ணூறு முத்தினிலே – கண்ணேநீ
துழாவி எடுத்த முத்து"

ஒப்பாரிகள்

வாழ்வின் முடிவு சாவாகும். மானிட உறவின் ஆழத்தையும் அழுத்தத்தையும் காட்டுவது ஒப்பாரி. வாழ்வின் துன்பவுணர்ச்சிகள் அனைத்தும் உருக்கொண்டு எழும் ஒப்பாரிகள் நம் நாட்டுத் தாய்மார்களின் ஒப்பற்ற படைப்பாகும். பிள்ளையில்லாக்குறை மாமியார் நாத்தனார் கொடுமை, காதல் தோல்வி, கைம்மைத்துன்பம், ஏமாற்றம் முதலிய அனைத்தும் ஒப்பாரியில் நிரம்பியுள்ளன.

திருமணம் முடித்து சின்னாளில் கணவன் இறந்தால் மறுமணம் அனுமதிக்கப்படாத தமிழ் நாட்டில் பெண் படும்பாடு பெரும்பாடாகும். எதிர்பாராவண்ணம் இளமையிலேயே தாலியிழந்த மகளின் ஏக்கப் புலம்பலைக் காண்மின்

"சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே
நில்லென்று சொல்லி நிறுத்திவழிப் போனீரே
கட்டிய சேலையின்னும் கசங்கி மடியலையே
வச்சபூ இன்னும்வாசங் குறையிலையே
மஞ்சள் குறையவில்லே மடிப்புக்குலைய வில்லே
பிஞ்சுவய தென்றேன் பேராசைக் காரியென்றேன்
பெருமான் பறிகொடுத்தப் பிரிஞ்சிருக்க மாட்டேனென்றேன்.
பிடிக்க வந்தான் கேட்கலையே"

நம் நாட்டு விதவை பெண்கள் சமுகத்தின் சுமையாக கருதப்படுவர். சகுனமென ஒதுக்குகின்றனர். நல்ல காரியங்களுக்கு ஆகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். கைம்மைக்கொடுமை பற்றிய எண்ணத்தைப் பின்வரும் பகுதியில்

"வீதிவழி வந்தால் விலகிவர வேண்டுமென்பார்
வீதிவந்தால் வெட்கமல்லோ வீட்டிருந்தால் துக்கமல்லோ
வாசல்வழி வந்தால் மறைந்துவர வேண்டுமென்பார்.
வாசல் வந்தால் வெட்கமல்லோ மறைந்திருந்தால் துக்கமல்லோ"

கைம்பெண்கள் நகையணியும் உரிமையை இழப்பர். தான் நகையிழக்கும் கொடுமையை எண்ணிப் புலம்பும் பெண்,

"ஒருகோடி தங்கநகை உருவிவைக்கச் சொன்னீரே
கால்கோடி தங்கநகை சுழற்றிவைக்கச் சொன்னீரே"

என்று அழுது மடிகிறாள்.

"தாயற்றுப் போனால் சீரற்றுப் போச்சு" என்பது நம் நாட்டு அனுபவம். தாயையிழந்த மகளின் துயரக்குரலை

"பூமியிலே விட்டாலே – என்
பொற்பாதம் நோகு மென்பாய்
தரையிலே விட்டாலே – என்
தங்கக் கால் நோகு மென்பாய்
அள்ளி யெடுத்திடுவாய் - ஆச்சி நீ
அடிமடியில் கட்டிடுவாய்.
கிள்ளி எடுத்திடுவாய் - ஆச்சி
கீழ்மடியில் கட்டிடுவாய்.
மார்மேலே தொட்டிகட்டி – எனக்கு
மடிமேல் நடைபழக்கி
தோள்மேலே தொட்டிகட்டி – எனக்குத்
துடைமேல் நடைபழக்கி

பலத்த அருமை என்ன — என்னை
வைத்திருந்த நேர்த்தி என்ன
பெற்ற அருமை என்ன — என்னைப்
பேணிவந்த நேர்த்தி என்ன
கள்ளி நிழலாச்சு - இனி எனக்குக்
கண்டவர்கள் தாயாச்சே
வேலி நிழலாச்சு - இனி எனக்கு
வேண்டியவர் தாயாச்சே
குடத்தோட தண்ணீர் - எனக்குக்
குளிரத்தான் வார்த்தாலும்
தாய் வார்த்த தண்ணிர் போல் - எனக்குத்
தாகம் தணியாதே"

பிள்ளைப்பேறு பேறுகளுள் பேறு. அப்பிள்ளை இழந்தபோது பித்தம் பிடித்தழும் தாயின் குரலைக் கேண்மின் :

"பாடித் திரிந்த படலைத் தெருக்க ளெல்லாம்
பாசிபடர்ந்து பாழடைந்தோ தோற்றுதெனை
ஓடித்திரிந்த ஒழுங்கைத் தெருக்களெல்லாம்
பாசித்தெருவும் பாழ்ஒழுங்கை ஆக்குதெனை
திங்கள் ஒரு திவசம் - எனக்குத்
திதிமுறைகள் செய்கிறதார்
வருடம் ஒரு திவசம் - எனக்குத்
வகைமுறைகள் செய்கிறதார்."

காதல்

நாட்டுப் புறங்களில் வயதுவந்த ஆடவரும் பெண்களும் கூடித் தொழி செய்வர்: மாமன் மகன் அத்தை மகள் இவர்கள் உரிமையோடு பழகுவர்: அவர்கட்குள் காதல் அரும்புவதுண்டு. செல்வம் சமுகநிலை காரணமாக மறுப்பதும் உண்டு. இத்தகு காதல் உணர்ச்சிகளை நாட்டுப் பாடலில் காணலாம். காதல் தோல்வி, காதலின் தெய்வீகம் ஆகியவை இப் பாடல்களில் ஒளிவிடுகின்றன.

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர்நின் நெஞ்சு நெர்பவளே"

என்னும் சங்க இலக்கியக் கருத்தும்,

"செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சு போனாலும்
செத்த இடந்தனிலே செங்கழுநீர்ப் பூப்பேன்
மாண்டு மடிஞ்சாலும் வைகுந்தம் போனாலும்
மாண்ட இடந்தனிலே மல்லிகைப் பூப்பேன்
பஞ்சணை மெத்தையிலே படுக்கைமலர் நானாவேன்"

என்னும் பாடல் கருத்தும் ஒத்துள்ளது காணலாம்.

கொடுமைக்காரக் கணவன்

பெண்ணுக்கு அமையும் கணவன் சிலபோது கொடுமைக்காரனாக அமைந்துவிடுவதுண்டு. பொறுத்துப் பார்த்துவிட்டு அவனை விட்டுச் சென்றுவிடவிடவும் சிலர் முன்வருவதுண்டு. அத்தகு பெண்ணொருத்தியின் குரல் வருமாறு:

அறியாத ஊருலேயும் - நான்
தெரியாமல் வாக்கப் பட்டேன்

அடியாதிய புடியாதிய — நான்
விடியக் காலம் ஓடிப் போறேன்

அங்ஙனம் கூறியவள் அண்டையில் உழுகின்றவரை அழைத்துத் தான் போனதைத் தன் கணவனிடம் சொல்ல வேண்டுமென்று வேண்டுகிறாள்.

"ஒத்தப் பனையோரம் உழுகிற நாயன்மாரே
கத்திக்கிட்டுப் போறாண்ணு — என்
கணவன் கிட்டே சொல்லிடுங்க."

குடிகாரனுக்கு அறிவுரை

குடும்ப வாழ்வை நரகமாக்கும் குடிப்பழக்கம் பெண்ணின் வாழ்க்கைக்கு எத்துணை இடையூறு எனச் சொல்லவேண்டா. மனைவிமார்கள் தம் கணவன்மார்க்கு குடிக்க வேண்டாவென கூறும் ஆசான்கள். ஒரு பெண் தன் கணவனை திருத்த முயல்கின்றாள்.

"சிகரெட்டுக் குடியாதிங்க
சின்ன புள்ளெ ஆகாதிங்க
மெத்த குடியாதிங்க
பித்தம் சிரசிலேறும்
போயிலையும் போடாதிங்க
புகைசுருட்டுப் பிடியாதிங்க
வெள்ளையத் தேவன்கிட்ட
வெட்டுப்பட்டுச் சாகாதிங்க"

அருமையான அறிவுரைகள்

நல்வாழ்வுக்கு வேண்டிய பொன் மொழிகளைத் தாங்கிய நாட்டுப் பாடல்கள் பல உண்டு. இவை நம் மாந்தரின் பண்பாட்டு விளக்கங்களாக விளங்குகின்றன. அடக்கமும் அமைதியுமே பெண்ணுக்கு அணிகள் என்பதனைப் பின்வரும் பாட்டு விளக்கக் காணலாம்.

"பெண்டுகள் பூத்தேடி வைக்கவேணும் வைத்தால்
பிறர் அறியாமல் இருக்கவேணும்
கொண்டையில் பூத்தோண வைத்தால் வேசியென்று
கூறுவாரே முத்து வீராயி
தன்னடி பார்த்து நடப்பதே யாருக்கும்
சற்குண மாமென்று சாற்றுவார்கள்
அன்னநடையோடு முன்னும் பின்னும் பார்த்தால்
அழகல்லவே முத்து வீராயி"

அடக்கம், மெய்மை, கணவன் மீது அன்பு, இல்லக் கடமை, பக்தி, துப்புரவு, அறம், அருள் முதலிய பண்புகளைப் பெண்ணுக்கு வற்புறுத்தும் பாடம் ஒன்று வருமாறு:

ஆக்கவேணாம் அரியவேணாம் அறிவிருந்தா போதுமடி
கண்ணடிக்கிற பயலைக்கண்டா கண்ணெடுத்தும் பாராதேடி
நெற்றியிலே பொட்டுவச்சு நெருங்கி நிண்ணு பேசாதேடி
புருவத்தால் மையை வச்சுப் பொய்யொண்ணும் பேசாதேடி
பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பரிகாசம்பண்ணா தேடி

கல்லானாலும் கணவனடி புல்லானாலும் புருசனடி
காலையிலே எழுந்திரிச்சு வாசலுக்குச் சாணிபோடு
சட்டிப்பானை லொட்டுலொசுக்கு சகலத்தையும் கழுவிவையி
வெள்ளிசெவ்வாக் கிழமையிலே வீடுபூரா மெழுகணுண்டி
ஆடிஅமா வாசையிலே ஆண்டவனைக் கும்பிடணும்
லெட்சுமி வீடுதங்கணுண்ணா எச்சிலை வீட்டில் துப்பாதேடி
மச்சான் கொழுந்தன் மாருக்கெல்லாம் மரியாதை கொடுக்கணுண்டி
மாமிமாமா ரெண்டுபேரையும் மேன்மையாக நடத்தணுண்டி
தருமந்தலை காக்குண்டி தயவைக் கைவிடாதேடி
ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்
காராம்பசுவைப் போலநீயும் கடவுளுக்கு உவந்துநட"

முடிவுரை

வாய்மொழி இலக்கியங்கள் மூலம் தமிழரின் பண்பாடு தெரிய வருகிறது.

துணைநூற்பட்டியல்

1. அழகப்பன், டாக்டர்ட, ஆறு – நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு.
2. இராசாமணிக்கனார், டாக்டர்.மா.ரா. – தமிழ்மொழி இலக்கிய வரலாறு.
3. இராமன், கெ.வி. – தொல்லியல் ஆய்வகள்
4. இராமநாதன் செட்டியர், லெ.ப.கரு. – சங்ககாலத் தமிழர்வாழ்வு.
5. இலக்குவனார், டாக்டர்.சி – தமிழர் வாழ்வியல்.
6. இலட்சுமணன், கே.வி, - இந்தியத் தத்துவ ஞானம்
7. ஔவை.சண்முகம் - நாடகக் கலை.
8. குண்ணப்பமுதலியார் - தமிழ் நூல் வரலாறு.
9. கலியாணசுந்தரனார், திரு.வி – பொதுமை வேட்டல்.
10. குனகசபைப்பிள்ளை,சி. – ஆயிரத் தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்.

கண்ணதாசன் பார்வையில் சிலப்பதிகார மாதவி

கா. முத்தரசி, முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10

இந்தியச் சமூகத்தில் பல மதங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனுள்ளும் மதம் அவனையறியாமலேயே அவனிடத்தில் ஊடுருவி அவனை வடிவமைக்கிறது. எல்லா மதத்திலும் பெண் என்பவள் வாரிசு உடமையை நிலைநிறுத்தும் குடும்ப நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில் தாய் (அ) மனைவி என்ற நிலையில்தான் அடையாளப்படுத்தப்படுகிறாள். இத்தகைய சூழலில் பெண் வரலாற்றை அரசியல், சமூகபொருளாதார, பண்பாட்டு வரலாற்றை இலக்கிய நிலை நின்று பார்க்கும் ஆய்வு என்பது பெண்நிலையை முற்றிலும் அறிய வழிவகைச் செய்யும் எனலாம். அவ்வகையில் கண்ணதாசன் பார்வையில் சிலப்பதிகார மாதவியை மதிப்பிடுகிறது இவ்வாய்வுரை.

கலையும் பெண்ணும்

கலை மக்களுக்காக மக்களிடம் தோன்றியது. சங்க காலத்தில் பாணர், பாடினி, விறலி இவர்கள் இசையையும், நடனத்தையும் தம் உயிராகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் தம் வாழ்வில் வறுமை நிறைந்த நிலையிலும் தன் சுற்றத்தோடு பகிர்ந்துண்ணும் உயர்ந்த வழக்கம் கொண்டிருந்தனர். பாணனது வறுமையைப் பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு முன்வைக்கிறது.

"பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரம் தேரும் பறவை போல,
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!"

இங்ஙனம் கலைஞர்கள் ஓரிடத்தில் நிலைபெற்றில்லாமல் ஊர் ஊராகப் பழுமரம் தேடும் பறவையைப்போல தன் சுற்றத்துடன் சென்ற நிலையைக் காணலாம். சங்க கால பொருள்வயிற் பெண்டிர் கலைகளுடனான தொடர்புப்பற்றி சங்கப் பாடலில் பதிவுகள் இல்லை.

அறநூல் காலகட்டத்தில் தோன்றிய சிலம்பின்வழி கலையும், பரத்தமையும் ஓரிடத்தில் இருந்தமை புலனாகிறது. இதில் பெண் அடிமைத்தனத்தின் உச்சமாக பரத்தமை அசைக்க முடியாத விதத்தில் கலையுடனும், கடவுளுடனும் இணைக்கப்பட்டுள்ளதாகக் காணலாம்.

தமிழ்மொழியின் தனிச்சிறப்பு எதுவெனில் தொல்காப்பியப் பொருளதிகாரம். இதில் வாழ்க்கைக்கான இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அது பாலின வேறுபாட்டை மிக நுட்பமாக வடிவமைத்துள்ளது.

(எ.டு) "பத்துவகை ஒப்புமையில் - ஆண் மிக்கோன் ணாயினும் கடிவரையின்றே"

இங்ஙனம் மொழியின் வல்லமையை ஆணாதிக்கச் சமூகம் தன் கட்டுக்குள் வைத்துள்ளதை இதன் மூலம் அறியலாம். சங்க கால இலக்கியம் மிகுதியாக அரசரைப் பற்றிப் பாடியிருப்பினும் சாதாரண மக்களைப் பற்றிய பதிவுகளையும் கொண்டுள்ளது. காப்பியங்கள் சாதாரண மக்களின் பிரச்சனைகளை விட்டுவிட்டு சமயங்களையும் அதுசார்ந்த ஆதிக்கச் சக்திகளுடன் உறவாடிய மேட்டுக்குடி மக்களின் நிலையையும் விவரிக்கிறது.

சிலப்பதிகாரக் காப்பியம் வணிகக் குலப் பெண்ணான கண்ணகியை முன்வைத்தே நகர்கிறது. இதனைக் கவிஞர் பின்வருமாறு சுட்டுகிறார்.

"காவியத்தைக் கண்டேன்; கலங்கினேன்! பாவிமகன்
மாதேவியைப் பாதி வழியில் நிறுத்திவிட்டு
... ...
கூடல் நகரில் கொலையுண்ட செய்தியையும்
கோதை வணிகமகள் கொதித்தெழுந்த செய்தியையும்
மாட மதுரை மழைபோலும் தீவாயில்
... ... *வாயாரக் கூறுகிறான்!*
... ...
பாடுங் கனியமுதம், பட்டதுயர் கூறாமல்
கண்ணகியைப் பாடும் கவியும் கவியாமோ?"
- *(தொகுதி 1,2, பக். 288)*

இதில் கண்ணகி குடும்ப நிறுவனத்தோடு மட்டுமே சிக்கலை எதிர்கொள்ளக்கூடிய சூழல் காட்டப்பட்டுள்ளது. ஆனால் மாதவி பொதுவெளியில் உடைமைப் பொருளாகக் கருதப்பட்டாள். இந்நிலையில் அவளின் துயர் என்பது வேறுபட்டது. அதனை முன்வைப்பதாக காப்பியம் அமைய வேண்டும் என்கிறார் கண்ணதாசன்.

காப்பியத்தில் வரும் பெண்பாத்திரங்கள் யாவும் ஆணின் மேலாண்மை நிலையை முன்னிறுத்துவதாகவே உள்ளது. எந்நிலையிலும் தமக்காக அப்பாத்திரங்கள் பேசுவதில்லை. அப்படிப் பேசிய மாதவியைக் கோவலன்,

"மாயப் பொய்பல கூட்டும் மாயத்தாள்" - (சிலம்பு)

என்று வசைமொழிக்கு ஆளாக்குகிறான்.

"ஐயோ, மாதவி!
நாடகத்தார் நின்னை நாட்டிற்குக் காட்டிவரும்
கேவலத்தைப் போக்க கிளர்ச்சி புரியோமோ?
... ...
கானல் வரிபாடக் கற்பனையில் நீபாட
... ...
முன்உணர்ந்த பெருமையெல்லாம் மூண்டதொரு பாடலிலே
... ...
பாட்டைக் குறித்துப் பறந்துவிட்டான்!
- *(தொகுதி 1,2, பக். 288-89)*

என்று மாதவியைக் கலகக் குரல் கொடுக்கச் சொல்கிறார் கவிஞர். கண்ணகியைக் கூறுமிடத்து,

"மாலையிட்டு வாழ்ந்து, மகிழ்ந்த கணவனவன்
போனவுடன் வாடிப் புகைந்து திரும்பியதும்
காற்சிலம்பு தந்து கால்வலிக்க மதுரைவரை
வந்து வழியனுப்பி, வாசல்வழி பார்த்திருந்து
மாண்டான் எனக்கேட்டு மான்விழியில் தீப்பறக்க
மதுரை எரித்ததெலாம் மாச்செயல்தான்; ... ..."
- *(தொகுதி 1,2, பக். 292)*

இவ்வாறு காவியத் தலைவி வாழ்வனைத்தும் கணவனுக்காக வாழ்ந்த நிலையைக் காணலாம். இங்கு தொல்காப்பியரின் கூற்று எண்ணத்தக்கது.

"மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே"
- *(தொல். கள.)*

என்ற நிலைதான் காப்பியத்தில் காணமுடிகிறது. கண்ணகி செய்தது மாச்செயல்தான் என்கிறார் கண்ணதாசன். அவனுக்காகத் தன் ஐம்புலன்களையும் ஒடுக்கி வாழ்கின்ற பெண்ணைப் பத்தினித் தெய்வம் என்று புனைந்துள்ளது வேதம். இதனைக் கவிஞர்,

"காட்டிவிட்டி வேதமெலாம்
கண்மறைந்த தேனெனிலோ

காட்டியவை பொய்யென்று
கண்டுகொண்ட காரணந்தான்"
- (தொகுதி 5, பக். 41)

என்கிறார். இங்கு நாம் மற்றொன்றும் எண்ணத்தக்கது யாதெனில் மாதவியின் கடிதம். மாதவி இரண்டு கடிதம் எழுதுகிறாள். முதல் கடிதம் தன் தோழியிடமும், இரண்டாவது கடிதம் கோசிகனிடமும் கொடுத்தனுப்புகிறாள். முதற்கடிகதம் மறுக்கப்பட்ட நிலையில் இரண்டாவது கடிதம் பெறப்பட்டு தன் தந்தையிடம் கொடுக்கும்படி கூறுகிறான் இளங்கோ. இங்கு,

"ஓதலும் தூதும் உயர்தொர் மேற்றே" - (தொல்.)

என்ற தொல்காப்பியரின் கூற்று எண்ணத்தக்கது. இந்நிலையில்தான் நீதியின் நிலையைக் கவிஞர்,

"மாதர்கோர் நீதியையும்
மாற்றார்கோர் நீதியையும்
மனிதர் கண்ட
சாதிக்கோர் நீதியையும்"

என்று குறிப்பிடுகிறார். மேலும் கடித மறுப்பு என்பது நமக்கு,

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை"
- (தொல். களா. 16)

என்ற நிலையை ஞாபகப்படுத்துகிறது எனலாம். இதனைக் கவிஞர்,

"பேதலித்த புத்திக்குப்
பின்னணிதான் என்ன வென்றால்
பேர்தரித்த வணிகனெனும்
பிறப்பாய்ப் பிறந்ததனால்!"
- (தொகுதி 5, பக். 41)

என்கிறார். இங்கு வணிகன் என்ற சொல்லாட்சி மூலம் பொருளியலை தன்னிச்சையாகப் பயன்படுத்தக்கூடிய உரிமையைச் சுட்டுகிறார் கண்ணதாசன். இந்நிலையில் கோவலன் இருவருக்கும் இழைத்த அநீதிக்கான தண்டனையாக கோவலன் கொலையுண்டதைச் சுட்டுகிறார் கண்ணதாசன்.

"இருபாலும் குற்றம் இழைத்தான் ... ..."
- (பக். 291, தொ.1,2)

"ஆடல் அழகே! நினைக்கிழைத்த அநியாயம்
கூடித் திரண்டு குறைகேட்ட காரணந்தான்
கூடல் நகரின் கொலைநிகழ்ச்சி! எண்ணுங்கால்
கோவலனைக் கொன்றதுதான் குறையாத நீதி என்பேன்!

என்று மாதவியின் பொருட்டு கொலையைக் குறையாத நீதி என்கிறார் கவிஞர்.

தொகுப்புரை

- குடும்பம் என்ற நிலையிலேயே பெண் தன்னை பாதுகாத்துக் கொள்ள இயலும் என்ற பிம்பம் படைப்பின்வழி முன்வைக்கப்படுகிறது.
- பெண் பொருளாதாரச் சுதந்திரமேற்ற நிலையிலேயே ஆணைச் சார்ந்து வாழுகின்ற நிலை ஏற்படுகிறது.
- கற்பு பெண்ணின் சிறப்பு என்ற கருத்தாக, பொருளியல் சுதந்திரத்தை முடக்கும் ஆயுதமாக உள்ளது.
- கலையும், பரத்தமையும் பின்னிப்பிணைந்த ஒரு நிலைக்குக் காரணம் குடும்ப அமைப்பு பெரிதாகப் பேசப்படுவதும், பரத்தமையை குடும்ப அமைப்பிலிருந்து விலக்கி கலைகளுடன் மட்டுமே ஒடுக்கவதும் ஆகும்.

பாவேந்தர் பார்வையில் பாவையர்

த. முத்துவேல், ஆய்வியல் நிறைஞர் மாணவர், மொழிபெயர்ப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10

முன்னுரை

'பெண்' ஒவ்வொரு குடும்பத்திலும் சுடரிட்டு பிரகாசிக்கும் குத்துவிளக்கு! ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மட்டுமன்றிச் சுற்றத்தார், நண்பர், அயலார் எனப் பலருக்கும் உதவி செய்தும், விருந்தோம்பியும் அக்குடும்பத்தின் பெருமையை உலகறியச் செய்கிறாள் பெண். இவ்வுலகில் பெண்களுக்கென்று சில அடிப்படை கடமைகளும் பொறுப்புகளும் இருக்கின்றன. அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

குடும்ப விளக்கு

விளக்கு ஒன்று தன்னைச் சார்ந்துள்ள பொருள்களை விளக்கம் செய்தல் போல குடும்பத் தலைவியும் அவ்வீட்டினை விளக்கமுறச் செய்கிறாள். சிறந்த தலைவியானவள் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'குடும்ப விளக்கு' எனும் தமிழ்க் காவியத்தில் எடுத்துக்காட்டுகிறார்.

புதுமணத் தம்பதியர்க்கே அன்றி இல்லறம் இயற்றும் அனைவருக்கும் இந்நூல் வழிகாட்டி விளக்கம் செய்கிறது. ஆகவே இக்காவியத்திலிருந்து சில கவிதைகளை எடுத்துக்காட்டுதல் பொருந்தும் என்பதால் இங்கே கவிதை மணிகள் சில இடம் பெறுகின்றன. அவற்றைப் பற்றி இனி காணலாம்.

காதல் வாழ்க்கை

மனதளவில் தலைவனும் தலைவியும் ஒத்து, அவர்களுக்குள் நிகழ்கின்ற இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு வாழும் வாழ்க்கையே இங்கு காதல் வாழ்க்கையாகிறது. அக்காதலின் சுவையை இப்பாடலில் காணலாம்.

> ***"அன்பால் அவளும் அவனும் ஒருமித்தால்***
> ***துன்பம் அவளுக்கென்னில் துன்புறுவான் - துன்பம்***
> ***அவனுக்கெனில் அவளும் அவ்வாறே; இந்தச்***
> ***சுவைமிக்க வாழ்வைத்தான் தூயோர் - நவையற்ற***
> ***காதல் வாழ்வென்று கழறினார்."***

மொழிபெயர்ப்பு:

Life with Love

He and she united with love
If she feels sad, he will become sad
She is also like him
Our Pioneer noted these lovable life

சமையலில் கவனம்

கொண்டவர்க்கு எது பிடிக்கும்? குழந்தைகள் எதனை விரும்பும்? கோலூன்றி நடக்கும் மாமனுக்கும் மாமியாருக்கும் தகுந்த உணவு எது? அவ்வுணவு அவர்களின் உடல் நலத்திற்கு உகந்ததுதானா? எனக் கண்டறிந்து அவற்றைச் செய்து கொடுப்பது தலைவியின் தலையாயப் பணியாக கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

சமையலில் கவனம்

"கொண்டவர்க் குளது பிடிக்கும்
குழந்தைகள் எதைவி ரும்பும்
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன
உண்பதில் எவர்உடம் புக்கு
எதுஉத வாதுஎன் றெல்லாம்
கண்டனள் கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்"

மொழிபெயர்ப்பு:

Care of Cooking

What my beloved likes?
What do my children like?
What do my feeble uncle and Aunt like?
Which food is good for all
Which food is not good for all
She finds herself while they are
Eating the food with love

முதியோர்க்குத் துணை

அயர்ந்துத் தூங்கிக் கொண்டிருந்த மாமன் ஒருநாள், "அம்மா தூக்கென்னை" என்று சொல்ல ஏக்கத்துடன் ஓடிவந்த மருமகள் தன் மாமனின் வீங்கிய கால்களைப் பார்த்து, எழுந்துவிடாதீர்கள்? எனச் சொல்லிவிட்டு அவரின் கால்களுக்கு மருந்துப் பூசிச் சரிக்கட்டிப் படுக்க வைக்கிறாள். இந்தக் கருத்தை உணர்த்தும் விதமாக இப்பாடல் அமைகிறது.

முதியவர்க்குத் துணை

"தூங்கிய மாமன் "அம்மா
தூக்கென்னை" என்றே சொல்ல,
ஏங்கியே ஓடி மாமன்
இருக்கின்ற நிலைமை கண்டு,
வீங்கிய காலைப் பார்த்தாள்
"எழுந்திட வேண்டாம்" என்றாள்
தாங்கியே மருந்து பூசிச்
சரிக்கட்டிப் படுக்க வைத்தாள்"

மொழிபெயர்ப்பு:

Help to the oldman

After awaking from sleep her uncle
Called her to carry him
She ran and saw his swelling legs
She told him not to raise up
She gave medicines to him and
Make him to lying bed with kind

பெண் கல்வி

ஒரு பெண் கல்வி கற்பதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை உணர்த்தும் விதமாக இப்பாடல் அமைகிறது. எடுத்துக்காட்டாக குடும்பத்தை வழிநடத்த,

மக்களைப் பேண, இவ்வுலகைக் காக்க என்று, பெண் கல்வியின் சிறப்பை பாடல் வரிகளில் உணரலாம்.

<u>பெண் கல்வி</u>

"பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுதற்கே!
கல்வியில் லாதபெண்கள் களர்நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை;
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி; அங்கே
நல்லறி வுடைய மக்கள் விளைவது நவில வோநான்!"

மொழிபெயர்ப்பு:

Woman Education

Need Education to woman to run a family
Need Education to woman to take care people
Need Education to woman looks after the world
Need Education to woman develop the education
Without Education, a woman is waste land
In that land grass will be group But
Good people will not be produced
With Education a woman is like a grass land
There good generation will be produced.

முடிவுரை

பெண் கல்வி கற்பதால் ஒரு வீடும் இந்த நாடும் சிறந்த முறையில் வளர்ச்சி அடையும். இதற்குச் சான்றாகவே கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பார்வை பெண்ணை மட்டுமல்ல; இந்த மண்ணையும் பெருமைப்படுத்தும் விதமாக கவிதை வரிகள் இங்கு களமிறங்கியுள்ளன. பெண்ணை மதிப்போம்! பெண் கல்வியைப் போற்றுவோம்!

பாரதியின் மொழிபெயர்ப்பு பார்வையில் பெண்ணியம் எங்கே போகின்றது

முனைவர் இரா.சு.முருகன், உதவிப் பேராசிரியர், மொழிபெயர்ப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,, தஞ்சாவூர்,

முன்னுரை

பெண்ணியக்கோட்பாடு இன்று உலகமெங்கும் பரவி வியப்பில்லாஃத்தியுள்ளது. அஃ.து பல்வேறு வழிகளில் பெண்கள் மேன்மையுறுவதற்குப் பயன்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. பெண் விடுதலை, சமுதாயம், பெண்கல்வி போன்றவை மாதருக்கு கிடைத்திடவும் பெண்ணடிமைத்தனம் நீங்கவும் பெண்ணியக் கோட்பாடுகளைப் பற்றி உலகெங்கும் உள்ள சான்றோர் பலர் கூறியிருந்த போதிலும் இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி கோரியவர்களான. இராஜாராம்மோகன்ராய், ஈ.வெ.ரா.பெரியார் போன்றவர்களின் வரிசையில் மகாகவி பாரதியாரும் இடம் பெறுகின்றார். இன்றையைக் காலக்கட்டத்தில் பெண்ணியம் எங்கே போகின்றது என்பதை பாரதியாரின் பார்வையில் காண முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம்

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நியாயம் கிடைத்திடவே பெண்ணியம் தோன்றியது. பெண்களுக்கு ஏற்படும் அவலங்களுக்கு மாற்று மருந்தெனவே தோன்றியுள்ள பெண்ணியம் பெண்களுக்கு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது. இவ்வுலகத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை மெய்பித்துள்ளது. பெண்ணியம். பெண்கள் ஆண்களின் கைப்பாவைகளாய் பேசாமடந்தைகளாய் பெண்ணடிமைகளாய் குழந்தை பெறும் இயந்திரங்களாகக் கருதப்பட்ட காலக்கட்டத்திலிருந்து அவர்களை மீட்டு முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்றிட பெண்ணிய இயக்கம் பலவகைகளில் போராடி வருகின்றது. பெண்ணியம் (Feminism) எனும் லத்தீன் சொல் பெண்ணியத் தன்மைகளிலிருந்து மருவி வந்தது. பெண் விடுதலையைக் குறித்து

“தனமும் இன்பமும் வேண்டும் தரணியில் பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும் காரியத்தில் உறுதி வேண்டும்”

என்று பாரதியின் பாடல் பேசுகின்றது. பெண்ணியம் என்பதை அதன் கோட்பாடுகள் வழியே தத்துவமாகச் கொண்டு இயக்கமாக செயல்படுத்தும் போதே அதனை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலும். ஒவ்வொன்றையும் அதனதன் நிலைகளிலிருந்து அறியும் போது பெண்ணியத்தின் முழுபரிணாம வளர்ச்சியை அறிவதற்கு ஏதுவாகின்றது. பெண்கள் பலவிதமான சித்ரவதைகளை அனுபவித்து இன்னல்களே அவர்கள் வாழ்வில் தொடர்கதைகளாக இருந்து வந்த நிலையில் அவர்களைக் காத்திடவே தோன்றியது பெண்ணியம்.

பெண்கள் சமூகத்தில் தங்களுக்கென நிலையான இடத்தினைப் பெறுவதற்கு உறுதுணை புரிகின்றது இவ்வியக்கம் ஆண்களுக்கு நிகராகத் தரணியில் மாபெரும் சாதனை புரிந்திட தங்களுக்கு ஏற்பட்ட தோல்விகளையே வெற்றிப்படியாக மாற்றி வாழ்வில் உன்னத நிலையில் பெறலாமென்ற உத்வேகத்தைக் கொடுக்கிறது.

பெண் குறித்த விழிப்புணர்வு ஏற்பாடு பெண்விடுதலைக்கெனப் போராடத்துவங்கிய நாளான 1908-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள் பெண்களின் தினமென அறிவிக்கக்கோரி பெண்ணியப் போராளி கிளாரா உலக நாடுகள் முன் 1910-ஆம் ஆண்டு கோரிக்கை விடுத்தாள்.அவரின் வேண்டுகோளுக்கிணங்கி அங்ஙணமே உலக நாடுகள் 1911-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதியை பெண்கள் தினமாக அனுசரிக்க அங்கீகாரம் அளித்தன.

பாரதியின் பெண்ணியப்பார்வை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலாரின் பாடல்கள் மாந்தரைக் கவர்ந்து இழுத்ததைப் போன்றே சுப்பிரமணியப் பாரதியின் பாடல்களும் மாந்தரை ஈர்க்கின்றன. பாரதியாரின் பாடல்களில் சுதந்திர வேட்கையைக் கூறும் பாடல்கள் மிகுந்து இருந்தப் போதிலும் பெண்கள் நாநிலைத்தில் சிறப்புற நலவாழ்வு வாழ்ந்திடப் பாடல்கள் புனைந்துள்ளார். பெண் விடுதலை, பெண்கல்வி, பெண்ணடிமை போன்றவற்றைத் தனது கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

பெண்களிடம் விழிப்புணர்வு வேண்டும் கல்வி வளர்ச்சி வேண்டும் எனும் பாரதி அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? எனும் நிலை மாறி பெண்கள் வீறுகொண்டு எழுந்து, நிமிர்ந்து, நடையும், நேர்கொண்டப் பார்வையுமாய் சமுதாயத்தில் அவர்கள் புதுமை பெண்களாகத் திகழ்ந்திட வேண்டும் எனும் கருத்தினை மாதர் முன் வைக்கின்றார்.

பெண் ஆனவள் ஓர் இரண்டாம் படைப்பு, அவள் திறமைசாலி அல்ல, தைரியசாலி அல்ல, உடல் பலமில்லாதவள், பாவப்பட்டவள் என்றே பெண்கள் பரிதாபக்குரிய நிலையில் இருந்தனர். இத்தகைய அவல நிலை மாறிட வேண்டும் எனும் பாரதி, பெண்களைச் சக்தியின் சொருபமாகக் கண்டார். தமது பாஞ்சாலி சபதத்தில் பெண்ணை பாரதப்
பெண்ணாகவே சித்தரிக்கின்றார்.

"தேவர்கள் பூச்சொரிந்தார் - ஓம்
ஜெய ஜெய பாரதசக்தி
ஆவ லோடு எழுந்து நின்று – முன்னை
ஆரிய விடடுமன் கைதொழுதான்"

என்று பெண்மைக்கு சக்தியின் வடிவம் அளிக்கின்றார். மேலும்

"சக்தி சக்தி என்றால் சக்தி – தானே சேரும் கண்டரே
சக்தி சக்தி என்றால் வெற்றி – தானே நேரும் கண்டரே"

எனச் சக்தி பெருகிடும் போது அஃது ஜெயம் தான் எனத் தெளிவுப்படுத்துகின்றார். இத்தகைய சக்தி எனும் அதிக ஆற்றல் கிடைத்திடும் போது பெண்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளையே சாதனைகளாக மாற்றத் தளைப்படுகின்றனர்.

சாதி, சமயம், மொழி வேறுபாடுகளால் ஏற்படும் மோதல்களில் முதலில் பலியாவது பெண்களும் குழந்தைகளும் தான்" சாதிக் கொடுமைகளால் சமுதாயத்தில் பெண்கள் பெரும் துன்பங்கள் பலவற்றை சந்திக்க நேர்ந்த இந்நிலையானது மாறவேண்டும் என்றே சாதி சமயத்தினை வள்ளலாரைப் போன்றே பாரதி எதிர்க்கின்றார்.

மாதராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் எனும் பாரதி பெண்களை இழிவு செய்வோரை. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனச் சூளுரைக்கின்றார்.

"பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால்
மிகப் பீழையிருக்குதடி தங்கமே தங்கம்."

என்று பெண் ஆனவள் பூமியில் பிறந்து விட்டால் இவ்வுலகில் பலவிதப் துன்பங்களை அனுபவிக்கும் நிலை இருந்து வந்தக் காலத்திலேயே பாரதி பெண் விடுதலை வேண்டும், மாதர் மனோ வலிமையுடன் உண்மையுடன் இருக்க வேண்டும் என்றே...

"மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டாம்
நினைவு நல்லது வேண்டும் நெருங்கின பொருள் கைபட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்
பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும் வாகைமிங்கு தென்பட வேண்டும்
வாகைமிங்கு தென்பட வேண்டும் உண்மை நின்றிட வேண்டும்"

பாடும் பாரதி பெண் உரிமையின் மகத்துவத்தை உணர்த்துகின்றார். பெண்களை ஆண்கள் வெறும் போகப் பொருள்களாகப் பாவித்து அவர்களை அடிமைப்படுத்தி வந்தநிலை மாறவேண்டும் என்பதினை.

"பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?"

இயம்பும் பாரதி "தாய் மாண்பு" குறித்து,

"தாய்க்குலமே லிங்கேயோர் தெய்வ முன்டோ?
தாய் பெண்னே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யான்றோ?
மனைவி யொருத் தியையடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?"

என்று எடுத்துரைக்கிறார். இவ்வாறு கூறும் பாரதியே, "காதலின் புகழ்" பாடுகிறார்.

"காதலினால் மானுடர்க்கு கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்கு கவலை தீரும்
காதலினால் மானுடர்க்கு கவிதை யுண்டாம்
கான முண்டாம் சிற்பமுதற் கலைக்க ளுண்டாம்
ஆதலினாற் காதற் செய்வீர் உலகத்தீரே"

அவரே பெண்களிடம் மட்டுமே கற்பு நிலை என்று சமுதாயத்தில் என்றிருந்த நிலை மாறி இருபாலருக்குமே அ்.து வேண்டும் என்றே.

"கற்பு நிலை என்று சொல்லவந்தால் இரு
கட்சிக்கும் அ்.து பொதுவில் வைப்போம்"

என ஆணித்தரமாகச் சொல்கிறார்.

மேலும் பாரதியின் 'வேண்டும்' என்னும் மொழிபெயர்ப்பின் மூலமாக பெண்களின் நிலை பற்றி உலக நாடுகள் அறிய செய்வதற்கு பாரதின் மொழிபெயர்ப்பு துணைப் புரிகின்றன என்றால் அது மிகையாகாது. இவற்றை

(சுதேச கீதங்கள் - முதற் பாகம்: ஜனவரி 1922)

1. மனதில் லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
தனமும் மின்பமும் வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வெண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

A brave heart
Sweet speech
Good thought
Ripe fruit
Quick dividends
Dreams fulfilled
Wealth and happiness
And tame on. Earth.

1. கண்தி றந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண்வி டுதலை வேண்டும்
பெரியகடவுள் காக்க வேண்டும்
மண்ப யனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்
ஓம், ஓம், ஓம், ஓம்.

Clear vision
Willed action
Women tree
A tenured land
The lord's grace
Truth triumphant
A new heaven
A new earth
Om om om om.

Note: There are two sets of manuscripts for the Tamil original in the hand writing of Bharathi என்று தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

முடிவுரை

பெண்ணியம் இன்றையக் காலக்கட்டத்தில் பலவழிகளில் மாதருக்குத் துணைபுரிவதாய் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதனை பெண்களில் சிலர் தவறான அணுகுமுறையில் கொண்டுச் செல்கின்றனர். இதனை பெண்கள் களைத்தெறிய வேண்டும். பாரதி பாடிய,

"பட்டங்க ளாள்வதுல் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்."

என்றே நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நடையுடன் கூடியப் பெண்ணாய் ஆக்கிச் செயல்களில் பெண்கள் மிளிரவேண்டும். பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்பதற்கேற்ப பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்து தங்கள் ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். பெண்ணியம் தோன்றிய நாள்முதற் கொண்டே படிப்படியாக பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைந்து அவர்கள் ஆண்களுக்கு சரிசமன் எனும் உயரிய நிலை சமூகத்தில் ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வு மேன்மையடைந்திட, பெண்ணிய இயக்கக் கோட்பாடுகள் உறுதுணை புரிகின்றன. பாரதியின் பெண்ணியப்பார்வை பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதாய் இருப்பதை அறியக்கூடியதாய் உள்ளது. மொத்தத்தில் பெண்ணியம் வீறுநடைப் போட்டுச் சென்று கொண்டிருக்கின்றது என்றே கூறலாம்.

யக்சகான
(கன்னட நாட்டுப்புறக் கலை அறிமுகம்)

சே.முனியசாமி, முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முகப்பு

தொல்காப்பியம் குறிப்பிடும் பிசி, முதுமொழி, குறிப்பு மொழி மூன்றும் நாட்டுப்புற இலக்கிய வகைமையைச் சார்ந்தவை. தொல்காப்பியம் பண்ணத்தியின் இலக்கணம் கூறும்போது,

"பாட்டிடைக் கலந்த பொருள் வாசிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே"

எனும் அடிகளில் பண்ணத்தி எனக் குறிக்கும் பெயரானது, இலக்கிய வகை நாடோடிப் பாடல்களே எனக் கூறுகின்றார் கி.வா.ஜகந்நாதன். தமிழ் மொழியில் நாட்டுப்புற ஆய்வு பிற்காலத்தில் தொடங்கப்பட்டாலும் நாட்டுப்புறச் சிந்தனையானது தமிழில் நமக்குக் கிடைக்கும் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உள்ளது என்பதைப் பதிவு செய்து, திராவிட மொழிகளில் சகோதர மொழியாகத்திகழும் கன்னட மொழி நாட்டுப்புறக்கலையான யக்சகான எனும் கலையினைப்பற்றி அறிமுக நோக்கில் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. முதலில் உலக நாடுகளில் நாட்டுப்புற இலக்கியம் வளர்ந்த கால கட்டத்தையும், பின்னர் இந்திய மொழிகளில் நாட்டுப்புற இலக்கியம் வளர்ந்த காலக்கட்டத்தையும் பருந்து பார்வையில் எடுத்துரைத்து அதன் பின்னர் யக்சகானக் கலை பற்றியும் அதனின் நாடக மேடையமைப்பு நாடகம் தொடங்கும்முறை, நாடகத்திற்குப் பயன்படும் கருவிகள் ஆகியவற்றினைத் தெரிவுசெய்து இறுதியாக யக்சகான கலை தொடர்பான கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் ஆகியவற்றினை விளக்கப்பட உள்ளன.

உலக நாட்டுப்புற வரலாறு

16,17 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் நாட்டுப்புறவியல் செய்திகள் தொகுக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இவ்வாய்வில் கவனம் செலுத்தப்பட்டது. இதே நூற்றாண்டில் ஜேக்கப், வில்செம்கிரிடம் ஆகியோர் நாட்டுப்புறக் கதைகளில் ஆய்வினைத் தொடங்கி வைத்தனர். 1831 ஆம் ஆண்டு பின்லாந்தில் நாட்டுப்புறவியல் கழகம் தொடங்கப்பட்டது. 1702 ஆம் ஆண்டு ப்ளோரினஸ் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டார். 1878 ஆம் ஆண்டு இங்கிலாந்திலும், 1888 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் நாட்டுப்புறவியல் தொடங்கப்பட்டது. 1826 ஆம் ஆண்டு ஆங்கிலக் கதைப்பாடல்கள் வெளியானது. டெய்லர், சுமிதி ஆகியோர் பிரிட்டிஷ் நாட்டு ஆய்வாளர்கள் ஆவர். யாவில் வால்டிமார், பராப் நாட்டுப்புறக் கதைகளில் அமைப்பியல் ஆய்வினை செய்தார். ரஷ்ய நாட்டு அறிஞர் செக்காலா என்பவரும் இது குறித்து ஆய்வு செய்துள்ளார்.

இந்திய நாட்டுப்புற வரலாறு

அயல்நாட்டாரின் முயற்சியே இந்திய நாட்டுப்புற இயலின் தொடக்கமாகும். 19ஆம் நூற்றாண்டில் வங்காளம், பம்பாய், பிரிட்டன், அயர்லாந்து ஆகிய நாடுகளில் ராயல் ஆசியாட்டிக் சொஸைட்டில் வெளியான இதழ்களில் நாட்டுப்புறக் கலை வெளியானது. 1872 ஆம் ஆண்டு காஷ்மீரில் G.H.Leitner 1906 ஆம் ஆண்டு இமாச்சலப்பிரதேசத்தில் A.E.Dracoha 1884 ஆம் ஆண்டு பஞ்சாப்பில் C.Swinerton என்பாரும் 1872 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் Criersonn னும், 1960 ஆம் ஆண்டு அசாமில் P.D.Goswami யும், 1876 ஆம் ஆண்டு ஒரிஷாவில் Gopal Chandra Praharaj ம், 1947 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் Siva Sabi Chaturvedi யும், 1959 ஆம் ஆண்டு இராஜஸ்தானில் Devilal Sarmar ம், 1962 ஆம் ஆண்டு மகாராஷ்ட்ராவில் அனுசுயா, பஹாபம்,

க்மலாபாய், தேஷ்பாண்டே, துர்கா பகவத் ஆகியோரும், 1905 ஆம் ஆண்டு ஆந்திராவில் G.R.Pandulu ம், 1947 ஆம் ஆண்டு கேரளத்தில் அனந்த கிருஷ்ண அய்யரும், 1914 ஆம் ஆண்டு ஈழத்தில் சி.ஆர். சீனிவாச சாஸ்தியும், 1871 ஆம் ஆண்டு கோவர் ஆங்கிலத்தில் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தனர்.

கருநாடகத்தில் நாட்டுப்புறவியல்

கன்னட மொழியின் புதுமை இலக்கியத்தின் முதல்நிலை காலமாக கி.பி.1820-1920 எனக் கருதப்படுகிறது. கி.பி. 1823 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கெம்பு நாராயணனின் 'முத்ரா மஞ்ஜுஷ' என்ற வசன நூலில் பழமை கலந்த புதுகன்னடத்தின் மொழிக்கட்டுகள் காணப்படுகின்றன. இக்காலத்தின் சிறப்பு கன்னட நாடகப் படைப்பாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கன்னட வரலாற்றில் நாட்டிய நாடக மேடை இருந்தன என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இருப்பினும் 17ஆம் நூற்றாண்டில் சிங்காரசாரியன் இயற்றிய 'மித்ர விந்தா கோவிந்தா' எனும் நாடகத்திற்கு முன்பு எழுத்து வடிவில் நாடகம் வேறு இல்லையென்பதை அறியமுடிகின்றது.

யக்சகான

யக்சகான என்பது பரம்பரையாக வந்த நாட்டுப்புறப்பாடலான நாட்டிய 'கீத நாடகம்' எனவும் கர்நாடகத்தின் தனிச்சிறப்புடைய 'பழங்கதை' எனவும் அழைக்கப்படுகின்றன. சமசுகிருத மொழியில் 'யக்ஷா' எனும் சொல்லிற்கு ஆராதனை எனப்பொருள். இது பூஜை பண்ணுவதற்கு உதவும் இசை எனவும் அறிமுடிகிறது. யக்சகான, யக்சகான பயலாட்டா, பயலாட்டா, பயலாக்தே, ஆட்டதாட்டா, மேளா ஆகிய பெயர்களில் இவ்வாட்டத்தை அழைக்கப்படுகின்றன.

காடு சார்ந்த நிலத்தில் இவ்வாட்டத்தை மூடலபாய் எனவும், கடல் சார்ந்த பகுதியில் படுவலபாயா எனவும் இவ்வாட்டத்தை அழைக்கின்றனர். 'படுவலபாய' பிரிவில் தெங்க திட்டு, படலதிட்டு என்று இருவகை ஆட்டங்கள் உள்ளன. மூலம் ஒன்றேயாயினும் வடிவம் மற்றும் வளர்ந்த நிலையில் ஏற்பட்ட மாறுதல்களினால் இப்பெயர்களை இவை கொண்டுள்ளதுயென கன்னட மொழிபெயர்ப்பாளரான இறையடியான் கூறுகின்றார்.

பாரம்பரியக் கலை

இவ்வாட்டத்தில் சங்கீதம், நாட்டியம், வாத்தியம், ஆட்டம், கலை போன்றவைகள் கலந்தே வரும். 1105 ஆம் ஆண்டு நிமிசன்தானா மல்லிநாத புராணத்தையும், 1189 ஆம் ஆண்டு சந்திரபுராணத்தில் ஆதிகாலத்திலிருந்து எழுந்த சங்கீதம் இக்காலம் வரை பயன்படுத்தப்படுகின்றன. எக்கா காணம், எட்டிக்கா காணம், ஜக்கா காணம் போன்ற காணங்கள் இருந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. தொடக்கத்தில் 'பாகவதநொப்பனே' என்பவர் இக்கலையை ஆடி நடத்தி வந்துள்ளார். அதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டு வரையிலும் இது சிறந்து விளங்கியுள்ளது.

நாடக அமைப்புமுறை

யக்சகான குழுக்களை 'மேள' என்றழைப்பர். 250 முதல் 300 சதுர அடிகளைக் கொண்டு மேடைகள் அமையப்பெறும். மாமர இழை, வாழைமரம் போன்றவற்றினைக் கொண்டு அலங்காரம் அமைப்பர். நான்கு கழைகளால் கட்டப்பட்டிருக்கும் மேடையின் நடுப்பகுதியே புனித ஸ்தலம் என்பர். ஆட்டக்காரர் பாகவதரின் இடப்புறமிருந்து மேடைக்கு வலப்புறமாக மறைவர்.

நாடகம் தொடங்கும்முறை

நாடகமானது சரியாக இரவு பத்துமணிக்குத் தொடங்கப்பட்டு காலை ஆறு மணிக்கு முடிவுறும். நாடகம் தொடங்கும் போது கற்பூரம் காட்டி, கணபதி பூஜை செய்து சரஸ்வதியை வணங்குவர். யட்சகானத்தின் சூத்ரதாரி பாகவதரே. இவரே ஒவ்வொரு பாத்திரத்தையும் அறிமுகப்படுத்துவார். அனைத்துப்

பாத்திரங்களின் பாடல்களையும் பாகவதர் ஒருவர் மட்டுமே பாட, வசனம் பேசுதல், ஆடுதல், நடித்தல் என்பன நடிகர்களின் பணியாகின்றன.

வண்ணச் சேர்க்கை (Colour Combination) யக்சகானத்தின் மற்றொரு சிறப்பாகும். பெண் வேடங்களை ஆண்களே தரித்து வந்த நிலையில், பின்னர் பெண்களே பங்கு கொள்ளும்முறை இதில் காணப்படுகின்றது.

யக்சகான மேடையில் முதலில் தோன்றுபவர் ஷிகோடங்கி' எனப்படும் வேட்டக்காரன் இவரை 'அனுமநாயகன்' எனவும் அழைப்பர். முதன்மை கதாபாத்திரமோ அல்லது துணைமைக் கதாப்பாத்திரமோ மேடைக்கு வரதாமதமாகும் போது, அவர்கள் வரும்வரை நகைச்சுவையாகப் பேசி பார்ப்போரை ரசித்து சிரிக்க வைப்பது இவரது பங்காகும். மேடைக்கு வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் சிறுதிரையைக் கொண்டு மறைத்தப்படியே வருவது மரபாக உள்ளது.

கருவிகள்

கதாப்பாத்திரங்களின் ஆடைகள் பார்ப்போரின் கண்களை ஈர்க்கும் வகையில் வண்ணமயமாக அமைந்திருக்கும். இரவில் பளிச்சிட்டு மின்னுகின்ற வகையில் அணிவர். ஒவ்வொருவரும் நேர்த்தியான வேலைப்பாடுகள் கொண்ட ஆடைகளை அணிந்து வருவதுமட்டுமின்றி கதாப்பாத்திரங்கள் பயன்படுத்தும் கருவிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். பதக்கம், கிரீடம், பகடே, கர்ணக்குண்டலம், நடுகட்டு, எதொஹா கால்கடா, புஜகீர்த்தி, தோல்பன்ந்தே போன்றவைகளை ஆண்களும், ஹோான்னோ ஓலை, புகுடி, ஒட்டியாணம், மூக்குத்தி, வளையல், உங்குர, கொலுசு போன்றவைகளைப் பெண்கள் அணிந்து வருவர்.

உடை அணிகலன்கள் ஒப்பனை ஆகியவற்றுக்கு ஈடாக இசையைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆட்டத்தின் இடையிடையே வரும் சுலோகம், செய்யுள், வசனம், உரைப்பா ஆகியவற்றிக்கு இராகம், தாளம் மாறுபட்டு மாறுபட்டு ஒலிப்பது இசையமைப்புக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும்

கதாபாத்திர நடனமின்மை

நாடகத்தில் நடிப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும். பெரும்பாலும் நடனங்கள் குறைந்தே காணலாகும். யக்சகானத்தில் கதாப்பாத்திரங்கள் நடனமாடுவது கடினமாகும். அவ்வாறு நடனமாடினால் அலங்கரிப்பு அணிகலன்கள் சிதைவு ஏற்படலாம்.கதாப்பாத்திரங்கள் களைப்படைய நேரிடுவதால் தாலா, தபேலா என்பவைகள் மட்டுமே பெரும்பாலும் பயன்படுத்துவர்.

யக்சகான கையெழுத்துப் பிரதிகள்

பெரும்பாலும் நாடகங்களின் கதையமைப்பு அதை நிகழ்த்துபவர்களால் மட்டுமே பேணி பாதுகாக்கப்படும். அவற்றை எழுத்துப் பிரதியில் அச்சிட்டோ, எழுதியோ தம் கை வண்ணம் வைத்திருப்பர். அவ்வகையில் யட்சகானக் கதைகளைப் பார்க்க மட்டுமின்றி படிக்கவும் கிடைக்கின்றன. சனிக்கிழமை அல்லது ஆடிமாத சனிக்கிழமைகளில் சனிபகவானை வழிபட்டு இரவு முழுவதும் பாகவதம் படிக்கப்படுவதைக் கருநாடகத்தின் எல்லாப் பகுதிகளிலும் கேட்கலாம். இதுபோன்ற யட்சகான காவியமும் சிலரால் மேற்கொள்ளப்படுகிறது.

"கன்னட மொழியியல் பிரிவு நூலகத்தில் சுமார் 250 யக்சகானக் கையெழுத்துப் பிரதிகளும், வெளியிட்டுப் பிரிவில் நாற்பதுக்கும் அதிகமான நூல்களும் அடங்கியுள்ளன. கி.பி. 1800 ஆம் ஆண்டு பி.எல்.ரைஸ் மற்றும் ஆர். நரசிம்மாச்சாரி ஆகியோரால் துவங்கப்பட்ட கையெழுத்துப்படிகளின் ஆராய்ச்சியைத் தொடர்ந்து யக்சகான நூல்கள் வெளிவந்துள்ளதெனத் தெரிகிறது" *(கருநாடக நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப. 1720).*

யக்சகான தொடர்பான நூல்கள்

'ராவணோத் பவ' எனும் நூலினை சுப்பய்யனும், கொவ்வியாகி மகாத்மியம் எனும் நூலினை குரு முத்துச் சங்கம தேவ என்பவர்களும், கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் யட்சகான எனும் நூலினை கே. சிவராம் காந்த் என்பாரும் எழுதியுள்ளனர். மேலும் கட்டுரை ஒன்றில் யக்சகான ஹஸ்தபிரிதிகளு எனும் தலைப்பில் 1986 ஆம் ஆண்டு சனவரி- மார்ச் (ஜாபைத கங்கோத்ரி பக் 39-42) ஜி.ஜி. மஞ்சநாதன் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

முடிப்பு

- கீதநாடகம், பழங்கதை எனப் பெயர் கொண்ட (யட்சகான) நாட்டுப்புறக் கலையானது புராணக்கதையின் வாயிலாக கருநாடக மண்ணின் பாரம்பரியத்தைத் தாங்கி நிற்கின்றது.
- கருநாடக மாநிலத்தில் தோன்றிய இக்கலையானது மேடைகளில் இன்றும் அரங்கேற்றப்படுகின்றது.
- கருநாடக மாநிலத்தில் கிராமியச் சார்ந்த அனைத்துக் கலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கலைகளையும், கலைஞர்களையும் பாதுகாத்து வருகின்றனனென்பது போற்றதலுக்குரியதாகும்.
- "மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ, எதைப் பயிற்சி பெற்றதோ அவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும். இவை அறிவியல் அறிவினின்றும் வேறுபட்டன. நாட்டுப்புற இயலின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பரவியுள்ளனளு பண்பாட்டின் உயர் நிலைகளையும் அடைந்துள்ளன. நாட்டுப்புற இயல் அறிவு என்பது மனித அறிவின் கிளையாகும். அறிவியல் அடிப்படையில் தொகுப்பதும் வகுப்பதும் கற்பதும்தான் நாட்டுப்புறவியலின் கூறுகளாகும். காலந்தோறும் மனித வாழவையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதாகும்" *(நாட்டுப்புற இயல், ப,15).* மேற்கூறிய அறிஞரின் கருத்திற்கேற்ப, எந்தவொரு நாடு தன் மண் சார்ந்த, மக்கள் சார்ந்த, மொழிசார்ந்த உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுகின்றதோ அந்நாடே தன் பண்பாட்டிற்கு உரம்சேர்த்து அழிக்காது காலங்காலமாய் மண்ணில் நிலத்து நிற்கும். அவ்வகையில் கருநாடக மாநிலம் நாட்டுப்புற கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இருப்பினும் அனைத்து மாநிலங்களில் காணலாகும் கலைகளை அழியா வண்ணம் மாநில/மத்திய அரசுகள் தலையிட்டு ஓரளவு கலைகளையும் கலைஞர்களைக் காப்பாற்றி வருகின்றன. ஆனால் இந்நிலை பரவலாகத்தான் உள்ளன. ஆக அனைத்து நாட்டுப்புறகலைகள் நலிந்து போகாமல் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வந்தால் 'நலிந்து போன கலைகள்' எனும் சொல்லை வரலாற்றிலிருந்து புறந்தள்ளலாம்.

துணை நூறப்பட்டியல்

1. இறையடியான், *கருநாடக நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம்,* 1993, மெஸ்கா வெளியிடு, சென்னை
2. முகளி ரம்.ஸ்ரீ., *கன்னட இலக்கிய வரலாறு,* 1972, சாகித்திய அகாதெமி, புதுதில்லி.
3. சண்முக சுந்தரம்.சு. *நாட்டுப்புற இயல்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை
4. முனியசாமி.சே, *இறையடியான் வாழ்வும் பணியும்,* 2016, கலைஞன் பதிப்பகம், சென்னை
5. *திசைஎட்டும் (கன்னட மொழிச் சிறப்பிதழ்) காலாண்டு இதழ்,* ஏப்ரல்-ஜூன் 2011.
6. Leelavathi M.N., *Kannada madhurya,* 2004, CIIL, Mysore.

கும்பகோணம் வட்டாரக் கல்வெட்டுகளில் வணிகர் சமூகம்

கு.மூகாம்பிகை, முனைவர் பட்டஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழகம் சங்ககாலம் முதல் பிற கடல்சார் நாடுகளுடனும் இந்தியாவின் பிற பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அக்கால இலக்கியங்கள் மட்டுமின்றி சங்ககால ஊர்களான கொடுமணல், அழகன் குளம், அரிக்கமேடு, பூம்பூகார் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.[1] சங்க காலத்தைத் தொடர்ந்து இடைக்காலத்தில் வணிகர்கள் தனி குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். அவை நகரம், புரம், பட்டினம் என்று அழைக்கப் பட்டன. இவர்கள் பெருந்தெரு, பேரங்காடி மடிகை போன்ற முக்கியமான இடங்களில் தங்களின் குடியிருப்பை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வட்டாரக் கல்வெட்டுக்களில் பரவலாக வணிகக் குழுக்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

திருநாகேஸ்வரத்தில் கிடைத்துள்ள முதலாம் ஆதித்தனின் பொ.ஆ873 இல் வெளியிடப்பட்ட கல்வெட்டில் திரைமூர் நாட்டைச் சேர்ந்த குமாரமார்த்தாண்டப்புரம் என்ற வணிக நகரம் வணிகம் தொடர்பான காலத்தால் முதன்மைச் சான்றாக உள்ளது.[2] வளஞ்சியர் என்ற வணிகக் குழுச் செயல்பட்டதைத் திருபுறம்பியம் முதலாம் ராஜராஜனின் கல்வெட்டானது (பொ.ஆ1001) தெரிவிக்கின்றது.[3] இவற்றைக் கொண்டு பல வணிக நகரங்களின் முழுமையான வளர்ச்சியினைக் காணமுடிகின்றது. புரம், நகரம் என்ற சொல்லாட்சியானது ஏதேனும் ஒரு ஊர்ப்பெயரின் பின்னொட்டாகவே கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. பட்டினம் என்ற சொல்லாட்சியானது இவ்வட்டாரத்தில் காணப்படவில்லை. பெருந்தெரு, பேரங்காடி என்பன ஊரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. பெரிய, சிறிய வணிகத்தில் ஈடுபட்டுள்ள வணிகச் சமூகத்தினரே வியாபாரிகள், வணிகர் என்று குறிக்கப்படுகின்றனர்.

வணிகச் சமூகத்தினர் தங்களின் வணிகத்தொடர்புகளைச் செம்மைப்ப டுத்தும் நோக்கில் ஊராட்சி மன்றம் போல் தங்களுக்கென்று ஆட்சி மன்றம் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வணிக ஆட்சிமன்றமே கல்வெட்டுகளில் நகரம், நகரத்தார், வியாபாரி, நகரத்தோம், சாலிநகரத்தார் என்று அழைக்கப்படுகின்றது.[4] இவ்வட்டாரக் கல்வெட்டுகளில் பொ.ஆ 1070[5] முதல் 1221[6] வரையிலான ஆவணங்களில் வணிக நகரங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது.

பொதுவாக திருநறையூர் நாட்டுப் பகுதியில் அதிகளவு வணிக நகரங்கள் காணப்படுகின்றன. வணிக்குடியேற்றங்களைப் பார்க்கும்போது புரம் நகரம் நாட்டின் உட்பகுதியிலும் பட்டினம் என்பது நாட்டின் கடற்கரைப் பகுதியிலும், பேரங்காடி, பெருந்தெரு, மடிகை என்பன நாட்டின் மையப்பகுதியிலும் வணிகப் போக்குவரத்துக்கு ஏற்றார் போல் ஆற்றங்கரைப்பகுதில் அமைந்திருந்ததை அறியமுடிகின்றது. மடிகை என்பது ஒரு கல்வெட்டில் மட்டும் காணப்படுகிறது.

புரம்

புரம் எனமுடியும் ஊர்கள் 16 இடங்களிங் காணப்படுகின்றன. திருமலைராஜபுரம்[7] திருவனந்தபுரம்[8] கல்யாணபுரம்[9] தென்குறுக்கை ராஜ நாராயணபுரம், நந்திபுரம்,[10] குமாரமார்தாண்ட புரம், சிவபுரம்[11] காஞ்சிபுரம்,[12] இலஞ்சிகுடி வீரநாராயண புரம்,[13] முடிகொண்ட சோழபுரம்,[14] கங்கை கொண்ட சோழபுரம், விருதுராஜபயங்கரபுரம்,[15] அவணிநாராயணபுரம்,[16] ராஜராஜ புரம்,[17] இராஜேந்திர சோழபுரம்,[18] மகாதேவபுரம்[19] போன்றவைகளாகும்.

மேற்குறிப்பிட்ட நகரத்தில் வணிகத்தொழில் செய்யும் வணிகர்களும், வணிகக் கூட்டத்தோடு பிற கைத்தொழில் செய்யும் மக்களும் சேர்ந்து வசித்திருக்க வேண்டும். புரம் என்னும் பகுதிகளில் நகரத்தார் கூட்டத்தை அதிகளவு குறிப்பிடுவதற்கு மாறாக வியாபாரிகள் என்ற சொல்லே அதிகளவு காணப்படுகின்றது. காட்டாக குமாரமார்த்தாண்டபுரத்து வியாபாரி நப்பன்,[20] நந்திபுர வியாபாரி எழுவன் மதெவன்[21] என்பதனைக் குறிப்பிடலாம்.

மடிகை

வணிகச் சமூகத்தினர் ஒரு ஊரிலோ முக்கிய நகரத்திலோ குழுவாகக் குடியிருப்புகளை அமைத்துக்கொண்டிருந்தனர். இவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தினைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தங்களுக்கு என்று பேரங்காடி, மடிகை என்ற வியாபாரத்தலங்களை ஏற்படுத்தியுள்ளனர். 'மடிகை' என்ற சொல் தெருவைச் சுட்டுகின்றது. முகுந்தனூர் மடிகைத் தெரு வியாபாரி சாரங்கபாணி என்பவர் 15 கலம் நெல்லை சிவபிராமணருக்கும் இறைவனுக்கும் வருடத்தில் அமாவசையன்று செலவு செய்வதற்கு கொடை அளித்துள்ளார். காலம் கணிக்கப்படாத முடியாதபடி இக்கல்வெட்டு உள்ளது.[22]

வணிகத்தெருக்கள்

திருப்புறம்பியத்தில் முதலாம் ராஜராஜன் பொ.ஆ1001 ஆண்டு வெளியிடப்பெற்ற கல்வெட்டு இவ்வூர் வளஞ்சியர் 2 நொந்தாவிளக்கு கொடையளித்துள்ளதைக் குறிப்பிடுவதிலிருந்து வணிகக்குழுச் செயல்பட்டமையும், சங்கரபாடியார் என்ற ஒருவகை வணிகர்களும் வளஞ்சியர் என்ற ஈழநாட்டு வணிகர்களும் இருந்ததைக் கல்வெட்டு சான்று காட்டுவதிலிருந்து[23] கும்பகோணம் வட்டாரச் சோழர்காலச் சமூகத்தில் உள்ளூர் வணிகர்களுடன் வெளிநாட்டு வணிகர்களும் தங்கியிருது வணிகச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்ததை நோக்கும் போது இவ்வட்டாரச் சமூகம் அக்காலத்தில் சற்று மேம்பட்ட சமூகமாக இருந்திருந்ததை அறியமுடிகிறது. முதலாம் திருப்புறம்பியத்தில் ராஜேந்திரனின் பொ.ஆ 1026 கல்வெட்டானது விரையாக்கலிப் பெருந்தெரு என்று வணிக தெருவிற்கு பெயர் இருந்ததனைக் குறிப்பிடப்பட்டுள்ளது.[24] திருநாகேஸ்வரம் முதலாம் ராஜேந்திரனின் பொ.ஆ 1045 கல்வெட்டானது மும்முடி சோழப் பெருந்தெரு வியாபாரி பிரம்மகுட்டன் அளித்தகொடைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.[25] திருவலஞ்சுழி மூன்றாம் ராஜராஜனின் பொ.ஆ1219 மகாதேவபட்டன், சுந்தரத்தோளுடையப் பட்டன் ஆகிய இருவரும் வியாபாரம் செய்த செய்தி காணப்படுவதன் மூலம் பல்வேறு இனத்தவர்களும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவருகின்றது.[26] அதாவது பிராமணர்களும் வியாபாரம் செய்துள்ளனர் என்பது தெரியவருகின்றது. அகிலநாயக கடைத் தெருவைச்சேர்ந்த வாணியர் பிள்ளை என்பவரும் மூன்றாம் ராஜராஜனின் பொ.ஆ1221 திருவலஞ்சுழி கல்வெட்டின் மூலம் பல இனத்தவர் குடியிருந்ததற்கான சான்றைத்தருகின்றது.[27]

வணிகர் தொடர்புக்கு அடிப்படையாக அமைந்தகுறுகிய மற்றும் நீண்ட வழிகளே வணிகப் பெருவழிகள் எனப்பட்டன. இவ்வட்டாரத்தில் கிடைக்கூடிய கல்வெட்டுகளில் ஸ்ரீபராந்தகப்பெருவழி, பரமாங்கப் பெருவழி,[28] மூன்றாம் ராஜராஜனின் நாகேசுவரன்கோயில் கல்வெட்டு (பொ.ஆ1236) திருமஞ்சனப் பெருவழியைக் குறிப்பிடுகின்றது.[29] ராஜாதிராஜனின் கல்வெட்டு (பொ.ஆ 1054) ஷவாயிலார் குளத்துக்கும் பெருவழி' என உள்ளது.[30] மேற்காணும் கல்வெட்டுகளில் பெருவழித் தொடர்பான கல்வெட்டுகள் அனைத்தும் இறைவனுக்கு அளிக்கப்படும் நிலத்தின் அளவுகளைக் குறிப்பிடும்போது நிலத்தின் எல்லைகளை வரையறை செய்யவே இச்சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வணிகர்கள் பற்றிய குறிப்பிடும் அனைத்துக் கல்வெட்டுகளிலும் வணிகர்கள் கொடையாளர்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அடிகுறிப்புகள்

1. அகம். 36, 140, 390 பதிற்றுபத்து. 30, 68
2. தெ .இ.க. தொகுதி. 3-91
3. தெ .இ.க. தொகுதி. 6-20
4. கே.எ. நீலகண்டசாஸ்திரி, சோழர், தொகுதி, 2, ப.671
5. தெ .இ.க. தொகுதி. 3-9
6. திரு.வ.க. 1978-234 மற்றும் 235
7. இ.க.ஆ. 1965:66-292
8. திரு.வ.க 1978-222
9. இ.க.ஆ. 1908-21
10. இ.க.ஆ. 1908-21
11. தெ .இ.க. தொகுதி. 6-31
12. தெ .இ.க. தொகுதி. 30-2
13. இ.க.ஆ 1931:32-97
14. வரலாறு22-2
15. இ.க.ஆ. 1917-274
16. இ.க.ஆ. 1908-180
17. இ.க.ஆ. 1927-526
18. திரு.வ.க 1978-231
19. இ.க.ஆ. 1964:65-275
20. தெ .இ.க. தொகுதி. 3-91
21. தெ .இ.க. தொகுதி. 19-96
22. இ.க.ஆ. 1965:66-305
23. தெ.இ.க.தொகுதி. 2-20 இ.க.ஆ. 1927-340
24. தெ .இ.க. தொகுதி. 6-30
25. தெ .இ.க. தொகுதி. 6-33
26. திரு.வ.க. 1978- 236
27. திரு.வ.க. 1978-234 மற்றும் 235
28. இரா.கலைக்கோவன், மு.நளினி, வலஞ்சுழிவாணர், வரலாற்றாய்வு மையம், 2005, ப.90
29. கு.வ.க. 1979-13
30. கு.வ.க. 1979-45

மனை நிர்வாகத்தில் சங்ககால மகளிர்

முனைவர் த.மேரி ஜான்சி ராணி, கௌரவ விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை, அரசினர் பெண்கள் கல்லூரி (த), கும்பகோணம்.

பெருமைமிகு பெண்ணின் நலம் எவ்வாறு பேணப்பட்டதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். சங்க இலக்கிய மனை நிர்வாகத்தில் பெண்களின் பங்கு எவ்வாறு இருந்ததைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

மனை

சங்க இலக்கியங்களில் மனை என்ற சொல் குடும்பம் என்ற பொருளைத் தருகின்றது. மேலும் குடி, இல் என்ற சொல்லாட்சிகளும் குடும்பம் என்ற பொருளையே தருகின்றன. சங்க இலக்கியங்களில் மனை என்ற சொல்லுக்கு 'வீடு' என்ற பொருளில் 73 பாடல்களிலும், 'குடும்பம்' என்ற பொருளில் 73 பாடல்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பெண்கள் வாழ்வில் கற்க வேண்டியது என்பது இல்லப் பணியேயாகும். ஆடவர் வெளியே ஆனிரைகளை மேய்க்கப் பெண் மனையிலிருந்து கடமையாற்ற வேண்டும் என்ற வேலைப் பகுப்பு பெண்ணை மனைப் பணிகளுக்கு உரியவளாக்கியது. மனை நிர்வாகத்தில் பெண்களின் இலக்கு முன்றாகிறது. அவை புதல்வரைப் பெறுதல், கணவனைப் பேணல், விருந்தோம்பல் ஆகியனவாகும்.

புதல்வரைப் பெறுதல்

குடும்பம் சமூக அமைப்புக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது. குடும்பம் பற்றிய கருத்துகளைத் கூறும்போது 'ஒன்று ஒன்றுக்கு மேற்ப்பட்ட குழந்தைகளைக் கொண்டது குடும்ப அமைப்பு' என்று மொர்டார்க் கூறுகிறார்.

சங்க இலக்கியச் சமுதாயம் 'மயக்குறு மக்களை இல்லார்க்குப் பயக்குறை இல்லை' என்று எண்ணும் சமுதாயமாகவே காணப்படுகின்றன. சங்க இல்லகியப் பெண்களும் ஈன்று புரந்தருதலைக் தமது கடமையாகவே குறிப்பிடுகின்றனர். புதல்வரைப் பெருதலாகிய குடும்ப இலக்கில் பெண்களின் பங்கு சிறந்து விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் காட்சிப்படுத்தும் குடும்ப அமைப்பில் குழந்தைகள் முன்று வகைகளாக காணப்படுகின்றனர் .

ஒரு பெண் குழந்தை
ஒரு ஆண் குழந்தை
இருபால் குழந்தை

ஒரு பெண் குழந்தை

ஆண், பெண், சேர்க்கையாகிய குழுவில் ஒரு பெண் குழந்தை உள்ள அமைப்பைச் சங்க இலக்கியத்தில் இரு பாடல்கள் (கலி.50 ஐங.257) நேரடியாக நீண்ட நாள் தவமிருந்து பெற்ற மகள் என்று குறிப்பிடுகின்றன.

"குன்றக் குறவன் கடவுப் பேநியிரந்தன்ன
பெற்ற வௌவளைக் குறுமக" - *(ஐங்.257)*

இப்பாடலின் மூலம் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்ப அமைப்பைக் காணலாம்.

ஒரு ஆண் குழந்தை

சங்க இலக்கியங்களில் பாடல்கள் ஒரு ஆண் குழந்தை மட்டும் உள்ள குடும்பங்களைக் காட்சிபடுத்துகின்றன. இச்செய்திகள் அகப் பாடல்களிலும் புறப்

பாடல்களிலும் காணப்படுகின்றன. ஐந்குறுநூற்றின் முல்லைப் பாடல்களில் (401-406 408-410). ஆண் குழந்தை மட்டும் உள்ள குடும்ப அமைப்பைத் தெளிவாகக் காட்சியளிகிறது. மேலும் கலித்தொகையின் மருதக்கலி (79-86) பாடல்களிலும் இச்செய்தி காணப்படுகிறது.

புறநானூற்றில் ஒவ்வொருவரது கடமை பற்றியும் எடுத்துரைக்கும் பொன் முடியார் ஒரு பெண்பாற் புலவராயிருந்தும் ஆண் குழந்தை பற்றியே பேசுகின்றார் .

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்கு கடனே
ஒளிருவான்அருஞ்சமம் முறுக்கிக்
களிருஎறிந்துபெயர்தல் காளைக்குக் கடனே" - (புறம் 312)

இவை தவிர ஆண் குழந்தை பற்றிய செய்திகள் அகப்பாடல்களிலும், புறப்பட்டல்களிலும் செயல்பாடுகளின் வழியாகப் புலப்படுத்தப்படுகின்றன.

இருபாற் குழந்தைகள்

சங்க இலக்கியங்களில் ஒரு குழந்தை உள்ள குடும்பங்களைக் காட்சிப்படுத்துவது போன்று பல குழந்தைகள் உள்ள குடும்பங்களையும் பாடற் பொருட்களாக்கியுள்ளன.

கணவனைத் தொழுது எழும் கற்புச் சிறப்பினாற்றான் வேட்டுவிச்சியரின் அண்ணன்மாரும் தாம் வைத்த குறி தப்பாது கணை எழுதும் ஆற்றலை உடையவராயிருக்கின்றார்.

"காந்தன் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்கு அமை மென்தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுது எழலால் தம்மையரும்
தாம்பிழையார் தாம் கொடுத்த தோல்."
- (குறிஞ்சிக்கலி 3:15-18)

உன் தந்தையோடு தமையன்மார் எல்லோரும் உன்னை அப்போதுவனுக்கு மணம் செய்துதர முடிவு செய்துவிட்டனர் .

".... திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கு என நின்னைஅப்
பொய்யில் பொதுவற்க்கு ஆடை சூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு" - (முல்லைக்கலி 3: 33-35)

இப்பாடலின் மூலம் மனை நிர்வாகத்தில் பெண்கள் புதல்வரைப் பெறுதலைப் பெரும் கடமையாக ஏற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. பெண்களைச் சுற்றிய உறவுநிலையைப் புலப்படுத்துவனவகவே உள்ளன.

புதல்வர வளர்த்தல்

மனை நிர்வாகத்தில் புதல்வரைப் பெறுதல் மட்டுமின்றி, அவர்களை வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

"மழலை கேட்டல்" - (கலி. 80: 14-15)
"அக்புளி காட்டல்" - (கலி 80: 14-15)
"உணவு ஊட்டல்" - (அகம், 54: 17-18 புறம்.250: -8)
"அச்சுறுத்தி அழவைத்தல்" - (புறம் 160)
"பாலூட்டல்" - (நற் 355:424)
"அழுகையை கோல் கொண்டு அச்சுறுத்தல்"
- (கலி. 82: 24-25)

இச்செயல்களின் மூலம் குழந்தைகளை வளர்ப்பதற்குப் பெண்கள் ஆற்றியுள்ள பங்கு தெற்றெனப் புலப்படுகிறது.

கணவரைப் பேணல்

சங்க இலக்கியம் காட்டும் குடும்பப் பெண்கள் தமக்கென வாழா நிலையுடையவராகக் காணப்படுகின்றனர். "மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிர்" என்பது ஒரு கோட்பாடாகவே பெண்கள் வழியில் காணப்படுகிறது. அகம் புறம் எனும் இருநிலை வாழ்வுகளிலும் இக்கோட்பாடு கணவரைப் பேணலில் தெற்றெனப் புலப்படுகின்றது.

கணவனுக்கு உணவு பரிமாறுதல்

விருந்தினர் தம் சுற்றத்தோடு உண்டு எஞ்சிய அடிசிலை நான் உண்ணுதலும் உரியது என்று கணவனின் கூற்றாக அமையும் செய்தி குறிஞ்சிப்பாட்டில் காணப்படுகின்றது.

கணவன் இனிது உண்ணலில் மகிழும் நிலையை குறுந்தொகையில் காட்சிப்படுத்தப்படுகிறது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்புகை கமழத்
தாந்துழந்து அட்ட தீம்புழிக் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று உண்ணுதலே முகனே"
- (குறுந். மூல 167)

இங்கு கணவனுக்கு உணவு பரிமாறும் பணி பெண்ணினுடையது என்பது உறுதியாகின்றது. எஞ்சிய அடிசிலை இருவரும் பகுத்து உண்டதாகவும் செய்தி இல்லை. முதலில் கணவனுக்குப் பரிமாறுதலும் அவன் நலம் பெனலாகவே உள்ளது. கணவனை முதன்மைபடுத்துதல், உணவிட்டுப் பேணல் என்ற கருத்துக்கள் கணவனுக்கு உணவிட்டுப் பேணி அவனை முதன்மைப்படுத்தி விழையும் பெண்டிரின் உள்ளக்கிடக்கையை உறுதி செய்கிறது .

விருந்தோம்பல்

சமுதாயத்தில் இனக்குழு வாழ்க்கையை மாறத் தொடங்கிய நிலையில் பெண் இல்லப் பொறுப்பை ஏற்கும் முறை உருவாகியது. இந்நிலையில் விருந்தோம்பலில் பெண்ணின் இடம் பெரும்பான்மையை அமைய வாய்ப்பு உருவாகியது.

"எயிற்றியர் கட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனி சில்வளை ஆயமொடு
ஆமன் சூட்டின்அமைவரப் பெறுகுவிர்" - (சிறுபான் 175-177)
"மருத நிலத்தில் கை ஓயாது சமையலில் ஈடுபடல்"
- (மருதகலி 6: 11-12)

பரவைப்பெயர் பெற்ற நெஞ்சோறறும் வெண்ணலில் வேக வைத்த மாதுளங் காயும், பார்ப்பனப் பெண்டிரால் சமைக்கப்பட்டது (பெரும 302-310). புகை பிடிதலால் அமர்ந்த கண்களையும், நுதல் வியர்தலையும் உடையவளான தலைவி (நற் 120) வருகின்ற விருந்தினரை உபசரித்தலால் கை ஒழியாமை (நற் 280: 9-10) ஆகிய செய்திகள் காணப்படுகின்றன.

நெய்தல் நிலத்தில் மகளிர் சமைத்து விருந்தினரைப் பாதுகாக்கும்படி முற்றத்தில் இட்ட சோறு என்ற செய்தி நற்றிணை 254வது பாடலில் காணப்படுகிறது.

பாலை நிலத்தில் மகளிர் இரவில் வந்த விருந்தினர் உன்ன வேண்டி நெற்றியில் வியர்வை தோன்ற நெல்லை விட்டுச் சமைத்த 'கொழுவிய தசை' என்ற செய்தி நற்றிணையில் மட்டும் பெண்ணின் சமைதலுக்குச் சான்றாகிறது.

இல்லத் தலைவி தானே விருந்து தருதல்

உழவ மகள் விருந்தினரைத் தம் மக்களால் தடுத்து அரிசிச் சோற்றை நண்டின் கலவையோடு தருதல். பரத்தை வீட்டில் புளிப்பேறிய கள் தருதல். மீனுக்கு விலையாகிய வெண்ணல்லின் மாவினைத் தயிரிட்டுப் பிசைந்த கூழ் தருதல். பெண்கள் வந்த விருந்தினரை எதிர் சென்று வரவேற்றல். தலைவன் வேய்ந்த வீடு தொழிலோடு சென்றனன். வீட்டில் தினை உணவு, புறா, இதல், பறவை, கட்ட முயலிறைச்சி ஆகியவற்றைத் தருகிறோம். முதுவாய்ப் பாணனே இருந்து உண்க என்று சிறுபானற்றுப்படை கூறுகிறது.

மனை நிர்வாகத்தில் பெண்களே இல்லப் பணிகளைச் செய்பவராகவும், காப்பவராகவும் சங்ககால மகளிர் சிறந்து காணப்படுகின்றனர்.

திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயில் - ஓர் ஆய்வு

ப. ரஞ்சனி, முனைவர் பட்ட ஆய்வாளர் – வரலாறு, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (த), தஞ்சாவூர் – 07.

முன்னுரை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோண வட்டம் கும்பகோணத்திலிருந்து 7 மைல் தொலைவிலும், நாச்சியார் கோவிலிருந்து 3 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து திருவாரூர், குடவாசல் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகள் "திருச்சேறை வழியாக சென்றடைகின்றன."

ஊர்ப் பெயர் காரணம்

இவ்வூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்-சாரநாதன், தாயார்-சாரநாயகி, விமானம்-சாரவிமானம், தீர்த்தம்-சாரதீர்த்தம், நிலம்-சாரஷேத்திரம், இந்த ஐந்து அங்கங்களும் ஒருசேர அமைந்திருப்பதால் இப்பகுதி 'திருச்சேறை' என வழங்கப்பெறுகிறது. வடமொழியில் இப்பகுதியைப் 'பஞ்சசாரஷேத்திரம்' எனப் போற்றுவர்.[1]

மேலும் புராண வரலாற்றில் உலகம் அழியக்கூடிய பிரளய காலத்தில் வேதங்களையும், சாஸ்திரங்களையும், ஆகமங்களையும், ஜீவாத்மாக்களையும் உற்பத்தி செய்யகூடிய ஜீவ உற்பத்தி விதைகளையும் அழியாமல் பாதுகாத்துவைப்பதற்கு எம்பெருமானின் ஆணையின்படி பிரம்மதேவன் ஒரு மண்ணால் ஆன பாத்திரமாகிய குடத்தை செய்வதற்காக பல புனித தலங்களிலும் மண்ணை எடுத்து செய்து பார்த்தான்.

மண்ணால் செய்யப்படும் மட்கலங்கள் உடைந்து போய் கொண்டிருந்தன. வியாச மகரிஷி, பராசரா மகரிஷி போன்ற ஞானிகள் தவம் செய்து புனிதம் பெற்ற இத்தலத்து மண்ணால் செய்யப்பெற்ற மட்கலம் உடையாமல் உறுதியாக இருந்தது. பிறகு பிரம்ம தேவன் அழிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டிய வேதங்கள். ஜீவ உற்பத்தி விதைகள் ஆகியவற்றை இம்மட்கலத்தில் பாதுகாத்து வைத்தான். பிரளய காலத்திலும் அழிக்கப்படாத ஞான புனித பூமியின் மண் இத்தலத்தில் கிடைக்கப்பெற்று குடம் செய்ததால் குடத்தோடு வாசல் குடவாசல் என்றும் குடத்தோட கோணம் கும்பகோணம் என்றும், நடுமத்தியில் சேற்றை எடுத்து குடம் பண்ணியதால் 'திருச்சேற்றை' என இவ்வூர் வழங்கப்படலாயிற்று.

இவ்வூர் ஆற்றூர் ஆறை என மருவி வழங்குதல் போல சேற்றூர் என்ற பெயர் மருவி சேறை என வழங்கப்படுகிறது. தேவாரத்தில் இத்தலத்தை வளநகர் என்றும் திருமங்கையாழ்வர் திருச்சேறை என்றும் குறிப்பிடப்படுகின்றன.[2]

ஊரின் சிறப்பு

சோழநாட்டிலுள்ள பாடல் பெற்ற வைணவத் திருப்பதியாக திருச்சேறை விளங்குகிறது. சோழநாட்டு 40 திவ்விய தேசங்களில் இத்தலம் 12 ஆவதாகப் போற்றப்படுகிறது

108 திவ்ய ஸ்தலங்களில் இத்தலத்தில் மட்டும் தான் 5 தேவியருடன் இறைவன் காட்சியளிக்கிறார். கையில் தாமரை புஷ்பம் ஏந்திய திருமால் வேறு எந்த 108 திருப்பதிகளிலும் இல்லை.

இக்கோயிலின் தலவராறு

விஜயநகர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப்பிறகு தஞ்சாவூரை அழகிய மணவாள நாயக்க மன்னன் ஆண்டு வந்தான். அவன் ராஜ கோபாலனிடத்தில் பக்தி கொண்டவன் அதனால் இராஜ மன்னார்குடியில் ராஜகோபாலனுக்குக் கோயில் கட்ட தீர்மானித்து பணியைத் துவக்கினான். இக்கோயில் கட்டி முடிக்கும் பொறுப்பை அரசன் நரசபூபாலன் (நல்லவாணன்) என்ற அமைச்சனிடம் ஒப்படைத்தான். இவன் சாரநாதனிடம் பக்தி கொண்டவன் ஆதலால் இக்கோயில் கட்டுவதற்குள் திருச்சேறையில் சாரநாதபெருமாள் கோயிலைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டான்.

மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் கட்டுவதற்கான கற்கள் தஞ்சாவூரில் கிடைக்கவில்லை. அதனால் வடக்கே நெடுந்தொலைவு சென்று கற்களை கொண்டு வர ஏற்பாடு செய்தான். அவ்வாறு அங்கிருந்து வரும் கற்கள் திருச்சேறை வழியாகத் தான் செல்ல வேண்டும். இதனைப் பயன்படுத்திக்கொண்ட அமைச்சர் மன்னார்குடிக்கு கோயில் கட்டச் செல்லும் கற்களில் வண்டி ஒன்றுக்கு ஒரு கல்லை மட்டும் திருச்சேறையில் இறக்கிவிட்டு செல்லுமாறு கட்டளையிட்டான். அவ்வாறே வண்டிக்காரர்களும் அமைச்சரின் கட்டளைப்படி இறக்கிவிட்டு சென்றனர்.

ஒற்றர்கள் நாயக்க மன்னரிடம் மன்னார்குடியில் கட்டப்படவேண்டிய கற்களைக் கொண்டு திருச்சேறையில் அமைச்சர் தன் விருப்பப்படி சாரநாத கோயிலைக் கட்டிக்கொண்டிருப்பதாக தெரிவித்தார்கள். மன்னனுக்கு அமைச்சர் மீது கோபம் இருந்தாலும் உண்மையை நேரில் கண்டு அறியலாம் என்று நினைத்துப் புறப்பட்டான்.

மன்னர் வரப்போகிற செய்தியை அறிந்த அமைச்சர் நரசபூபாலன் இரவோடு இரவாக திருச்சேறையில சாரநாதர் கோவிலை அமைத்து, நாயக்க மன்னனின் வழிபாட்டுத் தெய்வமாகிய ராஜகோபால சுவாமியையும் தாயாரையும் பிரதிஷ்டை செய்து வைத்து விட்டான். அதன்பின் மன்னன் வந்து பார்த்தபோது தாம் விரும்பிய ராஜகோபாலனுக்கு கோயில் கட்டப்பட்டிருப்பது தெரிந்தது. அமைச்சரும் ராஜகோபாலனுக்கு கோயில் கட்டத்தான் இத்தனை சிரமம் மேற்கொண்டுள்ளான் என்று நினைத்து மகிழ்ந்து கோயில் கட்டும் செலவு முழுவதையும் தானே கொடுத்து திருப்பணியைப் பூர்த்தி செய்தான். இவ்வாறு ராஜகோபாலனை முன் நிறுத்தி சாரநாதர் கோயில் கட்டப்பட்டது[3].

இலக்கியமும் கல்வெட்டுச் செய்தியும்

சாரநாத பெருமாள் திருக்கோயிலில் திருமங்கையாழ்வார் 13 பாசுரங்கள் பாடியுள்ளார். இவர் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைப்பற்றியும், இறைவனது சிறப்பு பற்றியும் பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார்

இவர் சோழ நாட்டில் திருக்குறையலூரில் கள்ளர் குளத்தில் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியவர். இவருடைய இயற்பெயர் நீலம் என்பதாகும். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்[4].

திருமங்கையாழ்வார் பாடிய பாசுரங்கள்

பெரிய திருமொழி (948 – 2031) 1084
திரு குறுந்தாண்டகம் (2032 – 2051) 20
திரு நெடுதாண்டகம் (2052 – 2081) 30
சிறிய திருமடல் 1
பெரிய திருமடல் 1
திரு எழு கூற்றிருக்கை (2672)

இதில் திருமங்கையாழ்வார் திருச்சேறை சாரநாத பெருமாள் கோயிலில் பாடிய 13 பாசுரங்கள் பெரிய திருமொழியில் இடம் பெற்றுள்ளன. அவை

'கண் சோர வெங்குருதி வந்திழிய
வேந்தழல் போல கூந்தலானவை
முன்சேர முலையுண்ட மாமதலாய்
வானவர்தம் இளந்திங்கள் அகடுரிஞ்சு
மணிமாட மலவ்கு செல்வத்
தண்சேறை எம்பெருமாள் தான்தொழுவார்
காண்மின் என் தலை மேலாரே'

என்ற பாமாலையில் திருமங்கையாழ்வார் எம்பெருமான் குழந்தையாக எழுந்தருளிய திருவிளையாடலை நினைத்து இன்புறுகின்றார். எம்பெருமானுடைய திருவடிகளை தினந்தோறும் சிந்திக்கின்ற பாகவதர்கள் தன் தலை மேல்வீற்றிருக்கக் கூடிய பெருமை வாய்ந்தவர்கள் என்று போற்றுவதை இப்பாமாலையில் காணலாம்.[5]

கல்வெட்டுச் செய்திகள்

கருவறை முன்புறம் வாயிற்படி முன்பு தலத்திலுள்ள கல்வெட்டு சோழ மன்னன் பரகேசரிவர்மனின் 10 ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது. இது தமிழ் மொழியிலுள்ள கல்வெட்டு.

நந்தா விளக்கு எரிக்க 90 ஆடுகள் தானம் கொடுத்து தஞ்சாவூர் அரண்மனை வேளத்தில் பணிபுரியும் பாளுரன் பொற்றாமரை என்பார் இடையன் வெண்ணி வண்ணக்கன் மூலம் திருக்கோயில் பெருமாளுக்கு விளக்கொன்று எரிக்க 96 ஆடு அளித்தது பற்றி இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது,

இரண்டாவது கல்வெட்டு

இரண்டாவது கல்வெட்டில் சோழ மன்னன் பரகேசரி வர்மனின் 10-வது ஆட்சி ஆண்டில் தமிழ்மொழிக் கல்வெட்டானது "மொய்யில் கூற்றத்துக் கீரமங்களத்துக் கீரமங்கள உடையான் என்பான் இடையன் வண்ணக்கன் இடையன் சாத்தான் காடன் ஆகிய இருவர் வழி விளக்கொன்று எரிக்க தானம் அளித்ததை" பற்றி குறிப்பிடுகின்றது.

மூன்றாவது கல்வெட்டு

மூலவர் கருவறையின் தெற்குப்பகுதி குமுதத்தில் காணப்பெறும் கல்வெட்டு சகாப்தம் 1566 தாரண வருசம் கார்த்திகை 17-ஆம் நாள் சனிக்கிழமை ரோகினி நாளில் சாரநாத சுவாமிக்கு விஜய ராகவ பூபாலனின் புண்ணியமாக கோவிந்ததாசன் அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கிறது. இது கி.பி.1644-ஆம் ஆண்டு எழுதப்பட்ட சாசனம் ஆகும். இக்கோயிலின் முன்மண்டபத்தை விஜய ராகவனுக்காக அவரது அமைச்சர் கோவிந்ததாசன் கட்டி வைத்தார். இதனை இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.[6]

முன்மண்டபத்தைப் புதுப்பித்த விஜயராகவ அமைச்சர் நல்லவாணன் படிமம் இங்கு உள்ளது. இதில் நல்லவாணன் சதாசேவை என்ற பெயரில் கல்வெட்டு எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் விஜயராகவ நாயக்கரின் உருவச் சிலைகளும் கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

இத்திருக்கோயில் மகா மண்டப தூண்களில் இரகுநாதன், விஜயராகவன் அவரது தேவி, அமைச்சர் நல்லவாணன் ஆகியோருடைய படிமங்கள் அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இத்திருக்கோயில் கல்வெட்டுக்கள் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டுகளை சேர்ந்ததாக தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வு துறையினால் வெளியிடப்பட்டுள்ள 'குடந்தை கல்வெட்டுக்கள்' என்ற நூலில் நெய்தீபம் ஏற்றுவதற்காக ஆடுகள் வழங்கியதையும் மானியங்கள் ஒதுக்கப்பட்டவை பற்றியும் தெரிவிக்கின்றன[7].

முடிவுரை

இக்கட்டுரையில் மூலம் திருச்சேறை பற்றிய செய்திகளையும் திருத்தலத்தின் செய்திகளையும் மற்றும் இலக்கியம் கல்வெட்டு மற்றும் இத்தலத்தின் சிறப்பு செய்திகளையும் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. இக்கோயில் கட்டடக்கலைகள், சிற்பக்கலைகள் சோழர்காலம் முதல் நாயக்கர்கள் காலம் வரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

1. டாக்டர் ஆர். இராமானுஜம் - 108 ஸ்ரீவைஷ்ணவ, திவ்ய தேசங்கள் தமிழ் பல்கலைக்கழகம் பதிப்பு 1993.
2. டாக்டர் கு.பாலுசாமி - இரா. பா. முதன்மை பதிப்பாசிரியர் தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
3. ரிஷபானந்தர் - சிறப்பு பெற்ற வைணவ தலங்கள் ப.எண்: 107
4. திருமங்கையாழ்வார், - திருக்குருந்தாண்டவம் ப.எண்: 19.
5. திரு. கே.பாலசுப்ரமணியம் - நலம் தரும் தமிழ்நாட்டுத் திருக்கோவில்கள் (2-ஆம் பகுதி) பதிப்பு 1998 தமிழ் பல்கலைக்கழகம்.
6. குடவாயில் பாலசுப்பிரமணியம்- தஞ்சை நாயக்கர் வரலாறு சரஸ்வதி மஹால் தஞ்சாவூர், பதிப்பு 1999.
7. முன்னர் குறிப்பிட்ட நூல் - ப. எண் 121

சங்க இலக்கியத்தில் பெண்ணியம்

மா.ராகுல்காந்தி, ஆய்வியல் நிறைஞர், இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைகழகம், தஞ்சாவூர்

உலக அரங்கில் செம்மொழித் தமிழின் தகுதியை, பெருமையை உணர்த்திய செவ்வியல் இலக்கியம் சங்க இலக்கியமாகும். உள்ளுரை இறைச்சிகளால் மாண்புறும் அகப்பாடல், வீரத்தையும் ஈரத்தையும் பெருமைப்படுத்தும் புறப்பாடல் எனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனியிடமும் தனிபெருமையும் கொண்டது. சங்கத் தமிழரின் தம் முன்னோரின் வாழ்வியலை அதன் இயல்பு நிலையில் அறிந்து கொள்ள துணைநிற்கும் ஓரே சான்றாகவும் அமைவது முதலான பல பெருமைகளுக்குரியது. சங்க இலக்கியம் படிக்கப் படிக்க புதுக்கருத்துக்களை அள்ளி அள்ளித் தருவது அது. அதனுள் இன்றைய திறனாய்வுப் பார்வையான பெண்ணியத்தின் வாயிலாக பெற்ற எண்ணங்கள் இங்கு உணர்த்தப்படுகின்றன.

பெண்ணியம்

பொருளாதாரம், சமூக உரிமைகள், தொழில், இனம், பிறப்பு, எனப் பல சூழல்களிலும் அமைந்த ஏற்றத்தாழ்வுகள் "ஆண்டான் அடிமை" எனும் சமூகத்தில் ஆழமாக வேருன்றியுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டோர் மனிதம் எனும் மாண்பினைப் பெறவியலாதவாறு, புறக்கணிக்கப்பட்டனர். பெண்னை விட ஆணை உயர்வாகக் கருதிச் சிறப்பிக்கும் சமத்துவமின்மை: சமூக மதிப்பீட்டில் பின்தங்கிய நிலை எனப் பொதுவாக இன்றமைந்துள்ள பெண்நிலை சமூக சிந்தனையாளரிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உண்மையான சமுதாய முன்னேற்றம் என்பது சமய, இன, பால் வேறுபாடுகளின்றி மானிடராய்ப் பிறந்த அனைவரையும் சமமாகக் கருதும் பொழுதுதான் என்பதை ஆன்றோரும் ஆள்வோரும் உணர்ந்துள்ளனர். இச்சமநிலை நோக்கிய நீண்ட கடும் பயணத்தில் பெண்களிடையே விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தல் முதன்மையாகிறது. பெண் முன்னேற்றத்தை, விடுதலையை வேண்டுதல், அதற்காகச் செயற்படுதல் என்பன பெண்ணியத்தின் பாற்படுகின்றன. எனவே பெண்ணியம் என்பது பெண் மேம்பாடு பற்றிய சிந்தனை என்பது மட்டுமின்றி அதனைச் செயற்படுத்தும் இயக்கமாகவும் அமைகிறது.

சங்க இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை

இன்றைய திறனாய்வியல் வளர்ச்சியின் ஒரு கூறான பெண்ணியக் கோட்பாட்டினை ஏறக்குறைய 2500 முதல் 2000 ஆண்டுகள் வரை முற்பட்ட சங்ககால இலக்கியத்துள் அறிய முற்படுதல் ஏற்புடையதாகுமா என்ற வினா எழுதல் இயல்பே. பெண்ணியம் என்பது வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டது. மானிடப் பண்பாட்டினை, அதன் நாகரிக வளர்ச்சியை அளவிடற்குரிய காரணிகளுள் பெண் பற்றிய கருத்தாக்கங்களும் ஒன்றாகும். 'சமூகத்தில் ஆணுக்கு இணையான மதிப்பும் உரிமையும் பெறுவது அடிப்படை இலக்கு: தாழ்ந்து கிடக்கும் பெண்ணினத்துக்கு விழிப்பூட்டி, தன்னிலையறிந்து உயரச் செய்வது முதற்பணி: ஆண் பெண் சமத்துவமின்மைக்கான காரணங்களை அறிந்து அவற்றை அழித்தலும் கல்வி மற்றும் பொருளாதர விடுதலையையும் இவற்றிற்கான வழிமுறைகள்' எனும் பெண்ணியத்தின் பொதுவான வரையரைக் கருத்தை ஏற்றுக்கொண்டால் இவ்வணுகுமுறையின் தேவை வெளிப்படையாகும்.

பெண்மை விளக்கம்

ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய பண்புகளாகவும் ஆற்ற வேண்டிய கடமைகளாகவும் சங்கச் சமூகமும் கருதியவற்றை அது பெண்மைக்கு அளித்த விளக்கமாகவும், பெண்மை பற்றிய கோட்பாடாகவும் கொள்ளலாம்.

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கை - (அகம் 225)

உடையவளாய் இருத்தல் வேண்டப்படும் பண்பாகிறது. பெண்மை சான்று, பெருமடம் நிலைபெற இறைக்கற்பு கொள்ளுதல் (பதி 70:14.15) இன்றியமையாததாகும்.

பெண்ணுக்குக் கணவனே அன்னையும் அத்தனுமாய்
- (குறுந் 93.3)

கணவனுக்காக மட்டும் தன்னை அணி செய்து கொண்டு அவனது நலத்திற்காக வழிபட்டு தன்னையே மாற்றிக்கொள்ளுதல் பெண்களின் குணம்.

பெண் எப்படி ஆணாதிக்கத்திற்கு ஆட்பட்டாள் என்பதற்கான விடையை இதில் காணலாம். இயற்கையாய் அமைந்த பெண்ணின் உடல் மென்மை அவள் உள்ளத்திற்கு ஏற்றியுரைக்கப்பட்டது: மென்மை எதிர்ப்புணர்வை அடக்கி அன்பையும் இனிமையையும் வலியுறுத்தியது: இதனால் அறிவு மழுங்கி மடமை உட்புகுந்தது: மடமை தனக்குத் துணையாக அச்சத்தை அழைத்துக் கொண்டது. இவற்றால் நாணம் இயல்பானது: கற்பு வேலியாயிற்று: ஆணாதிக்கம் தோன்றவும் ஆழ வேரூன்றவும் 'அன்பு, மடம், மென்மை, அழகு ஆகியவற்றுடன் கற்பிற்கு முதலிடம் தருபவள் பெண்' எனும் சங்ககாலப் பெண் பற்றிய இக்கோட்பாடே இடனாயிற்று.

பெண்மையைப் போற்றல்

சங்கச் சமூகமும் ஆணாதிக்கச் சமூகமாகவே அமையினும் பெண்களுக்கும் சில சிறப்புகள் இருந்ததை அறிய முடிகிறது. அவற்றைப் பெண்மைப் போற்றுதலாகக் கருதலாம்.

பெண் மகவு மிக்க விருப்புடன் ஏற்றுக் கொள்ளப் பட்டத்தை 'மலை உறை குறவன் காதல் மடகள்' (நற் 201 :1) என்பதால் அறியலாம்.

குறிப்பிட்ட பருவம் வரை பெண்டிர் எவ்விதக் கட்டுப்பபாடுமின்றி விருப்பம் போல் ஆடிக்களித்துள்ளனர். நீராடல், மலைவளம், சோலைவளம் காணல் முதலானவற்றில் ஆடவருக்குச் சமமாக மட்டுமின்றி இணைந்தும் இன்பம் துய்த்துள்ளனர். (பரி10)

திருமணமான பின்பும் இல்லத்திலுள்ளே முடங்கிக்கிடக்காது. புறத்தே வந்து வெளியுலகக் களியாட்டத்தில் ஆடவரோடு சமமாகப் பெண்கள் பங்கேற்றதை

நறவு நாள் செய்த குறவர் தம் பெண்டிரோடு
மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை அயரும் குரவை - (மது 320-322)

எனும் குறிப்பு காட்டுகிறது.

நிறைவுரை

சங்கப் புலவரில் ஏறக்குறைய 45 பெண்பாற் புலவரை (ஆடவர் 428, மகடூஉ (முன்னிலை, தாயம்மாள் அறவாணன்) அறிய முடிகிறது. இது பெண் கல்வி அன்று ஓரளவு சிறப்புற்றிருந்ததைக் காட்டுகிறது. பெண்டிரின் வழிபாடும் நோன்பும் உணவும் துணைவனை சுற்றியே அமைகின்றன.

தலைவியை ஒத்த சிறப்பில் தோழி வாழ்ந்திருந்தாலும் தோழி செவிலியாகியப் பின் அவள் மகள் தோழி, செவிலி எனத் தொடர்ந்த மரபு 'கொத்தடிமைக்கு வித்தோ' என்ற அச்சத்தை தருகிறது.

ஔவையின் அதியமான் தூது. அதன் பொருண்மை நோக்க பாடல் உத்தியாகவே கருதச் செய்கிறது. சுருங்கக் கூறின் பெண்டிர் மென்மையானவர், மக்கட் பேற்றிற்கு இன்றியமையாதவர், ஆடவனின் அன்புக்குரியவர், அறியாமை கொண்வர். பொறுமை நிறைந்தவர் எனும் கணிப்பில் அவரைப் பாதுகாத்தலைத் தனது பொருப்பாகக் கருதினர் ஆடவர். எனவே அன்பாலும் பரிவாலும் பெண்டிரைத் தம் ஆளுகைக்குட்படுத்தினர். அதன் நிலை பேற்றிற்காகக் கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் வரையறுத்தனர்.

பெண்ணை ஆளுபவனாக ஆண் இருப்பினும் அதில் பெண்ணுக்கு ஓரளவு மதிப்பும் மரியாதையும் அன்று சங்கச் சமூகத்தில் அளித்துள்ளான். ஒரு பருந்துப் பார்வையை தமிழ்ச் சமூதாய வரலாற்றில் படரவிடும் பொழுது பெண்ணுக்கு தரும் மதிப்பும் விதிக்கும் கட்டுப்பாடுகளும் காலந்தோறும் மாற்றம், தளர்வு இறுக்கம் என வேறுபாடு கொள்கின்றன. ஆனால் ஆணின் தலைமைப் பொருப்பில் மட்டும் மாற்றம் இல்லை.

பெண்களுக்காக வாதிட்ட பெண் திலகங்கள் (19 – ஆம் நூற்றாண்டு)

சீ.ராணி, முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முன்னுரை

Feminism என்ற ஆங்கிலச் சொல் பெண்ணியம் என்ற தமிழ்ச் சொல்லை விளங்கும் சொல்லாம். **'Femina'** என்பது 1889-ஆம் ஆண்டு வரை **'Womanism'** என்ற சொல் பெண்களின் உரிமைச் பிரச்சனையும் அதன் அடிப்படையான போராட்டங்களையும் உணர்த்தியது. இந்நிலையிலிருந்து பெண்களின் உரிமை பெற போராடிய பெண்ணிய வாதிக்கான உரிமைகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழைய காலத்தில் அடிக்கடி எங்கும் போர்கள் நிகழ்ந்து வந்தன. தொலை தூரம் போய் வருவது என்பது ஓர் ஆபத்தான முயற்சியாக இருந்தது. பாதுகாப்பான சாலைகள் குறைவு வழியிடையிலும் ஊர் ஆபத்துக்கள் அதிகம் ஆண்கள் கூட்டம் கூட்டமாகப் போகும் பாதுகாப்பான வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இத்தகைய முயற்சிகளில் பெண்கள் ஈடுபடுவது என்பது இயலாததாயிற்று. குடும்பத்தின் வழி முறையைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஆண்களுக்கு இருந்தது. இதனால் வெளியேயுள்ள வேலைகளை எல்லாம் ஆண்களே மேற்கொண்டனர்.

பெண்கள் மென்மைத் தன்மையினர். ஆண்களால் பாதுகாத்தலுக்கு உரியவர் என்ற கருத்தும் சமுதாய மரபாயிற்று. இந்த மரபுக்குத் தகுந்த ஒழுக்க விதிகளையும் உருவாக்கிக் காத்துவந்தனர். ஆண்களின் ஆதிக்கம் எல்லா வகையிலும் மேலோங்கியிருந்தது. தகப்பனுக்கு பின் மகன் அந்த குடியின் வழிமுறையாவான். சொத்துகளுக்கும் குடிப் பெருமைக்கும் உரியவனாவான் பெண்ணோ மற்றொருவனை மணந்து அவன் குடும்பத்திற்கு உரியவளாகப் போய்விடுவாள். பெண்கள் ஆண்களைப் போலச் சம உரிமை பெறுவதற்கு உரியவர்கள் என்ற எண்ணமே சமுதாயத்தில் காணப்படவில்லை. ஓர் ஆண் பெறுகின்ற பல செல்வத்தினுள் சிறந்த ஒரு செல்வமாகவே மனைவி கருதப்பட்டாள் எல்லா நாடுகளிலும் இதுதான் பொது நிலைமையாக விளங்கியுள்ளது.

நம் நாட்டில் நிலவிய நிலைமையும் இது தான் ஒரே விலைக்குக் கூடப் பெண்களுக்குத் தருகின்ற கூலி ஆண்டுகளுக்குத் தருவதை விடக் குறைவுதான் ஆண் ஒரு நாளைக்கு ஒரு படி நெல் கூலியாகப் பெற்றால் பெண் அரைப்படித்தான் கூலி பெருவாள் இதுதான் கிராம புரங்களில் நிலவி வரும் வலக்கம் இந்நிலையில் முதன் முதலில் பெண்களுக்கு பாதகமான ஆங்கில நாட்டு சட்டங்கள் எல்லாம் மாற்றப்பட வேண்டும் என்று முழங்கிப் போராடியவர் கரோலின் நார்ட்டன் (1808 - 1877) என்னும் பெண்மணியே ஆவார்,

இவர் புகழ்ப்பெற்ற நாடகங்களை உருவாக்கிய மேதை ஹெரிடனின் பேத்தி இவர் தம் கணவனைக் காட்டிலும் அறிவுத்திறனில் மிகவும் உயர்ந்து விளங்கியவர் அந்த சிறப்பைப் பலமுறை வெளிப்படுத்தியும் வந்துள்ளார் பத்திரிகைகளில் லண்டனில் உள்ள கணவன் மார்களின் மனப்பாங்குகள் பற்றிச் சிறுக் கட்டுரைகளும் எழுதி வந்தார்.

தன்னுடைய அறிவாற்றலால் உறுதியான மனப்போக்குடைய கரோலின் அந்தக் காலக் கணவனான நார்ட்டனால். சரிசெய்துக் கொண்டு போக முடியுமா? மன கசப்பு வளர்ந்தது. திருமண வாழ்க்கையும் முடிந்தது. கரோலின் தன் குழந்தைகளை

தன்னிடமே ஒப்படைக்குமாறு கேட்டாள் கணவன் மறுத்தார் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது பிரிந்த மனைவிக்கு கணவனிடம் இருந்து குழந்தைகளைப் பெற உரிமை இல்லை குழந்தைகளின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் தந்தையே பொறுப்பானவர், உரிமையுடையவர் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஆண்கள் பக்கம் சார்பான இந்த சட்ட முடிவை எதிர்த்து கரோலின் குறல் எழுப்பினார். அந்த நகரில் உள்ள ஆண்களை மட்டுமே இவரை எதிர்க்கவில்லை. பெண்கள் கூட இப்படி கேட்பது அறியாமையென்று தான் நினைத்தனர். ஆனால் கரோலின் தன்னுடை எதிர்ப்பை வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

சட்டங்கள் ஆண்களுக்கு சாதகமாகி இருந்தது

நாட்டின் சட்டங்கள் ஆண்களுக்கு சாதகமாகவே பெரும்பாலும் அமைந்தன. ஆண்களே ஆட்சிப்பொறுப்பின் பல முதன்மையான பொறுப்பிலும் இருப்பவர்கள். பெண்களை தங்களுக்கு சமமான நிலையில் என்னுவதற்கு கூட இவர்களால் முடியாத நிலைக் காணப்பட்டது. இன்றைக்கு உலக நிலையும் இதுதான். இந்த மனப்போக்கின் அதிரடி காரணமாக தான் பெண்கள் வேலைக்குப் போய் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எலிசபெத் பிளாக்வெல் (1821 – 1910) என்பவர் தாம் உலகிலேயே முதன் முதலாக அரசின் அங்கீகாரம் பெற்ற பெண் மருத்துவர் ஆவார். இதற்கு முன் மருத்துவ துறையிலேயே பெண்கள் யாரும் இருந்ததில்லை என்பது குறிப்பிடதக்கதாகும்.

இவர் மருத்துவத் துறையில் ஆண்களின் ஆதிக்கத்தை எதிர்த்து குரல் எழுப்பினார். நியூயார்க்கிலுள்ள ஜெனிவா மருத்துவ கல்லூரியில் படிப்பதற்கு இடம்பெறவே இவர் மிகவும் போராட வேண்டி இருந்தது. இங்கு பெண்களின் நோய்களுக்கும் ஆண்களே மருத்துவம் செய்து வந்தனர் மகப்பேறு பெற்றவர்களையும் அவர்களே கவனித்தனர். இவருக்குப் பின்னரே பெண்களில் பலர் மருத்துவத் துறையில் மருத்துவராகப் பட்டம் பெற தொடங்கினர். இன்றைக்கு உலகில் நிறைய பெண்கள் மருத்துவராக எல்லா நாடுகளிலும் உள்ளனர். இருந்தாலும் ஆண்களை விட இவர்களின் எண்ணிக்கை மிக குறைவு தான் பத்து சதவீதம் கூட இல்லை என்றே கூறலாம்.

சம உரிமை

எலிசபெத் பிளாக்வெல் சமுதாயத்தில் பெண்களின் சம உரிமைக்காகப் போராடினார். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் தமக்கென்று ஒரு தொழிலைத் தேர்ந்து எடுத்துக் கொள்ள உரிமையுண்டு என்றார். ஆண்கள் தங்களை உயர்த்திக் கொள்ளப் பல வழிகளை வகுத்து வாழும் இச்சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் ஏன் அவ்வழிகள் மூடப்பட வேண்டும் என்றார். இவருடைய கருத்து ஒரு பெண் குடும்பத் தலைவி அல்லது வேலை வாய்ப்பு என்னும் இரண்டில் ஒன்றைத் தேர்ந்துதெடுத்து கொள்ள வேண்டும் என்பதேயாகும் இரண்டையும் இவர் வலியுறுத்தவில்லை.

தாதியர் தொழில்

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (1820 – 1910) மிகுந்த உலகப் புகழ்ப்பெற்றவர். இவர் பிளாக்வெல்லின் கருத்தை ஆதரிக்கவில்லை நர்சிங் (செவிலியர்) தொழிலை மதிப்புக்கு உரியதாக உயர்த்தியவர் இவரே நோயாளிகளிடம் அன்புக் காட்டி கவனிக்கும் பணிக்கு பெண்களே தகுந்தவர்கள் என்று இவர் உறுதிப்படுத்தினார். இவர் தாதியர் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளைக் கைவிட்டுவிட வேண்டும் என்று கூறினார். இவருடைய முயற்சியே தாதியர் பயிற்சி பள்ளிகளுக்கு ஆரம்பம் ஆகும். இன்று உலகெங்கும் பல்லாயிர பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வரும் தாதியர் (செவிலியர்) தொழிலுக்கு இவரே முதலில் ஊக்கமளித்தவர் என்றும் பெண்கள் வேலைப் பார்ப்பதை மதிப்புக்குரியதாக உயர்த்தியவர் இவர் என்றும் கூறலாம்.

மருத்துவமனைகளில் தாதியரின் பங்களிப்பு மிகவும் முதன்மையானது என்பதையும் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் இதற்கு வழிகாட்டியவர் இவரே ஆவார்.

பெண் கல்வி

பெண்கள் கல்விக்கு வித்திட்டு பெரும்பாடுபட்டவர். எமிலிடேவிஸ் (1830 – 1921) என்னும் பெருமாட்டியாவார். இவருக்கு முன் பெண்கள் வீட்டு வேலையை கற்றுத் தேர்ந்தால் மற்றும் போதும் ஆண்களைப் போல் கல்வி கற்க வேண்டியதில்லை என்ற எண்ணமே ஆங்கில நாட்டில் நிலவியது பெண்கள் உயர்க் கல்வி பெருவதற்கு ஏற்றதகுதி அமையாதவர்கள் என்ற எண்ணமே அங்கே நிலவியது.

எமிலி ஆண், பெண் என்று வேறுப்படுத்தும் கல்வி விதிமுறைகளை எல்லாம் மிகவும் கடுமையாக எதிர்த்துப் போராடினார். இவருடைய கடுமையான போராட்டத்தின் பயனாகத்தான் பெண்களும் பல்கலைக்கழகத் தேர்வுகளை எழுதலாம் என்ற உரிமை 1863-ல் இங்கிலாந்தில் வந்தது. உலகிலேயே பெண்களுக்கான முதல் கல்லூரியை நிறுவுவதில் பெரிதும் தொடர்புக் கொண்டவரும் இவரே ஆவார்.

இவர் ஆண் பெண்களின் பாலுணர்வு வேறுபாடுகளை மறக்கவில்லை. ஆனால் பெண்களின் உயர்நிலை ஆரோக்கிய வளர்ச்சி அவை தடைக்கல்லாகக் கூடாது என்று தான் இவர் போராடினார். இன்று உலகெங்கும் பெண்கள் கல்லூரிகள் ஏராளமாக உள்ளன. நம் நாட்டிலும் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் என்னற்றவர்கள் உள்ளனர். இவர்களில் பலர் நல்லவேலைகளிலும் இருக்கின்றனர். எமிலிடேவிஸின் போராட்டமே இந்த வளர்ச்சிக்கான மூலக்காரணம் எனலாம்.

பெண் சட்டத்தின்முன் பாரபட்சம்

ஜோசபைன் பட்லர் என்பவர் (1828 – 1900) பெண்கள் சட்டத்தின் முன் பாரபட்சம் காட்டப்படுவதைக் கடுமையாக எதிர்த்து போராடியவர். தொற்று நோய்ச் சட்டத்தின் படி விபசாரத்தில் ஈடுபடும் பெண்கள் கடுமையான சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் உள்ளானார்கள் இவர்களுக்கு மட்டும் ஏன் இந்த இழிவான கொடுமை நேர்ந்தது ஆண்களுக்கு ஏன் எந்தவித சோதனைகள் இல்லை என்று இவர் கேட்டார். இதனால் பல சோதனைகள் இவருக்கு ஏற்பட்டது. முடிவில் அந்தச் சட்டத்தை அரசு கைவிட வேண்டியதாயிற்று ஆண்களுக்கு என்று ஒருவித சட்ட விதிகளும் நல்ல பெண்களுக்கு என்று ஒரு வகையும் கெட்டப் பெண்களுக்கென்று ஒரு வகையும் என்ற விதிமுறைகள் சமூகத்தின் நேர்மைக்கு எதிரானது என்று வலியுறுத்தியவர் இவர் ஆவார்.

பெண்களுக்கு உரிமை

எலிசபெத் காதிஸ்டான்டன் என்பவர் (1850 – 1902) பெண்களுக்கு ஓட்டுரிமை வேண்டும் என்று போராடியவர். மார்க்கர்ரெட்டு சாங்கர் (1879-1916) பெண்களின் பல குரல்களுக்கு புரட்சி குரல் எழுப்பியவர் இவர். திருமணமே பெண்களை அடிமைப்படுத்தும் ஏற்பாடு என்று முழங்கியவர். உடலுறவிலும் கணவன் மனைவிக்குள் சம உரிமை வேண்டும் என்றவர் குழந்தை வேண்டாம் என்றால் கருத்தடை செய்துக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு வேண்டும் என்றவர். இவர் ஆண்களுக்கு எதிராகவே பெண்களின் உரிமைப் போரை நடத்த முயன்றவர். தி.உமன்ரிபெல் என்னும் பத்திரிகையில் இவர் ஆண்கள் ஆதிக்கத்தை எதிர்த்து பல கட்டுரைகளை எழுதினார்.

எம்மர் கோல்டுமென் (1869 – 1940) என்பவர் ரஷ்ய நாட்டு யூத அகதியாக அமெரிக்காவில் சென்று குடியேறியவர். இவர் எல்லாம் வகையிலும் பெண்களுக்கு பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று வலியுறுத்தியவர். இவ்வழக்கில் இருந்த சமூக சமய நம்பிக்கைகளையெல்லாம் வெறுத்துச் சாடியவர். பெண்கள் அடிமைகள் அல்லர். ஆண்களைப் போலவே சம உரிமையுள்ள மனித பகுதியினர் என்று வாதிட்டவர்.

முடிவுரை

பெண்கள் சமூகத்தில் தங்களுக்கென நிலையான இடத்தினைப் பெறுவதற்கு உறுதுணையாக விளங்குவது கல்வியாகும். ஆண்களுக்கு நிகராக தரணியில் மாபெரும் சாதனை புரிந்திட தங்களுக்கு ஏற்பட்ட தோல்விகளையெல்லாம் வெற்றிப்படிக் கட்டுகளாக மாற்றி வாழ்வில் இன்று உன்னத நிலைப் பெற முடியும் என்ற மன உறுதியை பெண்ணியப் போராட்டம் வெளிப்படுத்தி இருக்கிறத. இப் போராட்டத்தின் விளைவாக பெண்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு பெண் விடுதலைக்கென போராட்டம் துவங்கிய நாளான 1908-ஆம் ஆண்டு மார்ச் 8-வது நாள் பெண்கள் தினமாக அறிவிக்கை கூறி பெண்ணியப் போராளி கிளாரா உலக நாடுகள் முன் 1910-ஆம் ஆண்டு கோரிக்கை விடுத்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க அங்ஙனமே உலக நாடுகள் 1911-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள் பெண்கள் தினமாக அனுசரிக்க அங்கீகாரம் அளித்துது. மேற்கண்ட வெற்றி 19-ஆம் நூற்றாண்டுகளில் பெண்களுக்காக வாதிட்ட பெண் திலகங்கள் செய்த போராட்டங்களின் துவக்கமே ஆகும் என்றால் அது மிகையாகாது.

துணை நின்ற நூல்கள்

1. லேனா தமிழ் வானன், *வேலைக்குப்போகும் பெண்களின் பிரச்சனைகளும், தீர்வுகளும்,* மணிமேகலை பிரசுரம், தியாகராய நகர், சென்னை – 600 017.
2. புலவர் கோ. இமயவரம்பன், *வரலாற்றில் பெண் கொடுமைகள்,* பெரியார், சுயமரியாதை பிரச்சார நிறுவனம் வெளியீடு சென்னை – 600 007.
3. *சங்க இலக்கிய ஆய்வுகள்,* உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை –
4. தங்கவேல், கோ. *தமிழ்ச் சமுதாய பண்பாட்டு நிகழ்நிலை வரலாறு,* சென்னை – 600 005

வீரம் நிறைந்த மராட்டியமன்னன் சத்ரபதி சிவாஜி - ஓர் ஆய்வு

ரா.ராஜலெஷ்மி, முனைவர் பட்ட மாணவி, வரலாற்றுத் துறை, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, (தன்னாட்சி), தஞ்சாவூர்.

மராட்டிய எழுச்சி தென்னிந்தியாவில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. டெல்லி சுல்தானியரின் ஆட்சியை எதிர்த்து இந்து தர்மம், சமயம் நிலைக்க தென்னிந்தியாவில் பாடுபட்டு அடித்தளத்தினை அமைத்துக்கொடுத்த முதல் மராட்டிய மன்னன் ஷாஜி பான்ஸ்லே ஆவார்.

மராட்டிய மன்னர்களில் அடுத்த வாரிசு சிவாஜி தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்டார். மராட்டியர்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்த மிகச் சிறந்த வீரன் சிவாஜி. இதனால் மகாராஷ்டிரா மாநிலத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர் மன்னன் சிவாஜி என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அரசியல் நடவடிக்கைகள் நிர்வாகக் கட்டமைப்பு, வலுவான படையமைப்பு மற்றும் சிறந்த ஆட்சியாளனாகவும் இவர் விளங்கினார்.

சிவாஜியின் வரலாறு

சிவாஜி சிவநேர் கோட்டையில் ஷாஜிக்கும் ஜீஜா பாய்க்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார் (1630). அன்னையின் அரவணைப்பிலே இளமைப் பருவத்தினைக் கழித்தாலும் கல்வி முன்னேற்றத்திற்கு தாதாஜி கொண்டதேவ் என்ற அந்தணன் பொறுப்பேற்றுக்கொண்டு ஒரு இந்துவாக உருவாக்கினார். சிவாஜி தந்தையின் இறப்பினைத் தொடர்ந்து ஆட்சிபீடமேறினார். [(1)]

ஆட்சி நிர்வாகம்

மன்னன் சிவாஜியினுடைய ஆட்சிக் காலத்தில் மகாராஷ்டிர அரசு குறிப்பிடத் தக்க வளர்ச்சி நிலையினை அடைந்தது. இவர் சமகாலத்தில் ஆங்கிலேயருக்கும், மொகலாயருக்கும் சவாலாக விளங்கினார். பொதுவாக மராட்டியர்கள் வீரத்தில் சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். பலம்மிக்க பேரரசாகக் காணப்பட்ட மொகலாயர் மீது அடிக்கடித் தாக்குதல்களை நடத்தி ஆட்சியினைப் பலவீனப்படுத்தினார். இவரது ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயரின் வருகை கூடுதலாகக் காணப்பட்டது. அவர்களது ஆட்சியதிகாரத்தை விரும்பாத சிவாஜி ஆங்கிலேயரின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கண்காணித்து அவர்களுக்கு பெரும் சவாலாக விளங்கினார்.

இவர் தைரியசாலியாகவும், துணிவு நிரம்பிய வீரனாகவும் விளங்கியதோடு அயல் நாட்டுக் கொடுங்கோண்மையை ஒழித்துக்கட்டி நம் நாட்டின் விடுதலைக்காக உண்மையாக வாழ்ந்தார். இளமைக் காலப்பயிற்சியும் சூழ்நிலையும் இணைந்து மிகச்சிறந்த மராட்டிய வீரனாகவும் சுதந்திர இராச்சியத்தை உருவாக்கவும் வல்லமையும் பெற்றுத் திகழ்ந்தார்.

படையெடுப்புகள்

சிவாஜி தன்னுடைய ஆட்சிப் பரப்பினை விஸ்தரிப்பதற்காகப் பல போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டாார், அந்த வகையில் பீஜப்பூர் சுல்தான் அடில்சாவின் தோனாக்கோட்டை (1646) இபரந்தா கோட்டை (1647), ஜாவளி (1656) போன்ற இடங்களையும் கைப்பற்றினார். அங்கே பிரதாப்கார் என்ற கோட்டையையும் தன் வழிபாட்டுக் கடவுளான பவானிக்கு ஒரு கோயிலையும் கட்டினார். மேலும், பூனா இசதாரா மாவட்டங்களுடன் பல புதிய இடங்களையும் கைப்பற்றினார் (1659). சூரத்தை கொள்ளையடித்து பெரும் பொருளீட்டினார் (1664), கோவாவின் ஒரு பகுதியை தன்னாட்சியுடன் இணைத்துக்கொண்டார் (1664). இவ்வாறு 1670 இல் மொகலாயரின்

பல பிரதேசங்களை தனது ஆட்சிப் பரப்புடன் இணைத்துக்கொண்டு ஆட்சிப்பரப்பு வடக்கே ராம் நகரிலிருந்து தெற்கே கார்வார் வரையிலும் கிழக்கில் பக்லானாவிலிருந்து மேற்கில் சதாரா கோலாலம்பூர் முதலிய மாவட்டங்களிலும் தனது ஆட்சிப்பரப்பினை விஸ்தரித்திருந்தார். தொடர்ச்சியான போர் நடவடிக்கைகளினால் ஆட்சிப்பரப்பு அடிக்கடி மாறிக் கொண்டேயிருந்தது.

மன்னனே தலைவன்

எனவே 1674 ஆம் ஆண்டு யூன் ஆறாம் திகதி தன்னை ஒரு மகாராஜாவாக மாற்றிக்கொள்ள விரும்பிய சிவாஜி சத்ரபதி மகாராஜா என்ற பட்டத்துடன் முடிசூடிக்கொண்டார். அரசியல் உலகில் துணிச்சலோடு கண்ட பல வெற்றிகளும் சிறந்த நிருவாகக் கட்டமைப்பினையும் ஏற்படுத்திக்கொண்டார்.

மன்னனே முழு அதிகாரம் படைத்தவனாகக் காணப்பட்டான். மன்னருக்கு அறிவுரை கூற எட்டு அமைச்சர்கள் கொண்ட குழு அமைத்தார். அதனை அஷ்டப்பிரதான் என அழைத்தனர்.

1) பிஷ்வா (பிரதம அமைச்சர்)
2) மந்திரி (காலமுறை அமைச்சர்
3) சச்சிவா (உள்துறை அமைச்சர்)
4) சுமந்த் (வெளியுறவு அமைச்சர்)
5) சேனாதிபதி (இராணுவ அமைச்சர்)
6) அமத்தியா (நிதி அமைச்சர்)
7) பண்டிட் ராவ் (சமயத் தலைவர்)
8) நியாயதீஷ் (நீதித்துறை)

அத்தோடு அரசை மூன்று மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் அரச பிரதிநிதியின் தலைமையின் கீழ் ஒப்படைத்தார். அவர்களுக்கு ஆலோசனை வழங்க எட்டு அதிகாரிகளைக் கொண்ட குழுவையும் அமைத்தார். இவரின் பேரரசு சுயராஜ்யம் என்று அழைக்கப்பட்டது.

வருவாய்த்துறை நிர்வாகம்

ஆட்சி வசதிக்காகவும் வரிவசூல் நடவடிக்கைகளுக்காகவும் ஒவ்வொரு மாகாணத்தையும் பல பர்கானாக்களாகவும் தரப்புக்களாகவும் பிரித்திருந்தார். ஆட்சியின் கடைசிப் பிரிவு கிராமமாகும். இதனை மேற்பார்வையிட படேல் என்ற அதிகாரி இருந்தார். இங்கு வரிவசூல் நடவடிக்கையானது நிலங்களைப் பிரித்து அவற்றின் தரத்திற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டது. வரியை காசாகவேனும் பொருளாகவேனும் அரசுக்கு வழங்கினார்.

குடியானவர்களின் மொத்த நிலவருவாயில் 2/5 பங்கு அரசிற்குச் சாா்ந்ததாகும். குடிமக்களிடமிருந்து நிலவரி அரசின் அதிகாரிகளால் நேரடியாக வசூலிக்கப்பட்டது. இது தவிர்ந்த நிலவரி சவுத், சர்தேஸ்முகி எனும் இருவரிகள் வசூலிக்கப்பட்டது இவை சட்டத்திற்கும், நீதிக்கும் புறம்பானவையாகக் காணப்பட்டது என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அத்தோடு மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டே வரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கூறினாலும் இது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் எழுந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். [2]

சிவாஜியும், பிஜய்ப்பூர் சுல்தானும்

சிவாஜியை அடக்க பிஜய்பூர் சுல்தான் அப்சல்கான் என்பவரை, சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டுவரும்படி கி.பி.1659-ஆம் ஆண்டு அனுப்பிவைத்தார். அப்சல்கானின் சூழச்சியை சிவாஜி தெரிந்துகொண்டு, அவரை சந்திக்க தகுந்த பாதுகாப்புடன் சென்றார். சிவாஜியும் அப்சல்கானும் ஒருவரை ஒருவர் சந்தித்து தழுவிக்கொண்டனர். அச்சமயத்தில் அப்சல்கான் சிவாஜியின் கழுத்தை நெறித்து கொலை செய்ய முயற்சித்தார். சிவாஜி தனது உடையில் மறைத்திருந்த புலி நகத்தால் அப்சல்கானைக் கிழித்துக்கொலை செய்தார். இதனால் சிவாஜியின் பெருமையும் புகழும் மேலும் அதிகரித்தது.

இராணுவ நிர்வாகம்

மராட்டியர்கள் இயல்பாகவே வீரம் பொருந்தியவர்களாக இருந்ததால், ஒரு வலுவான படையை சிவாஜியால் அமைக்க முடிந்தது. இவரது இராணுவ நிர்வாகத்தில் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப் படை, யானைப்படை ஒட்டகப் படை மற்றும் கப்பற்படை இடம் பெற்றிருந்தன.

எப்போதும் தயார் நிலையில் இருந்தது இவரது படையமைப்பு. இது தவிர்ந்த குதிரைப்படை, காலாட்படையும் இராணுவத்தின் சிறந்த கூறுகளாகக் காணப்பட்டது. அததோடு இவர்கள் கொரில்லாப் போர் முறையிலும் சிறப்புப் பெற்றிருந்தனர். போர் வீரர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் இருக்க வேண்டும் என்று மன்னன் கட்டளையிட்டிருந்தார். சபாஸத்பகர் என்ற நூலின்படி சிவாஜி சுமார் 1260 யானைகள் கொண்ட படை ஒன்றையும் வைத்திருந்ததாக அறிய முடிகிறது. எனவே இவருடைய காலத்தில் வலுவான படையமைப்பும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்று வல்லுனர்கள் கூறுகின்றனர்.

மேலும் இவருடைய காலத்திற் மக்களிடையே சிறப்பான ஒழுக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக இராணுவ வீரர்கள் எந்த அடிமைப் பெண்ணையோ கூத்தாடும் மகளையோ படையுடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது இறுக்கமான கட்டுப்பாடாகும். அக்கட்டளையை மீறுவோரின் தலை துண்டிக்கப்பட்டது. பசுக்களைக் கவரக்கூடாது. ஆனால் எருதுகளைப் போக்குவரத்துக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். பிராமணர்களைத் துன்புறுத்தக்கூடாது. எந்தப் படை வீரனும் போர் சமயத்தில் ஒழுங்கு தவறி நடந்துகொள்ளக்கூடாது. போன்றவை குறிப்பிடத்தக்கவையாக இருந்தது.[(3)]

வரலாற்று ஆட்சியரின் மதிப்பீடு

சிறந்த அரசனாகவும் நிர்வாகியாகவும் விளங்கிய சிவாஜி 1680-களில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். இவர் சிறந்த ஆட்சியாளனாக விளங்கிய போதும் இவரைப் பற்றி விமர்சனங்கள் வரலாற்று ஆசிரியர்களிடையே இருந்தது. அந்த வகையில் இவர் மக்களின் கல்வி நலனுக்கும், சமூக மேம்பாட்டிற்கும் வழிகாட்டவில்லை என்றும் இதனால் பொதுமக்களின் அறிவும் ஆற்றலும் வளரவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே மக்கள் மன்னனுடைய உயர்ச்சிகளைப் புரிந்துகொண்டு தம்மிடையே வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமையுடன் கூடிய இராச்சியத்தை உருவாக்கத் தவறிவிட்டனர் எனக் கூறுகின்றனர். [(4)]

மேலும் கிருஷ்ணதேவராயார், இராஜேந்திர சோழன், அக்பர், ஔரங்கசீப் போன்ற மாபெரும் வீர்களோடு ஒப்பிட்டால் சிவாஜியை இரண்டாம்தரப் போர்வீரர் என்றே கூறவேண்டும். பகைவன் வலிமைபடைத்திருந்தால் தந்திரத்தால் சாதித்துக்கொள்வதும் வலிமை குறைந்திருந்தால் வெளிப்படையாகப் போருக்குச் செல்வதும் இவருடைய இயல்பாகும். உதாரணமாக ஷாயிஸ்ட்கானின் முகாமைத் தாக்கியமை, ஆப்ஸல்கானைக் கொன்றமை, ஆக்ராவிலிருந்து தப்பியது, சூரத்தைச் சூறையடித்தமை போன்ற சம்பவங்களைக் குறிப்படலாம்.

சிவாஜி பற்றி கிராண்ட்டப்பு என்பவர் கூறுகையிலே, சிவாஜி புதிதாகச் சேர்த்த இராச்சியப் பகுதிகளும் செல்வங்களும் மொகலாயருக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் அவர் நடந்து காட்டிய முன் மாதிரி நிலையும் அவர் புகுத்திய பழக்கவழுங்கங்களும் மராட்டி மக்களில் பெரும்பாலானோர் உள்ளத்தில் அவர் உருவாக்கிய உணர்ச்சியும்தான் மொகலாயருக்குப் பேரிடியாகத் தோன்றியது எனக் குறிப்பிடுகின்றனர். அத்தோடு இவருடைய இராணுவ நிருவாகம் சிறப்பு வாய்ந்தது என இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எதுவாக இருந்தபோதிலும் மராட்டிய மக்களை ஒன்றுபடுத்தி மராட்டிய பேரரசினை உருவாக்கிய பெருமை மன்னன் சிவாஜிக்கே உரியதாகும். எனவேதான் சத்திரபதி மகாராஜா எனப் போற்றப்படும் மன்னன் சிவாஜி தென்னித்திய வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தினைப் பெற்றார். [5]

அடிக்குறிப்புகள்

1. கோ.தங்கவேலு இந்திய வரலாறு தொகுதி-3, பக்கம்: 220
2. சுப்பிரமணியன் இந்திய வரலாறு, பக்கம் : 285
3. ஜெயரதன், கண்டுணர்ந்த இந்தியா, பக்கம் : 310
4. சிராஜுதீன், இந்திய வரலாறு (கி.பி.1707 முதல் கி.பி.1984 வரை) பக்கம் : 150
5. முன்னர்காட்டிய நூல் இந்திய வரலாறு பக்கம் 181

துணைநூற்பட்டியல்

1)	கோ.தங்கவேலு	-	இந்திய வரலாறு தொகுதி-3 பழனியப்பா பிரதர்ஸ் 1971
2)	சுப்பிரமணியன்	-	இந்திய வரலாறு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் 2004.
3)	ஜெயரதன்,	-	கண்டுணர்ந்த இந்தியா, பூரம் பதிப்பகம் 1989
4)	சிராஜுதீன்,	-	இந்திய வரலாறு (கி.பி.1707 முதல் கி.பி.1984 வரை) வெற்றி பதிப்பகம் 1998
5)	முன்னர்காட்டிய நூல்-		இந்திய வரலாறு பக்கம் 181
6)	ஜே.தர்மராஜ்	-	இந்திய வரலாறு டென்சிப் பப்ளிகேஷன், சிவகாசி

மொழி - Language

பா. ரேவதி, ஆய்வியல் நிறைஞர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதனைக் கணினியுகத்தில் உயர்த்தியதும் விலங்கு தன்மையை மாற்றி மனிதனை மாண்புறுத்துவதும் மொழியே. மொழியின் சிறப்பை ஓர் அதிகாரத்தில் அடக்க இயலாது.

- கல்வி
- கல்லாமை
- கேள்வி
- அறிவுடைமை

❖ எண்ணின்றிக் கணக்கும் அறிவியலுமில்லை. எழுத்தின்றி இலக்கண இலக்கியங்களும் வேறெவ்வித கல்வியுமில்லை அனைத்து வகைக் கல்விக்கும் மொழியே அடிப்படை காரணம்

❖ ஆதலின் இவ்விரண்டுமே மனிதனை மாண்புறுத்தும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கண்கள் என்று அறிஞர் கூறுவர்.

❖ இவ்வாறு மொழியின் இயல்பையும், அதனால் ஏற்படும் பண்பாட்டு நோக்கங்களையும் கீழ்காணுமாறு அறியலாம்.

மொழிச் சிறப்பு

மொழி என்பது கல்வி கற்பது என்று பொதுவானதொரு கொள்கை மனிதனை செம்மையாக்கி இன்புற்று வாழ, செழுமையாக்கி வாழ வழி கோலுகிறது. இருந்தும் மொழியின் வல்லமையைச் சிலர் கல்வி பொருள் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்க கூடாது. நற்பண்புகளைப் பெறுவதற்கே மொழி அமைய வேண்டும். இது *'நிற்க அதற்கத்தக'* என்பதாகும்.

மொழியும் வாழ்க்கையும்

மொழி வெறும் ஏட்டளவில் இல்லாமலும், பேச்சளவில் இல்லாமலும் வாழ்க்கையை பேணிக்காத்து செயல்முறை விளக்கங்கள் மூலமாகத் தாய்மொழியின் மூலமாக கல்வி கற்கப்பட வேண்டும். அவ்வாறு மொழியின் பயன்பாடானது இளையோர் மனதில் சிந்தனையாற்றலை வளர்க்கும்.

கற்றபின் அதன் வழியில் வாழாவிட்டால் தூய அறிவினர் நடந்து காட்டிய வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்தல்தானே மொழியின் பயன்.

அங்ஙனமின்றி வெறும் பணத்திற்கும், சோற்றுக்கும், தன்னலத்திற்குமே மனம்போனப் போக்கில் வாழும் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும்.

"கற்றவர் என்பவர் கற்றபடி நிற்பவரே"

-முகம்மது நபி

மொழியின் அறிவாற்றல்

அறிவு, அற்றம் - அழிவு வராமல் காக்க வல்லது. பகைவராலும் அழிக்க முடியாத அரணாகத் திகழ்வது (421). மனதைத் தீய வழியில் செலுத்தாமல் நல்ல வழியில் செலுத்துவதே மொழியின் உண்மையான அறிவு (422).

"நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேறுபாடறிவதே அறிவின் தாய், எதிர்காலத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால் பழமையை ஆராய்ந்து பார்".

-கன்பூசியசு

மொழி வளம்

சில புத்தகங்களை சுவைக்கலாம்; சிலவற்றை விழுங்கலாம்; ஆனால் வெகுசில புத்தகங்களையே மென்று சீரணிக்க முடியும். அதுபோலதான் மொழியும் அறிவை மேன்மேலும் கூர்மையாக்கிக்கொள்ள பயன்படும் கருவி.

ஒருவனிடம் இருக்கும் உயர்ந்த ஆற்றலைக் கண்டுபிடித்து வளர்ப்பதே கல்வி. அக்கல்வியானது தாய்மொழியின் வாயிலாக மொழி விளக்கைத் தூண்டிவிட ஏதுவாகிறது.

"கற்பவை கற்று அவ்வழி வாழ்வோம்"

மொழி செயல்பாடு

ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து தெளிந்து பயன்மிக்க வினையாகத் தெரிந்து அதற்குரிய வலிமை, காலம், இடம் முதலியன அறிந்து செய்ய வேண்டும். தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வலியறிதல், காலமறிதல், இடமறிதல், வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைச்செயல்வகை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, மடியின்மை முதலியவை மொழியின் செயல்பாட்டின் மூலம் கற்பதால் மொழியின் சிறப்பு வலுவாகிறது.

"தனிமனிதனுக்குள்ள வலிமையைவிட அந்த சமுதாயத்திற்கே மொழி வலிமையுடையது"

"நம் வலிமைக்கேற்பச் செயலாற்றி வாழ்வோம்"

மொழியின் செம்மை

உயிர், காலம், ஒழுக்கம் ஆகிய மூன்றும் இழந்தால் மீண்டும் பெற முடியாதனவாகும். கடந்த காலத்திற்கு - இறந்தகாலம் என்று பெயர்வைத்த பண்டைய தமிழரின் நுண்ணறிவு வியக்கத்தக்கதாகும். இத்தகைய பொருள் பொதிந்த சொல் பிற மொழிகளில் இல்லை. இறந்தவனையும் எழுப்ப முடியாது. இறந்த காலத்தையும் மீண்டும் பெற முடியாது. எனினும் மனிதனுடைய வாழ்நாள் வரையறுக்கப்பட்டது. அதில் குழந்தைப்பருவம் அறியாபருவம், நோய்க்காலம், உறங்கும் காலம், முதுமையால் தள்ளாதக் காலம் ஆகியவற்றைக் கழித்து நோக்கினால், சிறப்பாகச் செயலாற்ற முடிந்த காலம் மிகக் குறுகிய காலமே. அக்குறுகியக் காலத்தை நன்முறையில் பயன்படுத்தி, நிலையற்ற பொருளையும் இளமையையும் கொண்டு நற் செயலாற்றி நிலைத்த புகழ்பெற மொழி இன்றியமையாததாக அமைகிறது. மொழியின் செம்மைபற்றி கீழ்காணும் அறிஞர்கள் கூறுவதைக் காணலாம்.

மொழி பற்றிய அறிஞர்களின் வரையறை

பிளாட்டோ

பரிசுக்காகப் போரிடுவோரும் சுமை தூக்குவோரும் கொண்ட ஒரு தேசம் நமக்குத் தேவையில்லை . நம் நாடு எல்லா வளங்களும் பெற்றிருந்தும் தன்னலவாதிகளால் ஒரு பக்கம் வளமையும், ஒருபக்கம் வறுமையும் பெருகியே உள்ளன.

மெய்யறிவாளர்கள் வேண்டாம் என்றவையெல்லாம் பெரும்பாலான நாடுகளில் பெருகியுள்ளன. அமெரிக்க போன்ற செல்வம்மிக்க நாடுகளில் பிணிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும், குற்றங்களுக்கும் நீதி மன்றங்களுக்கும் பஞ்சமே இல்லை. பட்டினிச்சாவு நிறைந்த நாடுகளும் உள்ளன. அழிவு கருவிகளும் பேரச்சமும் உலகை அச்சுறுத்திக் கொண்டே உள்ளன.

சேக்சுபியர்

"அவனுடைய சினமிகுதியை என்னுடைய பொறுமையால் எதிர்த்து வெல்வேன். என்னால் உண்டான தீமைகளையும் அமைதியாய் பொருத்துக்கொள்வேன்".

சாக்கரட்டீசு

கிரேக்கத்து மெய்யறிவாளர், அறியாமையும் சினமும் மிக்க மனைவியின் கொடுமைகளையும் வீண்பழி சுமத்தி நஞ்சூட்டிக்கொன்ற தன்னலவாதிகளின் கொடுமைகளையும் வென்று, பகுத்தறிவு பரப்பும் பணியால் பெரும்புகழ்பெற்றார்.

ஒற்றுமையின் வலிமை

எளிய பலரும் ஒற்றுமையாக வாழ்ந்தால் வலிய பகையை வென்று வாழ முடியும் வலிய ஒருவன் எளிய பலரைப் பகைத்துக்கொண்டால் அழிந்துவிடுவான். எளியவருக்கும் வலியவருக்கும் உரிய நீதியை மெல்லிய மயிலிறகை அளவுக்குமேல் வண்டியில் ஏற்றினால் வண்டியின் வலிய இரும்பச்சும் முறிந்துவிடும் என்று பிறிது மொழிதலாக பொய்யா மொழியார் பகர்கின்றார்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" (475)

பீலி - மயிலிறகு
சாகாடு - வண்டி

இங்ஙனம் பிறிது மொழிதலணியை வள்ளுவர் வலியறிதல் அதிகாரத்தில் முதன் முதலாகப் பயன்படுத்தி, மயிலிறகையும் வண்டியையும் கொண்டு, சமுதாய ஒற்றுமைக்கும் எளியர், வலியர் ஆகிய எல்லோருக்கும் உரிய வாழ்வு வழியைக் காட்டுகின்றார்.

"மனத்தூய்மையே அறம்"

பொறுமையின் பெருமை

"பொறுமை கடலினும் பெரிது" "பொறுத்தார் பூமியாள்வார்", "பொங்கினார் காடாள்வார்", முதலிய பழமொழிகள் தமிழுக்கே வழங்கி வருகின்றன.

"ஆறுவது சினம்" என்பது ஔவையின் அமிழ்த மொழி.

பெருமை தரும் வாழ்வு நம்மைவிட்டு நீங்காமல் இருக்க வேண்டுமானால் பொறுமையைப் போற்றி வாழ வேண்டும். (154)

தீமைக்குத் தீமை செய்து ஒறுத்தவருக்கு அந்த ஒருநாள் மட்டும் தான் மகிழ்ச்சி, மீண்டும் பகையும் துன்பமும் பெருகும். பதில் தீமை செய்யாமல் பொறுத்துக் கொண்டவர்க்கு உலகம் அழியும்வரை புகழ் நிலைத்திருக்கும் (156) காந்தியடிகளின் வாழ்வு சான்றாகும்.

முடிவுரை

"எத்தனை மாற்றங்கள், எத்தனை சொற்களஞ்சியம், எத்தனை மானிட மாற்றங்கள் அத்தனையும் மொழியின் பயனமே" இவ்வாறு மொழியின் வியத்தகு மாற்றங்களையும், மொழியின் பண்பாட்டு சிக்கல்களையும், மெய்யறிவாளர்களின் அறிவாற்றலையும் காணமுடிகிறது. "மெய்யறிவாளர்களின் கனவு நனவாகும் நாள் எந்நாளோ?"

துணை நூற்பட்டியல்

1. மீனாட்சிசுந்தரன், தெ.பொ., - தமிழ் மொழி வரலாறு
2. வரதராசன், மு., - மொழி நூல்
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் - எழுத்து, சென்னை, கழக வெளியீடு, 1964.
4. புவனந்தி, நன்னூல், பவானந்தர் கழகம், 1922.
5. **Bloom field, learned, Language, London, George Allen and Union Lt,.**
6. **Jakobson, Roman, on Language, Cambridge, Massa Chusetts, London, Hardware University Press, 1990.**
7. **Shaunyan, Sebastian, Semiotic Theory of Language, Bloomington, Indiana, University Press, Bloomington and Indiana Polis, 1987.**

தமிழிலக்கியத்தில் பெண்கள்

ம. ரோஸ்லின் பிரேமா, உதவிப்பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம்.

முன்னுரை

தமிழிலக்கியத்தில் இருபாலர்க்கும் பொதுவான உரிமை நல்கும் சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்றும் தமிழிலக்கியத்தில் பெண்களும் பெண்மையும் சித்திரிக்கப்பட்டுள்ள பாங்கினை எடுத்துரைக்கும் இக்கட்டுரை அமைகிறது.

சங்ககால இலக்கியம்

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றைச் சங்ககால நூல்களாகக் கொள்வது தமிழிலக்கிய வரலாற்று வழக்கு. தொல்காப்பியம் இலக்கணம் என்றாலும் தன்கால இலக்கியத்தின் உள்ளடக்கம் உருவம் ஆகியன பற்றிப் 'பொருளதிகாரம்' என்ற பகுதியில் கூறுவதால் பண்டைத் தமிழர் வாழ்வியற் கண்ணோட்டத்தை உணர அது பெரிதும் பயன்படுகிறது.

தொல்காப்பியத்தில் பெருமையும் உரனும் ஆணுக்கும் அச்சமும் நாணமும் மடனும் பெண்ணுக்கும் எனப் பண்புநிலைப் பாகுபாடு எனப் பேசப்படுகிறது. (1043, 1044) ஒப்புமைகள் பத்து மண வாழ்வில் இணைவோர்க்கு வேண்டுமென உரைக்கப்பட்டாலும் (1218). 'மிக்கோனாயினும் கடிவரை இன்றே' என (93) ஆடவர் முதன்மை மட்டும் ஏற்கப்பட்டது. மனைவி தகுதிகளில் கணவனை விஞ்சியிருத்தல், தொல்காப்பியர்க்கு உடன்படில்லை. இல்வரை பெண்ணறிவின் எல்லை. கால்கள் மட்டுமன்று கருத்தும் வாயிற்படி தாண்ட அனுமதிக்கப்படவில்லை. அவள் கூற்றுக்களில் இல்லத்தின் எல்லைதாண்டியன இடம்பெறல் இலக்கிய வழக்கில் அரிது. தலைவி கூற்றுக்கு வேறு பல கட்டுபாடுகளும் உண்டு. தற்புகழ்ச்சி, தன் காதல் விருப்பம் ஆகியனவும் இடம்பெறுதல் கூடாது. 'எத்துணை மருங்கினும் மகடூஉ மடல்மேற் பொற்படை நெறிமை இன்மையான' என்றும் (980) ' தன்னுறு வேட்கை கிழவன் முற் கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக்ககில்லை' என்றும் (1063) 'தற்புகழ் கிளவி கிழவன் முற்கிளத்தல் எத்திறத்தானும் கிழ்த்திக்கில்லை' என்றும் (1125) தொல்காப்பியம் வரையறுக்கிறது. இந்த வரையறையின் தாக்கம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை நீடிக்கிறது. "தாமுறு காமத்தன்மை தாங்களே உரைப்பது" ஏமுறு மகளிர்க்கில்லை என அரக்கியான சூர்ப்பனகையையே பேசவைக்கிறார் கம்பர். எண்ணரும் பாசறையும் முந்நீர் வழக்கமும் பெண்களுக்கு கிடையாது. (1120, 979) பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப்பாட்டில் பாசறையில் விளக்கேற்றும் மகளிரை அரையிற் குறுவாளுடன் காண்கிறோம் (47, 47) அவர்கள் பணிப் பெண்கள்.

மகப்பேற்றிற்காக மணந்துகொள்ளும் பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தி, தலைவன் ஒருவனுடன் மட்டும் மணப்புற உறவு கொண்டு வாழும் காதற்பரத்தை, இற்பரத்தை, கணிகையர் சேரிப்பரத்தை எனப் பலரும் சுட்டப்படுவது பன்மகளிர் மணம், மணப்புற உறவு, பரத்தமை ஆகியவற்றை ஆடவர்க்குத் தொல்காப்பியம் அனுமதிப்பதை உணர்த்தும். கற்பு என்பது மகளிர்க்கு மட்டும் உரித்தாக இருந்தது என்பது வெள்ளிடைமலை. "மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையுங்காலைப் புல்வியள் உரிய" என்று (1172) ஊடற்காலத்து மட்டுமே ஓர் 'ஊதுகாமாலை' உயர்வு பெண்ணுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

பாட்டும் தொகையுமான நூல்களில் பெண்குழந்தை பற்றிய பேச்சே இல்லை. "குன்றக் குறவன் காதல் மடமகள்" (ஐங்குநூறு, குறிஞ்சி) ஈராறாண்டகவையில் போற்றப்பட்டாள். ஆனால் அகப்பாடல்களில் தலைவி குழந்தையுடன் பேசப்படுகையில் கூட இருப்பது ஆண்மகவே. "வீறுசால் புதல்வன் பெற்றனை"

(பதிற்றுப் பத்து, 74) பாலார் துவர்வாய்ப் பைம்பூட்புதல்வன்" (நற்.26) "தன் முதல்வன் பெறும் பெயர் முறையுள்ளிப் பெற்ற புதல்வன்" (கலி.மரு. 10) "மேதக்க எந்தை பெயரான் (கலி.மரு. 16) என்றெல்லாம் ஆண்மகவைப் போற்றக் காணலாம். எனினும் "மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்" (புறம்.34) குற்றவாளிகளாகவே கருதப்பட்டமை குறிப்பிடதக்கது. செவிலியர் கொண்டு மக்களை வளர்த்தமையை எண்ணுகையில் மனைவியர் எழில் போற்றும் இன்பநோக்க அடிப்படை இருந்திருக்குமோ என்று ஐயம் எழுகிறது. "செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்த" என்ற அடி (பெரும்பாண். 25) இதற்கு அடிப்படை. கல்வியைப் பொறுத்தவரை ஏறத்தாழ 50 பெண்பாற் புலவர்களின் இருப்பு மட்டும் பெண்கல்விக்கு அரணாகுமா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. ஏனெனில் இல்லப் பணிகளை முடித்து விட்டு விளையாடச் சென்றுவரத் தாயிடம் விடைபெறும் தலைவியைச் சங்கப்பாக்கயில் காணமுடிகிறது.

நீதி இலக்கியம்

நீதி இலக்கியத்தில் பெண்ணியம் பற்றிச் சிந்திக்கையில் குறிப்பிட வேண்டிய ஓர் ஆய்வு தெ.பொ.மீ. அவர்களின் "வள்ளுவரும் மகளிரும்" என்ற நூல். வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் பெண்ணை ஆணுக்கு இணையாக அல்லாமல் துணையாக ஆக்கியதுடன் இல்வாழ்க்கையில் பெண்ணுக்கு மட்டுமே கடமைகளும் பொறுப்புகளும் தந்தமை, தெய்வம் தொழாமல் கொழுநனைத் தொழுது எழுபவள் பெய்யெனப் பெய்யும் மழை என்ற குறட்கருத்து, பெண்வழிச் சேறல் என்ற அதிகாரம் ஆகிய மூன்று இடங்கள் பெண்ணியச் சிந்தனையாளர்களின் கண்டனத்துக்கு ஆளானவை. "பெண் ஏன் அடிமையானாள்" என்ற பெரியார் ஈ.வே.ரா. தொடங்கிவைத்த கண்டனம் இன்று காலந்தோறும் பெண்மையை ஆராயும் ராஜம் கிருஷ்ணன் வரை தொடர்வதற்கு அடிப்படை இம் மூன்று இடங்களே. தெ.பொ.மீ. யின் அணுகுமுறை இவற்றுக்கு விளக்கம் தருகிறது.

எனவே சங்க மருவிய காலத்து நீதிநூல்களில் பெண்ணடிமை நிலையும் சமயநூல்களில் சில சூழல்களுக்கு உட்பட்ட பெண்ணுரிமை நிலையும் காணமுடிகிறது.

பக்தி இலக்கியம்

சைவ, வைணவ சமயப் பாடல்களில் நாயக- நாயகி தலைவன் - தலைவி உணர்வில் எழுதப்பட்டவை உண்டு. தொல்காப்பியம் போற்றிய மடலேறாப் பெண்மைக்கு (980) மாறாகப் மடலேறுவதாகக் கூறும் சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய நூல்கள் ஆழ்வார் பாடல்களில் உண்டு. ஆயின் ஆண்டாள் ஒத்த பெண்ணடியாராயினும் சம்பந்தரும் பெரியாழ்வாரும் ஒத்த ஆணடியார் ஆயினும் தம்மைத் தலைவியாக்கி இறைவனைத் தலைவனாகக் கற்பனை செய்து பாடுவதே காணப்படுகிறது.

ஞானப்பூங்கோதையின் கூந்தலுக்கும் இயற்கை மணம் கிடையாதென வாதிட்டதாகக் கதை வழங்கியவரும் நாட்டில் இறைவியும் கற்புக் கோட்பாட்டிற்கு

உள்ளடக்கியே அமைகிறாள். 20-ஆம் நூற்றாண்டின் பாரதியாரும் கண்ணனையே கண்ணம்மா வாக்கிக் காதலியாக்கிப் பாடுகிறார். மொத்தத்தில் பெண்ணை ஆணுக்கு அடிமையாகக் கருதும் மனநிலையே தன்னைக் காதலியாக்கி இறைவனைக் காதலனாக்கும் நாயக நாயகி உணர்வு நிலையின் அடிப்படை. ஆண்டாள் என்ற பெண் ஓர் அண் தெய்வத்தைப் போற்றலாம். ஆனால் பெண்தெய்வம் எதையும் ஓர் ஆடவன் நாயக நாயகி பாவத்தில் எண்ணிப் பாடியதாகத் தெரியவில்லை 'சாக்த' வழிபாட்டில் ஒருவேளை இருக்கலாம். மற்றப்படி தெய்வமானாலும் அங்கே பிறர் நெஞ்சு புகாத கற்பு வேண்டும்.

பக்தி இலக்கிய காலத்தில் தோன்றிய காப்பியங்கள் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை, வளையாபதி, குண்டலகேசி, ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகின. 'காமதிலகம்' எனப் பாராட்டும் பெறும் வகையில் எண்மரை மணப்பவன் சீவகன். வெட்சிப் போரில் வென்று பெற்ற கோவிந்தையை நண்பன் பதுமுகனுக்கு அளிப்பது அவன் காமுகன் அல்ல எனறு நிறுவுதற்கு எடுத்துக்காட்டப்பட்டாலும் கோவிந்தையின் மனவுணர்வுகள் மதிக்கப்படாமல் பிறர் விருப்பப்படி பந்தாடும் பொருளாகி விடுகிறாள். கம்பராமாயணம், கற்பு கோட்பாட்டிற்காகவே வால்மீகி ராமாயணத்தில் சில மாற்றங்களைச் செய்து எழுதப்பட்டது. அகலிகை, அறியாமல் இந்திரனின் விருப்பத்திற்கு இணங்கினாள் என்பதும் விரும்பாத பெண்ணை வலியத் தீண்டினால் தலை சுக்குநூறாகும் என்ற சாபம் காரணமாக இராவணன் சீதையைத் தொடாமல் நிலத்தோடு பெயர்த்து எடுத்துச் சென்றான் என்பதும் சான்றுகள். இராமனின் சொல் நெருப்பிலும் சுடுநெருப்பிலும் சீதை குளித்தெழுந்தமை பெருமைப் போர்வையில் பெண்கள் மேல் இறக்கப்படும் முள்முடி என்றே கூறவேண்டும். இராமனும்தான் மனைவியைப் பிரிந்திருந்தான். அவனுக்குச் சோதனை தேவைப்படவில்லையே!

பெரியபுராண மங்கையர் தமக்கெனத் தனி உணர்வற்றவர்கள், சிவனடியார் கேட்டார் என்பதால் மனைவியையே தானமாகத் தர முற்படும் இயற்பகைநாயனாரிடம் அவர் மனைவி

> *"......................... என்னுயிர்க்(கு) ஒரு நாத*
> *நீதி உரைத்த(து) ஒன்றை நான் செய்யும்*
> *அத்தனையல்லால் உரிமை வேறுளதோ*
> *எனக்கு"* (பாடல் 8)

என்று கேட்டு மகிழ்ச்சியுடன் உடன்படுவதாகச் சேக்கிழார் பாடுகிறார்.

இக்கால இலக்கியம்

ஐரோப்பியர் வருகையால் விளைந்த மேனாட்டுக் கல்விமுறை. மேனாட்டுப் பண்பாட்டு அறிமுகம், மேனாட்டு இலக்கிய அறிவு ஆகியவை காரணமாக. 19,20 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் உள்ளடக்கம் உருவம் ஆகியவற்றில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று பெண்ணுரிமைச் சிந்தனைத் தாக்கம். இது பற்றி எழுதுகையில் தி.சரோஜினி தன் ஆய்வேட்டில் இக்காலத்தில் எழுந்த தமிழிலக்கியங்கள் பெண்மையின் சிக்கல்களைப் புதிய கோணத்தில் அணுகின. பெண்களின் பிறப்பு, கல்வி, வரதட்சிணை, திருமணம், குழந்தை மணம், பொருந்தா மணம், பலதார மணம், இவ்வாழ்க்கை, கற்பு, விதவைநிலை, சொத்துரிமை, கட்டுப்பாடு, சமநீதி முதலியன குறித்துப் புதிய மதிப்பீட்டு மாற்றங்களுடன் கவிதைகளும் புதினங்களும் எழுந்தன என்கிறார்.

இராஜராம் மோன்ராய், ஈசுவர சந்திர வித்யாசாகர், ஈ.வே.ரா. தயானந்த சரசுவதி, பண்டிதரம்பாய், முத்துலட்சுமி ரெட்டி முதலியோர் பெண்ணுரிமை, குழந்தை மணம், விதவை மணம், தேவதாசி ஒழிப்பு முறை ஆகியவற்றிற்காகப் போராடினர். பெண்கள் பல்கலைக் கழகம் ஒன்று 1900-இல் ஏற்படுத்தப்பட்டது. இந்து விதவைகள் இல்லம் ஒன்றும் தொடங்கப்பட்டது. பெண்கல்வி பெண்விடுதலை ஆகியவற்றை வற்புறுத்திய இந்தியப் பெண்கள் சங்கம் 1925-இல் தோன்றியது. 1931-இல் லாகூரில் அனைத்து ஆசியப் பெண்கள் மாநாடு நடைபெற்றது. புல தீர்மானங்கள் நிறைவேறின. இத்தகு இயக்கங்கள் போரட்டங்கள் ஆகியவற்றின் விளைவால் இந்து விதவை மறுமணச் சட்டம், விவாகரத்துச் சட்டம், மணமான பெண்ணின் சொத்துரிமைச் சட்டம், பால்யமண ஒழிப்புச் சட்டம் ஆகியன நிறைவேறின. நீதிக்கட்சியும் பெண் விடுதலைக்கு உழைத்தது. தொடர்ந்து பெரியாரின் சுயமரியாதை இயக்கம் எனப் பல தோன்றின. இவற்றுடன் விடுதலை இயக்கமும் இணைந்தது. இவை அனைத்துமே பெண்ணுரிமைக்கு உதவின. இச்சமூக இயக்கங்கள் இலக்கியத்தின் உள்ளடக்கத்தில் செல்வாக்குச் செலுத்தின. இவ் இயக்கங்களின் தாக்கத்தால் தோன்றிய இலக்கியங்களில் பெண்மை பற்றிய மதிப்பீடுகள் முற்றிலும் மாறுபட்டிருந்தன.

"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா"

எனறு கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடப் பெண் குழந்தைத் தாலாட்டைப் புரட்சிக்கவி இயற்றினார்.

20 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் பெண்கல்வி போற்றும் சிந்தனைகளும் தொடக்க முதலே இடம் பெற்றன. இடைக்காலத்தில் இருண்டிருந்த கல்விக்கண்களைத் திறக்க முதலில் வித்திட்டவர் வள்ளலார் எனலாம். அவருடைய சமரச சன்மார்க்க சங்கக் கொள்கைகளின் ஒன்று யாவர்க்கும் கல்வியளித்தல். தொடர்ந்து வேதநாயகம் பிள்ளை, பெண்மதிமாலை, பெண்விடுதலைக்கும்மி என வரிசையாகப் பெண்ணுரிமை வேண்டும் நூல்களைப் பாடினார்.

"வித்தையைப் படிப்பியுங்கள் - தயை செய்து
வித்தையைப் படிப்பியுங்கள்
உத்தமவான்களே, சத்தியபிமான்களே
உங்கட்கும் கண்களான
பெண்களாம் எங்களுக்கு
வித்தையைப் படிப்பியுங்கள்"

முடிவுரை

தமிழலக்கிய வரலாற்றில் இடம் பெற்ற பெண்ணியத்தைக் கோடிகாட்ட மட்டுமே செய்கிறது. உண்மையில் கற்பனை குறைவான, நடப்பியல் சார்பானவை. மனிதர்களை உள்ளது உள்ளவாறு காட்டுபவை. எனினும் தமிழரின் பெண்ணியச் சிந்தனையை அறிய உதவும்.

சரஸ்வதி "சிற்பம்" கலை மற்றும் பெண்ணியப் பார்வை

முனைவர் வே. லதா, உதவிப்பேராசியர், சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

கலையானது மனித வளத்தின் மேம்பாட்டினை உணர்த்துவதாகும். மனிதனின் எண்ணங்களின் வளர்ச்சியே கலையாக வடிவம் பெற்றுள்ளது. கலைகள் என்பது இயல், இசை, நாடகங்களாக பல்வேறு பரிமாணங்களில் தோன்றியவைகளாகும். இயற்கலைகளில் சிற்பக்கலையானது பழைமையானது இதற்கு தகுந்தச் சான்று சிந்துவெளியின் தாய்தெய்வ சிற்பம்.

சிற்பக்கலையானது மனித வரலாற்றின் மனித நாகரீகத்தின் வெளிப்பாடாகவும், பிரதிபலிப்பாகவும் பல்வேறு காலக் கட்டங்களில் வாழ்ந்த சமூகத்தின் கண்ணாடியாகவும் விளங்குகின்றன. தொன்றுதொட்ட காலங்களில் தாயாகவும், காவல் தெய்வமாகவும், மதிக்கப்பட்ட தெய்வங்கள் சில நூற்றாண்டுகள் கடந்த பின் திருக்காமக் கோட்டம் என்னும் பள்ளியறை அமைத்து தனிக்கருவறையில் தெய்வங்களுக்கு இடமளிக்கப்பட்டது. அச்சமும், பக்தியும் மிகுந்த போக்கு மாறி கலை உணர்வு மற்றும் அழகை வெளிப்படுத்தும் சிற்பங்கள் என காலப்போக்கில் மன்னர்களின் ஆதரவில் சிற்பிகள் ஆங்காங்கே அழகை சித்தரிக்கும் சிற்பங்களை வடிக்கத் தொடங்கினர்.

அழகின் வெளிப்பாடு கலையாக மாறியது. கோயில்கள் சமுதாயத்தின் கூடாரமாக திகழ்ந்து வந்துள்ளன என்பதற்கு காலங்களின் மாற்றமும் சிற்பங்களின் மாற்றங்களும் சான்றாகும்.

கோயில்கள் மருத்துவமனைகளாகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் களமாகவும் நெறிப்படுத்தும் மையமாகவும், அறத்தையும், இல்லறத்தையும், தர்மத்தையும், நீதியையும், போகத்தையும், யோகத்தையும் ஒருங்கே அமையப்பெற்ற இடமாக கோயில் திகழ்ந்துள்ளது.

அணுகுமுறை

சரஸ்வதி சிற்பத்தினை Gender அதாவது பெண் வடிவத்தினை கருத்தில் கொண்டு ஒப்பீடு செய்து ஆராய்வது. மேலும் பல்வேறு காரணிகளையும், புராணப் பின்னணிகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிய சிற்பங்களை வகையறிந்து பகுப்பாய்வு செய்து அதன் கருத்தாக்கங்களை வெளிப்படுத்துவது.

புராணப்பின்புலம்

சரஸ்வதி சிற்பத்தின் அங்க இலக்கண கூறுகளை விஷ்னு தர்மோத்திரப் புராணம், கந்தபுராணம், மார்கண்டேயப் புராணம், தேவிமகாத்மியம் சாரஸ்வதிய சித்திரகர்ம சாஸ்திரம் போன்ற புராணங்களும் அம்சுமத்பேதாகமும், பூர்வகாரணாகமம் போன்ற ஆகமங்களும் விளங்குகின்றன.

பிரம்மா உலகைப் படைக்கின்றபோது அவரது உடல் இரு கூறுகளாக பிரிகின்றது[1] ஒரு பகுதி ஆண், மற்றொன்று பெண். அப்பெண்ணே சரஸ்வதி, பிரம்மவைவர்த்த புராணம், தேவிபாகவத புராணம் கூறும் பொழுது பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் அதாவது புருஷ மற்றும் பிரகிருதி (Sprit and Matter) ஆக இரு கூறுகளின் உருவாக்கமாக கூறுகின்றது. சரஸ்வதி தேவி சாத்வீக குணமுடையவள் (சாந்தம், சௌமியம்) தேவிபாகவதம் குறிப்பிடுகையில் மஞ்சள் வண்ண ஆடை அணிந்தவள். மேலும் அணிகலன்களும் கையில் சுவடியும் வீணையும் ஏந்தி பிரம்மாவின் நாவில் தோன்றியவள் என்று கூறுகின்றது.

ரிக் வேதத்தில் கலைவாணியானவள் கவியில் உறைபவள் (பாடல்)

கவிஜிக் வாக்ரவாசினி	-	*ஒலியில் உறைபவள்*
சபதவாசினி	-	*இசையின் உறைவிடம்*
ஞானசக்தி	-	*அறிவின் உறைவிடம்*
ஸ்மிருதி	-	*நினைவின் உறைவிடம்*
சர்வ வித்யாஸ்வருபினி	-	*அனைத்து கலைகள், கல்வியின் உறைவிடம்*
சர்வ சாஸ்திரவாசினி	-	*அனைத்து கல்வி நடைமுறைகளில் கலந்திருப்பவள்*
கிரந்தகாரினி[2]	-	*எழுத்து, மொழிகளில் வீற்றிருப்பவள்*

சரஸ்வதி தேவியானவள் விஞ்ஞானம், கல்வியறிவு போன்ற எண்ணற்ற கலைகளின் ஒருமித்த வடிவமாகும். கலையின் சிறப்ப அமைதியாகவும், கவிப்பாடல்களில் வெளிப்பாடாகவும் திகழ்கின்றவள்.

சரஸ்வதி தேவியின் கையிலிருக்கும் வீணை இசையுடன் தொடர்புடையதாகக் காட்டுகின்றது. அக்கமாலையும் கமண்டலமும் ஆன்மீக மற்றும் விஞ்ஞானத்தையும் சமயக் கருத்துக்களையும் அறிவுறுத்துவதாகவும் அமைந்துள்ளது. இவளின் நிறம் பாலின் நிறத்தை ஒத்த வெண்மை நிறத் தோற்றம் சுத்த சாத்வீக குணத்தைக் குறிக்கின்றது.

கலைவாணியாகிய சரஸ்வதி இந்து பாரம்பரிய கல்விக்கடவுளாக கருதப்படுகிறது[3] வேதங்கள் சரஸ்வதியை நதியாக குறிப்பிடுகின்றது. மேலும் கங்கை, யமுனைக்கு இணையாக கருதப்படுகிறது. கலைவாணி (சரஸ்வதி) வாக்தேவி எனும் பேச்சுக் கடவுள் ஆகும்[4].

பிராமண வேதங்கள் சரஸ்வதியை வாக்தேவி என்கிறது. வேதக்கால சடங்குகளை சரஸ்வதி நதிக்கரை வயப்பட்டதால் நதியுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது[5].

ரிக்வேதம் சரஸ்வதியைக் குறிப்பிடுகின்றபோது இனிமையான பேச்சு அமைந்திருக்குமிடம், மகிழ்ச்சியின் விளிம்பு, உயர்வான சிந்தனைகள் உள்ள இடம் இவள் அமருமிடம் என்கின்றது. வேதம் என்பது அறிவின் ஆதாரம் மற்றும் அறிவின் கற்பம் சரஸ்வதிதேவி என்று ரிக்வேதம் கூறுகின்றது[6].

மூளை எண்ணங்களுக்குரியவள் கலைப்பண்பாடு இவற்றை உருவாக, வடிவாகக் கொண்டு அமைந்திருப்பாள். விண்ணில் மங்கையருடன் தொடர்புடையவள் விண்ணில் இசைத்து நடனமித்திருக்கும் கந்தர்வக் கன்னியருடன் எங்கும் நிறைந்திருப்பவள் கலைவாணியின் அம்சம் பொருந்தியவர்கள் மட்டுமே கலையில் ஈடுபாடுள்ளவர்களாக இருக்க முடியும் இந்த வகையில் கையில் வைத்திருக்கும் வீணை இசைக் கலையுடன் தொடர்புடையதாகும்.

இந்தியக் கலையில் கலைமகள் வடிவம் அமைதியும் சாந்தமும் கொண்டதாக காணப்படுகிறது. மொழி என்பது தொடர்ச்சியான ஒலி சரஸ்வதியானவள் அதில் நிறைந்து எண்ணம், கருத்து, கலை, கலாச்சாரம் ஆகிய கூறுகளில் பரிணமித்து பகிர்ந்து கொள்ளப்படுகிறாள். தேவிபாகவதம் குறிப்பிடுகையில் (9:1:35) கல்வி நிலையங்கள், நூலகங்கள், இவற்றின் கடவுளாக சுட்டிக்காட்டுகிறது. இல்லக் கடவுள் மட்டுமல்ல இவர் கலாச்சாரக் கடவுள் புதுப்புதுப் பண்பாட்டினையும் வளர்ந்துவரும் நாகரீகத்தையும் புதுமையான கலையினையும் அளிக்கிறது என்று குறிப்பிடுகிறது.

தஞ்சையில் பெரியகோயில் தேவ கோட்டத்தில் கலைவாணி (சரஸ்வதி) சிற்பம் அமைந்தள்ளது. தேவியானவள் அர்த்தபத்மமாசானத்தில் அமர்ந்தநிலையில் அமைந்துள்ளது. இரண்டு கரங்களில் வலது கரம் சிதிலமடைந்துள்ளது. இடதுகரத்தில் சுவடிகளைத் தாங்கி இடது தொடையில் அமர்த்தியவாறு அமைந்தள்ளது. சகல ஆபரணங்கள் அணிந்து தலையில் ஜடாமகுடம் அணிந்தும் மேலே சக்ராவளி அமைந்துள்ளது. அதன்மேல் விருட்சம் போன்று அமைந்துள்ளது.

கலையானது அண்டம் முழுதும் சக்கரம்போல் சுழன்று பரவியிருப்பது நாலுக்கு நாள் புதுமையாக வளரக்கூடியது கலையும் நயமும் என்பதைக் குறிக்கவே சக்ராவளியும் அதன் மீது விருட்சமும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பறக்கும் அப்ரசுகள் சரஸ்வதி தேவியின் பின்புறம் பறப்பது போல அமைந்தள்ளது. பக்கவாட்டில் இருபுறமும் உயர்ந்த தோற்றம் கொண்ட இரு பெண் தெய்வங்கள் காணப்படுகின்றன. அவர்கள் சாவித்திரி மற்றும் காயத்திரி ஆவார்.

கலைப் பெண்ணியப் பார்வையில்

கலைவாணி (சரஸ்வதி) சிற்பத்தில் பெண்ணியம் என்று பார்த்தால் சரஸ்வதி தேவியை, அதாவது பெண்ணைக் கல்வியாக, கலையாக, இசையாக, நடனமாக, கவியாக, ஒலியாக, அறிவு, (ஞானம்) நினைவாக (ஸ்மிருதி சக்தி) புத்தகமாக (சாஸ்திரம்) கிரந்தமாக (எழுத்தாக) அணுகி பார்க்கப்படுகிறது. இவ்வகையில் கலையோடு தொடர்பு கொண்டவளாகவும் பிணைக்கப்பட்டிருப்பவளாகவும் காட்டப்பட்டுள்ளது. மேலும் பெண்மையின் குணம் மென்மையாது என்பதைக் கூறி இவளின் குணம் சாத்வீக குணம் என்று கூறப்படுகிறது. இக்குணத்துக்கு அடிப்படையான நிறம் வெண்மை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரிக் வேதமும், புராணங்களும் ஆகமங்களும் சரஸ்வதியைப் பற்றி புதுப்புது கருத்துக்களை வழங்குகின்றன. மொத்தத்தில் பெண்மையின் உயர்ந்த பேச்சு, மகிழ்வு, உயர்ந்த சிந்தனைகள், பெண்களுக்குரியவை என்பதை இச்சிற்பம் வலியுறுத்துகிறது.

கலைப் பெண்ணியம் அல்லது கலாச்சாரப் பெண்ணியமானது[7] கலைத் தொடர்புடைய கவிதை, இசை, கலை, நாடகம், நடனம், சமயம், விஞ்ஞானம், தத்துவம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் பெண்ணை மையக் கருவாக அமைத்துப் பார்ப்பதாகும்.

இவ்வகையில் மேற்கண்ட அனைத்து சரஸ்வதி தேவியின் சிற்பக்கலை மற்றும் புராண பின்னணி கூறுபாடுகளில் அமைந்துள்ளது. மேலும் பெண் தெய்வவழிபாடு முன் நிறுத்தப்படுகிறது. அதன் குணநலன் விளக்கப்படுவது (சாத்வீகம்)9 மேலும் சரஸ்வதியின் மகுடத்தின்மீது சக்ராவளி அமைந்து அதன் மீது விருட்சம் போன்று வளர்ந்து காணப்படுகிறது. சரஸ்வதி (பெண்) அறிவின் வித்தாகவும், வேராகவும் அதன் வளர்ச்சி விருட்சமாகவும் வளர்ந்து செழித்து சிற்பக்கலை கூறு வடிவில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சரஸ்வதி வேதகால கடவுள் வேதம் என்றால் அறிவு, அறிவின் கற்பம் (சூழ்) சரஸ்வதி என்ற ரிக்வேதத்தின் கருத்துப்படி மூளை எண்ணங்களுடன் சரஸ்வதி தேவியை ஒப்பிடப்படுகிறது. நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு அண்ட சராசரங்களில் பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தும் கலாச்சாரங்களுடன் இணைத்துக் கூறப்படுகிறது[10].

இவ்வகை மேன்மை வாய்ந்த சிற்பத்தை இராராஜசோழன் தன்னுடைய கலை ஈடுபாட்டினால் தஞ்சை பெரிய கோயிலில் சரஸ்வதி சிற்பத்தை அமைத்தான். மேலும் கலையின் ஒவ்வொரு அங்கமாக இசை, நாட்டியம், ஓவியம், சிற்பவடிவிலும் நிஜத்தில் கலை பெண்களாலும் நடனப் பெண்களாலும் கலையும், இசையும் வளர்ந்ததை இச்சிற்பக்கலையின் கலைப் பெண்ணியம் சரஸ்வதி சிற்பத்தில் தொடங்கி சிற்பங்கள் ஓவியங்கள் வரிசையில் பெண்ணியம் தஞ்சை பெரியகோயிலில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

"பிள்ளைப் பிராயத்திலே – அவள்
பெண்மையைக் கண்டு மயங்கியிட்டேனங்கும்
பள்ளிப் படிப்பினிலே – மதி
பற்றிடவில்லையெனத் தனிப்பட
வெள்ளை மலரணைமேல் - அவள்
வீணையுங்[11] கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதம் கண்டு
வெள்ளை மனது பறிகொடுத்தேனம்மா

என்று பாரதியார் தன் மனதை பறிகொடுக்கும் சரஸ்வதிதேவியின் தோற்றத்தையும் அறிவையும் கண்டு வியந்தது போல இராசராசன் தாம் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் சரஸ்வதி தேவியை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கலைவடிவில் சிலையாக வடித்ததில் வியப்பில்லை.

துணைநூற்பட்டியல்

1. David Kinsle, ***Hindu Goddesses***, Motilal Banarasidoss, Delhi, 2005, PP.55-57.
2. Ibid, p.57.

3. T.A. Gopinatha Rao, ***Elements of Hindu Iconography***, Vol.I, Part II, MLBD, Delhi, 1997, P.377
4. libid P.378
5. S.R. Balasubramaniam ***The middle Chola Temples Amsterdam***, P.24.
6. பிரம்மமீய சித்திரகா்ம சாஸ்திரம்
7. R. Nagaswamy, ***Tantric Cult of south India***, P.75
8. A.S Altekar, ***The Position of women in Hindu Civilization***, P.56
9. வை. கணபதி ஸ்தபதி, ***சிற்பசெந்நூல்***, ப.120.
10. ரெங்கம்மாள் வாசுகி, ***பெண்ணியம் அனுகு முறைகளும் இலக்கியப் பண்பாடும்***, ப.44.
11. திரு.வி.க. ***பெண்ணின் பெருமை***

தொல்காப்பிய உவமை

வீ.வினோதா, முனைவர்பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

ஒரு பொருளைப்பற்றி விளக்குவதற்கு அப்பொருளை ஒத்த மற்றொரு பொருளை ஒப்புமை கூறுவது மரபு ஆகும். இங்கு ஒப்புமைப் பொருளாய் உவமிக்கப்படும் பொருள் உவமேயம் என்றும். இலக்கண ஆசிரியர்கள் இயம்புகின்றனர்.உவமைக்கும் பொருளுக்கும் இடையே இருக்கும் ஒப்புமையே பொதுத் தன்மை ஆகும்.

ஒப்புமை என்னும் பொருளில் வரும் 'உவமை' என்னும் சொல்லின் வேர்ச்சொல் பற்றி அணியிலக்கண நூல் பின்வருமாறு விளக்குகின்றது.'ஒவ்' என்னுஞ்சொல் 'மை' விகுதி பெற்று 'ஒவமை' என்ற வடிவத்தையும் ஒரு காலத்துப் பெற்றிருந்திருக்க வேண்டும். இகர,எகரத் தடுமாற்றம் போல் ஓதை,ஒடம்பு,ஒணர்வு,ஒதவி,ஒரல்,ஒலை,ஔவு எனும் வடிவங்கள் உகர முன்னிலை வடிவங்களாகத் திருத்தப்பட்டபோது ஒவமம்,ஒவமை ஆகிய சொற்களும் உவமம்,உவமை ஆகிய வடிவத்தைப் பெற்றுப் பிழையற்ற வழக்காக எண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.

'உவமை' என்னும் வடிவத்தினை இளம்பூரணரும் 'உவமம்' என்னும் வடிவத்தினைப் பேராசிரியரும் கையாளுகின்றனர். 'உவ' என்னும் பகுதியிலிருந்து உவமமும் உவமையும் பிறக்கின்றன. 'ஒப்புமை' என்னும் சொல்லே உவமை- உவமம் என்று மாறியிருக்கின்றது. 'ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும் (தொல்- செய்யுளியல்,169)என்று தொல்காப்பியர் கூறுவதும் நோக்கத்தக்கது.

உவமை வரையறை

இலக்கியத்திற்கு அழகு செய்வது அணியிலக்கணம் ஆகும். அணிகளுள் தலையாயது உவமையணி ஆகும். ஒரு பொருளை அதனோடு ஒப்புடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமையணியாகும். உவமையையும், பொருளையும் இணைத்து கூறுவதற்கு வரும் சொல் 'உவம உருபு'எனப்படும். உவமையின் இன்றியமையாமையை உணர்ந்த தொல்காப்பியர் உவமையியல் என்னும் ஓர் இயலையே அமைத்து விளக்கியுள்ளார்.

தொல்காப்பியத்தில் உவமை

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் முப்பெரும் பிரிவுகளையும் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள் வீதம் மொத்தம் 27 இயல்களையும் (உட்பிரிவுகள்) கொண்டு கட்டமைக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் 'உவமம்' என்னும் சொல் 19 இடங்களிலும் 'உவமை' என்னும் சொல் இரண்டு இடங்களிலும் வந்துள்ளன. இச்சொற்கள் உவமையியலிலும் பிற இயல்களிலும் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் உவம உருபினை எழுத்ததிகாரத்தில்"எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி" (தொல்-எழுத்-211) என்று உவம உருபு புணர்ச்சி பற்றி கூறுகின்றார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில்"அன்ன பிறவும்"(தொல்-சொல்-56,74,82,110) "பிறவும் அன்ன" (தொல்-சொல்-57) "அன்ன கிளவி" (தொல்-சொல்-79) என்று குறிப்பிட்டுள்ளார். பெயரியலில் "ஒப்பொடு வருஉங் கிளவியோடு தொகைக்கட்கு" (தொல்-செல்-

163,220) ஒப்பினாகிய பெயர்நிலை உளப்பட" (தொல்,சொல்,168) "ஒப்பினானும்" (தொல்-சொல்,213) "செயப்படு பொருளைச் செய்தது போல்" (தொல்-சொல்,246) எனப் பல இடங்களில் உவம உருபினையும் ஒப்புமைப் பொருளையும் பதிவு செய்துள்ளார்.

இடைச்சொல் இலக்கணத்தினைக் கூறும் தொல்காப்பியர் ஏழு வகை இடைச்சொற்களைக் கூறுகின்றார். அவற்றுள் ஒன்று உவம உருபு இதனைத் தொல்காப்பியம், "ஒப்பியல் வழியாற் பொருள் செய்நவும் (தொல்-சொல்-250) என்று செப்புகின்றது. எச்சவியலில் அறுவகைத் தொகை மொழிகளைக் கூறும் போது, "வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே" (தொல்-சொல்-412) என்று கூறி, "உவமத் தொகையே" உவம இயல்" (தொல்-சொல்-414) என்று விதி கூறுகின்றார்.

உவம உருபு,உருபுப் புணர்ச்சி, உவமைத் தொகை முதலானவற்றைச் சொல்லதிகாரத்தில் கூறிய தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் பல உவமைகளையும் உவமை இலக்கணத்தையும் இயம்புகின்றார்.

"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாது ஆகும் திணையுணர் வகையே" - (தொல்-பொருள்-49)

என உவமை வகையைக் கூறி,

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"
- (தொல்-பொருள்-51)

"ஏனை உவமம் தானுணர் வகைத்தே" - (தொல்-பொருள்-52)

என அதற்கு விளக்கம் அளிக்கின்றார். தானுணரும் வகையாவது வினை, பயன்,மெய், உரு இவற்றால் உவமிக்கப்படும் பொருளோடு எடுத்துக் கூறுதல் ஆகும். இவற்றை உவமையியலில் விளக்குகின்றார்.

புறத்திணையியலில் வஞ்சித்திணை துறைகளைக் கூறும்போது,

"வருவிசைப் புணலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்" - (தொல்-பொருள்-65)

என்று உவமையைக் கையாண்டு விளக்குகின்றார்.

"நோக்குவ எல்லாம் அவையே போறல்" - (தொல், பொருள்-145)
"தாய்போல் தழீஇக் கழறி... - (தொல்,பொருள்-149)
"தாய் போல் கழறித் தழீஇக் கோடல்"
"ஆய்மனைக் கிழத்திக்கும் உதித்தென மொழிப"
- (தொல்,பொருள்-171)
"உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமை யான" - (தொல்,பொருள்-192)

என உவமைத் தொடர்களைத் தொல்காப்பியர் களவியலிலும் கற்பியலிலும் கையாண்டுள்ளார். பொருளியலில்

"உறுப்புடையது போல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்"
- (தொல்,பொருள்-194:4-5)

"உவம வாயில் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவி"
- (தொல்,பொருள்,194:11-12)
"இறந்த போலக் கிளக்கும் கிளவி" - (தொல்,பொருள்-232)
"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
கெடலரு மரபின் உள்ளுரை ஐந்தே" (தொல்,பொருள்-238)
என்று உவமைத் தொடர்களைச் சுட்டியுள்ளார்,மெய்ப்பாட்டியியலில்
"எம்மெய் ஆயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி உவத்தல்..." - (தொல்,பொருள்-266)
என்று ஒப்புமைப்படுத்திக் கூறுவதைக் குறிப்பிடுகின்றார்.

உவமையியலில் உவமையை விளக்குவதற்க்காகவே அமைக்கப்பட்டுள்ளது. உவமை தோன்றும் வகைகளை,
"வினைபயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்
- (தொல்,பொருள்-272)
என்று கூறுகின்றார். பொருளை விட உவமையானது உயர்ந்ததாக இருக்க வேண்டும்.
"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" - (தொல்,பொருள்-274)

சிறப்பு, நலன், காதல், வலி, இழி பொருள் ஆகிய ஐந்தும் உவமைக்கு நிலைகளன்கள் ஆகும். உவமையும் பொருளும் ஏதோ ஒரு வகையில் ஒத்திருக்க வேண்டும். உவம உருபுகள் அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, என்ற, வியப்ப, எள்ள, விழைய, வியப்ப, நிகர்ப்ப, கள்ள,கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புள்ள, பொருவ, பொற்ப, போல, வெல்ல, வீழ, நளிய, நடுங்க, நந்த, நட, புரைய, என்னும் முப்பத்தாறும் உவம உறுபுகள் ஆகும்.

வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு ஆகிய ஐந்து உவமப் போலிகள் ஆகும். இன்பப் பொருளும், துன்பப் பொருளும் உவமை மூலம் வெளிப்படுத்தப்படும். தடுமாறு உவமமும் வரலாம், உவமைகள் அடுக்கியும், நிரல் நிறையாகவும் வரலாம் இந்தச் செய்திகளை உவமையியல் விளக்குகின்றது.

செய்யுளியலில் வாயுறை வாழ்த்தினை விளக்கும் போது, ***"வேம்பும் கடுவும் போல் வெஞ்சொல்" (தொல், பொருள்-417)*** என்று உவமையைச் சுட்டிக் காட்டியுள்ளார். உத்து உத்து என்பதனை விளக்கும் போது,
"நேர் இன மணியை நிரல்பட வைத்தாங்கு
"ஓரினப் பொருளை உருவழி வைப்பது" - (தொல்.பொருள்-472)

என்று உவமை கூறுகின்றார். விடுகதையைக் (பிசி) கூறும் போது, "ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும் (தொல், பொருள்- 478) என்று வகைப்படுத்திகின்றார். ஞாயிறு, திங்கள், கடல் முதலானவை "சொல்லுன போலவும், கேட்டுன போலவும்" (தொல், பொருள்-501) வரும்.

உவமிக்கும் பொருளை உவமையாகக் கூறுவதும் உவமையைப் பொருளாகக் கூறுவதும் உண்டு. இதனை உருவகம் என்று பிற்கால இலக்கணங்களில் கூறுகின்றனர். ஆனால் இதனைத் தொல்காப்பியர் உவமை என்று கூறுகின்றார்.

"பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்
மருளது சிறப்பின.்.துவ மாகும்" - (தொல். பொருள்-280)

நிறைவுரை

தொல்காப்பியர் கூறுவது உவமை ஒன்றுதான் இவர் அகத்திணையியலில் உள்ளுறையுவமம், ஏனை உவமம் என வகைப்படுத்தி, உள்ளுறை உவமத்தை உவமையியலிலும் விளக்கி உவமையியலில் (ஏனை உவமத்தை உவமையியலிலும்) உவமையைத் தொழில், பயன், வடிவம், வண்ணம் எனப் பிரித்து எழுதியுள்ளார். உவமை வழியாக அமையும் இறைச்சிக்கும் உள்ளுறைக்கும் உள்ள வேறுபாடு மிக நுட்பமானதாகும். உள்ளுறையில் உவமமும் உண்டு, இறைச்சியில் குறிப்புப் பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவை இறைச்சி எனப்படும். உவமை கூறுகின்றபோது, அன்ன, போல, போன்ற முதலான உவம உருபுகளுள் ஒன்று தொகையாக வரலாம் இதனைத் தொல்காப்பியர் "சுட்டிக்கூறா உவமம்" என்கிறார். இதனை இக்காலத்தார் எடுத்துக்காட்டு உவமையணி என்கின்றனர்.

தொடர் நிலையில் உவமைத்தொகையைக் கூறியவர் தம்முடைய நூற்பாக்களுள் பல இடங்களில் உவமைத் தொடர்களைக் கூறியுள்ளார், இலக்கண நூற்பாக்களில் இலக்கியத்திற்குக் கூறப்படும் உவமையணியைக் கூறியிருப்பதால் தொல்காப்பியர் இலக்கியக் கொள்கையுடையவர் என்பது தெளிவாகும்.

திருநல்லம் (கோனேரிராஜபுரம்) திருக்கோயிலில் செம்பியன் மாதேவியின் கல்வெட்டுக்கள்

முனைவர் பா.விஜயலெட்சுமி, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

முன்னுரை

தமிழகத்தில் சோழவள நாட்டில், காவிரியின் தென்கரையில் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் திருநல்லம் ஆகும். தற்போது இத்தலம் கோனேரிராஜபுரம் என்றழைக்கப்படுகிறது. பூமிதேவிக்கு அசுரபயம் போக்கி அருள் வழங்கியதாலும், பூமி தேவியால் அமையப்பெற்றதாலும் இத்தலத்தை "பூமிஸ்வரம" என்றும் "நலமார் மறையோர் வாழ் நல்ல நகர்" என ஞானசம்பந்தப் பெருமானால் புகழப்பட்டதால் இத்தலம் "நல்லளகர்" என்றும் வேதம் ஓதும் அந்தனர்கள் வாழ்ந்த நல்ல ஊர் என்பதால் "நல்லம்" என்றும் சோழ மன்னர்கள் வந்து தங்கி வழிபட்டதால் "கோனேரிராஜபுரம" என்றும் பல திருநாமங்களைக்கொண்டு அழைக்கப்படுகிறது.[1] நாகை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் வழியில் 18 கி.மீ தொலைவில் உள்ள புதூரிலிருந்து கிழக்கு புறமாக 3 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

செம்பியன் மாதேவி செய்த திருப்பணிகள்

முதலாம் பராந்தக சோழனின் இரண்டாவது குமாரரான கண்டராதித்தன் சோழ மன்னனின் மனைவியார் மழவர் குலத்துத்தோன்றிய செம்பியன் மாதேவி ஆவார். செம்பியன் மாதேவி சிவ பக்தியிலும், தொண்டிலும் சிறந்து விளங்கியவர் என்பதால் இவர் மாதேவடிகள் என்னும் சிறப்புப் பெற்றார். செம்பியன் மாதேவி சோழ அரசின் பெருந்தேவியாக மதிக்கப்பட்டவர். சோழ அரண்மனையையே சிவனுறை திருக்கோயிலாக மாற்றியவர். இவர் வளர்த்த குந்தவை பிராட்டியும், இராசராசனும் சிவபாதசேகரனாகவும், திருமுறைக்கண்ட சோழனாகவும், தஞ்சைப்பெரிய கோயிலைக்கண்ட கலைக்காவலனாகவும் புகழ் பெற்றுத்திகழ காரணமான வருமாவார்.

செம்பியன் மாதேவியார் ஆற்றிய சைவ சமயத்தொண்டுகள் அளவில்லாதவை. இந்திய வரலாற்றிலேயே எந்த அரசியும் செய்யாத அளவு சமயத் தொண்டும், திருப்பணிகளும் செய்துள்ளார். இவர் திருத்துருத்தி (குத்தாலம்) திருக்கோடிக்கா, திருவாரூர், அரநெறிக்கோயில், திருமுதுக்குன்றம் (விருத்தாசலம்) தென் குரங்காடுதுறை, நாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை ஆகிய சிவபெருமான் திருக்கோயில்களைக் கற்றளிகளாகத் திருப்பணி செய்வித்தார். திருநல்லம் திருக்கோயிலைத் தனது கணவன் கண்டராதித்தன் நினைவாகக் கற்றளியாக கட்டினார்.

செம்பியன் மாதேவியின் கல்வெட்டுச் செய்திகள்

தேவார காலத்தில் திருநல்லம் என்று அழைக்கப்பட்ட இவ்வூரில் உமைக்கு நல்லவன் என்று அப்பரடிகளால் பாடப்பெற்ற இறைவன் வாழும் திருக்கோயில் அமைந்துள்ளது. சம்பந்தர் காலத்தில் மண்டளியாக இருந்த இக்கோயிலைச் சோழப்பேரரசி செம்பியன் மாதேவி கற்றளியாக மாற்றியமைத்தார். இத்திருக்கோயிலில் இருந்து நாற்பத்திரண்டு கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. உத்தமச் சோழன் காலம் முதல் மூன்றாம் இராசராசன் காலம் வரை, அரியணை ஏறிய சோழவேந்தர்களின் பெரும்பான்மையோரது கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றை அறிவதற்கு பெரிதும் உதவுவது கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள், உலோகபத்திரங்கள், நாணயங்கள் ஆகும். தமிழகத்தில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உள்ள கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இதில் உள்ள எழுத்துக்கள் பிராமிய எழுத்துக்கள் என்பதால் அசோகரது ஆட்சிப்பகுதியின்று தமிழகத்திற்கு இவ்வெழுத்துக்கள் பரவின என்று கூறப்படுகிறது.[2]

கல்வெட்டுகள் கோயில்களின் வரலாற்று கருவூலமாக இன்றளவும் திகழ்கிறது. கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களின் மூலமாகச் சோழர்கால நாடகக்கலை, சமயத்துறையை சார்ந்ததாகவும், மன்னர்களின் பெருமையை எடுத்துக்கூறும் நாடகங்களாகவும் இருந்தன.[3]

சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தானம் கொடுத்ததை பற்றியும், நாட்டை ஆண்ட மன்னரையும், அவரது காலத்துப்போர் சிறப்புப் பெயர்களைப்பற்றியும், சில கல்வெட்டுக்கள் கிராம மக்களின் சமுதாய வாழ்க்கையில் உள்ள பல அம்சங்களை பற்றியும் கூறுகின்றன. மேலும் கோயில்களுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட நந்தா விளக்குகள், நிலங்கள், ஆடுகள், எண்ணெய் முதலியனவற்றை பற்றியதாக உள்ளன. ஆவணங்களில் கொடை விவரம் மட்டுமின்றி அவற்றை பெற்றவர்களுக்கு என்னென்ன வரிகள் விதிக்கப்பட்டன என்பதும் பற்றியும், அந்தகாலத்திய அரசியல் நிர்வாக முறைகள் போன்ற பல்வேறு செய்திகளையும் கூறுவனவாக உள்ளன. சோழர்காலத்திய கல்வெட்டுக்கள் வணிகச் சங்கங்களும், கைவினைக் கழகங்களும், பொருளாதார துறையிலும், கலைத்துறையிலும் ஆற்றிய பணிகளை இக்கல்வெட்டுக்கள் மூலம் கிராம ஆட்சிமுறை பற்றியும், அவர்கள் கல்விக்கு கொடுத்த முக்கியத்துவத்தை பற்றியும் அறிந்துக்கொள்ள முடிகிறது.

இக்கோயில் கல்வெட்டு செய்தியின் மூலமாக உடைய பிராட்டியார் உத்தரவின்படி சாத்தான் குணப்பட்டனான அரசாணை சேகரனால் கோயில் கட்டப்பெற்ற செய்தியை அறிய முடிகிறது.[4] இக்கோயில் மற்றொரு கல்வெட்டின் மூலம் செம்பியன் மாதேவி கண்டராதித்தன் பெயரால் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ததாக அறிய முடிகிறது.[5] கருங்கல் சுவரிலேயே கல்வெட்டுக்கள் வெட்டப்பட்டுள்ளன என்ற செய்தியும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டுகள் அனைத்தும் பத்தாம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டன என அறியமுடிகிறது. திருநல்லமுடையார் திருக்கோயிலைச் செம்பியன் மாதேவி தன் கணவனான கண்டராதித்த சோழன் சிவபதம் அடைந்தபின் அவரது நினைவாகத் திருப்பணி செய்தார் எனக் கல்வெட்டுச் செய்தியால் அறிய முடிகிறது.[6]

இத்திருக்கோயிலில் இராஜராஜன், இராஜந்திரன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் ஆகிய மன்னர்கள்கால கல்வெட்டுகள் இருப்பதாகவும் கல்வெட்டு செய்தி மூலம் அறிய முடிகிறது. அதன்படி இராஜசேகரிவர்மனான இராஜராஜன் காலத்தில் கோயில் திருப்பதிகம் ஓத இருவரால் பூங்குடி கிராமத்தில் 12 வேலி நிலமும், சிட்டக்குடியில் 4 வேலி நிலமும் விடப்பட்டன. இவற்றிலிருந்து பஞ்சவார வாரியமாக அரசுக்கு கிடைத்த 800 கலம் நெல்லைக் கோயிலுக்கே உத்தமசோழன் அளித்ததையும், மேலும் ஈழ நலம் கிராமத்தில் 12 வேலி நிலத்தை மன்னன் கோயிலுக்கு வழங்கியதையும் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.[7]

இத்திருக்கோயிலுள்ள கல்வெட்டுகளால் இறைவனுக்குரிய பலவகை நிவேதனங்கள், சந்தனக்காப்பு, தூபதீபம், திருமஞ்சனம், பூமாலை, ஆகியவற்றுக்கும், சந்தனம் அரைப்பாருக்கும், பூப்பறிப்பாருக்கும், மாலை தொடுப்பாருக்கும், மொழுகுவாருக்கும் மற்றும் பாடுவோர், அந்தணர், கணக்கர், தச்சர், கொல்லர் முதலியோர் ஊதியங்களுக்கும், கோயிலைப் பழுதுபார்க்கும் செலவு, அபிடேக செலவு முதலியவற்றிற்கும் வழிவகுத்து தந்த செய்தியை நமக்கு தெரிவிக்கின்றன. மற்றும் பல செய்திகள் திருநல்லம் அல்லது திருவல்லம் என்ற திருக்கோயில் தற்போது கோனேரிராஜபுரம் எனவும் அழைக்கப்படுவதாக கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.[8]

முடிவுரை

மேற்கூறிய இக்கல்வெட்டுகளின் மூலம் இக்கோயிலுக்கு சோழ மன்னர்களும், அரசியான செம்பியன் மாதேவி அளித்த முக்கியத்துவத்தையும் தெரிந்துகொள்ள முடிகிறது. கோயில் திருப்பணிகளில் சோழ மன்னர்களுக்கு முன் உதாரணமான விளங்கியவர் செம்பியன் மாதேவியார் இவர் ஆற்றிய சைவ சமயத் தொண்டுகள் அளவில்லாதவை. இந்திய வரலாற்றிலேயே எந்த அரசியும் செய்யாத அளவு சமயத்தொண்டும், திருப்பணிகளும் செய்துள்ளார் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. இராசமாணிக்கம். ப – "திருநல்லத்தலபுராணம்"இ 1999, பக் - 14
2. மணிவண்ணா அம்மை டாக்டர். – "கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்" ஜே.ஜே பப்ளிகே'ன், மதுரை, 2008, பக் - 190
3. ஆலாலசுந்தரம்.ரா – "தமிழக வரலாறு" பொதிகைப்பதிப்பகம், புதுச்சேரி, பதிப்பு 1973, பக் - 15
4. A.R.E. Ins 629/1909
5. A.R.E. Ins 635/1909
6. A.R.E. Ins 450 .08/1908
7. A.R.E. Ins. 624/1909
8. இராசமாணிக்கனா் - மா – "சைவ சமய வளர்ச்சி" பூங்கொடிப்பதிப்பகம், 1972, பக் - 30.

திருக்கோடிக்காவல் அருள்மிகு ஸ்ரீ திருக்கோடிஸ்வரர் திருக்கோவில் பல்லவர் கால கல்வெட்டுகள் கூறும் செய்திகள்

முனைவர் V.S.விஜயலெட்சுமி, இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,
வரலாற்றுத்துறை, த.ஞா.அ.ம.கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

தென் தமிழ் வழங்கும் திருநாட்டிற்குப் பெருமை, தெய்வ மணம் கமழும் திருக்கோயில்கள்தான். திருக்கோயில்கள், தெய்வங்கள் உறையும் திருவிடமாக மட்டும் விளங்காமல் இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம், கட்டிடக்கலைகூடங்களாகவும் விளங்குகின்றன. ஒரு நாட்டின் பழைய வரலாறுகள், பழங்கலைகள், பண்டுதொட்டு மக்கள் வாழ்வில் பயின்று வரும் பண்பாட்டுச் சிறப்புகள், அரசியல் அமைப்புகள் மற்றும் நாட்டு நிர்வாக முறைகளை அறிய, பெருந்துணையாக இருப்பது விண்மறையவும் மக்களின் வினைகள் மறையவும் எழுந்து நிற்கும் இத்திருக்கோயில்கள்தான்.

திருக்கோடிகாவலில் அமைந்துள்ள சிவத்தலமானது பண்டைய புகழ்வாய்ந்த தென்னிந்திய கலாச்சாரத்தை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது. இக்கோயில் மயிலாடுதுறை – கும்பகோணம் மார்க்கத்தில் கதிராமங்கலம் சாலை வழியில் அமைந்துள்ளது. இறைவன் பெயர் அருள்மிகு திருக்கோடிஸ்வரர், மற்றும் இறைவி பெயர் திருபுரசுந்தரி அம்பாள் ஆவர்.

"கா" என்றால் "சோலை" எனப் பொருள்படும். "கா" என முடியும் ஐந்து சிவதலங்களை "பஞ்சகாக்கள்" என்று அழைப்பர். அவை திருஆனைக்கா, திருக்கோலக்கா, திருநெல்லிகா மற்றும் திருகோடிக்கா ஆகும். சோலைகளுக்கு இடையே அமைந்த ஊர் என பொருள்படும்.

திருக்கோடிகா என்பதை திரிகோடி என பிரித்து மூன்று கோடி தேவர்கள் வழிபட்ட தலம் என்றும், மூன்று கோடி மந்திர தேவதைகள் வழிபட்டு அருள் பெற்ற தலம் என்றும் மூன்று கோடி தீர்த்தங்கள் வழிபட்ட தலம் என்றும் கூறுவர். ஊர்க்கோடியில் சோலைகளுக்கு இடையே விளங்கிய கோயில் எனவும் கூறலாம். திருஞானசம்பந்தர் அருளிய பதிகத்தில் "கோடிகாவு" எனவும் திருநாவுக்கரசர் அருளிய பதிகத்தில் "கோடிக்கா" எனவும் கூறப்பட்டு இருப்பதை தேவாரபதிகத்தில் காணலாம்.

இக்கோயிலை ஐந்து வம்சத்தினர் அதாவது முற்கால பல்லவர், பிற்கால பல்லவர், சோழர்கள், பாண்டியர்கள், முத்தரையர் ஆகியோர் இக்கோயிலுக்கு பல திருப்பணிகளை செய்துள்ளனர். இத்தலம் திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் பாடி அருளிய தேவாரத் திருப்பதிகங்களை பெற்று விளங்குகிறது. திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும், திருநாவுக்கரசு மூன்று பதிகங்களும் பாடியுள்ளார்.

ஒரு நாட்டின் வரலாற்றை அறிய ஆதாரங்கள் முதல்நிலை வகிக்கின்றன. ஆதாரங்கள் இரண்டு வகைப்படும். அவைகள்,

1. இலக்கிய ஆதாரங்கள் மற்றும்

2. தொல்பொருள் ஆதாரங்கள்

ஆகும். இந்த தொல்பொருள் ஆதாரம் என்பது முதல்நிலை ஆதாரமாகக் காணப்படுகிறது. இவ்வாதாரங்களில் கல்வெட்டு முக்கிய இடம் வகிக்கின்றன.

இத்திருக்கோயில் பல்லவமன்னன் நந்திவர்ம பல்லவனால் செங்கல்லால் கட்டப்பட்ட கோயில் ஆகும். அதன்பின்பு சோழர்களில் உத்தமசோழன் காலத்தில் செம்பியன் மாதேவியாரின் கட்டளைப்படி இக்கோயில் கற்றளியாக்கப்பட்டது.

இக்கோயிலில் பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள், முத்தரையர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பல்லவர்களில் முற்கால பல்லவர்களில் கோப்பெருஞ்சிங்கத் தேவர் காலத்து கல்வெட்டுகளும், பிற்கால பல்லவனான நந்தி போத்ரையன், விஜய நிருபதுங்க விக்கிரவர்மன் என்பவர்களுடைய கல்வெட்டும், பாண்டியர்களில் மாறன் சடையன் காலத்து கல்வெட்டும், சோழ மன்னர்களில் மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மன், முதலாம் இராசராச சோழன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன், முத்தரையர்களில் இளங்கோ முத்தரையர் காலத்துக் கல்வெட்டும் ஆக சுமார் ஐம்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

சுமார் 1250 வருடங்களுக்கு முன்பு கி.பி.எட்டாம் நூற்றாண்டில் (750) தமிழகத்தில் பல்லவருடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது சமயம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் இக்கோயிலின் கர்ப்பகிரகம் மட்டும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.[2] பின் கி.பி.950-957க்கு இடைப்பட்ட காலத்தில் தஞ்சையை ஆண்ட உத்தம சோழமன்னன் கண்டராதித்த சோழரின் மனைவியுமான செம்பியன்மாதேவியாரின் ஆணைப்படி செங்கற்களால் ஆன கோயில் இடிக்கப்பட்டு கருங்கற்களால் திரும்பக் கட்டப்பட்டது. அதற்கு பிறகு வழிவழியாக நாட்டை ஆண்ட மன்னர்களால் இக்கோயிலின் மற்ற பகுதிகள் பல்வேறு காலக்கட்டத்தில் கட்டப்பட்டன.

இராஜராஜசோழன் காலத்தில் மூன்று நிலைக்கோபுரமும், பின்னர் மூன்றாம் குலோத்துங்கன் காலமான 13-ஆம் நூற்றாண்டில் முன்வாயிலில் ஐந்து நிலை ராஜகோபுரமும் கட்டப்பட்டு திருப்பணிகள் நடந்திருக்க வேண்டும். அதற்குப் பிறகு 16-ம் நூற்றாண்டில் தஞ்சை நாயக்க மன்னர் காலத்தில் பாழ்பட்ட பகுதிகள் திருத்தம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டதோடு முன்கோபுரமும் இக்காலத்தில் புதியதாக மறுபடியும் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

செம்பியன் மாதேவியார் கருங்கற்கோயிலாக திருப்பணி செய்த சமயம் மற்றொரு சிறந்த சேவையும் செய்துள்ளார். கோயிலில் ஆங்காங்கே சிதறுண்டு கிடந்த பழைய கல்வெட்டுகளைத் திரட்டி எடுத்து அதிலுள்ள விவரங்களை புதியதாக கட்டிய கருங்கற் சுவற்றில் திரும்பவும் செதுக்கச் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு மொத்தம் 26 கருங்கற் பலகைகளை பதித்து வருங்கால சந்ததியினர் இக்கோயிலின் வரலாற்றை அறிந்து கொள்ள பேருதவி செய்துள்ளார். பல்லவர்கால கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டத்தில் வேறு எங்கும் காணப்படவில்லை என்ற சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு செய்திகள் இத்திருக்கோயிலின் மூன்று நிலை கோபுர நுழைவாயிலின் தென்புறம் மதிற்சுவற்றிலும், வாகன மண்டபத்தில் காட்சி கொடுத்த அம்பாள் சிலையின் வடபுறத்திலும் சுவாமியின் கருவறையின் வெளிப்புற சுவற்றிலும் நம்மால் காணமுடிகிறது.

பல்லவர்காலத்தில் தமிழகத்தில் பல திருப்புமுனைகள் ஏற்பட்டது. பல்லவர்கால வரலாற்றை இருபெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவர்கள் முற்கால பல்லவர்கள் என்றும் பிற்கால பல்லவர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய கல்வெட்டுக்கள் திருக்கோடிகாவல் கோயிலில் உள்ளது.

முற்கால பல்லவர்கள்:

கோப்பெருஞ்சிங்கன்

திருக்கோடிக்காவல் கோயிலில் இம்மன்னனின் கல்வெட்டு இரண்டு காணப்படுகிறது. அதில் கோயில் திருப்பணிக்கு காசு கொடுக்கப்பட்டதையும், பூஜை செய்வதற்கு காணியாக நிலம் வழங்கியதையும் நாம் இக்கல்வெட்டுச் செய்தியிலிருந்து அறியலாம்.

இவர் தனது 22-வது ஆட்சி ஆண்டில் வெளியிட்டுள்ளார். இக்கல்வெட்டு கோயிலில் இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் வாயிலின் தென்புறம் உள்ளது. திருக்கோடிகா உடையார் கோயிலில் தேவகன்மிகள் கங்கைகொண்டசோழபுரத்தில் இருக்கும் மனுவூருடையார் வலம்தரும் கூத்தப்பெருமாளுக்கு எழுதிக் கொடுத்த பிரமாண இசைவுத்தட்டு இது. தியாக வினோத விழுப்பரையரின் காணியான அரைமாவும், இவரது குருவான வலந்தரும் கூத்தப்பெருமாளுக்குக் கொடையாகக் கொடுத்த நிலம் அரைமாவும் ஆக ஒருமா நிலம் இறையிலி செய்து கொடுக்கப்பட்டது.

இந்நிலம் இறையிலி செய்து கொடுத்ததற்கு மாற்றாக இக்கோயிலின் தேவதானம் கண்ணமங்கலத்திலுள்ள இரண்டு மா நிலத்தினை திருநாமத்துக்கு காணியாக்கி அதிலிருந்து வரும் நெல்லினை பண்டாரத்தில் அளக்க வேண்டும் எனவும், அந்நிலத்தினைத் திருநாமத்துக் காணியாக அளிக்க வேண்டுமெனவும் இக்கோயில் தானத்தாரும், மாஹேஸ்வரரும் வேண்டிக் கொண்டதற்கிணங்க இது அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு சுட்டுகிறது. மேலும் திருக்கோடிக்காவுடையார்கோயில் திருப்பணிக்கு 150 காசு கொடுக்கப்பட்டதையும் இக்கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது.

வலந்தரும் கூத்தப்பெருமாள் ஒரு குரு எனவும், அவர் திருக்கோடிக்காவுடையார்கோயிலில் குருஸ்தானமாகத் திருப்பெருந்துறை ஆளுடையாரை எழுந்தருளவித்துள்ளார் என்ற செய்தியையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.[3] கோயில் கணக்கர், தேவகன்மி, ஸ்ரீ கார்யம், சைவாச்சர்யர், மாஹேஸ்வரக்கண்காணி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர் என்ற செய்தியையும் இக்கல்வெட்டு கூறுகிறது.

35-வது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டு கோயிலின் இரண்டாம் திருச்சுற்று கிழக்கு சுவர் வாயிலின் தென்புறம் உள்ளது. ஜெயங்கொண்டசோழபுரமான சிங்கபுர நாட்டுக் காணியுடைய பார்க்கமுடையான் பஞ்சன உடையபிள்ளை என்பவர் திருக்கோடிக்காவல் கோயிலின் திருநாமத்துக்கு காணியாக ஒரு மா வரை நிலம் வழங்கியதற்கான பத்திரம் இதுவாகும்.

இந்நிலத்தினை திருக்கோடிக்கா கோயிலில் சைவாசாரியம் செய்யும் கௌசிகன் திரிபுவன சுந்தரன் தெஷ்ணாமூர்த்தி பட்டன், இவன் தம்பி கற்பகரமான திரிபுவனசுந்தரப்பட்டன் என்பவர்களிடம் இருந்து விலைக்கு வாங்கினார். அந்த நிலத்தின் எல்லை சிவசிந்தாமணிபுரமும் மற்றும் ஆலாலசுந்தரன் நந்தவனமும் உள்ளடக்கியதாக இருந்தது என இக்கல்வெட்டு செய்தி தெரிவிக்கிறது.

பிற்கால பல்லவர்கள்:

நந்திவர்மன்

இவர் கால பாணிக் கோயில்கள் பல்லவர் காலத்தைவையா, சோழ காலத்தைவையா எனத் தெளிவாக கூற முடியாத அளவிற்கு காணப்படுகிறது. அவ்வகை கோயில்களில் திருக்கோடிக்காவல் கோயிலும் ஒன்று. இவர் கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உள்ளது. ஆழிற்சிறியள் என்பவள் மூலதனமாக நெல் கொடுத்த செய்தியை தெரிவிக்கிறது.

19ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்ட இக்கல்வெட்டு கோயிலின் உண்ணாழி தென்சுவரில் உள்ளது. திருக்கோடிக்காவலில் இருக்கும் சிறுநங்கைஈஸ்வரம் என்னும் கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்கு ஆழிற்சிறியள் என்பவள் நூற்றுக்கலம் நெல்லினை மூலதனமாக கொடுத்தாள். அந்த நெல்லினை இக்கோயில் வழிபாட்டினை நடத்தி வரும் ஆத்திரையன் நாராயணன் ஏறனும் மற்றும் அவன் தம்பிமார் மூவரும் பெற்றுக் கொண்டு அந்நெல்லின் மூலம் வரும் வட்டியினை நாள்தோறும் விளக்கெரிப்பதற்காக உழக்கு நெய்யினை அளிக்க ஒப்புக் கொண்ட செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது.

நிருபதுங்கவர்மன்

இவன் மூன்றாம் நந்திவர்மனின் மகன் ஆவார். திருக்கோடிக்காவலில் இவர் கல்வெட்டு இரண்டு உள்ளது. அக்கல்வெட்டில் இவரது மனைவி பொன் கொடுத்ததையும், நொந்தவிளக்கு எரிப்பதற்கு வேங்கடவன் என்பவன் பதினைந்து கழஞ்சு பொன் கொடுத்த செய்தியும் கூறப்படுகிறது.

22-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு திருக்கோடிக்காவுடையார் கோயில் முன் மண்டபத்தின் தென்புற அதிட்டானக் குமுதம், ஜெகதியில் உள்ளது. பல்லவ மன்னன் நிருவருங்கவர்மனின் தேவியான வீரமகாதேவியார், ஹிரண்ய கர்ப்பம் மற்றும் துலாபாரம் ஆகிய வேள்விகளை செய்துள்ளார். திருக்கோடிக்காவலில் மகாதேவர்க்கு 50 கழஞ்சுப் பொன்னை அளித்து அதில் 25 கழஞ்சுப் பொன்னில் இருந்து வரும் வட்டி மூலம் நாள்தோறும் இருநாழி அரிசியும், ஒரு பிடி நெய்யும் நொந்த விளக்கு எரிப்பதற்கு கொடுக்கப்பட்டது. இக்கொடை பணியினைச் செய்ய வேண்டியவர்கள் இவ்வூர்ச்சபையார் ஆவார் என்ற செய்தியும் இக்கல்வெட்டு மூலம் அறியலாம்.

இவரது 24-ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்ட இந்தக் கல்வெட்டு, கோயில் உண்ணாழி மேறகுப்புற அதிட்டானத்தில் உள்ளது. திருக்கோடிக்காவல் கோயிலில் ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு கொண்ட நாடுடைய வேட்டுவதி அரையனான மல்லன் வேங்கடவன் என்பவன் பதினைந்து கழஞ்சுப் பொன்னை கொடுத்து உள்ளான். இப்பொன்னை நாரணக்கச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் பெற்றுக் கொண்டு அப்பொன்னிற்கு வட்டியாக நாள்தோறும் உழக்கு நெய் வீதம் இக்கோயில் அர்ச்சனை

வழிபாடு செய்பவர்களிடம் கொடுத்து வந்தனர். நந்தா விளக்கு எரியச் செய்வதற்கு தவறுகின்ற போது அதை சீர்படுத்துவதற்குரிய கோயில் அதிகாரி பன்மாயேஸ்வரர்கள் என்பதும் இக்கல்வெட்டு மூலம் தெளிவாக புலனாகிறது.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுக்கள் மூலம் திருக்கோடிக்காவல் திருக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலதானங்கள், நொந்தா விளக்கு எரிப்பதற்கு கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் மேலும் பல்வேறு திருப்பணிகள் செய்வதற்கு பல்லவ காலத்து மன்னர்கள் பொன், பொருட்கள் வழங்கியதை நாம் தெளிவுற அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. **A.R.E.** No.52, Vol.XLL, 1931
2. **A.R.E.** No.53, Vol.XLL, 1931
3. **A.R.E.** No.54, Vol.XLL, 1931
4. காசிநாதன். நடன, **திருக்கோடிகா கல்வெட்டுகள்,** தொடர் எண்-192-216/1979, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை – 1992.

5. 23-வது குருமகா சந்நிதானம், **திருவிடைமருதூர் தல வரலாறு,** ஸ்ரீ நமவசிவாய சீர்வளர்சீர் சிவபிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் மூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை, 2006.

6. கிருஷ்ணமூர்த்தி. கே, **திருக்கோடிக்கா தலச்சிறப்பு,** திருவாவடுதுறை ஆதினம் ஆப்செட் அச்சகம், திருவாவடுதுறை.

7. சீனிவாசன். பி.ஆர், **தென்னாட்டுத் திருக்கோயில்கள்,** கங்கா பதிப்பகம், சென்னை, 1998.

8. சுப்ரமணியன். வி, **திருக்கோடிக்காவல் தவலரலாறும், மகிமையும்,** இறைப்பணி அன்பர்கள், திருக்கோடிக்காவல்.

9. முரளி. ஜீ.ச., **தமிழக சிவதலங்கள்,** சதுரா பதிப்பகம், சேரமங்கல்.

சமூகவியல் உணர்த்தும் - புறநானூறு தாக்கம்

சி.விஜயா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புப் பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு.

அறிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீண்ட வாசிப்பு மரபைப் பெற்றுள்ள நூல்களில் புறநானூறு ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்ச் சமுதாயத்தின் அடையாளத்தைச் சுமந்து நிற்கும் புறநானூறு தமிழ் வரலாற்றில் முதன்மையான பங்கு வகிக்கிறது.

புறநானூறு என்பது சங்கப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்ட எட்டுத்தொகையுள் ஒன்று. பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல் கோவூர் கிழார் இறுதியாகவுள்ள புலவர் பலரால் பாடப்பெற்ற நானூறு அகவற்பாக்களையுடையது. வீரத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தும் பிரதியாகப் புறநானூறு புரிந்துகொள்ளப்பட்டது. முடியுடைய தமிழ் மூவேந்தர், கடையேழு வள்ளல்கள், புலவர் மற்றும் வீரர் முதலானவர்களின் வரலாறுகளையும் அறிந்து கொள்ளலாகும்.

சமூகவியல் வரையறை

விலங்குகளைப் போல மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலிருந்து விலகி அறிவு வளர்ச்சியினாலும் பண்பாட்டு முதிர்ச்சியினாலும் அவர்கள் முழுமையை நோக்கி நடைபோட முயன்ற காலத்தில் தான் 'சமுதாயம்' என்ற சொல் பிறந்தது.

> **'சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல்லினை 'சொசைட்டி' என மேனாட்டவர் அழைப்பர், அச்சொல் 'சொசியசு' என்னும் இலத்தின் சொல்லிருந்து பிறந்ததாகும். அதற்கு 'கேண்மை' அல்லது 'ஒன்று கூடுதல்' என்பது பொருளாம்.**
> என்பது அறிஞர்.

'சமூகவியல்' (Sociology) என்னும் சொல்லை உருவாக்கியவர் ஆகஸ்ட் கோம்தே ஆவார். தெயின் என்னும் அறிஞர் இலக்கியத்தைச் சமூகவியல் கண்ணோட்டத்தில் அணுகும்முறையை தந்தமையால், இலக்கியச் சமூகவியலின் தந்தை என்று போற்றப்படுகின்றார். இலக்கியத்தைச் சமூகவியல் அணுகுமுறையில் நின்று ஆராயும் ஆய்வு இலக்கியச் சமூகவியல் (Literary Socilogy) என்று பெயர்.

தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இம்முறையை கொண்டு வந்த பெருமை க.ப. அறவாணன் என்பாரைச் சாரும். பண்டைய குறிஞ்சி நில மாந்தர்கள் ஒன்றாகக் கலந்து வாழ்ந்த வாழ்வே முதன் முதலில் சமுதாயத்தை தோற்றத்திற்கு வித்திட்டது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இலக்கியத்தில் சமுதாயம் உண்டாக்கி உள்ள விளைப்பானை அல்லது தாக்கத்தை ஆராய்வது பற்றி காண்போம்.

செம்மை வாழ்விற்கான நல்லியல்புகள்

சங்கப்பாடல்கள் முழுமையும் நோக்க, மனிதன் நன்னெறி வாழ்வதற்கானக் கருத்துக்களைச் சொல்லக் காணலாம். நல்லது செய்து வாழ்வீர்களாக, நல்லது செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை... தீமை செய்வதை ஒழித்து வாழ்வீர்களாக என்று மன்னனும் மக்களும் உவக்க அறிவுரை பகிர்ந்து உள்ளனர் சங்கப் புலவர்.

மற்றவர் மகிழ்ச்சிக்காக மட்டும் நீ நல்லது செய்யவில்லை... நீ நல்வழியில் செல்லக்கூடிய நெறியும் அதுதான் என்று கூறும் ஈராயிரம் ஆண்டுக்கு முந்தைய நமது தமிழ்ச் சான்றோரின் அறிவுரை நம்மை நல்லாற்றில் உய்க்கும் நயமனா வரிகள்.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமீன், அதுதான்
எல்லோரும் உவப்பது, அன்றியும்
நல்ஆற்றுப் படுஉம் நெறியும்மார் அதுவே.

- புறம் 195-6-9

உடலின் இயல்பு இது, உயிரின் தன்மை இது என்பதைப் பகுத்தாய்ந்து, கிடைத்தற்கரிய மனித வாழ்வைச் செம்மைப்படுத்தி வாழ்வதற்கான சீரிய கருத்துக்களைத் தாங்கி வந்த சங்கப் பாடலை கணியன் பூங்குன்றனார் பாடியுள்ளார்.

யாதும் ஊர் தான். எல்லோரும் உறவினரே என்று துணிவோடு சாதியத்தை மறுத்துரைத்த கணியன் பூங்குன்றனார், நம் உள்ளம் வியப்போடு வியந்து நோக்க தெறிவான கருத்துக்களை அடுக்கிக் கொண்டே போகிறார்.

பெரியோரை வியந்து போற்றுவதுமில்லை, அதே சமயம் சிறியோர்களை (கல்வி அறிவில்லாதவர், வறுமையுடையவர்) இகழ்ந்து பேசுவதுமில்லை. அது மட்டுமன்று. நன்மையும், தீமையும் மற்றவர்களால் நமக்கு வராது. நாமே தான் நமக்குச் செய்வது, துன்பத்தால் வருந்துவதும், பின்னர் அந்தத் துன்பத்திலிருந்து நீங்குவதும் நாமே தான் நமக்குச் செய்ய முடியும்.

இந்த உலகில் இறப்பு என்பது புதுமையான, புதிய நிகழ்ச்சியுமல்ல. ஆதலால், மகிழ்ச்சியோடு வாழ்கின்ற காலத்திலும் வாழ்க்கை மிகவும் இனிமையானது என்று மகிழ்ச்சியடைதலும் இல்லை... துன்பம் வருகின்ற போது வாழ்க்கையின் மீது கோபப்பட்டு, வாழ்க்கை இனிமை இல்லாதது என்று கூறுவதும் இல்லை. மழைநீர் மலை வழியாக, பெரிய ஆறாக ஓடி வர, ஆற்று நீரின் போக்கிலேச் செல்லும் மிதவைபோல – எமது உயிரும் முறையாகச் சென்று கரை செரும் என்று சொல்லிவிட்டு, தான் இவ்வாறு சொன்னதற்கான காரணத்தையும் விவரிக்கின்றார்.

அந்த காரணமும் தானாகச் சொல்லும் காரணமுமல்ல. திறவோர் காட்சியின் தெளிந்தனம் என்கின்றார். ஒழுக்கமுடையோரின் வாழ்ககை முறைகளால் நாமும் உணர்ந்து கொண்டோம். ஆதனை உங்களுக்கும் சொல்கின்றேன் என்று பதமாகச் சொல்லும் வரிகள் சிந்தித்துப் பார்க்கின், சிந்தை களிகூரும் சிறப்பான வரிகள்.

நூற்றாண்டுகள் பல கடந்தும் நிலைத்து நிற்கும் உண்மைகளை உணர்ந்து சொல்லியிருக்கும் தமிழ்ச் சான்றோரை நினைக்க ஈடில்லா இன்பம் மட்டுமல்ல, நம் வாழ்விற்கு ஏற்றமும் தருவது அவைதான்.

யாதும் ஊரே, யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன,
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது

கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.
அரசருக்கே அறமுரைத்த துணிவு - (புறம் - 192)

சங்க இலக்கியங்களைப் புரட்டுந்தொறும் தின்னத் தின்னத் தெவிட்டாப் பலாச்சுளையாய், சிந்தையை நிறைவிக்கும் கருத்துக்கள் வந்து கொண்டேயிருக்கும். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்றொரு புலவர். மன்னன் சோழன் நலங்கிளியிடம் சொல்கின்றனர். 'மன்னா! அறம், பொருள், இன்பம் இவற்றை வளர்த்தலே செல்வம். இவற்றை வளர்க்கவில்லை -யென்றால் உன்னை நீ பாதுகாக்காதவன் ஆகிவிடுவாய்' என்கிறார்.

நிலையா உலகில் நிலைபேறுடன் இன்றும் அவர்கள் வாழ்தல், இத்தகு உயரிய சிந்தனையால்தான் என்பது நம்மையும் நல்வழிப்படுத்துகின்றது.

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம்
ஆற்றாமை நிற் போற்றாமையே.
- (புறம். 28-15-17)

நட்புக்கு இலக்கணம்

'பாரியே! நீ எனக்கு உதவி, என்னோடு பழகிய நாட்களில், உன்னோடு நட்பு கொள்ளத் தகுதியில்லாதவன் என்று வெறுத்துவிட்டாயா? நீ இறந்தபோது நானும் உடன் வருகிறேன் என்று கூற, நீ வேண்டாம் என்று சொல்லி விட்டாயே? உனக்கு ஏற்ற நண்பன் நானில்லையா, இருந்தாலும், இங்கே எப்படி இடைவிடாது நின்னைக் கண்டு உன்னுடன் இருந்தேனோ, அதைப்போல, அங்கும் (மறுபிறப்பிலும்) நான் உன்னுடன் இருக்க, எனக்கு அருள்புரிவாயாக', இலக்கிய வரலாற்றில் நட்புக்கும் நன்றி உணர்விற்கும் இலக்கணமாய் நிற்கும் பாலிதுவாகும்.

மலைகெழு நாட! மூா வண் பாரி
கலந்த கேண்மைக்கு ஒவ்வாய் நீ, எற்
புலந்தனை யாகுவை — புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது
ஒருங்குவரல் விடாஅது ஒழிக எனக்கூறி
இனையை ஆதலின், நினக்கு மற்று யான்
மேயினேன் அன்மையானே, ஆயினும்
இம்மை போலக் காட்டி, உம்மை
இடையில் காட்சி நின்னொடு
உடன் உறைவு ஆக்குக, உயர்ந்த பாலே
(புறம் - 236 — 3-12)

புறநானூற்றில் மக்களாட்சி

புறநானூற்றுக் காலத்தில் மன்னர்களே நாட்டை ஆண்டு வந்தனர். அது முடியாட்சியாய் இருந்தபோலும் குடியாட்சியாய்த் திகழ்ந்தது. புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்களில் சிறந்து நின்ற ஔவையார் ஒரு நாடு செம்மையானதாக, பண்பு சிறந்ததாக, ஒழுக்கத்தைப் பேணிக்காப்பதாக விளங்குதல் வேண்டும். அதற்கு அந்நாட்டில் வாழும் மக்கள் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். அந்நாட்டின் நிலம் வளம் மிக்கதாகவோ, வளமற்றதாகவோ, மேடாகவொ, பள்ளமாகவே கூட இருக்கலாம்.

அதுகொண்டு அந்நாட்டை நல்லது என்றோ தீயது என்றோ கூற முடியாது. நிலம் எவ்வாறாயினும் அதில் வாழ்பவர் நல்லவராகி வாழுவதை வைத்துத்தான் அந்நாட்டை உயர்வுமிக்கதாகக் கூற முடியும் என்ற கருத்தினைக் கூறியுள்ளார். மக்காளட்சியில் மக்களின் பண்பாடு சிறந்திருந்தால்தான் அது சிறந்து விளங்க இயலும் என்ற பெருண்மையை வெளிப்படுத்தியுள்ளார். இச்சீரிய சிந்தனை, இப்பாடலில் இடம் பெற்றிருத்தலை உணர வாய்ப்பேற்பட்டுள்ளது.

'நாடு ஆகு ஒன்றோ காடு ஆகு ஒன்றோ
அவ்வழி நல்லை, வாழிய நிலனே'

- (புறம் 187)

மன்னன் தான் ஆளும் நாட்டின் மக்கள் நன்மக்களாக, மனமகிழ்ச்சியோடு வாழ அவர்களைப் பேணிக் காத்தல் வேண்டும் அவர்கள் வாழ்க்கையில் இன்ப, துன்பங்களில் பங்கேற்று அவர்களின் நல்வாழ்விற்கு ஆதாரமாக விளங்கவேண்டும். எனவே மன்னன் அன்பும், அருளும் உடையவனாய், தன் நாட்டையும் தன் மக்களையும், ஒருதாய் தன் குழந்தையை எவ்வாறு அன்பு பாராட்டி, பால் நினைந்தூட்டும் தாயாக, குழந்தையின் துன்பத்தைத் தன் துன்பமாக, அதன் மகிழ்ச்சியைத் தன் மகிழ்ச்சியாகக் கொண்டு வாழ்வது போலத் தன் நாட்டைப் பேணுதல் வேண்டும் என்ற நல்லாட்சிச் சிந்தனையை, மன்னன் மக்கள் நல்வாழ்விற்கே முதலிடம் தருதல் வேண்டும் என்று மக்களாட்சிக் கோட்பாட்டை, நரிவெரூஉத்தலையார் தம் பாடலில் இடம் பெறச் செய்துள்ளார். அவர், கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னனிடம், செவியறிவுறூஉத் துறையில், அறிவுறுத்தியுள்ளார்.

'...நின் ஒன்று மொழிவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே, அது பெறல் அருங்குரைத்தே'

- (புறம் - 5)

புறநானூறு கூறும் கடமைகள்

மகனைப் பெற்று அவனை பாதுகாத்தல் என்னிடத்தில் உள்ள கடமை ஆகும். அவனை தன் குலத்திற்குரிய படைக்களப்பயிற்சி ஆகிய கல்வி, அதனை பெறுவதற்குரிய அறிவு, அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாக ஆக்குதல் தந்தைக்கு கடமையாகும். வேல் முதலிய படைக்கருவிகளை திருத்தமாகச் செய்து கொடுத்தல் கொல்லனுக்கு கடமையாகும் குளிர்ச்சி உடைய நீர், நிலங்களை அவன் தகுதியறிந்து பரிசாக வழங்குதல், அந்நாட்டையாளும் வேந்தனுக்கு கடமையாகும். ஒளிவிடுகின்ற வாள்படையை உடைய அறிய போரில், பகைவர்களைத் தோற்றோடச் செய்து அவர்களுடைய யானைப் படையை அழித்து மீளுதல் காளை போன்ற வீரனுக்குக் கடமையாகும்.

இப்பாடல் ஒரு நாட்டில் வாழும் பலதிறப்பட்டோரும் செய்ய வேண்டிய கடமைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. ஒரு சமுதாயத்தில் வாழும் தனி மனிதர்களும், அரசம் செய்ய வேண்டியவை அனைத்தையும் சொல்லியுள்ளது. இக்கடன்களை அனைவரும் நிறைவேற்றும் பொழுது நாடும் வாழும். அதில் வாழும் மக்களும் குறையொன்றுமில்லாது மனமகிழ்ச்சி மிக்கோராய் வாழ்வார்.

'ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

- (புறம் - 312)

தொகுப்புரை

தமிழின் வரலாறுகளையும், பழம்பெருமைகளையும், பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்வதற்குச் சிறந்த கருவியாகவுள்ள நூல்கள் எல்லாவற்றிலும் இது முதன்மையானது. அரசரொழுக்கம், ஒற்றுமை, அன்பு, அருள் துறவு, வாய்மை, தவம், கற்பு, நட்பு முதலிய எண்ணிறந்த அரங்களும், பண்புகளும் இவற்றிடையே நன்கு விளங்கிக் கிடக்கின்றன. தமிழ் மக்கள் இதனைப் படித்தலால் உயர்ந்த எண்ணங்களும் ஊக்கமும் உடையராவர் என்பதில் சிறப்புக்குரியதாகும்.

துணைநின்ற நூல்கள்

1. துரைசாமிப்பிள்ளை சு.ஔவை – புறநானூறு மூலமும் உரையும் கழக வெளியீடு, சென்னை.
2. பாஸ்கல் கிஸ்பர்ட்.எஸ்.ஜெ,
சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,
தமிழ்வெளியீட்டுக் கழகம், சென்னை - 1964

புதுச்சேரி மாநில நாட்டுப்புற இசைப்பாடல் வகைகள் ஓர் ஆய்வு

வீ.வீரகுமாரி, முனைவர்பட்ட ஆய்வாளர், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்

புதுச்சேரி மாநிலமானது ஒரு யூனியன் பிரதேசம் ஆகும். இது பிரஞ்சு காலனியாக இருந்து வந்த பகுதி; புதுச்சேரியில் நான்கு பகுதிகள் அடங்கி காணப்படுகின்றன. புதுச்சேரி, காரைக்கால், மாஹே, யானம் போன்றவையாகும். புதுச்சேரியும் காரைக்காலும் தமிழகத்தின் ஒற்றி காணப்படுகின்றன. இதில் குறிப்பாகக் கரைக்கால் தமிழகத்திலே அமைந்துள்ளது. அதனால் புதுச்சேரி மாநிலத்திற்கு உட்பட்ட பகுதியாகக் காணப்படுகிறது. மாஹே கேரளாவிலும் யானம் ஆந்திர மாநிலத்திலும் அமைந்துள்ளன. புதுச்சேரி இந்த நான்கு பகுதிகளையே தன்னுள் அடக்கியதால் இங்கு மொழி பேதமின்றி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

புதுச்சேரி ரோமானியர்கள் வாணிபம் செய்த இடமாகக் கருதப்படுகின்றது. புதுச்சேரி முதல் நூற்றாண்டில் “புதுகி” என்று பெயர் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இங்கு நிறைய வேத பாடசாலைகள் இருந்ததால் புதுச்சேரியை “வேதபுரி” என்று அழைத்தனர். 11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டில் புதுச்சேரியை “புதுவை” என்று அழைக்கப்பட்டது.[1]

புதுச்சேரி 10 ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட சோழர்கள் 300 ஆண்டுகள் ஆட்சி செய்யப்பட்டது. பின்பு பாண்டிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது. 1638 ஆம் ஆண்டு இஸ்லாமிய மன்னர் பிஜா பூர் சுல்தானால் செஞ்சி வரை ஆட்சி செய்யப்பட்டது. பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி 1673 ஆம் ஆண்டு புதுவையை தலை நகராகக் கொண்டு தொழில் தொடங்கப்பட்டது.[2]

மிகக் குறிப்பிடத்தக்க வாணிபதலமாக திகழ்ந்து புதுச்சேரி மாநிலம். பிரிடிஸ்காரர்கள் இங்கு வாணிபத்தைத் துவங்க ஏதுவாக அரிக்கன்மேடு பகுதியை தேர்வு செய்து அங்கு வாணிபத்தைத் துவங்கினர். இன்றளவிலும் அரிக்கன்மேடு பகுதி பாதுகாக்கப்படுகிறது.

புதுச்சேரிக்கு 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி சரியாக காலை 6.45 மணிக்குச் சுதந்திரம் கிடைத்தது. இதனை இன்றளவிலும் நவம்பர் 1 ஆம் தேதி விடுதலை நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

சித்தர்கள் அதிகம் வாழ்ந்ததால் புதுச்சேரியைச் சித்தர் பூமி என்று அழைக்கின்றனர்.[3] குறிப்பாகப் புதுச்சேரியில் அரவிந்தர் மற்றும் அன்னை இங்கு வாழ்ந்து உலகளவில் பிரசித்தி பெற்றவர்கள். ஆசிரமம் மற்றும் அன்னை சமாதி இங்கு உள்ளன. பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் வாழ்ந்த புதுவை இது.

இங்கு பாரம்பரியமிக்க கோவில்கள் நிறைய அமைந்துள்ளன. குறிப்பாகப் புதுச்சேரிக்கென்றுள்ள சின்னமானது ஆயி மண்டபம் என்று அழைக்கப்படுகின்றது. புதுச்சேரியை ஒற்றியே ஆரோவில் சர்வதேச நகரமும் 'அமைந்து காணப்படுகிறது.

புதுச்சேரி மாநில நாட்டுப்புறப் பாடல் வகைகள்

புதுச்சேரி மாநில நாட்டுப்புறப் பாடல்களானவை பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள இடைப்பட்ட காலங்களில் அடிப்படையில் தாலாட்டு, குழந்தைப்பாடல், தொழிற்பாடல், காதல்பாடல், மணவாழ்த்துப்பாடல், பக்திப்பாடல், ஒப்பாரிப்பாடல், ஆட்டப்பாடல், கதைப்பாடல் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழக நாட்டுப்புறப்பாடல் வகைகளையே இன்றளவிலும் புதச்சேரியில் பின்பற்றி வருகின்றனர். இதில் புதுச்சேரிப் பகுதியில் உள்ள பாகூர், சேந்தநத்தம், சேறியமேடு, இருமாபக்கம், திருபுவனை, திருவண்டார் கோவில், குருவிநத்தம், வீரபிம்பட்டினம் போன்ற பகுதிகளில் நாட்டுப்புறப்பாடல்கள் பிரசித்தி பெற்று வருகின்றன.

புதுச்சேரி மாநில நாட்டுப்புறப் பாடல் வகைகள் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள இடைப்பட்ட காலங்களின் அடிப்படையில் தாலாட்டுப் பாடல், குழந்தைப்பாடல், தொழிற்பாடல், காதல் பாடல், மணவாழ்த்துப்பாடல், பக்திப்பாடல், ஒப்பாரிப்பாடல், ஆட்டப்பாடல், கதைப்பாடல் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தாலாட்டுப்பாடல்

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு அமைந்துள்ளது. தாலாட்டுப்பாடலைத் தாய்க்குலம் வளர்த்த தமிழ் இலக்கியம் என்று கூறலாம்.

தாலாட்டுப் பாடலைப் பெண்கள் தொட்டிப் பாட்டு, ராராட்டு, ரோராட்டு, தூரிப்பாட்டு என்றெல்லாம் கூறுகின்றனர். இதில் 'தொட்டிப்பாட்டு' என்பதே பெரு வழக்காக உள்ளது, குழந்தையைத் தொட்டிலில் போட்டு பாடித் தூங்க வைப்பதால் தொட்டிப்பாட்டு என்று பெயர் பெற்றதாகக் கூறலாம்.

தாலாட்டின் சொல்லாய்வு

தாலாட்டு என்ற சொல் தால் + ஆட்டு என்ற இரு சொற்களின் சேர்க்கையால் பிறந்திருக்கலாம். தால் என்பது நாக்காகும், ஆட்டு என்பதற்கு அசைத்தல், ஆட்டுதல் என்று பொருள் கொள்ளலாம், நாவை ஆட்டிப் பாடுவதால் இது தாலாட்டு என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். ஒரே சொல் இடத்திற்குத் தகுந்தாற்போல் மாறி மாறி ஒலிக்கப்படுவதைப் போலத் தாலாட்டை ராராட்டு, ரோராட்டு, ஓராட்டு, ஓலாட்டு என்ற சொற்களால் அழைக்கின்றனர்.

தாலாட்டுப்பாட்டு

கண்ணே என் கண்மணியே
சீக்கிரமாய் நீ உறங்கு
கோழி கூவும்நேரமுன்னே
நெல்லறுக்க போகனும்டா
ஆராரே அரிராரோ

முழங்காலு சேத்துக்குள்ளே
முன்ன நின்று ஏறனுன்டா
உச்ச வெயில் சாய்ஞ்ச பின்னும்
நாத்து நட வேனும்மடா
ஆராரே அரிராரோ[4]

இப்பாடலானது குழந்தையைத் தாலாட்டும் வகையில் அமைந்துள்ளது. தன் தயானாளவள் தான் படும் துன்பங்களை துயரங்களைச் சொல்லித் தாலாட்டுப் பாடலாகப் பாடியும் தான் செய்யும் வேலைச்சுமையின் நிலையையும் நினைத்துக் கண்ணீர் விடாமல் தன் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடலாகப் பாடித் தன் குழந்தையைத் தொட்டிலில் தூங்க வைக்கிறாள்.

குழந்தைப் பாடல்

குழந்தைகள் விளையாடும்போதும் பிறரைக் கேலி செய்யும் போதும் பாடல்கள் பாடுகின்றனர். பெரும்பாலும் பாடலில்லாதக் குழந்தை விளையாட்டுக்கள் குறைவு எனலாம்.

புதுச்சேரி மாநிலத்தில் குழந்தைகள் விளையாட்டுப் பாடல்களாகக் கண்ணாமூச்சிப்பாடல், வேடிக்கைப் பாடல், கேலிப்பாடல் ஆகியவற்றைப் பாடுகின்றனர்.

விளையாட்டுப் பாடல்

ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரே பூ பூத்திச்சு
இரண்டு குடம் தண்ணி ஊத்தி
இரண்டே பூ பூத்திச்சு.[5]

என்ற பாடல் விளையாடும்போது சிறுவர்கள் சேர்ந்து பாடும் பாடலாகும்.

கேலிப் பாடல்

ஆ தங்க சைக்கிள் வண்டி தாங்கா சைக்கிள் வண்டி தாங்கா ஏறாம் பெட்டி வண்டி
பெ தட்டி உட்டா எங்க வோவும் தையக்கூட ஓரம் போவும்[6]

ஒரு ஆண் பெண்ணைப் பார்த்துக் கேலி செய்து பாடும் பாடல். அவன் அவளைக் கேலி செய்து பாடும் பாடல் இது.

தொழிற் பாட்டு

<u>வண்டிக்காரன் பாட்டு</u>

பாதையில போகும் போது
குண்டும் குழியும் கிடக்கும்
பார்த்து பக்குவமா ஓடுங்கடா
காலு போன போக்குலதான் போகாதடா[7]

கடினமான வேலைகளைச் செய்யும்போது வேலை செய்யும் களைப்பு தெரியாமல் இருக்கும் பொருட்டுப் பாடல்கள் பாடுவர். வண்டியோட்டி தன் மாடுகளின் வாயிலாக வண்டி ஓட்டும் போதும் தன்னுடைய களைப்பு தெரியாமல் இருக்கப் பாடும் பாடலாகும்.

நடவுப் பாடல்

கட்டொடு வந்த கலப்பையான் இங்கு காணிக்கு ரெண்டு கிடாரியா
முத்தூ மாணிக்க கொள்ள உழப்போர வாறு வடமல மாயவா.

புதுச்சேரி மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாத்துக்காலில் விளையும் நெல்களைப் பற்றிய பாடல் இது. நடவு நடும்போது பாடும் பாடல் இது. புதுவையில் கண்டுபிடித்த நெல்மணிகள் பற்றிய பாடல் ஆகும்.

கும்மிப் பாடல்கள்

கும்மி மிகப் பழமையான நாட்டுப்புற ஆடல்களுள் ஒன்று, கும்மியாட்டத்தின் முன்னோடியாகக் குரவை ஆட்டத்தைக் கூறுவர். பழைய குரவை அயர்வதற்கும் புதிய காப்பு கொட்டுவதற்கும் ஒற்றுமையிருக்கிறது என்றும் கும்மியடித்தல் போன்ற சொல்லே கொப்பு கொட்டுதல் எனலாம் என்று டாக்டர் தமிழண்ணல் அவர்கள் கூறுகின்றார்.

கும்மி தென்னிந்தியாவில் பல மாநிலங்களில் ஆடப்படுகின்றது. திருவிழாக் காலங்களிலும் நிலவுக் காலங்களிலும் பெண்களால் விரும்பி ஆடப்படும் விளையாட்டு “கும்மி, பல இடங்களில் பெண்களோடு ஆண்களும் கலந்து கொள்கின்றனர். ஆண்கள் மட்டுமே விளையாடுவதாகக் கூறப்படும் கும்மி, “ஒயில் கும்மி□ என்றழைக்கப்படுகிறது.

கும்மிப் பாட்டு

நல்ல வடக்க பாத்த தலப்பாயன் உங்க வாசப்படி
மேல நித்திரயான் வாசப்படி மேல நித்தரயன்
கடைக்கு போரனங்கையய்யாவே கொஞ்சம்
காலமொடக்கினாலாகாதா.

இந்தப் பாடல் கும்மி அடித்துக்கொண்டு தன்னுடைய முறையாக உள்ள ஆண்களை விளையாட்டாகப் பரிகாசம் செய்து பாடும் பாடல் ஆகும்.

காதல் பாடல்

கருத்த நிறத்தழகா தேக்க மரத்தழகா
சுருளுமுடியழகா பூத்த செடியழகா
சாமத்துல அர்த சாமத்துல

இப்பாடலில் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் அவர் அவர்களின் அழகின் தனித்துவத்தையும் இருவரின் காதல் உறவுகளைப் பற்றியும் தங்களின் காதலின் ஆழத்தையும் ஒருவர் மாற்றி ஒருவர் காதல்வயத்தோடு பாடுவதே இப்பாடலின் சிறப்பாகும்.

தெம்மாங்கு

கம்பன் கொல்ல கதிரயெல்லாம்
காளமாடு அழிச்சிடுச்சி
காளமாட்டஅடக்கவந்த
காட்டு யானை தான் எங்க மாமன்

இந்தப் பாடலில் தன்னுடைய மாமனைப் பற்றிப் புகழ்ந்து அவரின் திறமைகளைப் பற்றிக் கூறிப் பாடப்பட்டுள்ளது.

கல்யாண வாழ்த்து

கல்யாணம் கல்யாணம் காசிராசா கல்யாணம்
கல்யாணம் மென்று சொல்லி கடலேரி பாக்கு வச்சி

இக்கல்யாண வாழ்த்துப் பாடலானது யார்யார்க்கெல்லாம் பாக்கு வச்சி கல்யாணம் செய்யப்பட்டதாகப் பாடப்படுகிறது. திருமணத்திற்கு வந்த கூட்டங்களைப் பற்றியும் மணமக்களை வாழ்த்தியும் வயதில் பெரிய பெண்ணானவள் பாடுகின்றாள்.

பக்திப்பாடல்

கூத்தனுடன் தில்லையிலே ஆடிய மாகாளி
பெரும் கூட்டமாய் மக்கள் எல்லாம் வணங்கிடும் பாவானி

தெய்வப்பாடலானது அனைத்து மதங்களிலும் உள்ளது. ஆனால் இதில் வரும் அம்மன் பாடலானது தில்லையில் சிதம்பரத்தில் உள்ள மாகாளி சிவகாமி, அபிராமி, புவனேஸ்வரி. இப்படிப் பல பெயர்களை அம்மன் அழைக்கப்படுகின்றாள். மேலும் பெண்களின் காவல் தெய்வமாகவும் விளங்குகின்றாள்.

ஒப்பாரிப் பாடல்

மனிதனுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை அவன் பிறப்பில் தாலாட்டு தொடங்கி இறப்பில் ஒப்பாரியில் முடிவதை நம்மால் உணர முடிகிறது.

பத்துக் கட்டு செதாலு பங்காளி தீ மூட்டினா
பத்தி எரியமாட்ட பரலோகம் சேரமாட்ட
நான் பெத்த பாலகன் கொல்லி வச்சா
பத்தி எரிஞ்சிடுவ பரலோகம் சேர்ந்திடுவ

கணவனை இழந்த மனைவி தன் கணவன் இறந்த துக்கத்தில் தன் மகன் தீமூட்டினால் மட்டுமே தன் கணவனின் ஆன்மா பரலோகம் சேரும் என்று சொல்லிப் பாடும் பாடலாக உள்ளது.

புதுச்சேரிக்கென்று சில நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, தாலாட்டில் சிறிது வித்யாசங்கள் அடங்கிக் காணப்படுகின்றன.நெல் நடும் பொழுது நடவு பாட்டும் இங்கு பிரசித்தி பெற்று விளங்குகின்றது. கலை எடுக்கும் பெண்கள் பாடும் கேலிப் பாடல்கள் மிகவும் இங்கு மீனவ கிராமங்களில் பாடப்படும் பாடல் சற்று வித்யாசமாகக் காணப்படுகின்றன. மீன் பிடிக்ககச் செல்லும் மீனவர்கள் கடல் மாதாவை வணங்கிச் செல்வர். இஷ்ட தெய்வத்தை நினைத்து வரிகள் அமைத்தும் பாடுவர். புதுச்சேரியில் திருவிழாக் காலங்களில் ஊரணி பொங்கலிடும் நேரங்களில் பக்தியுடனும் சிலர் பாடி கூடி மகிழ்வர். அதேபோல் திருவிழாவில் வரும் பெண்களைக் கேலி செய்து பாடும் காதல் பாடலும் இங்கு இடம் பெறும். பெண்கள் சடங்கு ஆகிவிட்டால் அந்த இல்லத்தில் பெண்கள் ஒன்று கூடிப் பாடி ஆடி மகிழ்வர். இதே போன்று திருமண வீட்டிலும் பெண்கள் இளைஞர்கள் சேர்ந்து கும்மி அடித்துப் பாடி மகிழ்வர்.

புதுச்சேரி மக்கள் தங்கள் சுகதுக்கம் போன்றவற்றில் நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் ஒப்பாரி, தாலாட்டு, விளையாட்டுப்பாடல் போன்றவற்றைப் பின்பற்றி நாட்டுப்புற இசையைப் பாடியும கேட்டும் மகிழ்கின்றனர். சிலர் சமூக சிந்தனைமிக்க பாடல்களையும் நவீனக்காலத்திற்கு ஏற்றாற்போல் மெட்டமைத்துப் பாடி மகிழ்கின்றனர். புதுச்சேரி மாநிலம் சித்தர்கள் நிறைந்த பூமி. இதில் நாடகத்தந்தை சங்கரதாஸ் சுவாமிகளின் ஆத்மாவும் நிறைந்து காணப்படுகின்றது. உதாரணம் சங்கரதாஸ் சுவாமிகள் சமாதியான இடம் புதுச்சேரி ஆகும்.

இதிகாசங்களில் தொன்மக்கதைகள் வரும் கிளைக் கதைகளைத் தழுவித் தனி நாடகமாகக் காவியமாக வடித்து மக்களுக்கு வழங்கும் முறை காலம் காலமாக இலக்கியத்தில் நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆனால் இந்தக் காலக் கூத்தில் தொழில் நுட்பக் காரணமாக நாட்டார் கூத்துக்கள் புதுவடிவம் பெற்று இங்கு ஆடப்படுகின்றன. இருந்தபோதிலும் பாரம்பரியம் மாறாமல் பாரதக்கதை மையமாகக் கொண்டு புதுச்சேரியில் கூத்துக்கள் நிகழ்த்தப்பெறுகின்றன. கூத்தின் மரபுகளைப் பின்பற்றி ஆடப்படும் கூத்தில் பாடப்படும் ஒவ்வொரு பாடலும் குறிப்பிட்ட ராகத்தை ஒத்துக் காணப்படுகின்றது. தாளக்கருவி வாசிப்பவர் ஹார்மோனியம் வாசிப்பவரகள் தாளக்கட்டும் பாமடை மீறாமல் மிகவும் அழகாகத் தங்களின் பங்களிப்பை வெளிப்படுத்துவர்.

புதுச்சேரியில் மாரியம்மன், திரௌபதியம்மன், ஐயனார், வீரன், பாவாட ராயன் போன்ற தெய்வங்களின் கதைகளை அதிகம் பயன்படுத்துவர். புதுச்சேரியில் ஆடப்படும் கூத்தில் புதுச்சேரி மாநிலத்தில் இந்தக் கிராமத் தேவதைகள் புரியும் அருளையும் இத்தெய்வங்களின் பெருமைகளையும் மெட்டமைத்துப் பாடி மகிழ்கின்றனர். திரௌபதை அம்மனின் பாரதக் கதைகளை மிகவும் விரும்பி மறக்காமல் இருக்க இது போன்ற கூத்துக்கள் நிகழ்த்தப்பெற்று நிறையக் கூத்துக் கலைஞர்கள் பெருமை சேர்த்து வருகின்றனர்.

புதுச்சேரி மாநில நாட்டுப்புறக் குறிப்பிடத்தக்க கலைஞர்கள்

நாட்டுப்புறக் கலைக்கென்று புதுச்சேரியில் நிறையக் கலைஞர்கள் காணப்படுகின்றனர். குறிப்பாக வில்லுப்பாட்டில் கலைமாமணி பட்டாபிராமன் அவர்களும் உடுக்கைப் பாடல் மற்றும் காளியாட்டத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய கலைமாமணி ஞானராஜ் அவர்களும் கூத்துக் கலைகளில் சிறந்து விளங்கும் கலைமாணி கோனேரி ராமசாமி அவர்கள் பழமை மிகுந்த பாடல் பாடி நவீனக் காலத்து நாட்டுப்புற இசைக்கலைஞர் கலைமாமணி ஜெயமூர்த்தி அவர்கள் இவர்களைப் போன்று நிறையக் கலைஞர்கள் புதுச்சேரியில் பிறசித்தி பெற்றுத் திகழ்கின்றனர். இவ்வாறு புதுச்சேரி மாநிலம் ஓர் சிறந்த நாட்டுப்புறக் கலையின் பிறப்பிடமாகத் திகழ்வதனை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. டாக்டர் வாசுகி, புதுவை வணிக வரலாறு, பக்.10-12
2. கு.இராசேந்திரன், இருபதாம் நூற்றாண்டுப் புதுச்சேரி இலக்கியப் பதிவுகள், பக்.12-16
3. சி.எஸ் முருகேசன், காரைக்கால் வரலாறு, பக்.9-10
4. 26.6.2016 அன்று நாட்டுப்புற இசைக்கலைஞர் ராதா அவர்களிடம் கண்ட நேர்காணல்
5. 15.7.2016 அன்று நாட்டுப்புற இசைக்கலைஞர் சரோஜா அவர்களிடம் கண்ட நேர்காணல்
6. 27.7.2016 அன்று நாட்டுப்புற இசைக்கலைஞர் ரங்க நாயகி அவர்களிடம் கண்ட நேர்காணல்
7. 28.8.2016 அன்று நாட்டுப்புற இசைக்கலைஞர் நாகம்மாள் அவர்களிடம் கண்ட நேர்காணல்

பெண்ணிய போராட்டங்களும் - பொதுத் தன்மைகளும்

த.வீரமணிகண்டன், உதவிப் பேராசிரியர்,ஆங்கிலத்துறை, அரசர் கல்லூரி,திருவையாறு, தஞ்சாவூர்,

முன்னுரை

மனித சமுதாய வரலாற்றில் மனித இனத்தைச் சாதியின் அடிப்படையிலும், இனத்தின் அடிப்படையிலும், ஆதிக்கச் சமூகத்தினரால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும், புனையப்பட்ட கருத்தமைவுகளையும் புரிந்துகொள்வதற்கு இன்றைய புதிய சிந்தனைகள் உதவுகின்றன. இப்புதிய சிந்தனைகள் வழி புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றே பெண்ணியம் ஆகும். பெண்களும், ஆண்களும், அறிவியலும், ஆற்றலும் இயல்பாகவே சமமானவர்கள் என்ற கருத்தை பெண்ணியவாளர்கள் கூறுகின்றனர்.

பெண்ணியம் விளக்கம்

'FEMINISM' என்ற ஆங்கிலச் சொல் பெண்ணியம் என்ற சொல்லை விளக்கும் சொல்லாகும். 'Femina' என்ற லத்தீன் மொழி சொல்லின் திரிபுதான் Feminism என்பது 1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையும் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தியது.

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்று 'சார்லட் பன்ச்' என்பவரும் பெண்ணோ ஆணோ – சமூதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதற்கு, வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவராக இருக்க வேண்டும் என்று சைமன்-டி பெவாயர் என்பவரும் விளக்கம் தருகின்றனர்.

மரபு சார்ந்த பெண்களின் நிலைப்பாடு

சங்க காலம் தொடங்கி 20-ம் நூற்றாண்டு வரை இலக்கியங்களில் பெண்களின் சித்தரிப்பு என்பது பற்றி ஆய்வு நூல்கள் பலவும் வெளிவந்துள்ளன. மரபுப் பெண்கள் பற்றிய கருத்தினை எடுத்தியும் நூல்கள் பல வெளிவந்தாலும் அவை யாவும் பெண் அடிமைகளை மட்டுமே சுட்டுகின்றனவே தவிர அவற்றைக் களைய மாற்று வழி எதுவும் கூறவில்லை.

பெண்களுக்கு அவர்களது பிறப்பில் இருந்தே போராட்டம் தொடங்கி இறக்கும் வரை நீளுகிறது. பெண் திருமணத்திற்கு முன்னால் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். என்று காலம் காலமாக ஆண்களைச் சார்ந்த நிலையிலேயே சமூகம் வளர்த்து வந்துள்ளது.

வறுமையில் வாடும் பெண்ணாக இருந்தாலும், அல்லது செல்வம் அதிகம் படைத்தப் பெண்களும் கூட வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டனரே தவிர பெண்களுக்கான உரிமைகளை பெறவில்லை. ஒழுக்கம், பண்பாடு இவற்றில் வழுவாது பெண்கள் எவ்வகை இன்னல்கள் வந்தாலும் இவற்றைக் கடைப்பிடித்துவாழ வேண்டும் எனக் கட்டுபாடுகள் கொண்ட சமூகத்தைத்தான் நாம் காண்கிறோம்.

பெண்ணின் போராட்டங்கள்

பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. மனப்போராட்டம்
2. சமூகத்தோடு போராட்டம்
3. பாலியல் போராட்டம்
4. வாரிசு போராட்டம்

இளமையில் பால்ய மணம் செய்து கொண்ட திருமணம் வாழ்க்கை பற்றிய அறிமுகமே, இல்லாத வயதில் போராடும் பிஞ்சு உள்ளங்கள். திருமணமான பிறகு கணவனால் ஏற்படும் கொடுமைகள், குடும்பத்தில் மாமனார், மாமியார் ஆகியோர்களால் ஏற்படும் போராட்ட நிலை, கணவனை இழந்த பிறகு, விதவை எனும் பட்டம், ஆதரவற்ற ஏழ்மை நிலை, பொருளாதார தேவைகளுக்காக, பரத்தமை மேற்கொள்ளல், பணிபுரியும் இடத்தில் பாலியல் தொந்தரவு என பெண்ணின் போராட்டகளமானது எப்போதும் ஆடுகளமாகவே இருக்கிறது. இப்பிரச்சனைகளையெல்லாம் எண்ணிப் பெண்ணானவள் மனதளவில் தயார்படுத்திக் கொண்டாலும் உடலளவில் போராட்டங்களைத் தாங்க முடியாமல் இறக்கும் நிலை காணப்படுகின்றது.

ஆண் குழந்தைகள் மதித்துப் போற்றப்படுகின்றனர். ஆண் வாரிசு இல்லையென்றால் கணவன் மற்றொரு பெண்ணை மணம் செய்து கொள்ளலாம் என்பதும் விதவைப் பெண்களுக்குக் கடுமையான சட்டத்திட்டங்கள் போடுவதும் இன்றுவரை நடந்தேறி வருகின்ற நிகழ்வாகும்.

சமூகத்தில் பெண்களின் நிலை

சமூகம் ஆண், பெண் என இருபாலருக்கும் இருவேறு நடத்தைகளையும் சமூகப் பண்புகளையும் கற்பித்து அவற்றைக் குழந்தை நிலையிலிருந்து வளர்க்கத் தொடங்குகிறது. ஆண் என்றால் ஆளப் பிறந்தவன், பெண் என்பவள் அடங்கிப் போகின்றவள் என்ற நிலையும், சமூகத்தில் தணிக்கப்படுகின்றது. ஆதறவற்ற பெண்களையும் கணவனை இழந்த பெண்களையும் இச்சமூகமானது போற்றுவதில்லை. குறிப்பிட்ட வயதிற்கு மேல் வெளியே பெண்கள் சுதந்திரமாகச் செல்வதை இச்சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. பெண்களின் கடமைகளை இவையிவை என விதித்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த சமுதாயத்தில் பெண்களுக்கு உரிமைகளை கொடுக்கவோ, மரபுகளை மாற்றவோ தயக்கம் கொள்ளும் நிலையைக் கொண்டதாக அமைந்திருப்பதை அறியலாம்.

மேலும் மரபு, பண்பாடு, ஒரு பக்கக் கற்ப, தன்னுரிமையில்லாத சார்புநிலை, வரதட்சனை, சமய ஆதிக்கம், மதிப்பில்லா உழைப்பு இரட்டைச்சுமை, பாலியல் சார்ந்த கருப்பை ஆதிக்கம், கல்வி கற்கும் உரிமை மறுக்கும் நிலை என சமூகத்தில் பெண்களுக்கு பல்வேறு இன்னல்கள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கணிகையர் குலப்பெண்களிடம் சென்றுவரும் கணவர் மார்களை முகமலர்ச்சியுடன் மனைவி வரவேற்க வேண்டும் என்று நம் இலக்கியங்கள் காட்டுகின்றன. அப்படிச் செய்யாவிட்டால் அவன் வெறுப்புற்று நிரந்தரமாகவே அவளை விட்டு விலகிவிட, பின்னர் அவளும், பிள்ளைகளும் வறுமையில் வாட நேரலாம் என அச்சுறுத்துகின்றன. புறநானூற்றுப் பாடல்கள் அக்காலத்து நீதி நூல்களும் ஆண், பெண் இருபாலரையும், சமன்செய்து சீர் தூக்கிப் பார்க்கும் நீதிநூல்களாக

அமையவில்லை, கணவனை இழந்த பெண்ணைச் சங்க இலக்கியம் (பருத்திப் பெண்டிர்) என இனம் காட்டுகிறது.

உழைத்து உண்ண அனுமதித்த அக்கால சமூதாயம் அவர்களின் இயல்புகளைச் சிறுமைப் படுத்திக் கொடுமைபடுத்தியுள்ளது. தலை மழிக்க வேண்டும் என கட்டளையிட்டுள்ளது. கற்கள் உறுத்தும் தரையில் தான் அவர்கள் படுக்க வேண்டும் என அடம் காட்டியுள்ளது. உப்பு இல்லா உணவுதான் உண்ணை வேண்டுமெனவும் உணர்த்திய அச்சமுதாயம் மனைவியை இழந்த கணவனுக்கு ஏதேனும் கட்டளையிடப்பட்டுள்ளதா? இல்லையே.

உலகம் முழுவதும் ஆணினத்திற்கு முதன்மை கொடுத்துப் பெண்ணினத்திற்கு இரண்டாம் நிலைதான் வழங்கியுள்ளது. மனித இனம் பற்றிய பொதுவான வழக்குகளில் கூட ஆண்பாற் சொற்களே அதிகம் காணப்படுகின்றன. "சான்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை" பெண் வாட்டஞ்சாட்டமாக இருந்தால் கூட சாதனை புரியமாட்டாள் என்பதற்காக மேற்கண்ட தொடர் எழுத்தாளப்படுகின்றது. பெண்பார் புலவரான ஔவையார் கூட "தையல் சொல்கேளேல்" என ஆத்திச்சூடியில் பெண்மைக்கு எதிராக கூறிப் பெண்ணினத்தின் தன்மையைக் குறைத்துள்ளார்.

ஆண், எப்படி இருந்தாலும் அனுசரித்தே போக வேண்டும் என்ற நியதிதான் வலியுறுத்தப்படுகின்றது. உரிமைகளும், சலுகைகளும், மதிப்புகளம் ஆணுக்கு பொறுப்புகளும், கடமைகளும், இழிவுகளும் பெண்களுக்கு என போராட்டத்துடனே பெண்ணானவள் காலம் கழிக்கிறாள்.

ஏதேனும் ஒரு சூழலில் பெண்ணுக்கு முதலிடம் கிட்டுமாயின் இச்சமுதாயமானது அதனைப் பொறுத்துக் கொள்ளும், ஆனால் போற்றுவதில்லை. இதுதான் இச்சமூகத்தின் மனப்பாங்கு, ஓய்வெடுக்க பிந்தியும் உழைக்க முந்தியும், பின்தூங்கு முன் எழ வேண்டியவள் பெண்.

தன்னுடைய தனிப்பட்ட ஆர்வத்திற்கு ஆசை படக்கூடாது என்றும் பின்னின்று தான் பெருமை சேர்க்க வேண்டும். முன்னின்று பெருமையடையக் கூடாது என்றும் கட்டளையிட்டுள்ளது இச்சமுதாயம். இணைந்து பணியாற்றும் சூழலிலும் ஆண்கள் உண்டாக்கிய பூசலுக்கு பெண்களைத்தான் குறை கூறுகிறது. வாழ்க்கை என்னும் பாட்டு மேடையில் சுருதி சேர்க்கும் பின்பாட்டுக்காரி தான் பெண் அங்கும் அவள் அடங்கித்தான் வாசிக்க வேண்டும்.

இவ்வாறு பெண்கள் உள்ளத்தாலும், உடலாலும், தாழ்த்தப்பட்ட நிலையில் தான் பெண்ணியம் தலை தூக்கியது, மேலைநாட்டுக் கல்வி எண்ணங்கள், இயக்கங்கள் செயல்பாடுகள் சமூக நடைமுறை இவைகள் நம் இந்திய சீர்திருத்தவாதிகளையும், இந்திய நலம் விரும்பும் பல அயல் நாட்டினராலும் இயக்கங்கள் தோன்ற வழிவகை செய்தது. அவற்றின் அடிப்படையில் இந்திய பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம், தியாசபீகல் நிறுவனம் இராமகிருஷ்ணா மட அமைப்புகள் என பல அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டு இராஜாராம் மோகன்ராய், சுவாமி தயானந்தா சரஸ்வதி, அன்னிபெசன்ட் அம்மையார், சுவாமி விவேகானந்தா, சகோதரி நிவேதிதா. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆகியோரால் இவ்வியக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு பெண்ணியக் கருத்துக்களை இந்தியாவில் ஊக்குவிக்க வழிவகை செய்தன. பல்வேறுச் சட்டங்கள் இருப்பினும் சட்டங்கள்

பெண்ணின் பாதுகாப்பைத் தலைமையாகக் கொண்டிருந்தாலும், பெண்ணிய போராட்டங்கள் மவுனமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது.

ஊடகங்களில் பெண்களின் நிலைப்பாடு

கவிதை, கதை, இலக்கியங்கள் மட்டும் அல்லாமல் இன்றைய ஊடகங்களும் பெண்களின் வாழ்வை அவர்களின் சிக்கல்களை எல்லாம் பிரதிபலிப்பவைகளாக அமைகின்றன. தொலைக்காட்சி, வானொலி, திரைப்பட இதழ்கள் போன்ற ஊடகங்களில் பெண்கள் போகப் பொருளாக, ஏமாளிகளாக, திக்கற்றவர்களாகவும் அவர்கள் வாழ்வில் அனுபவிக்கும் அவலங்களை சுட்டிக் காட்டுவதாக அமைகின்றதை நாம் காணுகின்றோம். பெண்களின் உணர்வுகளையும், தேவைகளையும் விம்மல்களையும் இவைகள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் கண்டு குரல் எழுப்பாத கவிஞர்கள் கிடையாது. வைரமுத்து தன்னுடைய இன்னொரு தேசியகீதம் கவிதையில் போராட்ட சூழலில் உள்ள பெண்ணின் மனதிடத்தை தூண்டி விடுகிறார்.

(ஆயிரம் தட்டுதல்களுக்குத் திறக்காத கதவும் உன் ஒரே மிதியில் திறந்து கொள்ளும் அந்த நம்பிக்கையோடு)

உன் அடுத்த அடியை எடுத்து வை என்று அவர் கூறுவதில் இருந்து, பெண் பூரண சுதந்திரமும் தன்னம்பிக்கையும் பெற விழைகிறார். பெண்ணிய வளர்ச்சி மற்றும் மாற்றம் புதுமையானது. வரவேற்கத்தக்கது இருபினும் காலக்கட்டத்தின் அவசரத்திற்கும் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்பவும், மாற்றங்கள் தொடக்கம் முதல் இறுதி வரை போராட்டங்களை எதிர்நோக்கும் அவசியத்தில் ஆழ்ந்துள்ளது. சீர்திருத்த பெற்ற பெண்ணியம் சமுதாய மேண்மைக்குப் பல நிலையிலும் உதவியால் நிற்கின்றது. கல்விக் கற்கும் உரிமை, விரும்பியவரை மணக்கும் உரிமை, பணிபுரியும் உரிமை, சொத்துரிமை, மணவிலக்கு உரிமை, வாக்குரிமை சம ஊதியம், தத்தெடுக்கும் உரிமை என்ற நீண்ட கால உரிமைகளைப் போராடித்தான் மேற்கண்டவைகளைப் பற்றியுள்ளனர். இப்போராட்ட பெண்கள் இருப்பினும் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க இயலாத கொடூர நிலை காணப்படுகிறது. காலம், காலமாக துன்பம் என்னும் சுமையைச் சுமந்தாலும் சுமை தாங்கிக் கற்களாக நின்றும், நீடித்தும் பயன் தந்தார்கள் பெண்கள் தான் என்ற வண்ணம் அடிப்படையானது.

மேற்கண்ட நிகழ்வுகள் சில இடங்களில் உண்மையென்றாலும் 20-ஆம் நூற்றாண்டுகளில் உள்ளதைப் போல் 21-ஆம் நூற்றாண்டுகளில் 50% விழுக்காடுக்குமேல் அடிமைத்தன்மை குறைந்துள்ளது அதன் வேலையில் பெண்கள் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் அதிக அளவில் கற்கத் தொடங்கி விட்டன. இவையே மேற்கண்ட போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றால் மிகையாகாது.

காரைக்கால் அம்மையார்

சு.வெங்கடேசன், முனைவர் பட்ட ஆய்வு மாணவர் (ம), தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு.

தென்னிந்திய இசையின் பொற்காலம் என்பது நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலம் ஆகும். நாயன்மார்கள் சிவநெறியினை தம் பக்தியிசை மூலம் பரப்பினர். ஆழ்வார்கள் வைணவத்தை தம் பக்தியிசை மூலம் பரப்பினர். இவர்களது காலத்தில்தான் தமிழிசை வேரூன்ற ஆரம்பித்தது. சைவ நூல் தேவாரம் என்றும், வைணவ நூல் திவ்யப்ரபந்தம் என்றும் போற்றப்படுகின்றன. நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். ஆழ்வார்கள் பன்னிருவர். 63 நாயன்மார்களில் மூத்தவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இவருடைய காலம் கி.பி.5ம் நூற்றாண்டாகும். பிற சைவக்குரவர்களின் காலம் கி.பி.7ம் நூற்றாண்டாகும். காரைக்கால் அம்மையார்தான் முதன்முதலில் பண் அமைப்போடு பாடல்கள் அருளியவர் ஆதலால், தென்னிந்திய இசையின் தாய் எனப் போற்றப்படுகிறார்.

பிறப்பு

காரைக்காலில் வணிகர் குலத்தில் வணிகர் குலத்தலைவரின் மகளாகப் பிறந்தார். புனிதவதி என்பது இவரின் இயற்பெயராகும். இளம் வயது முதல் சிவன் மீது அதீத பக்தி கொண்டிருந்தார். சிவ அடியார்களைப் போற்றிக் கொண்டாடினார். இயல் தமிழ், இசைத்தமிழினை குறைவறக் கற்று சிறந்து விளங்கினார். பேரழகு வாய்ந்த புனிதவதியாருக்கும், பரமதத்தனுக்கும் திருமணம் நடந்தது. இருவரும் நல்லறம் கொண்டு இல்லறம் நடத்தினர். திருமண வாழ்விலும் புனிதவதியார் சிவனையும், அவர்தம் அடியார்களையும் போற்றி வணங்கி வந்தார்.

மாங்கனிக் காட்சி

ஒரு சமயம் சில வணிகர்கள் பரமதத்தனிடம் இரு மாங்கனிகளைத் தந்தனர். அதனை சிவனடியார் ஒருவருக்கு அமுதோடு படைத்தார் புனிதவதியார். உணவு உண்ண வந்த பரமதத்தனுக்கு மற்றொரு மாங்கனியினைத் தந்தாள் புனிதவதியார். அதன் சுவையின் தன்மையினால் மற்றொரு கனியினைத் தரும்படி பரமதத்தன் கூற, மனம் பதைத்த புனிதவதியார் சிவனை வேண்டிட எம்மான் மாங்கனி தந்து அருளினார். புனிதவதியார் இறை அருளை எண்ணி மகிழ்ந்து பரமதத்தனுக்கு அளித்தார். முன் உண்ட கனியினைக் காட்டிலும் சுவை கூடுதலாக இருப்பதை உணர்ந்த பரமதத்தன் புனிதவதியாரை வினவ, புனிதவதியாரும் உண்மையை உரைத்திட பரமதத்தன் அதனை நிருபித்திட பணித்தான். எனவே சிவபக்தையான புனிதவதியார் சிவனை நினைந்திட மாங்கனி புனிதவதியாரின் கையில் தோன்றியது. இதனைக் கண்ட பரமதத்தன் மனம் தடுமாறி, புனிதவதியாரை விட்டு நீங்கினான்.

பேய்வடிவம் பெறுதல்

தன்னை விட்டு நீங்கிய பரமதத்தனை நெடுநாள் தேடி, பாண்டி நாட்டிலே அவனைக் காணும் காலத்தில் பரமதத்தன் தான் மணந்த தன் மற்றொரு மனைவி, மக்களோடு புனிதவதியாரின் காலில் விழுந்து வணங்கி, புனிதவதியார் ஓர் தெய்வப் பிறவி ஆதலால் தாம் பிரிந்ததை உரைத்தான். புனிதவதியார் மனம் கலங்காமல் இது சிவபெருமானின் சித்தம். இனி தெய்வத் தொண்டு செய்து வாழ்வேன். சிவபெருமானிடம் உள்ள பூதகணங்கள் போற்றும் பேய் வடிவம் தனக்கு வேண்டும்

என வேண்டி அக்கணமே பேய் உரு பெற்று கயிலை சென்று இறைவனாலேயே அம்மையே என அழைக்கப் பெற்றார்.

அருளியவை

காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகிய நூல்களை அருளியுள்ளார்.

அற்புதத் திருவந்தாதி

அந்தாதி என்பது ஒரு செய்யுளின் இறுதி எழுத்து, அடுத்தச் செய்யுளின் முதல் எழுத்தாக வருவது ஆகும். அவ்வகையில் காரைக்கால் அம்மையார் இறைவனின் திருவடியினைப் போற்றி திருவந்தாதிப் பாடியுள்ளார். இந்நூலே அந்தாதி இலக்கியத்தின் முதல் நூலாகும். மேலும் சிவமறையை யாவரும் வியந்து போற்றும் விதத்தில் அமைந்திருப்பதினால் அற்புதத் திருவந்தாதி எனப்பட்டது. எளிய சொல் அமைப்பில் இறைவனின் தோற்றம், சிறப்பு, தன்னை ஆட்கொண்ட திறம், போன்றவற்றினை பக்திச் சுவையோடு பாடியுள்ளார் காரைக்கால் அம்மையார்.

சான்றாக, இறைவனது திருவடிகள் பாதாளத்தையும், திருமுடிகள் ஆகாயத்தையும் கடந்து இருப்பனவாகும். அவனது எட்டுத் தோள்களும் எட்டு திசையையும் கடந்து உலவும் தன்மையன. அவன் நடமிடும் அரங்கத்திற்கு அண்டப் பெருவளிகள் போதாது என இறைவனின் பெருமைதனைப் போற்றுகின்றார் அம்மையார்.

"அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு" (அற்புத திருவந்தாதி 77)

திருவிரட்டை மணிமாலை

96 சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று மாலை. இதன் ஒரு வகை இரட்டை மணிமாலையாகும். கட்டளைக் கலித்துறை மற்றும் வெண்பா இரண்டினாலும் முன்னும் பின்னுமாக அமையப் பெற்ற பாடல் திருவிரட்டை மணிமாலையாகும்.

சான்றாக,

"கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்த றவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும்வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
மிளந்திங் களும்எருக் கும்மிருக் குஞ்சென்னி யீசனுக்கே (பா.1)

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்

"கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு பாவெடுத்து உரைப்பது" பதிகமாகும். காரைக்கால் அம்மையார் இருபத்தி இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். காரைக்கால் அம்மையார் பதிகங்கள் காலத்தால் முன்னவை என்பதாலும், திருவாலங்காட்டில் பாடப்பட்டதாலும், மூத்த முழுமுதல் பெருமானாகிய சிவபெருமானின் ஆடலைப் போற்றிப் பாடப்பட்டமையாலும் இது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் எனப்பட்டன. இதில் முதல் பதினோரு பாடல்கள் நட்டபாடைப் பண்ணிலும், அடுத்த பதினோரு பாடல்கள் இந்தளம் பண்ணிலும் அமைந்துள்ளன.

"எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட கடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த சுடதகௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே"

முக்தி பெறுதல்

காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் எம்பெருமானின் தூக்கிய திருவடியினை விட்டு நீங்காது உறையும் பேற்றினைப் பெற்றார். பங்குனி மாதம் இவர் முக்தி பெற்றார்.

இசைச் சிறப்பு

காரைக்கால் அம்மையாரின் பதிகங்களே பின்வந்த தேவாரப் பதிகங்களுக்கு முன்னோடியாகும். இந்தப் பதிகங்களே மற்ற உரு வகைகளுக்கும் அடித்தளமாகின எனலாம். அம்மையார் கையாண்ட நட்டபாடை பண்ணும், இந்தளப் பண்ணும் தற்கால இராகமான கம்பீர நாட்டை மற்றும் மாயாமாளவகௌள இராகமாகும். எந்த ஒரு கச்சேரி நிகழ்வானாலும், இறை புறப்பாடானாலும் நட்டப்பாடை எனும் கம்பீர நாட்டை முதல் இராகமாக இசைக்கப்படும் சிறப்பினைப் பெற்றது. அதே போல இந்தளம் எனும் மாயாமாளவகௌள இராகத்தில்தான் ஆரம்பப் பயிற்சி பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இத்தகைய முக்யத்வம் பெற்ற பண்களில் தன் பதிகத்தினை அம்மையார் பாடியுள்ளது அவரின் இசைத் திறனை எடுத்துரைக்கிறது.

காரைக்கால் அம்மையார் தனது திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகத்தில் ஏழு நரம்புகளின் பெயரினையும், பல்வேறு இசைக்கருவிகளின் பெயரினையும் குறிப்பிட்டுள்ளார். அதாவது,

(பண் : நட்டபாடை)

"துத்தங் கைக்கிள்ளை விளரிதாரம்
உழைஇளி யோசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல்
தமருகங் குடமுழா மொந்தைவாசித்
தத்தனை விரவினோ டாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே"

(முதல் திருப்பதிகம்:பா-9)

என ஆலங்காட்டு இறைவன் பண்ணிசை மற்றும் இசைக் கருவிகள் முழங்க ஆடும் அழகினைச் சித்திரிக்கிறார் அம்மையார். அதேபோல பரமன் ஆடும் இடுகாட்டினை விவரிக்கும் அம்மையார் துடி மற்றும் பறையிசைக்கு பரமன் ஆடுவதைக் காட்டுகிறார்.

(பண் : இந்தளம்)

"கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கடுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் எமப் புகையும் எழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண் டலையும் பிறையுந் ததும்பக் கொள்ளென்
படுவெண் துடியும் பறையுங் கறங்கப் பரமன் ஆடுமே"

(இரண்டாம் திருப்பதிகம்:பா-9)

காரைக்கால் அம்மையார் ஒரு பெண்ணாக பிறந்து தென்னிந்திய இசை வரலாற்றில் இன்றைய இசை உருப்படிகளுக்கு முன்னோடியாக பண் அமைப்பு முறைப்படி பாடல்கள் பாடி சாதித்துள்ளது பெண்ணினத்திற்கே பெருமை தருவதாகும். எனவேதான் இவரை இசை உலகம் தென்னிந்திய இசையின் தாய் எனப் போற்றிக் கொண்டாடி வருகிறது.

தமிழகத்தில் கல்வி – ஒரு சுருக்கமான வரலாறு

முனைவர் தெ.வெற்றிச்செல்வன், அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கல்வி கரையில கற்பவை நாள்சில
கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்
மானமும் அறிவும் மனிதருக்கு அழகு

போன்ற ஆன்றவிந்தடங்கிய சான்றோர் கூற்றுகள் தமிழ்ச்சமூகத்தில் விழுமியங்களாகப் பரவிநிற்பவை.

சங்கச்செவ்வியல் காலத்தில் தலைமக்களுக்கு மட்டுமே கல்வி உரித்தாகியிருந்தது. ஓதற்பிரிவு உயர்ந்தோர் மேன என்கிற வகையில் தொல்காப்பியமும் அதை உறுதிசெய்கிறது.

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே எனும் அறஇலக்கியப் பதிவை கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைபுகாமலிருக்கக் கற்கை நன்றே என்று மறுவாசிப்பு செய்கிறார், கவிஞர் இளம்பிறை.

கல்வியின் மேன்மையால் கீழ் மேல் எனும் ஏற்றத்தாழ்வு நீங்கும் என்று நம்பினர். கீழ்ப்பால் ஒருவன் கற்கின் மேற்பால் அவன்கண் படுமே என்று நீதிஇலக்கியம் பேசுகிறது.

பள்ளி எனும் சொல் சமணசமயம் தந்தது. திருச்சிராப்பள்ளி, பள்ளிவாரமங்கலம், திருப்பள்ளிமுக்கூடல், பள்ளிகொண்டபுரம், பள்ளிச்சந்தம் போன்ற சமணர்கள் செறிந்த ஊர்ப்பெயர்களே அதற்குச் சான்று தருகிறது.சமணமுனிவர்கள் தங்கியிருந்து சீடர்களை நெறிப்படுத்தவும் மக்களுக்குக் கல்விபுகட்டவும் பள்ளி என்கிற கட்டமைப்பு பயன்பட்டது. பள்ளிக்கல்வியாக மட்டுமல்லாது , கூடைமுடைதல் போன்ற கைவினைக்கல்வியாக அதுநீண்டு. உற்பத்திசெய்த பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வாழ்வாதாரத்துக்கு சமணம் ஊன்றுகோலாகச் செயல்பட்டது என அறிகிறோம்.

பௌத்தமும் விகாரைகளில் கல்விப்பணி ஆற்றிய வரலாறு, நமக்குத் தெரிந்ததே. கதைகள், பரப்புரைகள் இவைமூலம் கல்விபோதிக்கப்பட்டது.

வருணக்கடமைகள் வழிவழி குலத்தொழில் போன்றவற்றிலும், சாதிஅதிகாரப் படிநிலைகளைத் தீவிரமாகப் பேணுவதிலும் திட்டவட்டமான நம்பிக்கைகள் கொண்ட இந்துசமயம் கல்வியைப் பரவலாக்குவதில் முனைப்புகாட்டவில்லை. பின்னர் , இராமானுசர் கல்வியை முன்னெடுத்ததும், சைவமடங்கள் கல்வியை ஒருசாராருக்கு வழங்கியதும் ஆக சைவ வைணவப்பங்கு நாமறிந்ததே.

பின்னர் கிறித்தவம் அனைவருக்கும் கல்வி எனும் பெரும்புரட்சியைத் தமிழ்ச்சமூகத்தில் முன்னெடுத்தது. தீண்டாமை போன்ற சதிகாரச் சழக்குகளைக் கண்டித்ததோடு, வேதக்காரர் பள்ளிக்கூடங்கள் நன்னெறிக்கல்வி, கல்வியில் சனநாயகம் போன்றவற்றை முதன்மைப்படுத்திக் கல்விப்பணியாற்றின. சில குறிப்பிட்ட வகுப்பார்

ஆடை அணியவே தடைஇருந்த காலத்தில் சார்லஸ் மிட், குப்பாயம் எனும் ஆடையை வடிவமைத்துத்தந்து முதன்முதலில் ஆடைஅணியவும் பள்ளிக்கல்வி பெறவும் வழிபாட்டில் பங்குபெறவும் வாய்ப்பளித்தார். முதன்முதலில் விடுதிக்கல்வி, செய்யுள்திரட்டு போன்றவற்றை ஜி.யூ.போப்பும், மருத்துவம் உள்ளிட்ட வாழ்வியல் கல்வி, பாடத்திட்டம், மதிய உணவு என, கல்விப்புரட்சியைத் தமிழ்ச்சமூகத்தில் அறிமுகப்படுத்திய சீகன்பால்குவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

வசதிமிக்க மிட்டாமிராசுகள் வீட்டிற்கு, ஆசிரியர் சென்று கல்வி கற்பிப்பதும், மாணவர்கள் குருமார்கள் வீட்டிற்குச்சென்று, பணிவிடைகள் செய்து, கல்விகற்கும் பழம்பாணிக் குருகுலக்கல்வி பெறுவதுமாகிய இரண்டுமே வேண்டாம். பள்ளி எனும் பொதுஇடத்தில் ஆசிரியர் மாணவர் இருவருமே வந்து சந்தித்து, பெற்றோர் ஒத்துழைப்புடன் கல்விப்பணி நடைபெறட்டும் எனும் நவீன தற்காலக் கல்விமுறை சனநாயகத் தன்மையோடு, பரவலாக்கம் பெற்றது ஆங்கிலேயர் காலத்தில்தான்.

எனவே ஆதிக்க அரசியல்செய்தபோதும், இந்தியாவை நவீனப்படுத்தியதிலும், கல்வியுலகில் வெளிச்சம் பாய்ச்சியதிலும், ஆங்கிலேயர் பங்கு மகத்தானது. குமாஸ்தா பாணிக்கல்வியும், ரத்தத்தால் இந்தியர்களாகவும், உணர்வால் வெள்ளைக்காரர்களாகவும் மாற்றும் மெக்காலே திட்டம் அதற்குள் இருந்தபோதிலும், கல்விப்பரவலாக்கம் என்றவகையில் ஒரு முன்வைப்பு குறிப்பிடத்தக்கது.

சோதிபா புலே அவர் மனைவி சாவித்திரி புலே இருவரும் வடஇந்தியாவிலும், ரேணியஸ் திருநெல்வேலியிலும் தேவதாசிகளின் பிள்ளைகளுக்கும் கல்வியைப் புகட்டிய வகையில் கல்வியை மேலும் சனநாயகமயமாக்கியதைக் குறிப்பிடவேண்டும்.

சத்திரம்வைத்தல் அந்தக்கால தர்மகர்த்தாப் பொருளாதாரமுறையின் வெளிப்பாடு. எனவேதான் பாரதி அதைவிடமேன்மையானது கல்வி என்றுவாதிட்டார். அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலைவிட, ஆலயம் பதினாயிரம் நாட்டுவதைவிட, இன்னரும் கனிச்சாலைகள் இயற்றுவதைவிட, இனிய நீர்த்தண் சுனைகள் அமைப்பதைவிட, பின்னருள்ள தருமங்கள் யாவும் பேணிப்போற்றுவதைவிட, அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று பாரதி பாடியது, மிக மகத்தானது.

அவரைத் தொடர்ந்துவந்த பாவேந்தர் தலைவாரிப் பூச்சூட்டி உன்னை பாடசாலைக்குப் போ என்று சொன்னாலுன் அன்னை என்று பெண்கல்வியோடு சேர்த்து கல்வி குறித்துப் பேசினார்.

இன்றைய யுகத்தில் மனனக்கல்வி முறை மாறி, படைப்பூக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விவளரவேண்டும் என்ற குரல்கள் முன்னெழுந்துள்ளன. இன்னொருபுறம் மேலைநாடுகளில் இந்தியக்கல்வி மதிக்கப்படுவதையும் பார்க்கிறோம்.

பாடத்திட்டத்தில் மறுமலர்ச்சி, அறிவியல் புத்தெழுச்சி சார்ந்த நோக்கு, தேர்வுமுறையில் புதுமை போன்ற பல கூறுகள் வலுவாக முன்னெடுக்கப்படவேண்டும் என்ற குரல்கள் இப்போது ஒலிக்கக் கேட்கிறோம். புத்தகமல்லாத பள்ளிநாள் மாதமொருமுறையாவது கடைபிடிப்பது, பள்ளியில் மகிழ்ச்சியைக் கூட்டும் கலைசார் நடவடிக்கைகள் பெருக்குவது, தொழில்நுட்பம் சார்ந்து கல்வியை அடுத்தகட்டம் நகர்த்துவது என ஏராளமான பணிகள் சவாலுடன் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் விரல்விட்டு எண்ணிவிடும் அளவுக்கு கடந்த ஒருநூற்றாண்டில் ஆறேழு அறிவியல்அறிஞரகள்தான் உருவாகியுள்ளனர் என்பது எதைக்காட்டுகிறது? அஞ்ஞானத்தின் பிடியிலிருந்து கல்வி விடுவிக்கப்படாமலிப்பதையே காட்டுகிறது. விஞ்ஞானக் கல்வியை வேகமாகப் பரவலாக்கவேண்டும். காலத்திற்கொவ்வாத பத்தாம்பசலித்தனங்கள் தீர்ந்துபொய்யாதல் வேண்டும்.

வருமான வரிவிலக்கு கருதியும், முன்னாள் சாராய வியாபாரிகள் எனும் அடைமொழி நீங்கவும், இன்றைய கல்வி வள்ளல்கள் கல்வித்தந்தைகள் தாய்கள் பாட்டன் பாட்டிகள் சந்தைப்போட்டியில் ஈடுபடுவதையும், கொள்ளைக்கூடங்களாக கல்விக்கூடங்கள் மாறிவருவதும், அச்சமூட்டுகிறது. இந்நிலை மாறவேண்டும். உண்மையான அர்த்தத்தில் அனைவருக்கும் கல்வி எனும் அறைகூவல் சாத்தியமாக அனைவரும் பாடுபடவேண்டியிருக்கிறது. வங்கிமுறையில் டெபாசிட் செய்வதைப்போல, மாணவர் மனதில் திணிப்பதைவிடுத்து, பாவ்லோ பிரைரே போன்ற கல்வியாளர்கள் வலியுறுத்தும் உரையாடல்கல்வி முறை வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

இரண்டாம் சரபோஜியின் காசி - இராமேஸ்வரப் பயணம் - ஓர் ஆய்வு

முனைவர் பு.வேம்பரசி, இணைப்பேராசிரியர், வரலாறு, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

புனிதப் பயணம் என்பது உலக மக்களிடையே தொன்று தொட்டு நிலவி வரும் பழக்கமாகும். இந்தியா போன்ற பரந்து விரிந்த நாடுகளில், அரசியல் ரீதியான ஒருமைப்பாடு ஏற்படுவதற்கோ, அது நிலைபெறுவதற்கோ சந்தர்ப்பம் குறைவாக இருந்த காலத்திலேயே - இந்தியாவில் கலாச்சார ஒருமைப்பாடு இருந்தது. இந்திய மக்கள் தொன்று தொட்டு இன்று வரை கடைப்பிடித்து வரும் தீர்த்த யாத்திரை, தல யாத்திரை போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் முன்னோர்கள் செய்த ஏற்பாடாகும்.

இரண்டாம் சரபோஜி மேற்கண்ட காசி - இராமேஸ்வர பயணம் அரசியல், சமய, மருத்துவ, கலை, இலக்கியம் போன்ற சில துறைகளோடு தொடர்புடையது. இம்மன்னரின் காசி பயணம் பற்றி அறிவதற்கு மோடி ஆவணக் குறிப்புகளும், இலக்கியச் சான்றுகளும், கல்வெட்டு சான்றுகளும் உதவுகின்றன.

நவீனப் போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்தே 3000 பேர் அடங்கிய மாபெரும் குழுவிடம்[1] ஏறக்குறைய இரண்டாண்டுகள் காசிப் பயணத்திற்கு நன்கு திட்டமிட்டு கல்கத்தா கவர்னர் ஜெனரல் மற்றும் சென்னை ஆளுநர் ஆகியோரின் முன் அனுமதி பெற்று, செல்லுமிடங்களிலெல்லாம் உரிய மரியாதையுடன், தங்குமிடம், உணவு, கால்நடைகளுக்குத் தீவனம், செலவுத் தொகை போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யக்கூறி, பல்வேறு தலங்களை மனநிறைவுடன் தரிசித்து, ஏராளமான சுவடி நூல்களைத் திரட்டி, அரிய பொருள்களைச் சேகரித்து, பல கலைஞர்களை அழைத்து வந்து ஆதரித்துப் பல தொழில்களையும், கைத்தொழில்களையும் தஞ்சையில் ஊக்குவித்து வளர்ச்சியடைய செய்து, தம் பயணத்தை நல்ல பயனுள்ள பயணமாக்கினார்.

மன்னர் தம் வடஇந்தியப் பயணத்தை அக்டோபர் 1820-இல் தொடங்கி, திருவையாறு, விருத்தாசலம், திருத்தணி வழியாக கிரு'ணா நதிக்கரையில் உள்ள மங்களகிரியை அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் பானக நரசிம்ம பெருமாளை வணங்கி, அக்கோயில் மரபுப்படி, பெருமாளை பூஜை செய்வதற்கு தஞ்சை அரண்மனையிலிருந்து பெரிய வலம்புரிச் சங்கை எடுத்து, தங்க தகட்டினால் மூடியிட்டு, பஞ்சரத்தினத்தின் கொத்தைக் கட்டி, தம் பெயரைப் பொறித்து அனுப்பச் செய்து இறைவனுக்கு வழங்கியுள்ளார்[2]. ஒரிசாவிலுள்ள பூரி ஜெகன்னாதரை மகர சங்கராந்தியன்று வழிபட்டு தஞ்சை அரசின் சார்பில் அறக்கட்டளை ஒன்றை நிறுவினார். அதன்படி நாள்தோறும் பன்னிரண்டு மண்பானைகள் நிறைய சாதமும், பருப்பும், காய்கறிகளும் செய்து சுவாமிக்கு நிவேதனம் செய்து அந்நிவேதனத்தை குருடர்கள், முடவர்கள் உள்ளிட்ட இயலாதவர்களுக்கு வழங்கவும் அதற்காக நாள் ஒன்றுக்கு ரூ.2 வீதம் ஆண்டிற்கு ரூபாய்.720-ஐ அக்கோயில் அதிகாரியிடம் வழங்கியதோடு ஒவ்வொரு ஆண்டும் இத்தர்மம் நடைபெறுவதற்கு ரூபாய்.720-ஐ அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்[3].

25.07.1821 அன்று கல்கத்தா சென்று கவர்னர் ஜெனரல் ேஸ்டிங்ஸ் பிரபுவைச் சந்தித்து நலம் விசாரித்தப் பின், தன் ஒரே மகன் இரண்டாம் சிவாஜி தமக்குப் பின் தஞ்சை அரசராக அரியணை ஏற்க வேண்டும். ஆங்கில அரசு அவரை மன்னராக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க, கவர்னர் ஜெனரல் அவர் கை மேல் தம் கை வைத்து உறுதியளித்தார்[4]. பின் இரண்டாம் சிவாஜியைத் தஞ்சை மன்னராக அங்கீகரித்து, சென்னை கவர்னருக்கு இசைவாணையும் அனுப்பி, அவ்வாணை தஞ்சை ரெசிடண்ட் ஜான்.ஃபைப் வழியாக சிவாஜிக்கு வந்து சேர்ந்தது[5].

கல்கத்தாவின் முக்கிய இடங்களைக் கண்டுகளித்து, 04.05.1821-இல் கயை வந்தடைந்தார். கயையில் 50 நாட்கள் தங்கி, முன்னோர்களுக்கு பல்வேறு சிராத்தங்களைச் செய்து, பின் காசி சென்றடைந்து, காசித் தம்பிரான் மடத்தில் தங்கினார். கங்கைக் கரையில் புனித நீராடி, காசி விஸ்வநாதர், அன்னபூரணி, விசாலாட்சி உட்பட ஏராளமான தெய்வங்களை வணங்கி,

கங்கைக் கரையில் 64 படித்துறைகளின் அழகினையும் கண்டு களித்து, புனித நீராடி, புகழ் பெற்ற மணிகர்ணிகா படித்துறையிலும் நீராடி புதிய படித்துறை ஒன்றைக் கட்டினார்[6]. 16.07.1821 முதல் 23.10.1821 வரை 105 நாட்கள் காசியில் தங்கி, பின் பிரயாகை வந்தடைந்து, திருவேணி சங்கமத்தில் புனித நீராடி, காவடிகளை நிரப்பிக் கொண்டு, நாக்பூர், ஐதராபாத் வழியாக திருப்பதி வந்தடைந்தார்.

தன் தாயார் விருப்பப்படி (சரபோஜியின் காசிப் பயணம் நல்லபடியாக வேண்டும்) திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு 149 வைரம், 50 மாணிக்கம் பொறிக்கப்பட்ட வைர நாமத்தை வழங்கி[7], இறைவனை வணங்கி, பின் காளஸ்தி வந்தடைந்து காளஹஸ்திஸ்வரரையும் வணங்கி விட்டு, பின் காஞ்சி ஏகாம்பரரையும் தரிசித்து, மன்னர் தாம் செய்த முன்னேற்பாட்டின் படி தஞ்சை ரெசிடண்ட் வில்லியம் பிளாக்பர்ன், இரண்டாம் சிவாஜி ஆகியோரால் சிதம்பரத்தில் மன்னருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது[8]. பின்னர் சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், மாயவரம் வழியாக திருவையாறு வந்து, 24.04.1822-இல் தஞ்சையை வந்தடைந்து, உடன் காசிப்பயண மரபுப்படி இராமேஸ்வரம் பயணம் புறப்பட்டு, இராமேஸ்வரம் சென்றடைந்து, 09.05.1822 மற்றும் 10.05.1822 ஆகி இரு நாட்கள் அங்கு தங்கி, தாம் காசியிலிருந்து கொண்டு வந்த கங்கை நீரால் இராமநாத சுவாமிக்கு அபி'ேகம் செய்து, தம் எடைக்கு எடை வெள்ளியினால் துலாபாரம் செய்தும், தாராளமாக தான தர்மங்களைச் செய்தும்[9] தம் பயணத்தை முடித்துக் கொண்டு, 21.05.1822 அன்று தஞ்சை வந்தடைந்தார்.

மன்னரின் காசிப் பயணத்தில் தஞ்சையில் பலதுறைகளும் பயனடைந்தன. மன்னர் தம் வட இந்தியப் பயணத்தின் போது கொண்டு வந்த ரோஜா, குலால், குலேகைரா, மசூரா, மேவா, சிம்சுபா, பிலக, பொடானி க்யால்கார்ட், தேண்ட்ஸ், பாகற்காய், சுரைக்காய் முதலிய பலதரப்பட்ட தாவரங்களின் விதைகள், பூக்கள், அரிய தாவரங்களை தஞ்சையில் தமக்குச் சொந்தமான ஏராளமான தோட்டங்களிலும், தஞ்சை ரெசிடெண்ட் தோட்டங்களிலும் பயிர் செய்ததால் தஞ்சையில் தோட்டக்கலை (Horticulture) வளர்ச்சி பெற்றது.

மன்னர் கல்கத்தாவிலிருந்து பட்டுப் பூச்சிகள், பட்டுப்புழுக்கள் மற்றும் அதற்கான உணவு (மல்பரி) உற்பத்தி செய்யும் முறை பற்றி விளக்கமான கடிதங்கள் போன்றவற்றை தஞ்சைக்கு அனுப்பி, பட்டுப்பூச்சித் தொழிலைத் தொடங்கி

வளர்ச்சியடையச் செய்தார். பல்வேறு ஆவணங்கள் மூலம் தஞ்சையில் பட்டுப்பூச்சித் தொழில் வளர்ச்சியடைந்ததை அறிய முடிகிறது[10]. கல்கத்தாவிலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்பட்ட அரியவகை விலங்குகள், பறவைகள் தஞ்சையில் சிவகங்கைப் பூங்காவில் வளர்க்கப்பட்டதால், அன்றே அரிய உயிரினங்களைக் கொண்ட சிறந்த பொழுதுபோக்கு பூங்காவாகத் திகழ்ந்தது. தமிழகத்திலேயே தஞ்சையில்தான் முதன்முதலில் உயினப் பூங்காவைத் தோற்றுவித்தார் சரபோஜி. அதற்கு மன்னரின் சமயப்பயணம் துணை நின்றது என்றால் மிகையாகாது.

மன்னர் வடஇந்தியப் பயணத்தின் போது ஏராளமான நாணயங்களைக் கொண்டு வந்து திருவையாறு கல்யாண மகாலில் சேகரித்திருந்தார்[11]. இவற்றை லண்டனில் நடைபெற்ற நாணயக் காட்சிக்கு ஆங்கில அரசின் வேண்டுகோளுக்கிணங்க 18.12.1851 அன்று இரண்டாம் சிவாஜி; தஞ்சை ரெசிடெண்ட் மூலம் அனுப்பியிருந்தார். அந்நாணயங்களில், இராம டங்கா மோகரா என்ற தங்க நாணயம், காசி ‘ேத்திரத் துட்டு, பிரயாகம் வின்ன பைசா, நாகபூரி பைசா, அனந்தகிரி வராகன், அக்பர் மோஹரா, வெங்கடகிரி காசி, மிர்ஜாபுரி, பத்ரிநாத் மோஹரா உள்ளிட்ட ஏராளமான நாணயங்கள் வடஇந்தியப் பயணத்தின் போது மன்னரால் சேகரிக்கப்பட்டவையாகும்.

மன்னர் காசிப் பயணத்தில் கதளகாவ் என்ற இடத்தில் எழுதப்பட்ட கடிதத்தில்[12], மிஸ்டர் யு்டவிக்‘ என்ற வெள்ளைக்கார கப்பல் கட்டும் தொழில்நுட்பக் கலைஞரை ரூபாய்.150 சம்பளத்திற்கு அனுப்பி, தஞ்சையில் அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொடுத்து, தச்சன், கொல்லன் வகையறாக்களையும் கொடுத்து, அவரின் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு. கப்பல் கட்டும் தொழிலைத் துவங்க உத்தரவிட்டுள்ளார். 1826-ஆம் ஆண்டு சாளுவநாயக்கன் பட்டினத்தில். நான்கு பெரிய பாய்மரக்கப்பல்கள் கட்டப்பட்டு, அவற்றின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு போக்குவரத்தும் ஏற்றுமதி இறக்குமதியும் நடைபெற்றது.

மன்னர் கங்கைக் கரையில் 64 படித்துறைகளில் ஒன்றான மணிகர்ணிகா என்ற படித்துறையில் நீராடியதன் நினைவைப் போற்றும் வகையில், தஞ்சை கீழராஜவீதியில் மணிகர்ணிகேஸ்வரர் என்ற புதிய கோயிலை 1827-இல் கட்டி குடமுழுக்கு செய்தார்[13].

மேலும், காசி மற்றும் கயாவில் தாம் கண்ட கட்டிட முறைப்படி, தஞ்சை அரண்மனையில் ‘ர்ஜா மாடி என்ற ஐந்தடுக்கு உயரமான மாளிகையை எழுப்பினார். திருவையாற்றில் காவிரி கரையில் 1825-இல் கல்யாண மகால் என்ற மாளிகையை தம் ஆசை நாயகிகளுக்காக எழுப்பினார்[14]. இம்மாளிகை கங்கைக் கரையில் அமைந்துள்ள மாளிகையை முன்மாதிரியாகக் கொண்டு சரபோஜியால் எழுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மன்னரின் பயணம் கட்டிடக் கலை வளர்ச்சிக்கும் துணை புரிந்தது.

இரண்டாம் சரபோஜி ஏராளமானோர் புடைசூழ காசிப் பயணம் சென்ற காட்சி, துணி ஓவியமாக வரையப்பட்டு, தற்போது லண்டன் இந்திய அலுவலக நூல் நிலையத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது[15]. மன்னர் தன் பயணத்தின் போது ஓவியக்கலைஞர்களை அழைத்துக் கொண்டும் வழியில் மசூலிப்பட்டினத்தில் மாதம் 10 புலி வராகன் சம்பளத்துடன் தாமஸ் என்ற ஓவியக்கலைஞரை அழைத்துக் கொண்டும் சென்று, தாம் கண்ட அரியக் காட்சிகளை தம் குடிமக்கள் கண்டு இன்புறுவதற்காக வரையுமாறு செய்தார்.

காசியிலுள்ள 64 படித்துறைகளை தொடர் ஓவியமாகக் காட்டும் வண்ண நூல் ஒன்று, சரஸ்வதி மகால் நூலக அருங்காட்சியத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 64 படித்துறைகளின் பெயர்களும் தேவநாகிரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது[16].

பாட்னா, முர்சிதாபாத், காசி போன்ற இடங்களில் சிறந்து விளங்கியது மைக்கா ஓவியங்கள்.

மன்னர் தம் பயணத்தின் போது அக்கலைஞர்களை தம்முடன் தஞ்சைக்கு அழைத்துவந்து தஞ்சையில் அக்கலை பரவவும் காரணமாயிற்று . மன்னரின் சமயப்பயணம். காசி மற்றும் பிரயாகையிலிருந்து பித்ரி தட்டுக்களைக் கொண்டு வந்து, உள்ளூர் கம்மாளர்களை அழைத்து.

பித்ரித் தட்டுக்களைப் போன்ற கலைநயமிக்க வேலைப்பாடுடைய தட்டுக்களைச் செய்யுமாறு கூற, மன்னரின் அச்சவாலை ஏற்று அவர்கள் உருவாக்கியது தான் தஞ்சைக்குப் புகழ்ச்சேர்க்கும் தஞ்சைக் கலைத்தட்டு (Thanjavur Art Plate) ஆகும்.

இரண்டாம் சரபோஜி ஒரு கல்விமான். சென்ற இடங்களிலெல்லாம் ஏடு தேடியவர். வடமொழிக் கல்வியின் நிலைக்களனாகத் திகழ்ந்த காசியில், ஆயிரக்கணக்கான வடமொழிச் சுவடிகளையும், மற்ற மொழிச் சுவடிகளையும் வாங்கி, தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் சேகரித்தார். சரஸ்வதி மகால் நூலகத்திற்கு சமஸ்கிருத சுவடிகளுக்கு அட்டவணை தயாரித்து பி.பி.எஸ்.சாஸ்திரி அவர்கள் தொகுத்த வடமொழிச் சுவடிகளின் 23 விளக்க அட்டவணைத் தொகுதிகளில் உள்ள பெரும்பாலான சுவடிகளின் முன்னுரையில் "ஸ்ரீமந்த் ராஜா சரபேந்திர ராஜாவால் விலைக்கு வாங்கப்பட்டு காசி தேசத்திலிருந்து அனுப்பப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று தஞ்சைக்கு உலகப் புகழை ஈட்டித்தரும் சரஸ்வதி மகால் நூலகம் இன்றைய நிலையை அடைவதற்கு பெரிதும் காரணமாகயிருந்தவர் இரண்டாம் சரபோஜி. அவருக்கு இந்தப் புகழை ஈட்டித் தந்தது மன்னரின் காசி சமயப்பயணம்.

மன்னர் சமயபயணத்தின்போது, தான் கண்டுகளித்த தலங்களின் சிறப்புகளை தம் குடிமக்கள் கேட்டு இன்புறும் பொருட்டு, மராட்டிய அறிஞர் உட்கே கோவிந்தாச்சாரியார் கொண்டு, த்ரிஸ்தல யாத்ரேச லாவணி (முத்தலயாத்தரை லாவணி – காசி, கயா, பிரயாகை) என்ற பெயரில் காசிப் பயணத்தை வர்ணனை செய்து இலாவணி இயற்றச் செய்தார் மன்னர்.

கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலை சந்தித்த போது, அங்கிருந்த ஆங்கில பிரதிநிதி ஒருவர், தாம் திருக்குறளின் ஆங்கில மொழிப் பெயர்ப்பு நூலைப் படித்து இன்புற்றதாகவும் அந்நூலின் மூலமொழியான தமிழில் திருக்குறள் நூலைத் தமிழ்நாட்டில் இருந்து வந்த இரண்டாம் சரபோஜியிடம் கேட்க, அதுவரை தாம் ஆளும் மண்ணில் வழங்கும் மொழியின் மகத்துவத்தை அறியாத தம் தவறை உணர்ந்து, தஞ்சை திரும்பியபின், தமிழ்மொழிமீதும், தமிழ் இலக்கியத்தின் மீதும் கருத்துச் செலுத்தி ஏராளமான தமிழ் நூல்களை வாங்கி சரஸ்வதி மகால் நூலகத்தில் சேகரித்தார். இங்ஙணம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் மன்னரின் சமயப் பயணம் துணை நின்றது.

இரண்டாம் சரபோஜியின் காசி, இராமேஸ்வரப் பயணம் அவருக்கு தம் சமயத்தின் மீது இருந்த ஆழ்ந்த நாட்டத்தைப் புலப்படுத்தினாலும் அனைத்து சமயங்களை ஆதரித்து சமய சமரசம் கண்டவர். தஞ்சை அரண்மனையில் இந்து பண்டிகைகளோடு இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ பண்டிகைகளைக் கொண்டாடியும், அவர்களுக்கு தாராளமாக அன்பளிப்பு வழங்கியும், கிருஸ்துவ பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்கியும், நில கொடைகள் மற்றும் உலுப்பைகள் வழங்கியும் கிருஸ்துவர்களை மரியாதையுடன் நடத்தியும், இஸ்லாமிய தலமான நாகூர் தர்காவுக்கு தங்கப்பூ வழங்கியும், அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் தந்தூரி விழாவிற்கு பெனாராஸ் பட்டில் தங்க வேலைபாடுடைய சால்வை வழங்கியும், முத்துப் பேட்டையில் உள்ள ஜாம்புவானோடை தாவீது ஒலியுல்லா தர்காவிற்கு சென்று வழிபாடு செய்தும், தர்காவை சுற்றிலும் உள்ள 6-வேலி நிலத்தையும் கொடையாக வழங்கியும், சமய பொறையுடைமைக்கும், மதநல்லிணக்கத்திற்கும் சிறந்த முன்உதாரணமாக திகழ்ந்தார் இரண்டாம் சரபோஜி மன்னர்.

அடிக்குறிப்புகள்

1. த.ப.மோ.த. 5-112.
2. த.ப.மோ.த. 5-111, 115, 116.
3. த.ப.மோ.ஆ. 5-181.
4. த.ப.மோ.ஆ. 5-135.
5. Buddle No.90, Sheet No.117/2.
6. Thulajendra Rajah P.Bhonsle, "Rajah Serfoji II," PP.84-85.
7. மூட்டை எண்.912 சி சரசுவதி மகால் பகுதி VI.
8. ப.சுப்பிரமணியன், ப.ஆ. "தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்" தொகுதி 1, ப.513 – 514.
9. ப.சுப்பிரமணியன், ப.ஆ. மு.கா.நூல்.ப.243.
10. த.ப.மோ.த. 5-79 முதல் 62 முடிய.
11. த.ப.மோ.த. 5-177.
12. ப.சுப்பிரமணியன், ப.ஆ. மு.கா.நூல்.ப.506.
13. செ.இராசு (ப.ஆ) தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் ப.12.
14. கே.எம்.வேங்கட்ராமையா தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாயமும் ப.329.
15. Jaya Appasamy, "Thanjavur Paintings of the Maratha Period", P.54.
16. ம.சா.அறிவுடைநம்பி, தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள், பக்.114 – 115.

வரலாற்றில் பெண்ணுரிமை

பு. ஹேமாவதி, முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010.

முன்னுரை

அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம் இந்தியச் சமயங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் காவியங்களிலும் தெய்வ நிலையில் வைத்துப் பேசப்பட்ட பெண்ணின் தெய்வீகப் பெருமை பெற்ற நிலை நடைமுறையில் பின்னுக்கு தள்ளப்பட்டது. சமயத் தத்துவங்களும், சாத்திரங்களும், நிதிநூல்களும் கடவுளின் பெயராலும் தர்மத்தின் பெயராலும் பெண் அடிமைக்குத் துணையாயின ஆண் ஆதிக்கத்தைப் பாதுகாத்து வளர்த்தன. பெண் உரிமையை அழித்தன. பெண் முற்றும் அடிமையானாள்.

இந்தியப் போர்களும், பெண்ணுரிமையும்

இந்தியாவில் பல்வேறு போர்கள் நிகழ்ந்தபோது வெற்றி பெற்ற வேந்தனின் வீரர்கள், தங்கள் வெற்றிக்களிப்பின் ஒரு பகுதியாகத் தோல்வியுற்ற நாட்டு மன்னர்களை கற்பழித்தும் இழிவுபடுத்தினர். இவ்வாறு இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகள் அடிக்கடிப் போர்களைச் சந்திக்க நேர்ந்தபோது அந்நாட்டுப் பெண்கள் வேற்றுஅரசனால் இழிவுபடுத்தப்படுவதற்கு முன்பு உடன்கட்டை ஏறும் பழக்கத்தை மேற்கொண்டனர்.

காலப்போக்கில் ஒரு சமூகத்தில் பெண்களும் அவர்களது கற்பும், அச்சமூகத்தினர் ஆண் மக்களால் காக்கப்பட வேண்டியவர்கள் என்ற நிலை உருவாகியபோது இளம் வயதில் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் பழக்கமும் வழக்கில் இருந்தது. ஒரு பெண் தான் பெற்ற பெண் குழந்தையின் பாதுகாவல் பொறுப்பை கூடிய விரைவில் திருமணத்தின் மூலம் அடுத்தவர்களிடம் ஒப்படைக்க முற்பட்டால் திருமணமே ஒரு பெண்ணின் வாழ்க்கையின் குறிக்கோளாக அமைந்தது.

வட இந்தியாவில் அன்னியர் படையெடுப்புகள் நடைபெற்றன. கி.பி.11 ஆம் நூற்றாண்டு முதல் முகம்மதியர் படையெடுப்புகள் தொடர்ந்து இடம்பெற்றன. பின்னர் வட இந்தியா முழுவதும் மொகலாயர் ஆட்சிக்கு உட்பட்டது. அப்படையெடுப்புகளின் போது பெண்கள் கற்பழித்து கொலை செய்யப்பட்டனர். கவர்ந்து செல்லப்பட்டனர். கட்டாயத் திருமணத்திற்கும், மதமாற்றத்திற்கும் ஆளாக்கப்பட்டனர். அதனால் பெண்கள் ஒழிந்து வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. 'பர்தா முறை' வழக்கில் வந்தது குழந்தை மணம் வழக்கமானது.

மொகலாயப் பேரரசு காலத்தில் இந்து பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கமும் பெருகியது. ஆயினும் இஸ்லாமியர் தங்கள் இனப் பெண்களுக்கு மதக் கல்வி தந்ததோடு அராபிய இலக்கியங்களையும் கற்றுத் தந்தனர். அப்பெண்கள் கலைகளில் பயிற்சி பெற்றனர். 15ஆம் நூற்றாண்டில் மீராபாய், 16ஆம் நூற்றாண்டில் தாராபாய் பிபீரதன், மோல்லா ஆகியோர் சிறந்த கவிஞர்களாய் திகழ்ந்தனர். பர்தா முறை வழக்கில் வந்தது.

ஒரு சிலரை தவிர பிற பெண்களின் நிலை மிகவும் தாழ்ந்திருந்தது. கி.பி.18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் காலத் தொடக்கத்திலும் பெண்கள் நிலையில் மாற்றம் ஏதுமின்றி பழைய அடிமை நிலையே நிலவியது. இவ்வாறு அரசியல் சமூக சமயக் காரணங்களினால் கி.பி.5 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரையில் இந்து பெண்களின் நிலை படிப்படியாக தாழ்ந்தது. பெண் அடிமைத்தனம் முற்றுப் பெற்றது.

தமிழகப் பெண்களின் நிலை

தமிழகத்தில் சங்க காலம் என்பது கி.பி.250 எனலாம். அக்காலத்தில் பெண்களின் நிலை பொதுவாக சிறப்புற்றிருந்தது. பெண்கள் காதலித்து திருமணம் செய்ய உரிமை இருந்தது. நன்மக்களைப் பெற்று வளர்த்தல், விருந்தோம்பல், கொடையளித்தல் முதலிய உரிமைகள் பெற்றிருந்தனர். பெண்கள் நாட்டுப்பற்று கொண்ட வீரத்தாய்மார்களாகவும் விளங்கினர். ஆண்களுடன் பொது இடங்களில் ஆடல் பாடல்களில் ஈடுபட்டனர். ஆடை அணிகளில் நாகரீகமுற்றிருந்தனர். பெண்கள் கல்வியறிவில் சிறந்திருந்தனர். சங்க காலத்தில் பல பெண்பால் புலவர்கள் காணப்படுகின்றனர். பெண்களுக்கு கற்பு வலியுறுத்தப்பட்டது என்றாலும் சமூகத்தில் ஆணாதிக்கமே மேலோங்கியிருந்தது. ஆணுக்கு கற்பு வலியுறுத்தப்படவில்லை. ஆண் பரத்தையிடம் சென்றுவர சமூகம் அங்கீகரித்தது. ஓரிரு பெண்கள் கைம்மை நோன்பு நோற்றனர். மணவிலக்கு, மறுமணம், விதவைமணம் இருந்தமைக்கான சான்று இல்லையென்றாலும் பொது வாழ்க்கையில் பணிபுரிந்ததாக காணப்படவில்லை.

கி.பி.3 ஆம் நூற்றாண்டு முதல் 5ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் காலத்திலும் 8ஆம் நூற்றாண்டு வரையிலான பல்லவர் காலத்திலும் பெண்கள் நிலை முற்றிலும் தாழ்ந்தது. ஆணாதிக்கம் வளர்ந்தது. பரத்தமை செழித்து பௌத்தம், சமண மதங்க்ள் துறவு மார்க்கத்தைப் போற்றின. பெண்கள் துறவும் பூண்டனர். பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் வளர்ந்தது. இதனால் சைவ, வைணவ சமயங்கள் மேன்மையுற்றன.

காரைக்கால் அம்மையார், ஆண்டாள், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியோர் பக்தி இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் ஆவார் முதலிருவரும் புலமைமிக்க கவிஞரும் ஆவர். பின்னர் கி.பி. 9 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை பிற்கால சோழர் காலம் ஆகும். பேரரசு காலத்தில் மனுநீதியே அரசியல் இயக்கம் பெற்றன. கோவில்களில் பணியாற்றவும், கலைப்பணிகள் புரியவும் பெண்கள் தேவரடியார்களாகவும் இடம் பெற்றனர். திருமணமின்றி வாழ்ந்த தலித் பெண்டிர் அல்லது தேவதாசிகள் காலப்போக்கில் பொது மகளிராக வாழ்வை மேற்கொண்டனர்.

சோழர் காலத்திற்கு பின் விஜயநகர ஆட்சியும், நாயக்கர் ஆட்சியும், முகமதியர் ஆட்சியும் நிலவி இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சி தோன்றியது. கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதலான 18ஆம் நூற்றாண்டு வரையிலான நீண்ட காலத்தில் வடஇந்திய தென் இந்திய பண்பாட்டு கலப்பு நேர்ந்தது. எனவே தமிழகத்திலும், வட இந்திய வேதம், புராணம், தர்ம சாஸ்திரம் ஸ்மிருதி ஆகியவற்றில் செல்வாக்கு அதிகரித்தது. வட இந்தியாவை போலவே தமிழகத்திலும் வருசன் அமைப்பும், சாதி அமைப்பும் பெண்களுக்கு கட்டுப்பாடுகளை அமைத்தன. எனவே பெண்கள் தாழ்வு நிலையில் இருந்தது.

முற்காலத்தில் புராணங்களிலும், காவியங்களிலும் சிறந்த பெண்களைப் பற்றி பெருமையுடன் எழுதப்பட்டிருந்தது. அதில் வீரமும், பக்திப்பெருக்கும், பத்தினி தர்மமுடைய பெண்கள் பற்றி காணக்கிடைக்கின்றது. எனினும் நடைமுறையில் பெண்களின் நிலை வருந்தத்தக்க நிலையில் அடிமைத்தனமுற்று தாழ்வடைந்து, சீரழிந்து உரிமை கெட்டு பாழ்பட்டு இருந்தது.

ஆங்கிலேயர் காலமும், இந்தியப் பெண்களின் நிலையும்

இந்தியா முழுவதும் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியப் பெண்களின் நிலைகள்:

- சமூக மதிப்பில் இழிவான நிலை
- சமய தத்துவ நோக்கில் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலை
- கல்வி உரிமையற்ற நிலை
- அறியாமையிலும், மூடத்தனத்திலும் அமிழ்ந்த நிலை
- பெண் சிசுக் கொலை
- குழந்தை மணம்
- பெண்களை தனிமைப்படுத்துதல்
- ஆண்களின் பலதார மணம்
- தேவதாசி முறை (பொட்டு கட்டுதல்)
- கைம்பெண் மறுமண மறுப்பும், கைம்மை கோலமும்
- சதி என்னும் உடன்கட்டை ஏறுதல்
- திருமணத்தில் பெண்ணுரிமை மறுப்பு

ஆகியவை பெண்களின் நிலைகளாக கருதப்படுகின்றன.

இந்திய சமயங்களிலும், புராணங்களிலும் இதிகாசங்களிலும், காவியங்களிலும் தெய்வ நிலையில் வைத்து பேசப்பட்ட பெண்ணின் தெய்வீக பெருமை பெற்ற நிலை நடைமுறையில் பின்னுக்கு தள்ளப்பட்டது. சமய தத்துவங்களும், சாஸ்திரங்களும், நீதி நூல்களும் கடவுளின் பெயராலும், தர்மத்தின் பெயராலும் பெண்ணடிமைக்கு துணை ஆயின. பெண் உரிமையை அழித்தனர். பெண் முற்றும் அடிமையானாள்.

இந்தியப் பெண்கள் தம் தாழந்த நிலைமையை தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை கொடுமையை அடக்குமுறையை அறியும் அறிவின்றி அறியாமையில் மூழ்கிய மூடத்தனத்தால் கட்டுண்டு ஊமைகளாய், செவிடர்களாய், குருடர்களாய், அடிமைச் சேற்றில் புதையுண்டு அமைதியாக எதிர்ப்பின்றி தம் நிலையை ஏற்று துன்பத்தில் கிடந்தனர். இந்நிலையில் இந்தியப் பெண்ணியம் எழுச்சி கொண்டது. சமுதாயத்தின் தொடக்கக் காலத்தில் வேட்டையாடுதல் தொடங்கி குடும்பம் உற்பத்தி காரணிகள் வரை பெண்ணின் தலைமையில் இருந்தன. பின்னால் தனி சொத்துரிமை வாரிசு உருவாக்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தந்தை வழி சமூகம் உருவானதால் பெண்ணின் நிலை தாழ்ந்தது. பெண் எல்லா இடங்களிலும், அனைத்து சமூகத்திலும் ஒடுக்கப்பட்டாள். பெண்கள் குறைந்த கூலி பெறும் தொழிலாளர்களாக நியமனம் செய்யப்பட்டு சுரண்டப்பட்டார்கள். பலர் வீட்டு வேலை செய்பவர்களாக மாறினர். பணம் மதிப்பீடுகளை முடிவு செய்கிற போது பெண் வெளியே சென்று வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. நாள் முழுவதும் செய்யப்படுகிற வீட்டு வேலைகளுக்கு சம்பளம் இல்லாததால் அவள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது. ஆங்கிலேயர் ஆட்சியின் மூலமே தனி மனித விடுதலை, தமக்கென

தனித்தன்மை, தன்னாட்சி, அரசியல் விடுதலை, குடியாட்சி போன்றவற்றை அறிந்து விழிப்புணர்வு பெற்றனர்.

முடிவுரை

பெண்கள் சமூகத்தில் சம உரிமை பெற்று துணிவும், தீரமும் பெண்ணின் தனித்துவத்தை மதிக்காது அடிமையாக நடத்தும் ஆணாதிக்கப் போக்கிற்கு எதிராக போராடும் மனவலிவும் பெற்று சக பெண்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த கல்வி அதிகாரம், நிர்வாகத்திறன் ஆகியவற்றைப் பெற்று ஆணுக்கு துணையாகவும், இணையாகவும் இருக்கின்றனர். கல்வியறிவு பெற்று மனஉறுதி உடையவர்களாகவும், நன்கு சிந்திக்கக் கூடியவர்களாகவும், விரைந்து செயல்படக் கூடியவர்களாகவும் இன்றைய பெண்கள் திகழ்கின்றனர்.

பெண்கள் சமூகத்தில் சம உரிமை பெற அரசின் கொள்கைகளும், அமைப்புகளும், திட்டங்களும் பல உள்ளபோதிலும் உண்மையான சமத்துவ சமுதாயம் மலர பெண்கள் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதற்கு அனைவரின் ஒருமித்த ஒத்துழைப்பு தேவை.

மொழிப்பாடம்: கற்றல் நோக்கங்களும், கற்பித்தல் முறைகளும்

இ.ஜாஸ்மின், முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

அறிமுகம்

மொழி என்பது இயற்கையாக அமைந்த ஒன்றன்று. இன்ன ஒலித்தொகுதிக்கு இன்னப் பொருள் என்று மக்கள் முடிவு செய்து அமைத்ததே மொழி. ஒரு சமுதாயமாய்ப் பலர் ஒன்று கூடி வாழ்வதற்கும், அவர்கள் உணர்வை வெளிப்படுத்தவும், செய்தியைப் பிறருக்கு எடுத்துக் கூறவும், தன்னம்பிக்கையுடனும், சுயக்கட்டுபாட்டுடனும் வளர்ச்சி பெறவும், மாணவர்கள் முழு அனுபவம் பெறவும், துணையாக இருப்பது மொழி. எண்ணங்களும், எண்ணங்களை வெளிபடுத்தும் பேச்சுகளும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கய தொடர்புடையவை (பாலார்டு). ஒரு சமூக அமைப்பில் உருவாவது மொழி: சமயம், சட்டம் போன்வற்றை போலவே மொழி ஒரு சமுதாய ஆக்கம்(வில்லியம் விட்னி). அறிஞர் கால்டுவெல்லின் ஒப்பிலக்கண ஆய்வில், உலகின் முதல் மொழி **"தமிழ் மொழி"** என்று கூறியுள்ளார். நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை திருத்தமாக பேசவும், தெளிவாக படிக்கவும், அழகாக பிழையின்றி எழுதவும் பயிற்சியளித்தலே தாய்மொழிக் கற்பித்தலின் நோக்கமாகும். பண்டைக்காலக் கற்பித்தல் முறையிலிருந்து தற்காலக் கற்பித்தல் முறை முற்றிலும் மாறுபாடடைந்துள்ளது. ஆசிரியர் மையமாக இருந்த கல்விமுறை, தற்போது மாணவர்மைய அணுகுமுறையாக மாறியுள்ளதோடு காலமாற்றத்திற்கேற்ப கற்பித்தல் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ் மொழி

முதன்முதலில் தோன்றிய நிலப்பகுதி லெமூரியா கண்டம். அந்த நிலப்பரப்பே குமரிக்கண்டம் என்று தமிழ் இலக்கியத்தால் அறியப்படுகிறது. அங்கு குமரிமலை என்ற பெருமலை இருந்தது என்றும், ப஑றுளியாறு என்னும் ஆறு ஓடியது என்றும் பழந்தமிழ்பாட்டுகள் மூலம் அறியமுடிகின்றது. குமரிக்கண்டத்தில் முதன்முதலில் மக்கள் இருந்தனர் என்றும், அவர்கள் பேசிய மொழியே உலக முதல் மொழி என்றும் கொண்டால், பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் என்றும், பழந்தமிழே உலகின் முதல் மொழியாகும். அதனை மொழியியல் அறிஞர் கால்டுவெல்லின் ஒப்பிலக்கண ஆய்வும் உறுதிப்படுத்தியுள்ளது.

இம்மொழியின் அருமையையும், அழகையும், இனிமையையும், எளிமையையும், செம்மையையும், சிறப்பினையும் உணர்ந்த ஆன்றோர்கள் அன்று முதல் இன்று வரை, "தெரிமாண் தமிழ்", "ஓண்தீந்தமிழ்", "செந்தமிழ்", "பைந்தமிழ்", "என்று முள தென்தமிழ்", "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்றெல்லாம் போற்றியுள்ளனர். சொல் வளத்தாலும், இலக்கிய இலக்கணச் சிறப்பினாலும், தனித்தியங்கும் தன்மையாலும் உயர்ந்த மொழி, தனித்த மொழி, செம்மையான மொழி எதுவோ அதுவே உயர்தனிச் செம்மொழியாகும். உயர்வுத் தன்மை, தனித்தன்மை, செம்மைத்தன்மை ஆகிய மூன்று தன்மைகளையும் கொண்ட மொழி நம் தாய்மொழியாகிய தமிழ் ஆகும்.

தமிழ்மொழிக் கற்பித்தல்

கற்றல்-கற்பித்தல் சூழலில் தமிழ் கற்பித்தலானது முதல் மொழி நிலை, இரண்டாம் மொழி நிலை மற்றும் அயல்மொழி நிலை எனப் பகுத்துக் காணப்படுகிறது. தமிழைத் தாய் மொழியாகிய கொண்டவர்களுக்குத் தமிழ் கற்பித்தல் முதல் மொழிநிலையென இக்கால மொழியியலாளர் வகுத்துள்ளனர். அந்த வகையில் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தலில் கேட்டல், பேசுதல், படித்தல். எழுதுதல் ஆகிய நான்கு திறன்களும் இன்றியமையாதன. இவற்றில் கேட்டலும், படித்தலும் கொள்திறன்களாகவும், பேசுதலும், எழுதுதலும் ஆக்கத் திறன்களாகவும் கருதப்படுகின்றன. அவ்வண்ணம் கொள்திறன்கள் உணர் திறனன்கள் என்றும், ஆக்கத் திறன்கள் உணர்த்தும் திறன்களாக அறியப்படுகின்றன. பள்ளிக் கல்வியில் தமிழ்மொழியினுடைய கருத்துணர்த்தலும், உணர்தலும் தொடக்கநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலைகளுக்கு ஏற்ப நோக்கங்களும் கற்பித்தல் முறைகளும் மாறுபடுகின்றன.

தமிழ்மொழிக் கற்பித்தலின் நோக்கங்கள்

மொழியறிவைப் பெறுதல், மொழியை நுட்பமாகவும், துல்லியமாகவும் கேட்கும் திறனை வளர்த்தல், மொழியைப் புரிந்துகொள்ளுதல், ஒலிப்புமுறை, அழுத்தம், உணர்வுகளுடன் பேசும் திறனை வளர்த்தல். மொழியைப் படிக்கும் போது வேகம், பொருளுணர்தல், பிழையின்மை ஆகிய படித்தல் திறன்களை வளர்த்தல். முறையக எழுதுதல், பிழையின்றி எழுதுதல் ஆகிய எழுத்துத் திறன்களை வளர்த்தல். இலக்கியப் பாடலின் சுவையுணர்ந்து போற்றுதல், மனதில் உள்ளவற்றை வெளியிடுதல் போன்றன பொது நோக்கங்களாகும். முதல்நிலைக் கற்பித்தலில் தமிழ்மொழியானது உரைநடை, செய்யுள், இலக்கணப் பகுதிக மற்றும் துணைப்பாட பகுதிகளை கொண்டுள்ளன.

❖ உரைநடைக் கற்பித்தலின் நோக்கங்கள்

இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில் ஆழ்ந்த கருத்தோடு, செய்யுள் சந்தச் சேர்க்கை இன்றி நல்ல ஓசை, நயம் உடையதாகி ஒளிவு மறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரை இட்டுக் காட்டும் வகையிலே நேரிய முறையில் கருத்துகும் காரணத்துக்கும் பொருத்துமானதாக விளக்கி உரைப்பது உரைநடை. உரைநடைக் கற்பித்தலின் நோக்கங்களாவன: சொற்களஞ்சியம் பெருக்குதல், அகராதி பார்த்து பொருள் அறிய செய்தல், சொற்களின் உருமாற்றத்தை அறிய செய்தல், பிற மொழி சொற்களுக்கு தமிழ்ச்சொற்களை அறிய செய்தல், உவமைத் தொடர்களை அறியச் செய்தல், சொற்றொடர்களைப் பிரித்து அறியச் செய்தல், படிக்கும் ஆர்வத்தினை வளர்த்தல் போன்றன.

❖ செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்

சீரும், தளையும் அடியும் உடையது: ஒலிநயம் உடையது. உணர்ச்சியும், கற்பனையும் இல்லாமல் இயற்றப்பெற்ற சோதிடம், மருத்துவம், நீதி முதலியவற்றை எடுத்துக்கூறுவன செய்யுள். செய்யுளும் கவிதையும் வெவ்வேறானவை. செய்யுள் கற்பித்தலின் நோக்கங்களாவன: கவிதை என்பன கலை உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. கவிஞன் உணர்ந்த்துனை உணர்த்துதல், ஒலிநயம், எதுகை நயம், மோனை நயம், பொருள்நயம், சொல்நயம், உவமைநயம், சிலேடைநயம் போன்ற இலக்கியச் சுவையுணர்ந்து மகிழல், கற்பனைத் திறன் வளர்த்தல், கவிஞன் உணர்த்தும் வாழ்க்கை உண்மைகளை அறியச் செய்தல், பாடலின் கருத்துணர்தல், படைப்பாற்றல் திறன் வளர்த்தல், படித்துப் படித்து மகிழ்தல் போன்றன.

❖ இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள்

சிறந்த முறையிலல் பேசியோரின் பேச்சு முறைகளையும், உயர்ந்த இலக்கியங்களில் கண்ட ஒழுங்கு முறைகளையும் ஆராய்ந்து அமைக்கப்பட்ட விதிமுறையே இலக்கணம். இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்களாவன: திருத்தமாப் பேசவும் எழுதவும் கற்பித்தல், மொழியின் சிறப்புகளை அறிந்து போற்றுதல், செய்யுள் படித்து மகிழ்தற்கும் இயற்றுதற்கும் உதவுதல், மொழி நூலறிவுக்குப் பயன்படுத்துதல் போன்றன.

❖ துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்

வாழ்க்கை வரலாறுகள், வீரக்கதைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள், கலைநயம் உணர்த்துவன, சமுதாய முன்னேற்றம், அரசியல் வரலாறு, தொழில் வளர்ச்சி, இயற்க்கை புதுமைகள் போன்ற காலத்திற்கேற்ற இன்றியமையாத பொருளுகளுள் ஒன்றைப் பற்றி மாணாக்கர்களால் ஆசிரியர் உதவியின்றி தாங்களாகவே படித்த புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டிருப்பது துணைப்பாடம். துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களாவன: சொற்களஞ்சியம் விரிவடைச் செய்தல், பொருளுணரும் திறன் வளர்தல், செய்தியறிவு வளர்த்தல், வாய்க்குட் படித்தல் திறன் வளர்த்தல், மூல நூல்கள்-அகராதிகள் பயன்படுத்தும் திறன் வளர்த்தல். சுருக்கி எழுதும் திறன் வளர்த்தல்.

பள்ளி நிலைகளின் அடிப்படையில் மொழிக் கற்பித்தல் நோக்கங்கள்

❖ தொடக்கப்பள்ளி (1 முதல் 5 வகுப்பு வரை)

ஒலியைப் பிழையின்றி ஒலித்தல், வரிவடிவம் உணர்த்துதல், ஒலி வேறுபாடும் சொற்களில் பொருள் வேறுபாடும் உணர்த்துதல், சொற்களஞ்சியம் பெருக்குதல் மற்றும் எளிய, பிழையற்ற வாக்கியங்களை எழுதுதலிலும், பேசுதலிலும் பயிற்சியளித்தல்.

❖ நடுநிலைப்பள்ளி (5 முதல் 8 வகுப்பு வரை)

ஒலித்தலிலும், எழுத்துகளை வரிவடிவத்திலும் எழுதுதலிலும் நல்லப் பயிற்சியளித்தல், சொற்களை கையாளும் திறன் வளர்த்தல், இலக்கியசச்சுவை உணர்வை வளர்த்தல், சிறு கட்டுரைகள், கடிதங்கள் எழுதுதலில் பயிற்சியளித்தல்.

❖ உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி (8 முதல் 10 வகுப்பு வரை மற்றும்11 முதல் 12 வகுப்பு வரை)

புதிய சொற்கள், கலைச்சொற்கள் பயன்படுத்துதல், தெளிவான நடையில் திரண்ட கருத்து எழுதும் திறன் வளர்த்தல், தற்காலக் கருத்துகளை எளிமையாகக் கூறுதலில் திறன் வளர்த்தல், பல்வகைச் செய்யுள் பகுதிகளையும், இலக்கிய வளத்தையும் அறிதல், இலக்கண அறிவு பெறுதல்.

மொழிபாடம் கற்பித்தல் முறைகள்

"காலம், இடம் ஆகியனவற்றை உணர்ந்து, நன்கு அமர்ந்து, தன் வழிபாடு தெய்வத்தை வாழ்த்தி, உரைக்கப்படவேண்டிய பாடத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு விரைந்து உரைக்காமல், சினவாமல், ஈடுபாடு கொண்டு இன்முகத்தோடு கற்பவன் அறிவுத்திறன் அறிந்து அவன் மனங்கொள்ளும் வகையில் பாடம் சொல்ல

வேண்டும்” என்று பவனந்தியார் கற்பித்தல் முறைகள் குறித்த இலக்கணம் வகுத்துள்ளார்.

பண்டைய காலக் கற்பித்தல் முறைகள்

உரையாடல் முறை, தடை-விடை முறை, வினா-விடை முறை, சொற்பொழிவு முறை, விதி விளக்க முறை, போலக்கற்றல் முறை, நெட்டுரு முறை (மனப்பா முறை), காரண காரிய முறை பயிற்சி முறை, உய்த்துணர்தல் முறை போன்ற முறைகள் கற்பித்தல் முறைகளாக இருந்துள்ளன என்பதனை தொல்காப்பியம் மற்றும் பொதுப்பாயிர நூற்பாக்கள் மூலம் அறியப்படுகின்றன. இந்தக் கற்பித்தல் முறைகள் அனைத்தும் ஆசிரியர் மைய அணுகுமுறையாகும்.

தற்காலக் கற்பித்தல் முறைகள்

கற்பித்தல் என்பன ஆசிரியரையோ, மாணவரையோ அல்லது பாடப்பொருளையோ மையமாகக் கொண்டு விளங்குகிறது. எந்த முறை மாணவரை மையமாகக் கொண்டு அமையவில்லையோ அவை பண்டைய முறைகள் எனவும், மாணவரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளும் முறைகள் தற்கால கற்பித்தல் முறைகள் எனக் கல்வியாளர்களால் வகுக்கப்பட்டுள்ளன. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, கல்வியாளர்கள் உளவியல் அடிப்படையில் கல்வியானது கற்போர் மையமாக இருத்தலே உண்மைக்கல்வி என்ற கருத்தினை அறிவுறுத்தினர். ரூசோவின் குழந்தை மையக்கல்வி, பெஸ்டலாசியின் கருத்துக்கு முன் காட்சி, புரோப்பெல்-ன் இயற்க்கை கல்வி, காந்தியடிகளின் ஆதாரக்கல்வி, மாண்டிசோரியின் புலப்பயிற்சி போன்றன மிகவும் பிரபலமடைந்த கற்போர் மைய கற்பித்தல் முறைகளாகும்.

அந்த வகையில், **விளையாட்டு முறை:** விளையாட்டின் மீது கற்றல் அமர்ந்து சென்று, கற்றலின் இலக்கை அடையும் முறை. மொழிப்பாடம் கற்பித்தலில் இம்முறையைப் பயன்படுத்தியவர் கால்டுவெல்குக். இம்முறையில் ஆர்வமினன்மை, சலிப்பு தவிர்க்கபடுகிறது. **நடிப்பு முறை:** நடித்தலை கல்வி செயலாகி, கற்பித்தலுக்குப் பயன்படுத்தும் முறை. மனத்திறன்கள், மொழித்திறன்கள் பெரிதும் வளர இம்முறை மொழி கற்பித்தலில் பயன்படுத்தப்படுகின்றன. **சொற்பொழிவு முறை:** பேச்சு அடிப்படையாக அமைந்த முறை. நிறைய செய்திகளைப் பெரிய குழுவுக்குத் தர உதவுகிறது. பாடப்பகுதிகளை அறிமுகப்படுத்த உதவுகிறதுது. **உரையாடல் முறை:** பேச்சியல்பை அடிப்படையாக அமைந்த முறை. உடனடி பேச்சு பயிற்சியால், அறிவு உறுதி பெறுகிறது. **மேற்பார்வைப் படிப்பு முறை:** ஆசிரியர் மேற்பார்வையில் ஆழ்ந்து பயிலும் முறை. தனிமாணாக்கர் வேற்றுமைக்கேற்ற முறை. மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்கிறது. **செயல்திட்ட முறை:** சமூகச் சூழல் ஒன்றில் இயல்பான நிலையில் முழுமனதுடன், குறிபிட்ட நோக்கத்தின் பொருட்டு செய்து கற்றுக்கொள்ளும் முறை. முதன்முதலில் இம்முறையை கல்வியோடு தொடர்புபடுத்தியவர் ரிச்சர்ட்ஸ் (1966). இதனை கற்பித்தலுக்கு முறையாகப் பயன்படுத்தியவர் ஜான்டூயி. இம்முறையினால் செயல் திறன் வளர்வதோடு பலப்பண்புகளையும் வளர்க்கிறது.

ஒப்பந்த முறை(டால்டன் திட்டம்): முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் கற்றல் மேற்கொள்வது. இம்முறையை அறிமுகப்படுத்தியவர் பார்க்ஹஸ்ட் அம்மையார். இம்முறையினால் குறிபிட்ட காலத்திற்குள் கற்றலை முடிக்கும் பொறுப்புணர்வு ஏற்படுகிறது. **கண்டறி முறை:**அறிவுத் தொகுப்புகளின் முன்னோடிகள் வழியிலேயே சென்று உண்மையை காணச்செய்யும் முறை. இம்முறையை அறிமுகப்படுத்தியவர் ஆம்ஸ்டிராங்.

இம்முறையினால் தானே சிந்தித்து முடிவுக்கு வரும் ஆற்றல் வளர்கிறது. திட்டமிட்டுக் கற்றல் முறை: இம்முறையில் பாடங்கள், திட்டங்கள் எனப்படும். திட்டம் ஒவ்வொன்றும் பல சட்டங்களால் முழுமை பெறும். ஒவ்வொரு சட்டமும் பாடப்பொருளின் ஒரு சிறியப்பகுதியை உள்ளடக்கியிருக்கும். ஒரு சட்டத்தின் கூறுகளாக அமைபவை தூண்டல் (பாடப்பொருள்) துலங்கல் (விடைத்தரல்) பயிற்சி, பாராட்டு (வலுவூட்டம்) ஆகும். இம்முறையில் மாணவர்கள் தம் ஆற்றலுக்கு ஏற்ப கற்க முடியும். மொழி பயிற்றாய்வுக்கூட முறை: கேட்டல் மற்றும் பேசுதல் அல்லது ஒலித்தல் பயிற்சிகளே இம்முறையின் சிறப்பாகும். தனி மாணவர் கற்றல் முறையாகும். இவைத் தவிர்த்து கட்டுரைப் படித்தல், பலர் கருத்துதத் திரட்டல், செய்முறைக் கருத்தரங்கு, சொற்போர் போன்றவைகளும் தற்கால கற்பித்தல் முறைகளாக கருதப்படுகின்றன.

நவீனமயமாகி விட்ட தற்போதைய கல்விச் சூழலில் கணிப்பொறி வழியாக கற்பித்தல் என்பது பரவலாக மேற்கொள்ளும் கற்பித்தல் முறையாகும். இந்தக் கணிப்பொறி வழிக் கற்பித்தலானது முறையாக திட்டமிட செய்வதுடன் ஒரே பொருளுக்குப் பலவகையான அணுகுமுறைகளைத் தருகின்றன. பல்லூடக வழியாக கற்பித்தல், இணைய வழிக் கற்பித்தல் போன்று மின்பாடத்தொகுப்பு வழியாக மொழிப்பாடம் கற்பித்தல் மிகவும் பிரபலமாகி வருகிறது. மின்பாடத்தொகுப்பு வழியாகக் கற்பித்தல் என்பது இணையம் வழியாகவும், இணையத் தொடர்பு இல்லாமலும் கற்பிக்க முடியும். மின்பாடத்தொகுப்பின் இடம் பெற்றுள்ள சிறப்பம்சங்களான அனிமேசன், ஒளி-ஒலி அமைப்பு, பாடத்தொகுப்பு போன்றன கற்போருக்கு ஆர்வத்தைத் தூண்டி மொழிப்பாடத்தில் தெளிந்த அறிவைப் பெறுவதற்கு மிகவும் பயனள்ள கற்றல்-கற்பித்தல் முறையாகும்.

முடிவுரை

மொழி என்பது கருத்து பரிமாற்றத்திற்கான ஒரு கருவி. அது எழுதவும், படிக்கவும் மட்டுமே தேவை என்று பலரும் கருதுகின்றனர். தாய்மொழியைக் கற்காமல் போனதாலயே பண்பாட்டு மாற்றங்களும், உரிமை மீறல்களும், இன்று சர்வ சாதரணமாக நடைபெறுகின்றன. பிறப்பாடங்கள் பிழைக்கச் சொல்லிக்கொடுக்கின்றன, ஆனால் தமிழ்ப்பாடம் மட்டுமே வாழச் சொல்லிகொடுக்கிறது, சிந்திக்க சொல்லிக்கொடுக்கிறது. அத்தகைய மொழிப்பாடத்தினை மாணவர்களுக்குக் கற்பிக்க கற்றல்- கற்பித்தல் சூழலில் புதிய உத்தியைக் கையாண்டு மொழிப்பாடத்தில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்துவது ஒவ்வொரு தமிழாசிரியரின் தலையாயக் கடமையாகும்.

மேற்பார்வை நூல்கள்

1. குமரன்.எஸ் மற்றும் பலர், 2007, தமிழ்வழி கற்றல்-கற்பித்தலில் புதிய உத்திகள்,பாகம்: இரண்டு, கலைஞன் பதிப்பகம், தி.நகர், சென்னை.
2. வேணுகோபால்.இ.பா, 2006, பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், சாரதா பதிப்பகம், சென்னை.
3. கணபதி.வி,2005, ஐவகைப் பாடங்களும் திறன் அடிப்படையில் கற்பித்தலும், சாந்தா வெளியீடு, சென்னை.
4. கணபதி.வி,2007, தமிழ்ச்சுடர், சாந்தா வெளியீடு, சென்னை.
5. தமிழ்மொழிக் கல்வி, வளநூல், ஆசிரியர் கல்வி பட்டயப்பயிற்சி.
6. கல்வி நுட்பவியல், வளநூல், ஆசிரியர் கல்வி பட்டயப்பயிற்சி
7. தமிழ் கற்பிக்கும் முறைகள், இளங்கலை கல்வியியல் முதலாமாண்டு, தொலைநிலைக்கல்வி இயக்கம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

கல்வெட்டுக்கள் காட்டும் சிற்றரசிகளின் அறக்கொடைகள்

அ.ஜெயபாரதி, முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழகத்தினைச் சங்ககாலம் முதற்கொண்டே சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் பேரரசர்களைப் போன்று போர் வீரமிக்கவர்களாகவும் கொடை வள்ளல்களாகவும் இருந்துள்ளனர். பேரரசர்களுக்கு இணையாகப் பேரரசிகள் அறக்கொடையாளர்களாகத் திகழ்ந்துள்ளனர். அதைப் போன்று சிற்றரசர்களுக்கு இணையாகச் சிற்றரசிகளும் அறக்கொடைகள் பலவற்றை வழங்கியுள்ளனர். அவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

பேரரசி குந்தவைப் பிராட்டியாரைக் குறிப்பிடும்பொழுது இராஜராஜ தேவரின் தமக்கையும் வல்லவரையர் வந்தியதேவனின் தேவியுமான குந்தவை பிராட்டியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். பெரும்பாலான கல்வெட்டுக்களில் அரசியார்களின் பெயர்களே இடம்பெறுகின்றன. ஒருசில கல்வெட்டுக்களில்தான் சாத்தன்காளி, நங்கையார், மூரிகாமக்கன்னார், மூரிஅமுதனார், நங்கைநல்தேவியார், புளிசய்யன்சாமி அப்பை, ஏகவீரந்தன் மசங்காதியார், பெரும்பிடுகு பெருந்தேவி பிராட்டி ஆழ்வார், புண்ணியவாட்டி போன்ற சிற்றரசியரின் பெயர்கள் இடம்பெறுகின்றன. பிற கல்வெட்டுகளில் அவர் யாருடைய தாய், யாருடைய மனைவி, யாருடைய மகள் என்ற உறவுகள் மட்டுமே இடம்பெறுகின்றன.[1]

சாத்தன் காளி

சாத்தன் காளி என்பவர் விடேல்விடுகு முத்தரைய மன்னரின் மகளாவர். இவர் நியமத்து (தஞ்சாவூர்) ஆயிரத்தளி மகாதேவர்க்கு நந்தாவிளக்கு எரிப்பதற்காக பதின்கழஞ்சு பொன்னை தானமாக வழங்கியுள்ளார் என்பதனைத் திருக்காட்டுப்பள்ளியில் (தஞ்சாவூர் மாவட்டம்) உள்ள மூன்றாம் நந்திவர்மனின் (பொ.ஆ. 810) கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[2]

நங்கையார்

இவர் முத்தரையர் மன்னரான பெரும்பிடுகு முத்தரையரின் மனைவியும், விக்கிரமகேசரியின் சகோதரியும் ஆவார். இவர் குடுமியான்மலை மலைக்கோயில் பெருமானடிகளுக்கு நந்தாவிளக்கு எரிப்பதற்கு 2 கழஞ்சு பொன்னை தானமாக வழங்கியுள்ளார் என்பதனை இக்கோயிலில் உள்ள முதலாம் ஆதித்தச் சோழனின் 20ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (பொ.ஆ. 889) கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மூரிகாமக்கனார்

இவர் இளங்கோவனகளின் மனைவியாவார். இவர் திருச்செங்கோடு (சேலம்) அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு திருவாதிரைதோறும் 20 பிராமணர்கள் உணவு உண்பதற்கு காச்செட்டாங்கல்லால் 20 கழஞ்சு செம்பொன்னை இக்கோயில் கணப் பெருமக்களிடம் வைப்புத்தொகையாக வழங்கியுள்ளார். இதன் வட்டியினைக் கொண்டு இப்பணியைச் செய்துள்ளனர் என்பதனை இக்கோயிலில் உள்ள ராஜகேசரியின் பதினாலாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மூரி அமுதனார்

இவர் வேளிர் இளங்கோனடிகளின் மனைவியாவார். இவர் திருச்செங்கோட்டு ஆழ்வார்க்கு ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காக 15 கழஞ்சு செம்பொன்னை காச்செங்காங்கல்லால் வைப்புத் தொகையாகக் கொடுத்து அதன் வட்டியினைக் கொண்டு விளக்கெரிக்கவும் வழிசெய்துள்ளனர் என்பதனை இக்கோயிலில் உள்ள ராஜகேசரியின் பதினாலாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[5]

நங்கைநல்தேவியார்

இவர் செம்பியன் இருக்குவேளிரின் தேவியார் ஆவார். குடுமியான்மலை கோயிலில் உள்ள உத்தம சோழரின் கல்வெட்டானது இவர் நந்தா விளக்கெரிக்க 71.'.2 கழஞ்சு துளைப் பொன்னைக் கொடையாக வழங்கியதனைப் பற்றி குறிப்பிடுகிறது.

புளிசய்யன்சாமி அப்பை

இவர் பாண்டியரின் மகளாவார். மிலாடுடையார் விக்கிரமசோழ மிலாடுடையாரின் தேவியார் ஆவார். இவர் மிலாட்டுக் குறுக்கைக்கூற்றத்து திருக்கோவலர் திருவீரட்டானத்து ஆண்டார்க்கு ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்கு 90 சாவா மூவாப்பேராடுகளையும் (சாவாலும் மூப்பாலும் ஆடுகளின் எண்ணிக்கை குறையாது இருப்பது) ஈழ விளக்கு ஒன்றினையும் கொடையாக வழங்கியுள்ளார் என்பதனைக் கீழூர் (திருக்கோயிலூர் வட்டம்) வீரட்டானேஸ்வரர் கோயிலில் உள்ள முதலாம் ராஜேந்திர சோழரதுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[7]

ஏகவீரந்தன் மசங்காதியார்

இவர் வேளிரின் மகளாவார். மலையமான் அரசரான சித்தவடவனின் தேவியார். திருமலையில் உள்ள மலைக்கோயில் விளக்கெரிப்பதற்காக 95 சாவாமூவாப் பேராடுகளை வழங்கியுள்ளார் என்பதனை இங்குள்ள கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[8]

பெரும்பிடுகு பெருந்தேவி

இவர் முத்தரைய மன்னரான சாத்தன்மாறனின் தாயாவார். இவர் திருமயத்தில் (புதுக்கோட்டை) உள்ள சத்தியகிரிநாதப் பெருமாள் கோயிலுக்கு உண்ணாழிபுறமாக அண்டக்குடியில் உள்ள வரிநீக்கிய நிலத்தினைக் கொடையாக வழங்கியுள்ளார் என்பதனை இக்கோயிலில் உள்ள சாத்தன் மாறனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[9]

பிராட்டி ஆழ்வார்

இவர் நிசதராயரின் அரசியாவார். இவர் ஆலங்குடி திருவரங்கப் பெருமாள் கோயிலுக்கு மண்டபம் அமைத்துக் கொடுத்துள்ளார் என்பதனை இக்கோயிலில் உள்ள குலோத்துங்க சோழரது காலத்தினைச் (பொ.ஆ. 1178) சேர்ந்த கல்வெட்டு தெரிவிக்கிறது.[10]

புண்ணியவாட்டி

இவர் வாணரின் அரசியாவார். ஆறகளூரில் உள்ள காமநாதீஸ்வரர் கோயிலின் விமானத்தினைத் திருப்பணி செய்துள்ளார் என்பதனை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.[11]

நம்பிராட்டியார்

இவர் ராஜகம்பீர சம்புவராயரின் அரசியாவார். இவர் படைவீடு அம்மையப்பீஸ்வரர் கோயிலுக்கு உலோகத்தால் ஆன பிள்ளையார் படிமத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.[12]

வரகுணாட்டி

இவர் இருங்குவேளிரின் அரசியாவார். முத்தரையரின் மகளாவார். இவர் குடுமியான்மலை மலைக்கோயில் பெருமானடிகளுக்கு இரவும் பகலும் விளக்கெரிப்பதற்கு 7 மா நிலத்தினையும் ஒரு நிலை விளக்கினையும் கொடையாக வழங்கியுள்ளார்.[13] முத்தரைய மன்னனான மாறன்குவாவனின் மனைவி சமணப்பள்ளிக்கு பொற்காசுகளை கொடுத்துள்ளதனைப் பற்றி பொன்விளைந்தான் பட்டியில் உள்ள இரண்டாம் நந்திவர்மனின் (பொ.ஆ. 705) கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[14] இதனைப் போன்று பாண மகாதேவியார் திருவல்லம் திகாலிப்பெருமானுக்கு ஒரு விளக்கெரிக்க 20 செம்பொன்னை வழங்கியுள்ளார்.[15] பழுவேட்டரையர் மறவன்கண்டனின் தேவியார் பழுவூர் கோயிலில் விளக்கெரிப்பதற்காக 90 ஆடுகளைக் கொடுத்துள்ளார்.[16] திருவாவடுதுறை தீர்த்தபுரீஸ்வரர் கோயிலுக்கு விளக்கெரிக்க சுத்தமல்லன் என்கிற வாணரின் அரசி 8 காசுகளைக் கொடுத்துள்ளார்.[17]

இவ்வாறு சிற்றரசிகள் விளக்கெரிப்பதற்காக நிலம், பொன், காசு, ஆடு போன்றவற்றினைக் கொடையாக வழங்கியதுடன் அதிகளவு பொன் கொடைகளையே வழங்கியுள்ளனர். நிலம் கொடை வழங்கும்பொழுது அவை குறிப்பிட்ட அளவுடனும் வரிநீக்கியும் வழங்கப்பட்டுள்ளது. பொன்னானது கொடுக்கப்படும்பொழுது அளவிடப்பட்டுள்ளது. ஆடு கொடுக்கப்படும்பொழுது சாவாமூவாப் பேராடாக வழங்கப்பெற்றுள்ளது. சில சிற்றரசர்களின் மகள்கள் பேரரசர்களை மணந்துகொண்ட பின்னர் பேரரசிகளாகப் பெருமளவில் கொடைகளை வழங்கியுள்ளனர் என்பதனையும் இக்கல்வெட்டுக்கள் மூலமாக அறியமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. தெ.இ.க.தொ. 13, க.எண் 104.
2. இ.க.ஆ., 1849, க.எண் 12.
3. பு.கோ.க.க. எண் 31.
4. தெ.இ.க.தொ. 13, க. எண் 244.
5. தெ.இ.க.தொ. 13, க.எண் 242.
6. தெ.இ.க.தொ.19, க.எண் 241.
7. தெ.இ.க.தொ. 13, க.எண் 104.
8. தெ.இ.க.தொ. 32, க.எண் 61.
9. பு.கோ.க.க.எண் 13.
10. பு.கோ.க.எண் 151.
11. இ.க.ஆ. 1913, க.எண் 447.
12. இ.க.ஆ 1940-41, க.எண் 70.
13. பு.கோ.க. எண் 45.
14. இ.க.ஆ. 1940 க.எண் 216.
15. தெ.இ.க. தொ, 3, க.எண் 47.
16. தெ.இ.க. தொ.19, க.எண் 109.
17. இ.க.ஆ. 1928-29, க.எண் 299.

சோழர் காலப் பெண்களின் நிலை

கி. ஜெயலெட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்ற பெண்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் செம்பியன்மாதேவியர் மற்றும் குந்தவைபிராட்டியர் ஆவார்கள். இவர்கள் அரசுப்பணிகளில் சிறந்து விளங்கியுள்ளனர். பல கோயில்களுக்குக் கொடைகள் மற்றும் செப்புத்திருமேனிகள் வழங்கியுள்ளனர். செம்பியன்மாதேவியின் பெயரில் அவருடைய மகன் உத்தமசோழன் பல கோயில்களைக் கற்றளியாக மாற்றி அமைத்துள்ளார். அதே போன்று குந்தவைபிராட்டியர் அவர்கள் தன்னுடைய தந்தையின் பெயரால் "சுந்தரச் சோழ விண்ணகர ஆதுலர் சாலை" என்ற ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறாக இவர்களின் கொடைப் பணிகளும், கலைப்பணிகளும் சிறப்புடன் சோழர் காலத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இப்பணிகளை மையமாக வைத்து இக்கட்டுரையானது "சோழர் காலத்தில் பெண்களின் நிலைப பற்றி ஆராய முற்பட்டுள்ளது.

செம்பியன் மாதேவியர்

செம்பியன்மாதேவி கண்டராதித்த சோழனின் மனைவி ஆவார். உத்தம சோழனின் தாய், முதலாம் இராசராச சோழனின் பாட்டியர். பராந்தகன், சுந்தரசோழன், கண்டராதித்தன், அரிஞ்செயன், உத்தமசோழன், முதலாம் இராஜராசன் ஆகிய ஆறு மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வாழ்ந்துள்ளார். சுமார் 60 ஆண்டு காலம் இறை மற்றும் கலைப்பணியில் ஈடுப்பட்டு ஏறக்குறைய 80 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

கற்றளியாக மாற்றியமைத்த முதற்கோயில் கோனேரிராசபுரத்தில் உள்ள உமாமகேசுவரர் கோயிலாகும். முதலாம் ஆதித்தன் மற்றும் பராந்தகன் காலங்களில் உள்ள சிவாலயங்களில் கருவறையின் சுவர் பகுதிகளில் தேவக்கோட்டங்களை அமைத்து தெய்வ உருவங்களை வைத்துள்ளனர். ஆனால் செம்பியன்மாதேவி காலத்தில் கருவறையானது பெரிதாக்கப்பட்டு பல தேவக்கோட்டங்கள் அமைக்கப்பட்டு ஒன்பதுக்கு மேலான இறை வடிவங்கள் கருவறை மற்றும் அர்த்தமண்டபப் புறச்சுவர்களில் உள்ள மாடங்களில் வைக்கப்பட்டுள்ளன. கட்டடம் மற்றும் சிற்பக் கலையின் புதுமையை உருவாக்கியவர். செம்பியன்மாதேவியார் காலத்தில் இருந்த செப்புத்திருமேனிகள் உலகப் புகழ் பெற்றவை ஆகும்[1].

கற்றளியாக மாற்றப்பட்ட கோயில்கள்

ஒன்பது கோயில்களைக் கற்றளியாக எடுப்பித்துள்ளார். 23 கோயில்களுக்கு நிலம், பொன், தானங்களும் வழங்கியுள்ளார். கோனேரிராஜபுரம் (தற்போது) திருநல்லம் உத்தமசோழனின் 3-ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ. 973) உமாமகேஸ்வரர் கோயில் கல்வெட்டில் இங்குள்ள சிவாலயத்தை கற்றளியாக எடுப்பித்த அக்கோயில் நாள் வழிபாடு, விழாக்களுக்கு நிவந்தமாக இறையிலி நிலங்கள் அளித்துள்ளார். அத்திருக்கோயிலுக்கு ஸ்ரீகண்டராதித்தன் என்று தன் கணவன் பெயராலேயே எடுப்பித்துள்ளார். அதே கோயிலில் கண்டராதித்தனின் சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற படிமம் உள்ளது.

ஆநாங்கூர் (திருவாநாங்கூர்) உத்தமசாழன் உடையார் 10-வது ஆட்சியாண்டு (பொ.ஆ.980) அகஸ்தீஸ்வரம்) கோயில் கல்வெட்டில் செம்பியன் மாதேவியார் மகனின் 10-ம் ஆட்சியாண்டில் அகஸ்தீஸ்வரம் உடையார் கோயிலை கற்றளியாக மாற்றினார்[2]

குந்தவைப் பிராட்டியர்

முதலாம் இராஜராச சோழனின் சகோதரி ஆவார். இராஜராசனின் கல்வெட்டுகளில் இவரை "அக்கன்" எனக் குறிப்பிடுகின்றனர். இவர் வல்லவரையன் வந்தியத்தேவனின் மனைவி. தஞ்சைப் பெரியகோயிலுக்கு நான்கு செப்புத் திருமேனிகளைச் செய்து அளித்துள்ளார். அவற்றுள் இரண்டு தன் தாய் வானவன் மாதேவி, தந்தை சுந்தரச் சோழன் ஆகியோரது படிமங்களாகும். தாதாபுரம் என்ற ஊரில் மூன்று கோயில்களையும், போளூருக்குக் கிழக்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள திருமலை என்ற ஊரில் "குந்தவை ஜினாலையம்" என்ற சமணக்கோயிலையும் தோற்றுவித்தார். குந்தவை எடுபித்த சமணக் கோயில் அவருடைய சமயப் பொறையை உலகுக்கு எடுத்துக்காட்டும் சான்றாக விளங்குகின்றது[3].

உடையும் உணவும்

சோழர்கள் காலத்தில் பருத்தி, பட்டு ஆகியவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். ஆடைகளைத் தைத்து அணியும் பழக்கம் அவர்களுக்கு இருந்துள்ளது. தையல்காரர் பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளில் "தையன்" என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளன. சோழர்கால சிற்பங்களில் இருந்து அவர்களின் ஆடைகளைப் பற்றி அறிகின்றோம். பெண்கள் கச்சை என்ற ஆடையையும், பாவாடையும், ரவுக்கையும் அணிந்துள்ளனர். அவர்கள் சேலை அணிகின்ற போது மடிப்புக்களை இடதுப் பக்கம் போட்டுள்ளனர். ஆண்கள் வேட்டியும், மேல் துண்டும் அணிந்துள்ளனர்.

செந்நெல், மூங்கில் அரிசி, பாசிப்பருப்பு, மிளகு, இஞ்சி ஆகிய பொருட்கள் சோழர் காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. புளி, பொங்கல், தயிர் சாதம், நெய் சாதம், காய்கறிகள் சேர்த்து சமைக்கப்பட்ட குழம்பு வகைகள் சோழர்கள் காலத்தில் தயாரிக்கப்பட்ட உணவுகளில் குறிப்பிடத்தக்கவை. காய்கள் இட்ட உணவு கல்வெட்டில் 'கறிஅமுது' என்ற பெயரில் கூறப்பட்டுள்ளன. மீன், கோழி ஆகியவற்றையும் மக்கள் உணவாகச் சமைத்து உணவு உண்டனர். ஏழை மக்கள் சோற்றுத் தண்ணீரைக் கலந்துக் கொண்டு உண்டனர்[3]

பொழுதுபோக்கு

மாடி வீடுகளில் மேல் மாடத்தில் பெண்கள் வரிப் பந்தாடியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. விளையாட்டுகளில் பெண்களுக்கு விருப்பம் இருந்துள்ளது. பெண்கள் பந்து விளையாடினர். பந்துக்களை கையால் தட்டி எடுத்தல், பூப்பந்தாடுதல், பொம்மைக் கல்யாணம் செய்தல், ஊஞ்சலாடுதல், பாத்திரங்களில் தண்ணீர் நிரப்பி அதைத் தட்டித் தட்டி முழவு முதலிய இசைக் கருவிகளின் இன்னிசையை எழுப்புதல் ஆகிய விளையாட்டுகளையும் பெண்கள் விளையாடியுள்ளனர்.

தேவரடியார்கள்

கோயில்களில் திருவலகிடுவதற்கும், திருமெழுகிடுவதற்கும், மலர் கொடுப்பதற்கும், ஆடல், பாடல்களுக்கும் பெண்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் தேவரடியார்கள் எனப்பட்டனர். இவர்கள் கல்வியிலும், கலைகளிலும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். திருமேனி ஊர்வலங்களின் போது ஆடலுக்காகக் கோயிலுக்கு வெளியில் தோன்றினர். கோயில்களிலும், மடங்களிலும் நடைபெற்ற

ஆடல் பாடல்களிலும், சாந்திக்கூத்து, ஆரியக்கூத்து, சாக்கைக்கூத்து, தமிழ்க்கூத்து போன்றவைகளிலும் அவர்கள் பங்கு பெற்றுள்ளனர். தேவரடியார்களின் பராமரிப்புக்காக மானியங்களும், தானங்களும் வழங்கப்பட்டுள்ளன. தேவரடியார்கள் சிலர் மணம் முடித்து இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ளனர். தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருத்தொண்டுக்காக இராசராசன் நானூறு தேவரடியார்களை அமர்த்தினான் என்றும், அவர்கள் அனைவருக்கும் தனித்தனி வீதிகள் வகுத்து அவற்றில் வரிசை வரிசையாக வீடுகள் அமைத்துக் கொடுத்தான் என்றும் தஞ்சாவூர்க் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.[4]

சொத்துரிமை

சோழர் காலப் பெண்கள் சொத்துரிமை பெற்றிருந்தனர். பெண்களுக்கு நிலங்களைச் சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. மனைவியின் சீதனச் சொத்தை விற்கும் உரிமை கணவனுக்கு அளிக்கப்படவில்லை. ஆனால் கணவன் இறந்தபின் அவனுடைய நிலங்களும், அடிமைகளும் மனைவியைச் சார்ந்துள்ளது. ஆணுக்கு தரப்பட்ட கூலியில் பாதியே பெண்களுக்குத் தரப்பட்டது. உயர்குடிப் பெண்கள் அதிகமான உரிமைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் சமூகத்தில் சிறந்த நிலையில் இருந்தனர். அரசிகள் நாட்டு நலன்களுக்கான கொள்கைகளை வகுப்பதில் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தியுள்ளனர். கோயில்களுக்குக் கொடைகள் அவர்கள் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளன.[5]

வரதட்சணை

திருமணத்தில் வரதட்சனை வாங்கும் பழக்கம் இருந்துள்ளது. தற்பொழுது பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கு வரதட்சனையைக் கொடுக்கிறார்கள். ஆனால் சோழர்கள் காலத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு வரதட்சனைக் கொடுத்துள்ளனர். அவைகள் பணமாகவோ, வீடாகவோ அல்லது நிலமாகவோ கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்திரிக்கு (பெண்) கொடுத்தப் பணம் என்ற அடிப்படையில் தான் அது ‘ஹரிதனம்’ என்று அழைக்கப்பட்டுள்ளது.[6]

உடன்கட்டை ஏறுதல்

கணவன் இறந்ததும் அவருடைய உடலை எரிக்க மூட்டும் தீயில் புகுந்து மனைவியும் இறப்பது சதி எனப்பட்டது. இந்தச் சதிப் பழக்கம் சோழர்கள் காலத்தில் இருந்துள்ளது. இப்பழக்கம் அரசக் குடும்ப பெண்களிடம் அதிகமாகக் காணப்பட்டது. சுந்தரச்சோழனின் மனைவி வானவன் மாதேவி சதியால் இறந்துள்ளார். முதலாம் ராஜேந்திரனின் மனைவி வீரமாதேவியும் சதிக்குப் பலியானார். சதியின் மூலம் இறந்தவர்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டு வழிப்பட்டனர்[7].

முடியுரை

சிலப்பதிகாரம், மணிமேகலையில் கணிக்கையர் கலை உலகில் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கினர். அவ்வகையில் சிறப்புற்றிருந்த பெண்கள் இடைக்காலத்தில் குறிப்பாக சோழர்காலத்தில் அரசக்குடியைச் சார்ந்த பெண்கள் பலர் கோயில் கட்டுதல், கோயிலைத் திருப்பணிகள் செய்தல், ஆதூலர்ச் சாலை போன்ற அறச்சாலைகளை அமைத்தல் நிலம், பொன் போன்றவற்றை கொடையாக அளித்தல் போன்ற பணிகளைச் செய்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் உணரப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. செம்பியன்மாதேவி கலைக்கோயில் கோனேரிராசபுரம், முனைவர்.திமதி.எழில் ஆதிரை, ப.21.22
2. இ.க.ஆ. 1926, எண்.75
3. சோழர் சமுதாயம், முனைவர் சீ.வசந்தி, ப.3
4. sii.vol.iii,No:146
5. S.I.I.II.No.66.
6. சோழர்கள்.1. திரு.நீலகண்டசாஸ்திரி
7. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், முனைவர் ந. அறிவுராஜ், முனைவர் ஆ. குமார், ப. 210

செங்கோட்டை ஸ்ரீஆவுடை அக்காள்

முனைவர். அ.ஸ்ரீவித்யா, முதல்வர்(பொ) மற்றும் இணைப் பேராசிரியர்,
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு.

உலகில் பெண் என்பவள் மகளாய், தாரமாய், தாயாய் என பல்வேறு பிம்பங்களாய் தன் வாழ்வில் பணியாற்றும் தெய்வமாய் விளங்குவதை பாரதி நன்கு உணர்ந்திருந்தார். அதனால்தான் "மாதராய் பிறந்திட நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என பாரதி பெண்ணைப் போற்றிப் பாடியுள்ளார். இந்தப் பெண்ணினம் அன்று முதல் இன்று வரை சமுதாயத்திலும் தனக்கென பெருமைதனைப் பெற்று வருகின்றது. ஒவ்வொரு துறையிலும் பல பெண்கள் சாதித்துப் பெருமை சேர்த்து வருகின்றனர். அவ்வகையில் கி.பி.18ம் நூற்றாண்டில் பக்தி உலகில் அத்வைதக் கருத்துக்களைத் தனது பாடல்கள் மூலம் உலகிற்கு எடுத்துரைத்து மேன்மை அடைந்தவர் அத்வைத ஞானி செங்கோட்டை ஸ்ரீஆவுடை அக்காள்.

செங்கோட்டையில் பிராமணக் குலத்தில் பிறந்தார் ஆவுடை அக்காள். இளம் வயதில் திருமணம் செய்விக்கப்பட்டார். ஆனால் விதிப்பயனால் அவர்தம் கணவன் இறக்க, அக்காலக்கட்டப்படி கைம்பெண் ஆக்கப்பட்ட ஆவுடை அக்காளை ஊரார் ஏசினர். இதனால் வீட்டிலிருந்தபடியே இறைவனைத் தொழுது வந்தார் ஆவுடை அக்காள்.

குருவருள்

ஒரு சமயம், நாமசங்கீர்த்தனத்தைப் பிரபலப்படுத்தி வந்த திருவிசைநல்லூர் ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் செங்கோட்டைக்கு வந்திருந்தபோது அவரருளால் ஆவுடை அக்காளின் மனம் ஆன்மீகத்தில் திளைக்க ஆரம்பித்தது. அய்யாவாள் அவர்கள் ஆவுடை அக்காளின் தலையில் கை வைத்து ஆசி கூறி மந்திர உபதேசம் செய்தார். அன்று முதல் ஸ்ரீதர அய்யாவாளின் பெருமைதனையும், அத்வைதக் கருத்துக்களையும் பாடல்களாகப் பாட ஆரம்பித்தார் ஆவுடை அக்காள். ஸ்ரீதர அய்யாவாள் சதாசிவ பிரம்மேந்திரருக்கு உபதேசம் செய்தவர். ஸத்குரு ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் சமகாலத்தவர். சதாசிவ பிரம்மேந்திரரைப் போல அகஞானம் பெற்ற ஆவுடை அக்காள் குருபக்தி மிக்கவராக குருவின் மேல் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

"மரமேறி கைவிட்ட மானிடர் போலவே மாண்டு
பிறவாமல் திறமெனக் கீந்தும் தேவரீரல்லவா!
அந்தகன் போலவே அலைந்து திரிந்த என்னை ஆண்டவனே!
சிந்தை மகிழ்ந்திட சிவபதம் அருளிய தேசிகனே!
பாசமகற்றி பதிதன்னில் சேர்த்து வைத்த பண்டிதனே!
குருநாதா! தேசமெங்கும் புகழ் ஸ்ரீவெங்கடேசுவர தேசிகரே!

- (ஆவுடையக்கா பாடல் திரட்டு 3.6.15)

ஸ்ரீதர அய்யாவாள் மறைவிற்கு குரு இரங்கற்பா "அனுபோக ரத்னமாலை" எனப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் யாவும் இவரால் பாடப்பெறும் பொழுது அவரின் பின் வந்த மக்கள் வாயிலாகவே பிரபலமாயின. திருநெல்வேலி, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், செங்கோட்டையில் உள்ள பெண்கள் தங்கள் வீட்டு பூசைகளிலும், விசேஷ தினங்களிலும் ஆவுடையக்காவின் பாடல்களைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டனர்.

மகிமை

ஒரு சமயம் ஆவுடையக்கா தன் சீடர்களுடன் ஆற்றின் நடுவில் அமர்ந்து சிவபூசை செய்து கொண்டிருக்கையில், ஆற்றில் வெள்ளம் வர அனைவரும் கரைக்கு ஓடிவிட, ஆவுடையக்கா மட்டும் சிவனை நினைந்திருந்தாள். என்னே விந்தை! பெருக்கெடுத்து வந்த ஆற்று வெள்ளம் ஆவடையக்காளை விடுத்து அவரின் இருபுறமாகப் பிரிந்து ஓடியதைக் கண்ட மக்கள் ஆவுடையக்காளின் பக்தியினைக் கண்டு ஆச்சரியம் கொண்டனர்.

படைப்புக்கள்

ஆவுடையக்கா ஒரு அத்வைத ஞானி, இவரின் பாடல்கள் எளிமையானவை. சாதி, சமய பேதங்களை எதிர்த்த புரட்சிப் பெண்மணி. சீர்திருத்தவாதி. சமுதாய ஒற்றுமை, வேதாந்தக் கருத்துக்களை இவரின் பாடல்களில் தந்தவர். ஆவுடையக்கா நூற்றிற்கும் மேற்பட்டப் பாடல்கள் இயற்றியிருந்தாலும், கிடைத்தவைகள் சிலவே. அவைகள்,

1. *வேதாந்தக் குறவஞ்சி நாடகம்*
2. *வேதாந்த வித்யா சோபனம்*
3. *வேதாந்த அம்மானை*
4. *வேதாந்த பள்ளு*
5. *வேதாந்த ஆண்டி*
6. *வேதாந்த வண்டு*
7. *வேதாந்த ஆச்சே போச்சே*
8. *ப்ரம்ம ஸ்வரூபம்*
9. *அன்னே பின்னே எனும் வேதாந்த ப்ரத்தியோத்திரி கும்மி*
10. *ப்ரும்ம மேகம்*
11. *தக்ஷிணாமூர்த்தி படனம்*
12. *வேதாந்தப் பல்லி*
13. *பகவத்கீதா ஸாரஸங்கிரஹம்*
14. *வேதாந்தக் கப்பல்*

முக்தி

ஒரு ஆடி அமாவாசை அன்று குற்றால அருவியில் குளித்து விட்டு மலையேறி தியானம் செய்யச் சென்றவர் திரும்பவில்லை. அந்தர்த்யானமாக இறைவனிடம் சென்றுவிட்டார்.

பதிப்பு

செங்கோட்டை ஸ்ரீஆவுடை அக்காள் பாடல் திரட்டு – தொகுத்தவர் : திருக்கோவிலூர் தபோவனம் ஆஸ்ரம ஸ்வாமி நித்யானந்தகிரி – பதிப்பித்தவர் : ஸ்ரீஞானானந்த நிகேதன். மற்றொரு வெளியீடு For "Transgressing Boundaries – The songs of shenkottai Avudai Akkal".- Translated by Kanjana Natarajan. இவருடைய பாடல்களை ரமண மகரிஷியின் தாயார் ஸ்ரீ அழகம்மாள் ரமண பஜனையின் பொழுது பாடியுள்ளார்கள். மேலும் பாம்பே சகோதரிகள் செங்கோட்டை ஆவுடையக்காளின் பாடல்களைக் குறுந்தகடில் வெளியிட்டுள்ளார்கள்.

வேதாந்த ஆச்சே போச்சே

ஆதி அந்தம் அற்ற ஆசாரியர் கிருபையினாலே
ஆனதும் போனதும் அன்பாகச் சொல்வேன் கேட்பாய்
ஆசைக் கயிற்று ஊஞ்சல் ஆடித் திரிந்ததும் போச்சே

அசஞ்சலம் ஆன அகண்ட ஸ்வரூபம் ஆச்சே!
ஆண் என்றும் பெண் என்றும் அலைந்து திரிந்ததும் போச்சே
அசையாமல் ஞான ஸ்தலத்தில் இருக்கவும் ஆச்சே!
அனந்த ஜன்மத்திற்கு அடியிட்டு இருந்ததும் போச்சே
அனந்த ஜன்மங்களும் இல்லாது இருக்கவும் ஆச்சே!

அத்வைத வேதாந்த ஞானிகள் பலர் வாழ்ந்து பல படைப்புக்களைத் தந்துள்ளனர். அதில் பெண் ஞானிகள் மிகச் சிலரே. அவர்களில் தென்னகத்தில் செங்கோட்டையில் பிறந்து இளம் வயதிலேயே குருவருள் பெற்று அத்வைதப் படைப்புக்களைத் தந்த பெண் ஞானி செங்கோட்டை ஆவுடை அக்காள் படைப்புக்களைப் போற்றிப் பேணுவோமாக!

குமரகுருபர சுவாமிகளின் சக்தி வழிபாட்டு இசை இலக்கியங்கள் ஓர் பார்வை

அ.ஸ்ரீநாகபூஷணி, விரிவுரையாளர், இசைத்துறை, இராமநாதன் கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

நமது சமய மரபில் இறைவனையும், இறைவியையும் இப் பிரபஞ்சத்தின் பெற்றோராக வழிபடும் சிறப்பு உள்ளது. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" என்ற மணிவாசகரின் வரிகள் இதற்குச் சான்றாகும்.

அம்பிகைக்குரிய ஜகன்மாதா, ஜகத்ஜனனி, ஆதி பராசக்தி, ஸ்ரீலலிதா, திரிபுரசுந்தரி, மீனாட்சி, விசாலட்சி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, மகாமாயி, மகாகாளி, பத்ரகாளி, மகிஷாசுரமர்தனி, துர்க்கை, மகாலட்சுமி, சரஸ்வதி, காமாட்சி போன்ற நாமங்கள், அவளது அருளாற்றலை விளக்குவன.

இத்திரு நாமங்களில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு, ஊர்தோறும் ஆலயங்கள் எழுப்பப்பட்டு வழிபாடுகள் நடந்தேறி வருகின்றன. எவரெவர் அம்பிகையிடமிருந்து எவ்வெவற்றைப் பெற விரும்புகின்றனரோ, அதற்கேற்ப தேவிஅம் சத்தை பக்தியுணர்வுடன் போற்றி வழிபடுகின்றனர்.

குமரகுருபர சுவாமிகள் தலைசிறந்த சைவசித்தாந்தியாவார். சைவ சமயத்தில் உதித்த, சைவ ஆசிரியர் ஒருவருக்கு அடியவராகிச் சைவசந்நியாசம் பூண்டு வாழ்ந்த இவருடைய சைவப் பற்றும், சைவசித்தாந்த நூற்பயிற்சியும், மூர்த்தி தல தீர்த்தங்களில் உள்ள அன்பும், குருபக்தியும், தொண்டர்பாலுள்ள பெருமதிப்பும், அளவிடற்கரியவையென உ.வெ.சாமிநாதையர் எடுத்துக் காட்டுவர். இவருடைய சைவசமயப் பணி ஒரு வகையில் சைவ சமய குரவர் நால்வர் பணியோடு ஒப்பிடத்தகுந்தது. பாரத நாட்டின் தென் எல்லையில், பொருநை யாற்றங்கரையிலே ஒதுங்கிக் கொண்டிருந்த சைவசித்தாந்தத்தை, புனிதம்மிக்க காசிக்கும் கங்கைக் கரைக்கும் எடுத்துச் சென்று, அற்புதங்கள் சில செய்து காசியில் மடம் அமைத்து சைவ மறுமலர்ச்சிக்கு இவர் உதவினார். குமர குருபர சுவாமிகளின் சக்தி வழிபாட்டு இசை இலக்கியங்கள். ஒரு பார்வை என்பது இவ் ஆய்வின் நோக்கமாகும்.

சக்தி வழிபாடு பற்றித் தமிழில் எழுந்த செந்நெறி இலக்கியங்கள் சிறு தொகையினவே. "எங்கெங்கு காணினும் சக்தியடா, ஏழுகடல் அவள் வண்ணமடா" என்று பாடத் தொடங்கிய பாரதிதாசன் வெகு விரைவில் திராவிடக் கழகத்தின் பிரசாரகனாக மாறிவிட்டார், புதுமைக்கவி சுப்பிரமணிய பாரதியாரே அம்மையைப் பல்வேறு கோணங்களில் நின்று நோக்கிக் குறிப்பிடத்தக்க அளவான தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். அன்னையை வேண்டுதல், ஓம்சக்தி, பராசக்தி சக்தி, சக்தி விளக்கம், சக்திக் கூத்து, சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம், காளி தருவாள், மகா காளியின் புகழ் முதலிய தோத்திரங்களைக் காளி மேலேயே பாடியுள்ளார். சிவசக்தி, முத்துமாரி முதலிய மூர்த்தங்களைப் பாடியுள்ள பாரதியார், நவராத்திரிப் பாட்டுப் பாடியதோடு திருமகள் துதி, திருமகளைச் சரண் புகுதல் முதலியவற்றை இலக்குமி மேலும் கலைமகளை வேண்டுதல், வெள்ளைத் தாமரை முதலியவற்றைச் சரஸ்வதி மேலும் பாடியுள்ளார். கண்ணனைப் பெண்ணாக உருவகித்து கண்ணம்மாவின் காதல்,

கண்ணம்மாவின் நினைப்பு, கண்ணம்மாவின் எழில் முதலியவற்றைப் பாடிய பாரதி வைணவ சக்தி வழிபாடு தொடர்பாக, இராதைப் பாட்டும் இயற்றியுள்ளார். அபிராமிப்பட்டர் ஆக்கிய அபிராமி யந்தாதியும் சிறந்த அம்மை வழிபாட்டு இலக்கியமாகக் காணப்படுகிறது.

இவை தவிர, ஏனைய சிறந்த சக்தி வழிபாட்டிலக்கியங்கள் யாவும் குமரகுருபரரோடு தொடர்புபடுத்துகின்றன. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை, மதுரை மீனாட்சியம்மை, இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்ற ஐந்து பிரபந்தங்களும், சில ஏட்டுப் பிரதிகளே கண்டுபிடிக்கப்பட்டு அச்சாகி வெளியாகியுள்ளன. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலையிலிருந்து இதன் ஆசிரியர் தேவி உபாசகரென்பதும் அவ்வுபாசனையால் வாக்குவன்மை பெற்றவரென்பதும் தெரிய வருகின்றன. குறம் என்ற பிரந்தம் பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவி ஒருத்தியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாக அமைப்பு மரபு உண்டு. இங்கே பாட்டுடைத் தலைவி மீனாட்சியம்மை; ஆதலினால் சொக்கர் பாற் கருத்திழந்த தலைவி கூறப்படுகிறாள். மீனாட்சியம்மையின் திருநாமமும் புகழும் சார்த்துவகையாற் சொல்லப் பெறுகின்றன. சிவகாமியம்மை இரட்டை மணிமாலையில் உள்ள பல செய்யுட்களில் இறைவனுடைய பெருமையிலும் இறைவியின் பெருமை பெரிதென்பது குறிப்பிடப்படுகின்றது.

குமரகுருபரர் பாடிய அம்மை வழிபாட்டுப் பிரபந்தங்கள் என்பது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், சகலகலாவல்லி மாலையுமாகும். சகலகலாவல்லி மாலை பாடி, கலைமகள் அருள்பெற்று இந்துஸ்தானி மொழியில் வல்லுநரானாரென்றும், இந்துஸ்தானி மொழியில் முகமதிய பாதுஷாவுடன் உரையாடி, காசியில் சைவ மடம் அமைத்துச் சமயப்பணி புரியச் சலுகை பெற்றாரென்றும் கூறப்படுகின்றன. தாமசம், சாத்துவீகம், இராசதம் என்ற முக்குணங்கள் ஒவ்வொன்றும் முதன்மை பெற்ற நிலையிலே துர்க்கை, கலைமகள், திருமகள் என்ற சக்தி மூர்த்தங்கள் உருவாகின்றன. நவராத்திரியிலே மேற்படி மூவரும் வழிபடப்படினும், வழிபாடு முழுவதும் சாத்துவீக குணத்தவளான சரஸ்வதிக்கே உரியதாகக் கூறப்படுவதுண்டு. எளிய நடையில் அமைந்துள்ள சகலகலாவல்லி மாலை - நவராத்திரி காலப் பாராயண நூலாக இன்று விளங்குகிறது. "வெண்டாமரைக்கன்றி நின்பதம்" என்று தொடங்கிப் பத்துப் பாடல்களால் இது அமைந்துள்ளது. இசை சார்ந்த வல்லுணர்களால் இது இராகமாலிகை இராகமாகப் பாடப்பட்டு வருகிறது.

சுவாமிகள் சகலகலாவல்லியைத் தனக்கு அருள்புரியுமாறு வேண்டும் போது "பண்ணும் பரதமும் தீஞ்சொற் பனுவலும் யான் எண்ணும் போதும் எளிதெ நல்காய்" (6) என்று வேண்டுவதில் அவருக்கு பிறவற்றோடு கூட பண்ணில் இருந்த ஈடுபாடு விளங்குகிறது. ஏழிசை, எழுநரம்பு, பண்ணிசை, குழலிசை, வேயிசை என்றெல்லாம் அவர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். விளரிப்பண்ணை "விளரி மிடற்று அளி" என்றும், "விளரி பயலும் அளி" என்றும் குறிப்பிடுகின்றார். விளரியும் செவ்வழியும் இரங்கற் பண்கள். மற்றொரு இடத்தில் "கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாட" (மதுரைக் கலப்பகம் : 48) என்று சொல்கிறார். மழலை வண்டு, "பசுந்தமிழின் இசைபயின்று பிடையொடு துயின்று இனிய செவ்வழிப் பாட்டினை வருவிபஞ்சி பயில் தருதங்கள் தெருமற முரன்று" (முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் : 4) என்பது மற்றொரு இடம். இங்கு, விபஞ்சி – வீணை, மதங்கர் - பாணர் மற்றொரு

இடத்தில் யாழ் மீட்டுவதைக் குறிப்பிடுகிறார். குறிப்பிடும் இடம் "பண்டார மும்மணிக்கோவை" என்ற நூலாகும். தமது ஞானாசிரியர் மீது பாடிய,

ஆடகத் தியன்ற சூடகக் கரத்தால்
மாடகத் திவவியாழ் மருமமீ தணைத்து
மூவகை நிலையத் தேழுசுர நிறீ இக்
கொவ்வைவாய் திறந்து குயிலென மிழற்றுபு
மென்னரம் புநிரல் விரன்முறை தடவிக்
கின்னரம் வியக்கும் கீதம் பாட

என்ற இப்பாடலில் சுவாமிகள், பாணர் யாழை அணைத்தும் ஏழு சுரங்களையும் நிறுத்தியும் மெல்நரம்பை கைகளால் தடவியும் கின்னரம் வியக்கும் கீதம் பாடியிருக்கிறார். இங்கே இவர் குறிப்பிடுவது யாழிசை என்று கருதத்தக்க போதிலும், அவர் காலத்தில் யாழ் மறைந்து போய்விட்டது. ஆகவே வீணையே இவர் குறிப்பிடுவது என்று நாம் கொள்ள வேண்டும்.

மேலும் யாழைப்பற்றித் தனியாக மகரயாழ், சீறியாழ் என்றும் குறிப்பிடுகிறார். அவர் காலத்தில் யாழே மறைந்துபோய்விட்டது என்று நாம் சொல்லி இருப்பதால், இப்பெயர்கள் பண்டைய மரபை ஒட்டித்தான் அவரால் குறிப்பிடப்படுகின்றன என்று நாம் கொள்ள வேண்டும். மடலை என்று அவர் குறிப்பிடும் இடத்து மகரயாழினைதான் அவ்வாறு கூறுகின்றார். இதுமரபு தழுவிய தொடரே. அது போலவே "பாண்அறா மழலைச் சீறியாழ் மதுரப்பாடல்" (மதுரைக் கலம்பகம் : 47) என்ற இடமும், பாணனைக் குறிப்பிடும் இடத்து "சீறியாழ்ப்பாணன்" என்றும் "ஏழிசைப்பாணன்" என்றும் குறிப்பிடக் காண்கிறோம். இவைகள் பண்டைய இலக்கிய மரபைத் தழுவி வந்த சொற்கள்.

இவ்வாறாக குமரகுருபர சுவாமிகளின் "பிள்ளைத்தமிழ்" எனும் அமைப்பிலடங்கும் இம் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் பாடல்களில் சுட்டப்படும் இசைக்குறிப்புக்களில்,

"பண்ணறாவரி மிடற்றகாண்
மடுப்ப பசுந்தேறலாறலைக்கும்"
- (மீனா – பிள்ளை.தமிழ் பா : 17 : 1)

என்று கூறுவதிலிருந்து பண்ணிசை மிக்கவரிப் பாடலைப் பற்றிய குறிப்பு தரப்படுகிறது. பண்ணின்றிப் பாடலுக்குச் சிறப்பு இல்லை என்பதை பண்ணறாத பாடல், என்று இனிய சூழலுக்கு ஏற்ற குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

சந்த வருத்தப் பாடல்களும் பிள்ளைத்தமிழில் இடம்பெறுகின்றன. இதில் இசையமைப்பு இனிமையான சுவையுடன் காணப்படும். அதாவது,

"குழுமணி வெயில் விட மரகத நிழல் விரி
குன்றே நின்றூதும் குழலிசை
பழகிய மழைமுகி வெலவெழு கொம்பே.
(மீனாட்சி பா. 21 : 1 – 2)

என்ற இந்தப் பாடலில் சந்தவிசை அமைப்பு இருப்பது தெரிகிறது. அம்மானை ஆடும் போது குழலிசை போன்று இனிது பாடுவர் என்ற குறிப்பும் இங்கு தரப்படுகிறது. பல இசைக்கருவிகள் இருப்பினும் குழலின் இசையை மட்டும் இங்கு குறிப்பிடுகிறார்.

"கொத்து மணித் திரளிற் செயு
மம்மனை குயிலின்
மிழற்றிய நின் ருழவிசைக்குரு
கிப்பனிதூங்கு குறுந்துளி
(மேற்படி. பா. 79.2)

"வெண்தாமரைக்கன்றி", "நாடும் பொருட்சுவை"
"அளிக்குஞ் செழுந் தமிழ்" , "தூக்கும் பனுவல்"
"பஞ்சப்பிதந்தரு", "சொற்கும் பொருட்டும்"
"சொல்விற் பனமும்", "பண்ணும் பரதமும்"
"பாட்டும் பொருளும்", "மண்கண்ட வெண்குடை"

எடுத்துக்காட்டுகளாக இப்பாடல்களைக் குறிப்பிடலாம். எனவே சகலாகலாவல்லி மாலை பாடல்களுள் பத்தியினூடாக கலைவாணித்தாயை மிக வாஞ்சையுடன் பாடித்தொழுவது இன்புறத்தக்கது. இவற்றை ஒரு இராகத்தில் பாடுவதை விட இராகமாலிகைப் பாடல்களாகப் பாடலாம்.

'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' அரிதாகக் கிடைக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். ஆண்பாற்பிள்ளைத் தமிழாக முருகன்மேல் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் செய்துள்ள குமரகுருபரர் இரண்டு பிள்ளைத் தமிழ்களிலும் சப்தமாதர் வணக்கம், காப்புச் செய்யுட்களுக்குள் பாடியுள்ளார். மகேசுவரி, இந்திராணி, காளி, அபிராமி, நாராயாணி, கௌமாரி, வாராகி என்போரே குமரகுருபரரால் பாடப்படும் எழுவராவர். தலைவர்கள் செயல்களை அவர்கள் சக்திகளுக்கும் ஏற்றிக்கூறும் மரபுற்றி ஏழுமகளிரின் செயல்கள் இவ்விரண்டு பிள்ளைத் தமிழ்க் காப்புகளிலும் பாடப்பட்டுள்ளமையைக் காணலாம். திருமகள், கலைமகள், துர்க்கை முதலிய மூவரையும் தனித்தனிச் செய்யுள்களிலே காப்புத் தெய்வங்களாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலே பாடிய குமர குருபரர், தலத்து அம்பிகையாகிய தையல் நாயகியைத் தனிச்செய்யுளிலே பாடினாற் போல் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலே துர்க்கையைத் தனியே பாடவில்லை எனலாம்.

நாயக்கர் மரபு மன்னராட்சிக் காலத்திலே சக்திவழிபாடு மேம்பாடுற்றமையால், சக்திக்கு முதன்மை வழங்கும் போக்குக் காணப்படுகிறது. சிவபெருமானுடைய சக்தி மூன்று முக்கியமான சிவத்தலங்களிலே கண்ணின் தன்மை கொண்டு, மூன்று பெயர்கள் கொண்டு தமிழ் நாடெங்கும் பிரபலமெய்துவதை இக்காலத்திலே காணலாம். காசிவிசுவநாதரின் சக்தி விசலாட்சியாகவும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதரின் சக்தி காமாட்சியாகவும், மதுரைச் சொக்க நாதரின் சக்தி காமாட்சியாகவும் போற்றப்படும் நிலை தோன்றுகிறது. முகமதியர் படையெடுப்புகளினால் ஏகாம்பர நாதர் கோவிலும் சொக்கநாதரின் கோவிலும் அழிய, நாயக்கர் காலத்திலே திரும்பக் கட்டப்பட்ட புதிய கோவில்களிலே காமாட்சியும், மீனாட்சியும் முக்கிய தெய்வங்களாகின்றனர். கோவில்கள் மதுரை மீனாட்சி கோவிலெனவும் புதுப்பெயர்கள் பெறுகின்றன. சிதம்பரத்து ஆடவல்லானாகிய சபாநாயகரது பிரியை சிவகாமியெனச் சிலரால் பாராட்டிப் பாடப்பட்ட போதும் அக்கோவிலிலே சிவபிரானுடைய முதன்மை பாதிக்கப்படவில்லை.

திருமலைநாயக்கர், மதுரைமீனாட்சியம்மை கோவிலை ஏறத்தாழ இன்றை வடிவத்திலே செதுக்கியமைத்தவர். குமரகுருபரர் தலயாத்திரை புறப்பட்டு மதுரையிலே தங்கிய போது மீனாட்சியம்மை மேல் பிள்ளைத்தமிழ் பாடி திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அனை அரங்கேற்றுகையில் மீனாட்சியே குழந்தையுருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தனரென்று, குமர குருபரர் முத்தப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் தம்திருக் கழுத்திலிருந்த முத்துமாலையொன்றை எடுத்து இவருக்கு அணிந்துவிட்டு மறைந்தனரென்றும் கூறுவர். அந்தப் பிள்ளைத் தமிழைக் கேட்டு மன மகிழ்ந்த திருமலைநாயக்கரும் குமரகுருபரருக்குப் பல பரிசில்களை அளித்து வழிபட்டனர்.

மீனாட்சியத்மை பிள்ளைத் தமிழ் நூறு செய்யுள்களால் அமைந்தது. மீனாட்சியைக் குழந்தையாக உருவகித்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடப்பட்டுள்ளது. குழந்தை பிறந்து ஏழாவது நாள் காப்பிடலென்னும் வழக்கம் இக் காப்புப் பருவம் ஆகும். பொருள் தெரியாத ஒலியை எழுப்புஞ் செங்கீரைப் பருவம், தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் துயிலச் செய்யும் தாலப்பருவம், கையோடு கைசேர்த்துக் கொட்டுஞ் சப்பாணிப்பருவம், குழந்தையை முத்தந்தரும்படி தாயாரும், பிறரும் வேண்டும் முத்தப் பருவம், தளர்நடையிட்டு வரும் குழந்தையை வாவென்று அழைக்கும் வருகைப் பருவம், சந்திரனைக் குழந்தையோடு விளையாட அழைக்கும் அம்புலிப்பருவம், பாட்டுடைத் தலைவியை அம்மானையாடும்படி கூறும் அம்மானைப் பருவம், பாட்டுடைத் தலைவியை ஊஞ்சலாட வேண்டும் என அழைக்கும் ஊஞ்சற் பருவம் என இவையொவ்வொன்றிலும் குமரகுருபரர் குழந்தை மீனாட்சியம்மை பற்றிப் பத்துப் பத்துச் செய்யுள்களாற் பாக்கள் இயற்றியுள்ளார்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மிகவும் பிரபலமான செய்யுள் பின்வருமாறு

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

இவ்வாறாக குமரகுருபர சுவாமிகளின் சத்தி வழிபாட்டு, இசை இலக்கியங்களாக மேற்கூறப்பட்ட இசை இலக்கியங்கள் உட்பட சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகியன சிறப்பான, சந்த, சொற்சுவையும், பொருட்சுவையும் இசை பகுநிலையும், தாள நடைக்குரியனவாகவும் விருத்தப்பாக்களாகவும், சக்தி ஆலயங்களில் விஷேட உற்சவங்களில், நவராத்திரி, கேதார கௌரி விரத காலங்களில், பாடப்பட்டு வருகின்றன. என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பெண்கள் தின விழாவை இவ்வாய்வுக் கட்டுரை வெளிவருவதற்கு அனுமதித்த, வாய்ப்பளித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

உசாத்துணை நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு, வித்.சொக்கலிங்கம்
2. தமிழிசை இலக்கண வரலாறு, அருணாச்சலம்
3. தமிழிசை இலக்கிய வரலாறு அருணாச்சலம்
4. தமிழிரிசை ஏ.என்.பெருமாள்
5. குமரகுருபரர், காசிமடப்பதிப்பு – 1992

THE NAGESVARA TEMPLE SCULPTURES AT KUMBAKONAM

M. AMIRTHAVALLI M.A, *Research Scholar in History, Kunthavai Nachiyaar Govt. (A) College, Thanjavur - 07.*

Kumbakonam is a first class municipal town in the Tanjavur District, Madras State, with a population of about a lakh and is at a distance of 313 kilo meters from Madras on the Madras-Trirucirappalli main line of the Southern Railway. The place is of great antiquity and the region around it bears evidence of ancient habitation and culture. The importance of Kumbakonam during the period is also borne out by the evidence of the sangam literature.

The next Navagraha Sthala which is famous for Raghu graha is Thirunageswaram in Thanjavur district. The Navagraha Stotra for Raghu araha describes Raaghu as a figure with only half the body and as an enemy to sun and the moon. He was born as an off – spring to simhikai. Raghu is Called as "Chaya Graha". He is a *graham* with a demon's head and snake's body. He is described as a black serpent *(karunagam)*. He worshipped lord siva in Thirunageswaram. Raaghu is considered as a Naga king. Hence this holg place got that name this is located at a distance of 6 km from Kumbakonam. The temple of Naganathaswamy at Thirunageswaram houses the famous shrine of Raghu Bhagwan and his two cansorts. The shrine is in the southwest corner of the out prahara in the temple.

SCULPTURE

The sculptures in the Nagesvara, particularly the portraits, may be said to be the best among the enormous mass of extant early Cola images. In their depth of profoundity of facial expression and pleasing apotheosis of serenity and dignity, in their technical refinement and excellent modelling and in their sensitiveness and restraint, they have few parallels in South Indian plastic art. Besides the portraits and icons of deities and men and women, the sculptural embellishment of the temple includes low reliefs of mythological stories in small scales in the pilaster strips in the basement, decorative designs of different forms like floral and vegetal patterns, string courses of animals and a large variety of architectural motifs. Before considering each of them in detail, a few general observations on early Cola sculptures may be made.

It is rather difficult to speak of the general characteristics of early Cola sculptures, because of the differences in style exhibited by them. As said earlier, not all the extant Cola monuments have been thoroughly explored nor the explored ones been fully brought to light. The remarks on the features of early Cola carvings are hence bound to be more tentative than precise, though certain

inferences on their general characteristics exemplified by a large number of known specimens may not be invalid.[1]

The Chola sculptures are delicate in outline with a 'subtle rhythmic quality" as against the marked attenuation of Pallava rock-cut reliefs. The physiognomical features exhibited by Chola images include a considerable flatness of the upper torso, and protuberance on the knees. There is also an obvious disparity in the treatment given to the other parts of the body and feet which are generally neglected. Another striking and significant feature is the humanism that pervades through Cola carvings.

Writing about Cola art in general and the sculptures in the Nagesvara in particular, Ajit Gose observes: ".......the Chola artist stands in sharp contrast with his Pallava predecessor and the latter's severely abstract, ideal, and schematic vision. There is no difference in outward bearing between a Pallava King and God, between a goddess and a queen. But a new and attracative conception of life and beauty had dawned on this Chola sculptor.... This art, so unconventional, is thus, refreshingly original in conception and spirit. This humanism is the Chola's principal contribution to South Indian art."[2]

Again Cola carvings differ from the Pallava images in their freedom of pose. They are happily free from the stiffness of the rock-cut reliefs of Mahabalipuram and do not betray any adherence to the conventions of pose and proportions. They show a fost and supple form in contrast to the stiff, heavy and somewhat disproportionate carvings of the Pallava period. This is apparent when the figures of Durga in the Varahamandapa and the Draupadiratha at Mahabalipuram with their evident disproportion between the slim upper half and the rather clumsy lower half are contrasted with the proportionate and elegant specimens of the same goddess at Kumbakonam, Punjai and Thiruvarur.

